பேராசிரியர்

# டாக்டர் தமிழண்ணல்

# மணிவிழா மலர்



மதுரை

7-10-1989

மணிவிழாக்காணும் டாக்டர் தமிழண்ணல் அவர்களுக்கு
நல்வாழ்த்துக்கள்



# சக்தி சுகர்ஸ் லிமிடெட்

அஞ்சல் பெட்டி எண் : 3775
180, ரேஸ் கோர்ஸ் ரோடு
கோயமுத்தூர்-641 018

# பேராசிரியர்
# டாக்டர் தமிழண்ணல்
# மணிவிழா மலர்

பதிப்பாசிரியர்கள்
பேராசிரியர் மீரா
டாக்டர் இரா. மோகன்

மணிவிழா
7-10-1989
மதுரை

□

முதற்பதிப்பு, அக்டோபர், 1989

□

அச்சாக்கம்:
அகரம் அச்சகம், சிவகங்கை

□

கிடைக்குமிடம்:
அன்னம் (பி) லிட்
சிவகங்கை

9 சௌராஷ்டிரா சந்து
மேலமாசி வீதி
மதுரை

□

மீனாட்சி புத்தக நிலையம்
60 மேலக் கோபுரத் தெரு
மதுரை

□

மணிவாசகர் பதிப்பகம்
சிதம்பரம் — சென்னை

□

விலை ரூ 50-00

□



# பதிப்புரை

டாக்டர் மு.வரதராசனார், டாக்டர் தெ.பொ. மீனாட்சி சுந்தரனார் டாக்டர் வ.சுப. மாணிக்கனார் முதலான தமிழ்ப் பேரறிஞர்களின் வரிசையில் வைத்து எண்ணத்தக்கவர் பேராசிரியர் தமிழண்ணல். 'அன்பும் பண்பும் அடக்கமும் எளிமையும் ஒருவடிவான பேராசிரியப் பெருந்தகை'எனத் தமிழ் ஆர்வலர்களால் ஒருங்கே போற்றி வணங்கப் பெறும் தமிழ்ச் செம்மல் அவர். அசோகவனத்தில் சீதையைக் கண்டு வந்த அனுமன், 'நற்பெருந் தவத்தள் ஆய நங்கையைக் கண்டேன்' அல்லேன்; இற்பிறப்பு என்பது ஒன்றும், இரும்பொறை என்பது ஒன்றும், கற்பு எனும் பெயரது ஒன்றும் களிநடம் புரியக் கண்டேன்' என இராமனிடத்துப் புகழ்ந்து கூறுவான். 'நற்பெருந் தவத்தன் ஆய நம்பியைக் கண்டேன் அல்லேன்; எளிமை என்பது ஒன்றும், மக்கட் பண்பு என்பது ஒன்றும், கூர்த்த அறிவு என்பது ஒன்றும் களி நடம் புரியக் கண்டேன்' என்று அனுமனின் மொழியில் நாமும் பேராசிரியர் தமிழண்ணலைப் புகழ்ந்து கூறலாம்.

பேராசிரியர் தமிழண்ணல் அவர்களின் மணிவிழாவை ஒட்டி ஒரு மலர் வெளியிட வேண்டும் என்றும் அம் மலர் பேராசிரியர் முத்துசிவன் பாராட்டு மலர், பல்கலைச் செல்வர் தெ.பொ.மீ. மணிவிழா மலர், சொல்லின் செல்வர் ரா.பி.சே. மணிவிழா மலர் முதலான மலர்களைப் போல் அரிய இலக்கியப் பேழையாக—பெட்டகமாக விளங்க வேண்டும் என்றும் முடிவு செய்தோம். அதன்படி பல்வேறு அரசியல் தலைவர்கள், தமிழறிஞர்கள், தொழிலதிபர்கள், படைப்பாளிகள் முதலானோர்க்குக் கட்டுரையும், கவிதையும், வாழ்த்துச் செய்தியும் கேட்டு மடல்கள் எழுதினோம்.பேராசிரியர் தமிழண்ணல் அவர்களைப் பற்றிய வாழ்த்துச் செய்திகள், கவிதைகள். கட்டுரைகள் இவற்றோடு தமிழ் இலக்கியம், இலக்கணம் தொடர்பான ஆய்வுக் கட்டுரைகளும் கொண்டதாக மலரை உருவாக்கியுள்ளோம். இம் மலர் பேராசிரியர் தமிழண்ணலின் புகழ் மணத்தை என்றும் பரப்பிக்கொண்டிருக்கும் என நம்புகிறோம். இம்மலர் உருவாக்கத்தில் எங்களுக்கு உற்றுழி உதவிய விளம்பர நிறுவனங்களுக்கும், தமிழ் உள்ளங்களுக்கும் எங்கள் நெஞ்சார்ந்த நன்றியறிதலை உரித்தாக்குகிறோம்.

தம் பெயர் கூறுதற்கும், தம் புகழ் கேட்பதற்கும் நாணுகின்ற—கூசுகின்ற இயல்பு படைத்தவர் பேராசிரியர் தமிழண்ணல். மலர்வெளியீடு

செய்வதற்கும், மணி.விழா நடத்துவதற்கும் இசைவு கேட்டபோது பேராசிரியர் பெரிதும் தயங்கினார். அவரிடம் முதலில் 'ஒரு மலர் வெளியிடுகிறோம்' என்று சொல்லி ஒப்புதல் பெற்றோம்; பிறகு 'மலர்ப் பணி முடிந்துவிட்டது; ஒரு விழாவில் தானே மலரை வெளியிட முடியும்?' என்று கேட்டு ஒரு விழாவுக்கு இணங்க வைத்தோம். அடுத்து 'விழா என்றால் சிறப்பாக இருக்க வேண்டாமா, இன்னின்னார் வந்தால் சிறப்பாக இருக்கும்; தங்களோடு தொடர்புடைய அனைவரும் ஒன்று கூடுவதற்கு ஒரு வாய்ப்பு' என்று வாதம் செய்து விரிவான மணிவிழா ஏற்பாட்டிற்கு இசைய வைத்தோம். அப்போதும் பேராசிரியர் தமிழண்ணல் அவர்கள் 'குழு எல்லாம் வேண்டாம்; நீங்கள் இருவராக இருந்து செய்யுங்கள். எளிமையாக இருக்கட்டும் மலர் என்பதால் இசைகிறேன். நமக்குச் செயல் தான் முக்கியம், விழாவும் கூட்டமும் அல்ல! என்று அழுத்தமாகக் கூறினார். அவரது விருப்பத்திற்கும் வழிகாட்டுதலுக்கும் ஏற்ப இப்போது மலர் வெளிவருகின்றது; மணி விழா எளிமையாக நடந்தேறுகின்றது.

முன்னைப் பழமைக்கும் பழமை, பின்னைப் புதுமைக்கும் புதுமை எனப் பழமை, புதுமை இரண்டையும் அளவறிந்து தம் வாழ்விலும் ஏற்றவர் பேராசிரியர் தமிழண்ணல். 'அவர் சங்க இலக்கியத்தில் மரபும் திறனும்' என்னும் பொருள் குறித்து ஆராய்ந்து அறிஞர் பட்டம் பெற்றவர்; அதே நேரத்தில் 'உங்கள் தமிழைத் தெரிந்து கொள்ளுங்கள் என்னும் தலைப்பில் பயன்பாட்டு மொழியியல் அடிப்படையில் ,தினமணி' இதழில் தொடர்ந்து எழுதியும் வருபவர். அவர் கவிதை, புதினம் முதலான படைப்பிலக்கியத் துறைகளிலும் கவனம் செலுத்துபவர்; அதே நேரத்தில் நாட்டுப்புறவியல், ஒப்பியல் ஆய்வியல், இலக்கியத் திறனாய்வியல் முதலான அறிவுத் துறைகளிலும் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டிருப்பவர். டாக்டர் மு.வரதராசனாரைப் போல் ஆய்வறிஞராகவும், படைப்பாசிரியராகவும் ஒருங்கே திகழும் பெருமை பெற்றவர் பேராசிரியர் தமிழண்ணல். இம்மலர் பேராசிரியரின் பன்முக ஆளுமையைப் படம்பிடித்துக் காட்டும் பெட்டகமாய் விளங்குகின்றது.

நல்லாசிரியர் விருது, திரு.வி.க. விருது, நல்லெழுத்தாளர் விருது எனஎத்தனையோ விருதுகளைப் பெற்றவர் பேராசிரியர் தமிழண்ணல். ஆனால் அவர் இதுவரை பெற்ற எல்லா விருதுகளையும் விட பல்லாயிரக் கணக்கான மாணவர் உள்ளங்களில் —தமிழ் ஆர்வலர் இதயங்களில்— வீற்றிருக்கும் தனிப்பெருஞ் சிறப்பினைப் பெற்றிருப்பதே மிகப் பெரிய விருதாகும். 'தாமரைத்தண்தாது ஊதி மீமிசைச்சாந்தின் தொடுத்த நீந்தேன் போலப் புரைய மன்ற புரையோர் கேண்மை' என்னும் சங்கப் பெரும்புலவர் கபிலர் வாக்குக்கு எடுத்துக்காட்டாக விளங்கும் பேராசிரியர் பல்லாண்டு பல்லாண்டு வாழத் தமிழன்னை அருள்புரிவாளாக.

○ மீரா—இரா.மோகன் ○

தமிழுக்கும், அமுதென்று பேர்—அந்தத்
தமிழ் இன்பத் தமிழ் எங்கள்'
உயிருக்கு நேர்!

—பாரதிதாசன்

# அமுதத் துளிகள்



# மணிவிழா வாழ்த்திதழ்

## நெற்குப்பை தந்த தமிழ்நிதியே! நித்திலமே!

'பெரியகருப்பன்' என்பது உனக்குப் பெற்றோர் இட்ட பெயர்;
இந்தப் பெயரை உன் ஊரறியும்; உறவறியும். அவ்வளவே.

ஆனால் உன் தகுதியறிந்து நீ,
தனக்குத் தானே சூட்டிக்கொண்ட பெயர் தமிழண்ணல்.

அண்ணலே, இந்த அரும்பெயர் இன்று
தமிழ்கூறும் உலகம் அறிந்த பெரும்பெயர் அன்றோ?

## எங்கள் கண்காண வாழ்கின்ற கபிலனே!

'ழ'கரம் என்னும் எழுத்தைப்போற் சிறந்தவன் நீ;
'இசை என்னும் எச்சம்' பெறுவார்க்கு இலக்கணம் நீ;
நடமாடும் இலக்கியம் நீ;

பதினாறு துறைகளை உள்ளடக்கிய
உன் 'தமிழ்வட்டம்' மிகப் பெரிது; என்றும்
பதினாறாய்—முதிராத இளவட்டம் அது.

முளைக்கும் போதே மணக்குமாம் துளசி;
பிறந்து மொழிபயின்ற போதே பெரும்புலமை படைத்தவன் நீ;
வாழ்நாள் எல்லாம் படிப்பிலே தோய்ந்தவன் நீ

பள்ளி, கல்லூரி, பல்கலை என்று படிப்படியாய் உயர்ந்தவன் நீ
நாற்பதாண்டுக் கல்விப்பணி, எங்களுக்குக் கிடைத்த
'இனியவை நாற்பது' அன்றோ?

தொல்காப்பியம் சொல்லுவாய்; வளர் தமிழுக்கு
புதிய இலக்கணமும் வகுத்திடுவாய்.

சங்கத் தமிழறிவாய்; தாலாட்டுப் பாட்டின்
தனிச்சுவையும் எடுத்துரைப்பாய்;

தேனூறு கவிதைகளும் நாவூறி நீ புனைவாய்;
ஆய்வியல் நெறியும் தெரிந்துரைப்பாய்;

முன்னைப் பழமையொடு பின்னைப் புதுமைக்கும் முன்நிற்பாய்;
துறைதுறைதோறும் தமிழ்துலங்கத் தொண்டு செய்வாய்
உரைக்கிற் பெருகுமன்றோ உன் பெருமை!

முன்பு தமிழ்நாடு அரசு
உன் புலமைக்குப் பரிசு இருமுறை அளித்தது
இப்போதோ 'அருந்தமிழ் மூன்றும் தெரிந்தவன்' நீ என்பதனால்
மூன்றாவது முறையாகத் திரு.வி.க. பரிசளித்துப்
பெருமை சேர்த்துக் கொண்டது.

இவையெல்லாம் உன் வரிசையறிந்து ஈந்த
பரிசில்கள் அல்லவோ?

என்றுமுளதென் தமிழை இயம்பி இசை கொண்டவனே!
உன் வாழ்வு; தமிழ் வாழ்வு; உன் ஏற்றம்; தமிழ் ஏற்றம்.
உன் பெருமை; தமிழ்ப் பெருமை; நீ வாழத் தமிழ்வாழும்.

இன்னுமொரு நூற்றாண்டா? இல்லை. இல்லை.
பொதியமலைப் பிறந்த மொழி வாழ்வறியும் காலமெல்லாம்
வாழ்ந்திடுவாய்.

வாழ்த்துகிறோம்-

○
மணிவிழாக்குழு,
மதுரை
7-10-1989

தமிழக முதல்வர்

டாக்டர் கலைஞர் அவர்களின்

வாழ்த்துச் செய்தி

தொலைபேசி: 475225

திராவிட முன்னேற்றக் கழகம்

மு.கருணாநிதி
தலைவர்

கோபாலபுரம்,
சென்னை-600 086

30—9—88

அன்புடையீர்,

வணக்கம்.

மதுரை காமராசர் பல்கலைக் கழகத் தமிழியல் துறைத் தலைவர் டாக்டர் தமிழண்ணல் அவர்களின் மணிவிழாவினை முன்னிட்டு சிறப்பு மலர் ஒன்று வெளியிடுவது பாராட்டுதற்குரிய செயலாகும். நாற்பதாண்டு காலமாக தமிழ் மொழியின் மேன்மைக்கும், சிறப்புக்கும் தமிழண்ணல் அவர்கள் ஆற்றிவரும் தொண்டு அனைவரும் நினைவிற்கொள்ள வேண்டிய ஒன்றாகும். டாக்டர் தமிழண்ணல் அவர்கள் இன்னும் பல்லாண்டு நல்ல உடல்நலத்தோடு தமிழுக்கும் தமிழகத்திற்கும் தொடர்ந்து பணியாற்ற என்னுடைய மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்புள்ள,

(ஒப்பம்) — மு. கருணாநிதி

**க. அன்பழகன்** எம்.ஏ.,
கல்வி அமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை-600 009
நாள்: 20—9—1989

அன்புடையீர்,

வணக்கம். தங்கள் மடல் கண்டேன்.

எனது அன்புக்கும் மதிப்புக்குமுரிய நண்பர் பேராசிரியர் டாக்டர். தமிழண்ணல் அவர்களின் மணிவிழா கொண்டாடப்படுவது அறிந்து மகிழ்ச்சியடைகிறேன்.

இளமை முதல் தமிழ் மொழிப்பற்றாளராய், கற்றுத் தெளியும் ஆர்வத்தினராய், அயராது மொழித்தொண்டாற்றும் குறிக்கோள் கொண்டவராய், படிப்படியாய் உயர்ந்து பல்கலைக் கழகப் பேராசிரியராகத் திகழ்ந்து, ஆய்வுப்புலத்தில் அரும்பணி பல ஆற்றி, இந்நாளில் ஒரு முதிர்ந்த தமிழறிஞராய் விளங்குபவர் தமிழண்ணல்.

நன்கு கற்றவரும் ஆழ்ந்து கல்லாதவரும் தெளிவடையும் வண்ணம் தமிழ்ச் சொற்களின் வழக்காற்றுப் பொருளினையும் அவற்றைப் பயன்படுத்தலாகும் இடத்தையும் வரையறுத்துக் காட்டும் அவரது கட்டுரைகள் – சிறப்பான பயன் கூட்டுபவை. அவரது அருமையுடைய செயல் – தமிழ்த்தென்றல் திரு.வி.க. அவர்கள் ஆற்றிய அரும்பணியின் தொடர்நிலை எனலாம். அவ்வகையால் அவர்கள் தமிழக அரசின் திரு.வி.க. விருதினை முதல்வர் கலைஞர் அவர்களிடம் பெற்றதும் பெரிதும் பொருத்தமுடைத்து.

இந்த விழாவில், அவரைப் பாராட்டும் மலரும் அவரது அரிய நூலும் வெளிவருவது பாராட்டுக்குரியது:

தமிழே எம் மூச்சு! தமிழ்த் தொண்டே எம் வாழ்வு! தமிழ் மாட்சியே எம் பேச்சு! தமிழ் நலனே எம் எழுத்து! என்று உளங் கொண்ட தமிழண்ணல் தொண்டு எந்நாளும் தொடர்வதாகுக! அவர் வாழ்வாங்கு வாழ்க! என்று உளமகிழ்ந்து வாழ்த்துகிறேன்.

அன்புள்ள,
(ஒப்பம்) —*க. அன்பழகன்*

தொலைபேசி: 442141

இராம.வீரப்பன்

9, திருமலை சாலை,
தியாகராயநகர்,
சென்னை – 600 017.
14—10—88

மதுரை காமராசர் பல்கலைக் கழகத் தமிழியல் துறைத் தலைவரும், சிறந்த பண்பாளரும் ஆய்வறிஞருமான டாக்டர் தமிழண்ணல் அவர்கள் மணிவிழா காண்பது அறிந்து நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

தமிழ் அமுதில் தோயும் தமிழ் உள்ளம் படைத்தவர்கள் இமையோர் விருந்தமிழ்தம் ஆயினும் அதை விரும்பமாட்டார்கள் என்பதைத்தான், 'தமிழ்விடு தூது' நூலில் ஆசிரியர்,

''இருந்தமிழே உன்னால் இருந்தேன் இமையோர்
விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன்''......

என்று பாடியிருக்கிறார்.

அவரே, ''பாரில் அரியாசனம் உனக்கேயானால் உனக்குச் சரி யாரும் உண்டோ தமிழே'' என்று தமிழை மிகச் சிறப்பித்துப் பாராட்டியிருப்பதோடு மூவர் தேவாரம், திருவாசகம், பஞ்சகாப்பியங்கள், பொன் வண்ணத்தந்தாதி, பட்டினத்தாரின் மும்மணிக்கோவை, மூத்தோர்கள் பாடியருளிய பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள், பாடற்கரிய பரணி இவை போன்று இன்னும் உள்ள வெள்ளத்தினும் மிகுந்த இலக்கியங்கள் எல்லாம் தமிழ் மொழியின் மெய்க்காப்பாளர்கள்'' என்று பாராட்டுவார்.

தமிழ் உணர்வு மிக்க சிறந்த கவிஞராகவும், கதையாசிரியராகவும் திகழும் டாக்டர் தமிழண்ணல் அவர்கள் தம் 40 ஆண்டுகாலத் தமிழ்ப் பணியில் தமிழன்னைக்குத் தாழும் பல மெய்க்காப்பாளர்களை, ஒப்பியல், ஆய்வியல், நாட்டுப்புற இயல், மொழி இயல், இலக்கியத் திறனாய்வியல் முதலான பல துறைகளிலும் உருவாக்கித் தந்துள்ளார்கள்.

இத்தகைய தமிழ்ப்பணி புரிந்த தமிழ் அறிஞருக்கு அவருடைய மாணாக்கர்கள் மணிவிழா காண்பதும், மணிவிழா மலர் படைப்பதும் பாராட்டத்தக்க மிகச்சிறந்த பணிகளாகும். மணிவிழா நாயகரைப் ''பல்லாண்டு வாழ்க'' என்று நான் அன்போடு வாழ்த்தி, மணிவிழாக் குழுவினருக்கும் என் பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஒப்பம்) —இராம.வீரப்பன்

கி.ஆ.பெ. விசுவநாதம் திருச்சிராப்பள்ளி–8

. 27—9—88

மதுரை காமராசர் பல்கலைக் கழகத் தமிழியல் துறைத் தலைவர் உயர்திரு டாக்டர் இராம. பெரியகருப்பன் அவர்களின் அறுபதாம் ஆண்டு மணிவிழா அண்மையில் நடைபெறவிருக்கிறது என்ற செய்தியும் அதன் நினைவாக மலர் ஒன்று வெளிவரவிருக்கிறது என்ற செய்தியும் என்னை மகிழ்விக்கின்றன.

விழா இனிது நடைபெற வேண்டுமெனவும் மலர் நல்லறிஞர்களின் கட்டுரைகளைத் தாங்கி வெளிவந்து நாடு முழுதும் நன்மணம் வீச வேண்டுமெனவும் டாக்டர் தமிழண்ணல் அவர்கள் இன்னும் பன்னெடுங்காலம் நல்ல உடல் நலத்துடனிருந்து நற்றொண்டுகள் பல புரிந்து நல்வாழ்வு வாழ வேண்டுமெனவும் எல்லாம் வல்ல இறைவனை வணங்கி முழு மனதுடன் வாழ்த்துகிறேன்.

தங்களன்பிற்குரிய,

(ஒப்பம்) — கி.ஆ.பெ. விசுவநாதம்

டாக்டர் வ. அய். சுப்பிரமணியன் 28—4—88

முன்னைத் துணைவேந்தர்

தமிழ்ப் பல்கலைக்கழகம்

தஞ்சாவூர்

அன்பரீர்,

டாக்டர் தமிழண்ணல் அறுபது ஆண்டை எட்டி விட்டார் என்ற செய்தி வியப்பையும் அதிர்ச்சியையும் தருகிறது.

இளைய முகம் அறுபது ஆண்டு முகம் என்ற உணர்வால் வியப்பு.

இப்போதுதான் பல்கலைக் கழக மானியக் குழுவிலிருந்து சிறப்பு நல்கையைத் தமிழியல் துறை பெற்றது. அங்குச் செய்ய வேண்டிய பணிகள் பல. அவற்றின் மீதி என்னவாகுமோ என்பதால் அதிர்ச்சி.

சங்க இலக்கியங்களிலும் தொல்காப்பியத்திலும் ஆழமான படிப்புடையவர் தமிழண்ணல். புதிய செய்திகளை, புதிய ஆய்வு முறைகளை மேற்கொள்ளும் விரிந்த மனது. நல்லன செய்யவேண்டும் என்ற பண்பாடு. எனவே அவர் பல பத்தாண்டு வாழவேண்டும் என்று வாழ்த்துகிறேன். தமிழுக்கு அதனால் நன்மையுண்டு.

இங்ஙனம்

(ஒப்பம்) —வ. அய். சுப்பிரமணியன்

**Dr.வா.செ.குழந்தைசாமி**
Ph.D., D.Litt., F.I.E., F.N.A.Sc., F.N.A.E.
துணைவேந்தர்
அண்ணா பல்கலைக்கழகம்

சென்னை 600 025
1.11.1988

அன்புள்ள பேராசிரியர் மோகன் அவர்களுக்கு,

வணக்கம்.

மதுரை காமராசர் பல்கலைக் கழகக் தமிழியல் துறைத் தலைவர் நண்பர் டாக்டர் தமிழண்ணல் அவர்கள்தம் 60 ஆண்டு நிறைவை ஒட்டி மணிவிழா நடத்த இருக்கும் முயற்சி கண்டு மிகவும் மகிழ்வுற் றேன். அவர் 60 அகவையை எட்டிவிட்டார் என்பதே தங்கள் கடிதம் மூலம்தான் அறிய முடிந்தது. தோற்றம், தோரணை, சுறுசுறுப்பு அனைத்திலும் இளைஞராகவே காட்சி அளிப்பவர் பேராசிரியர் தமிழண்ணல். அமைதியாக, ஆரவாரமின்றி அதேசமயத்தில் அழுத் தமான கொள்கையும் இன, மொழிப் பற்றும் நிறைந்தவராக நின்று விளங்குபவர் நண்பர் தமிழண்ணல். பல்கலைக் கழகத்திலிருந்து அவர் ஓய்வு பெறுவது என்பது அவர் வாழ்க்கைப் பணியின் ஒரு கட்டத்தி லிருந்து இன்னொரு கட்டத்திற்கு மாறும் வாய்ப்பாகவே நான் எண்ணுகிறேன். அவருடைய அறிவாற்றலும், ஆர்வம் மிகுந்த உழைப்பும், தமிழுக்கு நீண்ட நாட்களுக்குத் தேவை. நீண்ட நாட் களுக்கும் அவை பயன்படும்: இதில் நான் உறுதியான நம்பிக்கை யுடையவன். அவருக்குப் பல்லாண்டு, பல்லாண்டு கூறும் எண்ணற்ற நண்பர்களின் உள்ளங்களோடு என்னையும் இணைத்துக் கொள்வதில் மகிழ்வும் பெருமையும் கொள்கிறேன்.

வணக்கம்.

தங்கள் அன்புள்ள

(ஒப்பம்) —(வா.செ. குழந்தைசாமி)

**Dr. V. Chittibabu** M. A., B. T., D. Litt.,
Former Vice-Chancellor
Madurai kamaraj University & Annamalai University
Director of collegiate education (Retd.)

Anbaham
4, Rajaram Mehta Nagar
Madras-600 029

அன்புள்ள டாக்டர் மோகன்,

பேராசிரியர் டாக்டர் இராம. பெரியகருப்பன் அவர்களின் 60 ஆண்டு நிறைவை ஒட்டி ஒரு மணி விழா மலர் வெளி வர இருப்பது பற்றி மட்டிலா மகிழ்ச்சியடைகிறேன். மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தின் துணை வேந்தராக நான் பணியாற்றிய பொழுது அவர் தமிழியல் துறையின் தலைவராக நமது நாடும், மொழியும், தமிழ் மக்களும் மதித்துப் போற்றும் வகையில் சீரிய தொண்டினை ஆற்றி வந்ததைப் பெருமிதத்தோடு கண்டவன். அன்று தொட்டு இன்று வரையிலும் அதே உற்சாகத்தோடும் உத்வேகத்தோடும் அவர் தன்னலங்கருதாது தமிழ்ப் பணியை ஆற்றிவருவது போற்றுதற்குரிய தாகும். பண்டைத்தமிழ் அறிஞர்கள் தமிழ்க் கடலின் ஆழத்தையும் அகலத்தையும் மட்டும் அளந்தவர்கள் ஆனால் தமிழ். அண்ணல் அவர்கள் தங்கள் ஆய்வுத்திறனைக் கொண்டு தமிழ் மொழியின் பல திறன்களையும் சீர்மைகளையும் நம் நாட்டினரும், உலக அறிஞர் களும் அறிந்து இறும்பூது எய்தும் வழியில் தமிழ்ப் பெரும் பயனை நல்கி வருகின்றார். இலக்கியத் திறனாய்வியல், ஒப்பியல், நாட்டுப் புறவியல், கவிதை; புதினம் போன்ற பலதுறைகளிலும் இவரது ஆழ்ந்த புலமையின் மிளிர்ச்சி பளிச்சிடுகிறது.

பண்பு எனும் குன்றேறி நிற்கும் தகைமையாளர்; தியாக மனப் பான்மை மிக்கவர்; கருத்தாழம் நிறைந்த பேச்சாளர்; பார்போற்றும எழுத்தாளர்; செந்தமிழ் மொழியின் வளர்ச்சிக்கே தன்னை அர்ப் பணித்துக் கொண்ட செயல்வீரர் என்று எல்லாம் நம் பாராட்டுக் குரிய தமிழ் அண்ணல் அவர்கள் இதுவரையில் எழுதியுதவியுள்ள தமிழ் நூல்கள் பலவும் கருத்துக் களஞ்சியங்களாகவும், கலைவிளக்கங் களாகவும் அமைந்துள்ளதை எண்ணி நாம் பெருமைப் படவேண்டும்.

புலவர் பெருந்தகையின் நினைவாக வெளியாகும் மலர் தமிழ்த்தாயின் ஏற்றமும் தோற்றமும் உலகறிந்து களிக்கும் வகையில் பொலிவதாக. தமிழண்ணல் வாழிய பல்லாண்டு!

தங்கள்
(ஒப்பம்) —சை.வே. சிட்டிபாபு

**Narayanan Chettiar**

Visalakshi
Madurai—625 002
30—9—89

கலத்திலும் காலினும் தருவன ரீட்டக்
குலத்திற் குன்றாக் கொழுங்குடிச் செல்வர்

நகரத்தார் நற்குடியில் தோன்றி, இருந்தமிழால் வாழ்வை நிறுத்தி எல்லார்க்கும் நல்லவராய், இன்னமுதாய், எழிற் கூடமாய், அறிவுப் பெட்டகமாய், ஆராய்ச்சிக் கடலாய், அடக்கப் பெருமலையாய், அறுபதாண்டு நிறை வாழ்வு கண்டவர் — நம் தமிழ்த் தொண்டர், பண்பாளர், நெற்குப்பை பெற்றெடுத்த நற்றமிழ்ப் பாவலர் — சொற்றிரம்பா நற்றமிழர் டாக்டர் தமிழண்ணல் அவர்கள்,

அவர் முயற்சியால் முன்னுக்கு வந்தவர். பள்ளி ஆசிரியராகப் பதின்மூன்று ஆண்டுகள் ஈரோட்டிலும், காரைக்குடியிலும் தமிழ்த் தேரோட்டியவர். பின்னர் மதுரைத் தியாகராசர் கல்லூரியில் பத்தாண்டுகள் பணியாற்றினார். மதுரைப் பல்கலைக் கழகம் அவர் பணியால் சிறப்புற்றது.

1983 முதல் சாகித்ய அக்காதமியில் உறுப்பினர். தமிழகப் புலவர் குழுவில் உறுப்பினர். மதுரை எழுத்தாளர் மன்றத்தின் தலைவர். ஜப்பானுக்கும் சென்று வந்தவர். அங்கு தமிழ்க் கொடியை நாட்டியவர்.

சிறந்த கவிஞர். பல பரிசுகள் அவரைத் தேடி வந்தன. அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலார் நடத்திய கவிதைப் போட்டியில் பொற்கிழிப் பரிசு பெற்றவர். நல்லாசிரியர்.

இவருடைய இரண்டு நாவல்களுக்கு தமிழக அரசு பரிசு தந்து பாராட்டியது. இவர் இருபதுக்கும் அதிகமான நூற்களைப் படைத்தவர். தமிழக அரசு அண்மையில் திரு.வி.க. விருது வழங்கிச் சிறப்பு செய்தது.

நாநலம் மிக்க நல்ல மனிதர். எல்லா நலன்களும் எய்தி, நீடு வாழ்ந்து, தமிழுக்கும் தமிழ் நாட்டுக்கும் நெடிய தொண்டு செய்து வாழ அங்கயற்கண்ணி தன்னொடும் அமரும் ஆலவாய் அண்ணலின் திருவருளைச் சிந்தித்து வாழ்த்துகின்றேன்.

(ஒப்பம்) — லெ. நாராயணன்

நா. மகாலிங்கம், பி. எஸ்.சி., எப். ஐ. இ.,

101, மவுண்ட் ரோடு,
கிண்டி, சென்னை—600 082

12—9—89

அன்புடையீர்,

பேராசிரியர் டாக்டர் தமிழண்ணல் அவர்களின் மணிவிழா 7.10.89 அன்று மதுரையில் நடைபெற இருப்பதை அறிந்து மகிழ்கிறேன்.

இவ்விழாவில் நான் கலந்துகொண்டு வாழ்த்துரை வழங்க வேண்டும் என்று அன்புடன் கேட்டுள்ளீர்கள்.

சென்னையில் இராமலிங்கர் பணிமன்றம் மூலம் நான் நடத்தும் வள்ளலார் காந்தி விழா அக்டோபர் முதல் நாள் தொடங்கி எட்டாம் நாளில் நிறைவு பெறுகிறது. இவ்விழாவினை நடத்தும்பொருட்டு நான் சென்னையில் இருக்கவேண்டியிருப்பதால் டாக்டர் தமிழண்ணல் அவர்களின் மணிவிழாவில் கலந்துகொள்ள முடியாத நிலையில் இருக்கிறேன்.

தமிழறிஞர் டாக்டர் தமிழண்ணல் அவர்களின் மணிவிழா எல்லாச் சிறப்புக்களுடனும் இனிது விளங்க திருவருளைப் பிரார்த்திக்கிறேன்.

தங்கள் அன்புள்ள,

(ஒப்பம்) —நா. மகாலிங்கம்

ந.மணிமொழியன் மதுரை
நியூ காலேஜ் ஹவுஸ் 5—10—89

தமிழ் உலகம் போற்றும் அறிஞர், பேராசிரியர், தமிழக அரசின் திரு.வி.க. விருது பெற்ற பெருந்தகை, திருமிகு டாக்டர் தமிழண்ணல் அவர்கள் தமிழுக்கும்- தமிழருக்கும் அருந் தொண் டாற்றி வரும் சிந்தனையாளர்.

'உங்கள் தமிழைத் தெரிந்து கொள்ளுங்கள்' என்ற அரிய கட்டுரைத் தொகுப்பை அண்மையில் வழங்கியவர். எளிமையும், இனிமையும், நவில்தோறும் நூல் நயம் போலும், பயில் தோறும் பண்புடையாள ராய் விளங்குபவர்கள். 'மறைவாக' நமக்குள்ளே பழங்கதைகள் பேசுவதில் மகிமையில்லை, திறமான புலமையெனில் வெளிநாட்டார் அதை வணக்கம் செய்தல் வேண்டும் என முழங்குபவர். பேச்சைக் காட்டிலும் செயலையே மூச்சாகக் கொண்டவர். மணிவிழாக் காணும் நுண்மாண் நுழைபுலம் மிக்க இப் பெருமகனார் தொடர்ந்து வாழ் நாள் முழுவதும் தமிழுக்கும், தமிழருக்கும் தொண்டு செய்யும் நிறை நெஞ்சம் கொண்டவர்.

''நயனோடு நன்றி புரிந்தபயனுடையார்
பண்பு பாராட்டும் உலகு.''

என்ற குறள் இலக்கணத்திற்கேற்ப விழாக் குழுவினர் மணிவிழா எடுத்து மகிழ்கின்றனர். இக் குழுவினர் தொண்டும் முயற்சியும் போற்றுதற்குரியது. மணிவிழா நாயகர் தம்துணைவியரோடு இல்லத்தினரோடு எல்லா நலன்களும் நீண்ட ஆயுளும் பெற்று தமிழ்த் தொண்டாற்றிட... இறையருளை வேண்டுகின்றேன்.

(ஒப்பம்)— ந. மணிமொழியன்

Phone 42810

**Prof. Dr. K.Meenakshisundaram,**
M.A.M, Litt., Ph.D.,
(Former Director of Collegiate Education, Tamilnadu)

Gnanamani Farm
Vellakinaru
Coimbatore - 641 029

15—11—88

அன்புள்ள டாக்டர் மோகன்,

வணக்கம். உங்கள் வேண்டுகோள் கடிதம்கண்டேன்.

டாக்டர் இராம. பெரிய கருப்பன் (தமிழண்ணல்) அவர்களின் அறுப தாண்டு நிறைவை ஒட்டி மணிவிழா மலர் வெளியிட இருப்பது அறிந்து மகிழ்ச்சி.

மலர் சிறப்பாக அமைய என் வாழ்த்துக்களைப் பொழிகின்றேன். டாக்டர் தமிழண்ணல் ஆற்றிவரும் அரும்பணிகளை மென்மேலும் தொடர்ந்து மேலும் சிறப்பாக ஆற்றுவதற்கு நீண்ட ஆயுளையும் ஆற் றலையும் நற்றமிழன்னை நல்க வேண்டுமென்று இச்சமயத்திலும் அன்னையைத் தொழுது வேண்டுகிறேன்.

அன்புள்ள
கா. மீனாட்சிசுந்தரம்

**டாக்டர். கி. வேங்கடசுப்ரமணியன்**
எம். ஏ., பி. எல்., பி. டி., பிஎச்,டி.,
துணைவேந்தர்
புதுவைப் பல்கலைக் கழகம், புதுச்சேரி.

128, ரங்கப்பிள்ளை வீதி.
புதுச்சேரி–605 001,
செப்டம்பர் 13,1989

பேரன்பிற்குரிய பேராசிரியர் மீரா அவர்கட்கு,

என் கெழுதகை நண்பரும், தமிழக அரசின் 'திரு.வி.க.விருது' பெற்ற பெருமகனாரும், தமிழ்கூறு நல்லுலகம் போற்றும் அறிஞரு மான பேராசிரியர், டாக்டர் தமிழண்ணல் அவர்களின் மணிவிழா 7—10—89 அன்று மதுரையில் நடைபெறவிருப்பதறிந்து மகிழ் கிறேன்.

பேராசிரியர், அறிஞர் தமிழண்ணல் எனக்கு நெருங்கிய நண்பர். அவர் தம் நாற்பதாண்டுக் காலக் கல்வி, கலை, இலக்கியப்பணி பற்றி நான் நன்கறிவேன். அவர் தமிழ் மொழிக்காகவும், தமிழ்ச் சமுதாயத்திற் காகவும் தன்னையே அர்ப்பணித்துக் கொண்டவர்.

அன்னாரின் எழுத்துக்களை நான் பெரிதும் ரசிப்பவன். அவர்தம் தமிழ்த் தொண்டையும் போற்றி வருபவன். அன்னார் அண்மையில் திரு.வி.க விருது பெற்றமை குறித்து இறும்பூதெய்தினேன்.

பேராசிரியரின் மணிவிழாவையொட்டி, அவர்தம் சீரிய தமிழ்த் தொண்டைப் பாராட்டித் தாங்கள் மலர் ஒன்று வெளியிடவிருப்ப தறிந்து மகிழ்கிறேன்.

ஒப்பியல், ஆய்வியல், நாட்டுப்புறவியல், இலக்கியத் திறனாய்வியல், வரலாற்றியல், கவிதை, புதினம், பயன்பாட்டு மொழியியல் முதலான துறைகளைச் சார்ந்த பல்வேறு அறிஞர் பெருமக்களின் பல்வேறு கருத்துக்களைத் தாங்கிய விழா மலர் மணம் பரப்ப என் வாழ்த்துக்கள்.

நன்றி.

தங்களன்புள்ள

(ஒப்பம்) —கி. வேங்கடசுப்பிரமணியன்,

பெரி. மெய்யம்மை ஆச்சி

தலைவர்,

இராமசாமி தமிழ்க் கல்லூரி

காரைக்குடி

9—8—89

பெருமதிப்பிற்குரியீர்!

வணக்கம். பேராசிரியர் டாக்டர் தமிழண்ணல் இராம. பெரிய கருப்பனார் மணிவிழா நடப்பதறிய மகிழ்ச்சி. 'உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ' என்ற இலக்கியத்திற்கு எடுத்துக்காட்டாக இலங்கும் நிறைகுண அறிஞர் அவர்.

எங்கள் இராமசாமி தமிழ்க் கல்லூரியில் மறைமலையடிகள் நூற்றாண்டினைப் பிள்ளைத் தமிழ் படைப்பிலக்கியப் போட்டி நடத்திக் கொண்டாடினோம். 'மறைமலையடிகள் பிள்ளைத் தமிழ்' எழுதித் தமிழண்ணல் அவர்கள் பரிசு பெற்றார்கள். 27—3—78 திங்கட்கிழமையன்று எங்கள் கல்லூரியில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் தவத்திரு அடிகளார் அவர்கள் தலைமையில் அருள்நெறிச் செல்வர் வயி. சண்முகம் செட்டியார் அவர்கள் பரிசில் நல்க தமிழண்ணல் அவர்கள் பரிசேற்றமை இன்றும் பசுமையாய் நினைவில் நிற்கிறது.

இராமசாமி தமிழ்க் கல்லூரியை நிறுவி, தமிழ் நலங்காக்கும் தகவுடன் வாழ்ந்த என் கணவர் இராம. பெரியகருப்பனார்க்கு டாக்டர் தமிழண்ணல் அவர்கள் நெடுநாட் பழகிய கெழுதகையாளர்.

டாக்டர் தமிழண்ணல் அவர்களது மணிவிழா நாளில் எங்கள் குடும்பத்தின் சார்பிலும், இராமசாமி தமிழ்க் கல்லூரியின் சார்பிலும் நரைபிணியிலா நெடிய வாழ்வும், மிக்குயர்ந்த புகழும் பெற்று வாழ வாழ்த்துகின்றேன்.

இப்படிக்கு,

(ஒப்பம்) —பெரி. மெய்யம்மை ஆச்சி.

தலைவர்.

**Somasundaram .L**

Insectary Building
Department of Entomology
Iowa State Universiry
Ames, Iowa 50011 U S. A.
Tel: (off) 515-294-8667
(Tes) 215-596-7788

அன்பிற்குரிய கவிஞர் மீரா அவர்களுக்கும், டாக்டர் மோகன் அவர்களுக்கும்,

வணக்கம்!

அண்ணன் தமிழண்ணல் அவர்களின் மணிவிழா மலர் வெளியிடும் தங்களுடைய சீரிய முயற்சி பெரிதும் பாராட்டுக்குரியது.

மதுரை காமராசர் பல்கலைக்கழக தமிழ்த் துறைக்கும், தம் நூல்கள் மூலம் தமிழ் உலகத்திற்கும், தமிழண்ணல் ஆற்றியுள்ள பணிகள் அவரை அறிந்தவர்களுக்கெல்லாம் பெருமை சேர்க்கின்றன.

அமெரிக்க நாட்டில் மிகச் சிறந்த விஞ்ஞானிகள், எழுத்தாளர்கள் . எல்லோருக்கும் அவர்கள் பணியில் இருந்து ஓய்வு பெற்ற பிறகுதான் ஒரு புதிய வாழ்வே தொடங்குகிறது. அலுவலகப் பணியில் ஈடுபடா மல் தங்கள் திறமையை, அனுபவத்தை உலகிற்கு நூல்களாக வழங்கு கிறார்கள் அமெரிக்கர்கள். இது போன்றே ஓய்வு பெற்றிருக்கும் தமிழண்ணல் அவர்கள் பல நூல்களை எழுதி தமிழகம் பயனடையச் செய்யவேண்டும்.

தமிழண்ணல் அவர்களுடைய புலமையையும், ஆற்றலையும் தமிழக அரசும் மற்றவர்களும் பயன்படுத்திக் கொள்ள வேண்டிய நேரம் இது. தமிழண்ணல் அவர்களுடைய திறமைக்கு உரிய பதவிகளும், சிறப்புக் களும் மணிவிழா ஆண்டில் அவர்களுக்குக் கிடைக்க இறையருளை வேண்டுகிறேன்.

அன்புடன்,
(ஒப்பம்) – சோமலெ சோமசுந்தரம்

செ. செல்லப்பன்

மீனாட்சி புத்தக நிலையம்
மதுரை–625 001

## வாழ்க பல்லாண்டு

அடக்கம் நிறைந்தவர் அறிவாற்றல் மிக்கவர்
கண்டிப்பானவர், கருணை உள்ளம் படைத்தவர்
கண்ணியமிக்கவர், கடமையுணர்வுடையவர்
சிரித்த முகத்தினர், சிந்தனைச் சிறப்பு மிக்கவர்
அன்பு நிறைந்தவர், ஆரவாரமற்றவர்
நட்புக்கினியவர், நாடு போற்றும் நல்லவர்
உழைப்பு மிக்கவர், உறுதி உள்ளவர்
பண்பு நிறைந்தவர், பகைவரையும் மதிப்பவர்

இவ்வாறு பலப்பல உயர் குணங்களைச் சொல்லி டாக்டர் இராம பெரிய கருப்பன் அவர்களை எவ்வளவோ பாராட்டலாம். அண்ணல் ஐயா என அனைவராலும் அன்புடன் அழைக்கப்படும் இவர்கள் தமிழ் மொழியின் பால் கொண்டுள்ள பேரார்வத்தையும், பற்றையும் அள விட்டுச் சொல்லி விட முடியாது. அயராது உழைப்பும் தொடர்ந்து முறையான மொழிப் பயிற்சியும் மேற்கொண்டுள்ள இவர்கள் படிப்படி யாக உயர்ந்து இன்று பல்கலைக் கழகத்தின் தமிழ்த் துறைத் தலை வராக புகழோடு பணியாற்றுகிறார்கள்.

தமிழண்ணல் அவர்களையும் அவர்தம் குடும்பத்தாரையும் பன்னெடுங் காலமாக நான் அறிவேன். அவரது மனைவியும், மக்களும் அவரது முன்னேற்றத்தில் ஆர்வம் காட்டி பெரிதும் உதவியாக இருந்து வரு கிறார்கள்.

மணிவிழா காணும் இத்தமிழ்ச் செம்மல் எல்லாச் செல்வங்களையும் நிறைவுறப் பெற்று, நல்ல ஆரோக்கியத்துடன் பல்லாண்டு பல்லாண்டு இனிதே வாழ அங்கயற்கண்ணியின் கண் அருளை நினைந்து மன மார வாழ்த்துகிறேன்.

(ஒப்பம்) —செ. செல்லப்பன்
மீனாட்சி புத்தக நிலையம்

Tele: 860551, 868089

IRAVATHAM MAHADEVAN
Editor, Dinamani

Express Estates
Anna Salai
Madras–600 002
Date 24—5—1989

## ஒரு மதிப்புரை

பெருமதிப்பிற்குரிய தமிழண்ணல் அவர்களுக்கு,

வணக்கம்.

தாங்கள் எழுதியனுப்பிய 'கி. வா. ஜ. வின் கடைசி நூல்' என்ற சிறப்புக் கட்டுரையை ஒரு முழு நீள மதிப்புரையாக வெளியிட்டிருப்பதைப் பார்த்திருப்பீர்கள். இக் கட்டுரையைப் பாராட்டிப் பல கடிதங்கள் வந்து குவிந்துள்ளன. நானும் என்னுடைய பாராட்டைத் தெரிவித்துக் கொள்ளவே இதை எழுதுகிறேன்; ஆனால் எப்படிப் பாராட்டுவது என்றுதான் தெரியவில்லை; கட்டுரை அவ்வளவு நன்றாக இருந்தது. தினமணியில் கடந்த இரண்டு ஆண்டுகளில் வெளிவந்த மதிப்புரைகளில் இதுவே சிறந்தது என்பதில் ஐயமில்லை. இதை வெளியிட்டு கி.வா. ஜ. க்கு அஞ்சலியும் தமிழுக்கு நற்பணியும் ஒருங்கே செய்ய எங்களுக்குத் தாங்கள் அளித்த வாய்ப்புக்கு நன்றி கூறி அமைகிறேன்.

தங்கள் அன்புள்ள,
(ஒப்பம்)— ஐ. மகாதேவன்
ஆசிரியர், தினமணி

செந்தமிழ் நாடெனும் போதினிலே—இன்பத்
தேன்வந்து பாயுது காதினிலே

—பாரதியார்

# தேன் துளிகள்

# முனைவர் தமிழண்ணல் வாழ்க!

முனைவர் மு. தமிழ்க்குடிமகன்
சட்டப்பேரவைத் தலைவர்

தமிழுக்குப் பல்வகையில் தொண்டு செய்தோர்
பலராகி நாளடைவில் சிறப்புப் பெற்றுத்
தமிழர்களின் போற்றுதற்கே ஆளா கின்றார்;
தரமான குணமுமதில் சேர்ந்து விட்டால்
இமிழ்கடல்சூழ் ஞாலமதில் அதனின் ஏற்றம்
இல்லையெனக் கூறிடலாம்; அந்த நோக்கில்
தமிழண்ணல் பெற்றுள்ள சிறப்புக் காகத்
தமிழர்களின் சார்பில்நான் வாழ்த்துகின்றேன்

இற்றைநிலை தமிழுக்கோர் ஏற்ற மில்லை;
எல்லோரைப் போலவும்நாம் வளர வில்லை;
கற்றறிந்த பெருமக்கள் ஒன்று கூடிக்
கவலையுடன் தீர்மானம் செய்து கொண்டே
ஒற்றுமையில் உடனிணைந்து செய்யா விட்டால்
உலகத்தின் முன்னேற்ற வேகத் தோடு
நற்றமிழ்தான் ஏற்றமுற வழியே இல்லை;
நன்னெஞ்சர் தமிழண்ணல் நீடு வாழ்க!

# தமிழ் வாழ்க !
# தமிழண்ணல் வாழ்க !

கவியரசு முடியரசன்

தைக்கின்ற ஊசிதனில் கூர்மை யுண்டு
தமிழண்ணல் நுழைபுலத்தும் அதனைக் கண்டேன்
மொய்க்கின்ற அலைகடலில் ஆழம் உண்டு
முன்னவன்றன் கல்வியிலும் அதனைக் கண்டேன்
மெய்க்கின்ற முகில்வானில் அகலம் உண்டு
மேலவன்றன் புலமையிலும் அதனைக் கண்டேன்
மைக்குன்ற வரைத்தேனில் இனிமை யுண்டு
மனத்துவளர் நட்பினிலும் அதனைக் கண்டேன்

உடனுறையுங் காலத்தே எனது நெஞ்சில்
ஊறிவரும் பாடலுக்குச் செவிலி யானான்;
இடனறவே மனக்கவலை கவ்வும் வேளை
இனியசொலித் தேற்றுகின்ற துணைவன் ஆனான்;
கடனறியும் உளப்பாங்கால், உண்மை யன்பு
காட்டுகிற மனப்போக்கால் இளவல் ஆனான்
அடவிரைவில் பேராசான் ஆகி என்னை
அப்படியே விட்டுவிட்டு மதுரை போனான்.

அவன்நெஞ்சை நானறிவேன் எனது நெஞ்சை
அவனறிவான்; ஒருவருக்குள் ஒருவ ராகி
இவரிரட்டைப் புலவரென உரைக்கும் வண்ணம்
எஞ்ஞான்றும் எவ்விடத்தும் உலவி வந்தோம்;
அவன்தொழிலால் மதுரைக்குப் பிரிந்து சென்றான்;
ஆயினும் எம் முள்ளங்கள் பிரிய வில்லை;
அவனுறவை இரட்டித்த முப்பத் தாண்டின்
அகவையிலும் நினைந்துநினைந் திளைஞன்
ஆனேன்.

முதற்படியில் நின்றிருந்தான் அன்றி ருந்தே
முகம்மலர அகமலரப் பழகி வந்தான்;
முதற்படியில் நின்றபடி முயற்சி தன்னால்
முன்னேற்றப் படியேறி உயர்ந்து வந்தான்;
இதற்கிடை யில் பலபடிகள் கடந்தும் முன்னர்
இருந்தபடி யிருக்கின்றான் நட்பில் இன்றும்;
மதர்ப்படியில் உருப்படியும் செருக்கு மட்டும்
மனத்தடியில் சாகுபடி யாக வில்லை.

மனத்துக்குள் செருக்கில்லான் எனினும் சான்றோர்
மதிக்கின்ற பெருமிதத்திற் குன்ற மாட்டான்;
முனைப்புற்ற எவரிடத்தும் பணிய மாட்டான்
முன்னேற்றம் தடைப்படினும் வளைய மாட்டான்;
எனக்குற்ற இளவலென விளங்கி நிற்பான்
எனினுமவன் அடிப்பொடியன் நட்பில் மட்டும்;
புனத்துக்குள் உலவிவரும் கவரி மான்போல்
பூமனத்தன் வாழ்கின்றான் வாழ்க நன்றே.

உருவத்தாற் சிறியவன்றான் எனினும் நல்ல
உள்ளத்தால் உயர்மதியால் பெரியன் ஆவன்;
பருவத்தால் முதிர்ந்துவரும் புலமை கொண்டான்
பாதியிலே உதிர்ந்துவிழும் வெம்பல் இல்லை;
உருவத்தில் மெலியவன்றான் எனினும் கல்வி
ஊற்றத்தால் புலமையினால் வலிமை மிக்கான்;
எருவைத்தாற் பயிர்வளரும்; புலமை வைத்தான்
இவனிடத்தே தமிழ்வளரும் செழித்து நன்றே.

மதர்ப்பு அடியில் உரு படியும் செருக்கு

30-1-80

# சிந்தனையாளர் செந்தமிழ் அண்ணல்

டாக்டர் ஔவை நடராசன்

செந்தமிழ் வளர்த்த சிறப்பினில் உயர்ந்த
பைந்தமிழ் மதுரைப் பல்கலைக் கழகத்
தமிழியல் துறையின் வியன்புகழ்த் தலைவர்
தமிழ்நலம் புரக்கும் உயர்திரு வுடையார்

செந்தமிழ் நலங்கள் தேர்ந்தினி துரைக்கும்
சிந்தனை யாளர் செந்தமிழ் அண்ணல்
ஆய்வியல் நெறிமுறை அறிந்தினி தளிக்கும்
நாவலர் பெருமான் நல்லிசைப் புலவர்

அலரிவளர் சிறப்பின் பணிபல சிறக்க
மணிவிழாக் காணும் மாண்புயர் அண்ணல்
பணியினைப் போற்றியும் பண்பினை
வாழ்த்தியும்

மணிவளர் ஒளிபோல் புகழொளி பெருகிட
வாழிய பெரிதென வாழ்த்துதும் அன்பால்
வாழிய பெரிதே வாழிய பெரிதே
ஏழிசைத் தமிழென வாழிய பெரிதே!

# தவமணி வாழ்க!
# தலைவர் வாழ்க!!

பேராசிரியர் கதி. சுந்தரம்
சதாசிவ நகர். மதுரை 625 020

மங்கலம்சேர் மனைமாட்சி பெற்றார் அண்ணல்
மாநிலமே போற்றுகின்ற திறமை பெற்றார்
எங்கெங்கே ஆய்வரங்கம் உண்டோ அங்கே
எடுப்பான புலமைச்சீர் நிறுத்தி உள்ளார்
சங்கமெனும் பொற்கால நூல்கள் கூறும்
சாறுமிகு கருத்துக்கள் சிறப்பாய்த் தந்தார்
எங்களுளம் மகிழ்கின்ற நண்பர் அண்ணல்
எழில்மிகுந்த நற்குடும்பம் வாழ்க! வாழ்க!!

நல்லொழுக்கம் நற்பண்பு கொண்ட அண்ணல்
நாடுபுகழ்ப் பெருமைக்கே உரியர் ஆனார்
பல்கலைசேர் கழகங்கள் அண்ணல் தொண்டால்
பகரரிய சிறப்புக்கள் உற்ற அன்றோ
எல்லோரும் போற்றுகின்ற தமிழ்சேர் அண்ணல்
என்றென்றும் உதவிசெயும் இயல்புச் சான்றோர்
கல்விதரு உலகினுக்கே புகழைத் தந்தார்
கலைத்தமிழின் ஞாயிறெனக் காட்சி தந்தார்

பொன்னான முயற்சிக்கே உரியர் ஆனார்
பொழுதெல்லாம் உழைப்பிற்கே ஆக்கி நின்றார்
கண்ணாகச் செந்தமிழைக் காத்து நின்றார்
பணிவுமிகு அன்பிற்கே முதன்மை தந்தார்
பன்மொழியில் தமிழ்ப்பெருமை விளக்கி நின்றார்
பாரெங்கும் தமிழகத்தின் உயர்வைச் சொன்னார்
என் நண்பர் இவரென்று சொல்லும் போது
எழும்பிவரும் மகிழ்ச்சிக்கோ அளவே இல்லை

பேரறிஞர் பழக்கத்தால் நுட்பம் பெற்றார்
பிறநாட்டு நல்லறிஞர் புகழைப் பெற்றார்
சீர்வாய்ந்த மதிநுட்பம் உற்ற சீலன்
செந்தமிழின் திறம்காட்டும் செய்யுட் செல்வன்
பேர்வாய்ந்த தமிழ்நூல்கள் படைத்த அண்ணல்
பெரும்புலவர் பாராட்டும் ஞானச் செம்மல்
ஏர்அகத்தின் தவமணிதான் வாழ்க! வாழ்க!!
எங்கள்நலத் தமிழண்ணல் வாழ்க! வாழ்க!!

அன்புமிகு தமிழண்ணல் வாழ்க! வாழ்க!!
ஆல்போல நற்குடும்பம் தழைத்து வாழ்க!!
இன்பமிகு மணிவிழாக்கொள் தலைவர் வாழ்க!!
இனிய மொழிச் சிந்தனைசேர் அறிஞர் வாழ்க!!
நன்னெறியைப் போற்றுகின்றேன் நல்லார் வாழ்க!!
நாவலராய்த் திகழ்கின்ற அண்ணல் வாழ்க!!
என்நண்பர் தமிழண்ணல் நீடு வாழ்க!!
இறைவனருள் போற்றுகின்றேன் வாழ்க வாழ்க!!

டாக்டர் தமிழண்ணல்

# உயர்வுமிகு தமிழண்ணல் வாழி! வாழி!

குழந்தைக் கவிஞர் **அழ. வள்ளியப்பா**

தாய்மொழியாம் தமிழ்மொழியை நாமெல்லாரும்
தவறின்றி எந்நாளும் எழுது தற்கும்,
ஆய்வுபல புதுமுறையில் செய்து தக்க
அறிஞர்பல உருவாக வழிவ குத்தும்,
தாய்போலப் பரிவுடனே இளஞர்க் கெல்லாம்
தக்கபடி கல்விக்கண் உவந்த ளித்தும்,
ஓய்வின்றி உழைக்கின்ற அறிஞ ரென்போம்
உத்தமராம் தமிழண்ணல் வாழி வாழி

பழமைக்கும், புதுமைக்கும் வலிமைமிக்க
பாலமெனத் திகழ்கின்ற இனிய நண்பர்.
அழகொழுகும் தமிழ்மொழியில் புதினம் தந்து
அத்துறையும் பொலிவுறவே செய்யும் அன்பர்.
மழலையரைத் தாலாட்டும் பாடலெல்லாம்
மறையாமல் மகிழ்வுடனே தொகுந்த சீலர்.
உழைப்புக்கோர் சான்றாகத் திகழும் நல்ல
உயர்வு மிகு தமிழண்ணல் வாழி, வாழி.

திருவாசகமென்னும் தேனமுதை நாம் உண்ணத்
தெளிவாகப் புதுக்கருத்துத் தெரிவித்த பேரறிஞர்
அரசாங்கப் பரிசினையும் அடிகளார் விருதினையும்
இறவாத புகழினையும் ஏற்றபெரும் நல்லறிஞர்,
அருகி வரும் நாடோடிச் செல்வம்தன்னை
அறிஞரெலாம் போற்றும் ஒப் பிலக்கியத்தைக்
குறையின்றி நமக்களித்த குணக்குன்றாவார்
குடும்பமுடன் பல்லாண்டு வாழி, வாழி.
திருவருளால் தமிழண்ணல் மேலும் மேலும்
சீர்பலவும் பெற்றுமிகச் சிறந்து வாழி,

17-11-88

# தமிழ் வாழும் நாளெல்லாம் வாழ்க!

புலவர் ஆ. பழநி

48, அம்பலக்காரர் தெரு, காட்டுத்தலைவாயில்,

காரைக்குடி 623001

கன்னலே அமுதே என்றுனைப் பெற்றோர்
கனிவுடன் அழைக்க எந் தமிழோ
நென்னலே அறிவேன் என்னிடர் கலைவான்
நிலத்துநீ வந்தனை என்ன
அண்ணலே என்று நூலெலாம் இசைக்க
அணிதமிழ்ப் பற்றிய அழுக்கை
மண்ணலே என்றன் உயிர்ப்பணி என்றாய்
மறுவிலா மதியென உயர்ந்தாய்.

தள்ளருந் தமிழ்நூற் கல்வியில் சிறந்தாய்
தனிப்புகழ்ப் பள்ளி யாசானாக்
கொள்ளவே வளர்ந்தாய் குறிக்கொளும் திறத்தால்
கூடவே வளர்ந்துகல் லூரிக்
குள்ளும்நீ வளர்ந்தாய்; பல்கலை நகருள்
ஓங்கிய இமயமா நின்றாய்
பின்னையே வளரப் போதியா லென்ற
பெற்றவர் வாய்மொழி காத்தாய்.

பழம்பெரும் நூற்குப் புதுப்புது வணிகள்
படைத்தபொற் கொல்லன்நீ என்கோ?
வளம் பெறும் தமிழை நோய்நொடி யிலாது
வளர்த்திடு மருத்துவன் என்கோ?
உளங்கவர் அழகிற் கழகினைச் சேர்த்த
ஒப்பனைக் கலைஞனென் றுரைக்கோ?
கனம்பல வமைத்துத் தமிழினைக் காக்கும்
கடுந்திறல் மறவனே என்கோ?

உடலினைப் பெருக்கி உள்ளொளி சுருக்கி
ஒழிவிலாத் துன்புறும் உலகில்
கடலினை நிகர்த்த கல்வியாம் அமுதைக்
கருதுமைம் புலன்களான் நுகர்ந்தும்
உடலினைப் பெருக்கா துள்ளொளி பெருக்கி
ஒளிருநின் திறத்தினை யோர்ந்தால்
கெடலிலா ஒருவா சகப்பொருள் நின்பால்
கெழுமிய உண்மையைக் கிளத்தும்

தொன்மைஎன் பதற்காப் பழைமையைப் போற்றத்
துணிந்திடல் நின்வழக் கில்லை
நன்மையைத் தருமா? ஆமெனின் நயப்பாய்
நாடொறும் நாடொறும் கிளர்ந்து
வன்கொண் டெதிரில் வருவதாற் புதுமை
வாவெனக் கூறலும் இல்லை
அன்மையும் உளதாந் தன்மையும். தெளிவாய்
ஆக்கமே வாவென அறைவாய்.

தீர்ந்திலாக் கரிய நிறத்தினன் அல்லை;
ஆயினும் பயந்தவர் தேரா
தார்ந்திடும் பெரிய கருப்பனென் றொருபேர்
அழைத்தனர் என்னென நினைந்தேன்;
சேர்ந்திடும் பெரிய சிந்தனைக் கருப்பம்
தாங்கியே சீரிய கருத்தை
ஈந்தனை எனவே இவையெலாம் உணர்ந்தோர்
இவ்வணம் இட்டனர் போலும்

எளிமையும் உளதாம் அருமையும் பண்பால்
எதிரெதிர் ஆமென இசைப்பார்
துளிமையும் இலாத நின்வயி னிரண்டும்
துதைதலைக் கண்டுளம் மகிழ்ந்தேன்;

ஒளிமலர்த் தழுவும் எளிமையும், மரத்தனை
ஒடித்திடும் வலிமையும் அந்த
வளியினுக் குளதாம் என்பதை ஏனோ
வையகம் மறந்திடல் ஐய!

மேற்குள புலத்தின் அறிஞர் தம் கருத்தை
விரும்பியே கொள்முதல் செய்வாய்;
ஏற்புடைத் தமிழர் கருத்தினை அவர்கட்
கேற்றிநீ விற்பனை செய்வாய்;
பாற்படும் இந்த வாணிகத் தாலே
பயன்தரும் ஊதிய மெல்லாம்
தோற்பிலாத் தமிழுக்கே சேர்த்தனை இந்தத்
தொண்டினை யாமறக் கல்லேம்

பெருநெறி தொடர்ந்தியாம் வந்திடும் நாளில்
பேசரும் சமய நல் லூர்க்கோர்
சிறுநெறி பிரியப் பிரிந்தனை எனினும்
செந்தமி ழூரினில் மீண்டும்
வருநெறிக் கலந்து மகிழ்ந்தனம் அலமோ?
வந்திடும் காவிரி யாற்றைத்
திருவரங் கந்தான் பிரிப்பினும் மீண்டுஞ்
சேர்ந்திடா தொழியுமோ ஆறு.

அறுபதாம் ஆண்டைக் கடந்தனை என்றார்
அதற்குளா என்று நான் வியந்தேன்;
செறுபதம் ஆயின் விளைவுபன் மடங்காச்
சேருதல் இயற்கையே அண்ணால்!
உறுபதம் உடையை ஆதலின் இந்த
உலகளா வியபுகழ் கொண்டு
பெறுதமிழ் வாழும் நாளெலாம் வாழ்க
பேறெலாம் பெற்றனை யாகி.

டாக்டர் தமிழண்ணல்

# எளிமைக்கு எளிமை இல்லை!

டாக்டர் தமிழன்பன்
தமிழ் முதுகலைத்துறை, புதுக்கல்லூரி, சென்னை, 600 014

எளிமை
ஓர்
இடம் தேடிய போது
ஏற்ற இடம்
எளிதாகக் கிடைக்கவில்லை-
தமிழண்ணலைச்
சந்திக்கும் வரை!

அடக்கம்,
அகராதிக்கு வெளியே
அர்த்தப்பட்டது—இவரிடம்!

படிப்பு-
பலரைத் தடிக்க வைத்துள்ளது!
அதற்கு
இடம் தருவதற்காக
இன்னும்
இளைத்துக் கொண்டிருப்பவர்
இவர்!

ஓர்
ஓடை
கடலான கதையும்
பெரிய கருப்பன்
தமிழண்ணல் ஆனகதையும்
ஒன்றுதான்!
ஒரு மூச்சுக்கும்
மறுமூச்சுக்கும் இடைவெளியில்கூடக்
காசுதேடும் உலகில்
கற்பதற்கு
நூல்தேடும் இவர்
காலத்தின் கௌரவம்!

மானுடம்—
கோரப் படுத்தாமல் தன்
முகம் காட்டக்
கண்ணாடி
ஒன்றுக்கு அலைந்தபோது
அதன்
கையில்
தமிழண்ணல்,

இவரின்
சந்திப்பில், அனுபவம்-
கடலிலிருந்து
புறப்பட்டு வந்து
ஒருதீவு
நம்மிடம்
கைகுலுக்கும் இனிமை!

ஆரவார
அறிவாளிகள் மத்தியில்,
தமிழ்
தனக் கென்று
தயாரித்துக் கொண்ட
சிலரில்
இவர் ஒருவர்!

# அவர்மனை காண ஆண்டவன் வருகிறான்

சொ.சொ.மீ. சுந்தரம்
சௌராஷ்டிராக் கல்லூரி
மதுரை 625 004.

தெய்வத் திருமால் கள்ளழ கப்பிரான்
சித்திரை மாத முழுநில வதனில்
வையை ஆற்றில் இறங்கி நடந்து
வண்டி யூர்க்கு விரைவாய்ப் போகிறார்.
கையில் எடுத்த சக்கரம் ஆட
கண்டவர் வாய்திரு வாய்மொழி பாடப்
பொய்யறி யாத அடியவர் தொடரப்
புயல்நிறக் கடவுள் புயலாய்ப் போகிறார்.

வண்டி யூரில் துலுக்க நாச்சியார்
மனத்தில் பொங்கிய பக்தி இழுத்ததோ?
மண்டு கம்எனும் முனிவர்க் காக
மாதவத் திருமால் விரைகின் றாரோ?
தொண்டர் யாவரும் இவ்விதம் நினைக்க
தொடர்ந்து விரைவாய்ச் சென்றகள் ளழகர்
வண்டி யூர்க்குச் செல்லு முன்னாலே
வழியில் வேக நடையை நிறுத்தினார்.

தாரக மந்திர நாரணன் ஆனவர்
சதாசிவ நகர்க்குள் நுழைந்து சென் றதுமே
ஏரகம் என்ற வீட்டினைப் பார்த்ததும்
இன்றமிழ் கேட்டு நடையை நிறுத்தினார்.
பாரளந் தாலும் திருமழி சைப்பிரான்
பாட்டுக் காகப் பாம்பைச் சுருட்டிய
நாரண மூர்த்தி சதாசிவ நகரில்
நம்தவத் தாலே நடுவழி நின்றார்.

டாக்டர் தமிழண்ணல்

பெரிய திருவடி கருடன் கேட்டான்.
''பிரானே! என்ன நின்றுவிட் டீர்கள்?''
அரியெனும் திருமால் சிரிப்புடன் சொன்னார்
''அருந்தமி ழண்ணல் தமிழ்மனை இதுவாம்.
பெரிய கருப்பன் எனுந்தமி ழண்ணல்
பெருந்தமிழ் கேட்கும் பெருவிருப் பாலே
பரியை நடத்தி வேகமாய் வந்தேன்.
பைந்தமிழ் மனைதான் நமக்குவை குந் தம்.''

என்றவர் சொல்லக் கருடன் இறைஞ்சினான்
இவர்புகழ் கொஞ்சும் எடுத்துரைப் பீரென.
மன்றெலாம் புகழும் வேய்ங்குழல் அழகன்
மாதவக் கீதை வாய்மலர் திறந்தான்,
''என்மனத் துறையும் திருமகள் தன்னை
இவர்தான் 'செல்வம்' என்ற பெயரில்
நன்கவி யாக்க, இந்திய மொழிகளில்
நாட்டவர் அதனைப் படித்துயர்ந் தார்கள்

ஈரோட் டில்தான் பயணம் தொடங்கினார்.
இறைப்பணி மரபுச் செட்டியார் என்பதால்
காரைக் குடிக்கு மாற்றி விட்டேன்.
கவிதைக் கன்னியைக் கைப்பிடி என்றேன்.
சீரால் உயர்ந்தார் மதுரைச் செல்வர்
தியாக ராசர் திருநிழல் பெற்றார்.
பேரால் சிறக்கப் பல்கலைக் கழகப்
பேரா சிரியர் ஆக்கிப் பார்த்தேன்.

பெருந்தமிழ் அறிவால் இவர் தே சீயப்
பேரா சிரியப் பதவியைப் பெற்றார்.
அருந்தமிழ் கேட்டே பொற்கிழிப் பரிசை
அங்கயற் கண்ணி இவர்க்குக் கொடுத்தாள்.
திருந்திய அறிவால் தமிழக அரசின்
சிறப்புப் பரிசையும் மகிழ்வொடு பெற்றார்.
பொருந்தும் தமிழை ஜப்பான் மக்களும்
புரிந்து போற்றப் புலமையால் உயர்ந்தார்.

காவடி யோடு பாத யாத்திரை
கனிவுறச் செய்து பழநி யடைந்தார்
பாவடி நாடும் பழநி யாண்டவன்
படிப்படி யாக இவரை உயர்த்தினான்.
சேவடி நாடும் இவரை விட்டுத்
திருமகள் பிரியா திருக்கநான் செய்தேன்.
ஆவல் மிகுந்தநான் ஆண்டுக் கொருமுறை
அவர்மனை காண வண்டியூர் வருவேன்.''

என்றே உரைத்தார் கள்ளழ கப்பிரான்
என்மொழி கொண்டுநான் என்இனிப் போற்ற?
நன்றுரை செய்யும் நாட்டுப் பாடல்,
நற்கவி, ஆய்வுகள், ஒப்பி லக்கியம்
என்று துறைதொறும் தமிழ்வளர்க் கின்ற
இன்தமிழ்அண்ணல் திருவடி வாழ்த்தினேன்.
மன்னும் இவர்புகழ் மணிவிழா வாழ்கவே!
மதுரைப் பல்கலைக் கழகமும் வாழ்கவே!

டாக்டர் தமிழண்ணல்

# எண்ணம்போல் வாழ்க இனிது

பேராசிரியர் டாக்டர் அர. சிங்காரவடிவேலன்
தேவகோட்டை

சொன்னால் இனம்புரியும் சோமலெ. லெ.ப.கரு
அண்ணல் இராம.பெரி ஆம்பெரிய – மன்னர்களைக்
கற்கும் உலகுக்குக் கைம்மாறாய்த் தந்திருக்கும்
நெற்குப்பைக்(கு) ஏது நிகர்?

நிகரில் புலமையினை நெற்றான மெய்யில்
புகவைத்த நான்முகனைப் போற்றித்—தகவார்ந்த
அண்ணலுக்குச் சாந்தி அதற்குள்ளா வந்ததென
எண்ணி வியக்கின்றேன் இன்று.

இன்று தமிழண்ணல் ஏரகத்தில் தேவியுடன்
ஒன்றி இருக்கும் உயர்காட்சி—அன்று
திருப்பரங் குன்றத் திருமணந்தான்; வாழ்த்தி
இருப்பரிங்கு வானோர்க்(கு) இணை.

இணைந்திருக்கும் ஆச்சி இணையில்லா வாழ்க்கைத்
துணையானார்; ஆண்மக்கள் தூய—மனைகாக்கும்
தூணேதான்; பெண்மக்கள் தோகை மயிலேதான்;
வானேதான் அண்ணலவர் வாழ்வு.

வாழ்வில் முதலில்லை; வாட்டும் இளவறுமைத்
தாழ்வில் முயற்சித் தளர்வில்லை—ஊழ்வினையை
உப்பக்கம் கண்டே உயர்ந்த தமிழண்ணல்
எப்பக்கம் சென்றாலும் ஏறு.

ஏறுமுகம் காண்பார் இறைவன் திருமுன்னை
மாறுமுகம் கொண்டே மறந்திருந்தார்—நீறுமுகத்
தண்டபாணி நோக்கித் தமிழ்நடையைக் கொண்டார்பின்
கண்டுமுதல் கொண்ட தவர் கை.

கைகள் கவியெழுதும் கண்ணிரண்டும் முத்தளக்கும்
வைகைப் புனற்பெருக்கை வாய்மொழியும்—
செய்வகைகள்
சின்ன வடிவுக்குள் சேர்ந்தே விரிவதனால்
அண்ணல்உரு நம்குறளே ஆம்:

ஆமென்(று) உலகோப்பும் ஆய்வுத் தலைமணியாய்த்
தாமாய் உயர்ந்த தமிழண்ணல்—ஓமென்னும்
மந்திரத்தைத் தந்தைக்கு வாய்மலர்ந்தான் நல்லருளால்
சந்ததமும் வாழ்க தழைத்து.

தழைத்துச் சிறக்க! தமிழ்போல வாழ்க!
மழைபோல் பலவளங்கள் வாய்க்க!—உழைத்த பயன்
பாருக்குச் சார்ந்திடுக! பல்கலை நற்கழகத்
தேருக்கும் சேர்க! திறம்-

திறமையினைப் பாராட்டிச் செந்தமிழால் வந்த
உறவாலே அண்ணல் உயரத்—தரமான
வெண்பா மலரிமாலை வேலன்நான் சூட்டுகிறேன்
எண்ணம் போல் வாழ்க! இனிது.

டாக்டர் தமிழண்ணல்

# பைந்தமிழ் அண்ணல்
# பல்லாண்டு வாழ்க

வீர.சிவராமன்
செல்வி பதிப்பகம் காரைக்குடி 623 001

செந்தமிழ்க் கலையினில்
　　தீந்தமிழ் மன்னன்

சிந்தனை யெல்லாம்
　　மொழிவழி தந்தான்

நந்தமிழ்ச் செல்வம்
　　நலமெலாம் காக்க

நாயக னாகவே
　　நற்றுணை யானான்

சுந்தரத் தமிழின்
　　சுவைபல ஆய்ந்தான்

சொற்றிறம் மிக்கப்
　　பல்கலை வேந்தன்

பைந்தமி ழண்ணல்
　　பார்புகழ் ஓங்க

பல்லாண்டு வாழ்க!
　　பல்லாண்டு வாழ்க!

# குரு வணக்கம்

கவிஞர் மு. மேத்தா

கன்னல் நீ! எங்கள் வாழ்வின்
கலங்கரை விளக்க மான
அண்ணல் நீ! தமிழண் ணல்நீ!
ஆரிருள் பிளக்கும் வெள்ளை
மின்னல் நீ! தாகம் தீர்க்கும்
மேகம் நீ! மழையும் நீயே!
இன்னல் நீ செய்த தில்லை
எவர்க்கும் நீ உதவி செய்தாய்!

உன்னிடம் தமிழைக் கற்றேன்
ஒய்விலா உழைப்பைக் கற்றேன்
கண்ணிய வாழ்வைக் கற்றேன்!
கடமையை முடிக்கக் கற்றேன்!
அன்னையாம் தமிழை நோக்கி
ஆர்த்தெழும் பகையை இந்த
மண்ணிலே வீழ்த்து கின்ற
வாளினைக் கையில் பெற்றேன்!

நூறாண்டு வாழ வேண்டும்
நோய் நொடியின்றி நீயே!
பாராண்ட தமிழன் வாழ்வைப்
பறைசாற்று எங்கள் தாயே
ஏராளமாக நூல்கள்
எழுதிட வேண்டும் நீதான்!
யாராண்டால் என்ன ஐயா
அரியணை தமிழுக்கேதான்!

டாக்டர் தமிழண்ணல்

# யாரவர்?

பொற்கிழிக் கவிஞர் டாக்டர் ச. சவகர்லால்

பூவின் மெல்லிதழ் அவிழ்ந்தது போலொரு
புன்சிரிப் பிதழிலே மலர்ந்துவரும்
காவின் தென்றலில் கடிமணம் போலொரு
கவினுரை யுதட்டில் தவழ்ந்து வரும்
நாவில்தோன்றிடு முரையெலா மங்கொரு
நற்றமிழ் நாட்டிய மாடிவரும்
மேவிய பேருடன் மிஞ்சிய புகழுடன்
விளங்குவார் யாரவர்? தமிழண்ணல்

கண்விழித் தெழுந்திடக் கட்டியங் கூறியோர்
கட்டுரை ஆய்வுரை யென்னவரும்
கண்களை மூடியே தூங்கினு மாங்கவர்
கனவிலும் தமிழியல் பின்னிவரும்
எண்ணமும் செய்கையும் யாவுமே தமிழுடன்
இயைந்து நடந்துமே வண்ணமுறும்
என்னதான் சொல்லியே இயம்பினுமவர்
புகழ்க்
கீடில்லை யாரவர்? தமிழண்ணல்.

காற்றினி லாடும் கொடியினைப் போலவர்
கவினுடல் ஆடி அசைந்துவரும்
நாற்றினில் காற்று நாட்டியம் போலவர்
நாவிலே தமிழ்மொழி யாடிவரும்
கூற்றினை வெல்லும் உறுதி யுடனொரு
கொள்கை அவரிடம் வலிமைபெறும்
சாற்றிடு சொற்கள் சளைத்திடு புகழினைச்
சேர்த்தவர் யாரவர்: தமிழண்ணல்

நேசக் கரத்தினை நீட்டுவா ரங்கவர்
நெஞ்சமுங் கூடவே நீண்டுவரும்
பாசத் துடனவர் பகர்ந்திடு சொல்லுடன்
பண்புள மனசு கலந்துவரும்.
பாசமும் நேசமும் பண்புடன் சேர்த்துப்
பண்ணிய கூட்டென இயங்கிவரும்.
வீசிடு தென்றலும் வேனிலும் போலவே
விளங்குவார் யாரவர், தமிழண்ணல்,

# தமிழ்ச்சுரபி

பாபா
நற்கூடல் இலக்கியக் கழகம்
மதுரை

தலையாய தமிழுக்குத்
தளமானார் தமிழண்ணல்!
நிலையான மொழிப்பற்றால்
நிறைவான தமிழறிவால்
தலைவராகத் திகழ்கின்றார்!
தமிழராக மிளிர்கின்றார்!
அலையெனவே ஆர்த்தெழுவார்
அருந்தமிழைப் பழித்திட்டால்!

அன்பிற்கும் பண்பிற்கும்
ஆழமான நட்பிற்கும்
சின்னமாக வாழ்கின்றார்!
செருக்கின்றி பழகுவதில்
தென்றலென உலவுகின்றார்!
தெள்ளுதமிழ்ச் சுரபியிவர்!
தன்னலத்தை வெறுக்கின்ற
தகைமைசால் அறிஞரிவர்!

குன்றிலிட்ட விளக்காகக்
குன்றாத புகழுடனே
நன்னெறிகள் சுரந்துவர
நானிலத்தில் வாழியவே!
இன்பங்கள் பெருகிவர
ஏற்றமுடன் வாழியவே!
என்றென்றும் வாழியவே!
எந்தமிழ்போல்வாழியவே!

ஒரு விபத்தின்போது மருத்துவமனையில் இருந்த
பேராசிரியர் தமிழண்ணல் அவர்களுக்கு வந்த

# ஓர் ஆறுதல் கடிதம்

அன்புள்ள அண்ணனுக்கு வணக்கம்; எங்கள்
ஆறுமுகம் வந்துசொன்ன செய்தி கேட்டுக்
கணகசிந்தேன்; திடுக்கிட்டேன்; வந்து பார்க்கக்
கல்லூரி திறப்பதனால் இயல வில்லை.
அண்ணன் கால் விரைவாகக் குணத்தைக்காண
ஆறுமுக வேலன்பால் மனுவைப் போட்டேன்
உண்மைநகல் உங்களுக்கு அனுப்பி உள்ளேன்
உள்மனதுக் கோப்புக்குள் சேர்த்துக் கொள்க.

இணைப்பு:
ஆறுமுக வேலனுக்கு விண்ணப்ப நகல்

ஆறுமுக வேலனுக்கு; தந்தை இந்த
அகிலத்தைப் படைத்தசிவன்; தங்கும் வீடோ
ஆறுபடை வீடாகும்; முகாமில் சென்றால்
அவனிருப்பும் அடியவரின் உள்ள மாகும்
கூறுபவன் நின்பெயரன்; அரசி என்பார்
கொஞ்சுதமிழ்க் கவிஞன்நான்; 'செந்தில்' தன்னில்
ஆறிவரும் அண்ணன்கால் தூணாய் மாற்றல்
அடியேனின் பணிவான வேண்டு கோளே

ஏறுமயில் கொண்டவன் நீ உன்னைப் போல
ஏறிவர வாகனத்தைப் பெற்றிருந்தால்
கூறுபுகழ்த் தமிழண்ணல் உந்தில் ஏறிக்
கூட்டமிகு நிலையத்தில் இறங்க மாட்டார்
கூறுகெட்ட மிதிவண்டிக் காரர் மோதிக்
குருத்தெலும்பு விலகுதற்கும் மார்க்க மில்லை
ஆறுமுக வேலா நீ! இனிமேல் என்றும்
அண்ணன்செல் வீதிகளில் துணைக்குச் செல்க

ஆறுமுகம் கொண்டவன்நீ; அண்ணன் போல
ஆய்வுமுகம் கொண்டதனால் பாதை விட்டு
வேறுமுகம் திரும்பினையோ? மோதும் போது
விலக்காமல் உறங்கினையோ? உனக்கு வாய்த்த
ஆறிரண்டு கண்களினை மனைவி மாரின்
அழகினிலே சொக்குதற்கோ அடகுவைத்தாய்?
தாரிரண்டு தமிழாலே சூட்டு கின்றேன்
தமிழண்ணல் உடல்தேறத் தயவு செய்க

இளவயதில் உன்பக்கம் வாராக் கோபம்
இன்னுமா இருக்கிறது? வணங்கும் கைகள்
வளர்தமிழை வரைவதிலே தோய வைத்து
வணங்காத கடனுக்கு வட்டி சேர்ப்பார்
தளர்நடையைக் கொண்டாலும் வளங்கள் கொஞ்சும்
தமிழ்நடையைப் பார்த்திடுக! இரக்கம் கொள்க;
பலர்நடையை எளிதாக்கும் பழநிப் பாடல்
பாடுபவன் வேண்டுகிறேன் நடக்க வைப்பாய்

இரும்புமனம் கொண்டவராம் எங்கள் அண்ணன்
எலும்பைத்தான் உடம்பாக வாய்த்தார் அப்பா
கரும்பாக அவர்காலை நினைத்தாய் கொல்லோ?
கரும்பான அவர்தமிழைப் பருகும் நீயும்
வரும் போதும் செல்போதும் கூடச் செல்க!
வண்டிகளை ஓரத்தில் ஒதுங்கச் செய்க!
குறும்பு செய்து பார்க்காதே; அண்ணன் காலைக்
குணமாக்கு வீடுவர மயில னுப்பு.

அவர்மனைவி எம்மண்ணி வள்ளி போல
அதட்டாதார்; தெய்வானை போன்றநல்லார்
அவர்நலமே இவர்வாழ்வாம்; ஆத லாலே
அண்ணனுக்கு விரைவாகக் குணத்தைச் சேர்ப்பாய்
தவறறியா நன்மக்கள் பெற்ற தந்தை
தழைத்தோங்கிப் பல்லாண்டு வாழ நீயும்
அவரழைக்கும் நேரத்தில் விரைந்து செல்க!
அயர்க்காமல் மயிலிடத்தும் சொல்லு வாயே!

எழுதியவர்
**டாக்டர் அர. சிங்காரவடிவேலன்**
தேவகோட்டை

# வாயுறை வாழ்த்து

கவியரசு முடியரசனார்

திருத்தக்கன் தருசிந்தா மணியில் இன்பத்
தேனுண்டு சங்கத்து நூல்தி ளைத்துச்
சிரித்துவரும் தமிழண்ணல்! நாச்சி யப்பத்
திருவாளர் தருசிந்தா மணியை இல்லின்
பொறுப்பேற்கும் காதலியாப் பெறுதல் கண்டு
பூரிப்புக் கொள்கின்றேன்; உங்கள் வாழ்வு
கருத்துவளர் காவியமும் புலவ னும்மாம்,
கவிநயமாம் பெருமக்கள் என்ன வாழ்க.

தான்சமைத்த சுவையுணவை இனிதென் றுண்ணும்
தலைவனைக்கண் டுளமகிழந்தாள் தலைவி என்று
நான்சுவைத்த குறுந்தொகைப்பாட் டுரைக்கும் அந்த
நலமேபோல் சுவைவாழ்வு வாழ்க தோழி!
தேன்பழுத்த தமிழ்மொழிக்கே ஆக்கந் தேடும்
தெளிவுரைகள் ஆய்வுரைகள் எழுத வல்லான்
மேன்மக்கள் குழுவில் இவன் அறிஞன் என்ன
மிளிர்வது நின் கையில்தான் உணர்தல் வேண்டும்.

அனிச்சத்தின் மலர்மோப்பக் குழையும் என்பர்
அன்பன் முகம், உளம்திரிந்து நினைத்தால் வாடும்;
மனத்திருக்கும் உண்மையினை நின்பால்சொன்னேன்
மாதரசே! அடைக்கம்மை நல்லாய் என்றன்
இனித்திருக்கும் நண்பன்முகம் சுருங்கா வண்ணம்
இல்லறத்தைப் பேணிடுக, இனிய பேசி
மனக்கினிய செய்திடுக, குறிப்ப றிந்து
மனைவிளக்காய் அவன்மகிழ வாழ்க! வாழ்க!

ஒருவர்பிழை பொறுத்திடுதல் இருவர் நட்பாம்;
உயர்நூல்கள் பயின்றாலும் வாழ்க்கை ஏட்டில்
ஒருவருளம் பிறர்பயில வேண்டும்; வேண்டின்
உண்மைநிலை இன்பநிலை காணல் வாய்க்கும்;
பெருகிடுநல் வாழ்வுக்கு மனைவி மக்கள்.
பேரணியாம் மங்கலமாம் என்பர் ஆன்றோர்;
அருகிருந்து திறந்துள்ளம் அளவ ளாவும்
அன்புளத்தன் உயிர்நண்பன் ஒளிவி ளக்காம்.

உளமொத்த இரட்டையராய் உடன் பிறப்பாய்
உணர்வொன்றாய்ப் பழகிவரும் நண்பன் தன்னை
உளமொத்த துணையாகக் கொள்க என்றே
உன்கையில் அடைக்கலமாத் தந்தேன்; எங்கள்
உளமொத்த வாழ்வேபோல் வாழ்க; அன்பை
உயிரென்று போற்றிடுக; இன்பம் பொங்
வளமிக்க தமிழ்பாடும் என்றன் நாவால்
வாழ்த்துகிறேன் வாழ்த்துகிறேன் வாழ்த்து
கின்றேன்.

'கெழுதகை நண்பர் திரு. தமிழண்ணலுக்கும்
அடைக்கம்மை என்ற சிந்தாமணிக்கும் நடை
பெற்ற திருமணத்தில் பாடப்பெற்ற பாடல்.'

திசை வணங்கும்உன்பெயரைத்
திருவணங்கும் உன்சொல்லை
இசைவணங்கும் செந்தமிழின்
இயல்வணங்கும் திறல் வீமன்
தசைவணங்கும் கட்டுடலைத்
தரைவணங்கி நின்றது போல்
மிசைவணங்கும் உன்பாட்டை
மிகவணங்கி வாழ்த்துவனே!

—தமிழ் ஒளி

# பன்னீர்த் துளிகள்



# மணிவிழா நாயகர் வாழ்க்கைக் குறிப்பு

### பிறப்பு

தமிழ்கூறு நல்லுலகால் 'தமிழண்ணல்' என அன்போடு அழைக்கப் படும் டாக்டர் இராம. பெரியகருப்பன் 1928—ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் 12—ஆம் நாள் பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டத்தில் நெற்குப்பை என்னும் கிராமத்தில் பிறந்தார். அவரது தந்தையார் பெயர் இராமசாமி; தாயார் பெயர் கல்யாணி.

### கல்வி

டாக்டர் தமிழண்ணல் மேலைச்சிவபுரி கணேசர் செந்தமிழ்க் கல்லூரியிலும், திருவையாறு அரசர் கல்லூரியிலும் பயின்று தமிழ் வித்துவான் பட்டம் பெற்றார் (1948); பிறகு தம் தனிமுயற்சியில் கற்று, சென்னைப் பல்கலைக்கழக இளங்கலை (பொருளியல், 1958), முதுகலை (தமிழ், 1961) ஆகிய பட்டங்களைப் பெற்றார். மதுரை தியாகராசர் கல்லூரியில் விரிவுரையாளராகப் பணியாற்றிய காலத்தில் 'சங்க இலக்கிய மரபுகள்' என்னும் பொருளில் ஆய்வு செய்து டாக்டர் பட்டம் பெற்றார் (1969). டாக்டர்' சி. இலக்குவனாரும், டாக்டர் அ. சிதம்பரநாதனாரும் இவர் தம் ஆய்வு வழிகாட்டிகள் என்பது குறிப்பிடத்தக்கது.

### ஆசிரியப் பணி

டாக்டர் தமிழண்ணல் கல்வித் துறையில் நல்லாசிரியராகக் கடந்த நாற்பதாண்டுகளாகச் சிறப்பாகத் தொண்டாற்றி வருகின்றார். காரைக்குடி மீ.சு. உயர்நிலைப் பள்ளியில் 13 ஆண்டுகளும் (1948—1961), மதுரை தியாகராசர் கல்லூரியில் 10 ஆண்டுகளும் (1961—1971) பணியாற்றிய பின், தற்போது மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தில் 1971 முதல் பணிபுரிந்து வருகின்றார். விரிவுரையாளர் (1971—'73), இணைப் பேராசிரியர் (1973—'75) அஞ்சல்வழிக் கல்வித் தமிழ்ப் பேராசிரியர் (1975—'80), தமிழியல் துறைப் பேராசிரியர் (1980—'88), ஒருங்கிணைப்பாளர் (1988 டிசம்பர் முதல்) எனப்

பல்வேறு நிலைகளில் மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தில் பேராசிரியர் தமிழண்ணலின் பணி அமைந்தமை ஒரு சிறப்பாகும். இவரது பணிக்காலத்தில் தான் மதுரை காமராசர் பல்கலைக்கழகத் தமிழியல் துறை சிறப்பு நிதிவுதவித் துறையாக உயர்வு பெற்றது.

*நல்ல குடும்பம்*

1954—ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் 30-ஆம் நாள் பேராசிரியர் தமிழண்ணல்—சிந்தாமணி அம்மையார் திருமணம் நடைபெற்றது. இப்போது தமிழண்ணல்—சிந்தாமணி தம்பதியினருக்குச் சோலையப்பன், கண்ணன், மணிவண்ணன் என மூன்று மகன்களும், கண்ணம்மை, அன்புச் செல்வி முத்துமீனாள் என மூன்று மகள்களும் உள்ளனர். 'நல்ல குடும்பம் ஒரு பல்கலைக் கழகம்' என்னும் மொழிக்கு எடுத்துக்காட்டாக விளங்குவது டாக்டர் தமிழண்ணலின் குடும்பம் ஆகும்.

*பரிசுகள்*

1971-ஆம் ஆண்டு குடியரசு நாளில் புதுதில்லி அகில இந்திய வானொலி நிலையத்தின் சார்பில் நடைபெற்ற கவியரங்கில், தமிழகத்தின் சார்பாகக் கலந்து கொண்டு 'செல்வம்' என்ற தலைப்பில பேராசிரியர் தமிழண்ணல் பாடிய கவிதை, இந்திய ஆட்சி மொழிகள் அனைத்திலும் மொழிபெயர்க்கப்பட்டு, ஒலிபரப்பப்பட்ட சிறப்புடையதாகும். மதுரை மீனாட்சியம்மையைப் பற்றி இவர் எழுதிய 101 அடிப் பாடல் தமிழக அரசின் முதற்பரிசு பெற்றது 1973-ஆம் ஆண்டு, டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி தலைமையில், மீனாட்சியம்மன் கோவிலில் நடைபெற்ற பாராட்டு விழாவில் இவர் இப்பரிசினைப் பெற்றார். 'மறைமலையடிகள் பிள்ளைத்தமிழ்' என்ற இவரது கவிதை நூலும் பரிசு பெற்ற ஒன்றாகும். 1976-ஆம் ஆண்டு காரைக்குடி இராமசாமி தமிழ்க் கல்லூரியில் நடைபெற்ற விழாவில் இந்நூலுக்குப் பரிசு வழங்கப்பட்டது.

*நூல்கள்*

டாக்டர் தமிழண்ணல் சங்க இலக்கியம், ஒப்பிலக்கியம், நாட்டுப்புறவியல், ஆராய்ச்சி நெறிமுறையியல், இலக்கியத் திறனாய்வு, இக்கால இலக்கியம், குழந்தை இலக்கியம், இலக்கணம், தமிழ் இலக்கிய வரலாறு, பயன்பாட்டு மொழியியல் போன்ற பல்வேறு துறைகளைச் சார்ந்த 30 நூல்களை வெளியிட்டுள்ளார்; தமிழ் இலக்கியத்தின் பரப்பு முழுவதையும் தழுவிய வகையில், பல்வேறு பொருள்களைப் பற்றி ஏறத்தாழ நூறு கட்டுரைகளை எழுதியுள்ளார்.

பேராசிரியர் தமிழண்ணல், டாக்டர் மு.வ.வைப் போல் ஆய்வறிஞராகவும் படைப்பாசிரியராகவும் ஒருங்கே திகழ்வது சிறப்பாகக் குறிப்பிடத்

தக்கதாகும். செட்டிநாட்டு வாழ்க்கை முறைகளை நடப்பியல் பாங்கில் சித்திரிக்கும் இவருடைய 'வாழ்வரசி' என்ற நாவல், புனைகதை உலகில் தனியிடம் பெற்றதாகும். சைவ சித்தாந்தத்தில் சிறப்பிடம் பெறும் வினைக் கோட்பாட்டினை அடிப்படையாகக் கொண்டு இவர் எழுதிய நாவல் 'நச்சு வளையம்'.

தொடக்க காலத்தில் இருந்தே —காரைக்குடி மீ. சு. உயர்நிலைப் பள்ளியில் பணியாற்றும் போதிருந்தே - தமிழ் ஆராய்ச்சித் துறையில் ஆர்வம் கொண்டிருந்த பேராசிரியர் தமிழண்ணல், அவ்வப்போது நாட்டுப்புறவியல் துறையிலும் தனிக்கவனம் செலுத்தி வந்தார்; 'தாலாட்டு' 'காதல் வாழ்வு,' 'பிறை தொழும் பெண்கள்' என மூன்று நூல்களை வெளியிட்டார், இவற்றுள் 'தாலாட்டு' நூலைக் குறித்துக் கவியரசு கண்ணதாசன் 'எங்கள் தாய் வீட்டுச் சொத்து' எனப் போற்றிக் கூறியது ஈண்டு நினைவு கூரத்தக்கதாகும்.

*சிறந்த நூல்களுக்கான பரிசுகள்*

1982–ஆம் ஆண்டு தமிழக அரசு, பேராசிரியர் தமிழண்ணலின் 'சங்க இலக்கியத்தில் மரபும் திறனும்' என்னும் ஆங்கில நூலை முதற் பரிசுக்கும், 'நச்சு வளையம்' என்ற நூலை இரண்டாம் பரிசுக்கும் தேர்வுசெய்து பாராட்டிப் பரிசு வழங்கியது.

*சாகித்திய அக்காதெமி*

தமிழக அரசால், 1982-ஆம் ஆண்டில் டாக்டர் தமிழண்ணல் புது தில்லியில் உள்ள சாகித்திய அகாதெமியின் பொதுக்குழு உறுப்பின ராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர் இன்றும் அப்பொறுப்பில் தொடர்ந்து பணியாற்றி வருகிறார்.

*ஞானபீடம்*

பேராசிரியர் தமிழண்ணல் 1985-ஆம் ஆண்டு முதல் ஞானபீட விருதுக் குரிய தமிழ் மொழிக் கருத்துறைஞர் குழுவில் பணியாற்றி வருகிறார்.

*தேசியப் பேராசிரியர்*

பல்கலைக்கழக மானியக்குழு, பேராசிரியர் தமிழண்ணலை 1981—'82 ஆம் கல்வி ஆண்டிற்குரிய தேசியப் பேராசிரியராகத் தேர்வு செய்து சிறப்புச் செய்தது. இத்திட்டத்தின் கீழ் இவர், இந்தியப் பல்கலைக் கழகங்கள் பலவற்றிற்கும் சென்று, தமிழ் மொழியின் தொன்மை, சிறப்பு, இலக்கியக் கொள்கை முதலியன குறித்து பல சொற்பொழிவு களை ஆற்றியிருக்கிறார்.

## உலகக் கருத்தரங்குகள்

டாக்டர் தமிழண்ணல் 1983 ஆம் ஆண்டு இலங்கையில் நடைபெற்ற உலக இந்து சமய மாநாட்டுக் கருத்தரங்கில் கலந்து கொண்டு கட்டுரை படித்தார்.

1983-ஆம் ஆண்டு சப்பானில் அனைத்துலக மானுட அறிவியல் கழகத்தின் சார்பில் நடைபெற்ற 31-ஆம் மாநாட்டுக் கருத்தரங்கில் கலந்து கொண்டு சங்கஇலக்கியம் பற்றிய கட்டுரை ஒன்றினை வாசித்தளித்தார்; டோக்கியோ பல்கலைக்கழகத்தில் சங்க இலக்கியம் பற்றிச் சிறப்புரை நிகழ்த்தினார்.

## ஆய்வு வழிகாட்டி

பேராசிரியர் தமிழண்ணலின் மேற்பார்வையில் ஆய்வினை மேற்கொண்டு இதுவரையில் 40—க்கு மேற்பட்டவர்கள் டாக்டர் பட்டம் பெற்றுள்ளனர்; மேலும் பல ஆய்வாளர்கள் எம்.பில். பட்டம் பெற்றுள்ளனர்.

## பாடத் திட்டக் குழுக்களில் பங்குபெறல்

மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மரத்துவாடா பல்கலைக்கழகம், அணணாமலைப் பல்கலைக்கழகம், வெங்கடேசுவரா பல்கலைக்கழகம், கேரளப் பல்கலைக்கழகம், சென்னைப் பல்கலைக்கழகம், கோட்டயம் பல்கலைக்கழகம், கோழிக்கோடு பல்கலைக்கழகம், பாரதியார்பல்கலைக்கழகம், பாரதிதாசன் பல்கலைக்கழகம் போன்ற பல்வேறு பல்கலைக்கழகங்களில் பேராசிரியர் தமிழண்ணல் தமிழ்ப் பாடத் திட்டக் குழு உறுப்பினராகப் பணியாற்றி வருகிறார். மேலும், இவர் தஞ்சைத் தமிழ்ப்பல்கலைக்கழகப் பேரவை உறுப்பினராக 1986 ஆம் ஆண்டு முதல்பணியாற்றி வருகிறார்.

## தமிழகப் புலவர் குழு உறுப்பினர்

திருச்சி தமிழகப் புலவர் குழுவில் பல்லாண்டுகளாக உறுப்பினராக விளங்கி வருகிறார்.

## 'தினமணி'யில் தொடர்ந்து எழுதுதல்

டாக்டர் தமிழண்ணல் 'தினமணி' நாளிதழில் 'வளர்தமிழ்' பகுதியில் 'உங்கள் தமிழைத் தெரிந்து கொள்ளுங்கள்' என்னும் தலைப்பில் தொடர்ந்து எழுதி வருகின்றார். அப் பகுதி பலராலும் விரும்பிப் படிக்கப் படுவதாகும்.

## திரு. வி.க. விருது

தமிழக அரசின் சார்பில் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அண்மையில் (27-8-89) டாக்டர் தமிழண்ணலுக்கு அவரது தொண்டினை நினைவு கூர்ந்து தமிழ்த் தென்றல் 'திரு.வி.க. விருது' வழங்கிச் சிறப்பித்துள்ளார்.

# தகுதியுரை

பசும்பொன் தேவர் திருமகனார் மாவட்டத்தில் நெற்குப்பை என்னும் சிற்றூரில் இராமசாமி கலியாணி ஆகியோரின் மகனாராக 12.8.1928ல் தோன்றிய பேராசிரியர் தமிழண்ணல் அவர்களின் இயற்பெயர் இராம. பெரிய கருப்பன் என்பதாகும். காரைக்குடி மீனாட்சி சுந்தரேசுவரர் உயர்நிலைப் பள்ளியில் தம் பணியைத் தொடங்கிய பேராசிரியர், மதுரை தியாகராசர் கல்லூரியிலும் மதுரை காமராசர் பல்கலைக் கழகத்திலும் துறைத் தலைவராகத் திகழ்ந்துள்ளார். முதுகலையாளர்கள் பலரின் டாக்டர் பட்ட ஆய்விற்கு வழிகாட்டியாக விளங்கியவர். 1981இல் பல்கலைக் கழக நல்கைக் குழு தேசியப் பேராசிரியராக நியமித்துச் சிறப்புச் செய்தது.

1973இல் அருள்மிகு மீனாட்சி அம்மையின் மீது இயற்றிய செந்தமிழ்ப்பாடலுக்காக மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களால் ''பொற்கிழி'' பரிசு பெற்றவர். முப்பதுக்கும் மேற்பட்ட அரிய நூல்களைப் படைத்துத் தமிழன்னைக்கு அணிகலனாக அளித்தவர்.

சங்க இலக்கிய நலங்காணும் திறம், ஒப்பிலக்கிய ஆய்வு நிகழ்த்தும் பன்மொழிப் புலமை, புதினம் படைக்கும் கற்பனை வளம், எந்நிலையிலும் பொதுமை காணும் ஏற்றம், புலமைப் பெருமிதம் முதலியன பெற்று, ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்விப் பாங்குறு பேராசிரியராகத் திகழும் டாக்டர் தமிழண்ணல் அவர்களுக்குத் தமிழக அரசு 1989ஆம் ஆண்டுக்குரிய ''திரு.வி.க. விருது'' வழங்கி வாழ்த்துகிறது.

(ஒ--ம்) க. அன்பழகன் — கல்வி அமைச்சர்

(ஒ—ம்) மு. கருணாநிதி — முதலமைச்சர்

சென்னை

27—8—1989

# டாக்டர் பேராசிரியர் தமிழண்ணல்

அன்புடையீர்,

வணக்கம்.

நிகழும் திருவள்ளுவராண்டு 2020 புரட்டாசித் திங்கள் 21ஆம் நாள் (7-10-89) சனி மாலை 5 மணியளவில் மதுரை காமராசர் பல்கலைக்கழகத் தமிழியல் துறை முன்னாள் தலைவரும் தமிழக அரசின் திரு. வி க. விருது பெற்ற பேரறிஞருமான பேராசிரியர்

**டாக்டர் தமிழண்ணல்** அவர்களின்

மணிவிழா மதுரை நியூ காலேஜ் ஹவுஸ் இரண்டாம் மாடியில் நடைபெறவிருக்கிறது.

தவத்திரு **குன்றக்குடி அடிகளார்** அவர்கள்

தலைமை ஏற்கவும்

முத்தமிழ்க் காவலர்

திரு **கி.ஆ.பெ.விசுவநாதம்** அவர்கள்

மணிவிழா மலரை வெளியிடவும்

தொழிலதிபர்—அறநெறி அண்ணல்

திரு **லெ. நாராயணன் செட்டியார்** அவர்கள்

பேராசிரியருக்கு நிதி அளிக்கவும்

வள்ளுவத் தென்றல்

திரு. **ந. மணிமொழியன்** அவர்கள்

பொன்னாடை அணிவிக்கவும்

சிறுகதை மன்னர்

**திரு எஸ்.எஸ். தென்னரசு** எம்.எல்.ஏ. அவர்கள்

பேராசிரியர் எழுதிய உங்கள் தமிழைத் தெரிந்து கொள்ளுங்கள் நூலை வெளியிடவும் இசைந்துள்ளார்கள்.

தாங்கள் வருகை தந்து சிறப்பிக்க வேண்டுகிறோம்.

●

மணிவிழாக் குழுவினர்.

# மணிவிழா அழைப்பிதழ்

## நிகழ்ச்சி நிரல்

மாலை 5 மணி

| | | |
|---|---|---|
| தமிழ்த்தாய் வாழ்த்து | : | |
| வரவேற்புரை | : | டாக்டர் இரா. மோகன் |
| தலைமையுரை | : | தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் |
| மலர் வெளியீடும் சிறப்புரையும் | : | முத்தமிழ்க் காவலர் திரு கி.ஆ.பெ. விசுவநாதம் அவர்கள் |
| முதல்படி பெறுதலும் வாழ்த்துரையும் | : | திரு பே.தேவசகாயம் அவர்கள் |
| பொன்னாடை அணிவித்தலும் புகழுரையும் | : | வள்ளுவத் தென்றல் திரு ந. மணிமொழியன் அவர்கள் மேலாண்மை இயக்குநர், நியூ காலேஜ் ஹவுஸ் |
| நிதியளிப்பும் புகழுரையும் | : | அறநெறி அண்ணல்—தொழிலதிபர் திரு லெ. நாராயணன் செட்டியார் அவர்கள் |
| 'உங்கள் தமிழைத் தெரிந்து கொள்ளுங்கள்' நூல் வெளியீடும் சிறப்புரையும் | : | சிறுகதை மன்னர் திரு எஸ்.எஸ்.தென்னரசு எம்.எல்.ஏ. அவர்கள் |
| முதல்படி பெறுதலும் வாழ்த்துரையும் | : | திரு 'செல்வி' சௌந்தரபாண்டியன் அவர்கள் |
| 'அண்ணல்தமிழ்'— கருத்துரை | : | பேராசிரியர் டாக்டர் ச.மெய்யப்பன் அவர்கள் |
| பாராட்டுரை | : | கவிஞர் முடியரசன் அவர்கள்<br>திரு. சொக்கு சுப்பிரமணியன் அவர்கள்<br>திரு. விஜய திருவேங்கடம் அவர்கள்<br>பேராசிரியர் சாலமன் பாப்பையா அவர்கள்<br>திரு. கருணைதாசன் அவர்கள்<br>திரு செ. செல்லப்பன் அவர்கள்<br>பேராசிரியர் மா.வண்ணமுத்து அவர்கள் |
| ஏற்புரை | : | டாக்டர் தமிழண்ணல் அவர்கள் |
| நன்றியுரை | : | கவிஞர் பிரா |
| நாட்டுப்பண் | : | |




# இரதபந்த சித்திரகவி

**வயலூர் வலவனை வாழ்வை யருள்வானை**
**மயல்தீரெண் ணத்துளக்கண் மாறாச் — செயல்பழகு**
**பூழியனேர் தமிழ்ப் பூங்கா தருமிதழில்**
**வாழிதமி ழண்ணல் மனை!**

பொருள் :— எல்லாம் வல்லஇறைவன், வயலூர்வடிவேற்கடவுளை, நோயற்ற வாழ்வும், குறைவற்ற செல்வமும் கொடுத்தருளும் குமரப்பெருமானை, இவ்உலக மயக்கினின்றும் விடுதலையடையவேண்டி, அன்புவழியில் அகவிழிப் பார்வை தடைபடாது, இயம—நியம நெறிகளை இனிதே கடைப்பிடித்து, மனம்-வாக்கு—காயங்களினால் வழிபாடியற்றிவருபவரும், ''தமிழ் அண்ணல்'' எனும் திருப்பெயர் பூண்ட செந்தமிழ்ச் செம்மலுமான இப்பேரறிஞர், இவர்தம் மனை-மக்கள் அனைவரும் பழம் பதியாம் மதுரையின்கண் செங்கோல்செலுத்திய பாண்டிய மன்னன் குடும்பம்போல், நம்தமிழாகிய பைந்தமிழ்ச் சோலைதரும் மணமலர் இதழில் வாழ்க! நீடுழி வாழ்க !!

அன்பு

மதுரை: 7-8-89 மணிமன்ற அடிகள்



மணவிழாத் தம்பதியர்
பேராசிரியர் டாக்டர் தமிழண்ணல் அவர்களும்
துணைவியார் சிந்தாமணி ஆச்சி அவர்களும்

திருமணக்கோலம்



அன்று



இன்று

கணபதி ஓமம் வழிபாடு



திருக்கடவூரில்
மணிவிழா அபிடேகம். மகன், மருமகள், மகள் மூவரும்



திருக்கடவூரில் மணிவிழா வழிபாடு (1989) மீனு பாரதி,
சபரி பெரியகருப்பன், கார்த்திகேயன்



பேரன் பேர்த்தியர்



யு.ஜி.சி. தேசியப் பேராசிரியர் தகுதி தரப்பெற்ற போது (1981), வடமாநிலத் தமிழ்த் துறைகளில் சொற்பொழி வாற்றச் சென்ற காலை தாஜ்மஹாலில்



குடும்பம்



முதல் மகள் கண்ணம்மை யோடு

# அண்ணலின் மணிவிழா

டாக்டர் திருமதி இராதா தியாகராஜன், எம்.ஏ.பி.எச்.டி

துணைவேந்தர், அழகப்பா பல்கலைக் கழகம்

காரைக்குடி.

அறுபது ஆண்டுகள் அறம்புரி சுற்றமொடு, நெறிப்பட வாழ்ந்த செல்வச் செம்மல்களின் சிறப்பும் செம்மையும் நினைத்துப் பரவும் செவ்வி சான்றது அவர்பொருட்டு எடுக்கும் மணி விழா.

இருபதில் அரும்பி; மனைவாழ்வில் போதாகி, அறுபதில் மலர்ந்து அறிவு மணம் கமழ்வது வையகம் போற்றும் மக்கள்வாழ்வு. அத்தகையதொரு நல்வாழ்வின் நன்மலர்ச்சி யைச் சிறப்பிக்குமாற்றான் அமைந்தது பேராசிரியர் டாக்டர் தமிழண்ணலுக்கு எடுக்கும் மணி விழா

நாடாண்ட மன்னர்க்கும், மன்னர் பின்னோ ராகிய வணிகர்க்கும், நாட்டின் நலம் நோக்கி உழைத்த நல்லோர்க்கும், நாட்டவரும், நகரத்தவரும் ஒருங்கு கூடி மணி விழா எடுத்துச் சிறப்புச் செய்வது பண்டை நாளைய மரபு. அது நாண்மங்கலம் என இலக்கியம் காட்டும் இனிய நிகழ்ச்சி.

ஆனால் கல்லூரி மாணவர்க்கு நல்லறிவு வழங்கும் பேராசிரியர்களின் பெரும் தகை மையை நயந்து, மணி விழா எடுத்து மாண் புறும் சிறப்பு, நமது மதுரை மாநகர்க்கு ஒரு தனி உரிமையாக இருந்து வருகிறது.

பேராசிரியர் திரு தமிழண்ணல் அவர்கள் தமிழுக்கும், உயர்கல்விக்கும் பல்லாண்டு காலமாக அளித்து வரும் அரிய தொண்டின் பான்மையால் அவர்களின் மணி விழாவை, மதுரைப் பெருமக்கள் மனம் உவந்து முன் வந்து கொண்டாடுகிறார்கள். அவர் தமது புலமை, ஒழுக்கம், திறமை, அடக்கம், பணிவு ஆகிய நற்பண்புகளால் மக்களது நன்மதிப்பை நிரம்பப் பெற்றிருக்கிறார்.

ஆசிரியருக்கு இலக்கணம் கூறிய பழம் தமிழ் நூல்கள்!

> ''கொள்வோன் கொள்வகையறிந்து
> அவன் உளம் கொள
> கோட்டமில் மனத்தின் நூல்
> கொடுத்தல்
> என்ப''

என்று கூறுகின்றன.

கொள்வோன் கொள்வகையறிவதும், மாண வரின் மன இயல்பையறிவதும், நூல் கற்பிப் பதும், எல்லா ஆசிரியர்க்கும் பொதுக்கடமை. ஆயினும் மனக் கோட்டம் இன்றி கற்பிக்கப் படும் கல்விதான் மாணவர்களை எதிர்காலத் தில் மாண்புடைய நன்மக்களாக்க வல்லது.

செய்வதும் தவிர்வதும் அறிந்து விதித்ததும் விலக்கியதும் தெரிந்து விதி வரம்புக்கும் உள்ளே பணிபுரியும் செப்பத்தையே —செம் மனப் பாங்கையே- கோட்டமில் மனம் என்று சான்றோர் கூறுகின்றார். கோட்டமில் மனம் என்ற இலக்கண விதிக்கு ஏற்ப விதி வரம்பு களுக்கும், கல்வி முறைகளுக்கும் கல்லூரி நெறிகளுக்கும், பேராசிரியருக்கமைந்த அறங்களுக்கும், உட்பட்டு, கட்டுப்பட்டு, பணிபுரியும் கொள்கை நலம் இயல்பாகப் பெற்றவர்கள் திரு தமிழண்ணல் அவர்கள். விதிமுறை வரம்பு கடவாமல், நிலைத்த கொள்கைகளைக் கடைப்பிடித்து, கடமையை நன்கு ஆற்றும் பெருமகனை மாணவருலக மும், நன்மக்களுலகமும் என்றும் பாராட்டா தொழியாது என்பதற்கு இவர்கள் ஒரு தக்க சான்றாவர்.

மேலும் சங்கற்ப நிராகரணம் என்ற மெய் கண்ட நூல் இறைவன் சிவாகமங்களை அருளிய திறத்தை

> ''அரும் கடல் எழுந்த கரும் கடு வாங்கி
> கந்தரத்து அமைத்த அந்தமில் கடவுள்
> பாலரை உணர்த்தும் மேலவர் போல
> அருளிய கலைகள்''

என்று கூறுகிறது.

இங்கே சிவாகமங்களை அருளிய இறைவனுக்கு, பாலர்களுக்கு கல்வி அறிவுறுத்தும் ஆசிரியர்களை உவமமாக்குவது நோக்கத் தக்கது. உவமையெல்லாம் பொருளை விட உயர்ந்ததாக இருக்க வேண்டும். 'உயர்ந்த தன்மேற்றே உள்ளும் காலை' என்பது தொல்காப்பியம். ஆகமக் கலையுணர்த்தும் இறைவனுக்கு உவமையாகக் காட்டப்படுவதால், ஆசிரியர்கள் உயர்ந்தவர்கள் என்பது இதனால் விளங்கும். அது பற்றியே சங்கற்ப நிராகரணம் ஆசிரியர்களை மேலவர் என்று பாராட்டுகிறது.

இவ்வாறு நூலோர் பலருள். 'மேலோர்' ஆகத் திகழும் திரு தமிழண்ணல் அவர்கள் ஆராய்ச்சியை நெறிப்படுத்தும் நூல்கள் பல வற்றைப் படைத்திருப்பதுடன், நாற்பாதுக்கு மேற்பட்ட நல்லாய்வாளர்களை உருவாக்கி பி. எச். டி, எனப்படும் பட்டத்திற்குத் தகுதி உடையவராக்கியிருக்கிறார்.

'ஒப்பிலக்கியம்' எனப்படும் புதிய துறையில் கால் கொண்டு, அதனைத் தமிழ் கற்ற தமிழ்ப் புலவர்களிடம் அறிமுகப்படுத்திய பெருமையும் இவருக்குளதாக, இவர்தம் நூல்களின்வழி அறியாலாகும். நாட்டுப்புறவியல், புதினப்படைப்பு, கவிதை அனைய துறைகளிலும் நூல்கள் எழுதி தமிழின் நலமும் வளமும் சிறக்கப் பணிசெய்துள்ளார்.

தமிழக அரசிடமிருந்து சிறந்த நூல்களுக்கான இரு பரிசும், நல்லாசிரியர் விருதும் பெற்ற தமிழண்ணல் அண்மையில் 'தமிழ்த்தென்றல் திரு வி. க விருதினையும் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் கையால் பெற்றிருப்பது பாராட்டுக்குரியதாகும்.

அனைத்திந்திய அளவில் சாகித்திய அகாதெமி, ஞான பீடம், இந்திரா காந்தி தேசியத் திறந்த வெளிப்பல்கலைக் கழகம், பல்கலைக் கழக மானியக்குழு ஆகியவற்றில் உறுப்பினராய்த் தமிழகத்தின் சார்பாகப் பல்லாண்டுகளாகப் பணிசெய்து வருகிறார்.

நமது மதுரையில் தோன்றி வளரும் மதுரைப் பல்கலைக் கழகத்தின் வளர்ச்சிக்கும் ஆக்கத் திறத்தும் துணையாய்த் திகழ்கின்றார். அப்பல்கலைக் கழகத்தில் விரிவுரையாளரெனச் சேர்ந்து, தமிழ்த்துறைத் தலைவர் பதவி வரை உயர்ந்து பதினெட்டாண்டுகள் நற்பணியாற்றிய செம்மல் இவர். இன்று இந்தியாவிலேயே முதன்முறையாக, இவர் தலைமைவகித்த தமிழியல் துறையை, பல்கலைக்கழக மானியக் குழு, சிறப்பு நிதியுதவித் துறையாக(Department for special assistance)என அங்கீகரித்திருக்கிறது—அதனடிப்படையில் முதல் ஐந்தாண்டுகளுக்கு ரூ 22 இலட்சம்வரை உதவி செய்கிறது என்றால், அப்பெருமைக்கு இவரும் உரியவராகிறார் என்பது நமக்கெல்லாம் மகிழ்ச்சியைத் தருகிறது.

இவரது தமிழ்ப் புலமையின் பெருமையை யறிந்த கலைத்தந்தையவர்கள் இவரை 1961—இல் தியாகராசர் கல்லூரியில் விரிவுரையாளராகப் பணியில் அமர்த்தினார்கள். எவ்விதப் பரிந்துரையுமின்றி, ஒருநாள் பகற்போது காலை தொடங்கி மாலை வரை நேர் முகப் பேட்டியில் நன்கு தேர்வு செய்து இவர் ஏற்றுக்கொள்ளப்பட்டார் என்பதே இவர்தம் நுண்மாண் நுழைபுலத்திற்கு ஒரு காட்டாக அமையும்.

சங்க இலக்கிய மரபுகளை ஆராய முற்பட்டு, இவர் தியாகராசர் கல்லூரியில் பணிசெய்த காலத்தில், பிஎச்.டி. பட்டத்திற்குப் பதிவு செய்துகொண்டார். அன்று ஆங்கிலத்தில் ஆய்வேடுகளை எழுதி அளிக்கும் பழக்கம் கண்டிப்பாகப் பின்பற்றப்பட்டலாகம். தம் ஆய்வேட்டினைச் செவ்வைய முறையில் யாத்தளித்து, அங்கு டாக்டர் பட்டம் பெற்று தாம் பணிசெய்த கல்லூரிக்கும் தமக்கும் பெருமை தருமாறு நடந்துகொண்டார். அதனால் பின்னர்ப் பல்கலைக் கழகம் அவரை அன்புடன் ஏற்றுக் கொண்டது. தன்முயற்சியும் உழைப்பும் ஈடுபாடும் பண்புமே தமிழண்ணலின் உயர்வுக்குப் படி அமைத்துத் தந்தன எனில் மிகையாகாது.

நீர் பெருக ஊரும் ஊருணியாய், நல்லார் நட்புறவும் நாடா நல்லிசையும் நனிசிறக்கப் பெற்று, நல்வாழ்வு வாழும பேராசிரியர் அவர்களும், தம் துணைவியார் திருமதி சிந்தாமணி ஆச்சி அவர்களும் எண்பதும் நூறுமாகிய ஆண்டு விழாக்கள் பல கண்டு, பெருவாழ்வு பெற்று, இன்புற்று வாழ்க என எல்லாம் வல்ல திருவருளை வேண்டி, வாழ்த்துகிறேன்.

# நான் கண்ட அண்ணல்

கருணைதாசன்
ஆசிரியர் தமிழ்ப் பாவை,
15, சண்முகபுரம் முதல் தெரு,
மதுரை—625010

1959 என்று நினைவு. சரியாக முப்பது ஆண்டுகள் ......!? அப்பப்பா எத்தனை நிகழ்ச்சிகள். எப்பேர்ப்பட்ட உரையாடல்கள்; அன்பான தொடர்புகள்......

அன்று எங்கள் எழுத்தாளர் மன்ற இரண்டாம் ஆண்டு விழாவை எப்படி நடாத்துவது? கவியரங்கிற்கு யார்யாரை அழைப்பது என்று நண்பர் பு. மனோகரன் கருத்துரை கேட்டார்.

''காரைக்குடி போய் கவிஞர் முடியரசனைக் கேட்டு வாருங்கள்'' என்று நண்பர் பு. மனோகரன் என்னைப் பணித்தார். நான் காரைக்குடி சென்றேன். முடியரசனைப் பார்த்தேன். அவர்தான் கூறினார். ''பெரியகருப்பன் என்ற ஓர் ஆசிரியர் எம் பள்ளியில் இருக்கிறார். நன்கு கவிதை பாடுவார். அவரையும் அழைத்து வருகிறேன். மனோகரனிடம் கூறுங்கள்'' என்றார்.

விழா அன்று தமிழண்ணலாக வந்தார். பாட்டரங்கில் கலந்து அருமையான கருத்துக்களால் கவிதை மழை பொழிந்தார். அதுதான் முதற்கவியரங்கம என எண்ணுகிறேன்.

சில ஆண்டுகளில் மதுரைத் தியாகராசர் கல்லூரிககே வந்து விட்டார் தமிழண்ணல். மதுரைத் தியாகராசர் கல்லூரியில் பணி புரிந்த தமிழ்ச் சான்றோர்களான மா. இராசமாணிக்கனார், அவ்வை துரைசாமி, அ.கி. பரந்தாமனார். அ. சிதம்பரநாதனார், சி. இலக்குவனார், மெ. சுந்தரம் போன்றோரிடம் நெருக்கமாகஇருந்தவன் நான். கல்லூரி மாணவர்களின் சிறுகதைப் போட்டிக்குரிய தேர்வுக் குழுவில் உறுப்பினராகக் கூட இருந்திருக்கிறேன். ஆனால் தமிழண்ணல் அவர்களிடம் ஏற்பட்ட நட்பு இருக்கிறதே, அது நவில்தொறும், நூல்நயம் போன்றது. தமிழண்ணல் அவர்கள் காரைக்குடியிலேயே இருந்திருந்தால் நான்கு சுவர்களுக்குள் கொளுத்தி வைத்த ஊதுபத்தி போலவே இருந்திருப்பார். வீட்டிற்குள் மட்டும் மணக் பரப்பும் ஊதுபத்தியை மதுரைக்கும் கொணர்ந்தார் கருமுத்து தியாகராசர். அது முதல் மதுரைக்கு மணம் பரப்பத் தொடங்கிய அவர் வளர வளரத் தமிழகம் முழுதும் நறுமணம் பரப்பத் தொடங்கினார்.

1980 இல் என்னைப் பார்க்கும்போதெல்லாம் ஒன்றை வலியுறுத்திக் கொண்டே வந்தார்.

''என் உளத்தில் எரிந்து கொண்டிருக்கும் தமிழ் உணர்வைத் தமிழர்களுக்குத் தெரிவித்தாக வேண்டும். பழைய தமிழ்ப்பாவையை எப்படியாவது தொடங்குங்கள். உங்களால் தான் முடியும். ஆளுக்கு இவ்வளவு என்று ஒரு தொகையாவது போட்டுத் தொடங்குவோம். தமிழ் உணர்வு எங்கோ போய்க் கொண்டிருக்கிறது; சொல்லப் போனால் செத்துக் கொண்டிருக்கிறதுஎன்று''வேதனையோடு கூறினார்

'''இந்து' நாளிதழில் 'Know Your English' என்ற பகுதி வெளிவருகிறது. அதைப் போல தமிழிலும் எழுத வேண்டும்; தமிழ்ப் பேராசிரியர்களுக்கே தடுமாற்றம் ஏற்படுகிறது. அதை இந்த வழியில் போக்கலாம்'' என்று கூறி என்னை உசுப்பி விட்டவரே அவர் தான்.

அந்த உள்ளக்குமுறல் தான் இன்று தினமணி நாளிதழில் வடிகாலாக ''உங்கள் தமிழைத் தெரிந்து கொள்ளுங்கள்'' என்ற பகுதியாகும். தமிழண்ணலின் நிலையும் நினைப்பும் தமிழ் கொச்சைப் படுத்தப்படாமல் இருக்க வேண்டும் என்பதுதான். தமிழன்

தமிழை வளர்க்கப்பாடுபடாமல் பணம் சம்பாதிக்கவே பயன்படுத்துகிறான்'' என்று மனதில் வேதனையோடு கூறுவார்.

''தாய் நாடா, தாய் மொழியா?'' என்று கேட்டால், ''தாய்மொழி தான் வேண்டும்'' என்றார் அயர்லாந்து நாட்டின் விடுதலை வீரர் டி' வேலரா. அவர் தாய் மொழியையும் விடவில்லை. தாய் நாட்டையும் விடவில்லை என்பது வரலாறு கூறும் பாடம். தாய் மொழியை மட்டும் ஏன் வலியுறுத்தினார் என்றால் நாடு இல்லாவிட்டாலும் தேடிக் கொள்ளலாம். இசுரேலியரைப்போல். மொழி இல்லா விட்டால் ஓர் இனமே அழிந்து போகும்; இவர்கள் இன்ன மக்கள் என்று அடையாளம் காணமுடியாமல் போய் விடும்.

ஆகவேதான் தாய் மொழியைக் காக்க டி' வேலரா விரும்பினார். அதைப்போல தமிழர்கள் தம் மொழியைக் காத்தாக வேண்டும். பிற நாட்டார் காப்பதுபோலக் காக்க வேண்டும். வெறும் வாய் வீச்சலால் நமது மொழியை வளர்க்கிறோம் என்றுபேசாதீர்கள்'' என்பார் தமிழண்ணல்.

''நமது மொழி தொன்மை வாய்ந்தது; தனித்தன்மை வாய்ந்தது—என்று வானளாவப் பேசிப் பேசிப் பொழுதைக் கடத்துகிறோம். ஆனால் உலக அரங்கில் நமது தொன்மை தொடவில்லை. தனித் தன்மை தட்டிப்பார்க்கவில்லை. உலக அரங்கில் உலா வரவில்லை. நம் அருகிலிருக்கும் அயலானாவது நம்மை மதிக்கிறானா? அதுவுமில்லை.''

தமிழண்ணலின் இக்கருத்தில் எப்படி வேதனை வெடிக்கிறது பார்த்தீர்களா? 3000 ஆண்டுகளுக்கு முந்திய மூத்த தமிழ் என வாய் கிழியப் பேசுகிறோம். உலகமெல்லாம் இந்த மூத்த மொழியைப்பற்றித் தெரிகிறதா? தெரிவதற்கு ஆக்க சார்பான (constructue) பணிகளைத் தமிழன் செய்திருக்கிறானா?

தமிழரசர்கள் என்று கூறும் சேர, சோழ, பாண்டியர்கள் ஒருவரை ஒருவர் சண்டை போட்டு அழித்துக் கொண்டார்களே தவிர, தமிழ்மொழி இன்னின்ன வகையில் உயர்ந்த மொழி என்பதை உலகுக்கு எடுத்துக் காட்ட என்ன செய்தார்கள் முற்காலத் தமிழன் என்ன செய்து சாதித்தான்? ஒருவன் ஒருவனைக் கொன்றான்.

நல்ல வேளை, இவர்கள் செய்யாததைச் சமயம் பரப்பவந்த மேலைநாட்டார் செய்தார்கள். தமிழ்மொழியை உணர்ந்தார்கள். அதன் சிறப்பைகண்டு வியந்தார்கள். உலகிலேயே மூத்தமொழி தமிழ்தான் என அவரவர் நாட்டிற்குச் சென்று கூறினார்கள். எழுதினார்கள். இல்லையென்றால் அதுவுமிருக்காது. மற்றொன்றும் தமிழண்ணல் கூறுகிறார்: ''உலகப் பெரு நூல்கள் என்றும், உலக இலக்கியங்கள் என்றும் எத்தனையோ தொகுதிகள், கலைக் களஞ்சியங்கள் அமெரிக்காவிலும், ஐரோப்பாவிலும் வந்த வண்ணமிருக்கின்றன. இவற்றில் ஒன்றிலாவது, உலகப் பொது நூல் என்று நாம் பேசுகிறோமே, நமது திருக்குறள், அதுபற்றி ஒரு வரி கூட இடம் பெறவில்லையே ஏன்?

நம்முடைய தொல்காப்பியம், சங்க இலக்கியம் பற்றி அருகிலுள்ள கேரள, கன்னட, தெலுங்கு அறிஞர்களுக்கு எதும் தெரியவில்லையே, ஏன்?

நாட்டை ஆள வேண்டும் என்ற எண்ணத்தில் தலைக்கனம் பிடித்து ஆடினார்களே தவிர, ஒரு குடையின் கீழ் எங்கே குறுநில மன்னர்கள் ஒன்றானார்கள்? நாடுபிடிக்க வேண்டும் என்றவேட்கையிருந்ததேதவிரமொழியை உலகெல்லாம் பரப்ப வேண்டும் என்ற எண்ணம் யாருக்குத் தோன்றியது, அதே நிலைதான் இன்று வரை நீடிக்கிறது.

இதற்குக் காரணம், தமிழன் மேடை ஏறினால் ஒன்று பேசுகிறான். மேடையை விட்டு இறங்கினால் ஒன்று பேசுகிறான். தமிழன் இரட்டை மனம் உடையவன். அவன் பண்பு, செயல்யாவும் இரட்டை மனம் கொண்டவை. வெளியில் ஒன்று— பேச்சில் ஒன்று; செயலில் ஒன்று என்றே அவன் வாழ்க்கை அமைகிறது.

ஆம். தமிழண்ணல் அவர்களின் மணிவிழாவின் போதாவது உண்மைத் தமிழன்பர்கள் சிறிது சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

**வீடுகளில் தமிழே பேசாமல் வேறுமொழிகளில் பேசுவதும், குழந்தைகளிடத்தில்—மனைவியிடத்தில் தமிழில் கொஞ்சாமல் வேற்றுமொழியில் கொஞ்சுபவரும் எவ்வாறு தமிழை வளர்ப்பதாக ஆகும்? வெறும் வாய் வீச்சால் தமிழ் உலக மொழியாகி விடுமா?. துணிந்து யாராவது கூறுங்கள்.**

மூத்த தமிழர்கள் செய்யத் தவறியதை—உணராமல் விட்டதை நமது காலத்திலாவது உணர்த்தவேண்டும் என்ற எண்ணம் கொண்ட அண்ணல் வழியில் வாருங்கள். தமிழுக்காக உயிர்விட வேண்டாம்; தன்னலம் கருதாமல் உழைக்க வாருங்கள்.

வாழ்க தமிழண்ணல் பல்லாண்டு
வளர்க அண்ணலின் தமிழ்த் தொண்டு

என வாழ்த்துகிறேன்.

# ஒரு புல்லாங்குழலுக்கு மணிவிழா

பேராசிரியர் டாக்டர்.ச. மெய்யப்பன்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

ஆய்வியல் அறிஞராய் ஒப்பியல் வல்லுநராய் உயர்ந்தோங்கியுள்ள தமிழண்ணல் பதவி யெல்லாம் படிப்படியாய்க் கடந்தவர். பள்ளி ஆசிரியராய், கல்லூரி விரிவுரையாளராய், பல்கலைக்கழகப் பேராசிரியராய் உயர்ந் துள்ளார். தனித்தமிழ்ப்புலவராய் வாழ்வைத் தொடங்கிய அவர்கள் தமிழகம் போற்றும் புலவராய்த் திகழ்கிறார்கள். தமிழகப்புலவர் குழுவின் செயலாண்மை மிக்க புலவராக ஒளி வீசுகிறார்கள். மாநில அளவிலும் தேசிய அளவிலும் பல்வேறு குழுக்களில் உறுப்பின ராய், தலைவராய் புகழோடு விளங்குகிறார் கள். புல்லாங்குழல் போன்ற தோற்றத் தினர். ஆனால் உறுதியான நெஞ்சினர். எளிய தோற்றத்தினர். ஏற்ற கொள்கை களில் திண்ணியர். என்போல்வார்க்கு வழி காட்டி எழுத்தாளர். நாடு போற்றும் பேச்சாளர். நானிலம் போற்றும் கவிஞர். விருதுகள் பல பெற்ற தமிழ் மறவர். அவர்க்கு இன்று மணிவிழா. உவகை. உவகை. உவகை. பல்லோர் உவகை என்னுள்பெய்த உணர்வினை அடைந்து நானறிந்த தமிழண்ணல் நலங்கள் சில வற்றை நினைந்து மகிழ்கிறேன்.

நேர்மையான வாழ்க்கை, கடுமையான உழைப்பு, நுட்பமான சிந்தனை, தெளிவான எழுத்து இவற்றால் உயர்ந்து வருபவர். கவிதை புனைதல், கட்டுரை எழுதுதல், சிறு கதை—புதினம் படைத்தல், ஆய்வுரை வரைதல், சுவைபெறபேசுதல் ஆகிய கலை கள் இவருக்குக் கைவந்த கலைகள்.

**ஆய்வியல் சூடி**

எண்பதுகளில் தமிழில் பத்துக்கு மேற்பட்ட ஆத்திசூடிகள் எழுதப்பெற்றன. வ.சுப. மாணிக்கனார்,ந. சஞ்சீவி சூடிகள் இயற்றி னர். வ.சுப. வழியில் தமிழண்ணல் பல நிலைகளைப் பின்பற்றுபவர். அவர் மிகச் சிறந்த ஆய்வேட்டைப் பணிந்து அறிஞர் முனைவர் பட்டம் பெற்றவர். நாற்பதின்மர் அவர்கள் வழிகாட்ட முனைவர் பட்டம் பெற்றுள்ளனர். எம்.பில் பட்டம் பெற்றவர் எண்ணிலர். ஆய்வியல் அறிமுகம் எழுதிய அறிஞர் ஆய்வு நெறிமுறைகள் பற்றி ஆழ மாகச் சிந்தித்துள்ளார்கள் ஓர் ஆய்வாள னுக்கு அமைய வேண்டிய பண்புகள் அவன் கைக்கொள்ள வேண்டிய நெறிகள் பற்றிய திட்ப நுட்பம் மிக்க சூத்திரங்களை ஆய்வியல் சூடியில் எழுதியுள்ளார். தொல்காப்பிய உரியியல் நூற்பாக்கள் போல் சுருக்கமும் தெளிவும் மிக்கன அவை. ஆய்வுலகத்திற்கு அவர் இயற்றிய சூடி ஒரு கலங்கரை விளக்கம். ஆய்வாளருக்கு ஒளிகாட்டும் விளக்கு. ஆய்வுநெறி பயில விரும்புவார்க்கு உற்ற துணையும் வழிகாட்டியும் ஆகும்.

அறிவியல் முறை பேண்
ஈடுபட்டுழை
ஊன்றிய மனங்கொள்
சிக்கலைத் தேர்வுசெய்
எண்ணப் பயிற்சி செய்
சிந்தனை வளம்சேர்
ஆழ்ந்தாழ்ந்து செல்
தெள்ளிதின் விளக்கு
காட்டுடன் நிறுவுக
கொள்கைகள் படை
பிற்சேர்க்கை கருது
பேணுக மொழிநலம்
வெற்றியில் மனம் வை
கோவையாய் எழுது
சான்றுகள் அடுக்கு
தலைப்பைத் தேர்ந்தெடு
தீர்வுகள் கண்டு சொல்
தூயமொழிபயில்
தொகுத்துரை வழங்கு
நினைத்துப் பழகு
நீளநினை
நுட்பங்காண்
நூலக உறவுகொள்
புதியன கண்டுசொல்

மேற்கோள் எடுத்துரை
வைப்புமுறை போற்று.

நிறைமொழி மாந்தர் ஆணையிற்கிளர்ந்த இவை ஆய்வாளர்க்கு மந்திரம் போல் வளம் சேர்ப்பன.

### ஒபபியல் ஆய்வு

எழுபதுகளில் தமிழ் ஒப்பாய்வு முகிழ்த்தது. அறிஞர் கைலாசபதி இத்துறைக்கு வித்திட்டார். தமிழண்ணல் இத்துறையை வளர்த்தார். ஒப்பியல் நூல்கள் பல படைத்து வளம் சேர்த்தார். இன்று ஒப்பாய்வு பல நிலைகளில் வளர்ந்தோங்குகிறது. ஒப்பியல் இலக்கியம், ஒப்பியல் அறிமுகம் முதலிய நூல்களில் ஒப்பாய்வுக் கோட்பாடுகளை உருவாக்கியுள்ளார். மேலைப்புலன்களில் மேன்மையுறும் ஒப்பாய்வுகளைச் சிறப்பாக விளக்குகிறார். மதுரைப்பல்கலைக்கழகத்தில் ஒப்பாய்வுத்துறை பீடுநடை போட வழி வகுத்தார். காய்தல் உவத்தல் அகற்றி பல மொழிகளில் உள்ள சிறப்புக்களைத் தமிழோடு ஒப்பிட்டு ஒப்பாய்வு வேர்விட, தழைக்க, பூத்துக்குலுங்க வழிவகுத்த பெருமகனார். மிகச்சீரிய முறையில் திட்டமிட்டு ஒப்பாய்வு உலகம் உவப்ப ஒப்பாய்வுக் கருத்தரங்கினை நடத்தினார். ஒப்பியல் துறை முன்னோடிகளில் தமிழண்ணல் முதல் வரிசையர்.

### இணைபிரியா இரட்டையர்

தமிழண்ணலை நாற்பது ஆண்டுகளாக நான் அறிவேன். காரைக்குடியில் பள்ளித் தமிழாசிரியராய்ப் பணியைத் தொடங்கினார்கள். நல்ல கவிதைகள் மூலம் தமிழ் உணர்ச்சியை வளர்த்துவரும் கவியரசு முடியரசன் தமிழண்ணல் இருவரும் இணைபிரியா இரட்டையர். பூங்கொடி, ஊன்றுகோல் முதலிய நல்ல காப்பியங்களை நமக்கு அளித்த முடியரசனார். தனித்தமிழ்ப்பற்றும், தமிழிசையில் ஊற்றமும் கொள்கையில்உறுதியும் உடையவர்கள். அவர்களின் உற்ற தோழர் தமிழண்ணல். பள்ளியில் பைந்தமிழை வளர்ப்பதிலும் மாணவர்களைப் பா இயற்றப் பயிற்றுவிப்பதிலும் மேடைத் தமிழை மேன்மையுறச் செய்வதிலும், உயர் தர்ம நெறிகளை மாணவர்க்கு உணர்த்துவதிலும், கவியரங்குகளில் பங்கேற்பதிலும் முடியரசரும் தமிழண்ணலும் இருப்புப்பாதை போல் இணைபிரியாதவர்கள். முடியரசனாரின் தமிழ் இயக்கக் கொள்கைகளில் தமிழண்ணல் நூற்றுக்கு நூறு பின்பற்றி முன்னேறுபவர்.

### வ.சுப வழியில்

மூதறிஞர் செம்மல் வ.சுப. மாணிக்கனார் வழியில் செல்பவர் அவர்கள் வகுத்த தமிழ் வழிக்கல்வி இயக்கத்திற்குத் தலைமையேற்று நடத்துபவர்கள். அதன் செயல்பாட்டிற்குப் பல்லாற்றானும் உதவுபவர்கள். தெளிவான முடிவுகளுடன் தீர்வு காண்பதில் கடமை உணர்வோடும், பொறுப்புணர்வோடும் செயலாற்றி இயக்கத்தினற்கு வழிகாட்டுவதுடன் இயக்கத்திற்கு வலிவும பொலிவும் சேர்த்து வருகிறார்கள்.

பண்டிதமணி கதிரேசனாரால் தோற்றுவிக்கப்பட்ட மேலைச்சிவபுரி சன்மார்க்க சங்கத் தமிழ்க் கல்லூரியை வளர்த்த பெருமை வ.சுப. வைச்சேரும். பவள விழக்காணும் நிறுவனத்திற்கு வளம் சேர்த்தவர்கள். வ.சுப. அதன் நிலையினை வளர்த்தி பேரும் புகழும் சேர்த்தவர்கள். வ.சுப. அவர்களுக்குப் பின் அதனைக்காத்து வளர்க்கும் பெரிய பொறுப்பு தமிழண்ணலுக்குக் கிடைத்துள்ளது. சீரிய குறிக்கோளும், நேரிய வாழ்க்கையும், செயற்திறனும் மிக்க தமிழண்ணல் அதற்கு மேலும் புகழ் சேர்ப்பார்கள் என்பது என் நம்பிக்கை.

வ.சுப. வழியில் மிகச்சிறந்த ஓர் ஆய்வு சூடியை இயற்றியுள்ளார். சொல்லும் நடையும் அமைப்பும் வ.சுப.வின் வழியில் செல்கின்றன.

மாபுகளைப்பற்றி வ. சுப. வழியில் ஆய்வு செய்து முனைவர் பட்டம் பெற்றார். சங்க மரபினைப் போற்றுவதிலும், சங்க நெறியைப் பரப்புவதிலும், மூதறிஞரை முன்னோடியாகக் கொண்டு அழுத்தமான கருத்துகளைத் திருத்தமாகக் கூறிவருபவர்.

### புதிய நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு

கல்லூரிகளில் தமிழிலக்கிய வரலாறு கற்பிக்கப்பெறும் வாய்ப்பு ஏற்பட்டது. இருபதின் மருக்கு மேல் இலக்கிய வரலாறு எழுதியுள்ளனர். ஒன்றினைப்பார்த்து ஒன்று எழுதப்பெற்று வருகிறது. பாடத்திட்டத்திற்காக உயிரற்ற செய்திகள் தொகுக்கப் பெறுகின்றன. பழஞ்செய்திகள் பல்கிவிட்டன. படிப்போர் களிப்புற்றனர். தமிழ் இலக்கிய வரலாற்றுக் கட்டாயம் ஏற்பட்டது. அறிஞர் தமிழண்ணல் புதிய நோக்கில்தமிழ் இலக்கிய வரலாறு படைத்துப் புகழ் குவித்தார்கள். அறிவியல் அணுகுமுறையில் நூலை அமைத்தார்கள். முன்னோர் கருத்துக்களை மறுபரிசீலனை செய்தார்கள். புதிய தமிழகம்

அவாவிநிற்கும் புதிய இலக்கிய வரலாறு படைத்தார்கள். நோக்கில் புதுமை, பார்வையில் புதுமை, அணுகுமுறையில் புதுமை புதியநோக்கில் தமிழிலக்கிய வரலாறு பூத்தது. புதியன போற்றும் தமிழண்ணல் புதிய கொள்கைகளை இலக்கியக் கோட்பாடுகளை தெளிவுற விளக்கியதிறம் வியந்தற்குரியது. அந்தநூலுக்கு அணிந்துரை நல்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்ததை எண்ணி பெருமையும், பேருவுகையும் கொள்கிறேன்.

உங்கள் தமிழைத் தெரிந்து கொள்ளுங்கள் நாடு விடுதலை அடைந்ததும் மொழியில் மறுமலர்ச்சி ஏற்பட்டது: ஐம்பதுகளில் தமிழ்நாடு நாளிதழில் அ.கி. பரந்தாமனார் நல்ல தமிழ் எழுத வேண்டுமா? என நல்லதமிழின் நலங்களை எடுத்து விளக்கினார். அம்மாமித் தமிழும் கொச்சைத்தமிழும் வடமொழித் தமிழும் விலக்கி நல்ல தமிழ்வளர வழிவகுத்தார். அந்நூலின் பண்பும் பயனும் பெரிது. புதியதொரு தமிழ்நடைக்கு அந்நூல் வழி வகுத்தது. கடந்த நாற்பது ஆண்டுகளில் கல்விப்பெருக்கமும், பத்திரிக்கைகளின் பன்மடங்கு வளர்ச்சியும் வானொலி, தொலைக்காட்சியின் மொழிப் பயன்பாடும் சமூக மாறுதல்களும் உயர்கல்வியின் வீச்சும் தமிழ் மொழியின் நோக்கையும், போக்கையும் மாற்றியுள்ளது.

தனித்தமிழாய், தூயதமிழாய், செந்தமிழாய் செழித்து வளர்கிறது தமிழ். மொழிப் பயன்பாடு மிகுதி. பேசுவோர்பலர், எழுதுவோர்பலர், கேட்போர்பலர். இந்நிலையில் வளர்ந்துவரும் நம்தமிழை நாம் தெரிந்து கொள்ள வேண்டியதிருக்கிறது. புகழ்மிக்க தினமணி இதழில் ஆற்றல்மிக்க பேராசிரியரின் உங்கள் தமிழைத்தெரிந்து கொள்ளுங்கள் என்னும் கட்டுரைகள் காலத்தின் கட்டாயமாக அமைந்து பல்லாயிரக்கணக்காகான வரை விழிப்படையச் செய்து வருகிறது. மரபுவழி தமிழைக் கற்று அறிஞர் பட்டம் பெற்று கல்லூரிப்பேராசிரியராய்த்திகழ் வுடன் நூல்கள் பல எழுதி புதினங்கள் பல படைத்துப் பல நூறு கவியரங்கங்கள் ஏறி நூற்றுக்கணக்கான மேடைகளில் முழங்கி வாழும் தமிழையும், வளரும் தமிழையும் நன்கு அறிந்த தமிழண்ணல் இக்கட்டுரைகளை மிகச் சிறப்பாகப் படைத்துள்ளார்கள். மொழியியல் அறிஞராகவும் . இலக்கணப் புலவராகவும்படைப்பிலக்கிய ஆசிரியராகவும் விளங்கும் அவர்கள் மொழியின் பல்வேறு பயன்பாடுகளைச் சீர்தூக்கி புதிய தமிழுக்குச் சிறந்ததொரு இலக்கணம் படைக்கிறார்கள் சொற்கள், தொடர்கள், தொடரமைப்புகள் அமைய வேண்டிய நெறியினை விளக்குகிறார்கள். திருந்திய நடைக்கு, எளிய நடைக்கு, இனிய நடைக்கு வழிவகைகள் கூறுகிறார்கள். சொல்லாக்க நெறிகளை வகுத்துரைக்கிறார்கள். தமிழில் அழகுடன் எழுத சுவையாக எழுத பல நூறு பேருக்கு இக்கட்டுரைகள் வழிகாட்டுகின்றன. நாளும் பெருகிவரும் வரவேற்பால் தினமணியின் ஆசிரியர் அறிஞர் சிந்தனையாளர் ஐராவதம் மகாதேவன் அவர்கள் இத்தொடரின் இச்சிறப்பினை உணர்ந்து ஆசிரியரை, ஊக்குவிக்கும் திறம் போற்றுதற்குரியது.

### டாக்டர் மு. வ. புகழுரை

தமிழண்ணலின் பாடல்களில் இனிமை உள்ளது; நேர்மை உள்ளது; உயர்ந்த நோக்கமும் உள்ளது. இவை கலந்திருப்பதால் இந்நூல் நல்விருந்தாக விளங்கும். எழுந்திரு! என்ற பாடலின் எளிமை என் உள்ளத்தைக் கொள்ளை கொள்கின்றது. இவ்வாறு எளிய சிறு பாடல்கள் பல வற்றை இயற்றி இதன் ஆசிரியர் மேன்மேலும் தொண்டு செய்யவேண்டும்.

குழந்தைகள் என்னும் பேராசிரியரின் நூலுக்கு
**டாக்டர் மு. வ.,**
வழங்கிய முன்னுரையிலிருந்து

# தமிழண்ணலின் ''சங்க இலக்கிய ஒப்பீடும்'' தொல்காப்பியமும்

டாக்டர் ச.சாம்பசிவனார்,
தமிழியற்புலம்,
ம.கா. பல்கலைக் கழகம்,
மதுரை — 21

**முன்னுரை:**

'ஒப்பீட்டுத்துறை' இன்று மிகப் பெருமளவில் வளர்ச்சி பெற்று வருவது எனலாம். ஒப்பீட்டு நூல்கள் பல வெளிவந்துள்ளன. அவற்றில் ஒன்று, டாக்டர் தமிழண்ணல் எழுதிய ''சங்க இலக்கிய ஒப்பீடு''. இந்நூலில் தொல்காப்பியத்தைப் பற்றிய குறிப்புக்கள் இடம் பெற்றுள்ள பாங்கினை ஒரு சிறிது விளக்குவதே, இக் கட்டுரையின் நோக்கம்.

**நூற் பகுப்பும் நோக்கமும்:** இந்நூல், (1) தமிழும் இலக்கியவகைக் கோட்பாடும் (2) இலக்கிய வகை ஒப்பீடு எனும் இருபெரும் பகுதிகளைக் கொண்டது. இவற்றுள் முதற் பகுதி 4 உட்பிரிவுகளும், இரண்டாம் பகுதி 11 உட்பிரிவுகளும் உடையன. தமிழ் இலக்கியங்களை – குறிப்பாகச் சங்க இலக்கியங்களை மேனாட்டு இலக்கியங்களோடு ஒப்பிட்டுக் காட்டுவதே தமிழண்ணலின் நோக்கமாகும். அதற்காக இவர், அரிஸ்டாடில், ஆல்பர்டு ஜெரார்டு முதலான 80 அறிஞர்களையும், 'Prefacc to World Literature' முதலான 9 நூல்களையும் எடுத்தாள்கின்றார். அன்றியும் க. கைலாசபதி முதலானோர் நூல்களும் ஆங்காங்கு சுட்டப்படுகின்றன.

**தொல்காப்பியப் புலமை:** பண்டைத் தமிழ் இலக்கணமாம் தொல்காப்பியம், சங்க இலக்கியங்கட்கெல்லாம் அடிப்படையாய் அமைவது. ஒப்பீட்டுத் துறையில் பேரார்வம் கொண்ட டாக்டர் தமிழண்ணல், சங்க இலக்கியங்கள் மட்டுமன்றித் தொல்காப்பியத்தின் பல பகுதிகளையும் மேனாட்டு இலக்கியங்களோடு ஒப்பிட்டுக் காட்டுவதால், இவரின் புலமை நலத்தை அறிய முடிகின்றது. ''இலக்கிய வகைபற்றிய எண்ணம் தொல்காப்பியர் காலந்தொட்டே தனிக் கோட்பாடாகக் கருதத்தக்க அளவு, நன்கு வளர்ச்சி பெற்றிருக்கிறது'' (ப.18) என்று கூறும் இவர், அதற்கான சான்றுகளையும் தருகின்றார்.

**தொல்காப்பியத்தில் 'இலக்கிய வகைச் சிந்தனை':**

இலக்கியத்தைப் பகுத்துக் காட்டும் நெறிகள் மூன்று. அவை (1) இலக்கியக் காலப் பகுதிகள் (Literary Periods) இலக்கிய இயக்கங்கள் (Literary Movements) (3) இலக்கிய வகைகள் (Literary kinds of Genres) என்று குறிப்பிடும் ஆசிரியர், இம் மூன்றனுள்ளும் இலக்கிய வகை ஆய்வுக்கே தமிழில் மிகுதியான இடமுண்டு என்கின்றார். (ப.5)

**'யாப்பு' வகையும் மேனாட்டு இலக்கியமும்:**

தொல்காப்பியர், தம் செய்யுளியலில், ''யாப்பு, ஏழு வகைப்படும்'' என்று கூறுவர். (செய்யு:75). அவை: பாட்டு, உரை, நூல், வாய்மொழி, பிசி, அங்கதம், முதுசொல். இவ் ஏழினையும், தமிழ்மரபுக்கு ஏற்ப (1) அடிவரையறை உள்ளன (2) அடிவரையறை இல்லன என இரண்டு அடிப்படைப் பிரிவுக்குள் அடக்குவர். இவை தவிரத் தொல்காப்பியர், ''அம்மை, அழகு, தொன்மை, தோல், விருந்து, இயைபு, புலன், இழைபு'' என 'எண்வகை வனப்பும்' கூறுவர். (செய். 227–234). 'இலக்கிய வகைச் சிந்தனை' என்னும் தலைப்பில்,



கல்வி அமைச்சர் பேராசிரியர் முன்னிலையில்
தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களிடம்
திரு.வி.க விருது பெறுதல் (1989)



சிறந்த நூலுக்கான பரிசுகள் (1981)
முன்னாள் முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர்
அவர்களிடமிருந்து பெறுதல்



மதுரை மீனாட்சி அம்மன் கோயிலில் முதன் முறையாகப் பொற்கிழிப்பரிசு வழங்கும்விழா. 'மீனாட்சி' என்ற 101 அழகிய கவிதையை முனைவர் தமிழண்ணல் அரங்கேற்றுகிறார். டாக்டர் கலைஞர் அவர்கள் பொற்கிழிப் பரிசு வழங்கினார்கள். (1974) டாக்டர் மு.வ. அவர்களும் தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்களும் வாழ்த்துரை வழங்கினார்கள்.



'நல்லாசிரியர் விருது' (1981—82) மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் பரிசு வழங்குகிறார்.



காரைக்குடியில் (1955)
கவிஞர் முடியரசனுடன்



**கவிதைப்பரிசு**

'மறைமலை அடிகள் பிள்ளைத்தமி
நூலுக்கான பரிசு (1974)
காரைக்குடி இராமசாமி தமிழ்க்கல்லூ
யினர் தவத்திரு குன்றக்குடி அடிகளா
முன்னிலையில் வழங்கல்

இவற்றை விரிவாக விளக்குகின்றார் தமிழண்ணல்.

அக்காலத்தே, கிரேக்கர்கள் போற்றி வளர்த்த மூன்று அடிப்படை வகைகள்: காப்பியம், தன்னுணர்ச்சிப் பா, நாடகம். ஹோமர் கால ஈரடிச் செய்யுள்கள் (Homeric Couplets), போற்றிப் பாடல்கள் (Odes), அங்கதம், வசைச் செய்யுள், தன்னுணர்ச்சிப்பா, முல்லைக் கையறுநிலை எனும் பல்வேறு பிரிவுகளுய் இம்மூன்று அடிப்படை வகைகளில் அடங்கும் (ப.34). இவை, தொல்காப்பியர் கருத்தோடு ஒப்பிடத் தகுவன என்று கூறும் ஆசிரியர், மேலைநாட்டு இலக்கியத்தில் வரும் 'உண்மையல்லாத கட்டுக் கதை' (Fairy Tales) தொல்காப்பியர் கூறும் 'பொருளொடு புணராப் பொய்ம் மொழி (செய். 167) ஆகும்; ''அறிவுரை அல்லது அறவுரை பொருந்தி, நகுதற் கேதுவாகிய நீதிக் கதைகள்'' (Fables), தொல்காப்பியர் கூறும் 'பொருளொடு புணர்ந்த நகைமொழி' (செய்.167) ஆகும் என்று ஒப்பிட்டுக் காட்டுகின்றார். (பக். 21, 22)

தொல்காப்பியர் கூறும் 'வாய்மொழி' அல்லது 'மந்திரம்' (செய். 171) என்பதனை விளக்கவரும் ஆசிரியர், ''மறை மொழி என்றமையால், அரிதிற் பொருளுணர வேண்டிய தத்துவப் பாடல்களையே இது குறிக்கிறது'' (ப.129) என்று குறிப்பிட்டுக் கிரேக்கச் சான்றோர் 'செனோபேனிசு' (Xenophanes) முதலானோர் கவிதைகளை ஒப்பிட்டுக் காட்டுகின்றார்.

தொல்காப்பியர், 'அங்கதம்' என்பதைப் பலபட விரித்துரைப்பார் ''எழுத்தும் சொல்லும் உணர்த்தும் பொருள் நேரே உணர்த்தாமல், அவற்றிற்கு அப்பாற்பட்ட பிறிதொரு பொருளை உணர்த்துவது 'அங்கதம்' எனப்படும்.'' இஃது (1) செம்பொருள் அங்கதம் (2) பழிகரப்பு அங்கதம் என இரு வகைப்படும். வெளிப்படையாகப் புலனாவது செம்பொருள் அங்கதம்; மறைமுகமாகப் புலனாவது பழிகரப்பு அங்கதம் எனலாம். (செய்யு: 120–122). இவ் அங்கதம், மேனாட்டு இலக்கியங்களில் மிகுதியாக ஆளப்படுவதாம். ''அங்கதம் என்பது தீங்கையும், அறிவின்மையையும் கண்டனம் செய்யும் பாட்டு'' என்பது டாக்டர் ஜான்சன்ஸ் கூற்று‡. (ப.142) லூசியன், லூசிலியசு, பெட்ரோனியசு, ஜுவேனல், மெனிப்பஸ் முதலான அங்கதக் கவிஞர்களைக் குறிப்பிட்டுத் தமிழ் இலக்கிய அங்கதங்களை விளக்குகின்றார் தமிழண்ணல். (பக். 142-150)

**'பாட்டு' யாப்பும் ஒப்பீடும்:**

தொல்காப்பியர், யாப்பு வகையில், 'பாட்டு' என்பதனை முதற்கண் வைத்தார். இதனை டாக்டர் தமிழண்ணல், ''வீரயுகப் பாடல்கள், தன்னுணர்ச்சிப் பாடல்கள், காப்பியப் பாடல்கள், நாடகப் பாடல்கள், பத்திமைப் பாடல்கள், இயற்கைப் புனைவுப் பாடல்கள், முல்லைப் பாடல்கள், கையறுநிலைப் பாடல்கள்'' எனப் பல்வேறு தலைப்புக்களில் விளக்குகின்றார்.

தொல்காப்பியர், 'பா' வகைகளில் ஒன்றான 'கலிப்பா'வைப் பல நூற்பாக்களால் விளக்குவர் (செய்: 127-149). தரவு, தாழிசை, தனிச்சொல், சுரிதகம் முதலாயின கலிப்பாவின் உறுப்புக்கள். இவற்றைத் தமிழண்ணல், கிரேக்க மொழியில் உள்ள 'போற்றிப் பாடல்களோ'டு (Odes) ஒப்பிட்டுக் காட்டுவது, அறிவுக்கு விருந்தாகிறது. ''கிரேக்க மொழி 'ஓடு' (Odes) மூன்று பகுதிகளைக் கொண்டது. அதன் ஒவ்வொரு பகுதிக்கும் ஏற்பக் குழுவினர் அசைந்தாடுவர். அதன் உள்ளார்ந்த கருத்து வளர்ச்சியும் நிரல்பட அமையும். முதல் தரவைப் (Strophe) பாடும்போது ஒருபக்கமாக அசைந்து நடக்கும் பாடகர்கள், மறுதரவைப் (Antistrophe) பாடும்போது மறுபக்கமிருந்து முன்னைய இடத்திற்கு அசைந்து நடப்பர். இறுதியில் சுரிதகம் (Epode) பாடும்போதுதான் அசையாமல் நிற்பர்...... கேட்பவர் உள்ளத்தே ஒரு துள்ளலை (கலிப்பாவில் ஓசை, துள்ளல் என்பது இவண் நினைக்கத்தகும்) விளைவிக்கும். கலிப்பாடல்கள் இத்தகையவை என்று ஒப்பிட்டுக் காணலாம். ......தரவு என்பது, எடுத்துமொழிதல் போல இருக்கிறது. தாழிசைகள், உணர்ச்சிப் பிழம்புகளாக உள்ளன; ஒருபொருள்மேல் மூன்றடுக்கி வருகின்றன. ...இதனால் கலிப்பாடல்கள், பலர் கூடியாடும் பாடல்கள் என்பது உறுதிப்படுகிறது. இறுதியில் இடம்பெறும் சுரிதகம், ஆடல் முடிவைச் சுட்டுகிறது'' (ப. 89).

**வனப்பும் காப்பியமும்:**

தொல்காப்பியர் கூறும் ''தொன்மை,

---

† *Satire is a poem in which wickedness or folly is censured...*

நோக்கில் அணுகும் நூல்கள், கட்டுரைகள் மிகச் சிலவே.'' (ப.30)

5) ''வடமொழியில் மிகச் சிறந்த நாடகங்கள் தோன்றியுள்ளன என்பதுண்மையே. ...முருகன் தொன்மை கூட வடமொழியிற்போலப் பெரியதொரு நூல்வடிவம் பெறவில்லை,'' (ப.36)

6) ''இசை, நாடகவகைகளைப் பெரும்பகுதி இழந்துவிட்ட நிலையில், நம் அவ் வகைமைபற்றிப் பேச வாய்ப்பின்றிப் போய்விடுகிறது.'' (ப.38)

7) ''தொண்ணூற்றாறுவகைப் பிரபந்தங்கள் என்ற எண்ணிக்கை எந்நூலிலும் நிறைவு விளக்கப்படவில்லை''. (ப.39)

8) ''பாட்டியல் நூல்கள், காலந்தோறும் ஏற்பட்ட வளர்ச்சியை முற்ற முடியக் காட்டுவனவாக இல்லை.'' (ப.41)

9) ''தொல்காப்பியர் காலத்தும் சங்க காலத்தும் காப்பியங்கள் இருந்தனவா என்று ஆராயவேண்டியிருக்கிறது.'' (ப.108)

10) ''மேலை நாட்டாரும் வடமொழிவாணரும் வளர்த்துள்ளது போன்ற நாடகங்கள் இங்குள்ளனவா என்றால் இல்லையென்றே கூறவேண்டும்.'' (ப.110)

11) ''தமிழில் சமயச் சார்புள்ள மெய்ப்பொருட் சிந்தனைகள் குறைவு''. (ப.128)

12) ''முல்லைப் பாட்டு மேலைநாட்டில் வளர்ச்சிபெற்ற விதம் தனிக் கூறுடையது...இங்கு நகர்ப்புறம், நாட்டுப்புறம் இவற்றிடையே முரண்காட்டிப் புனையும் மனப்பான்மை காணப்படவில்லை.'' (ப.167)

முடிவுரை:

உலகளாவிய பார்வையில், இலக்கிய வகைகளை நுணுகி ஆராய்ந்தால் 'இலக்கிய மனைத்தும் ஓரினம்' என்ற கோட்பாடு தெளிவுறும். இலக்கியத்தின் ஒருமையையும் முழுமையையும் நம்மால் உணரமுடியும் என்று தமிழண்ணல் கூறுவதுகொண்டு (ப.38) ஒப்பிலக்கியத் துறையின் இன்றியமையாமை புலப்படும். அதற்கு, இவர் எழுதிய ''சங்க இலக்கிய ஒப்பீடு'' என்னும் இந்நூல் பெரிதும் துணைபுரியும். தொல்காப்பியம், சங்க இலக்கியம் ஆகியவற்றோடு மேலைநாட்டு இலக்கியங்களை ஒப்பிட்டு நோக்கும் வகையில் நூல்கள் பல வெளிவர வேண்டும். அங்ஙனம் வருதல் தமிழுக்கு ஆக்கமாகும்.

### எங்கும் வாணிகம் எதிலும் வாணிகம்

இன்று திரைப்பட அரங்களிற்போனால் அங்கே கட்டண விவரம் ஆங்காங்கு எழுதிப் போட்டிருக்கக் காணலாம். அதுபோலக் கோயில்களுக்குப் போனால் அங்கே கட்டணவிவரங்களைக் காணலாம். நம் நாட்டவர்கள் கோயில்களைச் சிறந்த வாணிகக் களங்களாக மாற்றிவிட்டார்கள். பிறவாணிகத்துறைகளில் முதலீடு தேவை; இதில் அது தேவையில்லை. இதனால் இன்று 'சமய வாணிகம்' செழித்தோங்கி வருகிறது. இது நல்லதற்கு அறிகுறி அன்று. கோயில்களிலும் மடங்களிலும் உண்டியல் வைப்பதே தவறு. இன்று கறுப்புப் பணத்தின் புகலிடமாக உண்டியல்கள் பல விலங்குகின்றன.

தமிழண்ணல்
நச்சு வளையம்



தியாகராசர் கல்லூரி, மதுரை, இளங்கலை இறுதியாண்டுத்
தமிழ்ப்பிரிவு 1963. அறிஞர் அண்ணா அவர்களுடன்.



தியாகராசர் கல்லூரி இளங்கலைத் தமிழ்
இலக்கியப்பிரிவு மாணவர்கள் (1963—1966)
டாக்டர் அ.சிதம்பரநாதன் (முதல்வர்)
பேராசிரியர் அ.கி.ப. மற்றும் தமிழ்த் துறையினருடன்



சென்னையில் தமிழாசிரியப் பயிற்சி பெறச்
சென்றிருந்த போது (1952)



ஈரோடு மாசன உயர்நிலைப்பள்ளித் தமிழாசிரியராகப்
பணியாற்றிய பொழுது நண்பர், ஆசிரியர்களுடன் (1948)

# 'வளர்தமிழ்'ம் தமிழண்ணலின் நகைச்சுவையும்

தேவகி குருநாத்
உதவி ஆசிரியர், தினமணி, சென்னை 600 002

மாணவர்களுக்கு எப்பொழுதும் மிகவும் பிடித்தமானவர்கள் தமிழாசிரியர்கள்தாம். பள்ளிகளிலும் சரி, கல்லூரிகளிலும் சரி மாணவர்களிடையே தமிழாசிரியர்கள் பிரசித்தி பெற்றவர்களாயிருப்பார்கள். எல்லாத் தமிழாசிரியர்களும் மாணவ மாணவிகளின் மனங்கவர்ந்தவர்களாயிருப்பதற்குத் தமிழ் வகுப்புகளில் கிடைக்கும் சுதந்திரம், அனுபவிக்கும் நகைச்சுவையுணர்வு, தமிழாசிரியர்களின் போதனைச் சுகம்தான் காரணம்.

பாடம் எடுப்பதில் சோடைபோன தமிழாசிரியரே இல்லை எனலாம். என் பள்ளி, கல்லூரி வாழ்க்கை நாள்களில் தமிழ் வகுப்புகளுக்குத் தான் மாணவர்கள் தவறாமல் வருகை புரிவார்கள்.

நகைச்சுவையுடன் கூடிய பேச்சு, அந்தச் சுவையினூடேயே கஷ்டமான இலக்கண விஷயங்களையும் எளியதுபோல் போதித்து மாணவர்களின் மனத்தில் ஆணி அறைந்தது போல் பதிய வைத்துவிடும் அசகாயசூரத் தனம் தமிழாசிரியர்களுக்கே சொந்தம்.

உயர்நிலைப் பள்ளியில் என் தமிழாசிரியர் நகைச்சுவை மன்னர்; அதிலும் திருநெல்வேலிக்காரரான அவர், 'என்னலே சொல்லுதான் அவன்?' என்று கேட்பதே எங்களுக்கு உற்சாகமாயிருக்கும். இராமநாத புரம் மாவட்டத்திற்கு அது புதுப் பேச்சு வழக்கு. அவர்தான் வினைத் தொகையை முதன் முதலில் எங்கள் மனத்தில் பதித்தவர். முதல்நாள், 'வினைத்தொகை முக்காலமும் காட்டுவதான சொல்' என்று விளக்கிக் கூறியவர், அடுத்த நாள் வகுப்பில் நுழைந்ததும், இன்னைக்கு யார் யார்லே சாப்பாட்டுக்குத் தொட்டுக்க வினைத்தொகை கொண்டு வந்தது?' என்றார். நாலைந்து பேர் கை தூக்கினர். சிலர் விழித்தனர். அடடே 'ஊறுகாய்' என்று தெரிந்ததும் பலருக்கு எச்சில் ஊறிவிட்டது. அன்று புரிந்த 'வினைத்தொகை' எங்களுக்குச் சாகும்வரை மறக்காது.

ஒருநாள் காரணப் பெயரை விளக்கினார்: 'ஏய் ஒலக்கை, எழுந்திரு!' என்று ஒரு மாணவனை எழுப்பிய அவர், ஒனக்கு இப்பக் கோவம் வருதில்லே. நீ ஒலக்கை வித்துக்கிட்டு வீதி வழியே போறேன்னு வச்சுக்க, ஒன்னே எப்பிடிலே கூப்பிடுவா எல்லாரும்? 'ஏய் ஒலக்கே, இங்கே வா!' அப்பிடித்தானலே! அப்பம் ஒனக்குக் கோபம் வருமா? கீரைக்காரியெ ஒங்கம்மா எப்பிடிலே கூப்பிடுதாங்க? 'எய் கீரை!' இப்பப் புரியு தாலே. இதாம்லே காரணப் பெயர்.

இலக்கண விளக்கத்தில் இந்த மாதிரிச் சம்பவங்கள்தாம் எல்லோருக்கும் பிடித்தமானவை; மனத்தில் ஆழப் பதிபவை.

தற்போது தமிழர்கள் அனைவருக்கும் தமிழ் வகுப்பாக விளங்குவது, தினமணியில் 15 நாள்களுக்கு ஒருமுறை வெளிவரும் 'வளர் தமிழ்'ப் பகுதி. பேராசிரியர் தமிழண்ணல் அவர்கள் தமது நகைச்சுவை இழையோடும் எழுத்துக்களால், வளர்தமிழ்ப் பகுதியை ஆவலைத் தூண்டும் ஓர் அங்கமாக மாற்றிவருகிறார் என்பதை, அவ்வப்போது வெளிவரும் வாசகர் கருத்துகளே நிரூபிக்கும்.

தமிழண்ணல் வாசகர்களை எவ்வளவு தூரம், எந்த வகையில் ஈர்த்துவருகிறார் என்பதற்குக் கீழ்க்கண்ட கடிதமே சான்று:

15—2—89 'வளர்தமிழ்'ப் பகுதியில் வெளிவந்த தமிழண்ணலின் கட்டுரை மிகவும் பயனுடையதாக இருந்தது. 'புறனடை', 'உறழ்ச்சி' இலக்கணத்தை எளிமையாகச் சொல்லி முழுமையாகப் புரியவைத்தார். காஞ்சியிலும், நாகரிகத்திலும், காந்தியத்திலும் சிலர் 'ஈ' மொய்க்க வைப்பதை நகைச் சுவையோடு குறிப்பிட்டிருப்பது பாராட்டுக்குரியது. இதுபோல் எளிமையாக

இலக்கணத்தைப் போதிக்கும் ஆசிரியர்களால்தான் இன்னும் தமிழிலக்கணத்தையே சிலர் படித்துக்கொண்டிருக்கிறார்கள்.

கோவி. ராதாகிருஷ்ணன், அரக்கோணம்,

**பதற்றத்தில் பதட்டம்**

ஒரு பத்திரிகையின் உதவி ஆசிரியன் என்ற முறையில் சொல்வதானால், பத்திரிகையாளர்கட்குப் பல சந்தேகங்களைத் தீர்த்துச் சரியான சொற்களைப் பயன்படுத்தி எழுதுவதற்குத் துணை நிற்பது வளர்தமிழ்ப் பகுதியாற்றும் உதவிகளுள் ஒன்று,

உதாரணமாக, முன்பெல்லாம் நாங்கள், ''பட்டப்பகலில் ஒருவர் வெட்டிக் கொலை; மதுரை நகரில் பதட்டம்'' என்று செய்தி வெளியிடுவோம். ஆனால் அப்பொழுது பதட்டம் ஒழிக்கப்பட்டு, 'பதற்றம்' நடைமுறைக்கு வந்தது. இத் தலைப்பில் எழுதிய தமிழண்ணல் அவர்கள், பதட்டம் என்று எழுதப்படுவதைச் சுட்டிக் காட்டியபோது, 'பதற்றம் என்பது பதற்றத்தில் வந்து விட்டது' என்று நாசூக்காகக் குறிப்பிட்டார்.

காபிக்குக் 'குளம்பி' என்று ஒரு தமிழ் வார்த்தை சிலரால் உபயோகிக்கப்படுவதுண்டு. பலர் இதைத் தவறாகக் 'குழம்பி' என்பர்; எழுதுவர். இதில் குழம்பக்கூடாது என்பதைச் சுட்ட, தமிழண்ணல் கையாண்ட வாசகம் இது:

'குதிரைக் குளம்பு போல் இருக்கும் காபிக் கொட்டையை, அதற்குரிய மூலச் சொல்லை நினைவிற்கொண்டு குளம்பு என்றும், அதனால் ஆன காபியைக் குளம்பி என்றும், குறிக்கலாம் என்பது பாவாணர் கருத்து பலர் அதை உச்சரிக்கத் தெரியாமல் குழம்பிவிடுகின்றனர்'.

**சேல்கள்**

கல் + கள் = கற்கள் என்பதுபோல், கால் +கள் = காற்கள், நூல் + கள் = நூற்கள் வேல் + கள் = வேற்கள் என்று எழுதுகிற பேராசிரியர்கள்கூட உண்டு, உதாரணமாக சேல் (மீன்) + கள் என்று வருகிறதென்று வைத்துக்கொண்டால் இந்த மாதிரிப் பேராசிரியர்கள், 'சேற்கள்' என்று (கவனமாக) திருத்தி, சேல்கள் போன்ற கண்களையுடைய பெண்களைச் 'சேற்கள்' போலென அழ வைக்கவும்கூடும் என்று சுட்டுவார் தமிழண்ணல்.

**ஒருவள்.ஒருத்தன்**

'ஒருத்தி' என்று எழுதுவதுபோல் 'ஒருத்தன்' என்றும், 'ஒருவன்' என்பது போல 'ஒருவள்' என்றும் பலர் எழுதிவிடும் அபாயமும் உண்டு. இதைக் குறிப்பிட்டு—

'ஒருவனும் ஒருத்தியும் நெஞ்சங் கலப்பதே காதல். ஒருத்தி இருக்கும்போது ஒருவள் வேறு எதற்கு? என்று எழுதினார்.

பசுமரத்தாணியாய்ப் பதியும் நகை கலந்த எளிய திருத்தங்கள் இவையென்பது சொல்லாமலே விளங்கும்.

சிலர் தாங்கள் எழுதுவதே சரியென்றும்,இலக்கண ரீதியிலான தவறற்ற சொல்லென்றும் பூனை கண்ணை மூடிக்கொண்டது போல் கற்பனை செய்துகொண்டு, அதையே தாமும் நம்பி, பிறரையும் நம்பவைத்து அபாயகரமான காரியத்தை ஆற்றிக் கொண்டிருப்பர்.

எனக்குத் தெரிந்த ஒரு நண்பர் 'தடைபடுகிறது' என்று வரும்போதெல்லாம் வேலைமெனக்கெட்டு அதைத் 'தடைப்படுகிற' தாக்குவார். 'மனத்தில்' என்று எழுதியிருந்தால் 'மனதில்' என்பதே சரியென்பார். அவர் மனத்தில் தைக்கும்படியும் அவரது போக்கைத் தடைப்படுத்தும்படியும் தமிழண்ணல் இப்படி எழுதினார்:

'தடைப்பட்டது' என்றே ஒற்றுமிகுத்து எழுதுகிறார்கள். அங்கு என்னவோ தடைபடுகிறது. வளர்ச்சி தடைபடுகிறது; முன்னேற்றம் தடைப்படுத்தப்படுகிறது. செயற்பாட்டு வினையில ஒற்று மிகுகிறது நாட்டு முன்னேற்றம் தடைபடாமல் காப்போம்; யாரும் தடைப்படுத்த வந்தால் அதைக் கடந்து முன்னேறுவோம்.

ஆனால் அந்த நண்பர் இந்தத்தடையையெல்லாம் கடந்து தன் போக்கில்தான் போகிறார், இன்னும்!

**செலவில்லாமல் காது குத்துவது!**

நான் சமீபத்தில் செக்கோஸ்லோவாகியத் தமிழ்ப் பேராசிரியர் திரு. யரொஸ்லவ் வசெக்குடன் பேசிக்கொண்டிருந்தபோது, தற்போது தமிழில் கையாளப்படும் பல சொற்கூட்டங்களை (phrases) அர்த்தம் புரிந்து கொள்வது இயலாத காரியமாயிருக்கிறது. அதற்கான அகராதிகள் தமிழில் இல்லை. இது பெருந் துன்பம் என்று குறிப்பிட்டார்.

இதே கருத்தை முன்பே பிரதிபலித்த பேராசிரியர் தமிழண்ணல் அவர்கள், தனக்கேயுரிய நகைச்சுவையுடன் அதற்கான காரணத்தையும் விளக்குவது எவ்வளவு சுவை தருகிறது:

'...மரபுத் தொடர்கள் (Idioms and Phrases) தமிழில் ஆயிரக்கணக்கில், தனி அகராதி தொகுக்குமளவுக்கு வழங்குகின்றன. யார் தொகுப்பது யார் வெளியிடுவது என்பதை விட, அப்படி முயன்று செலவழித்து வெளி யிட்டால் எத்தனை பேர் வாங்கிப் படிப்பார் கள் என்பதுதான் பெரிய பிரச்சினையாக உள்ளது. வெளியிட்டவனை மொட்டை யடித்து விடுவார்கள்' என்னும்போது, நான் ஒன்றும் உங்களுக்குக் காது குத்தவில்லை'; உண்மையைத்தான் சொல்கிறேன்.

**திருவளர் செல்வி திகழ்நலம் பெறுக!**

நேற்று எனக்கு வந்த ஒரு திருமண அழைப் பிதழிலும் திருவளர்ச்செல்வி..............க் கும் திருவளர்ச்செல்வன்...........க்கும் என்றே ஒற்று மிகுத்து மணமக்களைத் துன் பப்படுத்தியிருந்தனர். இவர்களுக்கெல்லாம் மனத்தில் நன்கு தைக்கும் வண்ணம் தமிழண்ணல், பலர் சரியாக எழுத வேண்டு மென எண்ணியே தவறாக எழுதிவிடுகிறார் கள். திருவளர்ச் செல்வன் முருகனுக்கும் திருவளர்ச்செல்வி வள்ளியம்மைக்கும் திரு மணம் என்று அழைப்பு விடுக்கிறார்கள். வளர்செல்வி, நிறைசெல்வன் என்பன வினைத் தொகைகள்: ஒற்றுமிகுந்தால் வளர்ச்சி தடைபடும் என்று எழுதினார். ஆனால் பலருக்கும் அது இன்னும் உறைக்க வில்லையென்பதே உண்மையாயிருக்கிறது. இப்படிப்பட்டவர்களை நிறைய ஒக்கிட்டாக வேண்டியது அவசியம்.

**ஒக்கிடுதல்**

கொஞ்சம் ஒக்கிடப்பட வேண்டிய நபர் களும் சிலர் உள்ளனர்போலும்! ஐயா அவர் கள் கூற்றைக் காண்போம்:

பழுதான பாகங்களை எடுத்துவிட்டு அவற் றிற்கு இணையானவற்றை இட்டு நிரப்புத லே Re-Pair எனப்பட்டது. அதுபோல் 'ஒக்க இடுதல்' ஒக்கிடுதல் ஆகும். இச் சொல்லை உருவாக்கிய தமிழனை வாழ்த்தி வணங் கலாம். இச்சொல்லைக் கொச்சைச் சொல் என்று நினைத்துக் கொண்டு சிலர் புறக் கணிக்கின்றனர். அவர்கள் மனத்தைக் 'கொஞ்சம்' ஒக்கிட வேண்டும்.

**தலைப்பிலேயே விளக்கிய தகைமை!**

நாள்தோறும் தினசரிகளிலும் பிற இதழ்களி லும், 'அருகாமை'யும் முயற்'சிக்கலும்' சர்வ சாதாரணம். இச்சொற்கள் தவறு என்ப தைச் சுட்ட ஐயா அவர்கள் எழுதிய இரு குறிப்புகளின் தலைப்புகள்: 1) அருகில் புகுந்த ஆமை; 2) முயற்'சிக்கல்' ஏன்?- இந்தத் தலைப்புகளே தவறுகளைக் களை யும் பணியைச் செய்துவிட்டன. தலைப்பு களிலும் நகைச்சுவை இழையோடுவதை நாம் அனுபவிக்கலாம்:

**உங்கள் தமிழை...**

வளர்தமிழ்ப் பகுதிக்கு 'உங்கள் தமிழைத் தெரிந்துகொள்ளுங்கள்' என்று எப்படித் தலைப்பிடப் போயிற்று? அது தமிழண்ணல், தினமணி உள்ளிட்ட எல்லோருடைய தமிழும்தானே என்று ஒரு வாசகர் கடிதம் மூலம் சண்டைக்கு வந்தார்.

அதற்குத் தமிழண்ணல் அவர்கள் தினமணி யில் எழுதிய பதில் இது:

ஒரு பெண் தன் சிறு குழந்தை துள்ளிக் குதிப் பதைப் பார்த்து, 'உங்க பிள்ளையைப் பார்த்திங்களா?' என்று தன் கணவனிடம் சுட்டிக்காட்டிக் கழிபேருவகை கொள்வாள். நம் பிள்ளையை என்று அவள் பெரிதும் சொல்வதில்லை. முன்னிலைப் படுத்திச் சொல்வதில் ஓர் உரிமையன்பு - கணவனுக் கும் உரிமைப்படுத்தும் இரட்டிப்புப் பாசம் வெளிப்படுகிறது.

ஒரு பிரியமான தந்தையைப் போன்று அன் புடன் கூடிய கண்டிப்பு, நட்புக் கலந்த நகைச்சுவை இழையோடும் அக்கறை, குழந் தைக்கு மருந்தில் தேன் கலந்து புகட்டி ஆரோக்கியத்தைப் பேணும் தாய்மை பிரவகிக்கும் எளிமை மிக்க சமத்காரச் சொல் நேர்த்திகொண்டு தமிழர்கள் அனைவரையும் மாணாக்கர்களாக்கி, எல்லோருக்கும் பிரிய மான தமிழாசிரியராக விளங்கும் தமிழண்ண லின் நகையுணர்வின் மேன்மை நாளும் நினைந்து நினைந்து இன்புறத்தக்கது.

---

மதுரையில் 14-12-88 அன்று நடைபெற்ற நாவலர் பாரதியார் மன்றத் தொடக்க விழாவின் போது டாக்டர் ச. சாம்பசிவம் வழங்கிய வாழ்த்துப்பா

''எண்ணமெல்லாம் இன்றமிழே! எப்போதும் சிந்தனையே!
திண்ணிய நெஞ்சங்கொள் தீரராம்-அன்னாய்கேள்!
நன்றாய்ந்த சொல்வல்லர் நல்ல தமிழண்ணல்
என்றென்றும் வாழ்கவென்றே ஏத்து!''

---

# தொல்காப்பியரின் இலக்கியக் கொள்கைகள்

டாக்டர் செ. சாரதாம்பாள்
தமிழ்த் துறை, மதுரை காமராசர் பல்கலைக் கழகம்

எந்த ஒரு கருத்தையும் தெளிவுபடச் சொல்லல், சான்று காட்டி விளக்குதல், ஒப்புமை காட்டி நிறுவுதல் என்ற தன்மைகளைத் தமிழண்ணலின் நூல் கற்றார் எவரும் அறிவர்: எதிலும் ஒரு புதுமை நோக்கு காண விழைவார் நம் பேராசிரியர். அது போல்தொல்காப்பிய இலக்கணத்தில் இலக்கியக்கொள்கையைக் காண விழைகிறார்.

தொல்காப்பியம் காலத்தால் கிரேக்க இலக்கியங்களைப் போலத் தொன்மையுடையதாக இருப்பதில் ஐயமில்லை. குறிப்பிட்ட காலத்தில் குறிப்பிட்ட கருத்தலைகள் எங்கும் ஒன்றாகக் காணப்படும். காட்டாக இலக்கியக் கொள்கை பற்றிய கருத்தலைகளைச் சுட்டலாம். கிரேக்க இலக்கியத் திறனாய்வு நூல்கள் உரைநடையிலமைந்து விரிவான இலக்கியக் கொள்கை விளக்கங்களைத் தருகின்றன. தொல்காப்பியம் இலக்கணம் என்ற நிலையிலமைந்து சூத்திர வடிவில் இலக்கியக் கொள்கைகளைச் சுருக்கமாகத் தருகிறது, மேலும்

''செந்தமிழ் இயற்கை சிவணிய
நிலத்தொடு''
''முந்து நூல் கண்டு முறைப்பட
எண்ணி--''
''புலந்தொகுத் தோனே போக்கறு
பனுவல்''
(தொல்.பாயி)

என்ற தொல்காப்பியப் பாயிரம் முன்புள்ள இலக்கிய வளர்ச்சியைச் சுட்டுகிறது.

எனவே தெளிந்த ஒரு சிந்தனைத் தொகுதியாக — கருத்துக்களஞ்சியமாகத்திகழும் தொல்காப்பியத்தின் அடிப்படைக் கருத்துக்களை வெளிக்கொணர வேண்டும் என்ற முயற்சியில் பேராசிரியரின் இறைச்சி, உள்ளுறை, நோக்கு, மெய்ப்பாடு என்ற நான்கு நூல்களும் அமைந்துள்ளன.

பார்வைக்கும் நோக்கிற்கும் நுண்ணிய வேறுபாடுண்டு. 'நோக்கு' ஆழ்ந்த இலக்கியச் சுவையுடையது 'தமிழர் கண்ட, தமிழ் மரபுக்கு ஒத்த திறனாய்வு முறையே நோக்கு (பக். 39) என்று 'நோக்கு' என்ற ஒரு சூத்திரத்தை (தொல். 1361) வைத்து— யாரும் மறுக்கொணாவாறு அதிலுள்ள இலக்கியக் கொள்கைகளை விரித்துரைக்கிறது நோக்கு, என்ற நூல்.

இதுவரை இலக்கிய உலகில் நிலவும் உள்ளுறை, இறைச்சி குறித்த கருத்துநிலை மயக்கத்தை நீக்க முயன்று—தக்க சான்றுகள் மூலம் அப்பொருள்கள் குறித்துத் தெளிவான விளக்கம் தர விழைகின்றன 'உள்ளுறை, இறைச்சி, நூல்கள்'

'மெய்ப்பாட்டை' வடமொழி இரசக்கோட்பாட்டுடன் ஒப்பிட்டு அதிலுள்ள இலக்கியச் சுவையை மனத்தில் ஆழ உணர வைக்கிறது 'மெய்ப்பாடு',

இந்நான்கு நூல்களிலும் தொல்காப்பியரின் இலக்கியக் கொள்கையைத்(Theory of Literature) தமிழ் மரபுவழி நீன்று ஆசிரியர் நிறுவுகிறார். இன்றைய மொழியியல் சிந்தனைக்கேற்ப தொல்காப்பியத்தின் மொழிக்கொள்கையில் ஒற்றுமை வேற்றுமை இருக்கலாம்; முரண்களும் தோன்றலாம். ஆனால் ஏனைய மொழியாசிரியர்கள் தம் மளவில் இலக்கண ஆசிரியர்களாயிருக்க, இவர் இலக்கியக் கொள்கையடிப்படையிலும் (theory) இலக்கண நூலை யாத்துள்ளார்.

**இலக்கியக் கொள்கை:**

தொல்காப்பியர் சுட்டும் 34 செய்யுள் உறுப்புக்களுள், இலக்கியக் கொள்கைகள் என்று எண்ணத்தகும் 20 செய்யுள் உறுப்புக்களையே தொல்காப்பியரின் இலக்கியக்



தந்தையார் அரு.மு. இராமசாமி செட்டியார் (நடுவில்)



தமிழண்ணலுடன் சகோதரர்கள்
மு. சுப்ரமணியன் செட்டியார்
செ.ராம.செ. இலட்சுமணன் செட்டியார்



முதல்மகள் கண்ணம்மை திருமணத்தின் போது பேரா. தமிழண்ணல் தம்சகோதரர்கள் மு. சுப்ரமணிய செட்டியார் செ.ராம.செ. இலட்சுமணன்செட்டியார் ஆகிய இருவருடன்



பெண்மக்கள்
கண்ணம்மை, அன்புச்செல்வி, மீனா



ஆண்மக்கள்
சோலையப்பன், கண்ணன் மணிவண்ண



மகனும் மருமகளும்
பெரி. சோலையப்பன் M.Sc.,
சோ. திலகவதி (B.A.,)



அன்புச்செல்வி, கதிரேசன் நித்தியா



மகள் கண்ணம்மை நடராசன் எம்.ஏ.,
மருமகன் க. நடராசன் B.E., (Chem)
பேர்த்தி மீனுபாரதி என்ற சரசுவதி
பேரன் கார்த்திகேயன் என்ற கனகரத்தி

கொள்கைகளாக இந்நூலாசிரியர் வரிசைப் படுத்துகிறார்.

தொல்காப்பியம் இலக்கண நூலாக இருப்ப தால். சூத்திரத்தின் அமைப்பிற்கேற்பச் சுருங்கச் சொல்லல், சாரத்தைச் சொல்லல், தொகுத்துச் சொல்லல்—பின்னர் ஒவ்வொன் றையும் விரித்து விளக்குதல் போன்ற நிலை களில் தொல்காப்பியர் தம் கருத்துக்களை விளக்குவர். காட்டாக 'மெய்ப்பாடு' பற்றிய கருத்தைச் சுட்டலாம். இம் மெய்ப்பாட்டைச் செய்யுளியலில் ஓர் உறுப்பாகக் காட்டுவர். (தொல். 1460-61); உரியியலில் 'கடி' என்ற உரிச்சொல்லை விளக்கும் பொழுது 'மெய்ப்பாடு' விளக்கம் தோன்ற எழுதிச் செல்லுகிறார் (தொல். 866); மெய்ப்பாடு என்ற தனி இயலில் அதனைப் பற்றிய பொது விளக்கமும், சிறப்பாகக் கொள்கை விளக்கமும் தருவார்.

இந்நிலையில் நின்று இந்நூலாசிரியரும் முதன்முதலில் ஒவ்வொரு கொள்கைக்கும்— அவ்வக் கருத்துக்குரிய சூத்திரங்களை ஒருங்கு திரட்டித் தந்து—அதன் விளக்கமும் தருகிறார். பின்னர் காலவரிசைப்படி இளம் பூரணர் பேராசிரியர் நச்சினார்க்கினியர், கணக்காயர் பாரதியார் போன்றோரின் உரைக்கருத்துக்களை ஒன்று விடாது தொகுத்துத் தருகிறார், அங்ஙனம் தொகுத் துத் தரும்பொழுது—உரைக்கருத்துக்களை ஒப்பிட்டு விளக்கியும், முரண்பாடுகளை நீக்கி யும், இயைபுடையனவற்றை ஒன்றுபடுத்தி யும் அதே நேரம் மரபுத் தொடர்ச்சியையும் விடாது கருத்துக்களை நிறுவுகிறார்.

சங்க இலக்கிய மரபையும் தனித்திறனையும் கண்ட நுண்மாண் நுழைபுலத்தால், நூல் தோறும் தொல்காப்பிய இலக்கணத்திற் கேற்ற, சங்கப் பாடல்களைத் தக்க இடத்தில் சான்று காட்டி விளக்கி எழுதும் திறன் நூலாசிரியரின் சங்க இலக்கியப் புலமையை (Scholarly Knowledge in Sangam Litera tue) மனத்தில் நிறுத்துகிறது.

ஆங்காங்கே வடமொழியாளர், மேலை நாட்டார் கருத்துக்களை ஒப்பிட்டுக் காட்டு கிறார். சொல்லுக்குப் பொருளும் தருகிறார் மொத்தத்தில் தொல்காப்பியரின் ஒவ்வோர் இலக்கியக் கருத்தையும் — முழுமையாக— கொள்கை விளக்கமாகத் தருவதால் நமக்கு வடிவமைந்த தொல்காப்பியக் கொள்கை விளக்கம் கிடைக்கிறது.

தொல்காப்பியரின் முழுமையான இலக்கியக் கொள்கைகளை விளக்குவதுடன் திறனாய் வுச் சிந்தனையையும் ஆங்காங்கு புலப்படுத்து வதால் - இந்நூல்களும் அரிஸ்டாடிலின் கவிதையியலுடன் ஒப்பவைத்து எண்ணத் தக்கது எனின் மிகையன்று,

எஞ்சிய 16 இலக்கியக் கொள்கைகளும் முழு மையரன கருத்துருவ நிலைகளாக விரைவில் வெளிவரவேண்டும்.

**பேராசிரியர் திரு.வி.க. விருது பெற்றது குறித்து**
**கவிஞர் சிற்பி எழுதிய பா(ராட்)டுக் கடிதம்**

அன்பிற்கினிய தமிழ் அண்ணலே! திரு.வி.க
அருமைத் திருப்பெயரால் அமைந்த தனி விருது
மன்னு தமிழறிஞர் மனமெல்லாம் தேனூற
மதிநுட்ப நற்கலைஞர் அரசு மனமுவந்து
தென் மதுரை வீற்றிருந்து தெள்ளு தமிழ் வளர்க்கும்
சீரோங்கு பெரும் புலவர் தங்களுக்கு வழங்குகின்ற
பொன்னான செய்தியிலே பூரித்தேன்—உளம் சிலிர்ந்தேன்
புகழார்ந்த வரலாறு புதுமணத்தால் ததும்பிடுக!

★

# நல்லதை நாடும் நாவலாசிரியர்

டாக்டர் மு. இளமாறன்

ஆங்கிலத்துறை, மதுரை காமராசர் பல்கலைக் கழகம்

பேராசிரியர் டாக்டர் தமிழண்ணல் அவர்கள் ஆன்ற தமிழ்ப் புலமைச் சான்றோர்; கற்பனை வளமும் சொற்சுவை நயமும் இலக்கணக் கட்டும் இன்னிசைச் சிறப்பும் ஒருங்கே பொருந்திய கவிதைகள் யாக்கும் பொற்கிழிக் கவிஞர்; மாணவர் மனங்கொள்ளும் வண்ணம் கற்பிக்கும் நற்றிறம் வாய்ந்த ஆசிரியர்; ஆராய்ச்சியாளர்க்கு உரியவாறெல்லாம் ஆற்றுப்படுத்திச் செம்மையாக்கும் வழி காட்டி; பல்லாண்டு காலமாக அரும் பாடுபட்டு உழைத்துப் படிப்படியாக உயர்ந்த தன் மூலம் தன் முனைப்புக்கு எடுத்துக்காட் டாகத் திகழும் சாதனையாளர்; ஒல்லும் வகையெல்லாம் உதவிகள் புரியும் பெருந் தகை; இனிய சொற்கள் மூலமேயானாலும் இடித்துரைக்க வேண்டியவற்றை இடித் துரைக்கத் தயங்காத திண்மையாளர். இவ் வாறு அண்ணல் அவர்களையும் அவர்களது பல முனைச் சிறப்புகளையும் பலரும் நன்கு அறிவர், அவர்களுடைய எழுத்தாற்றல், தமிழ் இலக்கியங்களையும், இலக்கணத்தை யும், இலக்கிய வரலாற்றையும், திறனாய் வையும், ஒப்பிலக்கியத்தையும், தாலாட்டு முதலிய நாட்டுப் பாடல்களையும் விளக்க முற எடுத்துரைத்து ஒளியூட்டப் பயன்தரு கிறது என்பதையும் தமிழுலகு அறியும். ஆனால் அவர்களை ஒரு நாவலாசிரியராக அறிந்து, படித்துத் தெளிந்து, துய்த்துத் திறனாய்ந்து மகிழ்ந்தவர் வெகு சிலரே ஆவர்.

தமிழண்ணல் அவர்கள். இற்றைத் தமிழ் இதழ்களிலும் ஏடுகளிலும் எண்ணற்ற பொழுதுபோக்கு. மலிவுச்சுவை நாவலாசிரி யாகளிலிருந்து, முற்றிலும் மாறுபட்டவர் கள். கவர்ச்சியை முதலாகவும், கலப்பு மொழியை முத்திரையாகவும், காணக் கூடாத படங்களை உதவியாகவும் கொண்டு ஒழுக்கக் கேடான செய்திகளைக் கடைச்சரக் காக விற்றுக் காசுபண்ணும் எழுத்தாளரல்லர் நம் அண்ணல். 'வாழ்வரசி' யும் 'நச்சு வளைய' மும் அறம்பிறழாத —ஆனால் ஆற்றல் பொருந்திய —நாவலாசிரியராக அவர்களை நமக்கு அடையாளம் காட்டி நிற்கின்றன.

'வாழ்வரசி' செட்டிநாட்டு வட்டார வழக்குப் புதினம் என்றும், நகரத்தார் சமூகத்தில் பிறந்த பெண்ணொருத்தியின் கண்ணீர்க் காப்பியம் என்றும் ஆசிரியராலேயே சுட்டப் படுகிறது. கதைக் கரு மிக எளியதே. குடும்ப நல்லுறவை விடப் பணத்திற்கு முன்னுரிமை கொடுத்தும், வறட்டுக் கவுரவத்தை விட்டுக் கொடுக்காமலும். இரக்கமும் மனித நேயமு மற்ற திருமணப் பழக்கவழக்கங்களை மேற் கொள்ளும் செட்டிநாட்டு மாமியாரின் கொடுமைக்குப் பலியாகிறாள். அழகும் நற்பண்புகளும் கொண்ட ஓர் இளநங்கை தாம் பிறந்து வளர்ந்து வாழும் செட்டிநாட்டு மண்ணின் மணம் நூல் முழுதும் பரவிநிற்கும் வண்ணம் உயிரூட்டத்துடன் இதனைப் படைத்திருக்கும் ஆசிரியர், தம் சமூகத்தைப் பிடித்தாட்டி அலைக்கழித்து வாட்டும் பணப் பெருமைப் பேயை வெருட்டி ஓட்ட, உரிமை யுடன் எழுப்பும் போர்க்குரல் தொடக்கம் முதல் முடிவுவரை ஓயாமல் ஓங்கி ஒலித்துக் கொண்டே இருக்கிறது.

ஆச்சியும் அண்ணமுண்டியும், ஆத்தாவும் அம்மானும், அயித்தையும் அப்பச்சியும் வெறும் செட்டிநாட்டு உறவுப்பெயர்கள் மட்டுமல்ல; வாசகர்களைச் செட்டிநாட்டுக் குடும்பத்துக்குள் அழைத்துச் செல்லும் வார்த்தை வாகனங்களும் கூட. இட்டளியும் இடியாப்பமும் பால் பணியாரமும் வெள்ளைப் பணியாரமும் வடையும் ஆடிச் செவ்வாயில் நடக்கும் அழகிய நாச்சியம்மன் தேரோட்டத் திற்கு மறுநாள் காலையில் கோலக்கஞ்சார் கும. வீட்டு நடுவளவில் ஊர்ப் பெண்கள் மட்டுமா உண்டு களிக்கிறார்கள்? வாசகர் களெல்லாம் அடுக்கடுக்காக வரும் அஞ்சு பல காரத்தின் சுவையையும் அனுபவிக்கிறார்கள்,

பெண்ணுக்கு வயிரப் பூச்சரமும், வயிரத் தோடும், வயிரவளையலும், வயிரத் தாலியும், மாப்பிள்ளைக்குக் கழுத்துக்கு மைனர்ச் செயினும் கைக்குக் கடிகாரமும் கடிகாரச் சங்கிலியும் திருமணத்தொடர்பான நகைகள் என்பதுடன் பல சவுந்தரவல்லிகளின் மண வாழ்க்கை இன்பத்தைக் கெடுத்தழிக்கும் கொலைக் கருவிகளாகவும் நம் நினைவில் நிற்கின்றன. தாலிக்குத் தங்கம் தட்டுவதும், மாப்பிள்ளை அழைப்பும், வேவு எடுத்தலும், மாமியார் சாமான் வைப்பதும் வெறும் சடங்குகளல்ல; வேகுப்பட்டி நாகப்பரும் அவர் மனைவி ஏகம்மையும் போலப் பலநூறு பெண்ணின் பெற்றோர்க்கு அவ்வப்போது அளிக்கப்படும் சித்திரவதைத் தண்டனைகள். நிறைவேற்றப்படாத 'தோதுச்சீட்டுகள்' தண்டனை நிறைவேற்றப்பயன்படும் தூக்குக் கயிறுகள்.

'வாழ்ந்தார்க்கு மாரடிக்கும் வழக்கம்,'' பொண்ணாப் பெத்துக் கட்டழிஞ்சு போனது., வக்கத்த வறள் வீட்டுச் சம்பந்தம்' முதலியவை பழமொழிகள் தாம்; எனினும் சமுதாய அவலத்தைப் படம் பிடித்துக்காட்டும் கூரிய பழமொழிகள். பலவீனத்தைப் பயன்படுத்தி அகப்படுகிற பெணகளைப் பாழாக்கும் பாவ நாசமும், சீட்டுக்கொட்டகையிலும் சினிமாக் கொட்டகையிலுமாகப் பொழுதைப் போக்கி ஊர்வம்பு பேசி 'உள்ளூர்நிருபர்' என்றபெயர் பெற்ற 'மெய்யனும், காலைச் சாப்பாட்டில் கடைசிப் பந்திக்கு வடைதீர்ந்து போனதாகப் புகார் சொல்லும் பங்காளி ஆச்சியும், தாயின் கொடுமையால் மனைவியுடன் வாழ முடியாமல் பிரிந்து வருந்தும் அழகப்பனின் தாய் லட்சுமி ஆச்சியிடம் அவனுக்கு இரண்டாந்தாரம் கட்டப் புதுப்பெண்தாக்கல் சொல்லும் சிட்டாச்சியும் தன் வீட்டு அல் சேஷியன் நாய்க்குச் செய்யும் ஒரு நாள் செலவு தொகை அளவுகூட நாணயமான நாவன்னாவின் மகள்பேறுகாலச் செலவுக்குக் கடனுதவி செய்ய மனமில்லாமல் நழுவும் மலேசியப் புதுப் பணக்காரர் ஏகப்பனும், கையிலிருக்கும் கொஞ்சப் பணத்தையும் விருந்துக்கு வந்தஇடத்தில் அக்கம்பக்கத்துப் பெண்ணின் உயிர்காப்பதற்காக உடனே கொடுத்து உதவ முன்வரும் சாலியாச்சியும்— இவர்களெல்லாம் வேகுபட்டிக்கும் வலையப் பட்டிக்கும், உலகம் பட்டிக்கும் அடைக்கன் குளத்திற்கும் குழிபிறைக்கும் பொன்னமரா வதிக்கும் மட்டுமே சொந்தமானவர்களல்லர். உலகின் எல்லாப் பகுதிகளிலும் எல்லா ஊர் களிலும் எல்லாக்காலத்திலும் காணப்படு கிறவர்களே. எண்ணிப் பார்த்தால் இவர் களில் ஒருவராக நாமுங்கூடச் சிலவேளை களில் செயல்படுகின்றோம்.

கதைமுடிவில் லட்சுமி ஆச்சி மனம்மாறு வதும், வாழ்வரசியாய் மறைந்த சவுந்திர வல்லியை அவள் அடுத்த தங்கை இன்பவல் லியின் வடிவில் அழகப்பன் காண்பதும், துயரக்கடலில் மூழ்கும் உணர்வு பெற்ற வாசர்களின் மனத்திற்கு ஆறுதல் அளிக்கும் அம்சங்கள்; அவலக்கண்ணீரைத் துடைக்க முற்படும் மகிழ்ச்சி அரும்புகள். வாழ்வரசி மறைவுக்கு ஆச்சிமார்கள் வைத்து அழும் ஒப்பாரி தனி இலக்கியச் சுவையுடையது.

இடையிடையே வரும் இலக்கியத் தொடர் களும் நயமான உவமைகளும் அருமை யானவை. பச்சைக்கிளியும் சிட்டுக் குருவி யும்,' 'தாமரை பூத்த தடாகமாக,' அழகப் பனும் நோக்கினான்; அவளும் எதிர்நோக்கி னாள்' முதலிய தொடர்கள் மறக்க முடியா தவை. நண்டு. சிப்பி, வேய்க, தலிபோன்ற வற்றை அவையவை கொண்ட கருவே அழிப் பதுபோல, மகளின் தாலி புதியதாய்ச் செய் யப் படுவதற்காகத் தாயின் பழைய தாலிபறி போகிறது என்றும் எண்ணெயின்றிக் குத்து விளக்கு எரிந்து நின்றதைச் சாக்கிட்டுக் கூக் குரல் போடும் லெட்சுமி ஆச்சியின் உள்ளத் திலிருந்த அன்பு எண்ணெய் முழுவதையும் பணப்பேய் குடித்துவிட்டுப் போய்விட்டது என்றும், தன் அழகாலும் அறிவாலும் பொலி வாலும் முக மலர்ச்சியாலும் அனைவரையும் ஈர்க்கும் சக்தி கொண்ட சவுந்திரவல்லியின் பெரிய ஈர்ப்பு ஆற்றலும் மாமியார் லெட்சுமி ஆச்சி என்ற 'கிரகத்தை' அசைக்க முடிய வில்லை என்றும் வருகிற இடங்கள் உவமை அழகுக்குச் சில எடுத்துக்காட்டுகள்,

''ஓர் ஆண் தன் பெற்றோருக்குக் கடமை யாற்ற, தன்பெற்றோரைக் காப்பாற்ற உரிமையுண்டென்றால், ஒரு பெண்ணுக்கும் தன் பெற்றோரைப் போற்ற பேண உரிமை யில்லையா? கடமையில்லையா? பெண்ணுக்குத் தன் பெற்றோரின் வீடு உறவற்ற தாகவும் அப்பெற்றோர்க்குத்தன் பெண்ணின் வீடு அந்நியமாகவும் போய்விடுமா? அவர் களுக்குள் இரத்த பந்தம், சுற்றாத்துரிமை எதுவும் கிடையாதா?'' சிந்தனையைத் தூண்டும் வரிகள்.

மருமகள் சவுந்திரவல்லியை மகன் அழகப்பனுடன் உரிய தொகை வரும் வரை வாழாவெட்டியாக வைத்திருப்பேன் என்று கண்டிப்புக் காட்டுகிறாள் லெட்சுமி ஆச்சி. இதைப்பற்றித்தான் கணவனிடம் பேசு கிறாள் சவுந்திரவல்லி:

''...நான் உங்களோடே என் மனசாலே

வாழ்ந்துக்கிட்டுத் தான் இருக்கிறேன். எந்த நேரமும் உங்க நினைப்புத்தான். நீங்க எந்த நேரமும் என்பக்கத்திலேயே இருக்கிறமாதிரியும் நாம இனிமையாக் குடும்பம் நடத்துற மாதிரியும், நான் உங்க டிஸ்பென்சரியிலே உங்களுக்கு நர்சுபோல உதவுற மாதிரியும் எந்த நேரமும் மனதாலே வாழ்ந்துகிட்டே இருக்கிறேன். என்னை எப்படி இவுக வாழா வெட்டி ஆக்கமுடியும்? வாழமுடியாதவளை வாழாவெட்டி ஆக்கலாம். மனதாலே வாழுற வாழ்வு தாங்கபெரியவாழ்வு. அமரவாழ்வு.. அது போதுங்க எனக்கு!''

எவ்வளவு ஆழமான, அழுத்தமான வரிகள். நாடக, திரைப் பட உரையாடல் எழுதுவோர் கற்றுக்கொள்ளவேண்டிய உணர்ச்சி மயமான சொற்கள்! ஆற்றல்மிக்க நடிகை இச் சொற்களை உணர்ந்து பேசி நடித்தால் கல்மனமும் கரைந்து விடும்.

பணம் இருந்தும மேலும் மேலும் சேர்க்கும் பேராசையால எழும் அவலம் அன்றாட வாழ்வியல் மனப்பான்மை ஒன்றை உதாரணம காட்டி ஓரிடத்தில் விளக்கப்படுகிறது. சந்தையில் மலிவாக விற்கும் காய்கறிகளை ஒரு வாரத்திற்கு வாங்கி வந்து வைத்துக் கொள்ளும் பெண்கள் நல்லதை 'நாளைக்கு' 'நாளைக்கு' என ஒதுககிவைத்துவிட்டு, அழுகத் தொடங்கிய, காய்ந்த அல்லது பூச்சி விழுந்தவற்றை எடுத்துச் சேதமானது தவிர மீதியைச் சமைத்துப் பயன்படுத்துகிறார்கள். முதல் நாள் நன்றாக இருந்ததால் ஒதுக்கி வைக்கப்பட்ட காய்கள் மறுநாள் கெடத் தொடங்கியிருக்கும். இவ்வாறு ஒவ்வொரு நாளும் அழுகியவற்றையே, கெட்டவற்றையே பயன்படுத்தி, நல்லதைக் காப்பாற்றி வைக்க முயலுகிறார்கள். நாளைக்காக 'இன்றையப் பொழுதை' வாழாமல் இழக்கும் தன்மை இது.

நாவலின் தொடக்கம், பன்னீர்மரம் வெளி முற்றத்தில் பூத்துக் குலுங்கி நறுமணம் பரப்பும் கோலக்குஞ்சார் கும. வீட்டு வெளி முற்றத்தின் வருணனையுடன் அமைகிறது. இறுதிப் பகுதியில் அதே வீட்டில் இடையில் எழுந்த அவலம் மாறி முல்லை மலர் மணம் பரவி அழ்கப்பன் தன் மறைந்த மனைவி சவுந்தரத்தின் தங்கை இன்பவல்லியை மனைவியின் இடத்தில் ஏற்றுக்கொள்ளும் மனநிலை வருணனையுடன் பொருத்தமுற அமைகிறது. வாழ்வரசி அழியா வாழ்வு பெறுகிறாள். இந்நாவலைப் படிக்கிறவர்களில் கன்னெஞ்சினார் பலர் மனந்திருந்திப் பணத்தைவிட மானிட நேயத்திற்கு முன்னுரிமை கொடுப்பார்கள் என்பது திண்ணம்.

''நச்சு வளையம்'' சமயத் தத்துவங்களும் பொது அறிவுரைகளும், குறிப்பாகச் சைவ சித்தாந்தக் கருத்துகளும், அதிகமாக எடுத்துச் சொல்லப்படுவதற்கெனவே எழுந்த நாவல். ஹெர்மன் ஹெஸ்ஸேயின் 'சித்தார்த்தா' வைப் படித்ததிலிருந்தே இத்தகைய தத்துவ நாவல் புனையும் ஆர்வம் தமக்குள் எழுந்ததாக ஆசிரியரே குறிப்பிடுகிறார். நோபல் பரிசுபெற்ற ஜெர்மானிய எழுத்தாளரான ஹெர்மன் ஹெஸ்ஸே (1877-1962) இந்தியத் தத்துவங்களால் ஈர்க்கப்பட்டு எழுதியது 'சித்தார்த்தா' (ஜெர்மானிய வெளியீடு 1922; ஆங்கில மொழிபெயர்ப்பு 1957). அதன் கதைத் தலைவன் துறவியாயிருந்து, உலகியல் புலனாசைகளுக்கு வயப்பட்டுப் பட கோட்டி ஒருவனுக்கு உதவியாளனாகி உடல், ஆத்மா ஆகிய இருவகை முரண்பட்ட ஈர்ப்புகளுக்கு ஆளாகிறான்.

'நச்சுவளையம்' கதைத்தலைவர் காசிச் சாமியார் எனப்படும் சரவண அடிகள் இளமைக்காலத்தில் எல்லா வகையிலும் கெட்டழிந்த போதிலும் துறவு வாழ்க்கையில் தூய்மை கடைப்பிடித்து வாய்ப்புக் கிடைத்தும் ஒழுக்கம் கெடாமல் மரணம் அடைகிறார். அவருடைய பழைய வாழ்க்கை, அதன் விளைவாக இப்போது அவதியுறும் மூத்த மகன் கனகசபை, மருமகள் மலர்விழி, பேத்தி மலர்க்கொடி, மகள் கற்பகவல்லி, இளைய மகன் மாணிக்கம் ஆகியோரின் இன்றைய வாழ்க்கை, அவரது பழைய நண்பர்களின் நிலை முதலிய யாவும் விரிவாக எடுத்துரைக்கப்படுகின்றன. அவருடைய மனப்போராட்டம் அழுத்தமாக வலியுறுத்துகின்றது.

எடுத்துக் கொண்ட அடிப்பொருளுக்கேற்ப உத்திகள் கையாளப்பட்டுள்ளன. முன்கதை மீள்காட்சி (Flash Back). தன் உள் மன நோக்கு (Introspection) அழுத்தமாகப் புலப்படுகின்றன. பயிர், நாற்று, விதைப்பு, அறுவடை என நாவலின் பகுதிகளுக்குத் தலைப்புகள் இடப்பட்டுள்ளன. இயல் தோறும் தலைப்பில் திருமுருகாற்றுப்படை வரிகளும், நூலின் உள்ளே திருக்குறள், பகவத்கீதை, திருமுறைகள், சிவஞான போதம் முதலிய பல அறநூல்களின் வரிகளும் கருத்துரைகளும் விரவியுள்ளன. ஒவ்வொரு பாத்திரமும் ஒவ்வொரு வாழ்க்கைப் பாதையைச் சுட்டும் வண்ணம் அமைந்துள்ளது.

சரவண அடிகளார், இன்னாரென்று தெரி

யாமலே தம் மகள் கற்பகவல்லியைக் காவிரி ஆற்றிலிருந்து மீட்கிறார். அவள் தற்கொலை முயற்சியைத் துணிகரமாகத் தடுத்து விடுகிறார். காசியில் துறவு வாழ்க்கையைப் பயின்று வரும் நிலையில் நாராயண பண்டாவின் மகள் உஷாவைக் கங்கையாற்றிலிருந்து மீட்டு உயிர்காக்கிறார். அவளது தற்கொலை முயற்சி தவிர்க்கப்படுகிறது. இளமைக் காலத்தில், காவிரியில் பள்ளிப் பிள்ளையாகக் குளிக்கப்போய் மூழ்கவிருந்த பூவண்ணரைக் காப்பாற்றினார். பூவண்ணர் அவரை இறுதிவரை நன்றியுடன் எண்ணிப் பெருமிதம் கொள்கிறார். மும்முறை ஆற்று நீரில் குதித்து உயிர்காக்கும் அவர் ஒவ்வொரு கட்டத்திலும் வெவ்வேறு நிலையில் உள்ளார்.

தீய நட்பு, பணத்தாசை, அதனால் வரும் ஒழுக்கக் கேடு, பெற்றோர் பாசமின்றி வளரும் குழந்தைகளின் அவலம், போலித் துறவு, ஆடம்பர நாட்டம், குடிப்பழக்கம், திரைப்பட மோகம், சரிவு நாகரிகம் முதலிய பல தவறுகள் நாவலில் ஆங்காங்கே சுட்டிக் காட்டப்படுகின்றன. 'எதையும் சிந்தித்துச் செயல்பட, நல்லதை நாட' ஒரு மனப் போக்கு ஏற்படுதற்கு இக்கதை வித்திடுகிறது—இது முன்னுரை கூறும் முழு உண்மை. 'தன்வினை தன்னைச்சுடும்' 'முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்' என்ற கருத்துக்கு அரண்செய்யும் வகையில் நிகழ்ச்சிகள் அமைகின்றன. 'நச்சு வளையம்' என்ற தலைப்பும் இதற்கேற்ப விளக்கப்படுகிறது.

இலைப்புழு தோட்டத்தினை அழித்தாலும் ஒரே ஒரு ரோஜாப்பூ அதற்கும் மேலே தலைதூக்கி நிற்பதாகத் தோன்றும் உவமை சரவணஅடிகளாரின் வாழ்க்கையை ஒருபுறத்திலும், அவரது பேத்தியின் எழுச்சியைப் பிறிதோர்புறத்திலுமாகப் படம்பிடித்துக் காட்டுகின்றது. இலைப்புழு பல இடங்களில் உவமையாகக் காட்டப்படுகின்றது. ஒரு பசுந்தளிர் அவ்வப்போது தலைநீட்டுகிறது. இறுதியில் கெடாமல் தப்பித்து அழகாக விளங்குகிறது. நாவலின் மையப்புள்ளியை இவ்வுவமை வலியுறுத்துகிறது.

பம்பாய்க்கும் கோவாவுக்கும் சென்னை விடுதிகளுக்குள்ளும் பொற்கொடியோடு வாசகர்களாகிய நாமும் போகிறோம். காசியிலுள்ள நாட்டுக்கோட்டையார் நகரச் சத்திரத்தில் சரவணருடன் தங்கி நந்தவனத்தில் பூப்பறித்துச் சம்போ கொண்டு சென்று பணிபுரியும் உணர்வுக்கு உள்ளாகிறோம். என்.சாமி என்கிற நல்லுசாமியின் கோடம்பாக்கத்து இன்ப மாளிகையைச் சுற்றிப்பார்க்கிறோம். அவ்வளவு இயல்பான, உணர்வு ஒன்றிய நடை நூல்முழுவதும். ஆங்காங்கே வந்துபுகும் தத்துவங்களை நம்மில் ஒரு சாரார் சுவைக்காமலும், மனங்கொள்ளாமலும் இருக்கலாம்; எதிர்ப்புக்குரலும் கொடுக்கலாம்; உடன்பட மறுக்கலாம். ஆனால் உயிருட்டத்தை உணரவே முடியும்.

அச்சடிக்கும் விளம்பரமும் மேடைப்பேச்சும் மூளைச் சலவை'க்குப் பயன்படுவதைப் பல இடங்களில் ஆசிரியர் அழகாக எடுத்துக் காட்டுகிறார். நீதி, ஒழுக்கம், நேர்மை ஆகியவற்றின் நேர் எதிரியான நல்லுசாமி- அணிவிழாக் கண்ட மணிவிழா மன்னர்' என்று நாளிதழ்கள் சிறப்பு மலர் வெளியிடுவதும், பல அழகான தொடர்களால் அவன் பாராட்டப்படுவதும், பணம் சேரச் சேர அவனது பழிபாவங்கள் பற்றி மற்றவர் கவலைப் படாமல் போவதும், அடிகளின் 'வரம் கொடுக்கும் திறம்' பற்றி அவன் விட்ட கதைகளும், விளம்பரங்களும் இவ்வுண்மையைச் சுவையுடன் சுட்டுகின்றன. அலங்கோலத் திரைப் படச் சுவரொட்டி ஒவ்வொன்றும் எழுந்துவந்து காண்பவரைக் கொத்துவதாக இருந்ததாம். ''ஒவ்வொரு சுவரொட்டியிலும் கருநாகம் நெளிந்தது; தேள் ஊர்ந்தது; நட்டுவாக்கலி கொடுக்கை உயர்த்தியது! அவைகள் பார்ப்பவர் கண்களைக் கொத்திக் கொண்டிருந்தன; கவனிப்பவர் மனங்களைக் கொட்டி நஞ்சாக்கிக் கொண்டிருந்தன'' சமுதாய நலன்கருதும் ஒழுக்கசீலர்கள் பலருக்கும் இதே சிந்தனை ஓடும்!

சமயத்தின் பெயரால் நிதிதிரட்டிப் பிழைப்பு நடத்தி வரும் முறையையும் நூலாசிரியர் இடித்துக்காட்டத் தவறவில்லை: ''எப்பொழுது மடத்தில் உண்டியல் வைக்கப்பட்டதோ, அப்போதே அதன் புனிதம் போய் விட்டதென அவர் மனம் இப்போது எண்ணியது. இன்று திரைப்பட அரங்குகளிற் போனால் அங்கேகட்டண விவரம் ஆங்காங்கு எழுதிப் போட்டிருக்கக் காணலாம். அது போலக் கோயில்களுக்குப் போனாலும் அங்கே கட்டண விவரங்களைக் காணலாம். நம் நாட்டவர்கள் கோயில்களைச் சிறந்த வாணிகக் களங்களாக மாற்றி விட்டார்கள். பிறவணிகத் துறைகளில் முதலீடு தேவை; இதில் அதுதேவையில்லை. இதனால் இன்று 'சமய வாணிகம்' செழித்தோங்கி வருகிறது. இது நல்லதற்கு அறிகுறி அன்று. கோயில்களிலும் மடங்களிலும் உண்டியல் வைப்பதே தவறு. இன்று கறுப்புப் பணத்தின் புகலிடமாக உண்டியல்கள் பல விளங்குகின்றன''

சரவணர், ஆண்டி என்னும் காசிநகரச் சத்திரத்து உழைப்பாளியிடம் வைத்திருந்த மதிப்பை எடுத்துரைக்கும் நூலாசிரியர், மனிதன் புத்தகங்களைப் படிப்பதைவிட மனிதர்களைப் படிக்க வேண்டும்; மனிதப் பண்புகளைப் படிக்க வேண்டும்; பண்பாட்டைப் படிக்க வேண்டும், தம் பாரிஸ்டர் படிப்பைவிட ஆண்டியின் பண்பும் உழைப்பும் மேலானவை என உணர்ந்தார்'' என்று குறிப்பிடுகிறார். திருமண வாழ்வில் கணவன்- மனைவியிடம் ஒற்றுமையில்லாமல் போவது ஏன்? ஆய்வின் முடிவைச்சில சொற்களில் நுட்பமாகப் புலப்படுத்தக் காண்கிறோம். ''திருமணமாகிற அன்று மணமக்கள் ஒருவர் மற்றவருக்காகத் தங்கள் உடலைத் தான் ஒப்படைக்கிறார்கள், அவர்கள் உயிரை ஒப்படைப்பது எப்போது? அவர்கள் வாழும் வழிமுறை தெரிந்து இணைந்தும் பிணைந்தும் கூடியும் ஊடியும் வாழ்கிறபோதுதான் அது நடைபெறுகிறது''

மொத்தத்தில், இந்த நாவலை ஒரு நோக்கத்துடன் (purpose) எழுதியிருப்பதாகத் தற்சிறப்புப் பாயிரம் பகர்வது முழுக்க முழுக்க உண்மை. 'வாழ்வரசி' க்கும் ஒரு நோக்கம் உண்டு. சொல்லப் போனால் அதற்கு இதைவிட மேலும் அழுத்தமான நோக்கம் உண்டு. இவ்வாறு டாக்டர் தமிழண்ணல் அவர்கள் தம் இரு நாவல்களிலும் சமுதாயத்திற்குச் சில உண்மைகளை வலியுறுத்திச் சில வழிகாட்டுதல்களை எடுத்துரைக்க முயன்றுள்ளார்கள்; கணிசமான வெற்றியும் பெற்றிருக்கிறார்கள். பொழுது போக்கிற்காகப் பக்கங்களை நிரப்பாத, நல்லதை நாடும் நாவலாசிரியராகிய அண்ணல் அவர்கள் பல்லாண்டு பல்லாண்டு வாழ்ந்து' இத்தகைய பயனுள்ள பல நாவல்களைத் தமிழுக்குத் தந்து சிறப்புற்றுத் திகழ்கவென வாழ்த்திமகிழ்வோமாக.'

---

## 'வாழ்வரசி' 'நாவல் பற்றிய மதிப்புரை'

Chettiars are the main trading community of the South like the Seths and Marwaris of the North. There are many subsects among them and one of these, Nattukottai Chettiars, who are domiciled in Tamil Nadu, especially Madurai and East Ramnathapuram districts, are famous for their enterprise. They are mainly bankers and helped themselves in many South-East Asian countries and Malaysia, Singapore, Bnrma. The last Indian to leave Anchor in Cambodia, it is claimed was a Nattukottai Chettiar who talked of the glories of the Indian civilisation in that land as he had heard from his ancestors. This community also claims that the Silappadigaram hero and heroine Kovalan and Kannagi were Chettiars.

Dr. Thamizhannal whose name is generally associated withlitreary writings,has comeout with a noval on Chettiar community which explains all their customs in detail. It has as its hero a doctor who wants to marry his poor uncle's daughter but the doctor's mother who expects a lot of dowry for her son, stands in the way. The doctor marries his cousin aga:nst his mother's wishes. The girl who is teased by the mother-in-law dies after giving birth to a boy. The woman who at first wants to conduct her son's re-marriage with a wealthy girl repents later and agrees to have her daughter-in-law's sister as the new bride.

The story element is rather weak but what is striking in the novel is the description of the customs and habits prevailing among Chettiars. The author has included at appropriate places the folk songs that they recite on various occasions.

—The Indian Express
September 8, 1979

# மதுரை காமராசர் பல்கலைக்கழகத் தமிழியல் துறை சார்பில்

'தமிழியல் துறைத் தலைவர்' எனும் பதவியிலிருந்து ஓய்வுபெறும்
பேராசிரியர் டாக்டர் தமிழண்ணல் அவர்கட்கு

திருவள்ளுவர் ஆண்டு இரண்டாயிரத்து இருபது (29 - 4 - '89)
சித்திரைத் திங்கள் 16வது நாள்
டாக்டர் **கதிர் மகாதேவன்**
படித்தளித்த நன்மதிப்புத் தகுதியுரை

நூலறி புலவ! பலர் புகழ் நன்மொழிப் புலவர் ஏறே!
பெரியோர் ஏத்தும் பெரும்பெயர் அண்ணலே!
புரையுநர் இல்லாப் புலமையோய்!

நினது புலமை அளந்து அறிதல் எம்மனோர்க்கு அருமையாயினும் ஒல்லும் வகையெல்லாம் தமிழ் ஆய்வில் தோய்வு கொண்டு தொண்டாற்றிய வித்தகத்தை யாம் அறிவோம். அரை நூற்றாண்டுக்கு மேல் அருந்தமிழ்க் கல்விக்கு உயர்நிலைப் பள்ளியிலிருந்து அயராது உழைத்து இன்று பல்கலைக் கழகத்தில் செய்வினை முடித்த செம்மலாய்க் காட்சி தரும் பெரும் பேராசிரியரே! ஆய்வுக்கு ஓய்வு ஏது?... ஆய்வியல், ஒப்பியல், திறனாய்வியல், நாட்டுப்புறவியல், பயன்பாட்டு மொழியியல் முதலான துறைகளில் முப்பதுக்கும் மேற்பட்ட நூல்களை எழுதித் தமிழ் தழைக்கச் செய்த சீரினைப் போற்றி வாழ்த்துகிறோம்.

பொற்கிழி பெற்ற பெரும் புலவரே! நித்தம் தங்கள் வித்தகம் கவிதையாகக் கதையாகக் - கட்டுரையாக வளர்தமிழின் வளமாக இதழ்களில் வெளிவரக் கோடானுகோடித் தமிழர் நும்தம் புலமை அறிவில் திளைப்பதை – யாங்கள் அறிந்து மகிழ்கிறோம். தூய தமிழின் உறைவிடமாம் மறைமலையடிகளைப் பிள்ளைத்தமிழாக நயமாகப் பாடிக் காரைக்குடி – இராமசாமி தமிழ்க் கல்லூரி நல்கிய – பரிசினைப் பெற்ற புகழ் என்றும் நின்று நிலைக்கும் வெற்றியுடையது.

ஞானபீடம், சாகித்திய அகடெமி, பல்கலைக் கழக மான்யக் குழு முதலானவற்றில் உயர்தமிழுக்கு அரும்பணி ஆற்றிவருவதை எண்ணி இறும்பூது எய்துகிறோம்.

தமிழ் தழீஇயசாயலவராய்ச் சங்கத்துச் சான்றோராய்த் திகழும்முத்தமிழ் மாமணியே! சங்கத் தமிழை மேலை நாட்டினரும் போற்றும் வகையில் ஆங்கிலத்தில், ''Tradition and Talent in Sangram Poetry'' எனும் நூலினை எழுதித் தமிழக அரசுப் பரிசினைப் பெற்றதை நினைவுகூரும் போது தமிழ் நெஞ்சம் பூரிப்படைகிறது. புதின இலக்கியத்திற்குப் புத்துயிர் தர ''நச்சு வளையம்'' வரைந்த திறம் வியந்த தமிழக அரசு' இந்நூலுக்கும பரிசு வழங்கித் தன் தரத்தை உயர்த்திக் கொண்டதன்றோ! சப்பானுக்குப் போய் அந்த நிப்பானுக்கும் தமிழறிவு கொளுத்தினாய்! சிங்கப்பூரில் சிங்கமெனத் தமிழ் முழக்கம் செய்தாய்! தமிழ்த் தாகத்தால் தவிக்கும் மலேசியத் தமிழ் அன்பர்க்கு மதுரை காமராசர் பல்கலைகழகம் வழி காட்டும் என்று கூறி வந்ததை மறப்போமா! ஆய்வுத் திட்டங்கள் தீட்டி, தில்லிக்குப் பலமுறை சென்று, இப்பாரத மண்ணிலே முதன்முதலாக மதுரை காமராசர் பல்கலைக் கழகத் தமிழியல் துறை சிறப்பு நிதி உதவி பெற வழிவகுத்த சான்றோரே! நும்தம் ஆய்வுப் பணி தொடர. இப்பல்கலைக் கழகத் தமிழியல்துறை வாயில் என்றும் திறந்தே இருக்கும்!

காட்சிக்கு எளிமையனானாய், கனிவோடு பழகுவதற்கு இனிமையனானாய், கடும் உழைப்பால் தமிழ்க் காந்தமானாய், கொள்கைப் பிடிப்பால் குன்றானாய். என்றும் எங்களுடன் இருக்கவே விழைகிறோம்.

இவண்

மதுரை காமராசர் பல்கலைக் கழகத்
தமிழியல் துறையினர்.

தமிழக அரசின் சிறந்த பேராசிரியர் விருதுபெற்ற
கணக்காயர், டாக்டர் தமிழண்ணல் அவர்களுக்கு

அண்ணாநகர் திருக்குறள் பேரவையினர்
படித்து வழங்கிய பாராட்டுப்பா

வாய்மைத் தமிழேபோல் வள்ளுவர் வாய்மொழிபோல்
தாய்மை வளர்த்தமுச் சங்கம்போல் —தூய்மையான்
ஆழி அனைய தமிழ் அண்ணல் இன்னும் நூறாண்டு
வாழி தமிழால் சிறந்து

அன்புத் தமிழைக் காத்தநனால் அரசின் விருதைப் பெற்றவரே!
இன்பக் குறளைப் பயிற்றுவித்து எங்கள் உள்ளம் கவர்ந்தவரே!
தென்பால் சுரக்கும் நெற்குப்பை, செம்மை சான்ற தமிழண்ணால்
இன்பால் என்றும் இறையருளால் என்றும் வாழிவாழியவே!

உள்ளம் குளிரச் செவிகுளிர உரைக்கும் நாவலில் அமுதூற
தெள்ளத் தெளிந்த செந்தமிழால் தினமும் ஓதும் திருக்குறளின்
கள்ள மில்லாப் பேரவையில்கனிவாய்ப் புரவல ராய்வாழும்
அள்ளூஞ் சுவைத் தமிழ் அணணால் அமுதத் தமிழ்போல் வாழியவே

வாடும் மக்கள் மனமறிந்து வாரித் தமிழைத் தந்துதவி
பீடு சேர்ந்த பேரவையில் பெருமை சேர வந்திருந்து
நாடு போற்றும் நல்லுரைகள் நவிலும் எங்கள் அண்ணலையாம்
நீடு வாழவாழ்த்துகிறோம்! நித்தம் நின்புகழ் போற்றுவமே!

பாரி வள்ளல் என்றொருவர் பறம்பு மலையில் இருந்ததுண்டு
ஓரி நள்ளி வள்ளல்களும் ஊரும் பேரும் சொன்னதில்லை
மாரி போன்ற மனமிருக்கும் மதிசால் பெரிய கருப்பனைப் போல்
பேரும் புகழும் பெற்றவர்கள் பெரிய உலகில் கண்டதில்லை

மன்னர் புகழும் மதிப்படைந்தீர்! மதிசால் நண்பர் பலர் பெற்றீர்!
மின்னும் எழுத்தாளர் மன்றத்தின் மேன்மைத் தலைவ ராயிருப்பீர்!
கன்னித் தமிழைக் காப்பவரே! கணக்காயர் மன்றத் தலைவரேறே!
இன்னும் நூறாண்டு இவ்வுலகில் இனிதே புகழுடன் வாழியவே!

மதுரை 20
13–12–86

தங்கள் அன்புள்ள
திருக்குறள் பேரவையினர்
அண்ணாநகர்



உலக இந்து சமய மாநாடு (1984)
கொழும்பு கதிரேசன் கோயிலில்.



ஜப்பான், கியோடோவில் மாணவர் தக்கஹஷி, முனைவர் ச.வே சுப்பிரமணியத்துடன் (உலக மாநாடு. ஜப்பான்,1983)



ஜப்பான் கியோட்டோ நகர் - உலகக் கருத்தரங்கு மண்டபம்
(ஆகஸ்டு 1983)



மானுட அறிவியல் கழக 31ஆவது உலக மாநாடு — சங்க இலக்கியம் பற்றிக் கட்டுரை படித்தல்



டோக்கியோவில் மாணவர் தக்கஹஷியின்
மாமனார் மியாடாவுடன்



மீனாட்சி புத்தகநிலையம் செ. செல்லப்பன்,
அறிஞர் சோமலெ, இனிய நண்பர் முத்துநல்லப்பன்
ஆகியோர்களுடன் (சோலையப்பன் திருமணத்தின்போது)



திருமதி - திரு மியாட்டோ அவர்தம் பேரன்
திருமதி - திரு டாக்காஷி ஆகியோருடன் (செப் 14,1983)



டோக்கியோவில் படகுவீடு — விருந்து
முனைவர் கமீல் சுவலபெலுடன்.

# தமிழண்ணல்—சில நினைவுகள்

கவியரசு முடியரசன்
காந்திபுரம் 3வது வீதி, காரைக்குடி 623 001

மேலைச்சிவபுரிச் சன்மார்க்க சபையின் சார்பில் நடைபெற்று வந்த கணேசர் செந்தமிழ்க் கல்லூரியில் 1941ஆம் ஆண்டு, நான் 'வித்துவான்' வகுப்பிற் பயின்று கொண்டிருந்தேன். அப்பொழுது, நான்காம் படிவம் (ஒன்பதாம் வகுப்பு) படித்து விட்டு, அமைதியான—ஒல்லியான—பால்வழியும் முகத்தையுடைய—இனிய சிறுவன் ஒருவன் வித்துவான் வகுப்பிற் சேர்ந்தான். அவனுடைய சிற்றிளம் பருவமும் இன்முகமும் ஏனைய மாணவர்கள் அன்பினைப் பெறுவதற்குக் காரணங்களாயின.

அவ்வினிய சிறுவன்தான் வித்துவானாகி, தமிழாசானாகி, ஆசானாக இருந்து கொண்டே பள்ளியிறுதித் தேர்வெழுதி, அன்றைய 'இன்டர் மீடியட்' தேர்வெழுதி, இளங்கலை முதுகலைத் தேர்வுகளும் எழுதி, முனைவர் பட்டமும் பெற்று, மதுரைக் காமராசர் பல்கலைக் கழகத்தில் தமிழியல் துறைத் தலைவராகவும் இந்தியப் பல்கலைக் கழகங்களின் விரிவுரையாளராகவும் உயர்ந்து டாக்டர். இராம. பெரியகருப்பன் என்ற அறிஞர் தமிழண்ணலாக இன்று விளங்கி வருகிறார்.

நாங்கள் பயிலுங்கால் எங்கள் கல்லூரியில் மாணவர் கூடி நாடகமொன்று நடத்தினோம். அந்நாடகத்தில் கதைத் தலைவன் கண்ணனாக நான் நடித்தேன். இளங் கண்ணனாகத் (பாலபார்ட்) தமிழண்ணல் நடித்தார். நாங்கள் இருவேறு உருவினராகினும் கதையில் கண்ணன் என்ற ஒருவராகத் தான் நடித்தோம். அன்றுமுதல் இன்று வரை நாங்கள் இருவரும் ஒருவராகவே வாழ்ந்து வருகிறோம்.

அன்று சிறுவனாக இருந்த தமிழண்ணல் இன்று படிப்பால், பதவியால், பணத்தால் உயர்ந்து விளங்குகிறார். நான் இன்றும் அன்று இருந்தபடி இருந்த நிலையில் இருந்து காட்டுகிறேன். எனினும் அற்றை நாளிற்கண்ட அன்பை. பண்பை, அளப்பரிய அடக்கவுணர்வை, பெருந்தன்மையை இன்னும் அவரிடம் காணுகின்றேன். கண்டு இறும்பூது பூணுகின்றேன். ஆன்றவிந்தடங்கிய கொள்கைதானே ஒருவரைச் சான்றோராக்குகிறது! எங்கள் இணை பிரியா நட்பை, நீண்டகாலத்தொடர்பைத் தவத்திரு குன்றக்குடி அடிகளார் ஒருகாற் பெரிதும் வியந்து பாராட்டிப் புகழ்ந்தார். 'புலமைக் காய்ச்சல்' என்பார்களே அக் காய்ச்சல் எம்மை அணுகவே அஞ்சும்.

பயின்று வரும் அந்நாளில் என்னுடன் பயின்ற கு. கந்தசாமி என்ற நண்பரும் தமிழண்ணலும் ஈரோட்டுப் பாசறையிலிருந்து வெளிவந்த குடியரசு இதழை வாங்கிப் படித்துச் சுயமரியாதை இயக்க வீரர்களாக விளங்கினர். இவர்களுக்குப் பிறகுதான், இவர்கள் வாயிலாகத்தான் நான் சுயமரியாதைக்காரனாக மாறினேன். அப்பொழுது கந்தசாமியைப் 'பெரியார்' என்றும் தமிழண்ணலை 'அறிஞர்' என்றும் நான் அழைப்பதுண்டு. அன்று விளையாட்டாகத் தமிழண்ணலை அறிஞர் என அழைத்தேன். இன்று உண்மையிலேயே அறிஞர் தமிழண்ணலாக விளங்குகிறார் என்பதை நினையுங்காற் பெருமிதங் கொள்கிறது என் உள்ளம்.

அவர் சுயமரியாதைக் காரராக விளங்கிய நாளில் நான் கார்த்திகைதோறும் குன்றக்குடிக்கு நடந்து வருவேன். ஆனால் காலப் போக்கில் எம் இருவர்போக்கிலும் மாற்றம் ஏற்பட்டுவிட்டது. அவருக்குப் பின் சுயமரியாதைக் காரனான நான் குன்றக்குடிக்கு நடந்து வந்து முருகனிடம் அருள் பெறுவதை நிறுத்தி விட்டேன். தமிழண்ணலோ பழநிக்கு நடந்து சென்று, பழநியாண்ட

வனிடம் அருள் பெற்றுவரும் அளவுக்கு மாறி விட்டார். என்னையும் அவ்வருளுக்குப் 'பாத்திர'மாக்க விழைகிறார்.

நான் எழுதிய 'ஊன்று கோல்' காப்பியத் திற்கு அவர் எழுதிய அணிந்துரையில், என் மேல் திருநீற்றை அள்ளிப் பூசியிருக்கிறார். திருமண் கோலமும் செய்துள்ளார். அடியவர் ஆண்டவனைத் தாம் விரும்பும் கோலத்திற் காண விழைவர். அவ்வாறே அண்ணலும் என்பாற் கொண்ட அன்புப் பெருக்கால் என்னையும் அவர் விழையுங் கோலத்திற் காண அவாவுகிறார்!

இம்மட்டோ? என் 'பூங்கொடி'க் காப்பியத் திற்குப் பொதுக் கடவுள் வாழ்த்துப் பாட லொன்று பாடுமாறு என்னை வற்புறுத் தினார். தமிழென்றால் தலைவணங்குவதும், அன்பென்றால் அடி பணிவதும் என் இயல்பு. அத்தமிழையும் அன்பையும் காட்டியுங் கூட யான் உடன்பட்டிலேன் தமிழ் வாழ்த்தாக வே பாடி அந்நூலுட் சேர்த்தேன். பாடலைப் பார்த்த பின்னர் அவருக்கும் மகிழ்ச்சிதான். ஏனெனில் அப்பாடல்களில் மாணிக்க வாச கர் சாயல் தென்படுகிறதாம்.

படிப்பை முடித்துக் கொண்டு பணியின் நிமித்தம் நான் சென்னைக்குச் சென்று விட் டேன். அவரும் எங்கோ சென்று விட்டார். எனக்குத் திருமணம் ஆனபின் 1949ஆம் ஆண்டு காரைக்குடி மீ.சு. உயர்நிலைப் பள்ளியில் ஆசிரியராக வந்து சேர்ந்தேன். எனக்கு முன்பே அப்பள்ளியில் ஆசிரியராகத் தமிழண்ணல் அமர்ந்திருந்தார்.

பணியின் பொருட்டுப் பிரிந்து நாங்கள் அதே பணியின் காரணமாகவே ஒரே இடத்தில் ஒன்று கூடினோம். பல ஆண்டுகள் இணைந் திருந்து, ஆசிரியர்பணியும் இலக்கியப் பணி யும் சிறப்புறச் செய்து மகிழும் வாய்ப்பைப் பெற்றோம். அங்கு நாங்கள் புரிந்த செயல் களெல்லாம் மனக் கண் முன் தோன்றும் பொழுது உள்ளம் பூரிக்கிறது. அவரும் என் மன நிலையைப் பெறுவார் என்றே நம்பு கின்றேன். சற்றே உற்று நோக்கின் தமிழண்ணலின் இன்றைய உயர் நிலைக்கே காரைக்குடி வாழ்க்கைதான் மையமாக அமைந்தது என்னலாம்.

எந்நேரமும் நாங்கள் இருவரும் ஒன்றாகவே காணப்படுவோம். திரைப்படம், சிற்றுண்டிச் சாலை, கடைத்தெரு, கவியரங்கம், இலக்கிய மேடை—எங்கு நோக்கினும் எம்மைத் தனித்துக் காண இயலாது; இணைந்தே இருப்போம். இதனால் எம்மை 'இரட்டையர்' என அழைப்பர். பள்ளி நேரம் போக ஏனைய நேரங்களில் எம்மைக் காண வருவோர், கலைமகள் அச்சகத் திற்குத் தான் தேடி வருவர். அவருக்கு அப்பொழுது திருமணம் ஆகவில்லை. நான் திருமணம் ஆனவன். எனினும் எந்நேரமும் கலை மகள் அச்சகந்தான் குடியிருப்பு. சில இரவுகளில் அங்கேயே படுத்துக் கொள்வது முண்டு.

கவியரங்க நிகழ்ச்சிகளை ஏற்றுக் கொள்ளும் நாள்களில், நிகழ்ச்சிக்கு முதல் நாளிரவில் தான் எங்கேனும் ஓரிடத்தில் ஒன்றாக இருந்து, கவிதை எழுதுவோம். ஒருவர் கவிதையை ஒருவர் சரிபார்த்துச் செப்பஞ் செய்து கொள்வோம். பாடற்குரிய கருத்து களும் பரிமாறிக் கொள்வோம். அட ஓ! அவ் வினிய நாள்களை மீண்டும் காணல் கூடுமா? பெறற்கரிய அத் திருநாள்களை நினைந்து நினைந்து, நெகிழ்ந்து நெகிழ்ந்து, வாழ்த்தி வாழ்த்தி, இன்புறு கின்றேன்.

இன்றுள்ள இலக்கியப் பேச்சாளர்களுக்கு நல்ல வருமானமும் நல்ல வரவேற்பும் உண்டு என்பதை யாவரும் அறிவர். அவர் கள் போக்குவரவுச்செலவு, தங்குதற்குரிய செலவு, உணவுச்செலவு போகக் குறிப்பிட்ட தொகையும் கொடுக்கப்படும். சுருங்கக் கூறின் 'பேச்சு வாணிகம்' நடத்தப்படுகிறது என்றே கூறலாம். அன்று நாங்கள் இலக்கியக் கூட்டங்களுக்குச் சென்றுவருவது வேறு வகையானது. கூட்டம் நடத்துவோர் எங்களிடம் ஒப்புதல் பெற்றுச் சென்று, அழைப்பும் அச்சடித்து அனுப்புவர். சில வேளை அழைப்பிதழும் வாராது. கூட்டம் நடைபெறும் நாளை நினைவில் வைத் திருந்து நாங்களே சென்று வருவோம். பேருந்து செல்லாத ஊர்களுக்கு மிதிவண்டி யிற் சென்றுவருவோம். பல இடங்களில் நண்பர்கள் இல்லங்களில் உணவுகொள் வோம். இலக்கியவுணர்வும் தமிழுணர்வும் பரவவேண்டுமே என்ற ஆர்வத்தில் நாங்கள் அவ்வாறு சென்றுவருவது வழக்கம். எங்கள் பணி அத்தகையது!

இவர் படிப்படியாக — ஒவ்வொரு தேர்வாக எழுதி வெற்றி பெற்றார் என்று முன்னர்க் குறிப்பிட்டேன். இரவு நேரங்களில் எங்கள் பள்ளியில் இருந்துதான் படிப்பார். அப் பொழுதிருந்த தலைமையாசிரியர் கே.ஆர். சீனிவாசஐயர், இவர் இரவு நேரங்களில் படித்துவருகிறார் என்பதையறிந்து, தாமாக

முன்வந்து மிகுந்த வெளிச்சந்தரக்கூடிய ஒளி விளக்குப் போடச்செய்து உதவினார். தமிழண்ணல் நீண்டநேரம் விழித்துப் படிப் பார். அவர் தனியாக இருக்கிறாரேயென்று நானும் அவருடன் சேர்ந்து விழித்துக் கொண்டிருப்பேன். உடன் பிறந்தானைப் போலத் துணையிருப்பேன்.

ஒவ்வொரு தேர்விலும் அவர் வெற்றிபெற்ற செய்தி கிடைத்ததும் அவரினும் நானே பெரிதும் மகிழ்வேன். துன்பத்திலும் இன்பத் திலும் துணைநிற்பதுதானே நட்புக்கிலக் கணம்? எனக்கு இயல்பிலேயே ஒரு குணம் அமைந்துவிட்டது. என்னைச் சார்ந்தோரின் வளர்ச்சியைக் காணின் என்னையும் அறியா மல் என்னுள்ளம் பூரிக்கும். அதனால் தமிழண்ணலின் முன்னேற்றம் ஒவ் வொன்றும் என்னை இன்பத்துள் ஆழ்த்தும். அவர்தம் முன்னேற்றம் ஒவ்வொன்றிலும் நேரடியாகவோ மறைமுகமாகவோ என் பங்கும் அமைந்திருப்பதால் அவர் பெறும் வெற்றி, என் வெற்றியென்றே கருதிப் பெருமிதங் கொள்வேன்.

மற்றொரு நினைவையும் தயக்கமின்றிச் சொல்ல எண்ணுகிறேன். தோற்றத்தால் பெருமிதங் கொண்ட வீரனைப்போலக் காணப்படுவேன். என் பாடல்களிலும் போர் மறவன் சாயல் தென்படும். ஆனால் உண்மையில் நான் பெரிதும் அஞ்சும் இயல் புள்ளவன் என்பது நெருங்கிய நண்பர் சிலர்க் கே தெரியும். புதிய படம் திரையிடப் படுகிற தென்று தெரிந்தாற் போதும். முதல் நாளே முதற் காட்சிக்குச் சென்றுவிடுவோம். பகற் காட்சியாக இருந்தால் காட்சி முடிந்ததும், 'துணிந்து' நானே இல்லத்திற்கு வந்துவிடு வேன். இரவாக இருப்பின் தனியாக நான் வாரேன். இந்த 'மல்லர்' தான் துணையாக வந்து என்னை இல்லத்திற் சேர்த்து விட்டுச் செல்வார். இன்று இதை நினையும் பொழுது சிரிப்புத்தான் வருகிறது.

சில வேளைகளில் என் வாழ்க்கைக்கு வேண் டிய அறிவுரைகளும் வழங்குவார். என்னினும் இளைஞராகினும் உலகியல் வழக்குகளை நன்கு உணர்ந்தவர். ''பொருளல்லவரைப் பொருளாகச் செய்யும் பொருளல்லதில்லை பொருள்'' என்னும் நல்லறத்தைப் படித் திருப்பினும் வாழ்க்கையில் அதனை நடை முறைப் படுத்தத் தெரியாமல் இருந்தவன் நான். அறுபத்தைந்தாம் அகவைக்கு மேற் றான் பொருளின் அருமைப் பாடு எனக்குப் புரிகிறது. இப்பொழுது புரிந்து யாது பயன்?

எப்படியோ அறுபத்தொன்பது ஆண்டுகள் வாழ்ந்து விட்டேன். இன்னும் எத்தனை வாழப் போகிறேன்? இவ்விடைக் காலத்தில் ஏன் பணத்தைப் பற்றிய கவலை? என்று நானே ஆறுதல் கூறிக் கொண்டு தென்புடன் வாழ்ந்து வருகிறேன். தமிழண்ணல், இளமைப் பருவத்திலேயே பொருளருமை யுணர்ந்து, திட்டமிட்டு வாழத் தொடங் கினார் என்றே கருதுகின்றேன்.

என் மகள் குமுதம் ஏழாம் வகுப்புப் பயின்று கொண்டிருந்தாள். அப் பொழுது ஒரு நாள் என்னை நோக்கி, ''அண்ணா! குமுதம் பெரியவளாகி வருகிறாள், அவளுடைய படிப்பு, திருமணம் என்று செலவுகள் இருக் கின்றனவே. நீங்கள் பணம் ஒன்றும் சேர்த்து வைக்காமல் இருக்கிறீர்களே!'' என்று கவலைப்பட்டார்.

''அதற்காக இப்பொழுது ஏனடா கவலைப் படுகிறாய்? அப் பொழுது பார்த்துக் கொள் வோம்'' என்று எளிதாகச் சொன்னேன். ''என்ன அண்ணா! இப்படிச் சொல்கிறீர் கள்? இப்பொழுதே முயல வேண்டாமா?'' என்று கடிந்து கொண்டார்.

அதற்கு ''என்னை என்னடா செய்யச் சொல் கிறாய்? நான் எப்படிப் பணம் சேர்ப்பது? என்ன முயற்சி செய்யச் சொல்கிறாய்? நான் வாங்கும் சம்பளம் அந்த அந்த மாதத்திற்கே போதவில்லை! இந்நிலையில் எப்படிப் பணம் சேர்ப்பது? உனக்குப் பணத்தின் மேல் ஆவல் பிறந்துவிட்டதோ? தமிழன்னை என்னைக் கைவிடாள். நீ கவலைப்படாதே போடா!'' என்று பிள்ளைத்தனமாகப் பேசினேன். என் நிலை கண்டு வருந்திச் சென்றார்.

அவர் என்னுடனேயே, இப்பள்ளியிலேயே பணியாற்றியிருப்பின், என்னிலையிற்றான் அவரும் இருந்திருப்பார். நல்ல வேளை! என்னைப் பிரிந்து மதுரைக்குச் சென்றுவிட் டார். அதனாற்றான் ஓரளவேனும் வளமாக வாழ்கிறார். அன்று, அவர் எனக்குக் கூறிய அறிவுரையைப் புறக்கணித்து விட்டேன். எனினும் அப் பொன்மொழியை இன்றும் என் ஆசான் உரையாக நினைந்து மதித்து வருகின்றேன்.

மற்றொரு நிகழ்ச்சி என் வாழ்நாளெல்லாம் நினைந்து நினைந்து போற்றத்தக்க நிகழ்ச்சி யாகும். என்னை இன்று கவிஞன் என்று சிலரேனும் பாராட்டுகிறார்கள் என்றால், அதற்கு அடிப்படைக் காரணராக இருந்தவர் தமிழண்ணலே. நான் பயிலுங்காலத்தி

லிருந்தே கவிதைகள் எழுதும் இயல்புடைய வன் எனினும் 'கவிஞன்' என்ற முத்திரை பெறுவதற்கு முதலாக இருந்தவர் இவரே. என் பாடல்களைத் தொகுத்து, நான்கு பக்க முன்னுரையெழுதி முடியரசன் கவிதைகள் என்ற பெயருமிட்டுக் கடன்வாங்கி அச்சடித்து, முதன் முதலில் நூல் வடிவாகக் கொணர்ந்தார்.

அந்நூல் பெரும் பாராட்டுக்குரியதாயிற்று. எனினும் என் பாடல்களைவிட அம் முன் னுரையே பெரிதும் பாராட்டப் பெற்றது. அம் முன்னுரையின் சிறப்பால் அந்நூல், தமிழக அரசின் முதற்பரிசிலும் பெற்றது. ஆகினும் பரிசிலாற் பெற்ற பெருமை, பாராட்டாற் பெற்ற புகழ் அனைத்தும் அவரையே சார்ந்தன. பரிசில் பற்றி அரசு வெளியிட்ட அறிக்கையில் பரிசில் பெறுபவர் தமிழண்ணல் என்றுதான் இருந்தது. வானொலியிலும் அவர் பெயர்தான் அறிவிக் கப்பட்டது. காசோலையில் மட்டும் என் பெயர் இருந்தது. பணம் எனக்கு; புகழ் அவருக்கு. ஆம்; புகழுக்குரியவர் அவர் தானே? பரிசில் பெற்றமைக்காகப் பாராட்டுக் கடிதம் ஒன்றுகூட எனக்கு வரவில்லை. அனைத்தும் அவர்க்கே வந்தன. இங்குப் பணிபுரிந்த நாளெல்லாம் என் கவிதை யுணர்ச்சிகளுக்குச் செவிலியாக விளங்கி, மேலும் இரு நூல்களை வெளிக் கொணர்ந் தார்.

பள்ளியில் பணிபுரியும் காலத்து, நாங்கள் அடிக்கடி மொழி, இலக்கியம் பற்றி உரை யாடி மகிழ்வோம். அவ்வுரையாடற் கருத்து கள் என்பாற் பாடலாக உருக்கொள்ளும். அவர்பாற் கட்டுரையாக வடிவங் கொள்ளும். இவ்வாறு உரையாடுங்கால் ''இக் கருத்து களை மையமாக வைத்து இந்த அளவில் ஒரு நூல், இன்ன அடிப்படையில் இந்த அளவில் ஒரு நூல் எழுதவேண்டும்'' என்று கூறிக் கட்டை விரலையும் சுட்டு விரலையும் நெருங்க வைத்து, நூலின் அளவையும் சுட்டிக் காட்டுவார். அடிக்கடி இவ்வாறு அவர் கூறுவதால் நானும் அவ்வாறு விரலைக் காட்டிக் கிண்டல் செய்வதுமுண்டு. எனினும் அவர்தம் நுண்மாண் நுழைபுலத் தைப் பெரிதும் மதித்தே வந்தேன்.

அவர் திருமணத்துக்காக நான் பாடிய வாழ்த்துப் பாவில்

தேன்பழுத்த தமிழ்மொழிக்கே ஆக்கந் தேடும்
தெளிவுரைகள் ஆய்வுரைகள் எழுத வல்லான்
மேன்மக்கள் குழுவில்இவன் அறிஞன் என்ன
மிளிர்வதுநின் கையில்தான்! உணர்தல் வேண்டும்

என அவர் துணைவியார்க்குச் சொல்வதாகக் குறிப்பிட்டுள்ளேன். அக் குறிப்பைத் தமிழண்ணல் மெய்ப்பித்துவிட்டார் உயரிய ஆய்வு நூல் பலவற்றின் ஆசிரியராகி, சான் றோர் குழுவில் அறிஞராகி விளங்குவதற்கு அவர் துணைவியார் துணையும் தூண்டு தலுமே அடிப்படையாகும் என்பதையும் நினைந்து மகிழ்கின்றேன்.

காரைக்குடியில் 'எழில்' என்னுந் திங்கள் இதழை நானும் தமிழண்ணலும் நடத்தி வந்தோம். கானாடுகாத்தான் வை. சண்முக னாரைப் பற்றிப் பாரதியார் பாடிய பாட லைத் தேடியெடுத்து முதன்முதலாக நாங்கள் தான் அவ்விதழில் வெளியிட்டோம். ஒரு நாள் 'எழில்' பற்றி உரையாடுங்கால், நான் மனந்திறந்து பேசியதைத் தவறாகப் புரிந்து கொண்டு, என்னுடன் சிலநாள் பேசாதிருந் தார். அச்சமயம் சன்மார்க்க சபைப் பொன் விழா மலருக்காக என்னிடம் பாடல் வேண்டி னர். அப்பொழுது நானும் அவரும் ஊடல் கொண்டிருந்ததை, அதனால் நானடைந்த மனத்துயரைப் பாடலாக்கிப் 'பிரிந்த நண்பன்' என்று தலைப்பும் தந்து, மலர்க் குழுவிற்கு விடுத்தேன். மலர், கலைமகள் அச்சகத்தில்தான் அச்சேறியது.

மலர் உருவாகிவெளிவந்தது. மலரைப் பிரித்துப்பார்த்தேன். 'பிரிந்த நண்பன் என நான் தந்த தலைப்பு, 'பிரியா நண்பன்' என அச்சாகியிருந்தது. ஏன் இப்படித் தவறாக அச்சிட்டீர்? என்று நான் வெகுண்டு வினவினேன். 'தமிழண்ணல்தான் திருத்தி னார்' என்ற விடைவந்தது. வெகுளி மறைந்தது. மலரைப் புரட்டினேன். தமிழண்ணலின் கட்டுரை கண்டேன்; படித் தேன். அதில் என் கவிதைகள் பற்றிச் சிறப்பித்து எழுதியிருந்தார். ஏன் இதை நினைவு கூர்கிறேன் எனில், நாங்கள் ஊடியிருப்பினும் எங்கள் உள்ளமும் உணர் வும் கூடியே இருந்தன என்பதை விளக்கவே.

இவர் ஒவ்வொரு தேர்வாக எழுதி முது கலைப்பட்டம் பெற்றதும் கல்லூரியில் ஆசிரியப் பணிபுரிய விழைந்தார். அப் பொழுது மதுரைத் தியாகராசர் கல்லூரியில் தமிழ்த்துறைக்கு ஒருவர் தேவை என்பதை அறிந்து முயற்சி மேற்கொண்டார். அப் பொழுது தற்செயலாகச் செந்தமிழ்க் காவலர் அ. சிதம்பரநாதனாரைச் சந்தித்தோம். அவர்தம் பரிந்துரையிருப்பின் உதவியாக

இருக்குமே என்று தமிழண்ணல் கருதினார். செந்தமிழ்க் காவலர் என்பாற் பேரன்பு கொண்டவராதலின் அவரிடம் பரிந்துரை வேண்டினேன். ஒன்றும் மறுப்புரையாது ஒரு வழியும் கூறினார். ''நான் சென்னைக்குச் சென்றதும் மடலொன்று விடுப்பேன். அதனை உங்கள் விண்ணப்பத்துடன் இணைத்துக் கல்லூரிக்கு அனுப்புங்கள்'' என்றுரைத்து, சொன்னவாறே மடலும் உய்த்தார். விண்ணப்பம் சென்றது; வேலையும் கிடைத்தது.

என்னைப் பிரிந்து, மதுரைக்குச் சென்று பணி மேற்கொண்டார். அதனையடுத்துச் செந்தமிழ்க் காவலரும் அக்கல்லூரிக்கே முதல்வராக அமர்த்தப் பெற்றார். முதல்வர் மனம் மகிழும் வண்ணம் தமிழண்ணலும் பணியாற்றி வந்தார். அப்பொழுது முனைவர் பட்டம் பெற எண்ணிய தமிழண்ணல், செந்தமிழ்க் காவலர் தலைமையில் ஆய்வு செய்வதாகப் பதிவு செய்து கொண்டார்.

ஆய்வு நூல் கொடுக்கப்பட வேண்டிய ஆண்டுகள் முடிந்தன. ஆனால் நூல் முடிவுபெறவில்லை. கால நீட்டிப்பு வேண்டினார். செந்தமிழ்க் காவலரும் வழங்கினார். அதன் பின்னரும் ஆய்வு முடிக்கப் பெறாமையால் மேலும் காலநீட்டிப்பு வேண்டினார் தமிழண்ணல். செந்தமிழ்க் காவலர் மறுத்து விட்டார். அவர், மறுத்தால் மறுத்ததுதான். கடமைமிக்க நேரியர் அவர். யாரும் அவரை அணுகுதல் அரிது.

தமிழண்ணல் என்னிடம் வந்து நிலைமையைக் கூறினார். மதுரைக்கு ஓடினேன். செந்தமிழ்க் காவலர் இல்லத்திற்கு நேரே சென்றேன். வழக்கம்போல் இன்முகத்துடன் வரவேற்றுத் தம் துணைவியாருக்கு என் வருகையைத் தெரிவித்துச் சுவைநீரும் நல்கிவிட்டு, 'நீங்கள் வருவீர்களென்று எனக்குத்தெரியும்; தமிழண்ணலுக்காகத்தானே வந்திருக்கிறீர்கள்?' என்று அவரே முந்திக் கொண்டார்.

நான் சிரித்துக்கொண்டே, 'ஆமாம்; இத்தனையாண்டுகள் பாடுபட்டு உழைத்தது வீணாகிப்போய் விடுமே...' என்று முடிக்கு முன், 'ஆம்; அதனால்தான் நானும் மறுத்தேன். மறுத்தால் உங்களிடம் வருவார். நீங்கள் என்னிடம் வருவீர்கள்; நேரில் உங்களிடம் விவரங்கூறி, விரைவில் ஆய்வை முடித்துத்தர வற்புறுத்திச் சொல்லுங்கள் என்று உங்களிடம் கூறலாமென்றுதான் இவ்வாறு செய்தேன். என்றார்.

அவர்தம் பேருளத்தை, அன்புளத்தை நினைந்து மெய் சிலிர்த்து விட்டேன். கேடு நினையாத உள்ளமா மறுத்துவிட்டது! என முதலில் நினைந்தேன். விரைவில் ஆய்வை முற்றுப்பெறச் செய்யவே — தமிழண்ணலின் நன்மைக்காகவே இவ்வாறு செய்துள்ளார் என்பதை நேரிற்கண்டபின் உணர்ந்து கொண்டேன். நெடிதாக்கங் கருதிக் கடிதோச்சி மெல்ல எறிந்த அப் பெருந்தகையின் தொடர்பு கிடைத்தமையை இன்றும் நினைகிறேன். 'கால நீட்டிப்புத் தருகிறேன். விரைந்து முடிக்கச் சொல்லுங்கள்; இதை விடுத்தால் இனி நீட்டிப்பு வழங்கேன்' எனப் புன்னகையுடன் விடைதந்தார். தமிழண்ணலும் அயராது முயன்று எழுதி ஆய்வைக் கொடுத்தார். முனைவர் பட்டமும் பெற்றார்.

முனைவர் பட்டம் பெற்ற பின்னர்க் காமராசர் பல்கலைக்கழகத்துள் பேராசிரியராகப் புகுந்தார். பின் தமிழ்த்துறைத் தலைவரானார். பல ஆண்டுகள் ஓடின. நான் 1978இல் ஓய்வு பெற்றேன். என்பாற் பேரன்பு கொண்டவராதலின் எனக்கும் ஏதேனும் நன்மை செய்ய வேண்டுமென விழைந்து, பல்கலைக்கழக ஆய்வுப்புலத்திற் பணியமர்த்தம் செய்தார். நான் விழையாதிருந்தும், கண்பார்வை மங்கியமையால் மறுத்துரைத்தும் தாமே முயன்று அப்பணியில் 1985ஆம் ஆண்டு ஓராண்டு ஒப்பந்த அடிப்படையில் என்னையமர்த்தி ஒருகாப்பிய நாடகம் எழுதப் பணித்து வாங்கிக்கொண்டார்.

நான் பணியிலமர்ந்த பொழுது, ஒருநாள் நானும் ஏனைப்பேராசியர்களும் அவருடன் உரையாடிக் கொண்டிருக்கும் பொழுது, 'பெரிய கருப்பன்! பேராசிரியர்களுக்கு முன் உன்னை 'நீங்கள்' எனப் பன்மையிற் சுட்டவே கருதுகின்றேன். ஆனால் 'நீ' என ஒருமையிலேயே வந்து விடுகிறது. அதற்காக வருத்தப்படாதே' எனக் கூறினேன். (இன்றும் ஒருமையில் அழைப்பது தான் என் வழக்கம்)

உடனே அவர், 'யாரைப் பற்றிக் குறிப்பிடுகிறீர்கள்?' என்றார். உன்னைத்தான் என்றேன் நான். 'பார்த்தீர்களா? இயல்பாகவே 'உன்னைத் தான்' என்று வருகிறது. அவ்வியல்புணர்வைக் கெடுத்து விடாமல் ஒருமையிலேயே என்னை அழையுங்கள். அதுதான் எனக்கு மகிழ்வு தரும்' என்று விடை பகர்ந்தார். இற்றை நாளில் இவ் வெளிமையை, பண்பாட்டை, பழமை மறவாத் தன்மையை

யாண்டுக் காணல் கூடும்? இவனன்றோ உளங் கவரும் நண்பன். யாதும் கிழமை யைக் கீழ்ந்திடா நட்பன்றோ நட்பு!

தமிழண்ணல் பற்றிய நினைவுகள் பலப்பல வுண்டு, அறுபத்தொன்பதாம் அகவை யிலுள்ள நான், பழைய நினைவுகளைக் கொணர்வதில் இடர்ப்படுகின்றேன். ஆத லின் சில நினைவுகளே ஈண்டுத் தரப்பட்டுள் ளன. மணிவிழாக் காணும் என் இனிய நண்பனை, நானும் வாழ்த்த வேண்டுவது கடமை. அதனால் அவர் இயல்புக்கேற்பவும் என் இயல்புக்கேற்பவும் வாழ்த்துகிறேன். என் நண்பன் நீண்டகாலம் இனிதே வாழ்ந்து, தாய்மொழித் தொண்டு புரியவும் என்றும் நிலைத்த புகழ் பெறவும் அருள் புரியம்மா என என் தமிழ் அன்னையை வணங்கி வேண்டுகிறேன்.

நட்பைப் போற் செயற்கரிய யாவுள?

## கவிமணி வாழ்த்து

உ

கவிஞர் தமிழண்ணல் அவர்களுக்கு,

'குழந்தைகள்' என்ற நூலிலுள்ள பாடல்களைப் படிக்கச் சொல்லிக் கேட்டேன். சொல்லும், பொருளும், நடையும் நம் நாட்டுச் சிறுவர் சிறு மியர்க்கேற்ற முறையில் அழகாய் அமைந்திருக்கின்றன. தங்கள் முயற்சி வெற்றியடையுமாறு இறைவன் திருவருள் உண்டாவதாக!

தேடும் அடியவரின்
சிந்தை மகிழ்ந்திடநின்
றாடும் திருத்தில்லை
ஆண்டவா — நீடுபுகழ்
செந்தமிழ் நாட்டிலிச்
செல்வக் 'குழந்தைகள்'
சந்ததம் வாழவரம்
தா.

புத்தேரி
6—12—1953.

**தேசிக விநாயகன்**

**தமிழண்ணலின் முதல்நூல் 'குழந்தைகள்-' அதற்குக் கவிமணி அனுப்பிய வாழ்த்து.**

# தமிழண்ணலின் ஒரு நூல்

மூதறிஞர் செம்மல் வ.சுப. மாணிக்கம்.

தமிழெனப்படுவது சங்கத் தமிழே என்பது தமிழ் மந்திரம். இவ்விலக்கியம் மக்கள் வாழ்வையும் மனப்பண்புகளையும் நோக்கியது; தேவர்கட்கோ அவ்வுலகத்திற்கோ பாவ புண்ணியங்கட்கோ துறக்க நரகங்கட்கோ அப்பாற்பட்டது; இவ்வுலகத்து வாழ்வாங்கு வாழும் ஒழுக்க அடிப்படை கொண்டது. இந்திய இலக்கியங்களுள் பாரத அரசியலமைப்புக்கு ஏற்ப ஈராயிரம் ஆண்டுகட்கு முன்பே தோன்றிய வரைவிலக்கியமாகும். சங்க கால அரசியலமைப்பில் சாதியும் சமயமும் கலக்கவில்லை; அதற்குக் காரணம் அன்றுசாதி சமயச் சழக்குப் பிணக்கு வழக்கு இல்லை. ஆதலின் இன்றும் ஒளி காட்ட வல்ல இந்தியத் தமிழிலக்கியமாகச் சங்கப் பனுவல்கள் இலங்குகின்றன. இவற்றைப் பாடியோரைப் புலவர் என்றோ கவிகள் என்றோ சொல்லாமல் சான்றோர் என்று சொல்வது மரபு. 'தண்ணென்று ஒழுக்கமும் தழுவிச் சான்றோர் கவியெனக் கிடந்த கோதாவரி' எனக் கம்பர் பாடுவர். யாற்று நீர்க் கிடப்புக்கு உவமைப்படுத்துவதிலிருந்தே சங்கவிலக்கியத்தின் தெளிவும்பொதுப்பயனும் பெறப்படும்.

'சங்க இலக்கிய ஒப்பீடு' என்ற பெரும் பனுவல் பேராசிரியர் தமிழண்ணலின் புலமைக்கு ஒரு செப்புப் பட்டயம் ஆகும். இவ்விலக்கியத்தின் பொருள் முறைகளையும் படைப்பு நெறிகளையும் வடமொழி கிரேக்கம் இலத்தின் கோட்பாடுகளோடு ஒப்பிட்டுப் பொது நெறிகளையும் தமிழின் தனிநெறிகளையும் விதந்து காட்டுகின்றார். தமிழண்ணல். இத்தகைய ஒப்புறவுகளால் தொல்காப்பியம் சங்கவிலக்கியங்களின் உயர்வுகளும் புதுமையும் புலருகின்றன என்பது இவர்தம் கருத்து. இக்கருத்தினை மையமாகக் கொண்டு, ஆழ்ந்தகன்ற சிந்தனைகளையும் ஐயத் தெளிவுகளையும் குறைநிறைகளையும் எதிர் காலத்திட்டங்களையும் சங்க இலக்கிய ஒப்பீடு என்ற நூல் விரித்தியம்புகின்றது. ''இலக்கியம் ஏனைய பயிரினம் உயிரினங்களைப் போல நிலத்தின்விளைவுமாகும் என்பதைச் சங்கவிலக்கியம் மெய்ப்பிக்கின்றது. சங்க கால நிலப்பாங்கும் பருவத் தன்மையும் இயற்கையழகும் இன்றும் அதில் மணக்கின்றன. எந்த அளவு அது சமுதாய வெளிப்பாடாய்இருக்கிறதோஅந்தஅளவு நிலத்தின் வெளிப்பாடாகவும்இலங்குகின்றது அதனால் தான் சங்கவிலக்கியம் தமிழ்மண்ணில் நன்கு வேர் பிடித்து வளர்ச்சி பெற்றது. பின்னைய இலக்கியங்கள்எத்தனை மாறுதல்களைஏற்றிருப்பினும் அந்த வேரிலிருந்தேஅவை வளர்ந்தன என்பதனை, அவை நம்மை உணர வைக்கின்றன.'' என இவ்வாறு ஒப்பீட்டு முறையில் நம் சங்கவிலக்கிய ஒப்பீட்டினைக் கூறுவர் தமிழண்ணலார் 'செந்தமிழியற்கை சிவணிய நிலம்' என்ற தொல்காப்பியமும், 'செந்தமிழ் நாடெனும் போதினிலே' எனப் பாரதியமும் கூறுவன தமிழண்ணலின் கருத்தினை மேலும் வலுப்படுத்துகின்றன.

பரத முனிவரின் இரசக் கோட்பாடு, தண்டியின் அலங்காரக் கோட்பாடு, வாமனரின் இரிதிக் கோட்பாடு, ஆனந்த வர்த்தரின் தொனிக் கோட்பாடு, அரித்தாட்டிலின் கவிதைக் கோட்பாடு என வரும் பல கொள்கைகளை எடுத்துக் காட்டும் தமிழண்ணல் தொல்காப்பியரின் படைப்புக் கோட்பாடுகளின் தனித்தியத்தைப் பின் வருமாறு மதிக்கின்றார்:

''ஒப்பீட்டுத் துறையில் பன்முக நோக்கில் இலக்கிய ஆய்வை மேற்

கொள்ளுமிடத்தில், தொல்காப்பியம் அவை அனைத்திற்கும் ஈடு கொடுத்து நிற்கும் மாட்சி அறிந்து இன்புறத்தக்கதாகும்.''

''மேலை நாட்டுத் திறனாளிகள் அரிஸ்டாடிலைக் குறிப்பிடாமல் தங்கள் திறனாய்வை எழுதுவதில்லை. வடநூல் திறனாளிகள் பரத முனிவரைச் சுட்டாமல் திறனாய்வுக் கொள்கை விளக்கங்களை முடிப்பதில்லை. இம்மரபுகளைப் போலத் தமிழ்த்திறனாய்வு விளக்கங்களும் தொல்காப்பியரைத் தொடாமல் தொடர முடிவதில்லை. என்ற நிலை ஏற்பட்டிருக்கின்றது''

இவ்விரு முடிபுகளும் தமிழண்ணலின் தீரத் தெளிந்த கருத்துக்கள்.

ஏனைய நெறியறிஞர்கள் போலத் தொல்காப்பியர்க்கும் தனி இலக்கியக் கோள் உண்டு. பொருளதிகாரத்தில், சிறப்பாக உவமவியலிலும் செய்யுளியலிலும் இவற்றைக் காணலாம். இலக்கிய நெறிகளைப் பிறர் போலத் தனிப்பிரிவுத் துறையாகத் தமிழ்ப்புலவர்கள் கொள்ளவில்லை. எனினும் இலக்கணத்துள் அடக்கமாக அந்நெறிகளை இணைத்து வைத்துள்ளனர். ஏறத்தாழப் பல்லாண்டு பல்வகை இலக்கிய வளம் மிளிரும் தமிழ் மொழியில் இலக்கிய நெறிகள் இல்லை என்று சொல்ல முடியுமா? தமிழர்கள் படைப்பு நோக்கிய அந்நெறிகளை உள்வைப்பாகக் கையாண்டனர் எனவும் சட்டத் தொகுப்புப்போல நூற்றொகை செய்யவில்லை எனவும், தமிழண்ணல் தெளிவிப்பர்.

அணிக் கோட்பாடு என்ற துறையியல் தொல்காப்பியர்க்கு உடன்பாடில்லை. அக்கோள் பல அணிகளைத் தொகுத்துவைத்திருக்கும் நகைக் கடை போன்றது. உடல் உறுப்புக்களோடு தொடர்பு படும் போது தான் நகைகட்கு அழகு மதிப்பு உண்டு. ஆதலின் தொல்காப்பியர் பல்வேறு இலக்கிய வனப்புக்களைச் செய்யுளின் உறுப்பாகக் கொண்டனர் எனவும், படைப்பின் கூறாகக் கொண்டனர் எனவும் தமிழண்ணல் கிளந்து கூறுவது பெரிதும் ஏற்புடைத்து. இந்த முடிவுக்கு மேற்சான்றாக விரிந்த பேராசிரியர் உரையை இந்நூலாசிரியர் தொகுத்துக் காட்டுவர். இதனால் 13 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த உரைப் பெருமகன் பேராசிரியரும் வடமொழி அலங்கார நூல்களைக் கற்று ஒப்புற்று, தமிழணி உதிரியன்று; பொருளோடு கலந்த உறுப்பு என அன்றே தனித் தமிழ்மையைப் புலப்படுத்தியுள்ளார்.

உலகியல் வழக்கிலும் மக்களைப் பற்றியே முதன்மை கொடுத்துப் பாடும் சங்கவிலக்கியத்தை மக்களிலககியம் எனப் பகர வேண்டும் என்பதும், அகத்திணைப் பாடல்கள் நூற்றுக்கு நூறும் புறத்திணைப் பாடல்கள் நூற்றுக்கு எழுபத்தைந்தும் மனச்சூழல் பற்றியனவாதலின், உளவியல் இலக்கியம் எனவும் பெயரிடலாம் என்பதும் தமிழண்ணலின் வேணவா.

மிக்க பொருளினும்
பொருள்வகை புணர்க்க
நாணுத் தலைப்பிரியா
நல்வழிப் படுத்தே

என்று தொல்காப்பியம் வடிக்கும் இலக்கிய மிகைநெறி இன்றும் கடைப்பிடிக்கத் தகுவது எனவும் நடப்பியல் என்ற பெயரால் வரம்பு கடந்த காமக் கழிவுகளையும் தீமைப்புனைவுகளையும் சொல்ல விரும்பும் எழுத்தாளர் நாணங் கெடாமலும் நல்வழி கெடாமலும் தொல்காப்பிய நெறியைப் பின்பற்ற வேண்டுமெனவும் தமிழண்ணல் கூறும் படைப்புரை தொல்காப்பியம் என்றும் தமிழுக்கு வழிகாட்டி என்பதனை உறுதிப் படுத்தும்.

'தமிழண்ணலின் ஒருநூல்' என்ற இத்தலைப்பில் அவர்தம் நுண்மாண் நுழைபுலத்தால் எழுதிய 'சங்கவிலக்கிய ஒப்பீடு' என்ற பனுவல் புலமைக்கு நல் வித்தாகும் எனக் காட்டவும், புலவோர்க்கு நல் விருந்தாகும் என உணர்த்தவும், இவ்வுலக வாழ்வு தரும் நம் பண்டைச் சங்கவிலக்கியங்களையும் தொல்காப்பியத்தையும் தமிழ்மறையாக வணங்கவேண்டும் என அறிவுறுத்தவும், சில பகுதிகளைச் சுட்டிக்காட்டியுள்ளேன். முழு நூலையும் கற்பார் விழுப்புலமை பெறுவர்.



மதுரை காமராசர் பல்கலைக்கழக
ஒப்பிலக்கியக் கருத்தரங்கில்



அனைத்திந்தியக் கல்லூரித் தமிழாசிரியர்
கழக மாநாட்டில்



தமிழ் விழா– தியாகராசர் கல்லூரி.
கவின் கலைக் கழகச் சார்பில் நடைபெற்ற நாடகம்
''வாய்மையே வெல்லும்''
போரா. தமிழண்ணல் எழுதியது (18.1.1970)



திருவையாற்றில் புலவர் இறுதியாண்டு பயின்றபோது (1947–48) நண்பர் வெ. அண்ணாமலையுடன்.



மாணவர் மன்ற நிறுவனர் மயிலை சிவ. முத்து அவர்களுடன்.



ஜப்பானில் பேராசிரியர்




எடின்பரோ பல்கலைக்கழகத்தில்
டாக்டர் கண்ணன் (பேராசிரியர் மகன்)
தன் இந்திய நண்பருடன் (1988)





பேராசிரியரின் இளமைத் தோற்றம்.



பல்கலைக் கழகத்தில் உரையாற்றுகிறார்.

# நல்ல மனிதர்—நல்ல தலைவர்

பேராசிரியர் தி.அ. சொக்கலிங்கம்
தேர்வாணையர், அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலை நகர் 608 002

'பேராசிரியரா......!! நான் சொக்கலிங்கம் பேசுகிறேன்! வணக்கம்.

'வணக்கம்! வணக்கம்!

'அறையில் இருப்பீர்களா......''

'அறையில்தான் இருக்கிறேன். என்ன செய்ய வேண்டும்!

'ஒன்றுமில்லை - உங்களைப் பார்க்க வேண்டும். பத்து நிமிஷத்தில் வந்து விடுகிறேன்!

'இல்லை இல்லை. நீங்கள் அங்கேயே இருங்கள். நானே வந்து விடுகிறேன். எனக்கும் அந்தப் பக்கம் வர வேண்டிய வேலை இருக்கின்றது!'

'இந்தப் பக்கம் வேலை இருப்பதாக முதலில் சொல்லவில்லையே!'

'இப்போது தான் ஞாபகம் வந்தது! நானே வந்து விடுகிறேன்...' இப்படிச் சொல்லிக் கொண்டே மேற்கொண்டு பேசவிடாமல்—போனை வைத்து விடுகிறார்.

டாக்டர் தமிழண்ணல் தமிழை முறையாகப் படித்தவர்—அறிஞர் பட்டம் பெற்றவர்—நூற்றுக் கணக்கான மாணவர்களுக்கு ஆய்வு வழிகாட்டியாகத் திகழ்ந்தவர்—தமிழறிந்த தமிழரிடை இவருடைய பெயர் பிரபல்யம். இப்படிப்பட்ட அறிஞர் என் அறைக்குத் தாமே வருகிறேன் என்று சொல்கிற சௌலப்பியம் இருக்கின்றதே — அதற்குப் பெயர்தான் தமிழண்ணல்.

கடந்த இருபது இருபத்தைந்து வருஷங்களாகவே நான் டாக்டர் தமிழண்ணலை நன்கு அறிவேன். எங்கள் ஊருக்கு அவர் வந்திருக்கிறார். அவர் ஊருக்கு நான் போயிருக்கிறேன். குடும்பத்தோடு நெருங்கிய தொடர்பு — முதல் நாள் பழகியது போலவே அன்பு, பண்பு, மரியாதை இவற்றுடன் இன்றும் பழகும் உயர்ந்த மனிதர் டாக்டர். தமிழண்ணல்.

அவருக்கு மணிவிழா என்றபோது என்னத்தை எழுத? எங்கள் உள்ளமெல்லாம் தமிழண்ணலாக இருக்கும்போது எதைத் தனியே பிரித்து எழுத?

தமிழறிஞர் என்றால் அவர் எழுதிய புத்தகங்களைப் பற்றி ஒரு ஆய்வு செய்யலாம்.

ஆய்வு மாணவர் என்றால் அவர் எப்படியெல்லாம் தங்களுக்கு வழிகாட்டினார் என்று எழுதலாம்.

ஒரு சாலை மாணாக்கர் என்றால் அவர் வகுப்பறைகளில் எங்ஙனம் சிறந்து விளங்கினார் அல்லது எவ்வாறு 'அறிவுக்குறும்பு' செய்தார் என்று எழுதலாம்.

அவருடைய ஆசிரியராக இருந்தால் அவர் எப்படியெல்லாம் வகுப்பில் கேள்விகள் கேட்டுத் தங்களைத் திணற அடிப்பார் என்பது பற்றி எழுதலாம்.

ஆனால் இந்தத் தகுதிகளில் எதுவும் நான் பெற்றிருக்கவில்லை—எனவே இவை பற்றியெல்லாம் எனக்கு எழுத வராது.

ஆனால் அவரிடமுள்ள மனிதப் பண்பினை என்னால் நினைத்துப் பார்க்க முடியும். ஒரு பெரிய பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறைத் தலைவர். வேறுபட்ட இயல்புடைய பல பேராசிரியர்கள் இவரிடம் பணியாற்றுகிறார்கள்.

அவர்கள் அத்தனை பேரையும் ஒருங்கணைத்துப் போகின்ற பெருந்தன்மை இருக்

கின்றதே— அதுதான் அவருடைய பலம். மனிதப்பண்பின் அடிப்படையில் பிறந்த பலம் இது. இவருடைய இன்றைய வளர்ச் சிக்குக் காரணமே அரவணைத்துப் போகின்ற பண்பும், 'அகம்பாவம்' இல்லாத இயல் புமே காரணங்கள்.

ஏதோ ரெண்டு பத்திரிக்கையில் பெயர் வந்து விட்டால் போதும் — நாலைந்து கூட்டம் பேசி விட்டால் போதும்—ஒரு பட்டிமன்றம் நடத்திவிட்டால் போதும்—பார்க்க வேண்டு மே அவர்களுக்கு வருகின்ற கௌரவத்தை யும், பெருமையையும். இப்படிப்பட்ட கூட்டத்தின் மத்தியில் டாக்டர். தமிழண்ணல் ஒரு வித்தியாசமானவர்.

'இவருக்கு பலஹீனங்களே இல்லையா?...

'இருக்கின்றதே!

எல்லோரையும் நம்பி விடுவதுதான் இவரு டைய பலஹீனம்—இதுவே சில வேளை இவருக்கு பலமாகவும் அமைகின்றது.

மணிவிழாக் காணும் டாக்டர். தமிழண்ணல் தம்பதியர் பேறு பல பெற்று 'மனக்கினி தாக'ப் பல்லாண்டு வாழ்க!

நல்ல மனிதர்கள், நல்ல தலைவர்கள்— குறைந்து வருகின்ற இந்தக் காலத்தில் ஒரு நல்ல மனிதரைப் பற்றி, ஒரு நல்ல தலைவ ரைப் பற்றி நினைத்துப் பார்க்க சந்தர்ப்பம் வந்ததே என்று சந்தோஷப்படுகிறேன்.

---

### என்று மடியும் அடிமையில் மோகம்?

வேற்று மொழிகளைக் கற்பது தவறன்று. அவ்வாறு கூறுவது குறுகிய மனப் பான்மை. ஒரு மனிதன் தாய் மொழியோடு, பிறமொழிகளையும் கற்கக்கூடு மானால் அது அவனுக்கும் ஆக்கம், அவன் மொழிக்கும் ஆக்கம். இது உலக இயல்புதான், உண்மைதான!

''தமிழர்கள் பிறமொழிகளின் மீது வெறுப்புக் காட்டக் கூடாது. அவன் இதயம் விரிவடைய வேண்டும். எல்லா மொழிகளையும் கற்றுச் சிறப்படைய வேண்டும்' என்று அமைச்சர்கள், அறிவுபடைத்தவர்கள் அனைவரும் வாதிடு கிறார்கள்; அதை நாம் மறுக்கவில்லை. ஆனால் இவர்களின் வாதமெல்லாம் பிற நாட்டாருக்குப் பொருந்துகின்றனவேயன்றி தமிழ்நாட்டிற்குப் பொருந்த வில்லை. இதை நாம் சிந்திககவேண்டும். பிற நாட்டார் தாய் மொழியோடு கூட பிறமொழி படிக்கிறார்கள். தமிழர்களோ தாய்மொழி தவிர்த்து பிறமொழி படிக்கிறார்கள். ஆங்கிலேயன் ஒருவன் தமிழ் அனைய பிறமொழியைச் கற்றால் அந்த மொழியில் உள்ள உயர்ந்த இலக்கியங்களாம் அணிகளைத் தன் தாய்க்கு—மொழிபெயர்த்து–அணிவிக்கிறான். இதனால் தமிழனுங்கூடத் தன் தாய்மொழியைப் பற்றிய ஆராய்ச்சியிலே இறங்க வேண்டுமானால், தாய் நாட்டு வரலாற்றை, நிலையை, வளர்ச்சியை உணரவேண்டுமானால்ஆங்கிலத் தின் துணை அவனுக்கு இன்றியமையாததாகின்றது. தமிழனோ பிறமொழி கற்றதும் தான் ஒருதமிழன் என்ற உணர்ச்சியையே இழந்துவிடுகிறான். தான் கற்ற மொழி எதுவோ அதற்கே உரியவனைப் போலத் தன்னைப் பற்றித் தமிழர்களிடையே விளம்பரம் செய்து கொள்கிறான். 'இந்தி' படித்த ஆசிரி யர்கள் ''நமஸ்தே'' போட்டு ''ஜீஹாங்'' செய்து ''பண்டிட்ஜி'' ஆகிவிடு வதை நினைவுபடுத்திப் பாருங்கள்; ஆங்கிலங்கற்றவன் ஆங்கிலத்தால் தமி ழுக்கோ தமிழால் ஆங்கிலத்திற்கோ நன்மை செய்ய முடியாவிட்டாலும் ''இண்டர் நேஷனல் லாங்குவேஜைப் படித்த இறுமாப்பில் 'டமிளை'ப் பேச வும் வராது'' என்று ''ஸ்டைல்'' பண்ணி நாகரிகம் தேடுவதை இன்றும் காணுங்கள். ஏன்? நம்மிடையே வாழும் மலையாளியும், தெலுங்கனும் தாய் மொழிகட்கு உரிய இடமளித்து உரிமையை நிலைநாட்டுகிறான். அதற்கும் மேலாக இந்தியைப் படிப்பதாகக் கூறி அரசியலில் ஆட்சியைக் கைப்பற்ற விரைகிறான். தமிழனோ தாய்மொழிக்கு உரிய இடமளிக்க மறுத்து–சாக்குப் போக்குச் சொல்லிக் கொண்டே உரிமையைப் பறி கொடுக்கிறான்.

தமிழண்ணல்
'மொழிவழிச் சிந்தனைகள்'

---

*பசிய புல் நுனியில் பதித்தவெண் முத்தமோ?*
*பனித்துளி தானோ? நீ பாராய்!*
*பைங்கிளி! எழுந்தோடி வாராய்!*

*—கவிமணி*

# பனித் துளிகள்

## பேராசிரியரின் முத்திரைக் கவிதைகள்

1970 ஜனவரியில் — தைப்பொங்கலன்று — திருச்சி வானொலியில், அன்றைய தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் தலைமையில் அரங்கேறியது, பின்பு புதுடில்லி வானொலியினரால் தேர்ந்தெடுக்கப்பட்டு, 1971 ஜனவரி 25 இரவு, புதுடில்லியில் நடைபெற்ற அனைத்து மொழிக் கவியரங்கத்தில் அரங்கேற்றப்பட்டது. இந்திய மொழிகள் பதினான்கிலும் மொழியாக்கம் செய்து ஒலிபரப்பாகியது.

# செல்வமெனும் காதலியே!

செல்வமெனும் மாமகளே சீர்பெருக யான்பெற்ற
கல்விக் ககப்படாக் காரிகையே! உன்னுடைய
பொன்னுருவம் கண்டுமனம் பூரித்தேன். பொற்புடைய
இன்ப வடிவிற்கே ஏங்கினேன்! உன்னையிங்கு
என்ன பெயரிட் டழைப்பேன்யான் ஏந்திழையே?
கன்னித் தமிழ்ச்சொல்லில் காசுபணம் என்பேனா?
நில்லா துலகில் நிலைக்கா தவரவர்பால்
செல்லுவதால் செந்தமிழில் செல்வமெனச் செப்புவனா?
உன்கருத்தை ஈர்க்கும் ஒருபெயரைச் சொல்லிடுவாய்
அன்புடனே உன்னை அழைத்தழைத்து நான்மகிழ்வேன்!
நீயோ,
பெட்டிக்குப் பெட்டி பெயரும் பெருமாட்டி
வட்டிக்கு வட்டி வளரும் திருவாட்டி
பட்டங்கள் பெற்றுப் பயனென்ன? நீயிருக்கும்
பெட்டகங்கள் அன்றோ பெருந்துணையாய்த் தோன்றுதடீ!
என்னைக் கடைக்கணிப்பாய் உன்றனது புன்னகைக்சே
நின்றுருகி வாடுகிறேன் நின்வரவை நாடுகிறேன்!
நான்நோக்கும் காலைப் புறம்நோக்கி, நானயர்ந்தால்
தான்நோக்கி மெல்ல நகைத்திடுவாய்! உன்பிரிவால்
முப்பதுநாள் 'ஏங்கி முதல்தேதி யாம்திருநாள்
எப்போ' வருமென் றெதிர்பார்ப்பேன், நீயோ
ஒருநாள் வருவாய்என் உள்ளம் வருந்த
மறுநாளே போய்விடுவாய் மாமகளே! சேரும்
இடனறிந்து சேராத சேயிழையே, என்றன்
கடன்காரர் கண்டுவிட்டால் கைவிட்டுச் செல்பவளே!

கொள்ளைகொள்ளை யாய்க்காதல் கொண்டேனே,
என்னைவிட்டுக்
கொள்ளை அடிப்பாரின் கூட்டுறவனே? தேடுங்கால்
கண்ணுக்குள் தென்படுவாய், காணா தொளிந்திடுவாய்
கண்பொத்தி ஆட்டங்கள் காட்டுவாய், நின்செயல்கள்
காதலினால் என்றே கரைகின்றேன், என்வாழ்வில்
மோதுகிறாய் மோதலினால் காதல் முறிந்திடுமோ?
இவ்வுலகோர்
காசதனைக் கூட்ட அறத்தைக் கழித்து விட்டு
மாசைப் பெருக்கி மடமை தனைவகுப்பார்
மந்திரமும் செய்திடுவார் தந்திரமும் செய்திடுவார்
எந்திரமும் கொண்டுபணம் இங்குசிலர் செய்திடுவார்.
காரிரும்பைச் செம்பொன்னாய் மாற்றிக் கணப்பொழுதில்
பாரினையே மாற்ற பகற்கனவு கண்டிடுவார்.
மண்ணைப்பொன் ஆக்கும் உழைப்பின் மதிப்பறியார்
எண்ணுங் கனவாய் இருப்ப திழந்திடுவார்!
கானல்நீர் போலநின்று கண்ணெதிரே காட்சிதந்து
மானிடரை என்றும் மயக்குகின்ற செல்வமே!
செல்வாய் வருவாய் நீ தேங்கா துலகெல்லாம்
வெல்வாய் சுழன்று விளைவிப்பாய்! மாமழையால்
ஆறாகி வெள்ளம் அணைதேங்கிக் கால்வாயாய்
ஏறாத மேடுபள்ளம் எங்கும் அலைமோதிப்
பாத்திகளிற் பாய்ந்து பயன்விளைக்கும் தண்ணீர்போல்
ஏத்துபுகழ் கொண்டிடுவாய்! என்னருமைப் பெண்ணே!
தொகுத்துக் குவித்துப் பதுக்காமல் நாளும்
பகுத்துண்டு வாழ்ந்திருக்கும் பண்பை மறவாதேன்
ஆதலினால்
செல்வமெனும் காதலியே! சீர்தருவாய் யான்பெற்ற
கல்விக்குச் சற்றே களிந்து.

# மாமதுரை மீனாட்சி

## பொற்கிழிக் கவிதை

சிலப்பதிகாரக் கானல்வரிபோன்ற அமைப்புடையது இது. வரிப்பாடல் கண்ணிகளாகிய யாப்பில் பல துறைகளாகப் பகுத்துப் பாடப்பெற்றது.

சித்திரைத் திருவிழாவில் கூட்டத்தினிடையே காணாமற்போன செல்வச் சிறுமி ' 'மீனாட்சியை'' அவளுடைய தாய் தேடி அவலமுற்று அழுகின் றாள்.

பிச்சை எடுக்கப் பழக்கியும், குற்றேவல் செய்யப் பழக்கியும் பிள்ளை பிடிக்கிகள் கொடுமைப்படுத்துவர்' என்று கேள்விப்பட்ட தாய், ஏழை எளியவரிடையே தன்சிறுமியும் இருப்பாளோ என்று தேடுகின்றாள்.

அதனால் அவ்வேழைகளையும், கூலிகளையும் காணும்போதெல்லாம் தன் செல்வச் சிறுமியின் நினைவு வரப்பெற்று, அனைவரையும் நேசிக்கும் மனநிலையைப் பெறுகின்றாள். செல்வச்செருக்கும் ஆணவமும் கரைந்து, எளியோர்பால் இரக்கம் மிக்கு உருகுகின்ற நிலையில் காணாமற்போன சிறுமி திரும்பவும் கிடைக்கப்பெற்று அகமகிழ்கின்றாள்.

சித்தாந்த அடிப்படையில் இறைவனைத் தேடி அடையும் ஆன்மாவின் அனுபவமாகவும ஒருபொருள் கொள்ளக கிடக்கின்றது.

***செல்வச்சிறுமி மீனாட்சி பேரழகு வாய்ந்தவள்***
***அவளது அழகை வியந்து ஊரார் ஒருவருக்கொருவர்***
***பாராட்டிக் கூறுதல்!***

பொன்னெழுதிப் பூவெழுதிப் புயலெழுதிப் பெண்மை
மின்னெழுதி வைததஎழில் மீனாட்சி காணீர்!!
மீனாட்சி காணீர்; நீர் மேன்மைமிகும் மாமதுரை
தானாட்சி செய்யவந்த தவமகளைக் காணீர்!!

கயல்பிறழும் இருவிழிகள் கதிர்வீசும் முகத்தாள்
புயல்தழுவும் குழலுடையாள் பூவுலகில் வந்தாள்!!
பூவுலகில் வந்தருளும் பொற்கொடியாள் அன்றோ
காவுலவும் மாமதுரை களிப்படையும் காணீர்!!

மழலைமொழி அமுதுபொழி மங்கலத்தின் உருவம்
விழவயரும் எழிலழகை விரும்பிமனம் மகிழ்வார்!!
விரும்பிமனம் மகிழ்பவரின் விழைவைநிறை செய்ய
அரும்பிவள்ர் தமிழ்க்கொடிகண்டு அகமகிழ்தல் காணீர்!!

பொலிவுறு திருமுகமே! பொட்டிடு நறுநுதலே!!
கலியுறு நகைமலரே; கனிதவழ் செவ்விதழே!!
ஒலியுறு நறுங்குழலே; உவகைசெய் சிலையழகே!!
கலைமிகு திருவடிவே; கருத்தினைக் கவர்பவையே!!

அன்புறு கயற்கண்ணே; அறிவுறு மதிமுகமே!!
இன்புறு புன்னகையே; எழிலுறு வனப்பதுவே!!
நன்புறு தமிழ்வடிவே; நடைபயில் சாயலதே!!
பொன்தரு நல்லுளமே; புவியினைக் கவர்பவையே!!

## எங்கே இருக்கின்றாய்?

### காணாமற்போன மகளைத் தேடும் தாயின் அவலக்குரல்

கங்குலில் பகலில் நல்ல ககனத்தில் பாரில் எல்லாம்
அங்கயற் கண்ணி யுன்னை அலமந்து தேடு கின்றேன்
பொங்கர்சூழ் மதிமு கத்தாய்!! புகழுறும் வடிவே நீதான்
எங்குளாய் எனவு ரைத்தால் இனைந்தேங்கி அழுவே னோநான்?

கடலினுள் தவற விட்ட முத்தெனத் தேடு கின்றேன்
விடருறு மலையி னூடோ? வெளியிலாக் காட்டி னூடோ?
இடருறு குடிசைக் குள்ளோ? எங்கேநீ இருக்கின் றாயோ?
இடமதை உணர்த்து வாயேல் இருந்தேங்கி அழுவே னோநான்?

சிற்றுயிர்க் கிரங்கும் போதுன் சிந்தையைக் கூட்டு கின்றாய்!!
மற்றவர்க் குதவும் போதுன் மலர்ப்பதம் நீட்டு கின்றாய்!!
சுற்றத்தைப் பேணும் போதுன் சுடர்விழி காட்டு கின்றாய்!!
முற்றவுப் காட்சி தந்தால் முடிவின்றி அழுவே னோநான்?

### ஏழைகள் நடுவில் இருக்கின்றாயோ?

கல்லுடைத்துச் சாலைகளில் கண்ணீர் மழைபொழிந்தே
அல்லலுழப் பார்நடுவே அழகி இருப்பாளோ?
அல்லலுறும் என்செல்வ அழகி நினைவதனால்,
தொல்லையுறு சாதிஎனத் தூற்றிப் பழியேனால்!!

பேருந்து நிலையத்தில் பிச்சை எடுப்பவர்பால்
சீருந்தும் என்செல்வச் சிறுமி இருப்பாளோ?
சீருந்தும் என்செல்வச் சிறுமி நினைவதனால்,
ஏருந்தும் ஏழைகளை எள்ளி இகழேனால்!!

சுமைதாங்கி நாளனைத்தும் தொடரும் கூலிகள்போல்
அமைமென்தோள் பாவையவள் அலைந்து திரிவாளோ?
அமைமென்தோள் பாவையவள் ஆரா நினைவதனால்
குமைகின்ற ஏழைகள்பாற் கொடுமை நினையேனால்!!

(வேறு)

செல்வச் செருக்கனைத்தும் சிதறி அழுகின்றேன்
பொல்லாத ஆணவமும் பொடிந்து கரைகின்றேன்
பொல்லா + ஆணவமும் பொடிந்து கரைந்ததனால்
எல்லா உயிர்களிலும் என்னுயிரே காண்கின்றேன்!!

### கயற்கண் நங்காய், வாராயோ!!

### சிறுமி மீனாட்சி திரும்பிவர வேண்டுமென எண்ணும் தாயின் அழுகை

கண்ணுள் கரிய மணியாகிக்
    கருத்துள் உண்மை வடிவாகி
எண்ணுள் இருந்தாய்; எனைப்பிரிந்தே
    எங்கே சென்றாய்? மீனாட்சி!?
எண்ணுள் இருந்தும் எனைப்பிரிந்தே
    ஏங்கச் செய்தல், கயற்கண்ணாய்!!
உண்மை அன்பின் திறங்காணும்
    உளமோ சொல்லாய் மீனாட்சி!!

காடும் மலையும் சுற்றிடவும்
ககன வெளியைப் பற்றிடவும்
தேடும் படிக்குப் பிரிந்தெந்தத்
திசைக்குச் சென்றாய்? மீனாட்சி!!
தேடும் படிக்கே எனைப்பிரிந்து
சேறல் காணின், கயற்கண்ணாய்!!
வாடும் நிலைதந் தெனையறியும்
வழக்கோ சொல்லாய், மீனாட்சி!!

(வேறு)

பூவின் பொலிவில் சிரிப்பாகிப்
பொன்னின் வடிவில் ஒளியாகிக்
காவின் பரப்பில் நிறமாகிக்
கலந்தாய் வாழி மீனாட்சி!
நாவில் நின்றே நடமாடி
நல்கும் மகளே! என்னுடைய
ஆவி நிலைக்க வேண்டுமெனில்
அன்னாய் ஓடி வாராயோ?

அல்லும் பகலும் என்னகத்தில்
ஆடிப் பாடி மகிழ்பவளே!
கல்லும் கனியக் கதறுகிறேன்
கயற்கண் நங்காய் வாராயோ?

நல்லாய் என்றன் உயிராகி
நாடிட என்னைப் பிரிந்தேகி
எல்லா உயிரும் ஒன்றென்னும்
எண்ணம் தந்தாய் மீனாட்சி!
பொல்லாச் செல்வச் செருக்காலும்
பொய்மைத் திமிரின் பெருக்காலும்
கல்லாய் இருந்தேன் கனிந்துவிட்டேன்!
கயற்கண் தாயே வாராயோ?

கன்றின் குரல்கேட் டிரங்குகிறேன்
காக்கை கரையக் கரைகின்றேன்
குன்றக் குருவி குரல்கேட்டும்
குயிலின் இசைசேர் பாக்கேட்டும்
துன்றும் ஒலிகள் அனைத்திலுமே
தோகை குரலே கேட்கின்றேன்
வென்றாய் என்றன்செருக்கதனை
விரைந்தே ஓடிவாராயோ?

### தேடிய சிறுமியைத் திரும்பப் பெற்றமை

**தன் மகளைத் தேடிக் கண்டுகொண்ட தாய், தன் மாற்றத்தைக் கூறுதல்**

உயிர்கள் அனைத்தும் ஒன்றென் றெண்ணும்
பயிற்சி தரவோ, பாவை பிரிந்தாள்?
பயிற்சி முடிந்து பயனும் கண்டபின்
உயிராய் ஒன்றிய ஒண்தொடி திரும்பினள்!

செல்வச் செருக்கும் சினமும் மறையும்
கல்வி தரவோ, கன்னி பிரிந்தாள்?
கல்வி முடிந்து கருத்தும் கனிந்தபின்
செல்வச்சிறுமி திரும்பினள் கண்டீர்!

சுயநலம் ஒன்றே தொடர்ந்திடும் மனத்தைப்
பயனுறச் செயவோ, பாவை பிரிந்தாள்?
பயனுறச் செய்து பண்பதும் பெற்றபின்
துயர்களைந் தாள்பவள் தோன்றினள் கண்டீர்!

*பைந்தொடியைப் பாடுவோம்!*

***செல்வி மீனாட்சி மீண்டதனால் மனமகிழ்ந்து, மீனாட்சி அம்மையை வழிபட்டு. அனைவரும் ஆடிப்பாடுவது :***

*சேமமுறச்செய்பவள் :*

கண்ணிரண்டும் மழைபொழியக் கருத்துருகி நினைவொழியப்
பெண்ணணங்கு காட்சிதரும் பெருமையினைப் பாடுவமே!
மனமிருக்கும் இருளகல மமதைதரும் மலமகல
நனவிருக்கும் உமையவளின் நலம்புனைந்து பாடுவமே!

தொடுத்துவரும் பவங்களென்ற சுழற்சியினில் வீழாமல்
தடுத்துநமை ஆட்கொள்ளும் தையலினைப் பாடுவமே!
மாமதுரை வளர்ந்தோங்க மக்களெலாம் மனமகிழச்
சேம்முறச் செய்பவள் தன் சீர்புகழ்ந்து பாடுவமே!

*மீனாட்சி திருமணத் திருக்கோலம்:*

புகழ்மணக்கும் தமிழ்மகளைப் பொதிசுமந்த மணவாளன்
நகமணக்கும் தகையவளை நங்கையினைப் பாடுவமே!
சிலைவடிவை வென்றவளைச் சிவன்மணக்க நின்றவளைக்
கலைவடிவு கொண்டவளைக் கன்னியினைப் பாடுவமே!

தமையனவன் நீர்வார்க்கத் தலைமகன்தன் கைப்பிடிக்க
அமைவுறுமென் நகைகாட்டும் அணங்கவளைப் பாடுவமே!
அழகர்மலைத் தமையனையும் அழகுமலைத் தலைவனையும்
பழகுகலை வல்லியையும் பைந்தமிழிற் பாடுவமே!

*தமிழ் மகளைப் பாடுவமே*

நகைமுகத்து நாயகியை நானிலத்தின் தாயவளைப்
பகைமுகத்து வெற்றிதரும் பாவையினைப் பாடுவமே!
எவ்வுயிரும் தம்முயிர்போல் எண்ணியிங்ஙன் இரங்குபவர்
செவ்வையுறக் காணுகின்ற சிவசக்தி பாடுவமே!

கன்றுபிரி காராவாய்க் கதறுபவர் கண்ணெதிரில்
நின்றருளும் மீனாட்சி நிழலிருந்து பாடுவமே!
ஆலவாய் அண்ணலுடன் அமர்ந்திருந்து வையமிதைச்
சாலவே பேணுகின்ற தமிழ்மகளைப் பாடுவமே!

# மறைமலையடிகள் பிள்ளைத்தமிழ்

மறைமலையடிகள் நூற்றாண்டு நினைவுப் படைப்பிலக்கியப்
போட்டிக்கு 1976இல் எழுதி அளிக்கப் பெற்றது.

காரைக்குடி இராமசாமி தமிழ்க்கல்லூரி நிறுவனர் —
தமிழார்வம் தழைத்தோங்கிய தகைமையாளர்
தனித்தமிழ்ப் பற்றாளர்-கல்விக் கொடைஞர்-பண்பின் திருவுருவச்செம்மல்
கெழுதகை நண்பர் காரைக்குடிப்புரவலர் இராம பெரியகருப்பன்அவர்கள்,

பேராசிரியப் புலவர் இராம பெரியகருப்பனுக்குத்
தமிழ் காரணமாக இச் சிற்றிலக்கியப் படைப்புக்கு
ஆறுதல் பரிசு ரூபாய் ஐந்நூறு வழங்கினார்.

## காப்புப் பருவம்

வருமொழிகள் அத்தனைக்கும் புதுமைதர வளர்மொழியே
வையமிதில் வருமொழிகள்அனைத்தினுக்கும்
வாய்த்தமுதன் மொழித்தாயே வாழ்வுதரும் எழிலணங்கே!
வரம்பறியாப் பெருங்கலையே! கலைநிறைந்த

பெருமதியே! இருளகற்றும் ஒளிவிளக்கே! இயல்பமைந்த
பேரழகே! ஓவியமே! எண்ணிறந்து
பிறங்குபல ஊழியெலாம் இளமையுடன் திகழ்பவளே!
பெட்புடைய தமிழணங்கே! வணங்கு கின்றோம்!!

திருகுமனம் உடையசிலர் நினதெழிலைச் சிதைப்பதனைச்
சிறந்தசெயல், பரந்தமனம் என்று சொல்லித்
தீங்கதனைப் பரப்பிடுவர். அவர்செருக்கை அறுப்பதற்குச்
சினந்தெழுந்த முருகனெனப் பிறந்து மண்மேல்

ஒருமையுடன் நினதுதிரு மலரடியை வழுத்துகின்ற
ஒருகுழந்தை, ஓய்வின்றி நூல்தொடங்கி
ஒப்பற்ற தமிழ்மறையாய் எம்முள்ளம் தெளிவுகொள
ஓம்விதிக்கும் சிறுமதலை தன்னைக் காப்பாய்!

## செங்கீரைப் பருவம்

இனிய தமிழ்மொழி வளர்ச்சி கெடுப்பவர்
இளைத்து நலிந்தோட
இயன்றவரை தமிழ் இயல்பை வளர்ப்பவர்
இனிது மகிழ்ந்தாடத்

தனிமை மிகுதமிழ் நீர்மை அறிபவர்
தம்மனம் இசைபாடத்
தாயினைத் தூற்றியே வாழ்வினைத் தேடிடும்
தாழ்ந்தவர் மனம் வாடப்

புனித முறுமொழிப் புலமை மிகுந்தவர்
புகழ்ந்துனைக் கொண்டாடப்
புவியினில் முதன்மொழி எனவரும் தமிழினில்
புதுமைகள் பலநாடக்

கனியும் உளம்வளர் கல்வியில் தோய்ந்தவ!
ஆடுக செங்கீரை!
கலைநலம் பெருகிடும் எழில்வளர் மறைமலை
ஆடுக செங்கீரை!

## தாலப் பருவம்

அறிவியல் துறையில் தமிழில்லை
ஆட்சி யிலும் தமிழ் வரவில்லை
அன்னை மொழியில் வழிபடவோ
ஆண்டவனிடமும் இடமில்லை

வறியவர் போலத் தமிழரெலாம்
வாய்பார்த் தேங்கி நின்றிடவே
வரையும் எழில்சேர் கோபுரங்கள்
வானுற ஓங்கிப் பயனென்ன?

சிறியவர் எதிர்ப்புகள் புறங்கண்டு
சிதறிய தமிழரை முகங்கண்டு
செந்தமிழ் வலிமையின் நலங்கண்டு
செயல்திறன் புகுத்தினால் பயனுண்டு

முறியடித் தடிமையை விரட்டிடவே
முந்திடும் தலைவா தாலேலோ!
முத்தமிழ்த் தாயவள் பெற்றமுழு
மணியே தாலே தாலேலோ

## சப்பாணிப் பருவம்

பாட்டில் தமிழிலை பலகையில் தமிழிலை
பெயரிலும் தமிழிலையே
படிப்பில் தமிழிலை படத்தினில் தமிழிலை
பைந்தமிழ் இலை இலையே

நாட்டில் தமிழிலை நாடகம் தமிழிலை
நற்கதை தமிழிலையே
நாடொறும் படித்திடும் நாளிதழ் தமிழிலை
நற்றமிழ் இலை இலையே

வீட்டில் தமிழிலை விளங்கிடும் மழலையர்
படிப்பிலும் தமிழிலையே
விளையும் அறிவியல் கலையியல் எதனிலும்
வீறுடைத் தமிழிலையே

ஏட்டில் இழிநிலை எடுத்துரைத் திடிப்பவ!
கொட்டுக சப்பாணி!!
எழுச்சி எழுச்சியென் றெம்முளந் துள்ளிடக்
கொட்டுக சப்பாணி!!

## முத்தப் பருவம்

கனியும் இதழில் பொலியும் அமுதத் துளிகள் வழியும் குழவியே!
கலையும் மொழியுப் வாழ்வும் வழியும் கலந்து மிளிரும் செல்வமே!
பனியும் ஒளியும் படரும் மலரிற் பதியும் இதழின் மதலையே!
பசியதமிழும் இனிய குரலும் இசைந்து பரவும் பாலக!
இனிய உணர்வும் சிவந்த உருவும் இணைந்து பிறந்த இனியனே!
எமது மனத்தில் எழுந்து மிளிரும் இணையில் சங்கப் புலவனே!
முனிந்து பிழையை ஒறுக்கும் தலைவ! மகிழ்ந்து முத்தம் தருகவே!
முயன்றுதமிழுக் குதவ வருநல் முதல்வ முத்தம் தருகவே!!

## வருகைப் பருவம்

'ரெடிபண்ணி' 'டிரஸ்பண்ணி' 'மீட்பண்ணியே'
சில்'பண்ணி' திரிகின்ற தமிழ கத்தில்
செந்தமிழில் சிலபேர்கள் பேசக் கேட்டால்
கீழாக நினைக்கவே பழகி விட்ட

அடிமைமனத் தமிழர்களின் மானந் தன்னை
அடித்தளத்தில் தொட்டதிரச் செய்தாய் அந்த
ஆங்கிலமும் வடமொழியும் தேர்ந்து கற்றாய்!
ஆனாலும் பிறமொழிச்சொல் கலப்ப தென்ற

குடிகெடுக்கும் மொழிச்சிதைவுக் கொடுமை தன்னைக்
குற்றமென மற்றவர்கட் குணர்த்தி நின்றாய்!
குறைகளையத் தமதுபெயர் தனைமுதலில் மாற்றிக்கொண்ட
குணக்குன்றே! மறைமலையே வந்தருள்க!

வடிவழகும் ஒளிசூழும் வட்டம் சேர்ந்த
வளர்நிலவு முகவழகும் வணங்கவைக்கும்
வண்டமிழும் கொண்டசிவக் குனறே? எம்மை
வாழ்விக்கும் மறைமலையே வந்தருள்க!

## அம்புலிப் பருவம்

மதியினில் குறைவினால் பிழைபட எழுதியோர்,
மறைமலை மறுப்புக் காளாய்
மனம்மிக வருந்தியே திருந்துவர் இதனைநீ
மதியமே உணர்ந்து கொள்க!

மதிதனில் நிறைவுளான் இவனுடன் பழகிலுன்
மதிநிறை வாகு மன்றோ?
மற்றவன் மறுப்பினுக் காளாக நேரிலுன்
மதிக்குறை பழிப்ப ரன்றோ?

எதுவழி எனவிரைந் தோடிடிற் பயனிலை
என்சொலைக் கேட்க நன்றே!
இளையவன் முன்றிலே விளையாட வருகநீ
இன்றெனில் சீற்றங் கொண்டு

கதுவுவன் கண்மைபோல் கரைந்திட நேருமே
கடுகிநீ ஆட வாவே!
கரைந்தழும் மறைமலை மகிழ்ந்திட மதியமே
கடுகிநீ ஆட வாவே!

## சிற்றில் பருவம்

தூய தமிழ்ச்சொல் இலைஎன்றால்
தொடரும் செயலை இகழ்வாய்நீ
தொன்மைச் சிறப்பை இழித்துரைத்தால்
தோயும் சான்றை எதிர்வைப்பாய்!

தாயைப் பழிக்கும் கொடியவரின்
தாழ்வு மனத்தை வெளிப்படுத்தித்
தலையில் தட்டி விடுதலையாம்
தன்னுணர் வதனைக் கிளர்ந்திடுவாய்!

சேயாய்ப் பிறந்து செந்தமிழின்
சிறப்பை விளக்க வந்தவனே!
சேர்த்து கூடிக் கட்டியுள்ளோம்
சிறியேம் சிற்றில் சிதையேலே!

தாயைப் புரக்கும் தலைமகனே
தமியேம் சிற்றில் சிதையேலே!
தமிழின் அமுதப் பால்பருகும்
தனயா! சிற்றில் சிதையேலே!

## சிறுபறைப் பருவம்

ஒலியில் வாழும் மொழிகள் என்ற
உண்மை காணா மடவரே
ஒண்டமிழ்த்தாய் கொண் டிலாத
ஒலிக லந்து நலிவராம்!

நலிவில் லாமல் தமிழில் வாழும்
நல்ல நல்ல ஒலிகளே
நற்றமிழ்க்கு முற்றும் போதும்
நான்கு பாடை ஒலிகளேன்!

வலுவில்லாத மொழியைப் போல
வாழும் தமிழும் ஆகுமோ?
வஞ்சகம்சேர் நெஞ்சர் தம்மை
வாட்டி ஓட்டி விரட்டவே.

ஒலிநிறைந்த பறையெடுத்தே
ஒலித்தொலித்து முழக்குக!
ஒலிசிதைக்க ஒண்ணோம் என்றே
ஒலித் தொலித்து முழக்குக

## சிறுதேர்ப் பருவம்

கற்பனை மெருகில் கபிலன் நீ
கருதும் உறுதியில் நக்கீரன்
கவினார் இயற்கைப் புனைவதனில்
கருதும் இளங்கோ! நற்பாட்டுப்

பொற்பில் சங்கப் புலவன் நீ
பொலிவு தெளிவு செறிவுடனே
பொருளைப் பொதிந்து ஆங்கிலம்போல்
பொழியும் புதுமைப் புலவன் நீ!

முற்படு நாடகக் கலைஞன் நீ!
முறைப்படு காளி தாசனும்நீ!
முழுமைகொள் சமய நெறிபோற்றும்
முதற்சிவ ஞான எழில்முனிவன்!

பற்பல துறையறிந் தவைபோற்றும்
பாவல உருட்டுக சிறுதேரே!
பைந்தமிழ் காக்கப் பிறந்திட்ட
பாலக உருட்டுக சிறுதேரே

நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு
எல்லார்க்கும் பெய்யும் மழை

—ஔவையார்

# மழைத் துளிகள்

# வாழ்வியல் இயக்கம்

தவத்திரு குன்றக்குடி அடிகளார்

வாழ்க்கை ஒரு நெடிய பயணம். இந்த நெடிய பயணத்தில் மனிதன், மாமனிதனாக அதாவது முழுமனிதனாக வளர்ந்து உருப் பெறுகிறான். மனித வாழ்க்கையின் வளர்ச்சி ஒரு பரிணாம வளர்ச்சி! இந்த வளர்ச்சி தனி மனிதனாக நின்று ஒருவன் சாதித்துக் கொள்ளும் வளர்ச்சியல்ல. ஒருவனுடைய வாழ்க்கை முழுதான—நிறைநல வளர்ச்சியை அடைய, பலர் உதவி தேவை. ஆன்மா உருவம் இல்லாதது! ஆனால் அறியும் உணர்வுடையது. ஆயினும் உருவம் இலா மையின் காரணமாக அறிவு இருந்தும் இல்லாதநிலை. எனவே, இயக்கம் இல்லை; வளர்ச்சி இல்லை. அறிவு நலம் சார்ந்த ஆன்மா, அறியாமையோடு பிணைப்புண்டு கிடக்கிறது. இயக்கமும் செயற்பாடும் இல்லையானால் அறிவுநலம் இல்லை; வளர்ச்சி இல்லை. உயிர் இருந்தும் இல்லா தது போலத்தான். கோடையில் நீர்வற்றிக் கிடக்கும் குளத்தினால் யாதுபயன்?. கோடைகாலத்தில் இலைகள், தளிர்கள் உதிர்ந்த நிலையில் மொட்டையாக நிற்கும் மரத்தினால் என்ன பயன்? இந்த நிலையில் திருவருளின் கண்ணோட்டம் உயிர்பால் வீழ் கிறது. ஒருதலைமகன் வழி, உயிரின் இயக் கம் தொடங்குகிறது; வாழ்வு தொடர்கிறது.

ஆம்! ஒவ்வொருவர் வாழ்விலும் கிடைத்த முதல்துணை தந்தை—அப்பன்தான். உயிர் அப்பனிடம் ஓராண்டு உற்றிருந்து ஜவ்வரிசி அளவு வடிவமுள்ள ஓர் உருப்பெற்று பயணத் தைத் தொடங்கி, தாயின் கருப்பையைச் சென்று சேர்கிறது. முதற்பயணத்தில் கிடைத்தது ஒரு உரு. அவ்வளவுதான்! ஆனால் இயக்கத்திற்குரிய புலன்கள், பொறி கள் கிடைக்கவில்லை. ஆம்! தாயின் கருப் பையே உயிருக்கு முழுவடிவம் கொடுக்கிறது. ஆகா! என்ன அற்புதம்! ஜவ்வரிசி பிரமாண முள்ளதாயிருந்த விந்துவை முதலாகக் கொண்டு என்தாய் தனது வயிற்றில் அற்புத மான மூளையும், இதயமும், அற்புதமும் அழகும் ஆற்றலும் வாய்ந்த ஒரு உருவமாக என்னை உருவாக்கித் தந்த கொடைக்கு ஈடு ஏது! ஆதலால் உயிர்சந்தித்த — பெற்ற இரண்டாவது துணை தாய்! உயிர் உடம் பெடுத்துப் பிறந்தாயிற்று! குழந்தை என்ற பெயருடன் சிலகாலம் — படுத்து, உட் கார்ந்து, தவழ்ந்து, தள்ளாடி நடந்து, விழுந்து, எழுந்து நடந்து பையனாயிற்று! அப்பனும் அம்மையும் எப்போதும் உடன் இருப்பதில்லை; இருக்கவும் முடிவதில்லை. இப்போது அவர்கள் அடுத்த உயிரின் பயணத்தை ஆரம்பித்து வைக்கும் பணியில் ஈடுபட்டுவிட்டனர். அப்படியில்லாது போனா லும் அவர்கள் மூத்த தலைமுறையினர். இளமைநலம் சார்ந்த பையனுடைய உணர்வு களை அவர்களால் புரிந்து கொள்ள முடிவ தில்லை. சிலர் புரிந்து கொள்ளவும் முயற்சி செய்வதில்லை. ''பையன் நேற்றுத் தோன்றினான், நாம் மூத்தோர்'' என்ற எண்ணம் அவர்களுக்கு! இஃது ஒருவகை நோய்! 'இதனைத் தலைமுறை இடைவெளி' என்கின்றனர்.

இந்தச் சூழ்நிலையில் தனக்குச் சில ஆண்டுக்கு முன் பயணத்தைத் தொடங்கிய அண்ணன் துணையாக அமைகின்றான். அவன் ஆவல்களை, ஆர்வங்களைப் புரிந்து கொள்கின்றான்; உடனுக்குடன் அடையத் துணையாய் இருந்து உதவி செய்கின்றான்; உணர்வில் ஒன்றாகின்றான்; உறவாகி வாழ்கின்றான்; வாழ்விக்கின்றான். ஆயினும் என்ன செய்ய? வாழ்க்கையென்பது நாம் பெற்றதை, மற்றவர்களும் பெறத் துணை செய்வதுதானே! அதனால் ஒவ் வொருவருடைய வாழ்வும் பிறிதோர் உயிரின் பயணத்திற்குத் துணையாக அமைதல் இயற்கை; தவிர்க்கமுடியாத கடமை; அத் தகைய அமைவில் பிறிதோர் உயிர்ப் பயணத்திற்குத் துணை செய்யத்தக்க

உற்பத்திக் கருவிகளுடன் ஒருத்தி பிறந்தாள்; வளர்ந்தாள். குறிப்பிட்ட இளமைப் பருவம் மீதூரத் தொடங்கிய நிலையில் அண்ணனிடம் கொண்டுள்ள உறவு அமைவு பெறுவதில்லை. பாசம், அன்பாக மாறி வளர்ந்தது. இப்போது காதல்பருவம். காதல் பருவத்தில் அண்ணனிடமிருந்த — ஐயனிடமிருந்த உறவு நெகிழும் நிலையில் ஒருத்தியைத் தேடுகிறது.

ஒருத்தி என்ன கடைவீதியில் கிடைப்பாளா? அப்படிக் கிடைத்தாலும் வாழ்க்கைத் துணை நலமாக அமைவாளா? ஆதலால் இவன் பிறந்து வளரத் தொடங்கிய காலத்திலேயே இவனுக்காக ஒரு பெண்ணை ஈன்றெடுத்து வளர்த்து மனைவியாகத் தர முன்வரும் மாமனார், மாமியார் சாதாரணமான பணியையா செய்கிறார்கள்! இல்லை, அவர்கள் செய்வது மிகப்பெரிய பணி — உதவி! அதனாலேயே ''அன்புடைய மாமன், மாமி'' என அழைக்கப்படுகிறார்கள்!

ஆம்! எதிர்வரும் தேவையை நெஞ்சில் நினைந்துஉதவி செய்வது ஒருபெரிய அறம். மாப்பிள்ளைகளுக்கு வாய்க்கும் அன்புடைய மாமன், மாமியைப்போல் பெண்கள் அனைவருக்கும் வாய்த்துவிட்டால் இந்த உலகம் ஒரு சொர்க்கம்தான்! ஐயனை — அண்ணனைத் தொடர்ந்து அன்புடைய மாமன், மாமி!

அடுத்து, காதல் மனைவி. அனைத்திலும் தனக்கு ஒப்புடைய தலைவி! இவன் வாழ்க்கைக்கு ஒப்புதல் அளித்து உடன்பயணம் செய்யும் தலைவி— மனைவி! வாழ்க்கைத் துணைநலம்! வேராக நின்று தாங்கி வளமூட்டி வாழ்வளிப்பவள்!

இதுவரை வந்தமைந்த துணைகள் உயிருள்ளன! இப்போது துணையாய் வந்தமைவது கருவியாக அமையும் பொருள்! பொருள், வாழ்க்கையின் தேவை! பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை! அந்தப் பொருளும் உழைப்பால் வந்த பொருளாதலால் ஒண்பொருளாயிற்று! போதுமா! வாழ்க்கை இயக்கமாகி வளர்ந்து வருகிறது. ஆனாலும் முழுமையான நிறைநலம் சார்ந்த நிலை இன்னமும் வரவில்லை. ஆனால் இந்த நிலையையே முழுமைநிலை என்று பலர் எண்ணுகின்றனர். இது தவறு.

அடுத்த நிலை, குலம் சார்ந்து வாழ்தல்! அதாவது, குலமரபு பேணிக்காத்து வளர்த்தல். இங்குக் குலம் என்று கருதப்பெறுவது சாதியன்று. குலம் என்பது ஒழுக்கம்; பண்பு சார்ந்த மரபு! அதாவது வழிவழியாக ஒரு சிறந்த நற்பண்பு மீதூர்ந்து வருதல்.

''குலம் சுரக்கும் ஒழுக்கம்
குடிகட்கெல்லாம்''

என்றான் கம்பன்.

''இலன் என்னும் எவ்வம் உரையாமை ஈதல்
குலனுடையான் கண்ணே உள''

என்றது திருக்குறள். ஆதலால் தான்பிறந்த குலம் சார்ந்த சிலரொடு உறவுநலம் காத்தல் பண்புநலம் சார்ந்த வாழ்வியலுக்குத் தேவை. குலம் பொருந்தி வாழ்தலுக்கு அடுத்த நிலை, சுற்றம் சூழ வாழ்தல்! சுற்றம் சூழ வாழ்தல் அன்பினை வளர்க்கும்; தன்னம்பிக்கையைத் தரும்; பாதுகாப்பு உணர்வு மேலிடும்; கோட்டை, கொத்தளங்கள் தரும் பாதுகாப்பிலும் சுற்றம்தரும் பாதுகாப்பு மிகுதி. சிறந்த சுற்றம் வாழ்விற்குத் தூண்டுகோல்; நெம்புகோல்; சுற்றம் தாங்குகோலாக வளர்ந்து விளங்கும். குற்றம் குறைகளை மறந்து சுற்றம் பேணுதல், வாழ்க்கை வளரத் தேவை. வாழ்க்கை வளர்ச்சியின் முழுநிலை ஊரில் நிறைவு பெறுகிறது.

ஆம்! ஊரோடு சார்ந்து ஊரவர் கேண்மை பேணி வாழ்தல் வேண்டும். ஊரை வளர்த்து வாழ்தல் வேண்டும். ஊர் எது? ஆன்றவிந்து அடங்கிய கொள்கைச் சான்றோர் பலர் வாழ்வது ஊர். ஊர் பழித்தாலும் அதனை அணியெனக் கொண்டொழுகி ஊராகி வாழ்தலே வாழ்வின் நிறைவு. இதுவரையில் நலஞ்சார்ந்த வாழ்நிலை. நிறைநலம் என்பது வேறு. அஃது உலகந்தழீஇயது. இந்தப் படிமுறை வளர்ச்சியில் ஓர் ஆன்மா வளர்தலை — வாழ்வியலாக வளர்தலை— இயக்கமாகி வளர்தலை அப்பரடிகள் அழகுற விளக்குகின்றார்.

வாழ்வியல் பயணம் முடியவில்லை; தொடர்கிறது. தொடர்கிறது என்று கூறுவது தவறு. உயிர், தன்னை உற்று நோக்குகிறது. இல்லை உற்று நோக்க ஆன்மாவை ஆற்றுப் படுத்துகிறது சிவம் — கடவுள்! ஆம்! உற்று நோக்கியதன் பயன்? ஆன்மா மெள்ளத் தற்சார்புநிலை அடைந்து வந்துள்ளது. ஆற்றலில் தற்சார்பு வரவேற்கத் தக்கது. ஆனால் வாழ்நிலையில் தன்னலம் வளர்ந்துவிடக் கூடாது. ஐயனிடமிருந்து அன்பு தடம் புரள்கிறது. வீட்டின் இடையில்

ஷவர் தலைகாட்டுகிறது. காதல் மனைவி வேலைக்காரியாகிறாள்! அந்நியமாகிறாள்! அவள், தனக்குரிய கடமைகளைச் செய்யும் இயந்திரம்! அவளுக்கு இவன் செய்ய வேண் டிய கடமைகள் இல்லை என்றநிலை! இந்த நிலை, முறை திறம்பிய வாழ்நிலை! துய்க் கும் நெறியில் துறவு சார்ந்தாலே துய்த்தல் சிறப்பாக அமையும், துறவும், துய்த்தலும் இரட்டைநாடிகள். ''பிடியூட்டிப் பின்னுண் ணும் களிறு'' என்பதறிக. இது துறவும், துய்த்தலும் ஒருங்கிணைந்த வாழ்வுநிலை. அப்போதுதான் அன்பு வளரும்; அறம் வளரும்; துறவு வாழ்க்கை தனி வாழ்க்கை யல்ல. துறவும் துய்த்தலும் கலந்ததே நிறை நலம் சான்ற வாழ்க்கை! அப்போதுதான் உழைப்பு உணவாகிறது. கூடி உணவு உண்ணும் சுற்றம் சார்ந்த வாழ்வு மலர் கிறது. உழைப்பின் பயன் உலகை உண் பிக்கப் பயன்படுகிறது. இதுவே அறம் சார்ந்த எருதுவின் வாழ்க்கை முறை! எருது மீது எம்பெருமான்! உழைத்துப் பலபொருள் படைத்து அளித்து வாழ்வித்து வாழ்தல் எருதுவின் வாழ்க்கை! இத்தகையோர் இதயத்தில்தான் எம்பெருமான் எழுந்தருள் கின்றான்! அந்த இதயத்தை உறைவிட மாகக் கொள்கின்றான்! ஊர்தியாகக் கொள் கின்றான்! ஊர்தியாகக் கொள்கின்றான்! வாழ்க்கை நிறைநலம் எய்திய நிலை இதுவே!

'அப்பன் நீ அம்மை நீ ஐய னும் நீ
அன்புடைய மாமனும் மாமி யும்நீ
ஒப்புடைய மாதரும் ஒண்பொரு ளும்நீ
ஒருகுலமும் சுற்றமும் ஒரு ரும்நீ
துய்ப்பனவும் உய்ப்பனவும் தோற்று வாய்நீ
துணையாயென் நெஞ்சந் துறப்பிப் பாய்நீ
இப்பொன்நீ இம்மணிநீ இம்முத்துநீ
இறைவன்நீ ஏறூர்ந்த செல்வன் நீயே!'

—திருநாவுக்கரசு சுவாமிகள்

## மொழிபெயர்ப்பு—ஒரு கலை

மறைமலையடிகளாரைப் போலவோ, பண்டிதமணியவர்களைப் போலவோ மொழிபெயர்ப்புத்துறையில் ஈடுபடவல்லார் இன்று எவரும் இலர். ஆர்வமின் மையே இதற்கு மூலகாரணம்; ஆற்றலின்மையன்று. இனியேனும் நம்மில் சிலரின் கவனமாவது இத்திசை நோக்கித் திரும்புமாக! சேக்ஸ்பியரிலோ, பைபிளிலோ, திருக்குறளிலோ, சிலம்பிலோ காணப்படும் மிகவுயர்ந்த பகுதி கள் உலகைக் கவரும் ஆற்றலுடையன. அவற்றை அனைவரும் படிக்கும் வாய்ப்பளிக்கவேண்டும். அவை மொழிபெயர்க்கப்பட்டால் அனைவர் உள்ளத் தையும் ஈர்க்கும் என்பதுறுதி. தேவையற்றவற்றை மொழிபெயர்த்தால் சுவை குன்றவே செய்யும்.

மொழிபெயர்ப்பு ஒன்றும் குற்றமுடைய, பழிப்பிற்குரிய துறையன்று மூல ஆசிரியனை விட மொழிபெயர்ப்பாளனை மட்டமாக மதிக்கின்ற நிலை மாற வேண்டும். மொழிபெயர்ப்பாளர்கள் பல இடங்களில் 'இரண்டாந்தரமாக' இருப்பதாகக் கருதுகின்றனர், ஆயினும் சில இடங்களில் மூல ஆசிரியர்களே அவர்களினும் மோசமாக இருப்பதை மறுக்க முடியாது. மூல நூலை மாற்ற முடியாது; அதற்கு மேலும் மேலும் திருந்திய வடிவம் தர முடியாது. ஆனால் மொழிபெயர்ப்பு நூலை மேலும் மேலும் திருத்திப் புதுப்பிக்கலாம். திருக் குறளுக்கு முன்னைய மொழிபெயர்ப்புக்களிலும் திருந்திய பெயர்ப்புக்களைப் படைக்க நமக்கு இன்னும் வாய்ப்பிருக்கிறதல்லவா? ஆனால் நாம் திருக்குற ளைத் திருத்தமுடியாது; திருத்தக் கூடாது.

'தமிழண்ணல்'
ஒப்பிலக்கிய அறிமுகம்

# இந்திய இலக்கியங்களின் கருத்து ஒருமைப்பாடு

டாக்டர் தா. ஏ. ஞானமூர்த்தி
பல்கலைக்கழகச் சிறப்புநிலைப் பேராசிரியர்
பூ.சா.கோ கலை அறிவியற் கல்லூரி
கோவை — 641014

நிலைபேறுடைய இலக்கியங்கள் அனைத்தும் உயரிய கருத்துக்களின் களஞ்சியங்கள் எனலாம். தலைசிறந்த இந்திய இலக்கியங்களில் நனிசிறந்த கருத்துக்கள் நிறைந்துள்ளன. இக் கருத்துக்கள் மக்கள் வாழ்வைப் பண்படுத்தும் பெற்றி வாய்ந்தவை. இவை பெரும்பாலும் ஒருமைப்பாடுடையன வாய்த் திகழ்கின்றன. மக்கள் நல்வாழ்வில், நாட்டங்கொண்ட சீரிய சிந்தனையாளர்களின் கருத்துக்கள் ஒன்றுபட்டிருத்தல் இயல்பேயாம். இவற்றுள் சிலவற்றை இனிக் காண்போம்.

**காதல்**

காதல் பேராற்றல் வாய்ந்தது. காதலைப் பற்றிப் பாடாத கவிஞன் இல்லை; எழுதாத இலக்கிய எழுத்தாளர் இல்லை. காதல் தொன்றுதொட்டு நிலவி வருவதால்தான் இவ்வுலகம் நிலைத்து நிற்கிறது. இக் காதல் இல்லையேல் இவ்வையகம் எப்போதோ அழிந்து மண்ணொடு மண்ணாய் மறைந்து போயிருக்கும். இக் காதலைப்பற்றிய உயர்ந்த கருத்துக்களை மிகப் பழங்காலத்திலிருந்தே நம் இந்திய இலக்கியங்கள் சிறப்பித்துப் பேசுகின்றன.

ஒருவனும் ஒருத்தியும் தற்செயலாய் எதிர்ப்பட்டுக் காதல்வயத்தராகின்றனர். அவர்கள் இருவரின் உள்ளங்களும் ஒன்றுபட்ட தன்மையைச் சங்ககாலக் குறுந்தொகைப் பாடல் ஒன்று கூறுகிறது:

''என் தாயும் உன்னுடைய தாயும் ஒருவரையொருவர் அறியாதவர். உன் தந்தையும் என் தந்தையும் ஒருவரையொருவர் அறிந்ததில்லை. இந்நிலையில் செம்மண் நிலத்தில் பெய்த மழைநீர் அம்மண்ணொடு கலந்து அதன் தன்மையை அடைதல்போல அன்புடைய நம் இரண்டு உள்ளங்களும் தாமாகவே ஒன்றுபட்டு விட்டன'' என்று தலைவன் வியந்து கூறுகிறான்.

> ''யாயும் ஞாயும் யாரா கியரோ
> எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்
> யானும் நீயும் எவ்வழி யறிதும்
> செம்புலப் பெயனீர் போல
> அன்புடை நெஞ்சம் தாங்கலந் தனவே''
> (குறுந் 40)

தூய்மையான காதல் இருவர் நெஞ்சங்களை ஒன்றுபடுத்தவல்லது என்ற கருத்தினை இப் பாடல் உணர்த்துகிறது.

இராமனும் சீதையும் தங்களுடைய திருமணத்திற்குப் பிறகு ஒருவரையொருவர் காதலித்த தன்மையை வால்மீகி தம் வடமொழிக் காவியத்தில் சுவைபட உரைக்கிறார்.

''அவர்கள் இருவரும் ஒருவரை யொருவர் நன்கு உணர்ந்து கொண்டனர். அவர்கள் நா பேசவில்லை; உதடுகள் அசையவில்லை; கண்கள் கூட பார்வையைச் செலுத்தவில்லை எனலாம். அவர்கள் இதயங்கள் ஒன்றோடொன்று பேசின; அவை இரண்டும் ஒன்றுபட்டு இயைந்தன. அவர்களுக்குள் யார் யாரை மிகுதியாகக் காதலித்தனர்என்று கூறுதற்கில்லை'' இவ்வாறு வால்மீகி, இராமன், சீதை ஆகியோரின் காதலை விளக்குகிறார். இக் கருத்து ''அன்புடை நெஞ்சம் தாங்கலந்தனவே'' என்ற குறுந்தொகை அடியோடு ஒத்திருத்தலை உணரலாம்.

கம்பர் தமிழ் அகப்பொருள் இலக்கண மரபுப்படி இராமனும் சீதையும் தங்கள் திருமணத்

திற்கு முன்பு ஒருவரையொருவர் காதலித்த தாகத் தம் காப்பியத்தில் கூறுகிறார். இராமன் கோசிக முனிவரோடும் இலக்குவனோடும் மிதிலை நகரத்திற்குள் செல்லுங்கால் கன்னிமாடத்தின் மேல்மாடத்திலிருந்த சீதையைத் தற்செயலாகக் காண்கிறான்; சீதையும் இராமனைக் காண்கிறாள். இருவரும் காதல் வயத்தராகின்றனர். இதனைக் கம்பர், ''இருவரும் மாறிப்புக் கிதய மெய்தினார்'' என்பர். இங்குக் காதலால் இருவர் உள்ளங்களும் ஒன்றுபட்ட தன்மை குறிக்கப் படுகிறது.

துளசிதாசர் ''ராம சரித மானஸ்'' என்ற தம் இந்திக் காவியத்தில் இராமனும் சீதையும் தங்கள் திருமணத்திற்கு முன்பு மலர்வனத்தில் சந்தித்துக் காதல் கொண்டனர் என உரைக்கிறார். சீதை தன் தோழியரோடு மலர்வனத்திற்குச் சென்று அங்குள்ள கோயிலில் பார்வதியைத் தொழுது தனக்குத் தகுதிக்கேற்ற கணவன் வாய்க்க அருளுமாறு வேண்டுகிறாள். அப்போது அம் மலர்வனத்திற்கு இராமன் இலக்குவனோடு செல்கிறான். அங்கு இராமன் சீதையைக் கண்டு அவள்பால் தன் உள்ளத்தைப் பறிகொடுக்கிறான். ''சீதையின் முகத்தை அவன் இமைகொட்டாமல் பார்த்தான். சீதையின் எழிலைக் கண்ட இராமன் பூரித்துப் போனான். அவன் உள்ளத்துள்ளே ஆனந்தம் பொங்கியது. அதை வெளியிட்டுச் சொல்ல வார்த்தை வரவில்லை. சீதையின் கண்களும் இராமன் மீது பதிந்தன. அவள் கண்கள் இமைக்கவில்லை. கண்களின் வழியாகத் தனது இதயத்துக்குள் இராமனை வைத்துக்கொண்ட சீதை அவனை வெளியே போகவொட்டாது தடுக்கத் தன் இமைகளை மூடிக்கொண்டாள்''.

இவ்வாறு துளசிதாசரும் இருவர் உள்ளங்களை ஒன்றுபடுத்தும் காதலின் ஆற்றலைக் குறிப்பிடுகின்றார்.

## பிரிவு

காதலர் ஒருவரையொருவர் பிரிந்திருக்கும் நிலையில் அவர்களின் காதல் பெருக்கு நன்கு புலப்படும்.

தலைவன் பொருளீட்டும் பொருட்டுத் தலைவியைப் பிரிந்து செல்ல நினைப்பான். அதை உணர்ந்த தலைவி அவன் பிரிவைத் தாங்க இயலாது என்பதைத் தலைவனுக்கு உணர்த்துவாள். தலைவன் அவள் நிலையை உணர்ந்து பிரிந்து செல்வதைத் தவிர்ப்பான். இது தொல்காப்பியத்தில் 'செலவழுங்கல்' எனப்படும்.

தன்னைப் பிரிந்து செல்லக் கருதிய தலைவனை நோக்கி தலைவி, ''நீங்கள் கொடிய காட்டைக் கடந்து வேற்று நாட்டிற்குச் சென்று தங்கள் செயலில் ஈடுபட்டிருக்குங்கால் இங்கிருந்து அங்கு வருபவர்களிடம் என்னைப் பற்றிக் கேட்காதீர்கள், ஏனென்றால் அவர்கள் நான் இறந்துபட்ட செய்தியைத் தான் கூறுவார்கள். அதைக் கேட்டதும் நீங்கள் மேற்கொண்ட செயல் முடிவுறாமல் போய் மிகவும் துன்பப்படுவீர்கள்'' என்கிறாள். இவ்வாறு கலித்தொகை பாடுகிறது.

> ''அன்பற மாறியாம் உள்ளத் துறந்தவள்
> பண்பும் அறிதிரோ என்று வருவாரை
> என்திறம் யாதும் வினவல்; வினவின்
> பகலின் விளங்குநின் செம்மல் சிதையத்
> தவலருஞ் செய்வினை முற்றாமல் ஆண்டோர்
> அவலம் படுதலும் உண்டு''
>
> (கலி.19)

திருக்குறளும் இதே கருத்தை,

> ''செல்லாமை யுண்டேல் எனக்குரை மற்றுநின்
> வல்வரவு வாழ்வார்க் குரை''

என்று தலைவி கூறுவதாகக் குறிப்பிடுகிறது. இதே கருத்து வெவ்வேறு இந்திய மொழியில் அமைந்த காதல் கவிதைகளில் காணப்படுகிறது.

பிராகிருத மொழியில் கி. பி. 50-இல் தோன்றிய கதாசப்தசதி (Gata Saptasati) என்ற கவிதை இலக்கியத்தில் காதலி தன் தோழியரை நோக்கி, ''இன்று நான் அழுவதைத் தடுக்காதீர்கள். ஏனென்றால் நாளை என் காதலன் என்னை விட்டுப் பிரிந்து சென்ற பிறகு நான் உயிரோடு இருந்தால் அழவே மாட்டேன்'' என்கிறாள். அதாவது காதலன் பிரிந்தால் தன் உயிர் போய்விடும் என்பதாகும்.

வால்மீகி இராமாயணத்தில் சீதை தன்னொடு கானகத்திற்கு வரின் பெரிதும் அவள் துன்பப்பட நேரும்; ஆகையால் வரவேண்டாம் என இராமன் கூறுகிறான். அதற்கு அவள், ''நீங்கள் என்னை விடுத்துப் போக விரும்பின். போகலாம்; ஆனால் பிறகு நீங்கள் என்னைப் பார்ப்பீர்கள் என்று நினைக்காதீர்கள்'' என்கிறாள்.

18-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த பிக்கரிதாஸ்

என்ற இந்திக் கவிஞர் ஒரு பாடலில், காதலி தன்னைப் பிரியக்கருதிய காதலனை நோக்கி, ''ஐயனே! நீங்கள் பிரிந்து செல்ல விடை தருகிறேன். சிவபெருமான் உங்கள் முயற்சி வெற்றிபெறச் செய்வாராக! ஆனால் தாங்கள் செல்லுமுன் எனக்கு ஓர் உறுதிமொழியைத் தரவேண்டும். என் இறுதிச் சடங்கையொட்டி என்னைக் கங்கையில் குளிப்பாட்டியவுடனே நீங்கள் புறப்படுவதாக உறுதி கூறுங்கள்'' என உரைப்பதாகப் பாடுகிறார். காதலன் நீங்கின் காதலி உயிரும் நீங்கும் என்ற கருத்தையே இப் பாடலும் உணர்த்துகிறது.

**மனைமாட்சி**

ஸ்ரீ நாதன் தெலுங்கு மொழியில் எழுதிய 'காசிக்காண்டம்' என்ற காவியத்தில் கற்பின் மேன்மையைச் சுட்டுகிறார். தேவகுருவான வியாழபகவான் காசியிலுள்ள பன்ன சாலைக்குச் செல்கிறார். அங்கு அகத்தியரையும் அவர் மனைவி உலோபாமுத்திரையையும் வணங்கிக் கற்பின் பெருமையை எடுத்துரைக்கிறார்; அப்போது கற்பென்னும் திண்மை இல்லாத பெண்களால் நேரும் தீமைகளைக் குறிப்பிடுகிறார்.

''ஆசை மிகுதியால் கட்டுப்பாடின்றிச் சான்றோரால் குற்றம் என்று கருதப்பட்ட வழியில் நடக்கும் பெண் தன் கணவனையும் அவன் குலத்தினரையும் நரகத்தில் தள்ளிவிட்டுத் தானும் அதில் வீழ்ந்து அழிவாள்'' என்று கூறுகிறார். இதனால் கற்புடைய மனைவியால் கணவன் பெருஞ்சிறப்புப் பெறுவான் என்பது குறிப்பாக உணர்த்தப் பெறுகிறது.

பண்புடைய மனைவியே எல்லா அறச்செயல்களுக்கும் காரணமாகிறாள் என்று காளிதாசர் தம் வடமொழிக் காவியமாகிய 'குமாரசம்பவத்தில்' 6-ஆவது காண்டம் 3-ஆம் சுலோகத்தில் குறிப்பிடுகிறார். அதே சுலோகத்தில் அவர், சிவபெருமான் அருந்ததியைக் கண்டபோது தாம் அவளைப்போன்று தூய்மையும் மாட்சிமையும் வாய்ந்த ஒருமனைவியைத் திருமணம் செய்துகொள்ள விரும்பினார் என்கிறார். தூய்மையும் புனிதமும் நிறைந்த அன்புடைய மனைவியினாலேயே வாழ்க்கையின் அறச்செயல்கள் அனைத்தும் நிறைவேறுதலால் சிவபெருமான் அவ்வாறு விரும்பினார் என்றும் உரைக்கிறார்.

கோவலன் சிலம்பை விற்க ஆயர்சேரியிலிருந்து மதுரைக்குப் புறப்படுமுன்பு தான் கண்ணகிக்குச் செய்த துன்பங்களை எல்லாம் அவளிடம் சொல்லிப் பெரிதும் வருந்துகிறான். அப்போது கண்ணகி அவன் தன்னைப் பிரிந்திருந்ததால் தன்னால் அறச்செயல்கள் பலசெய்ய இயலாமற் போனதைப் பற்றி மனம் நொந்து கூறுகிறாள்.

''அறவோர்க் களித்தலும்
அந்தணர் ஓம்பலும்
துறவோர்க் கெதிர்தலும்
தொல்லோர் சிறப்பின்
விருந்தெதிர் கோடலும்
இழந்த என்னை''

என்கிறாள். இச் சிலப்பதிகார அடிகளிலிருந்து அறத்தை மேற்கொண்ட சான்றோர்க்கு அளித்தல், எல்லா உயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகும் அந்தணர்களைக் காத்தல், பற்றற்ற துறவிகளுக்கு உதவுதல், விருந்தோம்புதல் ஆகியன மனைவியால் நிறைவேறும் சீரிய அறச்செயல்கள் என்பது தெளிவாகிறது.

இக்கருத்துக்கள் அனைத்தும் ''இல்லதென் இல்லவள் மாண்பானால்'', ''மங்கலமென்ப மனைமாட்சி'' என்ற திருக்குறள் அடிகளின் கருத்துக்களோடு ஒத்துள்ளமையை உணரலாம்.

**கல்வி**

கல்வியின் சிறப்பு பற்றிய கருத்துக்கள் இந்திய இலக்கியங்களில் ஒருமைப்பாடுடையனவாய்த் திகழ்கின்றன.

'வாழ்வதற்கோ சமுதாய வாழ்க்கைக்கோ முன் ஏற்பாடுகளைச் செய்துகொள்வது மட்டும் கல்வியின் உண்மை நோக்கமன்று. வளமையும் முழுமையும் தூய்மையும் வாய்ந்த வாழ்க்கையைப் பெற உதவுவதே கல்வியின் நோக்கம். இத்தகைய கல்வியே மனிதனைப் பொய்மையிலிருந்து உண்மையையும் இருளிலிருந்து ஒளியையும் இறப்பிலிருந்து இறவாப் புகழுடம்பையும் எய்தச் செய்கிறது!' இவ்வாறு காளிதாசர் 'குமாரசம்பவ'த்தில் கல்வியின் மேன்மையை ஓதுகிறார். அறிவொளியைத் தருவதும், நிலைத்த புகழை நிலைநாட்டுவதும், மெய்மையை உணரச் செய்வதும் கல்வியே என்பது இதனின்றும் புலனாகிறது.

''சாஸ்திரம் எல்லாம் கற்றபின்தான் ஒருவன் பயன்பெற்றவனாகிறான். அவன் தேவதை போல மனிதர்களுள் மேன்மேலும் பிரகாசிக்கிறான். புத்தியிலுண்டாகும் அந்த சாஸ்திர ஞானமானது காமம், குரோதம், பலம், கர்வம், விபரீத ஞானம் இவற்றை மேகங்களைக்

காற்று ஒதுக்குவதுபோல விரைவாக ஒதுக்கி விடுகிறது' எனக் கல்வியின் சிறப்பினை வியாசர் தம் மகாபாரதம்—அநுசாசன பர்வம் 227–ஆவது அத்தியாயத்தில் விளக்குகிறார்.

சீவகன் தக்கநாட்டை விடுத்து மத்திய தேயத்திற்குச் செல்லுங்கால் வழியில் ஒரு காட்டின் கண் தங்கி இருக்கிறான். அப்போது பல கலைகளையும் கற்றுணர்ந்த பவதத்தன் தன் காதலியைக் காணாமல் மிக்க வருத்தத்துடன் சீவகனை அடைகிறான். சீவகன் அவனுடைய வருத்தத்திற்குரிய காரணத்தை வினவுங்கால் கல்வியின் சிறப்பைக் குறிப்பிடுகிறான்.

''தன் துன்பக் காலத்திற்கென வைத்திருக்கும் பொருளைக் கொடுத்தேனும் ஒருவன் கற்றல் வேண்டும். கற்றபின் ஞானக் கண்ணும் உண்டாகும்; ஞானக்கண் உண்மைப் பொருள்களை உணரச் செய்யும்; துன்பத்திற்கு உதவியுமாகும். கல்வியைத் தவிர மற்றவை பொருள்கள் அல்ல. கல்வியினால் மீண்டும் பொருள்கள் உண்டாகும்; புகழும் ஏற்படும். இத்தகைய கல்வியறிவு நிரம்பிய நீர் வருந்துதற்கு என்ன காரணம்?'' என்று பவதத்தனைக் கேட்கிறான்.

''கைப்பொருள் கொடுத்தும் கற்றல்
கற்றபின் கண்ணுமாகும்
மெய்ப்பொருள் விளைக்கும் நெஞ்சின்
மெலிவிற்கோர் துணையுமாகும்
பொய்ப் பொருள் பிறகள் பொன்றாப்
புகழுமாந் துணைவியாக்கும்
இப்பொருள் எய்தி நின்றீர் இரங்குவ
தென்னை என்றான்''

(சிந். 1595)

என்பது சிந்தாமணிப் பாடல்.

''நுட்பமாய்ச் சிறந்த நூல்களை ஆராயும் அறிவில்லாதவனுடைய அழகும் தோற்றப் பொலிவும் மண்ணினால் சிறப்பாகப்புனையப் பட்ட பதுமைக்கு ஒப்பாகும்'' என்ற இக் கருத்தினை,

''நுண்மாண் நுழைபுலம் இல்லான்
எழில்நலம்
மண்மாண் புனைபாவை யற்று''

என்ற குறளில் திருவள்ளுவர் உணர்த்துகிறார். நாலடியாரும் ''கல்வியழகே அழகு' என வற்புறுத்திக் கூறுகிறது.

புரந்தரதாசரின் கன்னட கீர்த்தனைகளில் ஒன்று'' வெறும் உடலழகால் வரும் பயன் யாது? கல்வியறிவு பெறாதவரையில் உடலழகு என்ன பயனைத் தரும்'' (பு. தா. கீ. 320) எனப் பாடுகிறது.

இச் சான்றுகளிலிருந்து கல்வியானது புலமை ஒளியாகிய அழகையும், மெய்யுணர்வையும், மனத்தூய்மையையும், துன்பத்தில் உதவியையும், புகழையும் தருகின்றது என்ற கருத்து ஒன்றுபட்டிருத்தல் புலனாகிறது.

**ஈகை**

இல்லாதவர்களுக்குப் பொருளைக் கொடுத்து உதவுவது ஈகையாகும். இதனைக் 'கொடை' என்றும், 'தானம்' என்றும், 'வள்ளண்மை' என்றும் கூறுவர். இது தலையாய அறமாக இந்திய இலக்கியங்களில் போற்றப்படுகிறது, ''ஈதலாகிய அறம் ஒருவனுக்கு நிலைத்த புகழைத் தரும். இப் புகழைத் தவிர மக்களுயிர்க்குச் சிறந்த இம்மைப்பயன் வேறொன்றும் இல்லை'' எனத் திருவள்ளுவர் உணர்த்துகிறார்.

''ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்ல
தூதிய மில்லை உயிர்க்கு''

என்பது குறள்.

தயரதன் கைகேயிக்குக் கொடுத்த வரத்தின் படி இராமன் தனக்குரிய செல்வத்தை எல்லாம் துறந்து கானகத்திற்குப் புறப்படுகிறான். அச் சமயத்தில் ஓர் அந்தணன் இராமனிடம் தானம் பெற வருகிறான். நாட்டையே துறந்து செல்லும் இராமன் தன்னிடம் பொருளில்லை என்று அந்தணனுக்குக் கூறியிருக்கலாம். சான்றாண்மை மிக்க நல்லோர்கள் தம்முடைய துன்பக் காலத்திலும் உதவிவேண்டி வருவோர்க்கு இல்லை என்று கூறமாட்டார்கள். எனவே இராமன் அப்போது தனக்கென எஞ்சியிருந்த சில பசுக்களை அந்தணனுக்குத் தானமாக வழங்குகிறான். அந்தணன் மனம் நிறைவு பெறவில்லை. இராமனிடமிருந்து மேலும் பெரும் பொருளைப் பெற அவன் உள்ளம் ஆசை கொள்கிறது. அதை இராமன் உணர்கிறான். தனக்கு இயலாத அந்நிலையிலும் இராமன் 'இல்லை' என்ற சொல்லைக் கூறவில்லை. அளவு மீறிய அந்தணன் ஆசையைக் கண்டு தனக்குள் சிரித்துக் கொள்கிறான். இராமனின் இந்தக் கொடைப் பண்பை இலங்கையில் சிறையிருந்த சீதை நினைவுகூர்ந்து அழுவதாகக் கம்பர் பாடுகிறார்.

''பரித்த செல்வம் ஒழியப் பாடருநாள்
அருத்தி வேதியற்கு ஆன்குலம்
ஈந்தவன்

கருத்தின் ''ஆசைக் கரையின்மை
கண்டு இறந்
சிரித்த செய்கை நினைந்தழும்
செய்கையாள்'

ஈகையாகிய அறத்தினை இப் பாடல் நயம் பட அறிவுறுத்துவதை உணரலாம்.

''இல்லாதவருக்கு வரையாது கொடுத்துதவுவதாகிய ஈகைப்பண்பை நமக்குள் வளர்த்துக் கொள்ள வேண்டும். மேகங்கள் தமக்குள் ஈர்த்துச் சேகரிக்கும் நீரினை மழையாகப் பெய்து இம் மாநிலத்தை வாழ்விக்கின்றன. அதுபோலப் பொருளைச் சேர்க்கும் செல்வர்கள் இல்லாதவருக்குக் கொடுத்து அவர்களின் வாழ்க்கையை வளமுறச் செய்ய வேண்டும்'' என்று காளிதாசர் தம் காப்பியமாகிய 'இரகுவம்ச'த்தில் நான்காவது காண்டம் 86—ஆவது சுலோகத்தில் ஈகை அறத்தை வற்புறுத்துகிறார்.

''தானம்தான் எல்லாப் புண்ணியங்களிலும் மேலான புண்ணியம்; வேதத்தில் சொன்ன எந்த உயர்ந்த தர்மங்களை ரிஷிகள் சிலாகிக்கிறனரோ அவற்றுள் எல்லாம் தானம் மிகச் சிறந்தது என்பதில் எனக்கு ஐயமில்லை. தானம் செய்தவர்களால் உண்டாக்கப்பட்ட வழியில்தான் புத்திமான்கள் நடக்கின்றனர். அவர்கள் உயிரைக் கொடுப்பவர்கள் அன்றோ? அவர்களிடத்தில் தானே தர்மம் வேரூன்றி இருக்கிறது?.''

இவ்வாறு பீஷ்மர் தானத்தின் தனிச் சிறப்பை யுதிஷ்டிரருக்கு விளக்குவதாக வியாசபாரதம் கூறுகிறது.

துளசிதாசர் தம் இந்தி இராமாயணத்தில் பம்பை ஏரிக்கு ஈகைப் பண்புடைய வள்ளலை உவமையாகக் கூறுகிறார். கானகத்தில் சீதையைப் பிரிந்த இராமன் இலக்குவனொடு அவளைத் தேடிச் செல்லும்போது வழியில் பம்பை ஏரியை அடைகிறான். தூய்மையான நீர் நிறைந்து விளங்கும் அந்த ஏரியில் பல விலங்குகள் வந்து நீர் அருந்துகின்றன.

> 'தாராள மனதுள்ளவன் இல்லத்தில்
> வறியவர்கள் எப்பொழுதும் திரண்டிருப்பதைப் போல், விலங்குகள் அங்கு வந்து
> எப்பொழுதும் தண்ணீர் அருந்தின'

என்று துளசிதாசர் பாடுகிறார். இவ்வுவமை வாயிலாகப் பொருள் நிறைந்தவர் ஏழைகளுக்குக் கொடுத்து உதவ வேண்டும் என்ற கருத்தினைத் துளசிதாசர் வற்புறுத்துவது தெளிவாகிறது.

**சாதி வேற்றுமை**

16–ஆம் நூற்றாண்டில் கருநாடகத்தில் வைணவப் பெரியார்களின் கருத்துகள் கீர்த்தனை வடிவில் தோன்றின. இவற்றைத் 'தாச இலக்கியம்' எனக் கன்னட இலக்கிய வரலாறு குறிப்பிடுகிறது. அவ்வைணவப் பெரியார்களுள் ஒருவரான கனகதாசரின் ஒரு கீர்த்தனை குலவேற்றுமையைச் சாடுகிறது.

> ''குலம் குலம் குலமென்கிறார்கள்,
> குலம் யாது, மெய்மகிழ்வுள்ள மக்கட்கு?
> சேற்றினுள் தாமரை பிறக்க அதைக்
> கொண்டு பதுமநாபனுக்கு அர்ப்பிக்க
> வில்லையா? பசுவின் மாமிசத்துள் பிறந்த
> பாலைப் பிராமணர் பருகவில்லையா?
> மிருகத்தின் உடலிலே பிறந்தகத்தூரியை
> எடுத்துப் பூசுவர் யாவரும்; நாராயணன்
> எந்தக்குலம்? பார்வதி மணவாளன்
> எந்தக் குலத்தவன்? ஆன்மா எந்தக்
> குலம்? ...''

இது அந்தக் கீர்த்தனையின் மொழிபெயர்ப்பு. இவ்வடிகள் சாதிவேற்றுமையை மிக வன்மையாகக் கண்டிப்பதை உணரலாம்.

இரவீந்தரநாத் தாகூர் தாம் வங்காள மொழியில் எழுதிய 'நைவேத்தியம்' என்ற நூலில் ''சாதிப்பற்று என்னும் பெயர் பூண்டு தீயைப் போலக் காயும் மிகக் கொடிய அநியாயம் வெள்ளப் பெருக்கைப் போன்ற தன் ஆற்றலின் மிகுதியால் அறத்தை அடித்துத் தள்ளிவிடப் போகிறது'' என்கிறார். சாதி வேற்றுமை அறத்தையே வேரறுத்து விடும் என்பதைத் தாகூரின் இக்கூற்று நன்கு தெளிவுபடுத்துகிறது.

குமாரன் ஆசான் என்ற மலையாளக் கவிஞர் கவிதை நடையில் 'துரவஸ்த' என்ற கதையைப் படைத்துள்ளார். சாவித்திரி என்ற நம்பூதிரி சாதியைச் சேர்ந்த பெண், சாத்தன் என்ற புலையனைத் திருமணம் செய்து கொள்வதை இக் கதை கூறுகிறது.

சாவித்திரி ஒரு கலகத்தில் சிக்கி ஆதரவற்றுத் தற்காப்புக்காகச் சாத்தன் என்ற புலையன் குடிசைக்குள் புகுந்து அவனைத் தஞ்சம் அடைகிறாள். சாத்தன் மிகவும் இரக்கங் கொண்டு அவளுக்கு அன்போடு பணிவிடைகள் செய்கின்றான். அவள் மனத்தில் அவன் பால் நன்றியுணர்ச்சி கலந்த காதல் அரும்புகிறது. முடிவில் அவள் சாத்தனை மணந்து கொள்கிறாள். பழக்க வழக்கங்கள் எவ்வளவு வன்மையான சுவர் எழுப்பினாலும் அன்பு

கலந்த நல்லுணர்ச்சிகள் அச்சுவரைத் தகர்த்தெறிய வல்லவை என்பதை இக் காப்பியக் க்விதை உணர்த்துகிறது.

''மறையவர் தம்மைப்
படைத்த கை அல்லவோ
பறையனைத் தானும்
படைத்திடுங்கை...''

எனக் கேட்கிறார் கவிஞர். சாதிவேற்றுமை களைந்து மக்கள் ஒன்றுபட வேண்டும் என்பதையே இம் மலையாளக் கவிதைக் கதையும் உணர்த்துகிறது.

''சாதி சமயங்களைப் பாரோம்-உயர்
ஜன்மமித் தேசத்தி லெய்தினராயின்
வேதியராயினும் ஒன்றே—அன்றி
வேறுகுலத்தின ராயினு மொன்றே''

''சாதி இரண்டொழிய வேறில்லை என்றே
தமிழ்மகள் சொல்லிய சொல் அமிழ்த
மென்போம்''

என்ற சுப்பிரமணிய பாரதியாரின் இப்பாடலடிகள் சாதி ஒற்றுமையை வலியுறுத்துகின்றன.

ஊழ்

இந்திய இலக்கிய எண்ணங்களின் மையமாக அமைவது ஊழ் அல்லது விதியைப் பற்றியதாகும். இதை வடமொழியில் 'கர்மா' என்பர். ஊழாவது ஒருவன் முற்பிறவிகளில் செய்த நல்வினை தீவினைகளின் பயன் மறுபிறவியிலும் அவனைத் தொடர்ந்து சென்று எய்துகிறது என்பதாகும். இக்கருத்தை இந்திய இலக்கியங்கள் பலவற்றிலும் காணலாம்.

காளிதாசர் 'இரகுவம்சம்' முதற்காண்டம்20-ஆவது சுலோகத்தில் முற்பிறவிகளில் நாம் செய்த வினையின் பயன்களை இப்பிறவியின் நிகழ்ச்சிகளிலிருந்து உய்த்துணரலாம் என்கிறார். மேலும் அவர் 8—ஆவது காண்டம் 85-ஆவது சுலோகத்தில் மக்கள் இப்பிறவியில் செய்யும் செயல்களுக்கேற்ப அவர்களுக்கு மறுபிறவி அமைகிறது என்றும் கூறுகிறார்.

வால்மீகி இராமாயணம் உத்தரகாண்டத்தின் இறுதிப்பகுதியில் முனிவர் ஒருவர் இராமனிடம் வருகிறார். விதியே முனிவர் வடிவில் வந்ததாக வால்மீகி குறிப்பிடுகிறார். முனிவர் இராமனை நோக்கித் ''தன் கடமையில் கண்டிப்பாக இருக்கும் ஒரு காவலனை வாயிலில் நிறுத்துக. நாம் பேசும் பேச்சு வேறு எவரும் அறியக்கூடாது'' என்கிறார். வாயிலில் இருக்கும் காவலனுக்குப் பதிலாக இலக்குவனைக் காவல்புரியுமாறு இராமன் கட்டளையிடுகிறான். முனிவரும் தானும் பேசிக்கொண்டிருக்கும்போது இலக்குவன் உள்ளே வந்தாலும் அல்லது அவர்கள் உரையினை ஒரு சிறிது கேட்டாலும் அல்லது உள்ளே வர வேறு எவரை அனுமதித்தாலும் இலக்குவனுக்கு மரண தண்டனை விதிக்கப்படும் என்றும் இராமன் எச்சரிக்கை செய்கிறான். இலக்குவன் அதற்கிசைந்து காவல் புரிகிறான். அப்போது சீற்றமிக்க துர்வாசர் அங்கு வந்து, தாம் இராமனை உடனே பார்க்க வேண்டும் என்றும், தம்மை உள்ளே செல்ல அனுமதிக்காவிட்டால் இலக்குவனையும் அயோத்தியிலுள்ள அனைவரையும் அழித்துவிடுவதாக சீற்றமுடன் உரைக்கிறார். பாவம், இலக்குவன் என்ன செய்வான்! முனிவரை உள்ளே விட்டால் தனக்கு இறப்புத் தண்டனை கிடைக்கும்; விடாவிட்டால், இராமன், அயோத்தி மக்கள் அனைவரும் அழிவர். இராமனும் அயோத்தி மக்களும் அழிவதைவிட, தான் ஒருவன் இறப்பதே நல்லது என முடிவு செய்து துர்வாசரை உள்ளே செல்ல அனுமதிக்கிறான். வந்த துர்வாசரை இராமன் வரவேற்று அமைதிப்படுத்தி அவருக்கு உணவளித்து அனுப்புகிறான். பிறகு இராமன் இலக்குவன் செய்த குற்றத்திற்காக அவனுக்கு மரண தண்டனை விதிக்கிறான். அப்போது வசிட்டர் அங்கு வந்து, 'இது விதியின் செயல். இலக்குவன் மரண தண்டனைக்கு உரியவனே. இதுபோன்ற நிலையில் நாடு கடத்துவது இறப்புத் தண்டனைக்கு ஒப்பாகும் என்பதை நான் நன்கு அறிவேன்'' என்றுரைக்கிறார். அவர் சொற்படி இலக்குவன் நாடு கடத்தப்படுகிறான். இந் நிகழ்ச்சி மூலமாக வால்மீகி விதியின் வன்மையை நன்கு தெளிவுபடுத்தியுள்ளார்.

வியாசபாரதம் அநுசாசன பர்வத்தில் சிவபெருமான் உமாதேவிக்கு விதியின் வலிமையை விளக்குகிறார். 'ஓ தேவியே! மரண காலம் வந்தபோது எந்தப் பிராணிகளும் விதியைக் கடக்க முடியாது. பல புழுக்களும் விட்டில் பூச்சிகளும் ஆயுள் அழியும்போது தாமே ஓடிவந்து எரிகின்ற விளக்குகளில் விழுகின்றன. வனங்களில் இருக்கும் மான் கூட்டங்கள் பலவற்றுள் எதற்கு காலம் வந்ததோ அதுதான் வலையில் அகப்படுகிறது. எவை இறக்க வேண்டுமோ அவை தாம் இறக்கின்றன. பிழைத்திருக்கவேண்டிய காலத்தில் இறப்பது நடந்ததும் இல்லை;

நடக்கப் போவதும் இல்லை. வினைப்பயன் நன்றோ 'தீதோ அதைக்கடப்பது இயலாது.'

இச் சொற்களிலிருந்து வியாசரின் ஊழ்வினை பற்றிய எண்ணம் புலனாகிறது.

இராமன், சீதை, இலக்குவன் ஆகியோரைக் காட்டில் விடுத்துத் திரும்பிய சுமந்திரன், இராமன் பிரிவால் உயிர் துடிக்கும் தசரதனை நோக்கி, ''பிறப்பு இறப்பு, இன்ப துன்பம், இலாப நஷ்டம், நண்பர்களின் சேர்க்கை பிரிதல் இவை அனைத்தும் மாற்ற முடியாதவை; விதியாலும் காலத்தாலும் நிகழ்பவை'' என்று ஆறுதல் கூறுவதாகத் துளசிதாசர் தம் இராமாயணத்தில் குறிப்பிடுகிறார். விதியின் வன்மையில் துளசிதாசருக்குள்ள நம்பிக்கையை இச் சொற்கள் புலப்படுத்துகின்றன.

தயரதன் கைகேயிக்குக் கொடுத்த வரத்தின்படி இராமன் காட்டிற்குச் செல்ல வேண்டுமென்ற செய்தியை அறிந்ததும் இலக்குவன் கனல் தெறிக்கச் சீற்றமுறுகிறான். ஏழுலகமும் தன்னை எதிர்த்தாலும் அவற்றைத் தன் அம்புக்கு இரையாக்கி அரசை இராமனுக்கு நல்குவதாகச் சபதம் செய்கிறான். அப்போது இராமன் அவனை அணுகி அறநெறியை எடுத்துரைத்து விதியின் வலிமையை விளக்குகிறான்.

''நதியில் நீரில்லாது போவது நதியின் பிழை அன்று; அதுபோலவே நமக்கு நேர்ந்துள்ள இந்த நிலை அரசனுடைய குற்றமன்று; நம்மை ஈன்று வளர்த்த தாயாகிய கைகேயியின் அறிவின் பிழையும் அன்று; நம் விதியினால் அமைந்த பிழையேயாகும் இதுபற்றி நீ சீற்றங் கொண்டதேன்?'' என்று இராமன் இலக்குவனுக்கு அறிவுறுத்துவதாகக் கம்பர் பாடுகிறார். கம்பருக்கும் ஊழ்வினையில் உறுதியான நம்பிக்கை இருத்தலை இப்பொருளமைந்த அவருடைய பாடல் உணர்த்துகிறது.

''ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினும் தான் முந்துறும்''

என்று திருவள்ளுவர் அறத்துப்பாலில் முடிவாக ஊழின் வலிமையை அறிவுறுத்துகிறார்.

இதுவரை கூறியவற்றால், காதல், மனைமாட்சி, கல்வியின் சிறப்பு, ஈகை, சாதி வேற்றுமை, ஊழ் ஆகியவை பற்றிய எண்ணங்கள் இந்திய இலக்கியங்களில் ஒன்றுபட்டுள்ளமையைத் தெளியலாம். இங்ஙனமே ஏனைய பல பொருள்கள் பற்றிய கருத்துக்கள் உயரிய இந்திய இலக்கியங்கள் அனைத்திலும் ஒத்துள்ளன. இவ்விலக்கியங்கள் நம் இந்திய நாட்டின் ஒருமைப்பாட்டினை வளர்த்தற்கு உறுதுணையாய் விளங்குகின்றன.

---

### கட்டுப்பாடு

கட்டுப்பாடும் விடுதலையும் இரண்டு துருவங்கள் அல்ல. ஒரே நாணயத்தின் இரு புறங்கள்! மனிதனுக்கு விடுதலை உணர்வு வேண்டும். அந்த விடுதலையுணர்வோடேயே அவன் சில கட்டுப்பாடுகளை, வரையறைகளை வகுத்துக் கொள்ளவேண்டும். இயற்கை இத்தகைய கட்டுப்பாடுகளை மிக இயற்கையாக வகுத்துக் கொள்கிறது. அது தன் முறைகள், இயல்புகளை விட்டு மாற முடியாதவாறு கட்டுப்பட்டேயுள்ளன. தென்னை மரத்தைப் பார்த்து வாழை மரம் உயரவேண்டும் என்று ஆசைப்பட முடியாது. பருந்தினளவு உயரப்பறக்க முடியாதகோழி, தன்சிறகுகளைத் தகர்க்க முயல்வதில்லை. மனிதன் கட்டுப்பாடுகளைத் தகர்ப்பதிலே இன்பம் காண்கிறான். முறையற்ற கட்டுப்பாட்டையும் உடைத்து, அந்த வேகத்தில் முறையான வரம்பையும் தகர்த்து அவன் அல்லற்படுகின்றான். சிலந்திக்கு அதன் வலை கட்டுப்பாடு என்று கூறமுடியுமா? புலிக்கு அதன் குகை 'கட்டுப்பாடு' ஆகுமா? அவரவர் தத்தமது 'எல்லைகளை'யும் அறிய வேண்டாமா? மனிதன் விடுதலையுணர்வோடு சிந்தித்துத் தனக்குத் தானே ஓர் ஒழுங்கு முறையை, கட்டுப்பாட்டை, வரன்முறையை வகுத்துக் கொள்ள முடியவில்லையென்றால் அழிகின்றான்.

தமிழண்ணல்
'நச்சுவளையம்'

# சிக்கலான சங்கப்பாடல்கள் சில

டாக்டர் நா. ஜெயராமன்

தொல்காப்பியர் அகப்பாடல் பாடுவதற் குரிய நெறியினைத் தமது நூலுள் வகுத்துக் காட்டுகிறார். அந்நெறியினைப் பின் பற்றியே சங்கப் புலவர்கள் பெரும்பாலும் பாடல்களை இயற்றினர். அவ்வாறு அவர் கள் வகுத்துக் கொண்ட நெறியினை இன் றும் அறிந்து கொள்ள முடிவதால் அப் பாடல்களின் பொருளை நாம் தெளிவாகப் புரிந்து கொள்ள முடிகிறது.

பாடலும் பாடலுக்கு வகுக்கப்பட்டுள்ள துறைக் குறிப்பும் இணைந்தால்தான் பொரு ளினைப் புரிந்து கொள்ளலாம். எனவேதான் சங்கப்பாடலுள் அகப்பாடல் அனைத்தும் துறைக் குறிப்போடு அமைந்துள.

இவ்வாறு மரபுகளை மீறாமல் அடி யொற்றி எழுந்த பாடலின் பொருளை அதன் துறைக் குறிப்பின் துணை கொண்டு தெரிந்து கொள்வது எளிது.

ஆயின் சில பாடல்கள் சங்க அக இலக்கிய மரபாகிய பொது நெறியிலிருந்து விலகிப் புதிய முறையில் தோன்றியுள்ளன. அத் தகைய பாடல்களுக்குத் துறைக் குறிப்பு வகுப்போர் மரபுகளுக்குள் மிகவலிந்து முயன்று அடக்கித் துறை வகுக்கப் பெரு முயற்சி செய்துள்ளனர். அதற்குப் பொருள் விளக்கம் கூறவந்த உரைகாரர் மேலும் துன்பமடைந்து பல்வேறு தொடர்களை வலிதின் கொண்டு வந்து சேர்த்துப் பொருள் கூற முயன்றுள்ளனர்.

பாடலில் மரபுமீறல் அதிகமாக ஆகி அவர் களது முயற்சியும் அதிகமாக இருக்கக் காண்கிறோம்.

அத்தகைய சங்கப் பாடல்களுள் சிலவற்றை நாம் இக்கட்டுரையில் காண்போம்.

அஞ்சில் அஞ்சியார் பாடிய பாட லொன்று (நற். 90)

''ஆடல்மிகுந்த விழாவின் ஒலியையுடைய மூதூரின்கண் கஞ்சியிட்டுப் புலர்த்திய சிறிய பூத்தொழிலையுடைய கலிங்கமொடு வாடா மாலை துயல் வர ஓடிச் சென்று ஊசலில் ஏறிப் பூங்கண் ஆயத்தார் அதனை ஆட்ட வும் தான் ஆடாமல் அழுது மீளும் அஞ்சில் ஓதி, நல்கூர் பெண்டின் சில்வளைக் குறு மகள் (மீண்டும்) ஊசலுறு தொழிலில் ஆர வாரத்தினைச் செய்யாத நயனில் மாக்க ளொடு சேர்ந்து இவ்வேந்தனது அவை பயனின்று'' என்ற பொருள்பட அமைந் துள்ளது.

அவையில் பரத்தை இருந்தாள். ''அவளை ஆடச் செய்திருந்தால் அவள் ஊடாள்; தலைமகனும் அவளை நீங்கான். ஆண்டு அவள் ஊடினமையால் இறைமகன் இங்கு வந்தான் போலும்; இனி இங்கு வாரா தொழிவானாக'' என்று நீண்ட பொருளை வரவழைத்து ''தோழி தலைமகளுக்கு உரைப்பாளாய்ப் பாணனை நெருங்கி வாயில் மறுத்தது'' என்ற துறையோடு பாடலைப் பொருத்திக் காட்டுவர் உரை காரர்.

பாடலில் தூயதாகச் சலவை செய்யப்பட்ட ஆடையொடு மாலை துயல்வர ஓடி ஊஞ்ச லாடாது அழுது செல்கிறாள் பெண் ஒருத்தி. அவளை ஊசலாட்டாத நயனில்லாத மக்கள் கொண்ட பயனில்லாதது வேந்துடைஅவை என்ற கருத்தே அமைந்துள்ளது.

பாடலில் இடம் பெறும் பெண் தலைவியா, பரத்தையா விளங்கவில்லை. ஊஞ்சலாட் டாத செய்தி கூறப்படுகிறதேயொழியக்

காதல் தொடர்பான எச்செய்தியும் காணப்படவில்லை. வேந்தனுடைய அவை பயனில்லாது உளது எனப் பாடல் முடிகிறது. காதல் தலைவன் வேந்தன் என்று கொள்ள இடமில்லை. இப்பாடலைக் கூறுவோர் யார் என்ற தெளிவான செய்தி காணப்படவில்லை.

இத்தகைய சிக்கல் மிகுந்த பாடலுக்குப் ''பரத்தை ஊஞ்சலாடவில்லை. எனவே ஊடல் கொண்டாள். எனவே வேந்தனாகிய தலைவன் தலைவியிடம் வந்தான்'' என்று தோழி தலைவிக்குக் கூறிப் பாணனிடம் வாயில் மறுத்ததாகத் துறைக்குறிப்பும் உரை விளக்கமும் அமைந்துள்ளன. ஆயின் துறையும் உரையும் மிகவும் வலிந்து சொல்லப்பட்டுள்ளனவே அன்றி இயல்பாக அமையவில்லை.

பரணர் பாடிய பாடலொன்று (நற். 310) ''ஊரனுக்கு நாளை மகட்கொடை எதிர்ந்த மடல்கெழு பெண்டே! ஓராத் தாயரொடு ஒழிபுடன் சொல்லலை கொல்லோ நீயே உள்ளியாதும் இல்லதோர் பொய்யும் சொல்லே'' என்ற பொருளுடன் அமைந்துள்ளது. தலைவனுக்குப் பெண்ணைக் கொடுக்கும் பெண்ணை விளித்துப் பேசுவதாகப் பாடல் உளது. தலைவனோடு பரத்தையைச் சேர்ப்பிக்கும் விறலியை விளிப்பதாகத் துறை வகுப்போர் கொண்டு, ''வாயிலாகப்புக்க விறலியைத் தோழி சொல்லியது. விறலியை எதிர்ப்பட்டபரத்தை சொல்லியதூஉம் ஆம்'' என இரு துறை கூறுவர். ''ஊரனுக்கு நாளை மகட்கொடை நேர்ந்த விறலியே! நீ உனது குறுமொழிக்கு உடன்படாத பரத்தையின் தாய்மார்க்கு நாளை ஒருமகள் வேண்டும் என்று அவர் உடன்படுமாறு பொய்ம்மொழி சொல்லவில்லையோ'' என்று பொருள் விளக்கம் கூறி, ''அவ்வாறு சொல்லியிருப்பின் இங்கு வந்திராய்'' என்ற பொருளை இயைத்து விளக்கம் கூறுவர்.

தோழி கூற்று நிகழ்த்துவதாகவும் பரத்தை கூற்று நிகழ்த்துவதாகவும் விளக்கம் கூறப்படும். 'மகட்கொடை எதிர்ந்த மடல்கெழு பெண்டினை விளித்துப் பேசுவதும்' 'உடன்படாத தாயாரிடம் பொய்ம்மொழி கூறி உடன்பட வைக்கும்படி கூறுவதும் பிற பாடல்களில் காணப்படாத புதுமையாக உளது.

தலைவியைத் தலைவனுக்கு மணம் பேசி இணங்க வைத்த தோழியை நோக்கி ''ஊரற்கு மகட்கொடை எதிர்ந்த மடல்கெழு பெண்டே! உடன்படாத் தாயரைப் பொய்ம்மொழி கூறி உடன்பட வைக்கும்படி கூறுவதாகப் பொருள் விளக்கம் கூறினாலும் பொருத்தமாகவே அமையும்.

'எவ்வாறாயினும் விளிக்கப்படும் பெண் கூறப்படும் செய்தி ஆகியவை மற்ற சங்கப் பாடல்களிலிருந்து வேறுபட்டுப் பொருள் மயக்கம் தரும் விதத்தில் அமைந்துள்ளது.

பொதுவாகப் பொருள் மயக்கம் அமைந்த பாடல்களுக்கே ஒன்றுக்கு மேற்பட்ட துறைக் குறிப்புக்கள் அமைவதுண்டு. அதன்படி இப் பாடலுக்கும் இரண்டு துறைக் குறிப்புக்கள் அமைந்துள்ளன.

கயமனார் பாடல் இரண்டு பொருள் மயக்கத்துடன் அமைந்துள. ஒரு பாடலில்,

''சேயின் வரூஉம் மதவலி ..........
கானிடை அத்தம் முன்னாள் கழிந்த
என் மகள்
கண்பட நீர் சூழ்ந்தன்றே.
தந்தை தன்னூர்
இடவயின் தொழுவேன். பல்கூந்தலளே
அவளே.
தந்தைதன் ஊர் இதுவே. ஈன்றேன்
யானே.
பொலிக நும்பெயரே''

என்று கூற்று அமைந்துள்ளது. (நற். 198)

தலைவியின் உடன்போக்குச் செய்திபாடலுள் கூறப்படுவதால் உடன்போக்குத் தொடர்பான கூற்று எனலாம். ''ஈன்றேன் யானே'' என்பதால் நற்றாய் கூறியதாகக் கொள்ளலாம். ஆனால் ''தந்தை தன்னூர் இடவயின் தொழுவேன்'' என்பதால் கூறுபவள் செவிலியாகக் கொள்ள வேண்டியுள்ளது. (வீட்டிற்குப் புறத்தே வருபவள் செவிலியே. நற்றாய் வாராள்)

''சில்வளை பல்கூந்தலளே அவளே'' என்று சுட்டிக்காட்டுவது யாரை என்பது விளங்கவில்லை. ''என்மகள் போலக் கண்ணிற்படுவதால்'' எனும் பொருள் வருவிக்கப்பட்டு, 'என் கண் நீர்பெருக்குகின்றது'' என்று பொருள் கூறப்படுகிறது.

'தந்தையூரிது' என்றது அவள் (செவிலி) விருந்தோம்பித் தங்கிப்போகலாமென்ற குறிப்பையும் 'ஈன்றேன் யானே' என்றது 'எனது ஆற்றாமை கண்டால் சொல்லுவார்க்கு அறம் உண்டு' என்ற குறிப்பையும் கொண்டிருப்பதாகப் பொருள் வருவித்து

விளக்குவர் உரைகாரர். "பெரலிகநும் பெயரே" என்பது, 'நீர் இவளை எதிர்கண்டு பேசியவிடத்து நுவலுவீராயின் நும்க்கு அந்தத்தலாய புகழ்உண்டாகுக'' என்ற பொருளுடையதாக விளக்கப்படும்.

செவிலி உடன்போக்கின்போது கூறும் கூற்று என்பதற்கேற்பப் பாடல் அமையாமல் சற்று வித்தியாசமாக அமைந்திருப்பதால் பற்பல பொருள்களை வருவித்துப் பொரு ளியைபு சொல்லவேண்டியுளது.

கயமனாரின் மற்றொரு பாட்டிலும் பொருள் மயக்கம் காணப்படுகிறது. (நற்.324) ''அந்தோ தானே அளியள் தாயே என் ஆகுவள் கொல்? தன்மகள் நயந்தோள். செல்வத்தந்தை இடனுண்டவரைப்பின் அஞ்சில்ஓதி இவள்உறும் பஞ்சிமெல்லடி நடைபயிற்றும்மே'' என்பது பாடற்கருத்து. 'தந்தையின் வீட்டில் தலைவி நடை பயிற்றும் அவளது தாய் இரங்குதற்குரியள்' என்ப தாகக்கூற்று அமைந்துள்ளது.

இது தலைவியை அவளது வீட்டில் கண்ட பாங்கன் கூறியதாகக் கொண்டு ''அன்னை உணவூட்ட ஓடுகிறாள். பாவம் தாய்'' என்று கூறுவதாகப் பொருள் இயைபு கூறப் படும். இடைச்சுரத்துக் கண்டோர் கூறிய தாகக் கொண்டு, ''பந்து உருட்டுபவள் போல வெளியே ஓடுகிறாள் தலைவி. அவள் தாய் வருந்துங்கொல்லோ'', என்ற பொரு ளியைபு கூறப்படும். இவ்வாறு இருவேறு கூற்றிற்கேற்பப் பொருள் கொள்ளுமாறு பாடல் அமைந்துள்ளது.

முதல் பொருள் கூறும்போது தாயின் வருத் தத்திற்குச் சரியான விளக்கம் கூறஇயல வில்லை. இரண்டாவது பொருள் கூறும் போது தந்தையின் வீட்டுவருணனைக்கு விளக்கம் கூறஇயலவில்லை.

எனவே கயமனாரின் இவ்விரு பாடல்களும் உடன்போக்கின்போது தாய் கூறும் கூற்றுக் களுக்கேற்ப அமையாமல் வேறுபட்டு அமைந்து பொருள் மயக்கம் தருகின்றன. துறை வகுப்போரும் உரை கூறுவோரும் வலிந்து இரு பாடல்களுக்கும் துறை வகுத்துப் பொருள் விளக்கியுள்ளனர்.

உலோச்சனார் பாடல் ஒன்று (நற்.74) 'பெருங்கடற்சேர்ப்பனை' எதில் எனும் என்ப. ஊர் அவன் பெண்டு என அறிந் தன்று. பெயர்த்தலோ அரிதே' என்ற பொருள்மைப்போடுள்ளது. கடற்கரை இயற் கைக் காட்சிகள் இரண்டு இடையே வருண னையாக வந்துள. கடலில் வீசி மீன்பிடிக் கும் பெருவலையை எடுத்துக்கொண்டு பெரும்படகுகளை யானைபோலச் செலுத் தும் பரதவர்கள் நிலை ஒருவருணனை யாகவும் கீழ்க்காற்று வீசப்புன்னை நுண் தாது குருகின்மேல் உதிர்ந்து அதனை மறைக்கும் என்பது மற்றொரு வருணனை யாகவும் வந்துள.

பாடல் நெய்தல் திணைக்கேற்ப இரங்கல் உரிப்பொருளையோ களவுப் பொருளையோ கொண்டிருக்க வேண்டும். அங்ஙனம் கொண்டால் ''தலைவனை அயலான் என்று கூறுவார்கள். ஊர், தலைவியை அவன் பெண்டு என அறியும். அதை மாற்ற முடி யாது'' என்று களவுச் செய்தியைக் கொண்டதாகக் கூறலாம்.

ஆனால் பரத்தமை தொடர்புடையதாகக் கொண்டு பாணனிடம் தலைவி வாயில் மறுத்ததாகத் துறைக்குறிப்பு கூறுவர். தலைவி பாணனைப் பார்த்து,'' தலைவன் அயலான் ஆயினான். காதற்பரத்தையே அவன்மனைவி என்று ஊர் அறிந்து விட்டது இனிமாறாது. எனவே அதனை என்னிடம் மறைக்காதே'', என்று கூறிய தாகப் பொருள் விளக்கம் கூறுவர்.

இப்பாடல் இவ்வாறு பொருள் மயக்கம் கொண்டுள்ளமைக்குக் காரணம் அது மர பான முறையில் அமையாமல் புதியமுறை யில் அமைந்திருப்பதே ஆகும்.

''மள்ளர் குழீஇய விழவி னானும்
மகளிர் தழீஇய துணங்கை யானும்
யாண்டும் காணேன் மாண்தக் கோனை
யானுமோர் ஆடுகள மகளே என்கைக்
கோடீர் இலங்குவளை நெகிழ்த்த
பாடுகெழு குரிசிலும் ஓர்
ஆடுகள மகனே'' (குறு. 31)

என்பது ஒரு பாடல். ஆடுகள மகள் ஒருத்தி ஆடு களமகனைக் காதலிக்கிறாள். பிரிவால் வாடுகிறாள். அவள் தலைவனைப் பலவிடத் தும் தேடிக் காணாத நிலைபாட்டில் பேசப் படுகிறது. தலைவியின் பிரிவுத்துயர் பேசப் படலாமேயன்றித் தலைவி அவனைத் தேடி அலைவதற்கான சூழல் களவில் பாடப்படும் வாய்ப்போ மரபோ காணப்படவில்லை.

ஆனால் பாடலைப் பாடியவர் ஆதிமந்தி என்பதைக் காணும்போது அதனை அவரது வாழ்வியல் நிகழ்ச்சியோடு பொருத்திக்

காணத் தோன்றுகிறது. தன்காதலன் ஆட்டனத்தியைக் காணாது தேடி அலைந்த சூழலில் தனது உண்மை உணர்வையே இப்பாடலில் புலப்படுத்துகிறார் எனலாம். அவ்வாறு ஆதிமந்தியார் தமது சொந்த உணர்வைப் புலப்படுத்துவதாகக் கொண்டாலும் அதனை அகப்பாடல் என ஏற்க இயலாது. அவர் படைத்த கதை மாந்தர் கூற்றாகவே கொள்ள வேண்டுமாதலின் ''நொதுமலர் வரைவுழித்தோழிக்குத் தலைமகள் அறத்தொடு நின்றது'', என்று தலைவி கூற்றாகக் கொண்டு பொருள் விளக்கம் கூறப்படுகிறது. ஆயின் தலைவி விழாவிலும் கூத்திலும் தலைவனைத் தேடுவதற்குச் சரியான பொருள் விளக்கம் கூறஇயலவில்லை.

இதுபோலவே மற்றொரு பாடல்

''காலே பரிதப் பினவே கண்ணே
நோக்கி நோக்கி வாளிழந் தனவே
அகலிரு விசும்பின் மீனினும்
பலரே மன்ற இவ்வுலகத்துப் பிறரே''

(குறு.44)

என்று காதலரைத்தேடும் வெள்ளிவீதியாரின் உண்மையான உணர்ச்சி வெளிப்பாடாக அமைந்த போதிலும் ''இடைச்சுரத்துச் செவிலித்தாய் கையற்றுச் சொல்லியது'' என்று அகமாந்தர் கூற்றாகக் கொண்ட போது பொருள் பொருந்திவிடுகிறது. ஆயின் ஆதிமந்தியார் பாடலில் அப்பொருத்தம் சரியாக அமையவில்லை.

ஐங்குறு நூற்றுள் ஒரு பாடல்,

''புதுப்புனல் ஆடி அமர்த்த கண்ணள்
யார்மகள் இவளெனப் பற்றிய மகிழ்ந
யார்மகள் ஆயினும் அறியாய்
நீ யார் மகனை எம்பற்றி யோயே''

(ஐங். 79)

என்று அமைந்துள்ளது. புதுப்புனலாடிய போது தலைவன் 'யார் மகள் இவள்?' என ஒருத்தியைப் பற்றுகிறான். அருகில் உள்ள மற்றொருத்தி ''நீயார்'' என்று வினவுகிறாள். முன்பின் அறியாத சூழலில் தலைவியைப் பற்றித் தலைவன் வினவுவதாகவும் அதற்குத் தோழி பதில்வினா கேட்பதாகவும் கொள்வது பொருத்தமாக அமையும். ஆயின் தலைமகளைப் பற்றியதாகக் கூறுவது பண்புக்கு முரணாக அமைந்துவிடுகிறது. எனவே பரத்தையைத் தலைவன் பற்றியதாகக் கொள்ள வேண்டியுள்ளது. அங்ஙனம் கொண்டதற்கேற்பத் துறை விளக்கம் கூறும்போது ''தன்னொடு கூடாது தனித்துப் புனலாடுகின்றான் எனக் கேட்டுத் தலைநின்று ஒழுகப்படாநின்ற பரத்தை தானும் தனியே போய்ப் புனலாடினாளாக அவளை ஊடல் தீர்த்தற் பொருட்டாகத் தலைமகன் சென்று தான் அறியான் போல நகையாடிக் கூறிக் கைபற்றிய வழி அவள் தோழி சொல்லியது'' எனச் சுற்றி வளைத்துத்துறை கூறிச் சிரமப்படவேண்டியுள்ளது.

மற்றொரு பாடல் புதிய பொருளமைப்பினைக் கொண்டுள்ளது.

''கண்டெனம் அல்லமோ மகிழ்ந
நின்பெண்டே
பலராடு பெருந்துறை மலரொடு வந்த
தண்புனல் வண்டல் உய்த்தென
உண்கண் சிவப்ப அழுதுநின் றோளே''

(ஐங்.69)

இப்பாடலில் தலைவனை நோக்கி அவனது பெண்டின் நிலையைக் கூறுவதாகப் பொருள் அமைந்துள்ளது. புனல் வண்டலை அழிக்க அப்பெண் அழுதநிலைகண்டு அவள் பெதும்பைப் பருவத்தாளெனக் கருதப்படுகிறது. இவ்வாறு கூறுபவன் தலைவனது பாங்கன் என்றும் தலைவியைப் பார்த்தே அவ்வாறு கூறினான் என்றும் கொள்ளலாம். ஆயின் அவ்வாறு கொள்ளாமல், ''தலைமகன் பெதும்பைப் பருவத்தாள் ஒரு பரத்தையைக் களவில் மணந்து ஒழுகுகின்ற தனை அறிந்த தலைமகள், 'தனக்கு இல்லை' என்று அவள் மறைத்துழிச் சொல்லியது'' என்று துறைக் குறிப்பு கூறியுள்ளனர்.

இதே அமைப்புடைய பாடல்கள் எட்டு கிழவற்கு உரைத்த பத்து எனும் பகுதியில் (ஐங்.121-128) காணப்படுகின்றன-

''கண்டிகும் அல்லமோ கொண்க
நின்கேளே
முண்டகக் கோதை நனையத்
தெண்திரைப் பௌவம் பாய்ந்து
நின்றோளே'' (ஐங்.121)

என்பது பாடலமைப்பு இதற்குத் துறைக் குறிப்பு ''பரத்தை தலைமகற்குச் சொல்லியது. பெதும்பைப் பருவத்தாள் ஒரு பரத்தையொடு கூடிமறைந்து ஒழுகா நின்றான் என்பது அறிந்து தலைவி புலந்துழி' இத்தவறு என்மாட்டு இல்லை. நீ இப்புலவியை நீக்கவேண்டும் என்று தோழிக்குத் தலைமகன் கூறப்புலவியை நீக்கக் கருதிய தோழி அவள் இளமைகூறி நகையாடிச்

சொல்லியதூஉம் ஆம்'' என்று இரண்டு விதமாகக் கூறப்படுகிறது.

பாடலுக்குத் துறைக்குறிப்பு எழுதுவோர் தலைவியின் இளமையைப் பரத்தை ஏளனம் செய்வதாகவும் பரத்தையின் இளமையைத் தோழி ஏளனம் செய்வதாகவும் கூறுவர். கேட்பவன் தலைவனாகவே உள்ளான். 'கொண்க' என்ற விளியால் இதை உணரலாம். இதுபோன்ற அமைப்புடைய பாடல்களை வேறெங்கும் காண முடியவில்லை.

களவுக்காலத்தில் தலைவனால் விரும்பப்பட்ட தலைவி பேதைப் பருவத்தவள் என்று தோழிகூறுவதாகக் கொள்ளலாம். ஆயின் அப்பொழுதும் பொருள் தெளிவுபடவில்லை. (நெய்தல் பாடல்கள் ப.52)

அகநானூற்றில்உள்ள முல்லைப்பாடல்ஒன்று (அகம். 394) அகப்பொருளமைதியின்றி வல்லாண் முல்லைப்பாடல் போன்றுள்ளதாக விளக்கப்படும். (முல்லைப்பாடல்கள் ப.76) சங்கப் பாடல்கள் அமைவதற்கு எனப் பொதுவான நெறிகள் வகுக்கப்பட்டுள்ளன. அம்மரபுகளை அடியொற்றிப்பாடப்பட்ட பாடல்கள் மரபுப்படி துறையமைப்புக் கூறப்பட்டுப் பொருள் விளக்கமும் கூறப்படுகின்றன.

ஆயின் அம்மரபுகளிலிருந்து மாறியும் மீறியும் எழுந்துள்ள பாடல்களை மரபுக்குள் அடக்கிச் செறித்துத் துறை வகுக்கத் துறை வகுத்தோர் பெரிதும் வலிந்து முயன்றுள்ளனர். அங்ஙனம் வலிந்து கூறும்போது ஒன்றிற்கு மேற்பட்ட துறைக்குறிப்புக்கள் கூறப்பட்டுள்ளன.

அவ்வாறே பொருள் விளக்கம் கூறும்போது வலிந்து பொருளியைபு கூறி இல்லாத சொற்கள் பலவற்றை வரவழைத்துப் பொருள் விளக்கம்கூற உரையாசிரியர் முயன்றுள்ளனர்.

அப்பாடல்கள் உண்மையில் மரபுகளை மீறி எழுந்தவை என்று கொள்ளலாம். எனவே இலக்கிய மரபுகளை மீறிய இலக்கிய வளர்ச்சியைச் சங்க இலக்கியத்துள் காண முடிகிறது எனலாம்.

## விதையும் பயிரும்

தீமை எங்கே விழுந்து, கருவாகிறது என்பதைப் பலரும் அறிவதில்லை. அக்கரு எப்போது, யாரால், எங்கு விழுந்தது? எப்போது கால் கொண்டது? என்பனவெல்லாம் வெளிப்படப் புலனாவதில்லை. நம் தீமைகளில் பல மனத்தில் முளை கொள்கின்றன; மறைமுகமாக நாற்றுப் பதிகின்றன; உலகமறியாமல் பயிராகின்றன. அதனால்தான் ரிஷி மூலமும் நதி மூலமும் அறிய முடியாதது போலப் பல சமயங்களில் வினை மூலமும் அறிய முடிவதில்லை. அறிய முடியாததினாலேயே வினைக்கு மூலம் இல்லை என்று கூறிவிட முடியாது

கலப்படம் செய்பவர் செய்யும் தீங்கு எங்கே போய் முடிகிறது. பத்திரிகைத் துறையில், பாலுணர்வை ஊட்டி, பணம் சேர்க்கும் 'சிவப்பு விளக்கு' நோயாளியினால் ஏற்படும் தீங்குகள், அவனை மட்டும் பாதிக்காமல் நாட்டை அழிப்பதன் காரணம் என்ன? நாட்டுடைமையாக்கப்பட்ட துறையில் வேலை பார்ப்பவன் நாட்டையே ஏமாற்றி வாழ்வது எங்குபோய் முடியும்? பிற பெண்களைக் கற்பழித்து, வெறி கொண்டவனால் ஒன்றுமறியாத பேதைப் பெண் பலியாகிறாளே, காரணம் என்ன? இப்படியே சிந்தித்துக் கொண்டுபோனால் வினை முடிச்சில் தொடக்கம் எங்கே இருக்கிறதென்பது தெரியாமலும் முடிவு எங்கேயிருக்கிறதென்று தெரியாமலும் திண்டாடிப் போவோம். எவ்வளவு குழம்பிப் போய் இருந்தாலும், சிக்கலுண்டு கிடந்தாலும் பின்னிப் பிணைந்து கலந்து மறைந்து போனாலும் வினையென்பது காரணகாரிய இயைபுடையதே, மூலமும் விளைவும் விதையும் பயிருமாகிய தொடர்புடையதே என்பதை மறுக்க முடியாது.

'நச்சுவளையம்'

# சங்க இலக்கியத்தில் கைக்கிளை

அ.அ. மணவாளன்
இணைப் பேராசிரியர், தமிழ் மொழித்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை—600 005

## கலித்தொகையும் கைக்கிளையும்

சங்க இலக்கியம் எனக் கருதப்பெறும் எட்டுத் தொகை, பத்துப்பாட்டு என்னும் தொகை நூல்களுள் கலித்தொகையில் மட்டுமே கைக்கிளைத் திணைக்குரிய பாடல்கள் காணப்படுகின்றன. கலித்தொகைப் பாடல்களுக்கடியில் தரப்பட்டுள்ள துறைக் குறிப்புகளுக்கேற்ப 56,57,58 என்னும் எண்களைப் பெற்றுள்ள குறிஞ்சிக்கலிப் பாடல்களும் கைக்கிளைப் பாடல்களாகக் கருதப்படுகின்றன. 109, 112, 113 என்னும் எண்களைப் பெற்றுள்ள முல்லைக்கலிப் பாடல்களும் கைக்கிளைப் பாடல்களாகக் கருதப்படுகின்றன.

இவை தவிர, துறைக்குறிப்பில் கைக்கிளை என்று குறுப்பிடப் பெறாத வேறுசில கலிப் பாடல்களும் கைக்கிளைக்குரியனவாக உரையாசிரியர்களால் காட்டவும் குறிக்கவும் பெற்றுள்ளன. கலி. 61, 101, 108 ஆகிய மூன்றும் நச்சினார்க்கினியர் உரையில் கைக்கிளைப் பாடல்கள்எனக் கூறப்பெற்றுள்ளன. கலி. 62, 94 ஆகிய இரண்டையும் இளம்பூரணர் உரை கைக்கிளைக் குரியனவாகக் கூறுகிறது.

தொல்காப்பியம் கூறும் கைக்கிளைத் திணையின் இலக்கணம், கலிப்பாடல்களுக்கு அமைந்த துறைக் குறிப்புகள், ஆய்வுக்குட்பட்ட கலிப்பாடல்களின் பாடற் பொருண்மை ஆகியவற்றின் அடிப்படையில் மேற்காட்டிய பதினொரு பாடல்களில் கைக்கிளைப் பொருண்மைக் குரியனவாக எவ்வெவற்றைக் கொள்ளலாம் என்றறிய முயல்கிறது இவ் ஆய்வுரை.

## கைக்கிளையின் இலக்கணம்

காமஞ் சாலா இளமை யோள் வயின்
ஏமஞ் சாலா இடும்பை எய்தி
நன்மையும் தீமையும் என்றிரு
திறத்தான்
தன்னொடும் அவளொடும் தருக்கிய
புணர்த்துச்
சொல்லெதிர் பெறாஅன் சொல்லி
யின்புறல்
புல்லித் தோன்றும் கைக்கிளைக்
குறிப்பே

(தொல். பொருள். இளம். 53)

என்று கைக்கிளைத் திணையை வரையறுத்துக் கூறுகிறது தொல்காப்பியம். ''காமக் குறிப்பில்லாத தலைமகள் ஒருத்தியை நோக்கி அக்குறிப்புடைய தலைமகன் தன் விழைவு தோன்றச் சில கூறித் தானே இன்புறல்; இக் கூற்றிற்குரிய மாற்றத்தைத் தலைவி குறிப்பாலோ சொல்லாலோ பெற வைப்பதில்லை, ''என இவ்வரையறையைச் சுருக்கிக் கூறலாம். இனி இவ்வரையறைப் பொருளைக் கூறுபடுத்தின்,

1. காமக் குறிப்பில்லாத தலைவி
2. காமக் குறிப்புடைய தலைவன்
3. தலைவன் தன் விழைவு தோன்ற தலைவியைப்பார்த்துச் சில கூறுதல்
4. தலைவி எதிர்மொழி தராமை
5. தலைவன் சொல்லாடிய அளவில் இன்பமடைதல்

என்னும் பகுதிகளை உடையதாகக் காணலாம். சங்க அகப்பாடல்களின் திணையை முதல், கரு, உரி என்ற மூன்று பொருளா

லும் இனம்காண்பது மரபு. அகத்திணை ஏழனுள் அகனைந்திணைக்கு மட்டுமே முதற் பொருள் விதந்து ஓதப்பட்டமையாலும் முதற் பொருள்களின் அடிப்படையில் மட்டுமே கருப் பொருள்கள் தோன்றுமாகை யினாலும், முதலும் கருவும் பெறாத கைக் கிளை, பெருந்திணைகளை உரிப்பொருள் ஒன்றினால்தான் இனம் காணமுடியும். மேற்காட்டிய தொல்காப்பிய நூற்பா கைக் கிளையின் உரிப்பொருளைத்தான் வகுத் துரைக்கிறது. எனவே சங்க இலக்கியத்தில் காணப்பெறும் கைக்கிளைப் பாடல்களை அறிந்துகொள்ள இவ் வரையறையைப் பயன்படுத்த வேண்டியுள்ளது. சங்கப் பாடல் களுக்கு வகுக்கப்பெற்றுள்ள துறைக்குறிப்பு களும் தொல்காப்பியம் கூறும் உரிப்பொருள் அடிப்படையில் அமைந்தனவாதலின் அவை யும் பாடல்களின் திணையை உணரத்துணை செய்கின்றன எனலாம். ஆகச் சங்கப்பாடல் கள் தொல்காப்பிய வரையறைக்கும் துறைக் குறிப்புக்கும் பொருந்தி வருமானால் அவற்றை அவ்வத்திணைகளுக்கு உரியன வாகக் கொள்ளலாம் என்ற அடிப்படையில் கைக்கிளைப் பொருண்மையமைந்த சங்கப் பாடல்களை நோக்கலாம்.

## கலித்தொகைப் பாடல்கள்

கலித்தொகைப் பாடல்கள் 56,57,58 ஆகிய மூன்றும் ஒரே துறைக் குறிப்பைப் பெற்றுள் ளன. அது மேற்காட்டிய தொல்காப்பிய நூற்பாவைக் காட்டி, ''என்பதனாற் றருக் கிச் சொல்லிச் சொல்லெதிர் பெறான் இன் புற்றது'' என்று முடிகிறது. பாடல் பொரு ளும் இக்குறிப்பிற்கேற்ப அமைந்திருக்கக் காண்கிறோம். இந்நூற்பாவுக்குரிய எடுத்துக்காட்டாக இளம்பூரணர் 56ஆம் பாடலையும், நச்சினார்க்கினியர் 58ஆம் பாடலையும் காட்டுகின்றனர். இவை மூன்றும் குறிஞ்சிக்கலியில் கோக்கப்பட்டுள் ளன. ஆகவே இவை மூன்றும் கைக்கிளைத் திணைக் குரியனவாகின்றன,

இனி முல்லைக்கலியுள் கோக்கப்பட்டுள்ள 109, 112, 113 ஆகிய மூன்று பாடல்களில் 109 ஆவது பாடல் கீழ் வரும் துறைக்குறிப் பைப் பெற்றுள்ளது.

> இது வினைவல பாங்கிற் றலைவியைக் கண்ட வினைவல பாங்கிற்றலைவன் ''காமஞ் சாலா இளமை யோள்வயின் ஏமஞ் சாலா இடும்பை யெய்திக் கூறியது''.

பாடல் பொருளும் துறைக்குறிப்பும் ஒன்றிக் கைக்கிளைப் பொருண்மையை உறுதிசெய் கின்றன. எனவே இதனையும் கைக்கிளைப் பாடலாகக் கொள்ளலாம்.

கலி 112, 113 ஆகிய இரு பாடல்களின் துறைக் குறிப்பு கீழ்வருமாறு அமைந்துள் ளன.

**கலி 112**

> இது வினைவல பாங்கிற் றலைவியை ஆற்றிடைக்கண்டு வினைவல பாங்கிற் றலைவன் விலக்கி நகையாடி இருவருஞ் சில மொழி கூறிய வழி அவள் கூட்டத் திற்கு உடம்பட்டது.
>
> **இது கைக்கிளை.**

**கலி 113**

> இது வினைவல பாங்கிற் றலைவியை ஆற்றிடைக்கண்டு அவளை வினைவல பாங்கிற் றலைவன் விலக்கி அவளோடு சிறிது கூறியவழி அவள் கூடலுறு கின்றாள் கூறியது
>
> **இது கைக்கிளை.**

இவ்விரு பாடல்களின் பொருண்மையும் துறைக் குறிப்பும் ஒன்றிநிற்கின்றன. நச்சினார்க்கினியர் உரையும் இவற்றுக் குரிய மெய்ப்பாட்டைக் குறிப்பிடுமிடத்து, ''இதனால் இருவர்க்கும் புணர்ச்சி உவகை (வேட்கை) பிறந்தது'' என்று கூறு கிறது. ஆனால் இவற்றிற்கான துறைக் குறிப்புகளின் இறுதியில், **இது கைக்கிளை** என்னும் தொடர் தனித்துக் காணப்படுகிறது. இதனால் பலரும் இவற்றைக் கைக்கிளைப் பாடல்களாகக் கொள்ளும்படி நேரிட்டு விட் டது. பாடற்பொருளோ, துறைக் குறிப்போ கைக்கிளைப் பொருண்மையைச் சுட்ட வில்லை. மேலும்,இ.வை. அனந்தராமை யரும்[1] இளவழகனாரும்[2] சுட்டிக்காட்டியுள் ளது போல், நச்சினார்க்கினியரே தொல். அகத்திணை 13 ஆம் நூற்பாவுரையில் (இப்பாடல்112) பெருந்திணைப் பொருண் மைக் குரியதாகக் கூறுதலும் நோக்கு மிடத்து, **இது கைக்கி**ளை எனக் காணப் படும் துறைக் குறிப்பு பிழைபட்டது, அல்லது பிற்காலத்தே சேர்க்கப்பட்டது எனக் கருத வேண்டியுள்ளது. கலிப்பாடல்களில் காணப் பெறும் துறைக் குறிப்புகளுள் திணையைப் பற்றிக் குறிப்பிடும் மரபு காணப்பெற வில்லை. கூற்றுக் குரியோர் அல்லது கூற்று நிகழிடன் ஆகியவற்றை மட்டுமே குறிப்பிடும் மரபுடையன. 150 கலிப் பாடல்களில் இந்த

இருபாடல்களும் (112 113) 62, 99 ஆகிய பாடல்களும் மட்டுமே இத்தகைய குறிப்பைப் பெற்றுள்ளன என்பதும் ஆராயத் தக்கது. அதனால் இவை இரண்டும் கைக் கிளைப்பாடல்களல்ல என்று எண்ணத் தோன்றுகிறது. எனவே, துறைக்குறிப்பு களின்படி கைக்கிளை எனப்பட்ட ஆறு பாடல்களுள் நான்கு மட்டுமே (கலி. 56,57, 58, 109) கைக்கிளைத் திணைக் குரியனவாகக் காணப்படுகின்றன என்ப தும், 112,113 எண்ணுள்ள இரு பாடல்களும கைக்கிளைப் பாடல்களாகக் கொள்ளத் தக்கனவல்ல என்பதும், அவ்விரு பாடல்களின் துறைக்குறிப்புகள் ஆய்விற் குரியன என்பதும் பெறப்படுகின்றன.

**திணையுணர் முறைமை— முரண்பாடு**

இனி துறைக் குறிப்பில் கைக்கிளைப் பொருண்மை சுட்டப்படாமல் அமைந்துள்ள வேறு மூன்று பாடல்களையும் (61, 101, 108) கைக்கிளைக்குரியன என்று நச்சினார்க்கினியர் உரை குறிப்பிடுகிறது. அவற்றிற்குரிய துறைக்குறிப்புகள் கீழ் வருமாறு அமைந்துள்ளன:

**கலி 101.**

> ...தலைவிக்கு அவள்தோழி ஆயர் ஏறு தழுவுகின்றமை காட்டி...ஆற்று வித்தது.

**கலி 108**

> இஃது, ''அடியோர் பாங்கினும் வினை வல பாங்கினுங் கடிவரை யிலபுறத்தென் மனார் புலவர்'' என்பதனாற் பிறர் ஏவிய தொழிலைச் செய்தல்வல்ல அகப் புறத் தலைவனும் தலைவியும் முன்னொ ருகாற் கூடிப் பின்னர் அவனெதிர்ப் பட்டுழி அவன்வயிற் பரத்தைமையால் ஊடிக் குறி நேர்ந்தது.

இப்பாடல்களுள் கலி 101 தோழி கூற்றாக அமைந்தது; கலி. 108 தலைவன்—தலைவி ஆகிய இருவரும் பேசும் உரையாடலாக அமைந்து இறுதியில் தலைவி கூற்றாக முடி கிறது. கைக்கிளைப் பாடல் தலைவன் கூற் றாக அமைவது: தானே சொல்லி இன்புறு வதாக அமைவது. உரிப்பொருளால் காணு மிடத்துக் கலி.101 தலைவிக்குத் தலைவனை நினைத்தல் மெய்ப்பாடு நிகழ்வதாகக் காட்டு கிறது; கலி 108 இருவர்க்கும் புணர்ச்சியு வகை பிறப்பதாகக் கூறுகிறது. எனவே கூற்றுவழி நோக்கினாலும், பொருண்மைவழி நோக்கினாலும் இந்த இருபாடல்களும் (101, 108) கைக்கிளைக்குரியனவாகக் காணப்படவில்லை.

**கலி.61**

> இது தலைமகற்குக் குறைநேர்ந்ததோழி அவனோடு உறழ்ந்து சொல்லி அவனது நீக்கத்துக்கண் அவன்குறை மறாமைக்கு ஏற்பன சொலலித் தலைமகளைக் குறை நயப்பித்தது.

இப்பாடற் பொருண்மையும் தலைமகளைக் குறை நயப்பித்தலாகவே அமைந்துள்ளது. எனவே பாடற்பொருண்மை, கூற்றுக் குரி யோர் ஆகிய இரு நிலைகளிலும் இப்பாடல் கைக்கிளைக்குரியதாகக் காணப்படவில்லை.

இங்ஙனம் கலி.61 101, 108 ஆகிய மூன்றை யும் துறைக்குறிப்புக்கு மாறாகக் கைக் கிளைத் திணைக்குரியன என்று நச்சினார்க் கினியர் கருதக் காரணம் என்ன என்று நோக் கலாம். 61 ஆம் பாடல் ''காமஞ்சான்ற இள மையோள் வயிற்' கூறுதலான் கைக்கிளை யாயிற்று என்பது அவர் கருத்து. தொல்காப் பியர் அகத்திணை ஏழனுள் ஒன்றாகக் கைக் கிளையைக் குறிப்பிடும்போது ''காமஞ்சாலா இளமையோள்''(தொல்.பொருள் 53)என்று மட்டுமே கூறுகிறார். காமஞ்சான்ற இளமை யோளிடத்துக் கூறுவதும் கைக்கிளைதான் என்று அவர் எங்கும் கூறவில்லை. இந் நூற் பாவுக்குச் சிறப்புரை தருகையில் இளம் பூரணர் ''காமஞ்சான்ற தலைமகன் மாட்டு நிகழும் மனநிகழ்ச்சி. அது களவியலுட் கூறப் படுகின்றது'' என்று குறிப்பிடுகிறார். இதனையுட் கொண்டு நச்சினார்க்கினியரும் இவ்வாறு கருதுகிறாரோ எனத் தோன்று கிறது எனினும், ''கைக்கிளை புணராது நிகழும்''மனநிகழ்ச்சியாகலானும், களவிய லில் தோழி குறை நயப்பிக்கும் நிகழ்ச்சி இயற்கைப் புணர்ச்சிக்குப் பின்னர் நிகழ்வதா கலானும், கைக்கிளை என்னும் திணைப் பெயர் இப்பாடலுக்குப் பொருந்தவில்லை என்றே கருதவேண்டியுள்ளது.

கலி.101 ஆம் பாடலைப் பற்றிக் கூறுமிடத்து ''இது சிறப்பில்லா ஆசுரமாகிய கைக் கிளை'' என்று ஆரிய வழக்காகிய எண் வகை மணங்களுள் ஒன்றாகிய ஆசுரத்தோடு பொருத்திக் காண்கிறார் நச்சினார்க்கினியர். ஏறுதழுவுதல் என்னும் துறையைத் தொல் காப்பியர் கூறாவிடினும், சங்க இலக்கியம் உருப்பெற்ற காலத்தே அம்மரபு வழக்கிற்கு வந்திருக்கலாம் ஆகலானும், இப்பாடலில் வரும் தலைவி ஏறுதழுவினான் ஒரு தலை வனைத்தான் பழகாதிருந்தும் ஏற்றுக்கொண்

டதாகக் காணப்படாமையானும், 'ஆயர் மணிமாலை யூதும் குழல் அணிமாலைக் கேள்வன் தரூஉம்'' எனத் தான முன்னர் அறிந்த தலைவனையே பெறுவாளாகக்கூறப் படுதலானும், வடவாரிய ஆசுரமும, இப் பாடல் கருதும் பொருண்மையும் ஒன்றல்ல என்பது வெளிப்படை. இவ்வாறு, தமிழ் அகத்திணை ஏழனையும் ஆரிய மணவகை கள் எட்டனோடும் நேருக்கு நேர் பொருத்திக் காண்பது பொருந்தா ஆய்வென்பதை முன் னரே அறிஞர்கள் தெளிவாக்கியுள்ளனர்.[3] எனவே நச்சினார்க்கினியர் கருத்துப்படி இப் பாடலைக் கைக்கிளையாகக் கொள்ளுவதற் கில்லை.

இனிக் கலி 108ஆம் பாடலுரையில் ''இதனுள் தலைவன் வினைவல பாங்கினன் ஆயவாறு காண்க. இது ''கைக்கிளை,'' என்னும் குறிப்பு காணப்படுகிறது.

> அடியோர் பாங்கினும் வினைவலர் பாங்கினும்
> கடிவரை இலபுறத் தென்மனார் புலவர்
>
> (தொல். பொருள். 25)

என்னும் நூற்பாவை இளம்பூரணர் உள்ளிட்ட உரையாசிரியர்கள் கைக்கிளை, பெருந்திணைக்குரிய தலைமக்களைப் பற்றிக் கூறியதாகக் கொண்டனர். தொல் காப்பிய நூற்பாக்கள் அமைந்துள்ள நிலை யில் இந்நூற்பாவுக்கு இவ்வாறு பொருள் கொள்ளக் காரணம் விளங்கவில்லை. நாடக முறைமைக்குக் குறிக்கோளியல் படைப்பே சிறந்த தாயினும், சங்கப் பாடல்கள் முழுமை யும் குறிக்கோளியல் பாத்திரங்களைக் (Ideal characters) கொண்டுள்ளன என்று கூற இயலவில்லை. உலகியல் வழக்காக அமைந்த பாடல் படைப்புகள் பலவற்றைச் சுட்டலாம். மேலும் கைக்கிளை, பெருந்திணை இரண்டும் உரிப்பொருளான் சுட்டப் பெறும் இயல்புடை மையின், இவற்றுக்குரிய தலைமக்களைக் கூற இந்நூற்பா எழுந்தது என்பது பொருத்த மாகப் படவில்லை. இனி,

> நடுவணைந்திணை நிலத்தானும், காலத் தானும், கருப்பொருளானும், உரிப்பொரு ளானும், நில மக்களானும், தலைமக்க ளானும் வரும் எனவும்... **கைக்கிளை, பெருந்திணை உரிப்பொருளான் வரும் எனவும்** அகத்திணை ஏழிற்கும் இலக் கணம் ஓதியவாறு
>
> (தொல். பொருள். 24 உரை)

எனவரும் இளம்பூரணர் கூற்றாலும் கைக் கிளைத் திணையுணர்வதற்கு உரிப்பொருளே யன்றித் தலைமக்கள் குறியாகார் என்பது பெறப்படும். எனவே தலைவன் வினைவல பாங்கினன் என்பதாலேயே இதனைக் கைக் கிளை என்று கொண்டது பொருத்தமாகப் படவில்லை. இவ்வாறு தலைமக்களைக் கொண்டு திணையுணர முற்பட்டமையால் தான் கலி. 112, 113 ஆகிய இரு பாடல் களும் கைக்கிளைக்குரியன என்று துறைக் குறிப்புப் பெற்றன போலும்.

**இளம்பூரணர் நச்சினார்க்கினியர் வேறுபாடு**

> ஏவல் மரபின் ஏனோரும் உரியர்
> ஆகிய நிலைமை அவரும் அன்னர்
>
> (தொல் பொருள். இளம். 26)

என்னும் நூற்பாவுக்கு எடுத்துக்காட்டாக, ''ஏஎ இஃதொத்தன் நாணிலன்' (கலி,62) என்னும் குறிஞ்சிக் கலியைக் காட்டி ''இஃது உயர்ந்தோர் மாட்டு வந்த கைக்கிளை. பெருந்திணை வந்தவழிக் கண்டுகொள்க'' என்கிறார் இளம்பூரணர். நச்சினார்க் கினியரோ, ''இதனால் இருவர்க்கும் புணர்ச்சியுவகை பிறந்தது'' என்று கூறி, ''இது... அடியோர் தலைவராகவந்த பெருந் திணை'' என்கிறார். பாடற்பொருண்மை யையும், துறைக் குறிப்பையும் காணின் இத னைக் கைக்கிளை என்பதினும் பெருந்திணை எனக் கூறுதலே பொருத்தமுடையதாகத் தோன்றுகிறது. ஒரே பாடலை இருவர் இரு வேறு திணைகளாகக் கொள்ள நேர்ந்தது எதனால் என்பது சிந்தனைக்குரியதாக உள்ளது. பாடற் பொருண்மையைவிடப் பாடலில் வரும் தலைமக்களின் சமுதாய உயர்வு தாழ்வுகளை நோக்கியமையால் வந்த விளைவென்று தோன்றுகிறது.

இனி, இந்நூற்பாவுக்கு முன்னதாகிய அடி யோர் பாங்கினும்'' எனத்தொடங்கும் தொல் காப்பிய நூற்பாவுக்கு எடுத்துக்காட்டாக, ''என்னோற் றனைகொல்லோ' எனத் தொடங்கும் மருதக்கலிப் பாடலைக் காட்டு கிறார் இளம்பூரணர். பின்னர் இப்பாடலின் திணைபற்றிக் குறிப்பிடுமிடத்து,

> இதனுள் ஒருவரையொருவர் இழித்துக் கூறினமையான் அடியார் என்பதூஉம், மிக்க காமத்தின் வேறுபட்டு வருதலாற் **பெருந்திணைப் பாற்படும்** என்பதூஉம் கண்டுகொள்க. **இதுதானே கைக்கிளைக் கும் உதாரணமாம்.**

என்று ஒரே பாடலை இரண்டு திணைகட்கு உதாரணமாகக் கூறுகிறார்.

மேலே ஒரே பாடலை இருவர் இரண்டு திணைகட்கு உரிமையாக்கியதும், இங்கு ஒரே பாடலை ஒருவரே இரண்டு திணைகட்கு உரிமையாக்கியதும் வியப்பளிப்பதாக இருப் பினும், உரிப்பொருளை நீக்கிக் கருப்பொருள் களுள் ஒன்றான தலைமக்களைக் கொண்டு திணையுணர முற்பட்டமை தான் இம் முரண் பாட்டிற்குரிய காரணமாகத் தோன்றுகிறது. தொல்காப்பிய நூற்பாக்கள் (25, 26) இப் பார்வையால் பெற்ற உரைகளே இத்தகைய முரண்பாட்டிற்குக் காட்டப்பெறும் சான்று களாயின.

**நற்றிணை**

இனி, நற்றிணை 39ஆம் பாடலில் கைக் கிளைப் பொருண்மை இருப்பதாக ஓர் ஆய்வு கூறுகிறது[4]. இப்பாடலுக்குரிய துறைக் குறிப்பு, ''இரண்டாம் கூட்டத்து எதிர்ச்சியிற் றலைவன் சொல்லியது'' எனக்காணப் படுதலானும், முதற்கூட்டமாகிய இயற்கைப் புணர்ச்சி நிகழுமிடத்தேயே கைக்கிளைப் பொருண்மை பொன்றுதலானும் கைக் கிளைத் திணைக்குரியதாக இப்பாடலைக் கொள்ள இயலவில்லை. மேலும், இப் பாடலை இளம்பூரணர், ''முன்னிலையாக்கல், சொல்வழிப்படுத்தல்'' என்னும் களவியல் நூற்பாவுக்குச் (10) சான்றாகக் காட்டுத லானும், காமஞ்சான்ற இளமையோள்வழிக் கூறுவதாக இதனை அவர் குறிப்பிடுதலாலும் (அகத். நூ. 53இன் சிறப்புரை) இப்பாடலைக் கைக்கிளைக்குரியதாகக்கொள்ள இடமில்லை. இப்பாடலின் தொடக்கமாகிய. ''சொல்லின் சொல் எதிர்கொள்ளாய்'' என்னும் தொடர் இத்தகைய கருத்துக்கு இடம் தந்தது போலும்.

**முடிவுரை**

இதுவரை கண்டவற்றால், தொல்காப்பிய மாகிய இலக்கண மரபுப்படி கலி. 56,57,58, 109 ஆகிய நான்கு பாடல்களே கைக்கிளைப் பொருண்மைக்கு உரியனவாகக் காணப்படு கின்றன என்பதும், தொல்காப்பிய நூற்பாக் கள் சிலவற்றிற்கு (அகத் 25,26) உரையாசி ரியர்கள் கண்ட உரைவேறுபாட்டால் மேலும் சில பாடல்களைக் (கலி. 61,62,94,101, 108,112,113) கைக்கிளைக்குரியனவாகக் கொள்ள நேர்ந்தது. என்பதும், அவ்வாறு கொள்வது சங்கப் பாடல்களுக்கு வரை யறுக்கப்பட்ட திணையுணர் முறைமையினின் றும் மாறுபட்டது என்பதும், சங்க காலத் திற்கும் உரையாசிரியர் காலத்துக்கும் இடைப்பட்ட காலத்தே நேர்ந்த இலக்கண, இலக்கிய மரபு மாற்றங்கள் இத்தகைய மாறுபாட்டிற்குரிய காரணங்களாதல் கூடும் என்பதும் பெறப்பட்டன. இவற்றுள் உரை யாசிரியர்கள் கண்ட உரை வேறுபாடுகளுக் கான காரணங்கள் மேலும் நுணுகி ஆராயத் தக்கனவாகத் தோன்றுகின்றன.

○

**சான்றெண் விளக்கம்**

1. **கலித்தொகை** (ப.ஆ) (சென்னை: ?, 1925) ப.718.
2. ''நச்சினார்க்கினியர் உரை விளக்கம்'', **கலித்தொகை: நச்சினார்க்கினியர் உரை** (பாகனேரி: த.வை.இ.தமிழ்ச் சங்க வெளியீடு, 1943) ப.78.
3. (அ) வ.சுப. மாணிக்கம், **தமிழ்க் காதல்,** சென்னை: பாரி நிலையம், 1962) ப.232.
   (ஆ) க.ப. அறவாணன், **அற்றைநாட் காதலும் வீரமும்** (சென்னை: பாரிநிலையம் 1971) ப.184.
4. *RM. Periyakaruppan, Tradition and Talent in Cankam Poetry Madurai, Madurai Publishing House, 1976 P.124.*

# தமிழர்தம் ஈகைக் கோட்பாடு

க.ப. அறவாணன்
தமிழியல் துறைத் தலைவர்
புதுவைப் பல்கலைக் கழகம்,
புதுவை 605 003

இரத்தல், யாசித்தல் அல்லது பிச்சை எடுத்தல் என்பது ஒருவன் இன்னொருவனிடம் இருந்து உணவையோ, பொருளையோ இலவயமாகப் பெறுவது என்பதாகும். பிச்சை எடுத்தல் வறுமையின் வெளிப்பாடு என்பது தெளிவு. பழங்காலத்திலேயே தமிழ்ச் சமுதாயத்தின் இடையே வறுமை இருந்தது என்பதைச் சங்க இலக்கியம் தெளிவுபடுத்துகிறது. வறுமையின் விழுக்காட்டைக் கணிக்க முடியவில்லையெனினும், வறுமை இருந்தது என்பதை உறுதிப்படுத்தும் சான்றுகள் பழைய இலக்கியங்களில் இடம் பெற்றிருப்பதைக் காணலாம். சங்க இலக்கியம் காட்டும் வறுமையைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

1. கலைஞர்களின் வறுமை
2. புலவர்களின் வறுமை
3. பொதுமக்களின் வறுமை

### 1. கலைஞர்களின் வறுமை:

ஆடல் கலையில் வல்ல புலவர்களும், பொருநர்களும், சொல்லொணா வறுமையில் வாடினர். பாடல் பாடும் பாணரும் பாடினியும் போதிய உணவும், உடையும், உறைவிடமும் இல்லாது அல்லல் பட்டனர். இவற்றைப் பத்துப்பாட்டில் இடம்பெற்றுள்ள பொருநராற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, மலைபடுகடாம் ஆகியன தெளிவாகப் படம்பிடித்துக் காட்டுகின்றன. ஆற்றுப்படை இலக்கியங்கள் மட்டுமல்லாமல், எட்டுத் தொகையில் இடம்பெற்றுள்ள சில பாடல்களும் கலைஞர்களின் வறுமையை எடுத்துரைக்கின்றன. (குறுந்தொகை, 371, 377, 383, 390,392, 397, 400). இவையன்றிப் பத்துப்பாட்டில் தெளிவாக வறுமையைப் பற்றிக் குறிப்புகள் இடம் பெற்றுள்ளன.

### 2. புலவர்களின் வறுமை

புலவர்கள் தம் குடும்பத்தில் வறுமையில் வாடினர் என்பதைப் புற இலக்கியங்கள் பல உறுதிசெய்கின்றன. குறிப்பாகப் பெருஞ்சித்திரனார் பற்றிய துயரநிலை இதற்குப் போதிய சான்றாகும். அன்றியும், அரசர்களையும், வள்ளல்களையும் உணவிற்காகவும், உடைகளுக்காகவும், பிற ஏந்துகளுக்காகவும் சென்று புலவர்கள் இரந்ததைப் புறநானூற்றில் இடம்பெற்றுள்ள பாடல்கள் தெளிவாகப் படம்பிடித்துக் காட்டுகின்றன.

### 3. பொதுமக்களின் வறுமை

கலைஞர்களும், புலவர்களும் மட்டுமல்லாமல் பொதுமக்களும் வறுமையில் வாடினர் என்பதைச் சில குறிப்புகள் எடுத்துரைக்கின்றன.

''இல்லோற் கையற நீ நீடுவாழிய பெருந்தகை''

என்ற மருதன் இளநாகனாரின் (43-55) பாடல், இல்லோர் என்று ஏழைகளை, இரவலர்களைச் சுட்டுகிறது. பதிற்றுப்பத்து ஒன்பதாவது பாடலில் காக்கைப் பாடினியார் இரவல் மாக்கள் என்று சுட்டுகிறார். எனவே, அன்று பிறரிடம் இரந்து வேண்டும் ஏழை மக்களை இரவலர் என்றும், இரவல் மாக்கள் என்றும், இல்லோர் என்றும், பண்டையோர் குறித்துஇருப்பது தெளிவு. இரத்தலை இழிவு என்று விலக்காது தொடர்ந்து இரந்து வருவோரை (விலங்கு என்ற பொருள்பட) ''மாக்கள்'' என்பர் ஔவை. துரைசாமி (பார்க்க: புற நானூற்றுரை) தம் கலைத்திறன், தம் கவித்திறனைக் காட்டிப் பரிசல் பெற்ற கலைஞரும், கவிஞரும், 'பரிசிலர்' எனக் குறிக்கப் பெற்றனர். கலைஞர்களும், புலவர்களும் உடல்

உழைப்புச் செய்யாதவர்கள். கறிசோறுண்டு வருந்து தொழிலல்லது பிறிது தொழிலறி யாது வாழ்ந்தவர்கள் (புறம் 14). தம்கலைத் திறத்தையும, அறிவுத் திறத்தையும் கொண்டே வாழ்கிறவர்கள், உழைப்பில் இருந்து விலகிய அன்னோர், வறுமையுற்று இருப்பது எளிது எனச் சிலர் வாதிடக் கூடும். எனினும், கலை, அறிவு ஆகிய தனித் திறன் கள் பெற்றவர்களும் வறுமையுற்று இருந்த னர் என்ற உண்மையையும் ஒப்புக்கொள்ள வேண்டியுள்ளது. கலைத் திறமும், அறிவுத் திறமும் வாய்ந்த அன்னோர் தாம் இருந்த இடத்திலேயே இருந்து மன்னர்களிடம் இருந்தோ, வள்ளலகளிடம் இருந்தோ பொருளையும் அருளையும் பெற்றிருந்தால் கலைஞர்களும், புலவர்களும் பிறர் படி ஏற நேர்ந்து இருக்காது. ஆனால் இருவரும் பொருள் தரும்அரசர்கள், வள்ளல்கள் வாழும் இல்லங்களுக்குச் சென்று கையேந்தி நின்ற தைப் பண்டைய இலக்கியங்கள் தெளிவாகப் படம்பிடிக்கின்றன, வள்ளலும் அரசனுமாகிய அதியனை அவ்வை பாடிய பாட்டு, கருது வதற்குரியது.

அதியமான் நெடுமான் பகை மன்னனால் கொல்லப்பட்டான். மார்பில் அம்பு பாய்ந்து மடிந்து கிடக்கும் அதியனைக் கண்டு அவலம் தாளாது புலம்புகிறார் அவ்வை. அவருடைய நெஞ்சப் புலம்பல் கையறு நிலைப் பாடலாகப் புறநானூற்றில் (235) வெளிப்பட்டுள்ளது. அதியமான் மார்பில் பாய்ந்த அம்பு, சிறுபாணர், பெருபாணர் ஏந்தியுள்ள பாத்திரத்தையும் துளைததது; பிச்சை எடுக்கும் இரப்போர் கையையும் துளைத்தது; யாசிக்கும் புலவர் நாக்கையும் துளைத்தது. இதுகுறித்து அவர் பாடும் பாடல் அடிகள் பார்வைக்கு உரியவை.

''அருந்தலை யிரும்பாண ரகன்
மண்டைத் துளையுரீஇ
இரப்போர் கையுளும் போகிப்
புரப்போர் புன்கண் பாவை சோர
அஞ் சொனுண் டேர்ச்சிப் புலவர்
நாவிற்
சென்று வீழ்ந் தன்றவன்'' †1

அவ்வையின் பாடல் தமிழ்நாட்டில் மூன்று வகையான இல்லாதோர் இருந்தனர் என் பதைத் தெளிவுபடுத்துகிறது.

1. பாணர், 2. இரப்போர், 3. புலவர்.

எனவே, கலைஞர்களாகிய பாணரும், அறிஞர்களாகிய புலவரும் மட்டுமின்றி வேறு காரணங்களால் பிச்சை எடுத்து வாழும் இர வலர்களும் அன்று இருந்துள்ளனர் என்பது தெளிவாகிறது.

கலைஞர். அறிஞர், வறிஞர் என்ற முத்திறத் தாரும் பொருளும் இன்னபிற ஏந்துகளும் இல்லாமல் சங்ககாலத்தில் இருந்ததற்கான காரணம் ஆராயத்தக்கது. அதனைப் போலவே மிகப் பழைய தமிழர் வரலாற்றில் தொடக்கக் காலத்தைக் காட்டும் சங்க காலத் தில் வறுமை எவ்வாறு தமிழ்நாட்டில் நுழைந்தது என்பதும் ஆராயத்தக்கது.

சங்க இலக்கியங்களும், சங்கம் மருவிய இலக்கியங்களும், பல்வேறு குறிப்புகளி லிருந்து பண்டைய காலத்தில் தமிழ் நாட்டில் ஏன் வறுமை ஏற்பட்டது என்பதற் குப்பின்வரும் மூன்று காரணங்களை உய்த் துணரலாம.

1. செல்வம், ஒருசிலர் இடத்தில் குவிந்திருந்தமை
2. மழையின்மை
3. உழைப்பின்மை

பண்டைய காலத்தில் செல்வக் குவிப்பு இருந்ததா என்று ஐயம் ஏற்படலாம். சமூக வியல் கல்வியும், அரசியல் கல்வியும், உலகின் பல சமூகங்களிலும் செல்வக் குவிப்பு இருந்ததையும், அதனால் சமுதாயத்தின் ஒரு சிறு பகுதியினர் வளமுற வாழ்ந்ததை யும், பெரும் பகுதியினர் அடிப்படைத் தேவை கூட இன்றி அல்லலுற்றதையும் காட்டு கின்றன.

மழை இன்றித் தமிழகத்தில் பஞ்சம் வந்த தையும், மக்கள் வாடியதையும் பாண்டிய நாடு பஞ்சத்தில் தவித்ததையும், அக்காலத் தில் அறிஞர்களும், மக்களும் பஞ்சம் பிழைக்க வேறு பகுதிக்குச்சென்றதையும் உரைக்குறிப் புகள் காட்டுகின்றன. மழையின்றி வறண்டு பன்னீராண்டு வற்கடமுற்ற காலத்து அறி வுலக மக்களை அயல் நாடு செல்ல அரசனே பணித்ததை இறையனார் களவியலுக்கு உரை எழுதிய நக்கீரர் எடுத்துரைக்கிறார்.

''அக்காலத்துப் பாண்டியனாடு பன்னீ ரியாண்டு வற்கடஞ் சென்றது. செல் லவே, பசிகடுகுதலும், அரசன் சிட்டரை யெல் லாங் கூவி, வம்மின், யான் உங் களைப் புரந்தரகில்லேன்: என் தேயம் பெரிதும் வருந்துகின்றது; நீயிர் நுமக்கு அறிந்தவாறு புக்கு, நாடு நாடாயின ஞரன்று என்னை யுள்ளிவம்மின் என் றான். என, அரசனை விடுத்து எல்லா ரும் போயின பின்றைக், கணக்கின்றிப் பன்னீரியாண்டு கழிந்தது. கழிந்த

பின்னர், நாடு மலிய மழை பெய்தது. பெய்த பின்னர், அரசன், 'இனி நாடு நாடாயிற்றாகலின், நூல்வல்லாரைக் கொணர்க' என்று எல்லாம் பக்கமும் ஆட்போக்க,''[2]

கண்ணகியின் சாபத்தால் நாடு மழையின்றி நலிந்ததைச் சிலப்பதிகார உரை பெறு கட்டுரை எடுத்துரைக்கிறது.

அன்று தொட்டுப் பாண்டியனாடு மழை வறங்கூர்ந்து வறுமையெய்தி வெப்பு நோயும் குருவும் தொடரக் கொற்கையி லிருந்த வெற்றிவேற்செழியன் நங்கைக் குப் பொற்கொல்லர் ஆயிரவரைக் கொன்று களவேள்வியால் விழவொடு சாந்தி செய்ய நாடுமலிய மழைபெய்து நோயும்துன்பமு நீங்கியது.

அதுகேட்டுக் கொங்கிளங்கோசர் தங்கள் நாட்டகத்து நங்கைக்கு விழவொடு சாந்திசெய்ய மழைதொழில் என்றும் மாறாதாயிற்று.[3]

தமிழகம் மழை இல்லாமல் தொடர்ந்துபஞ்சத் தில் வாடிய செய்திகள் தமிழக வரலாற்றில் இடம் பெற்றிருக்கின்றன(டாக்டர் கே.கே. பிள்ளை, தமிழக வரலாறு — மக்களும் பண்பாடும்).

தமிழக மக்களிடையே இருந்த பாலை நிலக்கோட்பாடும் பாலை நிலம் பற்றிய சங்க இலக்கிய வருணனைகளும், மழையின்மை யின் கொடுமையை மறைமுகமாக எடுத்து ரைக்கின்றன. பாலை என்பது தமிழ் இலக்கி யத்தின்படியும், தமிழ் நிலயியல்படியும், நிலப் பாலையும் அன்று; நிலைப்பாலையும் அன்று. வளமாக இருந்த மழையும் மலை சார்ந்த குறிஞ்சி வளமும், காடும் காடு சார்ந்த முல்லை வளமும் வாடி வறட்சி உறுவதைப் பாலை என்று தமிழ்முன்னோர் அழைத்தனர்.

''முல்லையும் குறிஞ்சியும்
முறைமையில் திரிந்து
பாலை என்பதோர்
படிவம் கொள்ளும்''[4].

ஐந்திணைகளுள் ஒன்றாக இடம் பெற்றிருக் கும் பாலைத் திணை, தமிழ் நாட்டில் மழை யின்மையின் வறிய நிலையை எதிர்முகமாகப் புலப்படுத்துகிறது. மழையின்மையால் ஏற் பட்ட வறட்சி நிலையும், வறட்சி நிலையால் ஏற்பட்ட குடும்பவறுமையும் குடும்ப வறு மையால் ஏற்பட்ட பொருள்வயிற் பிரிவும், பொருள் வயின்பிரிவை எடுத்து உணர்த்தும் சங்க இலக்கியப்பாடல்களும் திணைக் குறிப் பும் காதலை மட்டும் எடுத்துணர்த்தவில்லை. அக்கால மக்கள், மணம் முடித்த இளம்தம்ப தியர்கள் கூட மழையின்றி நிலம் வறண்ட மையால் வறுமை ஏற்பட்டதால் வாடினர். பொருளுக்காகத் தலைவன் பிரிந்து செல்லும் பாடல்கள், முன்பே இருக்கிற செல்வ நிலையைப் பெருக்குவதற்காகத் தலைவன் பிரிந்துசென்றதாகக்காட்டவில்லை. பொருளே யின்றித்துன்புற்றிருந்த நிலையை நீக்குவதற் காக அயல்நாடு செல்லும் மக்களையே அவை படம்பிடித்துக் காட்டுகின்றன. பொருளுக்கா கப் பிரிந்து செல்லுதலும், அதனைக் காட்டும் பாலைப் பாடல்களும், தமிழகம் மழைஇன்றிப் பஞ்சமுற்றிருந்த நிலையைக் காட்டுகின்றன. பஞ்சமுற்ற நிலையில் பஞ்ச முற்றபகுதியைச் சார்ந்தமக்கள் வேறு இடத்திற்குப் பெயர் வதை இறையனார் களவியல் உரை கூறு கிறது. மழை இல்லாத காலங்களில் பஞ்சம் பிழைப்பதற்காக இடம் பெயரும் தமிழ்மக்கள் இயல்பைக் காட்டுகிறது. இப்போக்கே, காலப்போக்கில் தமிழர்கள் பொருளுக்காக தம் நாடு விட்டுவேறு நாட்டிற்குச் செல்லும் பழக்கமாகவும் மரபாகவும் வளர்ந்தது.[5]

தமிழர் வாழ்வும் வளமும், நிலத்தைச் சார்ந்தே இருந்தன. நிலம், மழையைச் சார்ந்தே இருந்தது எனவே மழையே தமிழர்க்கு முதன்மை ஆயிற்று, எனவே தான் மழையை வணங்குதல் வழக்க மாயிற்று. மாரி வணக்கம் என்பதுமழை வணக்கமே. அச்சத்தாலும், அன்பாலும் நன்றி யாலும் இயற்கையாற்றல்களை வணங்கிய மக்கள் காலப்போக்கில், அவற்றிற்கு இறை மை கற்பித்தனர். முன்னோர்க்கும் இறைமை கற்பித்தனர். இறைமை கற்பிக்கப் பெற்ற முன்னோர்க்கு உருவம் இருந்தது. அவ் வுருவமே நடுகல்லாகவும், நடுகல் உளி வடிவ மாகவும், காலப்போக்கில் தனித்தனி உருவ மாகவும் வளர்ச்சி பெற்றது. இறைமை ஏற்றப் பெற்று உருவம் அற்றிருந்த இயற்கை ஆற் றல்களுக்கும் தொல்மக்கள் உருவத்தைக் கற் பித்தனர். மழையும் அவ்வாறே உருவம் பெற்று மாரியம்மன் என்றாயிற்று. மழையின் உருவகமான மாரி முன்னிடம் பெற்றது. வழி பாட்டில் அருவமும் உருவமும் பிரிந்து நின்று —ஒருகால கட்டத்தில் ஒன்றாகிப் பின் தனித் தனியாக இரண்டாகப் பிரிந்தன.

இதனையே மழை வேண்டு வழிபாடுகள் உணர்த்துகின்றன. உருவம் பெற்ற இயற்கை ஆற்றல், தனியாக்கப் பெற்றுப் பின்னுக்குத் தள்ளப்பட்டதைத் திருவள்ளுவத் தின் கடவுள் வாழ்த்து என்ற முதல் அதிகார மும், வான்சிறப்பு என்ற இரண்டாம் அதி காரமும் உணர்த்துகின்றன. உண்மையில் வான்சிறப்பே முந்தையது. வான்சிறப்பு என்ற மழை அதிகாரம், தமிழர் மனத்திலும்

வாழ்விலும் வழிபாட்டிலும் எத்துணை முதன்மை எய்தியிருந்தது என்பதை உய்த்துணர வைக்கிறது. இக்கருத்தே மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும்' என்ற சிலப்பதிகார[5] வரியாக விரிகிறது. 'மழை வளங்கரப்பின் வான் பேரச்சம்'[6] என்று சேரன் செங்குட்டுவன் வழங்குவது மழை அன்று பெற்றிருந்த அதி முதன்மையைக் காட்டுகிறது. பாவைப் பாடல்கள் மழை வேண்டி பாடல்களாகவே பாடப் பெற்று வந்தன. மழையைப் பற்றியும். நீரைப் பற்றியும் தமிழரிடம் தொடர்ந்து வழங்கி வரும் நம்பிக்கைகளும், பழமொழிகளும், தமிழர் வாழ்வில் மழை பெற்றிருந்த பேரிடத்தை மெய்ப்பிக்கின்றன. நீரிற்குப் புனிதம் கற்பித்ததும் இது பற்றியே. அரிதான ஒன்று மதிக்கப்பெறும்;காலப் போக்கில் வழிபடப் பெறும். மழை மேல் தமிழர் கொண்டிருந்த வழிபாட்டுணர்வே, மழையின்மை அவர்களை எந்த அளவு வாட்டியிருக்கும் என்பதை எதிர்முகமாக உணர்த்துகிறது. ஊர்தோறும் உள்ள மாரி (யம்மன்) கோயில்களும், மழையில்லாதபோது, மாரியம்மன் சிறப்புப் பூசனை பெறுதலும் எண்ணத்தக்கன.

முன்னோர், மழைநீரையும், ஆற்றுநீரையும் குளம் குட்டை நீரையும் நிரல்பட அறிந்திருந்தனர். மழையில்லாத காலத்தில் ஆறுகள் வறண்டன; குளங்கள் வறண்டன. வறட்சிக்கும் வளத்திற்கும் அடிப்படை. வானம் என்றே உணர்ந்தனர். எனவேதான், தமிழர் வழிபாடுகள்எல்லாம் மேல் நோக்கியனவாக அமைந்தன. தேக்கி வைக்கும் முறையைத் தொடக்கத்தில் அறிந்திருக்கவில்லை. ஊற்று முறையையும் தொடக்கத்தில் அறிந்திருக்கவில்லை. இவ்விரண்டையும் அறிந்த போதே தமிழரிடையே வேளாண்மை நாகரிகம் செழிக்கத் தொடங்கியது; நிலவுடைமை அமைப்பும் செழிக்கத் தொடங்கியது. தேக்க முறையையும்ஊற்று முறையையும் அறியாத கால கட்டத்திலேயே ஆற்றை ஒட்டி நாகரிகம் உருப்பெற்றுயர்ந்தது.

போதிய உழைப்பு இல்லாமல் அல்லது உழைப்பதற்கு நிலபுலன் இல்லாமல் வாடிய மக்களும் முன்பு இருந்தனர்ஆதல் வேண்டும். கலைஞர்களும் புலவர்களுமாகிய. அறிஞர்களும் இப்பட்டியலிலேயே சேருவர். குருடு. செவிடு ஊமை, தீரா நோயுற்றோர் ஆகியோர் ஊனம் அற்றவரைப்போல் உழைக்க இயலாது. எனவே வறுமைக்கு ஆளாகினர். மக்களும் இரந்தனர். ஆக மழையின்மையும், உழைப்பு இன்மையும் பண்டைய தமிழகத்தின்வறுமைக்கு ஓரளவு காரணமாக இருந்தனவாதல் வேண்டும.

மேற்கண்ட காரணங்களைவிடப் பண்டைய வறுமைக்குப் பெரியகாரணம் செல்வக்குவிப்பு தான். தொல்பழங் காலத்திலேயே தமிழ் நாட்டில் எவ்வாறு ஒருசில இடத்தில் செல்வக்குவிப்பு ஏற்பட்டது என்பது ஆராய்வதற்கு உரியது.

மனித சமூகம் தொடக்கத்தில் தனிச் சொத்துடைமை இல்லாதபொதுவுடைமைச்சமுதாயமாகத்தான் இருந்தது. அக்காலத்தில் சொத்துடைமையும் உழைப்பும் பிரிகக இயலாதவாறு இரண்டற ஒன்றியிருந்தன. நிலமோ தோட்டமோ உள்ள மக்கள் நிலத்தில் உழைத்தனர் அல்லது தோட்டத்தைப் பயன் படுத்திக் கொண்டனர். நிலத்திலிருந்து கிடைக்கும் பொருள்அனைவருககும் பொதுவாக நிலம் அனைவருக்கும் பொதுச் சொத்தாக இருந்தது.

அந்தக் காலக் கட்டத்தில் ஆண்பெண் என்ற இயற்கையைச் சார்ந்த உழைப்புப் பிரிவினை மட்டும் மெல்ல அரும்பியது. ஆண்கள் ஆநிரைகளை மேய்த்தார்கள், தற்காப்புப் போர் செய்தார்கள், வேட்டை ஆடினார்கள் பெண்கள் உணவு சமைத்தார்கள், நெய்தார்கள். வேட்டை ஆடுதல் தொடர்பான பொருள்கள் ஆண் அனைவருக்கும் உடைமையாக இருந்தன. ஆண் பெண் அனைவரும் சேர்ந்து ஒரே வீட்டில் வாழும் முறையே அன்று இருந்தது. (இன்றும் கூட அந்தமான் தீவுகளில வாழும பழங்குடிகளிடம் கூட்டுக்குடிசைகளில் வாழும் முறை உள்ளது). காலப்போக்கில் இப் பொதுமைச் சமுதாயம் மெல்ல மெல்லத் தனி உடமைச் சமுதாயமாக மாறியது. பொதுவாக ஒரே குடிசையில் வாழ்ந்த மக்களின் தற்காப்புச் செய்வோர் காரணமாகவோ, வேட்டை ஆடுதல் காரணமாகவோ மக்களை வழிப்படுத்த நன்கு பேசும் திறன் காரணமாகவோ ஒவ்வொரு குழுவிலும் ஒருசிலர் முன்னணி வகித்தனர். இம்முன்னணியினரே தலைவராகவும், தலைவியாகவும் தலைமக்களாகவும், நாட்டாண்மைக்காரர்களாகவும், மூப்பர்களாகவும் வளர்ந்தனர். இத்தலைவர்கள் தமக்கெனச் சில கூடுதல் வசதிகளை ஏனையோர்களைவிடக் கூடுதலாக அமைத்துக் கொண்டனர்.

இந்தக் கூடுதல் வசதிகள் அவர்களைத் தனிமைப்படுத்தியதோடு, ஏனையோரைவிட முதன்மை பெற்றவராக காட்டின.

தனி நபர்களின் தனி உடமைக்கு மாறிய முதல் துண்டு நிலம், வீடு கட்டப்பெற்ற நில

மாக மாறி, தொடர்ந்து விளைநிலமும் தனிப்பட்ட குடும்பங்கள் மற்றும் தனிப் பொருள்களின் உடமைக்கு மெல்லச் சென்று சேரத் தொடங்கியது காடுகள். மேய்ச்சல் நிலங்கள், களர் நிலம், சதுப்பு நிலம் ஆகிய நிலங்கள், சாலைகள், வேட்டை ஆடுகின்ற இடங்கள் மீன்பிடி இடங்கள் ஆகியன பொதுப் பயன்பாட்டிற்கு உட்பட்டிருந்தன. எனினும், இவை கூடப் படிப்படியாகத் தனி குடும்பங்களின் உடைமைகளாக மாறின.

நிலத்தின் மீதான தனி உடைமை வளர்ச்சியின் கட்டங்கள் குலக்கூட்டுச் சமூகத்திலிருந்து குடும்பக் கூட்டுச் சமூகத்திற்கு மாறியது. அந்தக் கூட்டுச் சமூகம் ஒரு பக்கத்தில் நிலமுடையவர்களாகவும், மறு பக்கத்தில் நிலம் இல்லாத ஏழைகளாகவும் பிரிந்தது [7]

ஒரு குழுத் தலைவன் (அரசன்) வேறு குழுவிற்கு உரிய நிலத்தைக் கைப்பற்றும்போது அயல் குழுவிற்கு உரிய நிலத்தையும். அவர்களுக்கு உரிய ஆடு மாடுகளையும், பொருள்களையும் தம் உடைமையாக்கிக் கொள்வான். வெற்றி பெற்றவனால் கொள்ளை கொள்ளப் பெற்ற பொருள் பங்கிடப்பெறும். நிலமும் பொருளும் இன்னபிறவும் போரில் பங்கேற்றவருடைய உடைமைகளாக மாறின. ஏனையோர் அந்த உடைமைகளைப் பெற வாய்ப்பு இல்லாமல் ஒதுங்கினர் எனவே, இடைவெளி பெரிதாகியது; பெரிதாகிக் கொண்டே இருந்தது. போரில் தோற்ற மன்னனும் அவனுடைய மக்களும் தம் உடைமைகளை இழந்து எளிமையாவதும், ஏழையாவதும் தவிர்க்க முடியாததாயின. குமணன் வாழ்க்கை இதற்குப் பொருந்திய சான்று. தமிழ் இலக்கியங்கள் காட்டும் ஆநிரை கவர்தல். கவர்ந்த ஆநிரைகளைப் பங்கிட்டுக் கொள்ளுதல் ஆகியன இங்கும் இணைத்து நினைக்கத் தக்கன. அக்காலத்தில் கால் நடை அல்லது ஆநிரை ஒருவனின் உடைமையாகச், சொத்தாகக் கருதப்பட்டது.

மேய்ச்சல் முழுத் தொழிலாக இருந்தது. ஆநிரை மட்டுமே உடைமை ஆயிற்று. தொடக்க காலத்தில் ஆநிரைக்காகவே தானியங்கள் பயிரிடப்பட்டன. விரைவில் அந்தத் தானியங்களே மனிதனுக்கும் உணவாக ஆயின. (இன்னும் நெல் முதலான தானியங்களை மாந்தரும் மாடும் ஆடும் தின்பதை ஒப்பிட்டு எண்ணுக). மேய்ச்சல் நிலத்திலிருந்து, மேய்ச்சல் நில உடைமை வளர்ந்தது. தனி நிலத்தைக் கால்நடை உடைமையாளர் அடைந்த கால கட்டத்தில், ஆநிரைகள் மாற்றுப் பொருளுக்குரிய நாணயமாகப் பயன்படுத்தப்பெற்றன. இவ்வாறாகச் சிலரிடம் கால் நடையும், நிலமும் உடைமைகளாக அமையவே—அமைதத்துக் கொள்ளவே உடைமையாளர்கள் ஒரு பக்கமும், உடைமை இல்லாதவர்கள் மறு பக்கமுமாகப்பொருளாதாரப் பிரிவுகள் தோன்றித் தெளிவான உருவம் கொண்டது. உற்பத்திச் சாதனங்களையும் உழைப்பின் விளைபொருள்களையும் விருப்பப்படி கையாளுகின்ற உரிமையே முதிர்ச்சி அடைந்த தனி உடைமையாகும் [8] (281 குடும்பம், சொத்து எனும் நூல்).

நாணயம் அல்லது காசு உருவாகாத நிலையில் ஆநிரை அந்த இடத்தை வகித்தது. இருக்கின்ற எல்லாம் பொதுவாக பிரிக்கவே இருக்கிறன்றவர்கள் இல்லாதவர்கள் என்ற இரண்டு பெரும் பிரிவுகள் தோன்றின. பொதுமைச் சமுதாயத்திலிருந்துதனி உடைமைச் சமுதாயத்திற்கு மாறினமையாலும், ஆநிரை பண்ட மாற்றுப் பொருளாக அறிமுகமான நிலையில் வாணிகம், வணிகர்கள் அல்லது உண்மையான சமுதாய சோம்பேறிகளாகிய வர்த்தகர்கள் தோன்றினார்கள். உற்பத்தியை உண்டாக்கும் உழைப்பில் பங்கேற்காமல், உழைப்பில் இருந்துவரும் விளைபொருள்களை விருப்பப்படி கையாளுகின்ற உரிமை வணிகர்கள் கைவயம் வந்து சேர்ந்தது. ஆளுகின்றோர்-வணிகர் என்ற இரண்டு பிரிவினரும் தெளிவாக உருவாகிவிட்டதைச் சங்க இலக்கியங்கள் படம்பிடித்துக் காட்டுகின்றன.

பழைய சமூகங்களில் அரசியல் என்ற அமைப்பு உருவானது, ஏற்றத் தாழ்வு தோன்றியதற்கும் பெருகியதற்கும் நிலை பெற்றதற்கும் காரணமாயிற்று. குழுவின் கீழ் உள்ள மக்கள் தங்கள் பாதுகாப்பிற்காகச் சில பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்து கொண்டார்கள். இந்தப் பாதுகாப்பு ஏற்பாடே காலப் போக்கில் அரசனின் தனி இராணுவமாக உருவம் கொண்டது. நல்ல தலைவனின் நல்ல நோக்கங்களுக்காகவும், செயல்களுக்காகவும் மக்கள் சமூகம் தொடக்கத்தில்-ஒப்புதல் அளித்த (தற்) பாதுகாப்புப் படை, தலைமுறை அமைப்பில் புதிய தலைவன் பொறுப்பேற்கிற போது பொது மக்களுக்கு எதிராகவும் பயன்படுத்தப்பட்டது. அரசு, (அரசன்) படைஞர் ஆகியன—அரசிற்கு ஆதரவாக இருக்கும் செல்வந்தர்களைப் பாதுகாக்கும் படையாகவும் செயலுருவம் கொண்டன. காலம் செல்லச்செல்ல அரசு என்ற யந்திரம் தன் நச்சுக் கால்களை அகல வைத்தபோது, பொதுமக்கள் பின் நோக்கி கீழ்நோக்கித் தள்ளப் பெற்றனர். மரபுரிமை, அதிகாரம், படை., செல்வந்தர்கள், வணிகர்கள் என்று சிறு பகுதியினருக்காகப் பெரும்பகுதி மக்கள்

உழைக்க வேண்டி வந்தது. பொதுமக்களின் பாதுகாப்பிற்காக அரசு படை என்ற நிலைமை மாறி அரசர்களுக்கும், படையினருக்கும் அவர்களைச் சார்ந்தவர்களுக்குமாக வாழ்வதே பொதுமக்களின் நோக்கமாக இருத்தல் வேண்டும் இக்கோட்பாடு மிகத் தெளிவாக வளர்க்கப்பட்டு விட்டதைச் சங்க இலக்கியம் எடுத்துரைக்கிறது[9].) இதனை ''மன்னன் உயிர்த்தே மலர் தலை உலகம்'' என்ற புறநானூற்று வரி தெளிவுறுத்துகிறது).

மன்னன் மற்றவர்கள்மேல், அவர்கள் தமிழர்களேயாயினும் படை எடுக்கிறபோது உள்நாட்டு மக்கள் தங்கள் உயிரையே கொடுத்தல் வேண்டும். அவ்வாறு உயிரைக் கொடுப்பவர்க்கு வீடுபேறு கிட்டும். போரில் பங்கேற்பதே பொதுமக்களின் கடமை. தன் அரசனுக்காக எதிர்த்த அரசனின் யானையைக் கொன்று வருதல் இளைஞர்களின் கடமை என்று எல்லாம் அரசனைச் சார்ந்த, அரச பாதுகாப்பைச் சார்ந்த கோட்பாடுகள் வளர்க்கப்பட்டன. இவ்வளர்ச்சியை-முதிர்ச்சியைச் சங்க இலக்கியம் வெளிப்படையாகப் படம்பிடித்துக் காட்டுகிறது

எனவே, அரசர், படைஞர், வணிகர் என்று உடைமை பெற்ற மக்கள் ஒரு சிலர் பகுதியினராகவும், அவர்களை ஒத்த உடைமை இல்லாத மக்கள் பெரும் பகுதியினராகவும் பிரிந்து விட்டனர். இந்த நிலையில் மழையின்மை. வறட்சி, வறண்ட நிலை ஏற்படுகிறபோது வறுமை தவிர்க்க இயலாததாயிற்று. வறுமையுற்ற மக்கள் அனைவருக்கும் அரசன் வாழ்வு தந்தாக வேண்டும்,

> மழைவளங் கரப்பின் வான்பே ரச்சம்
> பிழையுயிர் எய்தின் பெரும்பே ரச்சம்[10]

என்ற சிலப்பதிகார அடி மன்னனின் நிலையையும் கவலையையும் எடுத்துரைக்கிறது.

இக்கட்டத்தில் இல்லாத ஏழை மக்களுக்கு அரசனால் எல்லாவற்றையும் கொடுத்துவிட முடியாது. மாறாக, பொருள் உடையவர்களுக்காக வாழும் செல்வந்தரிடமிருந்தும் வணிகர்களிடமிருந்தும் பிடுங்கிக்கொடுத்து விடவும் முடியாது ஆனால் ஏழை மக்கள் கூக்குரலை அடக்கியாக வேண்டும். குறைத்தாக வேண்டும். இத்தக்கட்டத்தில் ஆளுகின்ற அரசினர் கண்டுபிடித்துப் பரப்பிய கோட்பாடே ஈகைக் கோட்பாடு என்று கருத வேண்டியுள்ளது. செல்வம் உடையவர்களிடம் இருந்து அடித்துப் பிடித்து மற்றவர்க்கு வழங்குதலுக்குப் பதிலாக அவர்களே தாமாக வழங்க வேண்டும். (இதனை இன்றைய பொருளியல் துறை அறிஞர்கள் Trust eeship என்பார்கள்) இந்த அடிப்படையில் இருவரையும் அமைதிப்படுத்த முடிகிறது'. கொடுக்கின்ற செல்வந்தனுக்குப் புகழ் கிடைக்கும். தன்னிடம் கையேந்த வருகிறார்களே என்ற பெருமிதம் கிடைக்கும்; வள்ளல் என்ற பேரும் கிடைக்கும், பசியுள்ள மக்களுக்கு இவ்வகையால் அவ்வப்போது தற்காலிகத் தீர்வு கிடைக்கும் எனவே, ஈகை உரத்துப் பேசப்பட்டது. இதனைச் சங்க இலக்கியம் மிகத் தெளிவாகப் பல இடங்களில் புலப்படுத்துகிறது. ஈகைக் கோட்பாட்டை வற்புறுத்துவோர் மற்றவரிடம் சென்று இரக்கும் கோட்பாட்டைத் தவிர்க்க முடியாது. இந்த நிலையில் ஈ என இரத்தல் இழிநதது என்பதை இணைத்துச் சொல்ல வேண்டி வந்தது. இதற்கு அப்போது தமிழ்நாட்டில் புகுந்த மதங்களும் உறுதுணையாக இருந்தன. குறிப்பாக சைன, பௌத்த மதங்கள் இரத்தலைச் சமய அறமாக ஒப்புக் கொண்டிருந்தன—ஓம்பி வளர்த்தன.

இரந்து உண்ணும் இரவலர்க்குத் தங்க வீடு இல்லை என்பதும், அவர்கள் ஊருக்குப் பொதுவாகவுள்ள பொதுவில்லிலும், மன்றத்திலும் படுத்துக் கிடந்தனர் என்பதும் இலக்கியச் சான்றுகளால் புலனாகின்றன.[11]

**இரவலர் இயல்பு:**

இரவலர் பழங்களுடைய மரங்களைத் தேடிச் செல்லும் பறவை போன்றவர்கள். செல்வப் பழங்களையுடைய வள்ளல்களை நோக்கி இரவலர்கள் தேடி நடந்தனர். பொருள் தரும் வள்ளல் வீடு, நெடுந்தொலைவில் இருக்கிறதே என்று அவர்கள் பார்ப்பது இல்லை. இடையிலே வெம்மை வீசும் சுரங்கள் இருக்கின்றனவே அவற்றைக் கடக்க வேண்டுமே என்று கலங்கினோரும் இல்லை. அன்பளிப்பை நோக்கிச் செல்வது அவர்களுக்கு இயல்பாக இருந்தது[12]

இரந்து உண்ணும் இரவலர்க்கு — ஏர்க் கலப்பையை நம்பி வாழும் உழவர்கள் அன்பளிப்பு வழங்கினர். (புறநானூறு 13, 373).

இரவலர் சிலரிடம் கடன் பெறுதலும் உண்டு. இரவலர்க்குக் கடன் கொடுத்தோர் எங்கேயேனும் இரவலர்கள் பரிசில் பெறச் சென்றால் அவர்களைச் சூழ்ந்துகொள்வர். காரணம், இரவலர் பெரும் பரிசில் வழி—கொடுத்த கடனைத் திரும்ப வாங்குவதற்காக[13]. இம்முயற்சியை அன்னோர் மேற்கொள்வர்.

முதுவாய் இரவலர்:

பிறரிடம் இரந்து வாழும் இரவலர்கள் நிறையப்பேசுவோராக இருந்தனர் என்பதை முதுவாய் இரவலன்[14] என்ற குறிப்பிலிருந்து உய்த்துணரலாம். இரவலர்க்கு அன்பளிப்பு வழங்கினர். பெரும் செல்வந்தராக இருந்தனர் என்பதையும், அவர் நில உடமையாளர்என்பதையும் ''கிழவன்'' என்ற குறிப்பு உணர்த்துகிறது[15]

'கிழவன்' பாணர்களுக்குப் பரிசில் அளிப்பவனாய் விளங்கினான் என்று தெரிகிறது. மேற்கண்ட சான்றுகள் புலமை நலம் வாய்ந்த அறிஞர்களும், கலை நலம்-வாய்ந்த பாணர்களும் வறுமையுற்றிருந்தனர் என்பதையும், புலமைத்திறமையும் கலைத்திறமையும் இல்லாத ஏழைகளும் இருந்தனர் என்பதையும் காட்டுகின்றன. அவர்களுக்கு உண்ண உணவு, இல்லை; உறங்க உரிய வீடும் இல்லை.

புறநானூற்றிலும், புற இலக்கியங்களிலும் புறத்தினை இலக்கணத்திலும் பரிசில் கடா நிலை (புறம்—11, 101, 136, 139, 158, 159, 160, 164, 169 196, 197, 199, 203, 210, 211, 266) என்ற துறையும், பரிசில் விடை (புறம் 140, 152, 162, 165, 397, 399) என்ற துறையும், (புறப்பொருள் வெண்பாமாலை 214) என்ற துறையும், பரிசில் துறை (புறம் 126, 135, 137, 148, 154, 161, 163 168, 200–208, 379) புறப்பொருள் வெண்பாமாலை (193) என்ற துறையும் இடம் பெற்றுள்ளன. இவையன்றி, பரிசில் (புறம் 101, 145, 147, 159, 326, 333) பரிசில் வாழ்க்கை (புறம் 47,206) பரிசிலர் (புறம் 14, 38, 121, 135, 168, 237)

பரிசில் மாக்கள் (புறம் 6)
பரிசிலர்க்குத் தேர் கொடுத்தது (புறம் 69)
பரிசிலர்க்கு யானை கொடுத்தது புறம் (140)
பரிசிலர்க்குத்தரம் அறிந்து கொடுப்பது (புறம் 208)

ஆகிய குறிப்புகளும் பழைய இலக்கியங்களில் இடம் பெற்றுள்ளன.

அதியமான் நெடுமானஞ்சியைக் காணச்சென்றார் பெருஞ்சித்திரனார், அதியமான் புலவரைக்காணாமல் பொருளைக் கொடுத்து அனுப்பவே புலவர் சினமுற்றார். தம் சினத்தை வெளிப்படுத்தும முகமாக அவர் பாடியுள்ள புறப்பாடலில் (208) ''வாணிகப் பரிசிலன் அல்லேன்'' என்று குறிப்பிடுகிறார். இக்குறிப்பிலிருந்து எதிர்முகமாக ''வாணிகப் பரிசிலரும்'' அன்று இருந்தனர் என்று உய்த்துணரலாம்.

பரிசிலர்—பரிசிலர் வாழ்க்கை என்ற சொல்லாட்சிகளைப் புலவருக்கும் பாணர்கள் முதலான கலைஞர்களுக்கும் பொதுவான சொல்லாட்சியாகக் கொள்ளலாம். இரவலர் என்ற சொல்லாட்சியைப் பிற்காலப் பிச்சைக்காரர் என்ற் சொல்லாட்சிக்கு ஏற்ற முன்னைய தமிழ் வழக்கு என்று கருதலாம்.

எனவே, பிறரை நம்பி வாழும் பரிசிலர் மட்டுமின்றி, இரந்து வாழ்தலையே நோக்காகக் கொண்ட இரவலரும் இருந்தனர் என்று உய்த்துணரலாம்.

இரப்போர் இல்லாத உலகம் இருத்தல் இயலாது. அப்படி ஓர் உலகம் இருக்குமானால் அது மரத்தால் செய்த பாவை கயிற்றினால் ஆட்டப்பட்டுச் சென்று வந்தாற் போன்றதாகும் என்று கருத்துப்படத் திருவள்ளுவர்,

இரப்போரை இல்லாயின் ஈர்ங்கண்மா ஞாலம்.
மரப்பாவை சென்றுவந் தற்று16

என்று தெரிவிக்கிறார். எனவே, திருவள்ளுவர் கால அல்லது திருவள்ளுவருக்கு முற்பட்ட காலத் தமிழகத்தில் இரப்போர் மிகுதியாக இருந்தனர் என்று ஊகிக்க இயலும்.

சமயங்கள் இரத்தலை வளர்த்தன. நிறுவனமாக (இன்ஸ்டிடியூசன்) உருவான இந்தியச் சமயங்களுள் மிகத் தொன்மையானது சமண மதம். சமண சமயம் கி.மு.விலேயே தமிழகம் வந்துவிட்டது. சமண முனிவர்கள் உறைந்திருந்த குகைகளில் கி.மு விற்கு முற்பட்டுத் தமிழ் எழுத்துக்களில் கல்வெட்டுகள் சில வெட்டப்பெற்று உள்ளன. இத்தமிழிக் கல்வெட்டுகள் தமிழகம் முழுவதும், குறிப்பாக, பாண்டி நாட்டுப் பகுதிகளில் பரவிக் கிடக்கின்றன.—எனவே, தமிழ்நாட்டில் சமணம் கி.மு.விலேயே வந்துவிட்டது என்பது தெளிவு.[17]

எனவே, பண்டைய இலக்கியமாகிய சங்க இலக்கியத்திலும் சமணக் கருத்துகளின் சாயல் இடம்பெற்றுள்ளது.[18]

சமண சமயம், துறவிகளின் சமயம் என்றே குறிக்கப்பட்டது. சமணர் என்ற சொல் ஸ்ரமணர் என்ற சொல்லின் திரிபாகும். ஸ்ரமணர் என்றால் துறவிகள் என்றே பொருள். சமண சமயம்—துறவிகளை மையமாக வைத்தே இயங்குகிறது. எனவே, சமணத் துறவிகளுக்கு உதவுவது இல்லறத்தாரின் கடமையாக வற்புறுத்தப்பட்டது.

ஊர்ப்புறத்தே இருக்கும் துறவிகள் பகலில் கதிரவன் சாய்வதற்கு முன்பு இல்லறத்தார் வாழும் தெருக்களுக்கு வந்து உணவு வேண்டி இரப்பர். அவர்களுக்கு உணவு அளிப்பது அல்லது பிச்சை இடுவது இல்லறத்தோர்க் குக் கட்டாயக் கடமையாகும். இக்கடமை வையா வ்ரதம் என்றும் அதிதி சம்பாவிரதம் என்றும் சமண சமயத்தில் குறிக்கப்படும்.

துறவியர், பிச்சை கேட்கும்போது இல்லறத் தார் பிச்சை இடுவதைச் சமண சமய அற நூலாகிய அருங்கலச்செப்பு பின் வருமாறு தெளிவுபடுத்துகிறது.

தானம் செயல், வையாவச்சம் அறம் நோக்கு
மானம்இல் மாதவர்க்குநற்கு, (135)
மனைவாழ்க்கையால் வந்தபாவம் துடைத்தல்
மனை நீத்தார்க்கு ஈயும் கொடை (139)

இவ்வாறு அறம் செய்தலுக்குச் சிரிசேனன் கதையை மேற்கோளாக எடுத்துக்காட்டுவது சமண மரபு ஆகும். அக்கதை பின்வருமாறு:

''மலைய தேசத்தில் இரத்தினகிரியை ஆண்டவன் சிரிசேனன். அவனுக்கு இரு மனைவியர். சிம்மநந்திதை, அநிந்ததை என்பன அவர்களுடைய பெயர்கள் ஆகும். சிரிசேனனுக்கு இந்திரன், உபேந்திரன் என்ற இருவரும் குழந்தைகள் ஆவர். அவர்களிடம் சத்தியபாமை என்ற பெண் அடைக்கலமாக வந்து சேர்ந்தாள். சத்தியபாமையின் கணவன் தாசிக்குப் பிறந்தவன் ஆவான். அவனோடு சேர்ந்து வாழ விரும்பாத சத்தியபாமை சிரிசேனனின் மனைவியரிடத்துத் தஞ்சம் அடைந்தாள். அரசனுடைய அரண்மனைக்கு அரக்கீர்த்தி, அமிதகதி என்ற இரண்டு சாரணர்கள் வருகை புரிந்தனர். அவர்களை வரவேற்று அன்னம் அளித்தனர் அரசனும் அரசியும். அவர்களின் கூட சத்தியபாமையும் உதவிகள் செய்தாள். அன்னம் அளித்து உதவி செய்தமையால் சத்தியபாமை உத்தம போக உலகத்தில் தேவராய்ப் பிறந்தாள். சிரிசேனனும் தேவ இன்பங்களைத் துய்த்துப் பின்னர்ச்சாந்தி நாத தீர்த்தங்கரராகப் (16 ஆம் தீர்த்தங்கரராக) பிறந்தார்.

சமணர் நான்கு வகை அறங்களைப் பேரறங் களாகப் போற்றினர்.

1. அன்ன தானம்
2. அடைக்கல தானம்
3. ஔடத தானம்
4. சாத்திர தானம்

சமணத்திற்குச் சைன தர்மம் என்றே பெயர் வழங்கியது. சமண சமயத்தில் ஏற்பது இகழ்ச்சிஅன்று. இரப்போர்க்கு இரங்குதலும் இகழ்ச்சி அன்று. எனவே ஈத்துவக்கும் வாழ்க்கை சைன அறமாகப் போற்றப்பட் டது. இப்படி ஈகையை வற்புறுத்தும் சமயங் களால் யாசித்தல் தவிர்க்க முடியாததாயிற்று.

சமண மதக்கோட்பாட்டின்படி இவை இரண் டும் முற்றுமாக ஏற்றுக் கொள்ளப்பட்டன என்பதைச் சமண சமய சாத்திரங்களும், இலக்கியங்களும் தெளிவாக எடுத்துரைக் கின்றன. இதனால்தான் சிலப்பதிகாரத்தில் கண்ணகி கூற்றாக —

''அறவோர்க்கு அளித்தலும்
அந்தணர் ஓம்பலும்
துறவோர்க்கு எதிர்தலும்
தொல்லோர் சிறப்பின்
விருந்தெதிர் கோடலும்''[10]

என்பன இல்லறக் கடமைகளாக எடுத்துரைக் கப்பெற்றன.

சமணத்தைப் போலவே பௌத்தத்திலும், இரத்தலும் கோடலும் ஏற்கப்பட்டன. சமணத் தைப் போலவே பௌத்தமும் துறவிகளை மையமாக வைத்து இயங்கிய மதமாகும். துறவியர் பிச்சை எடுப்பதும், இல்லறத்தார் பிச்சை இடுவதும் பௌத்த ஒழுக்கங்களாகப் போற்றப்பட்டன. பௌத்தக் கோட்பாட்டிற் குக் காரணமாகக் கருதப்படுவன மூன்று

புத்தம் சரணம் கச்சாமி
சங்கம் சரணம் கச்சாமி
தர்மம் சரணம் கச்சாமி

ஆகியனவாகும். திரிரத்தினம் இரண்டாவது தர்மத்தை மையமாக வைத்து இயங்குகிறது.

புத்தமதக் காப்பியமாக விளங்கும் மணி மேகலை எளியோர்க்கு அன்னம் இடுதலைத் தலைமையாக்குகிறது. அமுதசுரபி வழி மணிமேகலை பலருக்கும் அன்னமிட்டுக் காப்பாற்றியதை மணிமேகலைக் காப்பியம் தெளிவாகப் புலப்படுத்துகிறது.

இந்தியாவில் தோன்றி வளர்ந்த பெரிது சமயங்களுள் ஒன்றாகக் குறிப்பிடத்தக்கது இந்து சமயமாகும். இவ்விந்து சமயம் பிச்சைக்கு எதிரானது அன்று. பிச்சை எடுத்த லையும், பிச்சை இடுதலையும் மத ஒழுக்கங் களாக இச்சமயம் வற்புறுத்துகிறது. இந்து சமயத்தில் கடவுளர்களில் ஒருவரான சிவ பெருமான் கையில் தலைஓடு ஏந்திப்பிச்சை எடுத்தார் என்பது புராண வரலாறாகும். முனிவர்கள் பிச்சை எடுப்பது, இல்லறத் தோர் பிச்சை இடுவது ஆகியவற்றை மைய மாக—வைத்துப் பல புராணங்கள் இந்து சமயத்தில் பேசப் பெறுகின்றன. பெரிய

புராணம் என்ற நாயன்மார் வரலாறு கூறும் சைவநூல், சிவனடியார் பிச்சை ஏந்தி வருதலையும், அவர்களுக்குச் சைவ குடும்பத்தார் பிச்சை இடுதலையும் விரிவாகப் பல புராணங்களில் எடுத்துச் சொல்கிறது. பிச்சை கேட்டு வருவோர் பிச்சையிடுவோர் குழந்தையின் இறைச்சியைக் கேட்டாலும் கொடுத்தல் வேண்டும். குழந்தையைக் கொன்று குழந்தைக் கறி சமைத்துப் படைத்தலே மத அறமாகப் போற்றப்பட்டதைச் சிறுத்தொண்டநாயனார் புராணம் விரித்துரைக்கிறது.

இந்தியாவிற்கு வருகை தந்த மதங்களுள் ஒன்றான இசுலாம் பிச்சை எடுத்தலை எதிர்க்கவில்லை. அன்றியும் இசுலாமியப் பெருமக்கள் தம் வருவாயில் ஒரு பகுதியைப் பிச்சைக்காக ஒதுக்கி வைத்தல் வேண்டும் என்பதை மதக் கடமையாக இசுலாமிய நெறி வற்புறுத்துகின்றது

எனவே, மேற்கண்ட சைன, பௌத்த இந்து மத நெறிகளில் வந்த மக்கள், காலம்காலமாகப் பிச்சை எடுத்தலைச் செய்து வந்துள்ளனர், சமயச் சார்பாகப்போற்றி வந்துள்ளனர் என்பதையும் மேற்கண்ட செய்திகள் நிறுவுகின்றன.

சத்திரம், சாவடி வைத்தல், தமிழக அரசர்களின் பொதுத்தொண்டின் பட்டியலில் தொடர்ந்து இடம்பெறுகிறது. தமிழ்நாட்டு அரசர்கள் சாலை வழியில் சத்திரம் சாவடிகளைக் கட்டிப் பொதுமக்களுக்கு உதவி செய்தார்கள் என்று குறிப்பு வருகிறது. இச்சத்திரம் சாவடி ஆகியன பயணம் மேற்கொள்ளும் மக்கள் களைப்புறும்போதும், பயணத்தின் ஊடே இரவு வரும்போதும் தங்குவதற்கும், உணவு உண்பதற்கும் செய்த ஏற்பாடாகத் தெரிகிறது. வேதகல்வி கற்றுப் பயணம் மேற்கொள்ளும் ''அபூர்திகள்'' இவ்வாறு தங்க வசதி செய்யப்பெற்றது. வழிப் பயணிகளுக்கான தங்குமிடம், உண்ணும் இடம் என்பவற்றுடன் மட்டுமல்லாமல், ஏழ்மையால் துன்புற்ற, இல்லாத மக்களின் அடைக்கலக் கூடமாகவும் இது விளங்கியது. சங்க காலத்தில் பொதுவில என்பது இரவலர்களின் உறங்கும் இடமாக இருந்தது போன்று பிற்காலத்துச் சத்திரம், சாவடிகள் செயல்பட்டன என்று கருதலாம். விருந்தினர் என்பதற்கு அறிமுகம் இல்லாது வரும் புதியவர் என்ற கருத்துத் தொல்காப்பியத்தை அடியொற்றிச் சொல்லப்பெறுகிறது. முன் பின் தொடர்போ, உறவோ இல்லாமல் வாடி வரும் மக்களை அழைத்து விருந்தோம்பச் செய்ய வேண்டும் என்பது தான் கருத்தாகும். இக்கருத்தினை வாய்பபாக வைத்து, இரவலர்களும் உணவு பெற்று இருப்பர்.

தமிழ்நாட்டு வீட்டு அமைப்புகளில் திண்ணை என்ற ஒன்று தலைவாயிலுக்கு முன் இடப் பக்கமும், வலப்பக்கமுமாக அமைக்கப்பட்டிருக்கும். இத்திண்ணைகள் வருவோர் செல்வோர் வந்து தங்க வாய்ப்பாக அமைக்கப்பட்டவை என்று ஊகிக்கலாம். இத்திண்ணையைச் சங்க காலத்தில் மன்றம் என்றும் குறித்தனர். இதனை ''மன்றில் வதியுநா'' என்று மலைபடுகடாமும் (492), வயிரிய மாக்கள் மன்றம் அன்னை என்று பதிற்றுப் பத்தும் (29) தெளிவாக எடுத்துரைக்கின்றன.

ஆக, வீட்டு வெளிப்புறத்தே அமைந்த திண்ணைகளும், அரசர்களும் செல்வந்தர்களும் கட்டிய சத்திரம் சாவடிகளும் இரவலர்க்கு உணவும் உறைவிடமும் தரும் கூடங்களாக இருந்தன.

## அடிக் குறிப்புகள்:

1 புறம்:235: 10-14

2 இறை. கள. உரை. நூற். 1

3 சிலம்பு. உரைபெறு. 1, 2

4 சிலம்பு. 11: 64, 65

5 சிலம்பு. 177

6 சிலமபு. 25:100

7 இ.லி. அந்திரேவ், எங்கெல்சின் குடும்பம், தனிச் சொத்து ஆகியவற்றின் தோற்றம் எனும் நூல்—பக்கம் 215—218

8 மேற்கூறியது—281.

9 நெல்லும் உயி ரன்றே நீரும் உயிரன்றே
மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்
அதனால் யானுயிர் என்பது அறிகை வேன்மிகு
தானை வேந்தற்குக் கடனே (புறம் 189)

10 சிலம்பு. 25:10.101

11 பதிற்றுப்பத்து 375, 29, மலைபடுகடாம் 492

12 புறம். 47

13 புறம். டாக்டர் உ.வே. சாமிநாதய்யர் சமுதாயக்குறிப்பு 156.

14 புறம். 48, 70

15 புறம் பாடல் 155-(கொண்பெரும் கானத்துக் கிழவன்)

16 திருக்குறள் 1058

17 க.ப. அறவாணன், சைனரின் தமிழிலக்கண நன்கொடை பக்கம் 25—45

18 மேற்கூறியது பக்கம் 25—45

19 சிலம்பு. கொலை.

## ஆய்வு நாகரிகம்

ஒருவருடைய கருத்தை அவருடையதென்றே கூறுவதும், தம் கருத்தை மாற்றிக்கொள்ள ஆயத்தமாக இருப்பதும் எதிலும் எப்பொழுதும் ஆய்வு நோக்குடன் இருப்பதும் ஆய்வு மரபு ஆகும். பிறருடைய ஆய்வுத்திறன் கண்டுழியெல்லாம் பாராட்டும் மனப்பான்மை வேண்டும். தம்மில் சிறிய பதவியுடையாரிடம் ஓர் ஆய்வுத்திறன் வெளிப்படினும் போற்றவேண்டும். மாணாக்கரிடம் ஆய்வுப்பார்வை தென்படின், ஆசிரியர் அவரை ஊக்குவிக்க தயங்கக்கூடாது. ஆய்வு நுட்பத்தைப் பாராட்ட மனமின்றி, அதனை எடுத்துரைத்தவன் நம்மினும் சிறப்புற்று விடுவானோ என எண்ணிப் பாராட்ட மறுப்பதும் மறைப்பதும் தவறு. ஆய்வுநாட்டம் சிறிதும் இலாதானை, அவனது பட்டம் பதவி கருதி வானளாவப் புகழ்வது அதனிலும் பெருந்தவறு. எனவே, இக்குறைகளின் நீங்குவதே ஆய்வுப் பண்பாடு என அறிதல் வேண்டும்.

பிறர் கருத்தை மேற்கோளாகச் சுட்டலாமே தவிர, அதனைத் தமது கருத்துப் போல் வெளியிடக்கூடாது. ஆய்வுத் துறையில் திருட்டு என்பது அறிவுத் திருட்டு; பிற திருட்டுக்களைவிட அது கொடுமையானது; மிகுதியான தண்டனை தரப்படவேண்டியது.

ஆய்வுநுட்பம் ஒரு பெருநூல் முழுவதும் காணப்படாது ஒழியினும் ஒழியும்; ஒரு சிறு முன்னுரையில் ஒளிவீசினும் வீசும். ஆய்வு அடிவானம் போல முடிவற்றது; விடிவெள்ளி போலத் துலக்கம் தருவது; துருவமீன் போல வழிகாட்டுவது. ஆய்வில் தனக்கு நிகர் தானே என்று ஒவ்வோர் ஆய்வாளனும் எண்ணி ஏமாறுகிறான். 'யான், எனது' என்ற அகப்பற்று, புறப்பற்றுக்கள் ஓர் இளம் ஆய்வாளனை எளிதில் பற்றிக் கொள்கின்றன! 'தான் பிடித்த முயலுக்கு மூன்றே கால்' என்பதுதான், அனுபவமில்லாத ஆய்வாளனின் முதல் வாதமாகி விடுகிறது. ஆணவம், மீயுயர்மனப்பான்மை, தற்செருக்கு, ஆய்விற்காகா; எளிமை, அடக்கம், தற்சார்பின்மை ஆய்வை வளர்க்கும்.

# திருக்குறள் காட்டும் சமூக நீதி

டாக்டர் தா.வே. வீராசாமி,
பேராசிரியர் — தலைவர்,
தொகுப்பியல்துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்—613 001

சமூகநீதி என்பது மற்ற மனிதர்களுக்குரிய உரிமைபோல ஒவ்வொரு மனிதர்க்கும் ஒத்துரிமை உடைய நிலையை நல்கும். ஒவ்வொருவரும் தத்தம் நன்மையை நியாய முறைக்கேற்ப எதிர்பார்ப்பது இயற்கை. இந்நிலையில் மாந்தரிடையே காணப்பெறும் சமூகப் பொருளாதார உயர்வு தாழ்வுகளைச் சரிசெய்வதும் சமூகநீதியாகும். இவையிரண்டும் சமூகக் கட்டமைப்பை ஒட்டி அமையும். உரிமை என்பது நீதியுடன் ஒட்டிய உறவுடையது. சமூக நீதி என்பதை உறுதி செய்வதில் சமூகக் கட்டமைப்பே நீதியின் முதற் பொருளாகும். மற்றொரு வகையில் கூறின் சமூகத்தின் உயர்ந்த நிறுவனங்கள் மனிதரின் அடிப்படை உரிமைகளையும் கடமைகளையும் பகிர்ந்தளித்துச் சமூகக் கூட்டுறவால் பெறும்பயனை உறுதிப்படுத்தலுமாகும்.

இந்நிலையில் தமிழகத்தில் ஏறத்தாழ ஈராயிரம் ஆண்டுகட்கு முன் தோன்றிய திருக்குறள் மனித நலம் நாடும் நோக்கில் பல்வேறு உயரிய நெறிகளை வகுத்துத்தந்து தனி மனிதன் தான் வாழும் சமூகத்திற்குப் பயன்படவும் உரிய கடமைகளை ஆற்றி நல்லுரிமைகளைப் பெறவும் துணைநிற்கிறது.

நீதி என்ற சொல்லை முதன் முதலில் தமிழிலக்கியத்தில் பெருங்கதைக் காப்பிய ஆசிரியர் கொங்கு வேளிர் கையாண்டுள்ளார்.[1] 'நீதி மருங்கின்', நீதியும் பிறவும்', 'நீதியன்று' என்பவை அவர் கையாண்டுள்ள தொடர்களுள் சிலவாம். இதற்குமுன் தொல்காப்பியர் 'வழக்கியலாணை' (தொல். பொருள். 506) என்று கூற்றுவிகற்பம் பற்றிக் கூறும்போது 'நீதிநூல் வகையாற் கிளத்தல்' என்று பொருள்கூறிய பேராசிரியர், நீதிநூல் விதிபற்றிய கருத்தை விளக்கவுரையில் குறித்துள்ளார். திருக்குறளுக்கு உரை கூறிய பரிமேலழகரும் நீதிநூல் என்ற தொடரைப் பதினான்கு இடங்களில் பயன்படுத்தியதுடன் திருவள்ளுவரையும் 'நீதிநூல் உடையார்' என்பார்.[2]

நீதியை உணர்த்தும் வகையில் திருக்குறள் நயன் என்ற சொல்லைப் பயன்படுத்துகிறது (97)[3]. இப்பொருளைக் காட்டும் பரிமேலழகர் நீதி என்ற சொல்லை விளக்கிப் பொருளுணர்த்தும்போது 'உலகொடு பொருந்துதல்' எனக் காட்டுவார் (193, 194, 197, 860, 994). மேலும் அவர் அரசநீதியைக் காவல் நடத்தும் முறைமை எனப் பொருட்பால் உரைப்பாயிரத்தில் சுட்டுவார். இந்நிலையில் பொதுவாக நீதி என்ற சொல்லின் பொருளை உணர்த்த 'அறம்' 'நயன்', 'முறை' என்ற சொற்களைச் சிறப்பு நிலையில் பயன்படுத்தியுள்ளார். பல்வேறு பொருளில் நீதி[4] என்ற சொல் காணப்படினும் பெருவழக்காக 'ஒழுக்கம்' 'நியாயம்', 'முறைமை', 'அறநூல்' என்ற பொருளில் வழங்கி வருகிறது. இங்கு அறநூல் தவிர மற்றவற்றின் பயன்பாட்டைப் பின்பற்றுகிறோம்.

வடநூலில் நீதி என்பது அரசநீதியைச் சிறப்பாகக் குறிப்பது போல் தமிழில் அப்பொருள் முதன்மை பெறவில்லை. ஒழுக்கநெறி என்றே பெரிதும் வழங்கப் பெற்று வருகிறது. நடுநிலையில் நின்று வழக்கினைத் துலாக் கோல்போல் சீர்தூக்கித் தீர்ப்பளிக்கும் நீதியையும் அறம் என்பதுணர்த்தும். அறநெறிச் சட்டத்தைத் தமிழர் இயற்கை நீதியாகக் கருதினர். 'அறநெறி முதற்றே அரசின் கொற்றம்' என மதுரை மருதனிளநாகனார் கூற்று (புறம்.55) இங்கு எண்ணிப்பார்த்தற்குரியது. மனிதன் நன்னெறியியிலிருந்து

தவறி வீழ்ந்தபோது அந்நெறிப் படுத்துவது நியதி என்பர். நீதிமுறை என்பதை விளக்கும்போது ஓர்ந்து கண்ணோடாது இறைபுரிந்து யார் மாட்டும் தேர்ந்து செய் வஃதே முறை (541) என்று வள்ளுவர் குறள் கூறும்.

அறத்தை முப்பட்டைக் கண்ணாடியாகக் கொண்டு அதன் ஒருபுறம் ஒழுக்கமாகவும் மற்றொரு புறம் வழக்கமாகவும் மூன்றாம் பக்கம் அரசநீதியாகவும் காண்பர். மேலும் விளக்கம் பெற ஒழுக்கம் தனி மனித அறத்தைச் சுட்ட வழக்கமும் அரச நீதியும் சேர்ந்து சமுதாய அறத்தைச் சுட்டும் என்பர்[5],

மற்ற மக்கள் நீதி எனக் கூறியது தமிழர் கண்ட அறத்தின் ஒருபகுதியாக உள்ளது. எனவே இன்று காணும் நீதி என்பது அதன் முதற் பொருளிலிருந்து சற்றே மாறி விரிவு பட்டு விளங்கிப் பொதுவாக ஒழுக்க இயல்பு களைக் குறிக்கும். இத்தகைய பொருள் வளர்நிலை நீதியின் நிலையை உணரத் துணை செய்யும்.

சமூகத்தின் ஒப்புதலைப் பல இடங்களில் வள்ளுவர் வேண்டுவார். உலகத்தோடு ஒட்ட ஒழுகுவோரே கற்றவர் (140) என்பார். ஒழுக்கம் எது என அறிவிக்கும் அறி வுடைமை பற்றி விளக்கும்போது 'உலகம் தழீஇயது ஒட்பம்' (425) 'எவ்வது உறை வது உலகம் உலகத்தோடு அவ்வது உறை வது அறிவு (426) எனக் கூறுவார். உலகம் எனபது உயர்ந்தோராம் சான்றோரையே என்பதைக் குறள் ஏற்றுக் கொள்ளும். செய் யற்க சான்றோர் பழிக்கும் வினை (656) என் பது போன்ற கூற்றுக்களால் சான்றோர் ஏற் கும் நெறியே ஒழுகத்தக்க நெறி என அறிகி றோம்.

இவற்றைக் காணும்போது குறள் கூறும் ஒழுகலாற்றை அறிதற்கு அடிப்படையாக மனச் சான்று, சமூக ஒப்புதல், சான்றோர் கூற்று ஆகியவற்றைக் கொள்ளலாம்.

சமூகநீதிக் கொள்கையை உருவாக்கும் முயற்சியில் பொருள் புலப்படுசொல்லாக 'விழுமம்' என்பது அமையும். சமூக நிறுவனங்கள் பற்றிய மெய்யறிவாளர்களின் அணுகு முறை என்பது மனித சமுதாயம் பின்பற்றக்கூடிய ஒழுக்க ஆன்மீக விழுமங் களை நன்குணரும் வகையில் வெளிப்படுத்து வது ஆகும். அவர்கள் பின்பற்றும் கொள்கை, நிறுவனங்களின் குறிக்கோள் களுக்கும் அவை பின்பற்றும் நிலையிலுள்ள நடைமுறைகளுக்கும் இடையே பாலம் அமைத்த பின் அதன் துணையால் தனி மனித ஒருமைப்பாடாகக் காண்பதாகும். மன்பதையில் காணும் மனிதப் பண்பின் சுடரைத் தூண்டி விடுவதே ஒழுக்க மேம் பாட்டின் உயரிய கருத்து. அதனால் சமூக நீதியின் மலர்ச்சி மனித இயல்பில் காணும் சான்றாண்மைக் கூறுகளாக வெளிப்படும்.

சமூகத்தில் ஒழுக்க விதிகள் என்பவை முழுமையானவை அல்ல; சார்நிலை பூண்டவை; சிலபொது நலன்களை அடை யும் கருவிகள். காலம் மாற மாற அவற்றின் வளர்ச்சியும் மாறும். இவ்வாறு கருதும் போது சமூகநீதிக் கருத்து என்பதே பயனற் றது எனக் கருதுவோரும் உளர். பழங்காலத் திலிருந்த ஒழுக்கம் பற்றிய குறிக்கோள் இன்று பயன்படாதெனில் இன்றைய பட்டறிவும் எதிர்காலத்திற்குப் பயன்படாது என்று கூற இடமுண்டு, சார்பியல்வாதி களின் கருத்துப்படி 'நல்லது', 'நேரிது' என்பவை சமூகச் சூழலால் உருவாகும். அடிக்கடி சமூகச் சூழல்கள் மாறுவதால் நிலைத்துள்ள நல்லது ஒன்றுளது என்பதை ஒப்புக்கொள்ள மறுப்பர்,

விழுமம் என்பது மனித நடத்தையின் கட்டளைச் சட்டங்களைப் பின் பற்றுவதா கும். இதனைச் சமூக நீதியின் வெளிப்பாடு எனச் சிறப்பாகக் குறிப்பர். சமூக நீதியின் பொதுக்கருத்து விழுமத்தின் வேறுபடு முறை களோடு உறவுடையது. இந்நிலையில் சமூகக் குறிக்கோள்கள் என்பவை கல்வி அறிவின் சாரம் அல்ல. தனிமனிதன் போற் றும் விழுமமாம். அவை சமூக நீதியின் கட்டளைச்சட்டங்களுடன் ஒத்தவை எனலாம். இந்நிலையில் சமூக நீதி என்ற கருத்தை விழுமம் குறிக்கோள், கட்டளைச் சட்டம் எனக் கொள்ளலாம் சமூகநீதி பற்றி இம் மூவகை ஆய்வு தனிமனிதனிடம் கருக் கொண்டுள்ளதையும் அவன் பங்கு பெறும் பரந்த குழுக்களில் கண்டறிவதையும் சிறப் பாகக் குறிப்பிடுவர். பெருங்குழுவை ஆரா யும்போது சமூகநீதி பற்றிய கருத்து எவ் வாறு செயல்படுகிறது என்பதை அறிவது கடினம். ஏனெனில் சிறுகுழுவை விடப் பெருங்குழுவில் பல்வேறு வகை மனிதர் இருப்பர். அதனால் பல்வேறு வகைச் சிக்கல் களும் எழும். எனினும் தனிமனித ஒழுக்க உணர்வு பெருஞ்சமூகக் குழுவில் கலந்து பரவி விடும் என்பதை எண்ணிப்பார்க்க இயலும்.

மனிதன் தன் வாழ்வில் பாதுகாப்புடன் வாழ

வேண்டும். அதன் அடிப்படையில் தான் ஒழுக்கம், ஆன்மீகம் பற்றிய உயர்நிலை மாடங்களைக் கட்டமுடியும் இவ்வடிப் படைத் தேவைகள் என்பவை உணவு உடை உறையுளாகும். அவை கிட்டிய பின்னரே பெருஞ்சுகம் தேடவும் செல்வப் பெருக்கில் மிதக்கவும் மனிதன் முனைவான். அவற் றைத் தேடும் நோக்கில் அவை மகிழ்வூட்டும் என்ற நம்பிக்கை புலனாம். அப்பொருள் களில் 'வேண்டதத்தக்கநிலை', 'விழுமநிலை' என்பவை காணப்படும். இவ்விரண்டையும் நன்கு ஆராயும்போது பொருளியல் விழு மத்தை மனிதன் போற்றிய பாங்கு தெரியும்.

மனித வாழ்வு என்பது தேவைகளும் அவற்றை நிறைவு செய்யும் நெறிகளும் அளிக்கும் பட்டறிவாகும். இத்தகு அறிவின் அடிப்படையில் மனிதனின் தேவை பலதிறப் பட்டவையாகப் பெருகும். தேவையை நிறைவு செய்யத்துணை புரிவன பொருட் களே. அங்ஙனம் நிறைவு செய்யாது இருக்க இயலாது. இவ்வுண்மையை அரிஸ்டாடில் வற்புறுத்தியுள்ளார்-[6]

மனிதனிடம் பொதிந்துள்ள பேராற்றல்கள் வளர வேண்டுமெனில் வாழ்வில் அமையும் பொருளியல் தேவை நிறைவுற வேண்டும்.

இதற்கடுத்த நிலை சமூகநீதி பற்றி அறிய அறவியல் சில குறிக்கோள்களை வகுத்தளிக் கிறது. அவற்றைத் தனிமனித வாழ்விலும் பின்பற்றுமாறு செய்கிறது. இந்நிலையில் அறவியல் விழுமம் நிலை பெறுகிறது. இது மற்றச் சமூக விழுமங்களுடன் இயைபுடைய தாகச் சிலர் கொள்ளார். அறவியல் விழுமங் களாம் நடுநிலைமை, நேர்மை என்பவை முழுக்கமுழுக்க ஏற்கத் தக்கவையாகும். ஏனெனில் அவை மக்கள் வாழ்வை நெறிப் படுத்த உதவி செய்கின்றன; எந்நெறியில் செல்லவேண்டும் என்ற வாழ்க்கைக் குறிக் கோளை நன்கறியத் துணை செய்கின்றன. இவற்றையெல்லாம் எண்ணும்போது சமூக வாழ்வோடு எந்த அளவு விழுமம் ஒட்டி யுள்ளது என்பதை உணர முடியும்.

மனித வாழ்வை நெறிப்படுத்தும் வழியும் சென்றடையும் முடிவும் ஒன்றை ஒன்று சார்ந் தவை. ஒரு சங்கிலியில் உள்ளகண்ணிகள் ஒன்றை ஒன்று சார்ந்துள்ளதைப் போன்று வழியும் முடிவும் அமைந்துள்ளன. எந்த நெறி யிலும் சென்று குறிக்கோளாம் முடிவை எட்டலாம் என்பது உலகியல் வாழ்வு நெறி யில் காணும் போக்கு. ஆனால் அறவியல் நெறியில் குறிக்கோளும் கைக்கொள்ளும் நெறியும் அறத்தின் ஒளியில் ஒளிர்வன வாகவே அமைய வேண்டும். பயன் என்ற முடிவில் நெறியின் நிலையைக் காணலாம்.

பொய்யாமை பொய்யாமை ஆற்றின்
அறம் பிற
செய்யாமை செய்யாமை நன்று (297)

என்று கூறும்போது நெறியின் தூய்மையைக் குறள் நன்கு காட்டும்.

ஒரு நல்ல முடிவை நல்ல நெறியால் அடைந் தால் அது மற்ற முடிவுகளுக்கும் பொருந்தி வரும். ஒன்றன் முடிவை அடைந்த பின்னர் வேறுபல முடிவுகளையும் அறவியல் வாயி லாக அடைந்திட இயலும். ஒன்றாக நல்லது கொல்லாமை மற்றதன் பின் சாரப் பொய் யாமை நன்று (323) எனக் கூறும்போது கொல்லாமையை ஒட்டிப் பொய்யாமை நிற் பதைக் காட்டும் நெறியால் நல்ல ஒரு முடிவு வேறுசில நல்ல முடிவுக்கும் வழிவகுக்கும் என்பதை உணர்த்தும். இந்நிலையில் சமூக மெய்யியல் காட்டும் முடிவின் உயர்வையும் சமூக அறிவியல் கருதும் நெறியையும் அறி யின் சமூக மெய்யியல் முடிவுகளை அடையும் பாங்கு புலனாம்.

அரசியல் என்பது நீதி, நாட்டு விடுதலை பற்றி எண்ணும். எனினும்சமூகத்தில் வாழும் மனிதன் தான் அவற்றை அடைய முடியும் எனலாம். இவற்றின் முடிவு பற்றிய தகைமை பற்றிச் சமூக மெய்யியல் விளக்கும். முடிவின் தகைமையை மறுத்து நெறியின் சிறப்பை மட்டும் ஏற்பின் மனித அறவியல் விருப்பினையே, நிழலைத் தேடும் குறிக் கோளற்ற செயலாக்கிவிடும். இந்நிலையில் விருந்தோம்பும் போது முகந்திரிந்து நோக் கலையும் (90) அகனமர்ந்து ஈதலின் நன்றே முகனமர்ந்து இன்சொலனாகப் பெறின் என்ற குறட் கருத்தையும் எண்ணிப்பார்க்க இடமுண்டு.

அதுபோன்றே நெறிகள் என்பவை முடிவின் பண்பை உணர்த்தும். குறிக்கோள் நல்ல தாக இருந்தும் கொண்ட நெறி குறை யுடையதாக இருந்தால் அதன் விழுமம் குறைபடும். எனவே, பிழையான நெறிகள் நல்ல முடிவுகளை நாசமாக்கிவிடும். இந் நிலையில் முடிவைப் போலவே நெறியும் தூயதாக இருக்க வேண்டும் என்பர். அது கொண்டு சமூகவளர்ச்சிப் போக்கை உறுதி செய்ய முடியும். இம்முடிவால் அறவியல் விழுமத்தின் இன்றியமையாமை நன்கு புலப் படும்.

மெய்ம்மை என்ற குறிக்கோளை நோக்கியே

மனித எண்ணங்கள் செல்ல வேண்டும். இந்நெறியில் மனிதனும் சமூகமும் பின்பற்றும் பல்வேறு விதிகள் பற்றித் தெளிவாக அறிய அளவியல் நெறி உதவும். அதன் துணையால் பல்வேறு வகையில் முரண்பட்ட பண்பாட்டு நாகரிகங்கள் பற்றி அறிய வாய்ப்புளது. இந்நெறியில் மனித உறவே முற்பட்டு நிற்கும். அதனால் சமூக ஒற்றுமை, தனி மனித ஆளுமையின் ஒருமைப்பாடு ஆகியவற்றை நன்கு அறிய முடியும்: இதனையே எல்லாச் சமூகங்கள் பற்றியும் பண்பாடு பற்றியும் அறியப் பயன்படுத்த இயலும். இதன் முடிவில் சமூக நீதியின் பொதுவிதிகள் காண வழி செய்யும்.

பல்வேறு நிறுவனங்களின் வாயிலாகக் கண்டறியும் கட்டளைச் சட்டங்களும் அவை காணும் சமூக வாழ்வு நெறிகளும் சமூக நீதியை விழுமம் தேடும் மனிதனின் ஒழுங்கு முறையாகக் காட்டும்.

இம்மூவகை நெறியால் சமூக நீதியை உணர்ந்தது போலவே தனிமனிதன் வாயிலாகவும் உணர முடியும். ஏனெனில் தனி மனிதன் தன் உளத்தால் பெரிதும் பேணி முடிவில் அடைய விரும்பும் விழுமங்களில் சமூக நீதியின் கதிர்கள் புலனாகும். அதன் முடிவு தனிமனிதனிடம் காணக் கிடக்கின்றது என்பதை ஏற்காதவரை எல்லோராலும் உணரப்படும் கட்டளைச் சட்டமாகச் சமூக நீதியை நாம் ஏற்றுக் கொள்ளமுடியாது.

சமூக நீதியைக் குறிக்கோளாகக் கொண்டவர்கள் விழுமம் தேடல், குறிக்கோளமைப்பு, கட்டளைச் சட்ட உணர்வு ஆகியவற்றை மதிப்பிடு கருவியாகக் கொள்வர். அவ்வாறு கொள்ளும்போது சமூக நலனுக்கெனச் சில விதிகளை வகுத்துக் கொள்ள முடியும். சீன அறிஞர் கன்பூசியஸ் கருத்துப்படி மனித உளப்பேற்றால் அதனை நன்கு புரிந்து கொள்ள இயலும். ஆராய்ந்து காணும்போது சமூகநீதியை மனித உளப்பேறின்றி அடைய முடியாது என்பது திண்ணம். இதனால் மனித உறவை மதிக்க வேண்டும் என்பதை நன்குணரலாம். ஏனெனில் மனிதன் வெறும் சமூக அலகு மட்டுமன்று. அவன் போக்காக அமைகின்றவை விழுமத் தேட்டமும் குறிக்கோள் நாட்டமும் ஆகும். அத்துடன் தான் வளரும் சூழலையும் உருவாக்கித் தருகின்றான்.

சில சமயங்களில் அநீதிக்கு ஆட்படும் சூழல் ஏற்பட்டுவிடும். அதன் விளைவால் சமூக நீதியை உண்மையாக விரும்பும் நிலை உருவாகி விடுகிறது. இதனை மனித மனத்தில் ஒளிவிடுகின்ற சமூக நீதியின் கனற்பொறி கொண்டுணரலாம். அது தொகுக்கப்பெற்ற அகநிலையிலிருந்து வெளிப்படுகிறது என்பர். சமூகச் சூழலில் மனிதனுக்கு ஏற்படும் அநீதி, வேறுபாடு கற்பித்தல், சரிநிகரின்மை, தகுதியறியாமை ஆகியவற்றின் செறிவை மனிதமனத்தில் தோன்றும் மீட்டுருவாக்கத்தின் துணைக்கொண்டு தனி மனிதனின் மீளமைப்பையும் சமூகத்தின் சீரமைப்பையும் எதிர்பார்க்க வழியுளது.

இந்நிலையில் சமூக நீதி என்பது மனிதனுக்குரிய ஒழுக்க விதியாகும். அது விருப்ப நிலையிலும் விதிநிலையிலும் அமைவுறும். அது மனித மனத்திற்கு மட்டும் உணரத்தக்கதன்று. சமூகவாழ்விலும் உணர்த்தப் பெறுவதாகும்.

நல்லமனத்தில் சமூகநீதி பேராற்றலாக இருக்குமெனில் அம்மனம் நல்ல சமூக அமைப்புக்கொண்ட நல்லுலகு பற்றிக் கனவு காண்பது இயற்கை. நல்லுலகம் என்பது நன்மனிதரின் வாழுமிடம். அத்தகைய நல்லவர்க்குரிய சமூகநீதி பெறும் அறவியல் வாழ்வையே வள்ளுவர் தம்திருக்குறள் வாயிலாகக் காட்டுகிறார்.

சமூக நீதி என்பது சமூகத்தில் நீதிவிதிகள் முழுமையாகச் செயல்படுவதைக் குறிக்கும். சமூகநீதி பற்றிய தொடக்கநிலை ஆய்வில் முழுமையாக அது மனித சமூகத்தில் வெளிப்படாத காரணங்களைக் கண்டறியவேண்டும். அத்துடன் சமூகநீதி விதிகள் மலர்ச்சி பெறுதற்குரிய கூறுகளையும் கண்டறிய வேண்டும். சமூகநீதி விதிகள் முழுமையாக வெளிப்படாததற்குப் பலகாரணங்கள் இருக்கலாம். அவற்றில் ஒன்று நீதியைச் சரிவரப் புரிந்து கொள்ளாமை ஆகும். அதனால் நீதியைச் சமூகத்தில் அரைகுறையாகவே பயன்படுத்துகின்றனர். சமூகநீதி மலர்தற்குரிய கூறுகளை அறிந்து செயல்படுத்தும்போது சமூக அறிவியலின் ஆய்வுப்பொருளாக மனிதன் அமைகிறான்.

சமூக நீதி என்பது வெறும் கருத்தன்று. வாழ்வின் எல்லாக் கூறுகளையும் உட்படுத்தி மனிதர் ஒருவர்க்கொருவர் உறவாடும் உறவுநிலை மீது செல்வாக்குக் கொண்ட ஒழுக்க விதியாகும். அதன் தோற்றம் மனிதன் எனக் கொண்டால் நீதி நன்கு புலப்படும். சமூகத்தில் ஒருவருக்கொருவர் உறவாடும் நிலையை அறியச் சமூகத்தின்

சிறப்புக் கூறாக விளங்கும் தனிமனிதனைக் கண்டறிய வேண்டும். மனிதனே இவ் ஆய்வின் நடுநாயகமாக விளங்குகிறான். அதனால் மனித ஒருமைப்பாட்டுக்கு ஆற்றல் நல்குவது சமூகநீதி என்ற விதியை மேற் கொள்வர்.

அதன் வளர்ச்சி மனிதனின் பார்வையை விரிவுபடுத்தி மனித இனம் பற்றிய ஆர்வத் தைப் பெருக்குகிறது. இவ்வளர்நிலை முத லில் தனிமனித உள்ளத்தில் தான் கொண்ட பல்வேறு ஆற்றல்கள் பற்றி எண்ணும்போது வெளிப்படும். அடுத்துத் தன்னொத்த மாந்தரிடையே அவ்வாற்றல்களைச் செயற் படுத்த முயலும்போது புலப்படும். மன் பதையை முற்றிலும் எண்ணிப் பார்ப்பதால் தன் சமூகத்தின்மேல் கொண்டபற்று நீங்கும்.

நீதி விதிகளைக் கண்டறிவதில் சில இடர்ப் பாடுகள் உள. அதைப்பற்றி எண்ணிப் பார்க்க வேண்டிய களம் பெரிது. பெருங்கள மாம் குழுவின் மையமாக விளங்கும் மனித னின் உளத்தில் எழும் ஒழுக்க உணர்வு களைக் கண்டறிதலும் கடினம். மன்பதை யின் உணர்வாற்றல் பண்பு தனித்தனி மனிதரிடையே காணும் உறவுச் சிக்கலைக் குறிப்பிடும். குழுக்கள் பெருகப் பெருக சிக்கலும் பெருகும். தனிமனித ஒழுக்க உணர்வின் மீது குழுவின் தாக்கம் மிகுதியாத லால் சமூக நீதிபற்றிய ஆய்வு, சிக்கல் உடையதாகும்.

தனிமனிதன் என்பவன் விழுமக் கொள்கலன் ஆவான். அவன் கொண்ட பல்வேறு விழுமங் களில் காணும் ஒற்றுமையால் மனித ஒருமைப்பாடு உறுதி பெறும்.

சமூகத்திலுள்ள பொருளாதார நிறுவனங்கள் நீதி நிலைபெறுதற்குரிய சூழலை உண்டாக் கும். நிறுவனங்களைவிடத் தனிமனித நலத் திற்குரிய தேவைகளை நிறைவு செய்யா விட்டால் படைப்பாக்க மெய்யியல் தோன்ற இயலாது என்பது மிகச் சிலர் கருத்து. வேறு சிலர் அடிப்படைத் தேவை இல்லாத போதும் உயரொழுக்கத்தைப் பின்பற்றுவதே குறிக் கோள் வாழ்க்கை என்பர்.

ஈன்றாள் பசி காண்பானாயினும் செய்யற்க சான்றோர் பழிக்கும் வினை (656) என்ற குறளின் கருத்து இங்கு ஒப்பு நோக்கற் குரியது. அடிப்படைத் தேவை கிட்டாநிலை யில் நீதி வேண்டும் என்ற உணர்வு பொங்கி எழ வாய்ப்புளது. இவ்வாறு ஒவ்வொரு சமூகமும் தன் கருத்தை வெளிப்படுத்தும் போது உறவு நிலை வளரும் சூழல் ஏற்படும். இச்சூழலில் நீதி உணர்வை மனித மனத்தில் திணிக்க வேண்டுவதில்லை. அது இயல்பாக மனித உளத்தில் அமைந்துள்ளது எனச் சிலர் கருதுவர்.

வள்ளுவர் உலகிலுள்ள நல்லறங்களைக் கூறியதுடன் தீமைகளையும் எடுத்துக் கூறி யுள்ளார். அன்புடைமை, விருந்தோம்பல், செய்ந்நன்றி அறிதல், நடுவு நிலைமை, ஒப்புரவறிதல், ஈகை போன்றவை முன்ன தைக் காட்டப் பிறனில் விழையாமை, அழுக்காறாமை, வெஃகாமை, தீவினை யச்சம் போன்றவை பின்னதன் பாற்படும்.

அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு(72) எனக்கூறும் போது தனிமனிதன் என்ற கட்டை நீக்கிப்பின் பிறர்க்காகத்தான் தேடிய பொருளைத்தருவது மட்டுமன்றித் தன் னையே நல்கும் பேருணர்வும் தளிர்க்கிறது. முன்னர் அறிந்தோர்க்குதவுதலுடன் புதி தாய் வந்தார்க்கும் உதவும் செயல் வளர் வதைக் குறளின் விருந்தோம்பல் அதிகாரம் வெளிப்படுத்தும். தான் பிறர்க்குதவுதல் போலப் பிறர் தனக்குதவும் போது அவர் செய்த நன்றி என்றும் உள்ளி நன்றிக்கடன் பூணும்கடமை உணர்வைக் காட்டும். அதுவே எல்லை கடந்து சமூக நீதியை அழிக்கும் அளவுக்குச் சென்று விடுமாயின் நடுவுநிலை பேணித் தனி மனிதக் கடமையைக் காட்டி லும் தன்னைச் சார்ந்தோர் என ஒருதலைப் படாது சமூக நலனே ஓம்பப்படும். தான் பெற்ற பொருளாலும் உடலாலும் பிறர்க்கு உலகநடையை அறிந்து செய்யத் தகுவன செய்யும் ஒப்புரவறியும் அறத்தில் ஊருணி நீர்போலவும் (215) உள்ளூர்ப் பழுத்த மரம் போலவும் (216) மருந்தாகித் தப்பாமரம் போலவும் (217) உதவும் சமூக உணர்வு மல ரும். அக்கால மக்களில் வறுமைப்பட்டார்க்கு மாற்றாது ஈயும் செயல் எதையும் எதிர் பாராது தன்னொத்த மக்களுக்கு உதவும் தனிமனித ஒழுகலாற்றை உணர்த்தும். இவற்றின் எதிர்மறையாகப் பிறர்பொருளை விரும்பல் தீவினை செய்தல் ஆகியவற்றைத் தவிர்ப்பதால் சமூக ஒழுகலாறு காக்கப் பெறும்.

சுற்றுச் சூழலை ஆய்ந்து அதனடிப்படையில் தன்னொத்த மாந்தர்பால்ஒழுகும் பாங்கினை உருவாக்கிக் கொள்ள வழிகாட்டுகிறது குறள்நெறி. சமூகம் ஒருவனை மதிக்காத போது அவனுக்கு மதிப்பிலா நிலை ஏற்படு கிறது. 'இல்லை இகழ்வார் முன் ஏறுபோல் பீடுநடை' (59) என்று கூறுவது கொண்டு

பெருமிதவாழ்வு என்பது பிறர் மதிக்கும் மதிப்பில்தான் உள்ளது. எனவே விழுமம் எனும் மதிப்பை ஒட்டியே ஒழுகலாறுகள், நீதிகள் உருவாக்கப் பெறுவதைக் குறள் உணர்த்தும்

பிறர் நிலையை உணர்ந்து தன்னை மாற்றிக் கொள்வது போன்றே தன் அகநிலை வளர்வடிப்படையிலும் பிறர்பால் செய்தற்குரிய செயல்கள் எவை. தவிர்தற்குரிய செயல்கள் எவை எனக்கூறும். 'தன்னெஞ்சே தன்னைச் சுடும்' (293) என்று கூறும் போதும் 'பூதங்கள் ஐந்தும் அகத்தே நகும்' (271) என்று உரைக்கும்போதும் உள்ளாற்றல் வலிமையின் இருப்பு நிலை புலப்படும். இது அகச்சார் நிலையின் விளைவு. அது வளர்ந்து ஒப்பீட்டு நிலை எய்தும்போது 'வலியார் முன் தன்னை நினைக்க தான்தன்னின் மெலியார்மேல் செல்லும் இடத்து (250) எனும் குறளில் மெலிந்த தன்னிலை வலிவுள்ள பிறர் நிலையுடன் ஒப்பிடும்போது அவர்முன் அஞ்சி நிற்கும் பாங்கு நன்கு விளங்கும். அத்தகைய அச்சமே தான் தன்னைக் காட்டிலும் மெலியார் மேல் செல்லும்போது அவர்க்கு அச்சம் உண்டாகும் எனத் தன்னிலை அளவுகோலைக் கொண்டே புறநிலையை அளக்கப் பயன்படுத்தின் உண்மை அருளுணர்வு தோன்ற வழி செய்யும். இதனால் தன்னைப்பார்த்துப் பிறரைப் பார்க்கும் ஒப்பீட்டு நெறியால் ஒழுகலாறு வரையறுக்கப் பெறுகிறது. அத்துடன் பிறர் வாழ்வினை நேரில் கண்டு நெறி வகுக்கும் போக்கை 'ஊக்கத்தின் ஊக்கி இடைக்கண் முரிந்தார் பலர்' (473) 'இகழ்ச்சியிற் கெட்டாரை உள்ளுக' (539) என்ற குறளடிகள் உணர்த்தும். பொதுவாக இவற்றைக் காணும்போது அகச்சார்பு புறச்சார்பு எனும் இருநிலையிலும் பிறர் நயன் கருதி அதற்கேற்ப ஒழுகுநெறி வகுக்கப்படுகிறது.

கொடிது கொடிது வறுமை கொடிது

என்ற கருத்துப்படி மனித சமூகத்தில் மிகக் கொடியதாக இன்றும் மக்களை வாட்டி வருவது வறுமைதான். அது சமூக உறவு நிலையையே முதலில் சீர்குலைத்துப் பின் நாட்டையும் நலியச் செய்கிறது. இவ்வுண்மையை நன்குணர்ந்த வள்ளுவர் வறுமை பற்றித் தம் கருத்தை விளக்கமாகவே எடுத்துக் கூறியுள்ளார்.

வறுமையால் எதற்குமே மனம் குலையாத தாயின் உறவும் குலைவதைக் குறள் நன் குணர்த்தும் (1047). பொது நிலையில் எல்லா வகையான உறவுகளையும் வறுமை குலைக்கும் ஆற்றல் கொண்டது. எனவே தான் 'இன்மையின் இன்மையே இன்னாதது' என நல்குரவு அதிகாரத்தில் முதற் குறள் கூறும். அத்துடனிற்காமல் இம்மை இன்பத்தையும் மறுமை இன்பத்தையும் இல்லாமற் செய்யும் பாவியாக வறுமை உருவகிக்கப்படுகிறது (1042). வறுமையாளன் அறிவு பெறுவது அரிது. அந்நிலையிலும் அரிதின் முயன்று கற்றுத் தன் கருத்தை எடுத்துரைப்பினும் கேட்போரின்றிப் பயன்படாமல் போகும் (1046).

இன்றைய யந்திர யுகத்தில் ஒரு சிலர் நலனுக்காகப் பலர் செல்வத்தை உற்பத்தி செய்யும் யந்திரமாக மாறியுள்ளனர். இத்தகைய கொடிய நிலை இருபது நூற்றாண்டுகளுக்கு முன் இல்லை. ஆயினும் அக்காலத்திலும் வறுமை, மக்கள் வாழ்வைக் கொலை செய்தது (1048). நெருப்பிலிருப்பதை விடப் பெரிதாக வாட்டியது (1049) எல்லாத் துன்பங்களுக்கும் விளைநிலமாக வறுமை இருந்தது (1045). மிகுதியான உற்பத்தி, குறைவு பட்ட நுகர்வு, முறையற்ற பகிர்வு என்பவை இன்றைய வறுமை நிலையின் காரணமாக இருக்க அன்றைய நிலையிலும் செழுமையின் நடுவே மக்கள் வாழ்வை வறுமை எரித்ததை 'நல்குரவு' காட்டும்.

ஒருமனிதன் வாழ்வதற்குரிய அடிப்படைத் தேவைகளுள் ஒன்று உணவு. அதுகூட அவனுக்குக் கிடைக்காமல் சமூகத்தில் காணும் வறுமை செய்து விடுகிறது. அந்நிலையில் மனிதன் எல்லா நிலையிலும் வீழ்ச்சியுறுகிறான். உணவால் மட்டும் மனிதன் வாழவில்லை என்பது உண்மை. எனினும் உணவில்லாமல் மனிதன் வாழவே முடியாது என்பதை யாரும் மறுக்க இயலாது. வள்ளுவர் காலத்தில் வறுமை, ஏழை எளியவரிடத்தில் மட்டும் இருக்கவில்லை. நல்லாரிடத்தும் வறுமை (408) தங்கியிருந்தது எனவும் அறிகிறோம். செல்வமகளாம் திருமகள் பற்றிப் பாணன் இயற்றிய காதம்பரி காவியத்தில் சுகநாசன் எனும் ஆசிரியர் சந்திராபீடன் என்ற இளவரசனுக்குக் கூறிய அறிவுரையில் இலக்குமிதேவி ஒழுக்கத்தைப் பேணாள். பண்பை எண்ணாள்... அறத்தை நிலை நிறுத்துவதில் அவளுக்கு அக்கறை இல்லை... பகுத்தறிவுக்குப் புறம்பானவள்: ஒப்புரவு அறியாள்; வாய்மையை மதியாள்; இலக்கணங்களைப்பற்றி அவளுக்குக் கவலை இல்லை எனக் கூறியதை இத்துடன் ஒத்திட்டுப் பார்க்கலாம்.[7] இக்

கருத்தை மறுவடிவில் சில நூற்றாண்டு கட்கு முன்னரே கூறியது போன்று குறள் தனிப்பட்ட நன்மனிதனிடம் காணும் வறுமையைக் கூறியதுடன் அரசு நிலையிலும் வறுமை பற்றிய உண்மையை வெளிப் படுத்து முறையில்... வறுமையும் இல்லாயின் வெல்லும் படை (769) எனக் கூறும். சிறுமை பல செய்து சீரழிக்கும் சூது வறுமை வரும் வாயில்(934) என்றுரைக்கும்.

பொருளியல் விழுமமாகச் சமூகநீதி துலங்கும் போது ஒவ்வொரு மனிதனும் தன்னைப் பாதுகாத்துக் கொள்ள ஒத்துரிமை உடைய வனாய் உள்ளான். அவ்வுரிமையைப்பெறும் வழிதான் காலந்தோறும் மாறி வருகிறது. வறியநிலையில் இரக்கும் நிலையும் இரந் தவை துன்பமுறாதுவரின் இன்பமாகப் படு கிறது (1052). தனிமனித மனநலத்தில் நம்பிக்கை கொள்ளும் வள்ளுவர், கரத்தல் கனவிலும் தேற்றாதார் மாட்டு இரத்தலும் ஈதலே போலும் என்பார் (1055). ஆயினும் உலகின் இயற்கையை உணர்ந்து உவந்தீ வோரிடத்தும் இரவாமை கோடியுறும் எனத் தம் இரவச்சத்தை வெளிப்படுத்துவார். வறுமையைக் கண்டஞ்சிய நிலையிலிருந்து வறியோர் இரக்கும் நிலை கண்டு அஞ்சும் நிலை அவர்தம் உயர்ந்த உள்ளத்தைக் காட் டும். கரவு அவர் கண்ணுக்குப் பாறையாகப் படுவது (1065) இக்கருத்தை மேலும் வற் புறுத்தும். இரவுள்ள உள்ளம் உருகும் (1069) நிலையே குறள்நிலை ஆகும்.

இன்றைய நிலையில் நியாயமான பகிர்வு நிலையை யாவரும் ஏற்கும் நிலை உருவாகி வருகிறது. மனித நேயமுள்ளவர் செல்வ மிகுதி, சுரண்டல், தனியாண்மை போன்ற வற்றை அகற்றிப்பிறர் துன்பத்தை உணர் தல், அருள், நல்லுணர்வு என்பவற்றை மலரச் செய்வர் என்ற நம்பிக்கையே சமூக மெய்யறிவாளர்களிடம் வளர்ந்து வருகிறது.

வறுமையின்றி வாழ மனிதன் தொழில் அடிப் படையில் மேன்மக்கள் கீழ்மக்கள் உருவாகி யிருந்ததைப் பண்டைய சமூகத்தில் காண் கிறோம். அதனால் பிறப்பின் வழி சமூகநீதி கிடைக்காத நிலை ஏற்பட்டது. ஆயினும் குறள் காட்டும் நெறியில் உடல் உழைப்பு வறுமையைப் போக்க உழவுத் தொழிலாக வெளிப்படுகிறது.

வள்ளுவர் காலத்தில் பல தொழில்கள் நடை பெறினும் உழவுத்தொழிலே அவரால் பெரி தும் மதிக்கப்பெற்றது உழவுத்தொழிலில் ஈடுபட்டவரில் தம் நிலத்தைத் தாமே உழுது பயிர் செய்தவரே பலர் ஆவர். அவர்களைச் சார்ந்து உழுது பயிரிடலில் கூலிக் குழைத்த வர்கள் உழுவித்துண்போர் எனப்படுவர். (முயற்சி தன் மெய்வருத்தக் கூலிதரும் 619) பிறருழைக்க அவ்விளைவில் ஒரு பகுதியைப் பெற்றுத்தனித்து வாழ்ந்த நிலக்கிழார்களும் இருந்தனர் என்பார் தமிழரின் சமூக வரலாற்றை ஆராய்ந்த அறிஞர்.[8] வள்ளுவர் முதற்பிரிவையே சிறப்பித்துக் கூறுகிறார். சமூகத்தில் உடல் உழைப்பை உயர்ந்ததாகக் கருதாமல் மன உழைப்பை உயர்வாகக் கருதியதின் விளைவை நால் வருணப் பாகு பாட்டில் காண்கிறோம். அந்நிலை சமூக நீதிக்குதவாது என உணர்ந்ததால் 'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்' எனக் கூறியதுடன்,மற்றவர்கள் தொழுதுண்டு பின் செல்லும் நிலையைச் சுட்டுவதால் (1033) உடலுழைப்பும் அதன் தனித்தன்மையுமே மதிப்புடைத்து எனக் கருதியது குறள் எனலாம்.

சமூக வளர்ச்சியில் நீதியை, முறையைக் காக்க அரசு வளர்ச்சி பெற்றிருந்த காலம் வள்ளுவர் காலம். பொருட்பாலின் வகுப்பே இவ்வுண்மையை வலியுறுத்தும். அக்கால நடைமுறை உண்மையை உணர்ந்து அதன் வழிச் சென்றிருப்பின் வள்ளுவரின் பொருட் பால் கௌடிலியரின் அர்த்த சாத்திரமாக உருப்பெற்றிருக்கும். ஆனால் அவ்வாறு குறள் நெறி செல்லவில்லை.

சமூக வாழ்வில் சிறப்புடையது அரசா உழவா எனில் அதனதன் பெருமையை ஒப்பிட்டுக் காணும்போது 'பலகுடை நீழலும் தம் குடைக்கீழ்க் காண்பர் அலகுடை நீழலவர்' (1034) எனக்காட்டும் போது பண்டைத் தமிழ் நெறியே புலப்படுகிறது. பழஞ் செய்க் கடன் வீடு கொள்ள நினைத்துக் குளமுற்றத் துத் துஞ்சிய கிள்ளிவளவனிடம் சென்ற வெள்ளைக்குடி நாகனார் 'பொருபடை தரூஉம் கொற்றமும் உழுபடை ஊன்று சால் மருங்கின் ஈன்றதன் பயனே' (புறம்35. 25—26) எனக் கூறுகின்றார். இதனால் குறையிரக்கச் செல்லும் புலவரும் உழவுப் பெருமையை மறைக்காமல் வெளிப்படுத்து வார். இந்நெறி வழியே ஒழுகுவது வள்ளுவ நெறி.

அத்துடன் நில்லாமல்,

> இலமென்று அசைஇ இருப்பாரைக் காணின்
> நிலமென்னும் நல்லாள் நகும் (1040)

என்று கூறும்போது வறுமையைப் போக்க உழவுத் தொழிலை மேற்கொள்ளுமாறு வழி

காட்டும் பான்மையையும் காண்கிறோம். எவ்வாறு எண்ணிப் பார்த்தாலும் மனிதன் வறுமையில் வாடாமல் மதிப்புள்ள தொழில் புரிந்துயர வேண்டும் என்ற நோக்கமே வள்ளுவர் நோக்கமாகும். சமூகத்தில் உழவைக் கீழான தொழிலாக மற்றவர் ஒதுக்கினாலும் குறள் காட்டும் மதிப்புடை வாழ்வு உழவு செய்வது; அதனால் பெறும் சமூக உயர்வே மனிதர்க்குரியது எனலாம். இக்கால நிலையில் பணிபுரிவதில் சமூக நீதி வேண்டி வகுப்புவாரி ஒதுக்கீட்டு அரசு ஆணை பிறந்த வரலாற்றை நினைத்துப் பார்க்லாம்[9].

ஆண் தலைமை பெற்ற சமூகத்தில் உருவான நூல் குறள் என்பதை யாவரும் ஒப்புக் கொள்வர். அதனால் இல்லத்தலைவி யிடம் சிறப்பாக வேண்டப் பெறுவது கற்பு ஆகும். அந்நிலையில் தெய்வம் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாளாகவும் (55) புத்தேளிர் வாழும் உலகைப் பெற்றாற் பெறின் பெறுபவளாகவும் (58) காட்டப்படு கின்றாள். இத்தகைய மனைவியே புகழ் புரிந்த இல்லாளாக (59) குறளில் தென்படு கிறாள்.

ஆயினும் மனைவிழைவார் மாண்பயன் எய்தார் (901) நட்டார் குறைமுடியார் நன்றாற்றார் (908) என்று வள்ளுவர் கூறும் போது அரசியல் நடத்தும் காலத்தில் பெண் ணேவல் செய்தொழுகும் ஆண்மையின் நாணுடைப் பெண்ணே பெருமையுடைத்து (907), பெண் சேர்ந்தாம் பேதைமை (910) எனக் காட்டும் போது அக்காலத்தில் பெண் ணிருந்த நிலையை நன்குணரமுடிகிறது.[10] எனினும் முற்றமுழுக்கப் பெண்ணி னத்தையே கடிந்தொதுக்கவில்லை. 'பெண் வழிச்சேற' லை ஒட்டியே வரைவின் மகளிர் என்ற அதிகாரம் உள்ளது. அதில் அக்காலச் சமூகத்தில் பெண்களில் ஒரு பிரிவினர் பொருட் பெண்டிர் (913)மாய மகளிர் (918) இருமனப் பெண்டிர் (920) என்ற நிலையில் உருவாக்கப் பெற்றிருந்தனர் என அறிகி கிறோம் இந்நிலைக்குக் காரணம் பொருள் என்பதும் நமக்குப் புலப்படப் பல குறள்கள் இவ்வதிகாரத்தில் உள்ளன (911.913,914) அத்தகைய சூழலில் அவர் பொதுநலத் தாராக (915) உருவாக்கப்பட்டதையும் காண்கிறோம் இந்நிலையில் சமூக மக்களின் மனத்தை நிறையில் நெஞ்சமாகவும் சமூக அறிவை ஆராயா அறிவாகவும் ஆக்கிப் பூரியர்கள் எனும் தாழ்ந்த மக்களின் இழி நிலையை அடைந்து வறியவர் ஆவதற்கு வழிவகுக்கும் என்று குறள் கூறும்.

இக்காலப் பெண்டிர் இயக்கத்தின் உரிமைக் குரலின் எதிரொலியைக் குறளில் கேட்க இய லாது. ஒருவகையில் அக்காலப் பெண்டிர் இருந்த நிலையைக் குறள் விளக்கிக் காட்டு கிறது எனலாம். எனினும் பரத்தமை தவிர்க் கப்பட வேண்டியது என எதிர்மறை நிலை யில் சமூகநீதி சுட்டப்படுகிறது.

உண்மையான அல்லது கற்பனை செய்யப் பட்ட நிகழ்ச்சிகள் நீதி அநீதி என்பவற்றின் நோக்கில் விளக்கப் பெறும். அதனால் மனித உள்ளியல்புகள், உரிமைகள், தேவைகள் என்பவை தக்கவை அல்லது தகாதவை எனக் காண்பர். இவற்றில் தவிர்த்தற்குரிய வற்றைத் தவிர்ப்பர். நன்மை தீமை என்ற கருத்தடிப்படையில் நீதி அநீதி மதிப்பிடுவர். இதைத் தனிமனித நிலையில் காணாமல் சமூக நிலையில் காண்பர். தனிமனிதனின் நிலை, பணி, பெறும் ஊதியம் ஆகியவற் றோடு குற்றமும் தண்டனையும் பற்றி எண்ணி ஆவன செய்வர். நீதியும் அநீதியும் காலங்காலமாக ஒருகுறிப்பிட்ட வரையறைக் குட்பட்டு வந்ததை வரலாறு காட்டும். நியதி எங்ஙனம் செயல்படுகின்றது என்பது பற்றிய அடிப்படை உணர்வெழுச்சி நீதி அநீதி பற்றிய கருத்துக்களைக் காட்டும். ஒரு சார் மக்கள் மற்றொருசாரார் செய்வனவற்றை அநீதி என அறியும்போது அம்முறை வரலாற்றடிப்படையில் காலஙு் கடந்ததாகி விடும்.

வள்ளுவர் காட்டும் நீதியைப் பொருட் பாலில் காணமுடிகிறது.

நீதி வழங்கும் பொறுப்பு ஆட்சியின் தலை மையிலுள்ள அரசனைச் சார்ந்துள்ளதை வள்ளுவர் பல இடங்களில் குறித்துள்ளார். செங்கோன்மை என்ற அதிகாரத்தில் இக் கருத்தை உடன்பாட்டு முறையிலும் கொடுங் கோன்மை என்ற அதி காரத்தில் எதிர்மறை முறையிலும் வெளிப்படுத்தியுள்ளார். பிறர் குற்றத்தை ஆராய்ந்து கண்ணோட்டமின்றி நடுவுநிலைமை பொருந்தி ஆராய்ந்து செய் வது நீதிமுறை என அதன் களத்தைக்காட்டு வார் (541). குடிமக்கள் வாழ்க்கை, அந் தணர் நூல்அறத்திற்கு அடிப்படைஎன்பவை அது என்பார் (542, 543) அரசனின் இயல் பாக நீதி செலுத்தும் பாங்கு அமையவேண் டும் (545). கொடியவரைக் கொலைத் தண்டனையால் அரசன் ஒறுத்தல் பயிரைக் காப்பாற்றக் களையைக்களையும்செயலோடு ஒத்தது எனக்கொள்வார் வள்ளுவர் (550). கொலைத்தண்டனை வேண்டுமா வேண்டா மா எனப்பலவாறு சிந்தித்து வரும் இக்கால

மக்களுக்கு இது பழங்கால நெறியாகப் படும்.

நீதி வழுவினால் நாடு கெடும் (553). அரசும் கெடும் (554), முறைதவறி ஆட்சி செய்தால் மழை பெய்யாது (559) பசுக்கள் பயன் குன்றுவதுடன் அந்தணரும் அறநூலை மறக்கும் நிலை ஏற்படும் (560) எனக் கூறும் போது நீதியில்லா நாட்டில் இயற்கை வளம் குன்றுவதுடன் அறமும் அழியும் என்பதை இதனால் அறியலாம். தண்டனை அளிக்க வேண்டும் இடத்தில் தண்டிப்பதைவிடக் கண்ணோட்டம் புரிந்து குற்றத்தைப் பொறுப்பதே சிறந்த பண்பாக இலக்கிய நோக்கில் குறள் கூறும் (579). அரசியலில் பகை காரணமாகத் துன்பம் வருவதை உணர்த்தி விட்டு அதன் எதிர் நிலையாக நட்பால் நல்ல நீதியாகிய பெருமித நிலை உண்டாகும் என்பார் (860). நீதி என்பது பலரின் கூட்டுறவால் வெளிப்படும் என்பதை இந்நிலை உணர்த்தும். நீதி செலுத்தும் போது பணத்தைக் காட்டி அதற்குக்கேடு உண்டாக்குவர். அடுக்கிய கோடி பெறினும் குன்றுவ செய்யா நிலையைக் காணும் போது (954) நீதிசெலுத்தலிலும் குடிமைக்கு ஏற்படும் நிலை உண்டாக வாய்ப்புள்ளது. அதனை அறக்கொள்கையாளர் ஏற்று அநீதி செய்யார் எனவும் முடிவு செய்கிறோம்.

இதனால் உலகம் புகழும் பண்புடையாளர் நீதியை விரும்புவர் என அறிகிறோம் (994) நீதிமுறையைப் பின்பற்றுவோர் மன்னர்களுள் விளக்காகவும் (390) மக்கட்குக் கடவுளாகவும் மதிக்கப்படும் நிலையைக் குறள் எடுத்துக்காட்டும் (388).

பொதுவாகக் காணும்போது அரசனுக்கு வள்ளுவர் கூறிய பண்புகளின் அடிப்படை மனிதமாக உள்ளது. காட்சிக்கெளியனாகக் கடுஞ்சொல்லன் அல்லனாகவும் விளங்கும் மன்னன் (386) பெரியாரைத் துணைக் கொண்டு பரந்த மனப்பாங்கு பூண்டு (598) அரசோச்சும் நிலையில் குற்றத்திற்குத் தண்டனை வழங்குவது கடமையாகக் (553) குறள் காட்டும்போது நீதி செலுத்துதற்கும் தண்டிப்பதற்கும் உரிய அடிபபடைக் காரணமாக மக்களைக் காக்கும் அன்பு விளங்கும்.

## குறிப்புகள்

1. பெருங்கதை 1. 34. 71, 1.37. 360, 1. 44. 68, 1. 54. 65., 2. 8 110, 2. 9. 217, 2. 17. 99–100, 2. 20. 54. 3. 18. 60, 3. 1 27.
2. திருக்குறள் நீதி இலக்கியம். க. த. திருநாவுக்கரசு ப. 12. குறள். 388, 533, 570, 581, 641, 683 686, 825, 865, 870, 871, 872.
3. இவ்வெண்கள் திருக்குறளின் தொடர் எண்களைக் குறிக்கும்.
4. (அ) நியாயம், (ஆ) முறைமை (இ) ஒழுக்கநெறி (ஈ) மெய், (உ) உலகத்தோடு பொருந்துகை (ஊ) இயல்பு (எ) தருமசாத்திரம் (ஏ) நடத்துவது (ஐ) உபாயம், (ஒ) பார்வதி சென்னைப்பல்கலைக் கழகப் பேரகராதி, 1982 ப 2298.
5. திருக்குறள் நீதி இலக்கியம், க.த திருநாவுக்கரசு ப.50
6. *The Nichomachean Ethics, I IX*
7. ஆணைத்திரு: அதிகார ஸ்ரீ. என். வி.நாயடு, ஸ்ரீசர்வமங்கள் சேவாசமாச டிரஸ்டு மலர், 1986ப.2
8. *K.K. Pillai, A Social History of the Tamils Part I University of Madras 1969, PP 192–193*
9. *K.Veeramani, The History of the Struggle for Social and Communal Justice in Tamil Nadu, Madras, The Dravidan Kazhagam Publications 1981, PP. 76–82.*
10. வட இந்திய நூல்களில் குறிப்பாக பௌத்த நூல்களில் பெண்கள் அரசாளுதல் ஆகாது என்பர். தமிழகத்தில் அல்லி ஆட்சியும் பிற்காலத்தில் மீனாட்சி, மங்கம்மாள் ஆட்சியும் பண்டைய சேரநாடாம் கேரளத்தில் இன்றும் சில சமுகத்தாரிடையே தாய்வழிச் சமுகம் நில்விவருவதையும் எண்ணிப்பார்ககலாம்.

# ஒரு வரி எழுதுங்களேன்...

பேராசிரியர் சாலமன் பாப்பையா.
அமெரிக்கன் கல்லூரி
மதுரை 625002.

திருக்குறள் மலர்ந்த நாளிலிருந்து என்றைக்கும் இல்லாத அளவில் இன்றைக்குத்தான் அது மிகுந்த விளம்பரப் பொருளாகி விட்டது. 'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து' தமிழகம் தன்னை உலக அரங்கில் அறிமுகப் படுத்திக் கொண்டு இருக்கிறது. திருவள்ளுவரின் திருஉருவம் அரசு அலுவலகங்களைப் புனிதப்படுத்த முயற்சிக்கிறது. திருவள்ளுவர் தினம் அரசு ஊழியர்களுக்கு, பொது வேலையாட்களுக்கு மகிழ்ச்சி தரும் ஓய்வுநாள் ஆகியிருக்கிறது. அரசுப் பேருந்தின் ஒரு பிரிவு திருவள்ளுவர் பெயரில் அரசிற்குப்பொருள் தேடித்தந்து கொண்டிருக்கிறது.பேருந்துகளின் உள்ளே திருவள்ளுவர் படம் மட்டும் அன்று; அவருடைய குறளும் பயணிகளின் பார்வை வழிப் பாடம் கற்பிக்கின்றன.சில ஆலயங்களின் உட்புறச் சுவரில் வெண்பளிங்குக் கல்லில் காலத்தை ஏய்க்கும் கோலத்தில் குறளடிகள் மின்னுகின்றன பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் பாடப் பகுதி ஆகிக் கற்றவர் எல்லாரும் திருக்குறளின் பிழிவைப் பருகிய பெருமையை உடையராகி இருக்கின்றனர். திருக்குறள் நூல் மலிவுப் பதிப்பாக, கையடக்கப் பதிப்பாக, நூலகப் பதிப்பாகத் தமிழ் அன்பர் பலரின் தமிழ்த் தொண்டிற்குப் பறை சாற்றி வந்திருக்கிறது. எல்லார்க்கும் விளங்க வேண்டுமே என்ற ஆதங்கத்தில் எளிய உரைகள் பல உதயமாகி இருக்கின்றன. 'எல்லாப் பொருளும் இதன்பால் உள' என்ற கூற்றை வெறுஞ் சொற்பொருளாக எடுத்துக் கொண்டு எந்தக் கூட்டமானாலும், தலைப்பானாலும் திருக்குறளில் ஒரு குறளாவது கூறிவிட வேண்டும் என்று பேச்சாளர்கள் முழங்குகின்றனர். திரைப்படத்துள்ளும் திருவள்ளுவர் உருவமும் குறளும் ஒலி, ஒளிக் காட்சியாகி விட்டன. திருவள்ளுவர் மன்றம், கழகம் என ஊருக்கு ஒன்றோ இரண்டோ உருவாகி விழாக்கள் எடுத்து, வள்ளுவர்க்கு விளம்பரந் தருகின்றன. வள்ளுவன் என்றொரு 'இழி' சாதி (1) இருந்தாலும் பரவாயில்லை; திருவள்ளுவன் என்ற பெயரை என் பிள்ளைக்கு இட்டுப் பெருமைப்படுவேன் என்றெண்ணும் மக்கள் எண்ணிக்கை பெருகி வருகிறது. வள்ளுவர் இன்ன சமயத்தவர் என்ற குறுகிய வட்டத்துள் கணிக்கும் எல்லை கடந்து, எல்லாச் சமயங்களும் ஏற்றுக் கொள்ளும் அளவிற்குப் பரந்த புகழைப் பெறுகின்ற பொழுதே, இவர் எங்கள் சாதியைச் சேர்ந்தவர் என்று சொல்லிக் குறுகிய வட்டத்திற்குள் வைக்கும் அறியாமையும் வளர்ந்திருக்கிறது. சொந்த நாட்டின் இத்தகைய வளர்ச்சிக்கு இடையே இந்திய மொழிகளும் அயலக மொழிகளும் போட்டி போட்டுத் திருக்குறளைத் தமக்கும் உரியதாய் ஆக்கி இருக்கின்றன. ஆக,ஒன்று மட்டும் உறுதியாகத் தெரிகிறது. திருக்குறள் மலர்ந்து பல நூறு ஆண்டுகள் ஆன பின்பு, என்றைக்கும்விட இன்றைக்குத்தான் அது மிக மிக அதிகமாக அறியப்படுகிறது; பேசப்படுகிறது பேசக் கேட்டு அறியப்படுவதை விடக் கற்று அறியப்படுவதுதானே சிறப்பாக இருக்கும். அப்படிக் கற்று அறிபவர் நூற்றுக்கு முப்பத்தொன்பது பேராக இருப்பர் என்பது ஒரு கணக்குத்தான்.

கற்றார் எல்லாரும் குறள் பற்றாளர் தாமா? அப்படி இருக்க முடியுமா? முடியாது என்றுதான் தோன்றுகிறது. இப்படிப் பார்ப்போமே. ஒரு பொருளைத் தேவை காரணமாக நாமே விரும்பி நம் பணத்தைக் கொடுத்தோ, அன்பளிப்பாகவோ வாங்குவது ஒரு வகை; நமக்குத் தேவை இல்லாமல் இருக்கும் போதே, எவரோ ஒருவர், ஏதோ ஒரு நோக்கத்திற்காக, அவர் செய்து வைத்திருப்பதை அன்பளிப்பாக நம்மிடம் திணிக்க, நாம் பெறுவது மற்றொரு வகை. திருக்குறள், தேவை காரணமாக விரும்பி வாங்கப்

பெற்றதா? அன்பளிப்புப் போல் திணிக்கப் பெற்றதா? இதைப் படித்தால் இவ்வளவு மதிப்பெண் கிடைக்கும் என்று தேர்வு நோக்கிப் படிப்பது அன்பளிப்பாகத் திணிக்கப் பெற்றது போலாகும் எனலாமா? அப்படியும் சொல்லலாமோ என்று தான் தோன்றுகிறது. ஏன் அப்படி என்கிறீர்களா? மிஞ்சி மிஞ்சிப் போனால் ஒருவர் தன் பள்ளி. கல்லூரி நாட்களுக்குள் இருபத்தைந்து அல்லது முப்பது அதிகாரங்களில் வரும் முந்நூறு குறள்களைப் படிக்கலாம். மீதியையும் படித்தால் தானே விரும்பிக் கற்றதற்கு அடையாளம்? அந்த மிகப் பெரிய சுரங்கத்தின் கருத்து வைரங்களைத் தன் ஞான மேனியில் அணிந்து வாழ்வின் வழியில் கடைப்பிடிக்கும் ஆர்வம் வேலைக் கல்வியின் முடிவிற்குப் பின் விளைந்திருக்க வேண்டாமோ? படிப்பால் பணி செய்யும் ஒருவர், இந்த நாட்டின் பல கோடி ஏழைகளை விடப் பணம் பண்ணும் உரிமை பெற்று விட்ட ஒருவர், வீடு, தொலைக் காட்சிப் பெட்டி. குளிர் சாதனக் குடுவை, அரைக்க கலக்க அழகுப் பொறிகள், இருவர் செல்ல எழில் வாகனம் என ஆலாய்ப் பறந்து அங்கே இங்கே கடன் வாங்கித் தன் தேவையை நிறைவேற்றும் ஒருவர் திருக்குறள் என்றொரு தேவையும் இருக்கிறது —அது மிக எளிதாகவும் கிடைக்கிறது என்ற ஆர்வமே அற்றவராக இருக்கிறார் என்றால் அவரைத் தேர்விற்காகத் திணிக்க வாங்கியவர் என்பது தவறாகுமா?

ஒரே பொருளை வெவ்வேறு நோக்கங்களுக்காக ஒவ்வொருவரும் வாங்குவது உண்டு. ஆடை, அணிகலன்களைப் பாருங்கள். அன்றாட நுகர்விற்கு மலிவில், அரிய விழாக்களுக்கு விலை உயர்வில் எனவாங்குவதில்லையா? திருக்குறள் அன்றாடம்பின் பற்றப்பட வேண்டியதா? அரிய விழாக்களின் சிறப்புரைக்கு, கல்விக் கழகங்களின் ஆய்வுரைக்கு மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டியதா? அன்றாடம் பயன்படுத்தப் பட வேண்டிய ஒன்று என்பதாலேயே திருக்குறள் மலிவான பொருளாகி விடாது. அதற்கு ஈடான பொருளே இல்லை என்பதால் அது எப்போதோ பயன்படுத்தப் பட வேண்டிய பொருள் என்றும் ஆகிவிடாது. எப்போதும் பயன்படுத்தப் பட வேண்டிய ஒன்றே திருக்குறள் என்று எனக்குத் தெரிகிறது. ஆனால் என்னாலும் கூட அதை விளங்கிக் கொண்ட அளவிற்குப் பயன்படுத்த பின்பற்ற முடியவில்லையே என்ன காரணம்? வெண்ணெய்யைக் கையில் வைத்துக் கொண்டே' அல்ல, நெய்யை வைத்துக் கொண்டே, நெய் இருக்கிறது என்று சொல்லுகிற நானே, அதைப் பயன்படுத்தாமல் —பின்பற்றாமல் இருந்து விடுகிறேனே; அது ஏன்? என் நிலையே இது தான் என்றால் திருக்குறளைப் பற்றி எதுவுமே தெரியாத மக்களைப் பற்றி என்ன சொல்ல? இப்படி ஒரு நிலை இங்கு வளர்வதற்குக் காரணந்தான் என்ன?

'தற்கொண்டான் வளத்தக்காள் வாழ்க்கைத் துணை' என்பது என் மனைவிக்குத் தெரியாமலா இருக்கிறது? அவளும் திருக்குறளை உரை விளக்கங்களுடன், நயங்களுடன் கற்றுத் தேர்ந்தவள்தான். புலவர் படிப்பில் தமிழை என்னை விட ஆழக் கற்றவள் என்று அடிக்கடி சொல்லிக் கொள்கிறாள்! நான் வெறும் எம். ஏ. பிடி. தானாம்! அவளுக்கு அப்படி ஒரு பெருமை! ஆனால் 'தற்கொண்டான் வளம்' என்பது அவனால் மட்டுமே முடிவு செய்யப்படுவது அன்று; அவன் தந்தையும் தந்த வளமாகும் அது. அந்த வளம் -'உறைமோர்' —வறுமைக் களமாகவும் இருக்கலாமே! எனவே, தந்தை தந்த சொத்து, பதவி தரும் சம்பளம். புத்தி படைக்கும் சம்பாத்தியம் -இவை மூன்றும் சேர்ந்தல்லவா 'தற்கொண்டான் வளம்' என்பது முடிவு செய்யப் படுகிறது. இந்தத் தாய்த் தமிழகத்தில் 85விழுக்காட்டினர்க்குத் தந்தை தந்த சொத்து என்பது அவர்களை இந்த மண்ணில் 'ஈன்று புரந்' தந்ததைத் தவிர வேறு என்ன உண்டு? பதவியும், புத்தியும் எத்தனைப் பேரை வளமுடையராய் ஆக்கிவிடுகின்றன? அவற்றுள்ளும்கையூட்டு, சூது, மோசடி, திருடு. கொள்ளை, கலப்படம், பதுக்கல், கடத்தல், விபசாரம் என்னும் இந்த அற்புத வழிகள் அல்லவா பணங் காய்ச்சி மரங்களாக இருக்கின்றன. இந்த நச்சு மரங்' களின் பலனைத் 'தற்கொண்டான் வளம்' எனலாமா?

> 'அறன்அறிந்து வெஃகா அறிவுடை
> யார்ச் சேரும்
> திறன் அறிந்து ஆங்கே திரு'

என்ற திருக்குறளை வகுப்பறையில் நடத்தும் போது என் வார்த்தைகளுக்கும் அறிவிற்கும் இடையே நடக்கின்ற போரை என் மனச்சான்று தானேஅறியும்? இது என் மனைவிக்கு மட்டும் விளங்கவில்லையே? 'செய்க பொருளை' என்ற குறளை மட்டும் அடிக்கடி சொல்லி நாளும் நமைச்சல் பாடம் நடத்தியே என்னை நலியச் செய்கிறாளே 'அவரும் உங்க கூடப் படித்தவர் தானே; அவர்மட்டும் எப்படி இவ்வளவு பொருளைச் சேர்த்தார். நீங்க வெறும்......' என்னால் எழுத முடியாத அளவிற்கு ஏசுகிறாளே!

பொருள் சேர்ப்பது என்பது என்ன அவ்வளவு எளிதா?

நானோ மாதச்சம்பளக்காரன்; ஒரு மேனிலைப் பள்ளித் தமிழாசிரியன். என் இன்றைய வருமானம் ஆண்டிற்கு இருபதினாயிரம் ரூபாய் என் மனைவிக்கு வேலை இல்லை. அவளை உள்ளூரில் வேலைக்குச் சேர்த்துக் கொள்ள ஐயாயிரம் ரூபாய் தரவேண்டும் என்று அப்போது கேட்டார்கள். லஞ்சம் கொடுப்பதா?

'அறத்தான் வருவதே இன்பம்;
மற்றெல்லாம்
புறத்த; புகழும் இல'

என்ற குறள் போதனை என்னை மட்டும் முடமாக்கி விட்டது. ஆனால்

,வேண்டாமை அன்ன விழுச்செல்வம்
ஈண்டில்லை;
யாண்டும் அஃதுஒப்பது இல்'

என்ற குறளை வியந்து பாராட்டி, நயம் சுட்டி என்னுடன் வாழ்பவர்கள் எல்லாம் பத்தாயிரம் ரூபாய் கொடுத்து அவர்தம் துணைவியரைப் பணியில் அமர்த்தி விட்டார்கள் என்பது எனக்குத் தெரிய நெடு நாளாகியது. அவர்கள் மொழியில் இப்போது நான் 'கூமுட்டை' இதன் அர்த்தம் எனக்கு விளங்கவில்லையே: உங்களுக்கு விளங்குகிறதா?

வீட்டில் நான் தான் மூத்தபிள்ளை. அடுத்து இரு பெண்கள்; கடைக்குட்டி ஆண். என்னைப் படிக்க வைப்பதற்காகவோ, அதிகம் படித்த பெண்களுக்கு அதிகம் செய்ய வேண்டுமே என்று கருதியோ இரு பெண்களையும் பள்ளி இறுதிப் படிப்போடு நிறுத்தி விட்டு ஒரு பெண்ணை ஆசிரியையாகவும், தங்கையைச் செவிலியாகவும் படிக்க வைத்து விட்டார் தந்தை. கிராமத்தில் இருந்த குட்டிச் சுவர் வீட்டை எட்டிய மட்டும் விலைக்கு விற்று இருந்த சேமிப்போடு பெண்களை நல்ல(!) இடத்தில் கட்டி கொடுத்தாயிற்று. ஆனால் பல ஆண்டுகள் ஆகியும் ஆடிக்கும் தீபாவளிக்கும் மாப்பிள்ளைகளுக்கு எங்கள் வீட்டில்தான் மகிழ்ச்சி பிறக்கிறது. எனக்கும் இப்படி ஒரு இடம் கிடைக்கவில்லையே என்ற ஏக்கம் எனக்கில்லை; ஆனால் நான் ஏதும் நினைத்துக் கொள்வேனோ என்று என் மனைவி கலங்கும் கலக்கத்தில் நான் கலங்கிப் போவேன்; அவ்வளவுதான். தம்பி, பெற்றோர் செல்லத்தில் பள்ளிப் படிப்பைத் தாண்டாமலேயே தொழில் செய்கிறேன் என்று ஏதோ செய்கிறான்; பாவம்!

வாடகை வீடுதான் எங்கள் வைகுண்டம். மாதம் முந்நூறு ரூபாய் வாடகை, அடிக்கடி தங்கை வீட்டார் வருவதில் வீட்டுக்காரருக்கு வருத்தம், கிணற்றுத் தண்ணீரையும், வீட்டுச் செங்கல்லையும் களவாடிக் கொண்டு போய் விடுவார்களோ என்று இடையிடையே சோதனைபோட வந்து விடுவார். மூன்றாண்டிற்கு ஒரு முறை வாடகை உயர்விற்கு வாசலிலேயே போராட்டம் நடத்தி விடும் திறமையான தொழிற்சங்க வாதி! அவரும் ஒரு தமிழாசிரியர்தான். அவரைக் காட்டிக் காட்டித்தான் என்னை என் மனைவி இடிக்கிறாள். அவருக்கு மனைவி வீட்டுச் சொத்து; அவருடைய உறவினர்கள் என்று எவரும் அவரிடம் வந்து நான் பார்த்ததே இல்லை. ஒருவேளை, உறவே இல்லாமல் உருவான சிவமோ என்று கூட நான் நினைப்பேன்.

எனக்கும் இரண்டு பிள்ளைகள். 1947க்கு முன் மேல் சாதிக்காரர்கள் என்று என் மூதாதையர் செப்பித் திரிந்த திமிரின் பலனை என் பிள்ளைகள் இன்று அனுபவிக்கின்றன. மாதச் செலவுகள் மலையாக முன் நிற்கின்றன. வயோதிகப் பெற்றோர்; என் பிள்ளைமையில் எனக்கு, அவர்கள் செய்ததை எல்லாம் நான் இப்போது அவர்களுக்குச் செய்ய வேண்டிய நிலை. 'மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி இவன்தந்தை
என்நோற்றான் கொல் எனுஞ் சொல்'

என்று படித்து விட்டேனே.

ஒரு இருபதாம் தேதி. மாதச் சம்பளக்காரனை மருட்டும் நாளின் தொடக்கம் அது கடுமையான பணமுடை என் நண்பர்களும் என்னைப் போலத்தானே இருப்பார்கள்! வீடாறு மாதம் அடகுக் கடை ஆறு மாதம் என விக்கிரமாதித்த உலா வர அவளிடம் ஓர் ஐந்து பவுன் சங்கிலி உண்டு. அதை அவள் அழுகையில் கழற்றி ஆத்திரத்தில் எறியாமல் எறிந்தாள்! வாசலுக்குத்தான் வந்திருப்பேன். என இரண்டாவது தங்கை, கலைந்த தலையோடும், கசியும் விழியோடும் கைக்குழந்தையுடன் வீதிவழி வந்து கொண்டிருந்தாள். அந்தத் தங்கையைத்தான் நான் எப்படியெல்லாம் நேசித்தேன்! எங்கள் வீட்டில் அவள் தான் அழகி; அவளுக்கு இப்படி ஒரு கோலமா? செவிலியர்க்குப் படித்த அவள் உள்ளூர் அரசு மருத்துவமனையில் சம்பாதிக்கத்தான் செய்கிறாள். என்ன செய்ய? அவள் கணவன் சூதாடி; மொடாக் குடியன். பற்றாக் குறைக்குச் சரியான சந்தேகப் பிராணி. எந்த அழகு என் தங்கையின் கல்யாணச் சந்தையில் விலை போனதோ அந்த அழகே அவளுடைய

இல்லற நிம்மதிக்கு எமனாகி விட்டது. இத்தனை அழகி ஆஸ்பத்திரியில் டாக்டர்கள் இடையே இரவு வேளையில் சுத்தமாக இருக்க முடியாதாம். இப்படி ஒரு சந்தேகம் கொள்பவர் வேலை பார்க்க விடாமல் அவளை வீட்டிலேயே வைத்துக் கொள்ள வேண்டியது தானே? 'வாம்மா; இரு; ஏன் இப்படி.' என்று நான் கேட்டு முடிப்பதற்குள் கேவிக் கேவி அழ ஆரம்பித்து விட்டாள். ஆண் அழக்கூடாதாம்; என்னால் முடியவில்லையே! 'உங்களை எல்லாம் ஒரு தடவை பாத்துட்டுப் போயிரனும்னு தோணிச்சி' என்று அவள் முடிக்கும் முன் நான் பதறிப் போனேன். 'சரிம்மா; நீ எங்கேயும் போகவேண்டாம்; இரு; அண்ணன் அவசரமா வெளியே போயிட்டு வந்துர்றேன்' எனறு சொல்லி விட்டுக் கசியும் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு புறப்பட்டேன். இத்தனைக்கும் அவன் வீட்டுக்காரர் அரசு ஊழியர். அவர் கையை மட்டும் நீட்டுவது இல்லை; பையையே நீட்டுகிறார் என்றும் கேள்வி அவர் வீட்டின் தலை வாசலில் வள்ளுவர் தான் நம்மை வரவேற்பார்.

'எனை ஈன்ற தந்தைக்கும், தாய்க்கும்.
மக்கள் இனம் ஈன்ற தமிழ்நாடு தனக்கும்.
என்னால் தினை அளவு நலமேனும்
கிடைக்குமானால்
செத்தொழியும் நாள் எனக்குத்
திருநாளாகும்'

என்று வேறு எழுதிப் போட்டிருப்பார். இவரால் இவருடைய மனைவிக்கே நன்மை இல்லை; நாட்டிற்கு எங்கே நன்மை விளையப்போகிறது? இனமானமும் சமத்துவமும இன்தமிழின் ஏற்றமும் இவரது வாய்மொழி இலட்சியங்கள். இனியமனைவியின் ஏற்றம் மட்டும்?

அடகு வைக்கப் போன இடத்தில் அப்படி ஒரு நெருக்கடியா? என்னிடம் படிக்கும் மாணவன் ஒருவன் இன்னொருவருடன் அங்கே வந்திருந்தான். என்னைப், பார்த்து அவன் வெட்கப்பட, அவனைப் பார்த்து நான் வெட்கப்பட இவற்றுள்.எவர் வெட்கம் கூடுதலாக இருக்கும்? எடைபோடவா முடியும்? அடகுக் கடைக்கு எதற்காகப் போவார்கள்? அவன் என்தகுதியை அறிந்து கொண்ட பின் இனி எனக்கு மரியாதை தருவானா? அவனது அனுபவமற்ற இதயத்தின் ஒரு மூலையில் என்னைப் பற்றிய ஏளனம் கொஞ்சமாவது இருக்காதோ? ஒரு வேளை வள்ளுவர் காலத்திலும் ஆசிரியன் என்பவன் இப்படி. வகை கெட்ட வாழ்வுதான் வாழ்ந்திருப்பானோ? அதனால் தான்

இருவேறு உலகத்து இயற்கை; திரு
வேறு; தெள்ளியர் ஆதலும் வேறு;

என்று அவர் பாடியிருப்பாரோ? கற்பாரைப் பற்றி மட்டுமே பேசிக் கற்பிப்பார் நிலை பற்றி எதுவுமே கூறாமல் விட்டதற்கும் அது தான் காரணமோ? மேனியல்ல; என் இதயமே வியர்த்து அழுதது. மாணவனிடம் பேசவில்லை; அந்தப் பையனும் என்னை அதிகம் கண்டு கொள்ளவில்லை.

வழியில் ஒரு புலம்பல்; கொடுத்த கடனைத் திரும்பப் பெற முடியாமல் திணறுவதாக ஒருவர் வழி நெடுக அழுது கொண்டே வந்தார். அவருக்குச் சமாதானம் சொல்லுவதா அவரை ஏசுவதா? என்னால் எதுவும் முடியவில்லை அவர் கந்து வட்டிக் கந்தன். ரூபாய்க்கு நாள் வட்டிக்காரர். இந்தப் பகுதியில் திருவள்ளுவர் மன்றத்தின் காப்பாளர். இடையிடையே அவர் செய்கிற நிதி உதவியில்தான் மன்றமே மணக்கிறது! அவரிடம் போய்

'சலத்தால் பொருள்செய்து ஏமார்த்தல்
பசுமண்கலத்துள்நீர் பெய்து இரீஇ அற்று

என்ற குறளுக்கு இப்போது விளக்கம் சொல்லிக் கௌண்டிருக்க முடியுமா? அவருக்குத்தான் அந்தக் குறள் தெரியாதா என்ன?

தெருவிற்குள் நுழைகிறேன், என் வீட்டு வாசலில் ஒரு சிறு கூட்டம்; எனக்குள் பதற்றம்; என்ன அங்கே? ஒரு வேளை என் தங்கை? என் மகன் ஓடி வருவது என் விழிகளில் தெரிகிறது. 'அப்பா அத்தை மருந்தைக் குடிச்சிட்டாங்களாம்; ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போயிருக்காங்க' என்று அழுது கொண்டே சொல்கிறான். நின்று நிதானித்துத் திரும்புகிறேன்; எதிரில் ஒருவர்; வீட்டுக்குப் போங்க சார்;வழியிலேயே...'முடிக்கும் முன்பே' தெய்வமே என்று என் நெஞ்சம் வெடிக்கிறது...... ஐயா, தமிழ் அறிஞர்களே!

'குடி செய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம்
மடிதற்றுத் தான்முந் துறும்'

என்று திருக்குறள் சொல்லும் தெய்வச் சொல்லில் இன்னும் எனக்கு நம்பிக்கை இருக்கத்தான் செய்கிறது. ஆனால் அப்படியும்ஒரு குறள் இருப்பது அந்தத் தெய்வத்திற்கு மட்டும் இதுவரை தெரியாதோ?

ஓ! திருக்குறளை நடைமுறைப் படுத்துவதும் பின்பற்றுவதும் என்பது சராசரி மனிதனுக்கு முடியாத காரியந்தானோ?என்னைத் தேற்றுவார் இருந்தால் ஒரு வரி எழுதுங்களேன்.

# ஓப்பீட்டு நோக்கில் தமிழ்க் காப்பிய மரபு ஓர் அறிமுகம்

டாக்டர் இராம.சண்முகம்
தமிழ்ப் பேராசிரியர்— அஞ்சல்வழி—தொடர் கல்வித்துறை
மதுரை காமராசர் பல்கலைக் கழகம்

மனிதன் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே மிகச் சாதாரணக் கருத்துப் பரிமாற்றத்திற்குத் துணை நின்ற வாய்மொழியைத் தன், நாகரிக வளர்ச்சிக்கும் தன் மனமகிழ் பொழுது போக்கிற்கும் ஏற்றதாகச் சமைத்துக் கொண்டான். 'மொழி' என்றதொரு கருவி இல்லை என்றால், மக்கள் சேர்ந்து பழகும் நாகரிக அமைப்புக்களாம் குடும்பம், குழுமம், அரசு, மன்றம், அறங்கூறும் அவையம், கோயில் – அது சார்ந்த தேர்—திருவிழா, மக்கள் சேர்ந்து வாழும் சிற்றூர், பேரூர், நாடு, நகரம் போன்ற பல்வேறு நிறுவனங்களும் அமைப்புகளும் உலகில் உருவாக வழி பிறந்திருக்காது. மனிதன் விலங்குகள் போல் வாழ்ந்திருப்பான்.

மனித மேம்பாட்டிற்கு உதவுகின்ற இந் நிறுவனங்களும் அமைப்புகளும் இந்த உலகுக்கு மனித மொழி தந்த கொடைகளாம்.

மனித மொழி, அறிவியல் சார்ந்தும் கலையியல சார்ந்தும் மனித மேம்பாட்டிற்குத் தொண்டாற்றுகின்ற அற்புதமானதொரு படைப்பாற்றல் கொண்ட கருவியாம்.

வரை மொழிப் பாங்கிலும் கலை வடிவாக வாய்மொழிப் பாங்கிலும் வெளிப்படுவன வற்றையே, நாம் இலக்கியம் என்கிறோம்.

உணர்ச்சி, கருத்து, கற்பனை, வடிவம் என்ற நான்கு உறுப்புகளும் கொண்டதுதான் இலக்கியம். இலக்கியம் செய்யுள் வடிவாகவும் அமையும்; உரைநடையாகவும் அமையும்.

சங்கப் பாடல்கள், பதினெண் கீழ்க்கணக்கு நூல்களான அறநூல்கள், ஆழ்வார் — நாயன்மார்களின் பக்திப்பாடல்கள், சிலப்பதிகாரம், மணிமேகலை, பெருங்கதை, சீவகசிந்தாமணி, கம்பராமாயணம், பெரியபுராணம் போன்ற காப்பியங்கள், பிற்காலச் சிற்றிலக்கியங்கள், பன்னிரு திருமுறைகள், பதிநான்கு சைவ சாத்திரங்கள், தனிப்பாடல் திரட்டுகள், வள்ளலார் பெருமானின் அருட்பா, பாரதி — பாரதிதாசன் ஆகியவர்களின் பாடற்தொகுதிகள் ஆகியவையெல்லாம் செய்யுள் என்னும் வகையைச் சார்ந்தவையாம்.

இன்று நெடுங்கதையாக விளங்கும் புதினம், சிறுகதை, கட்டுரை முதலியன உரைநடை வகையைத் தழுவி நிற்பனவாம்.

செய்யுள் இலக்கியம் வடிவ அமைப்பில் சீரும் தளையும், அடியும், தொடையும் உடையது. ஒலிநயமும் கற்பனையும் விழுமிய உணர்ச்சிச் செறிவும் அது நிறையக் கொண்டு விளங்கும்.

உரைநடையாக எழுதப்படும் இலக்கியம் உணர்ச்சி, கற்பனை, கருத்து என்பனவற்றைச் சிறப்பாகக் கொண்டிருந்தாலும், செய்யுள் யாப்பாக இல்லாமல் மக்கள் பேசுவது போன்ற வடிவமாய் அமையும்.

செய்யுளாக அமையும் ஒரு வகை இலக்கிய வடிவமே காப்பியமாகும்.

தமிழில் காப்பிய மரபு பற்றிய சிந்தனை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னதாகவே தோன்றி விட்டது. தொல்காப்பியத்தில் குறிக்கப் பெறும் 'தொன்மை,'' ''தோல்'' என்னும் இலக்கிய வகைகள் உணர்த்தும் செய்திகள் காப்பியத்தின் மரபைச் சுட்டுவனவாக நச்சினார்க்கினியர், அடியார்க்கு நல்லார், இளம்பூரணர் ஆகியோர் கருதி வந்துள்ளனர்.

''தொன்மை தானே சொல்லுங்காலை
உரையொடு புணர்ந்த பழமை
மேற்றே''

(தொல்: பொருள்; 549)

எனச்சுட்டி,

''இழுமென் மொழியான் விழுமியது
நுவலினும்
பரந்த மொழியான் அடிநிமிர்ந்து
ஒழுகினும்
தோலென மொழிப தொன் மொழிப்
புலவர்''

(தொல் : பொருள் : 550)

எனத் தொல்காப்பியர் வரைந்துள்ளார்.

கிரேக்க அறிஞர் அரிஸ்டாட்டில், காப்பிய மரபைப் பற்றிக் கூறுவதை இங்கே நினைவு கொள்ளலாம்; அது தமிழ் மரபோடு, ஒப்பிட்டுத் தமிழ்க்காப்பியக் கூறுகளை அடையாளம் காண உதவலாம். காப்பியத்தின் செயல், கதையொன்றைப் பாட்டு வடிவில் கூறுவதாம். காப்பியத்தின் கரு, துன்பியல் நாடகம் போல நாடகத் தன்மையோடு பின்னபபடுதல் வேண்டும். காப்பியத்தின் பொருள், செம்மையும் முழுமையும் வாய்ந்த தொரு செயற்பாட்டை விளக்குவதாகவும், அமைதல் வேண்டும். மேலும்; தனக்கென ஒரு தொடக்கமும், இடைநிலையும், இறுதியையும் கொண்ட உயிர்ப்பொருள் போலப் பல்வேறு உறுப்புகளும் தம்மோடு தாம் இணைந்து முழுமையாக அமைந்து (an organic whole) இன்பம் நல்க வேண்டும் என்று அரிஸ்டாட்டில் தமது ''கவிதை இயல்'' என்ற நூலில் குறிப்பிடுகின்றார்.

தொல்காப்பியர் சுட்டும் தொன்மை எனும் காப்பியம். ''உரையோடு புணர்ந்த பழமை மேற்றே'' என்பதை ''உரைநடை'' யென்று உரையாசிரியர்கள் தவறாகப் பொருள் கொண்டது போல் நாம் பொருள் கொள்ளாமல், ஆன்மீக வள்ளல் அரவிந்தரின் தெளிந்த விளக்கத்தின்படி காப்பியம் என்பது ''Narrative Poetry'' எனக் கொள்ள வேண்டும். இதனை நாம் உரை நடைக் கதை என எண்ண வேண்டுவதில்லை, அரவிந்தர் (In "FUTURE POETRY'') கருத்தின்படி, எடுத்து உரைக்கும் கவிதை வடிவமே. காப்பியமகும் இதனை நாம் எடுத்துரை கவிதைக் கதை (Narrative Story) என்றே குறிப்பிடலாம். இவ்வாறான ஒன்றையே தொல்காப்பியம் இறிக்கிறது. எனவே, பழமையான கதை ஒன்றினை எடுத்து உரைக்கும் பாங்கில் கவிதையாக ஆக்கித் தருவது காப்பியமாம்.

பின்னாளில், சிலப்பதிகாரம் மணிமேகலை, பெருங்கதை, போன்ற தமிழ்க் காப்பியங்கள் எழுந்த பின்னர் உருவான தண்டியலங்காரம் என்னும் இலக்கண நூல், பெருங்காப்பியத்தின் மரபுக் கூறுகளாகவுள்ளவற்றைச் சுட்டிக் காட்டுகின்றது. அந்த அமைப்பில் எட்டு அடிப்படைகளைத் தண்டியாசிரியர் காட்டுகின்றார்.

முதலாவது வாழ்த்து, தெய்வ வணக்கம், வரும் பொருள் கூறல் ஆகியவற்றுள் ஒன்றோ பலவோ காப்பியத்தின் தொடக்கத்தில் இடம் பெறுதல் வேண்டும்.

இரண்டாவதாக. அறம், பொருள், இன்பம்; வீடு என்ற நான்கினையும் தமிழ்க் காப்பியம் வழங்க வேண்டும்.

அவ்வாறு நாற் பொருளையும் சுட்டும் காப்பியமே பெருங்காப்பியம். இந்நாற் பொருளில் ஏதேனும் ஒன்றோ பலவோ குறைந்திருக்குமானால் அது 'சிறுகாப்பியம்' எனப்பெறும்.

மூன்றாவதாகத் தனக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லாதவனைத் தலைவனாகக் காப்பியம் கொள்ள வேண்டும். கோவலனும். இராமனும் இத்தகைய காப்பியத் தலைவர்களே.

நான்காவதாக மக்களின் நல்வாழ்வை நெறிப்படுத்தும் இயற்கை ஆற்றலாம் நாடு, நகரம். மலை, கடல், பல்வேறு பருவங்கள், கதிரவன்தோற்றம், திங்களின் தோற்றம் ஆகியவற்றைக் காப்பியத்தில் வருணனை. உவமை, உருவகம் போல எடுத்துரைக்க வேண்டும். சிலப்பதிகாரத்தில் வரும மங்கள வாழ்த்தும்கம்பராமாயணத்தில் வரும் நாட்டுப் படலம், நகரப் படலம் பிறவும் இவற்றிற்கு எடுத்துக்காட்டாக அமையும்.

ஐந்தாவதாக, மணம் புரிதல், முடி சூடுதல், பொழில் விளையாட்டு, சிறுவரைப் பெறுதல், ஊடலில் முனிதல், கூடலில் களித்தல் முதலியவற்றைப் புனைந்துரைக்கும் நன்னடைப் பாவாகக் காப்பியம் திகழப் பெறுதல் வேண்டும்.

ஆறாவதாக, அமைச்சருடன் ஆய்தல், தூது விடுதல், பயணம் மேற்கொள்ளல், போர் செய்தல், வெற்றி பெறல் முதலியன நாடகத்தில் அமைவன போல் நன்கு காப்பியத்தில் அமைந்திருத்தல் வேண்டும்.

ஏழாவதாகக் 'காப்பியம் சருக்கம், இலம்பகம், பரிச்சேதம் என்ற ஒன்றின் பெயரோடு

பல்வேறு பகுதிகளாக அமையப் பெற்றிருத்தல் வேண்டும்.

இறுதியாகக் காப்பியம் கற்போர் நகை, அழுகை முதலான எண் வகை சுவையுணர்வும் மெய்ப்பாட்டுக் குறிப்பும் காப்பியத்தில் கண்டு மகிழ்தல் வேண்டும்.

இவ்வாறு பெருங்காப்பியக் கூறுகளாகச் சுட்டப் பெறுவன தமிழ்க்காப்பியங்கள் எல்லாவற்றிலும் காணப்படுகின்றன.

இவற்றுள் அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கு பொருள்களில் எந்த ஒரு பொருள குறைந்திருந்தாலும் அது பெங்காப்பியம் ஆகாது; அதனைச் சிறு காப்பியம் என்றே சுட்டுவார்கள்.

பெருங்காப்பியமும் சிறு காப்பியமும் ஒரு வகைப்பா அல்லது. பாவினத்தாலோ, பல வகைப் பா அலலது பாவினத்தாலோ வரலாம். உரைவிரவியும் வரலாம் உரைவிரவாது வருவதே காப்பியத்திற்குச் சிறப்பு என்பார் தண்டியலங்கார ஆசிரியர்.

அறிஞர் மு. அருணாசலம் 'முதற் காப்பியம்' என்ற தலைப்பில் சுட்டிக் காட்டும் தமிழ்க் காப்பிய மரபை நோக்கும்போது காப்பியம் பற்றிய தெளிவு பிறக்கிறது. அவற்றை இப்போது நான் உங்கள்முன் வைக்கிறேன்.

காப்பியம் என்பது கதை தழுவிய தொடர் நிலைச் செய்யுள், தமிழ்க் காப்பிய வரலாற்றை நுணுகிக் காண்பவர்கள் ஆசிரியப் பாவில் தொடங்கி விருத்தமாகக் காலந்தோறும் தமிழில் வளர்ந்த காப்பிய யாப்பு வரலாற்றைக் கண்டுணரலாம்.

இளங்கோ ஒருவரே ஆசிரியப் பாவோடு கலிப்பாவையும் சிலப்பதிகாரக் காப்பியத்தில் படைத்து வழங்குகின்றார். மணிமேகலையும் பெருங்கதையும் ஆசிரியப்பாவால் ஆனவை. கம்பராமாயணமும். சீவக சிந்தாமணியும் விருத்தப்பாவால் அமைந்தவை.

ஐம்பெரும் காப்பியம்—ஐஞ்சிறு காப்பியம் என்ற பகுப்பு, பின்னாளில், அடியார்க்கு நல்லாரின் உரை எழுந்த காலத்தில் வழக்குக்கு வந்த பகுப்பாகும்.

ஒவ்வொரு காப்பியமும் தனி நோக்க முடையது என்றாலும், பெண்ணின் பெருமையைப் பறை சாற்றும் நோக்கத்தைத் தமிழ்க் காப்பியங்கள் கொண்டுள்ளன. சிலம்பில் வென்ற சேயிழையாகக் கண்ணகியைச் சிலப்பதிகாரம் காட்டும், சிறையிருந்தாள் ஏற்றமாகச் சீதையைக் கம்பராமாயணம் படைக்கும்.

தமிழில் முதற்காப்பியங்களாகத் துலங்கும் சிலப்பதிகாரமும், மணிமேகலையும் சாமான்யக் குடி மக்கள்காப்பியமாக விளங்குவதை அறிஞர் தெ. பொ. மீனாட்சி சுந்தரனார் ''குடிமக்கள் காப்பியம்'' என்னும் நூலில் எடுத்து விளக்கியுள்ளார். இதுவே தமிழின் முதற்காப்பியங்கள் பெற்றிருந்த மரபுப் பண்பாம்.

காப்பியத்தில் ஒருமைப்பாட்டுணர்வைத் தமிழ்க் காப்பியங்கள் அனைத்தும் வலியுறுத்தும். பத்தினி வழிபாட்டின் வாயிலாக உலக ஒருமைப்பாட்டிற்கு வழிகாட்டுகின்றது சிலப்பதிகாரம், சிறையிருந்து ஏற்றம் பெற்ற சீதையின் வழியாக 'உலகம் ஒரு குடும்பம்' என்ற ஒருமைப்பாட்டு உணர்வை வலியுறுத்துகிறது கப்பாராமாயணம். சேக்கிழார் படைத்த பெரிய புராணமும் சாதி—தொழில்—மொழி நாடு என்ற எல்லைகளைக் கடந்து சமுதாயத் தொண்டு வழி அமைந்த பேதமற்ற ஒன்றே மனித இனம் — ஒன்றே மனிதர் குலம்—ஒன்றே தெய்வம்—என்ற உலகப் பொதுமையை விளக்கும் மாபெரும் கலைக்கூடமாகத் தோற்றமளிக்கின்றது. இதனைத் தமிழ்க் காப்பியச் சிறப்பு மரபாகக் கொள்ளலாம்.

புதியதோர் உலகைச் சமைத்திட, இன்று, பழந்தமிழ்க் காப்பிய மரபில் வரும் வாழ்வியல் கருத்துக்கள் எவ்வாறு உதவும்? இன்றைய உலகில் இது ஒரு கேள்விக்குறி. அறத்தின் வடிவாக விளங்கும் கண்ணகி, கருணை மறவனாக விளங்கும் கோவலன், தோழமைக்கு எடுத்துக்காட்டாக விளங்கும் தேவந்தி, அறம்புரி நெஞ்சோடு அடைக்கலம் பேணி மகிழும் ஆயர் முதுமகள் மாதரி. துணை நின்று வழிகாட்டி ஆற்றுப்படுத்தும் துறவு பூண்ட தூயவர் காவுந்தி அடிகள், கொடுங்கோல் தன்மை இதுவெனக் காட்டும் பாண்டியன் நெடுஞ்செழியன், கொடுங்கோலஞ்சிக் குடிமக்களைக் காத்துத் தன் பத்தினி வேண்மாள் சொல்லைப் போற்றிய சேரன் செங்குட்டுவன் ஆகியோரின் வாழ்வைப் பற்றி அறிவதே புதியதோர் உலகம். சமைத்திட ஏற்ற மனப்பக்குவத்தை என்றும் வழங்கலாம். அதனாலேயே இக் காப்பியங்கள் சாகா இலக்கியங்கள் என்பர். கலை வாழ்வும் இல்லற வாழ்வும் எனப் பெண்ணின் மானுட வாழ்வை இரு கூறாக்கியது பண்டைய தமிழ்ச் சமுதாயம். கலை

வாழ்வும் இல்லறவாழ்வும் ஒன்றை ஒன்று சார்ந்து நிற்பனவாம்; அவை முரணானவை அல்ல. அவை சமுதாயத்தின் வாழ்விலும் வளர்ச்சியிலும் இருகண்கள் போன்று செயல் படுவனவாம். கலை வாழ்வு இல்லற வாழ்வைக் குலைப்பதும், இல்லற வாழ்வு கலை வாழ்வைப் புறக்கணிப்பதும் எந்நாளும் நடைமுறைக்கு ஒவ்வாதாம். கலை வாழ்வை யும் இல்லற வாழ்வையும் முறையாக அரண் அமைத்துக் கட்டுக்குள் வளர்ப்பது சமுதாயத் தின் கடமையாகும். இது ஒரு நுட்பமான செயல் திட்டம். இந்தச் சமுதாயச் செயல் திட்டத்தைப் போற்றினால் சேற்றிலும் செந்தாமரை மலர்வது போல் மக்களிலிருந்து தெய்வ மாந்தரைப் பெறலாம்; மக்களைத் தெய்வீகத் தொண்டராக உருவாக்கலாம். கண்ணகியும், மணிமேகலையும் அப்படி உருவான பெண்களே. கண்ணகி தெய்வமாக வழிபட்ட நிலையை இளங்கோ அடிகள் காட்டுவர். மணிமேகலை சிறைக் கோட்டத் தையே அறக்கோட்டமாக்கிய திறல் பெற்ற திருத்தொண்டராகக் காட்டுகின்றார் சாத்த னார்.

காப்பியக் கட்டமைப்பு மரபுக் கூறு களிலும், இவ்வாறு, நாம் உலகக் காப்பியங் களோடு தமிழ்க் காப்பியங்களை ஒப்பிட்டுக் காண முடியுமா என்பதும் அறிஞர் உலகில் எழும் மற்றொரு ஐயம். இதற்கும் தெளிவான விடையுண்டு. நிச்சயமாகக் காணமுடியும். செயல் வாழ்க்கை — அதாவது, ''Life of action'' காப்பியத்தில் ஊடுருவி ஒரு தனி மனிதனின் வீரச் செயலாகவோ பலரின் வீரச் செயல்களாகவோ அமைந்திருப்பது உலகக் காப்பியங்களின் மரபு, என்பார் அறிஞர் சி. எம். பௌரா (தமது ''Heroic Poetry'' என்னும் நூலில்).

எடுத்துக்காட்டாக இளங்கோ அடிகள் கண்ணகியை ஒரு வீர பத்தினியாக — சிலம் பில் வென்ற சேயிழையாக—படைத்துள்ளார். கோவலனையும் ஒரு கருணை மறவனாகக் காட்டுகின்றார். சேரன் செங்குட்டுவனையும் ''வாள் ஏர் உழவனாய்— வளர்தமிழ் இகழ்ந்த கனக விசயரை வெற்றி கொண்டவ னாகக் காவ்யத்தில் வடிக்கின்றார். இவை யெல்லாம் வீரம் தோய்ந்த செயல் வாழ்க்கை யாகச் சிலப்பதிகாரம் சித்திரிக்கின்றது

தண்டியலங்காரம்—

''பாவிகம் என்பது காப்பியப் பண்பே'' என்று சுட்டிக் காட்டுகிறது. இதனை வட மொழிக் காய்பியச் சிந்தனையாளரும், கிரேக்க—உரோம் நாட்டுக் காப்பிய ஆய்வு சிந்தனையாளரும் சுட்டுவர்.

''பாவிகம் என்பது பொருள் தொடர் நிலைச் செய்யுள் எனப்படும். காப்பியத்தில் தொடக்கம் முதல் முடிவுவரை நூலிழை போல் ஊடுருவி நிற்கும் அடிக்கருத்தாம். இந்தப் பாவிகத்தைச் சிலப்பதிகாரப்பதிகம் சிறப்பாக எடுத்துக்காட்டும்.

''அரைசியல் பிழைத்தோர்க்கு
அறங்கூற்றாவதும்
உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர்
ஏத்தலும்
ஊழ்வினை உருத்து வந்து
ஊட்டும் என்பதும்
சூழ்வினைச் சிலம்பு காரணமாகச்
சிலப்பதிகாரம் என்னும் பெயரால்
நாட்டுதும் யாமோர் பாட்டுடைச்
செய்யுள்''

என்று மையமாக உள்ள உரைசால் பத்தினி வாழ்வு என்னும் அடிக்கருத்தும், மற்றும் அரைசியல் பிழைத்தோர்க்கு அறங்கூற்றா வதும், ஊழ்வினை தொடர்ந்து வந்து செயல் படுவதும் சிலப்பதிகாரத்திலுள்ள புகார்க் காண்டக் கதைப்பகுதியிலும், மதுரைக் காண்டக் கதைப்பகுதியிலும், வஞ்சிக் காண்டக் கதைப்பகுதியிலும் தெளிவுபடுத்தப் பட்டுள்ளது. இதனையே காவியத்தில் பாவிகம் எனலாம்.

ஏறத்தாழ 5000அடிகள் கொண்ட சிலப்பதி காரத்தில் 2146 அடிகளில் மட்டுமே கதை வருகிறது என்பார் அறிஞர் வ சுப. மாணிக்கனார். இதில் காப்பிய மரபாக வரும் வேறு பொதுக் கூறுகள்—பிற உலகக் காப்பியங்களோடு வைத்து எண்ணத் தக்க கூறுகளை ஒப்பிட்டுக் காணமுடியும்.

உலகப் பழங்காப்பியங்கள் எல்லாமே கதை உரை கவிதை—அதாவது ''narrative poetry'' -வடிவில் அமைந்திருக்கும்.

காப்பியக்கதைகள் பெரும்பாலும் பழபரபுக் கதைகள்—அதாவது ''Myths'' என்பன வற்றோடு சகல கலா வல்லமையும் சாகச வீரமும் நிறைந்த பழங்கதைகள் அதாவது ''legends'' என்பனவற்றிற்கு இடமளித்துப் புனையப்படும். எடுத்துக் காட்டாக, நற்றிணையில் வரும் திருமா உன்னியைப் போலவே மதுரைக் காண்டத்தின் இறுதியில் கண்ணகியின் தோற்றம் அமைந்துள்ளது. இது அந்நாளில் இலக்கியத் தனிப்பாடலாக

அறிந்திருந்த நிலையில் சிலப்பதிகாரக் காப்பியப்படைப்பாக உருவாகிறது. இது பழமரபுக் கதையொன்று காப்பியமாவதற்கு எடுத்துக்காட்டாக அமையும்.

மேலும் வாய்மொழியின் பங்கு காப்பியத்தில் சிறப்பிடம் பெறும்.

காப்பியத்தில் காணப் பெறும் எல்லாச் செயல்களுமே ஒரு முதன்மையான செயலோடு — அதாவது Main Action என்பதோடு நிகழ்ச்சிப் பின்னலில் — அதாவது Plot — என்பதோடு பின்னிப்பிணைந்திருக்கும். எடுத்துக் காட்டாக மாதவி மடந்தை பாடிய கானல் வரி பாடல் கனக விசயர் முடித்தலையை நெறித்துக் கண்ணகிக்குப் பத்தினிக் கோட்டம் அமையவும் உலகம் முழுதும் கண்ணகியை வழிபடவும் வைத்ததைத் தனித்தனியே தொடர்பற்றது போன்று தோன்றும் பல்வேறு மக்களின் செயல்களும் நிகழ்ச்சிகளும் ''பத்தினி வழிபாடு'' என்னும் மையச் செயலுடன் மிக அழகாகப் பின்னப்பட்டுள்ளதைச் சிலப்பதிகாரத்தில் காணலாம். இவ்வாறு காப்பியக் கதைப் பின்னல் அமைய வேண்டும் என்பார் அறிஞர் சி. எம். பௌரா (தமது ''From Virgil to Milton'' என்கின்ற காப்பிய ஆராய்ச்சி நூலில்).

இவ்வாறு மேலும் பல பொதுவான காப்பிய மரபுகளைத் தமிழ்க் காப்பியங்களில் கண்டு மகிழலாம்.

---

### செம்மல் சொ. முருகப்பா கடிதம்

சொ. முருகப்பா | அமராவதிபுதூர்
ஆசிரியர் ''குமரன்'' | 3—10—1946

திரு அரு. மு. ராம. சிங்காரம் அவர்கட்கு,
நெற்குப்பை

அன்புடையீர்,

தாங்கள் பாடல் (இப்பவும் செறிவுடன் இருப்பது) மிக நன்றாக அமைந்திருக்கிறது. வலிந்து பாடாமல், உணர்ச்சி தோன்றும் சமயத்தை அலட்சியப்படுத்தாமல் பழகிவந்தால் உயர்ந்த பாடல்களை எதிர்பார்க்கலாம். யாப்பு, ஓசை, நயம், பாவம் எல்லாம் இவ்வெண்பாவில் அமைந்து கிடப்பதைக் காண மகிழ்ச்சியடைகிறேன். உங்கட்கு ஆசி கூறுகிறேன்.

அன்புடன்
சொ. முருகப்பா

'குமரன்' இதழில் வாரந்தோறும் வெளிவந்தது, 'வெண்பாப் போட்டி'. அதில் சிங்காரம் என்ற வீட்டுப் பெயரிலும் பெரிய கருப்பன் என்ற இயற்பெயரிலும் தமிழண்ணல் என்ற புனைபெயரிலும் வெண்பா எழுதி, அவை ஒரே சமயத்தில் வெளிவருவதைப் பார்த்து மகிழ்ந்திருக்கிறார்பேராசிரியர். ஒருமுறை பேராசிரியருக்கு சீர்திருத்தச்செம்மல் சொ. முருகப்பா எழுதிய மடல்.

# இளங்கோவடிகளின் உலகளாவிய பார்வை

பேராசிரியர் ம. ரா. போ. குருசாமி.
'செந்தில்' தாமுநகர், கோயமுத்தூர் 641045

'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற குரல் இந்தத் தமிழ் மண்ணிலே இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னரே எழுந்தது. மானுடரிடையே உரிமையுறவு நிலவுதற்குக் குரல் எழுப்பிய ஞானப் பெருந்தகை யாகிய பூங்குன்றனார் மற்றுமோர் இடத்திலே' மரம்சா மருந்துங் கொள்ளார் உரம்சாச் செய்யார் உறுதவம்' என்றும் மொழிந்திருக்கிறார். முன்னையதில் மானுட நேயமும் பின்னதில் ஆன்ம நேயமும் ஒலிப்பதை நுணித்துணர வேண்டும். இவ்வாறு இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னரே ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமை சான்றோர் சிந்தனையில் எழுந்ததென்பது நம் பெருமித உணர்வுக்குக் காரணம் ஆகிறது. அந்தக் கால்வழியில் தோன்றிய இளங்கோவடிகளிடம் உலகளாவிய பார்வை இருந்திருக்கவேண்டும் என்று எதிர்பார்ப்பது இயற்கைதான்.

'உலகளாவிய பார்வை' என்னும்போது ஒரு சிறு விளக்கத்தை முன்னிறுத்துவது என் கடமை. தந்தையின் அணுகுமுறைக்கும் மகனின் அணுகுமுறைக்கும் வேற்றுமை நிலவுவது இயற்கை. முன்வைக்கப்படும் சிக்கல் ஒன்றாக இருந்தாலும், அணுகுமுறையிலே வேற்றுமை இருக்க வாய்ப்பு உண்டு. 'தலைமுறை இடைவெளி' என்று சமுதாய இயலார் இதனை விளக்குகிறார்கள். அடுத்தடுத்த தலைமுறைகளிடையே அணுகுமுறையில் வேற்றுமை இருக்கமுடியும் என்றால், பல நூற்றாண்டுகட்குமுன் வாழ்ந்த சான்றோரின் பார்வைக்கும் நம் பார்வைக்கும் வேற்றுமைகள் இருந்தால், அதில் வியப்பு ஏதும் இல்லை.

'உலகப் பார்வை' என்ற பின்னணியில் இளங்கோவடிகளின் பார்வையைக்கணிக்கும் போது இந்த நினைப்பு நம் நினைவாங்கிலிருந்து நீங்கிவிடக் கூடாது. அவர் காலத்துப் பார்வை வீச்சுக்கும் நம் காலத்துப் பார்வை வீச்சுக்கும் வேற்றுமைஇருக்கிறது, பல பல வகைகளிலே.

இதனை இன்னும் சற்று விளக்கமாகப் பார்ப்பது நலம்.

உலக அரங்கில் ஏறத்தாழ முந்நூறு ஆண்டுகட்குமுன் தோன்றிய தொழிற் புரட்சியும் அதற்கு அடிப்படையாக இருந்த விஞ்ஞான ஆராய்ச்சியும் உலக வாழ்க்கையின் புற அமைப்பினை மிகவும் மாற்றிவிட்டன. ஐக்கிய அமெரிக்க நாட்டின் கிழக்குக் கரைக்கும் மேற்குக் கரைக்கும் இடையே நாலாயிரம் மைல் பரப்பு... கிழக்குக் கரையிலுள்ள ஒரு பள்ளியின் ஒரு வகுப்பு மாணவர்கள் மேற்குக் கரையிலுள்ள ஒரு பள்ளியின் அதே வகுப்பு மாணவர்களோடு ஒரே பாடத்தை ஒரே நேரத்தில் விவாதித்துக் கற்கிறார்கள். இதில் என்ன பெரிய வியப்பு என்று கேட்கத் தோன்றுகிற தல்லவா? ஒரே வகுப்பு, ஒரே பாடம், ஒரே நேரம் என்பதிலே வியப்பு இல்லை. கிழக்குக் கரை மாணவர்களோடு மேற்குக் கரை மாணவர்கள் தொலைக்காட்சி வாயிலாக அளவளாவி விவாதிக்கிறார்கள் என்பதுதான் வியப்பு. இரண்டு கரைகளுக்கும் இடையே இடத்தால்மட்டு மல்லாமல், காலத்திலும் வேறுபாடு உண்டு. ஆம், இரண்டு கரைகளுக்கும் நான்கு மணி நேரஇடைவெளி உண்டு. காலம் இடம் இவற்றால் இயற்கையில் நிலவுகின்ற வேறுபாடுகளை வென்று மனிதர்கள் கருத்துப் பரிமாற்றம் செய்து கொள்ள இன்றைய அறிவியல் உதவுகிறது. மாணவர்கள் விவாதித்துக் கற்பதை நம் வீட்டுக் கூடத்திலுள்ள தொலைக் காட்சிப் பெட்டியில் பார்க்க முடிகிறது ஏற்கனவே தனித்தனியே ஒளிப்பதிவு செய்து, பின்னால் ஒளிபரப்புகின்ற வேலை அன்று; நடக்க நடக்க அந்தக் கணத்திலேயே ஒளிபரப்ப முடிகிறது.

இதே உத்தியைக் கொண்டு உலகத்துப் பல நாட்டுத் தலைவர்களைத் தொலைக்காட்சி

யிலே ஒரே சமயத்தில் அளவளாவச் செய்ய முடியும்.

இது நம் காலத்து அறிவியல் சாதனை (அறிவியலின் விளைவெல்லாம் நன்மை மட்டுமே தருகிறதா என்ற கேள்வியை இந்த வேளையில் எழுப்ப விரும்பவில்லை).

இளங்கோவடிகளின் காலத்தில் அக்காலத்த வர்க்கு வேண்டிய அளவுக்கு அறிவியலு ணர்வு இருந்தது; ஆயினும், நம் காலத்து அறிவியற் சாதனை அவர் காலத்துக்கு இல்லை. அதனால், இரண்டு காலத்தவரின் புற வாழ்க்கையமைப்புகளில் வேற்றுமைகள் இருக்கவே செய்யும்.

ஒரு சிறு எடுத்துக்காட்டு...

நம் கையில் இருக்கிற சின்னஞ்சிறு கைக்கடி காரம்...அதில் தான் எத்தனை அற்புதச் செய்திகள்! வினாடியில் நூற்றிலொரு பகுதி யைக் கூட துல்லியமாகத் தெரிவிக்கும் நம் கையிலுள்ள கடிகாரம்; பல நாட்டு மணிக் கணக்கையும் பொத்தானை அழுத்தித் தெரிந்துகொள்ள முடியும். மின்னணு வளர்ச்சியின் உதவியால் கைக்கடிகாரத்தில் மணிமட்டு மன்றி நாள், மாதம், வருடக் கணக்குகளையும் அறிந்துகொள்ள முடிகிறது. திங்களின் வளர்பிறை தேய்பிறைத் தோற் றங்களையும் தெளிவாகக் கடிகார முகப்பி லேயே கண்டுகொள்ள முடிகிறது.

இளங்கோவடிகளின் காலத்திலேயே இந்த வசதி கிடையாது. கைக் கடிகாரம் இல்லாத காலம்தான். ஆனாலும், கால உணர்வு இல்லாத காலம் இல்லை.

இளங்கோவடிகளின் தமையன் சேரன் செங் குட்டுவன்: வட திசை இமயச் சாரல் வரையிலே படைகொண்டு சென்றான்; வட திசை மன்னர் பலர் திரண்டுவந்து எதிர்த்த னர். தமிழகத்துச் சேரனே வென்றான். போர் முடிந்தது வெற்றி வாகை சூடிய மன்னவன் பாடிவீட்டில் அமர்ந்திருக்கிறான். உலகத்தை இருள் விழுங்கியது; பகல் முடிந்தது, மாலை வளர்ந்தது வானம் செக் கர் பூப்ப வெண் பிறை தோன்றியது. அந்த வெண்பிறையைக் குறிப்பாகப் பார்த்தான் சேரன் செங்குட்டுவன். போர் நினைவிலேயே இருந்த அந்தத் தலைவனுக்கு இதுவரை கழிந்து போன காலத்தைப் பற்றிய நினைப்பே தோன்றவில்லை. செயல் முடிந் தது, காலம் பற்றிய சிந்தனை எழுந்தது. பிறை மதியைக் கூர்ந்து நோக்கிய மன்ன வன் மதியிலே நிழலாடிய நினைவு எது என் பதை அரசாங்கக் கணி புரிந்துகொண் டான். ''அரசே, நாம் வஞ்சி நகரத்தி லிருந்து புறப்பட்டு முப்பத்திரண்டு மாதங்கள் ஆகின்றன'' என்று சொன்னான்.

ஒரு சின்னஞ்சிறு கடிகாரம்—எவர் கையிலும் இன்று நாம் காண்கிற கடிகாரம் கண நேரத் தில் தெரிவிக்கிற செய்தியை அந்தக் காலத் தில் அதற்கென்றே நியமிக்கப்பட்டிருந்த ஒரு மனிதன் கண்டிப்பான கணிப்பு முயற்சியில் இடையறாது ஈடுபட்டிருந்து தெரிவிக் கிறான். காலக் கணி வேறு வேலை செய்ய முடியாது, நாழிகை தவறாமல்—நாள் தவறாமல் கணக்கு வைத்துக்கொண்டே யிருக்கவேண்டும். தலைவன் குறிப்பறிந்து அவனுக்கு நேரத்தை—கால அளவை அறி விக்க வேண்டும். அரசனும் — அவன் எவ் வளவு பேராற்றலும் ஆணைச் செல்வமும் உடையவனாக இருந்தாலும் — நம்மைப் போல் மணிக்கட்டை ஒருகணம் பார்த்துக் கால அளவை அறிந்துகொள்ள முடியாது. செல்வமும் செல்வாக்கும் பெருகியவனாக இருந்தாலும் ஏடு தாங்கும் ஒரு கணியைத் தான் நாட வேண்டும்.

சேரன் செங்குட்டுவன் காலக் கணக்கை அறிந்து கொண்டதை இளங்கோவடிகள் தெரிவிக்கிறார்:

> அகல்வாய் ஞாலம் ஆரிருள் விழுங்கப்
> பகல்செல முதிர்ந்த படர்கூர் மாலைச்
> செந்தீப் பரந்த திசைமுகம் விளங்க
> அந்திச் செக்கர் வெண்பிறை தோன்றப்
> பிறைஏர் வண்ணம் பெருந்தகை நோக்க
> இறையோன் செவ்வியின் கணி எழுந்
> துரைப்போன்
>
> 'எண்ணான்கு மதியம் வஞ்சி நீங்கியது
> மண்ணாள் வேந்தே வாழ்க' என்று ஏத்த
>
> —நீர்ப்படை 143—150

வாழ்வின் புறக் கூறுகளிலே இளங்கோவடி களைவிட நம் காலத்தவர்கள் மிகப் பெரிய வளர்ச்சிகளைப் பெற்றவர்களாகப் பெருமைப் பட்டுக்கொள்ளலாம். நம் காலத்து ஆட்சி யாளர்களுக்கு ஏவு கணைகளும் அணுக் குண்டுகளும் உண்டு. இருந்த இடத்தில் இருந்த வண்ணமே ஒரு பொத்தானை அழுத்தியே பல்லாயிரம் மைல்களுக்கு அப்பா லுள்ள பகைநாட்டைப் பொசுக்கி விடலாம். கண நேரவேலை. காலங் காலமாகக் கட்டிக் காத்த நகரங்களைப் பொடியாக்கி விடமுடி யும். ஆனால், பதினெட்டு நாழிகையே நடந்த போருக்காகப் பல்லாயிரம் வீரர் களைத் திரட்டிக்கொண்டு முப்பத்திரண்டு

மாத காலம் பயணத்திலேயே பொழுது கழித்திருக்கிறான் சேரன் செங்குட்டுவன்!

புற வாழ்வின் கூறுகளை முன்னிறுத்தி இளங்கோவடிகளின் உலகளாவிய பார்வையைக் கணிக்க முற்பட்டால், நம் காலம் வீணே கழியும். வாழ்க்கையின் விழுப்பொருள் நாட்டமே பண்பாட்டுக்கு நிலைக்களன் ஆவது.

நெடிய மொழிதலும் கடிய ஊர்தலும்
செல்வ மன்றுதம் செய்வினைப் பயனே
சான்றோர் செல்வம் என்பது.
சேர்ந்தோர்
புன்கண் அஞ்சும் பண்பின்
மென்கட் செல்வம் செல்வ மென்பதுவே
(நற்.210)

நல்வேட்டனாரின் இந்தப் பாடல் நயத்தக்க நாகரிகமாகிய பண்பாட்டின் தன்மையினைத் தெளிவாக்குகின்றது.

உலக வாழ்வு என்பது உணவு, உடை, உறையுள் இவற்றளவில் நின்று ஓய்ந்து விடுவதன்று; அரசியல் மேலாண்மையும் அதிகார மேலாண்மையும் நெடிது நிற்பன அல்ல... சுருங்கச் சொல்லின், பொருட்செல்வம் 'பூரியார் கண்ணும் உள' (குறள்), நயத்தக்க நாகரிகம், அன்பு, அருள்... என்றினைய விழுப்பொருள் நாட்டமே உலகை உய்விக்க வல்லது.

உண்டா லம்மஇவ் வுலகம் இந்திரர்
அமிழ்தம் இயைவ தாயினும்
இனிதெனத்
தமியர் உண்டலும் இலரே முனிவிலர்
துஞ்சலும் இலர்பிறர் அஞ்சுவ தஞ்சிப்
புகழெனின் உயிரும் கொடுக்குவர்
பழியெனின்
உலகுடன் பெறினும் கொள்ளலர்
அயர்விலர்
அன்ன மாட்சி அனைய ராகித்
தமக்கென முயலா நோன்தாள்
பிறர்க்கென முயலுநர் உண்மை யானே
(புறம். 182)

என்ற பாடல் வாழ்வின் புறக் கூறுகளின் தாழ்நிலையினையும் விழுப் பொருள்களின் உயர்நிலையினையும் தெளிவாக்குகிறது. தேவர் அமுதே கிடைத்தாலும் தமியராக உண்பதை வெறுத்தல், பழிக்கு அஞ்சுதல், தமக்கெனவே வாழ்தலைப் போணாமை என எதிர்மறை வகையாலும், புகழ் நாட்டம், பிறர்க்கெனத் தொண்டாற்றுதல் என உடன்பாட்டுவகையாலும், விழுப்பொருள் நாட்டத்தை உறுதிசெய்கிறது, கடலுள் மாய்ந்த இளம்பெரு வழுதியின் இப்பாடல்.

உலகம் வாழ்வதே விழுப்பொருள் நாட்டம் உடையவரால்தான். அன்பு, அருள்... இவையே உலகை வாழ்விப்பன.

மாதரிக்குக் கோவலனும் கண்ணகியும் எவ்வகையாலும் தொடர்புடையவர் அல்லர். கவுந்தியடிகள் 'இவர்களை ஏற்றுப் பேணுக' என்று சொல்லிய ஒரு சொல், மாதரியின் அன்புக்குப் போதுமானதாக இருந்தது.

'இடைக்குல மடந்தைக்கு அடைக்கலம் தந்தேன், இந்தச் சொல்லை ஏற்றுக்கொண்ட மாதரி, கண்ணகியைத் தன் மருகியாகவே பேணுகிறாள். தன் மகள் ஐயையைக் கண்ணகிக்கு நாத்தூண் நங்கையாக அறிமுகப்படுத்துகிறாள். நடக்கக்கூடாதது நடந்தே விடுகிறது. கோவலன் கொலைப்படுகிறான். கண்ணகி படாத துயரம்பட்டு 'எங்கோ' போய்விடுகிறாள். அடைக்கலப் பொருளைப் பேணமுடியாமல் போனதை வாழ்வின் பெருங்குறையாகக் கொண்டு வேதனைப் படுகிறாள், மென்கட் செல்வம் ஈதென உணர்ந்த மாதரி.

அடைக்கலம் இழந்தேன் இடைக்குல
மாக்காள்
குடையும் கோலும் பிழைத்தவோஎன
இடையிருள் யாமத்து எரிஅகம்
(நீர்ப்படை.76-78)

புகுந்தாள். நெருப்பிலே வீழ்ந்து உயிரைப் பலிகொடுக்கும் அளவுக்கு மாதரியின் மனம் வேதனைப்பட்டிருக்கின்றது. இத்தகையோரின் அன்பும் அருளுமே உலகத்தைப் பேணுகின்ற மகாசக்திகள் என்பது உலக வாழ்க்கையைக் கணித்தறிந்த இளங்கோவடிகளின் பார்வை. 'பண்புடையார்ப் பட்டு உண்டு உலகம்' என்பது வள்ளுவம்.

பற்றற்ற துறவு நெறி கொண்ட கவுந்தியடிகளும் இந்த அன்புக்கு 'இரை' யானவராகவே இளங்கோவடிகளின் இலக்கியத்தில் இடம் பெறுகிறார், வேண்டுதல் வேண்டாமை இலாத துறவு கவுந்தியடிகளின் குறிக்கோள். கவுந்திக்குப் பாசம் ஏற்படுகிறதே என்று சாரணர்கள் குறிப்பாகச் சுட்டுவதையும் காணுகின்றோம். (நாடுகாண் காதை—161—175) ஆயினும், கண்ணகியைக் கண்டது முதல் கவுந்தியடிகளின் துறவறத்தில் ஈரப்பசை உண்டாகிவிட்டது. 'என்பூங்கோதை' (நாடுகாண் 231) என்று பாசத் தொடர்பு கொள்வதை அவரால்

தவிர்க்க முடியவில்லை. துறவின் மாண்பினை மறவாத இளங்கோவடிகளால் உலகை உய்விக்கும் அன்பின் பசுமையை மறக்கமுடியவில்லை.

உலகில் வாழ்வு அமைதியாக நடைபெற வேண்டுமாயின் உரிமைக்கு ஓர் எல்லையும் உறவுக்கு ஓர் எல்லையும் கோலி வாழ்தல் வேண்டும் என்பது இளங்கோவடிகளின் பார்வையாகும்.

ஒற்றுமை, ஒருமைப்பாடு, அமைதி என்று பற்பல சொற்களால் கருதப்படுகின்ற தத்துவங்கள் வாழ வாய்ப்பிருந்தால்தான் உலகம் வாழும். உதட்டிலே ஒற்றுமை முழக்கம், உள்ளத்திலே பகைமைப் புழுக்கம்-ஓங்கிய விளம்பரம ஒருமைப்பாடு, வீங்கிய செயலோ மேலாதிக்க நாட்டம் – அன்றாடம் அமைதி மாநாடு, அதே நேரத்தில் ஆயுதக் குவிப்பு. இது நாம் காணும் உலகம்.

இந்த அழிபாட்டுலகம் நாம் மட்டுமே அறிந்தது என்பதில்லை.

> ஒருவனை ஒருவன் அடுதலும்
> தொலைதலும்
> புதுவது அன்றுஇவ் வுலகத்து இயற்கை.
> —புறம் 76.

ஆனால், ஆயிரக் கணக்கிலும் பதினாயிரக் கணக்கிலும் ஆண்டுகள் கழிந்தாலும், அழிவு நெறி நீக்கி அருள் நெறியில் நாட்டம் செலுத்தாவிடின் மானுடத்துக்கும் விலங்குக்கும் வேற்றுமைதான் என்ன! இளங்கோவடிகளின் மாடல மறையோன் கூறுகிறான்

> வையம் காவல் பூண்டநின் நல்யாண்டு
> ஐயைந் திரட்டி சென்றதற் பின்னும்
> அறக்கள வேள்வி செய்யாது யாங்கணும்
> மறக்கள வேள்வி செய்வோய் ஆயினை.
> —நடுகற் 129—132.

வாழ்க்கையின் புறக்கூறுகளிலே நாட்டம் செலுத்தினால் அதற்கு ஓர் எல்லை இல்லை. ஆசை > பேராசை > போர் > வெ(ற்)றி > பகை > மோதல் > வெ(ற்)றி ......இது தொடர் நிகழ்ச்சி. பரவிப் பரவிப் பார்முழுதழிக்கும்.

அறநாட்டம் ஒன்றே உலகில் நல்வாழ்வினை நல்கிவிடாது. அறநாட்டத்துக்குப் பிற துணையும் வேண்டும்.

அவரவர்க்கெனச் சில வரையறைகள் உண்டு. அந்த எல்லைக்குள் உரிமை வாழ்வு உண்டு. அந்த உரிமையிலே பிறர் தலையீட்டுக்கு இடம் இல்லை; இடம் தருதலும் கூடாது. ஆனால், அவர் அவர் உரிமை பேணுவோர் பிறர் உரிமையில் தலையிடுதலாகாது. அவ்வாறு தலையிட்டால் மோதல் தவிர்க்க முடியாது.

தம் உரிமை பேணி, பிறர் உரிமை உணர்வோர் கருத்து வேறுபாட்டுக்கு மதிப்புத்தரும் வாழ்விலே அமைதி அரும்பி, மலர்ந்து, காய்த்து, கனியும்.

இளங்கோவடிகளின் பார்வையிலே உலக அமைதிக்குரிய நெறி தென்பட்டுள்ளது.

சமுதாய உறவிலே—அரசியல் முறையிலே—சமய நெறியிலே உலக அமைதிக்குரிய வழியினைக் காப்பிய நிகழ்ச்சிகளிலே இளங்கோவடிகள் காட்டியிருக்கிறார்.

சமுதாய நெறியிலே பல்வேறு இனத்தவர்கள் எவ்வாறு மகிழ்ச்சியாக வாழ்ந்தனர் என்பதைச் சிலப்பதிகாரத்திலே காணலாம்.

மாதரியின் அன்புறவை முன்னர்க் கண்டோம். மற்றொரு நிகழ்ச்சி வாயிலாக மீண்டும் காண்போம். சாதி, சமய எல்லைகள் கடந்து கோவலனையும் கண்ணகியையும் தன் குலத்துக் கண்ணனாகவும் நப்பின்னையாகவுமே மாதரி காணுகிறாள். அவள் மகள் ஐயையும் தன் தாயின் உணர்விலே பங்கு கொள்கிறாள்.

> ஆயர் பாடியின் அசோதைபெற் றெடுத்த
> பூவைப் புதுமலர் வண்ணன் கொல்லோ
> நல்லமு துண்ணும் நம்பி, ஈங்குப்
> பல்வளைத் தோளியும் பண்டுநம்
> குலத்துத் தொழுனை யாற்றினுள்
> தூ மணி வண்ணனை
> விழுமந் தீர்த்த விளக்குக் கொல்லென
> ஐயையும் தவ்வையும் விம்மிதம் எய்தி.
> —கொலைக்— 46—52.

மதுரை ஆயர்பாடியின் இதே உணர்வு சேர நாட்டுக் குன்றக் குறவரிடத்திலும் காணப்படுகிறது. மலைநாட்டுக் குறவர்களுக்குத் தங்கள் குலத்து வள்ளியாகவே கண்ணகி காணப்படுகிறாள்:

> குருவி ஓப்பியும் கிளிகடிந்தும்
> குன்றத்துச் சென்று வைகியும்
> அருவி யாடியும் சுனைகுடைந்தும்
> அலவுற்று வருவேம்முன்

மலைவேங்கை நறுநிழலின்
வள்ளி போல்வீர்
—குன்றக் 1—3.

இவ்வாறு புத்துறவு பூத்துக் குலுங்க மனத்திலே இடம் இருக்குமாயின் உலகத்திலே போரும் பூசலும் இருக்கமுடியுமா?

புகார் நகரத்துத் துறைமுக வளத்தைக் குறிக்கும் இடத்திலும் உலகின் பல்வேறு இனத்தவர் அங்கே வந்து நெருங்கிச் செறிந்து வாழ்ந்ததை அடிகள் சுட்டுகிறார்.

அரும்பொருள் தரூஉம் விருந்தின்தேஎம்
ஒருங்குதொக் கன்ன உடைப் பெரும் பண்டம்
கலத்தினும் காலினும் தருவனர் ஈட்டக்
குலத்திற் குன்றாக் கொழுங்குடிச் செல்வர்.
—மனையறம் 5—8.

'எனக்கு நான்,எனக்குமட்டுமே நான்'என்ற உணர்விலே உலகம் வளமுடையதாக அமையாது. ஒப்புரவு என்னும் உயர் தத்துவத்துக்கு இடம் தரும் சமுதாயமே வளமும் வலமும் உடையதாகப் பொலியும். பிறருடைய ஒத்துழைப்பும் உறவுமின்றி எவரும் எக்காலத்தும் வாழ முடியாது. தமிழகத்துச் சேர நாட்டிலிருந்து வான்பேரிமயச் சாரலுக்குப் போக முப்பத்திரண்டு திங்கள் வேண்டியிருந்த காலம் பழையது. உலக உருண்டையை மணிக்கணக்கில் சுற்றிவர முடிகிற காலம் புதியது. ஆனால், அந்தப் பழைய காலமாயினும் இன்றைய புதியகாலமாயினும் பிறர்உதவியும் ஒத்துழைப்பும் பெற்றே மனிதன் வாழ்ந்தான், வாழ்கின்றான்.

புகார்த் துறைமுகத்துக்கு விருந்தின் தேஎம் (புதிய புதிய நாடுகள்) அரும்பொருள்களைக் கொண்டு சேர்த்தன. கடல் வழியாலும் தரை வழியாலும் பல்வேறு இனத்தவர்கள் புகார் நகரத்தோடு தொடர்பு கொண்டிருந்தனர். உலகளாவிய உறவு முறையாக நிலவியதால்

முழங்குகடல் ஞாலம் முழுவதும் வரினும்
வழங்கத் தவாஅ வளத்தது ஆகிப்

பயங்கெழு மாநகராகப் புகார் பொலிந்தது (மனையறம் 3—4) என்கிறார் இளங்கோவடிகள்.

அரசியல் அரங்கிலும் உரிமை எல்லையை மீறின் உறவு கெட்டு மோதல் நேரிடும் என்பதை இளங்கோவடிகள் தெளிவாக்கியுள்ளார்.

வடநாட்டில் ஓர் அரசவை; பல்வேறு நாட்டரசர்கள் கூடியுள்ளனர். ஒரு பெண்ணுக்குச் சுயம்வரம்',அந்தமங்கல நிகழ்ச்சியோடு வந்தவர்கள் கலைந்திருக்கலாம். அரசியல் துறையிலேயே இருப்பவர்கள் தங்கள் தங்கள் கட்சிப் பணிகளோடு நின்றுவிட்டால் தலைவர்கட்கும் பொழுதுபோகாது. தொண்டர்களுக்கும் விறுவிறுப்பு இராது. பாலகுமரன் என்ற மன்னனின் மக்கள் இருவர்—கனகனும் விசயனும் — 'இமயமலையில் வில், கயல், புலிச் சின்னங்களைத் தமிழரசர்கள் பொறித்த காலத்தில் எம்மைப் போன்ற மன்னர்கள் வட.திசையில் இல்லைபோலும்' என்று தமிழரசர் வீரத்தைப் பழித்துப் பேசினர். 'தானேயும் உருளும் வட்டைக் குணில் கொண்டு துரந்ததுபோல்' இச் சுடுசொல் சேரன் செங்குட்டுவனைத் தூண்டிவிட்டது.

பால குமரன் மக்கள் மற்றவர்
காவா நாவின் கனகனும் விசயனும்
விருந்தின் மன்னர் தம்மொடும் கூடி
அருந்தமி ழாற்றல் அறிந்தில ராங்கெனக்
கூற்றங் கொண்டுஇச் சேனை செல்வது
—கால்கோள் 158-162.

வடநாட்டுப் படையெடுப்புக்குக் காரணமாக வடதிசை மன்னரின் நாவடக்கமின்மை அமைந்ததைசெங்குட்டுவன் இவ்வாறு குறிப்பிடுகிறான். ''இமயத்தில் பத்தினிப் படிமத்துக்கான கல்லெடுத்துக் கங்கையில் நீர்ப்படுத்து யாங்களே கொணர்ந்து தருகிறோம்' என்று நட்பரசராகிய நூற்றுவர் கன்னர் அறிவித்தசெய்திக்கு செங்குட்டுவன் சொன்ன விடை இது. காவா நாவின் கனகனும் விசயனும் தம் உரிமை எல்லை கடந்து உறவு கெடும்வகையில் பேசிய பேச்சே, தேவாசுர மாபாரத இராமாயணப் போர்களோடு ஒருங்குவைத்து எண்ணப்படும் ஒரு பெரும் போர்களோடு உருவாகக் காரணமாயிற்று.

உலகளாவிய அமைதிக்கு மோதல் வழியிலே இவ்வாறு விளக்கம் தருகிறது, இளங்கோவடிகளின் பார்வை. ஆட்சித் தலைவன் ஒருவனுக்கு உள்ள சிக்கலை மற்றைய ஆட்சித் தலைவர்களும் புரிந்துகொண்டு செயல்பட்டால், இதய உறவு வலமுற நிலவும் என்பதையும் இளங்கோவடிகளின் பார்வை வீச்சு வெளிப்படுத்துகின்றது.

வினை விளை காலமாதலின் சினையலர் வேம்பன் தேரானாகிக் கோவலன் கொலைப்படக் காரண மாகிவிடுகிறான். 'பாண்டியனுடைய கொடுங்கோல் தன்மை எப்படி

இருக்கிறது, 'பார்த்தாயா' என்று தமிழ் வேந்தர் தலைவனாகிய சேரன் செங்குட்டுவ னுக்கு உரைக்க வந்தவள்போலக் கண்ணகி மலைநாட்டுக்கு வந்ததாகத் தண்டமிழாசான் சாத்தன் கருத்துரைக்கிறான். ஆட்சித் தலை வர்களை அண்டியிருப்போர் இப்படிப் புகழ் பெருக்கிக் கூறித்தங்கள் நிலையை உயர்த்திக் கொள்வது இன்றுபோன்று அன்றும் உண்டு. ஆனால், இத்தகைய படுவலையில் பக்குவம் அறிந்த தலைவர்கள் வீழமாட்டார்கள். வீழ்ந் தால், அரசியல் அரங்கு பூசற் களமாகி மோதலே பெருகும். 'வழிபடுவோரை வல்லறி தீயேபிறர்பழி கூறுவோர் மொழிதேறலையே' என்ற அரசியல் நெறி அறிந்தவனாகச் செங் குட்டுவனை இளங்கோவடிகள் காட்டுகிறார். பாண்டியனுக்கு உற்ற பழி வினையின் விளை வால் நேர்ந்தது. வினைப் பயன் வளைத்த கோலைப் பாண்டியன் தன் உயிரை விடுத்து நிமிர்த்துவிட்டான். பிற மன்னர்க்குப் பழிச் செய்தி எட்டுமுன்னர் அவன் உயிர் விடுத்த செய்தி போக வேண்டும் என்று எண்ணினா னாம் பாண்டியன்.

> தென்னர் கோமான் தீத்திறம் கேட்ட
> மன்னர் கோமான் வருந்தினன்
> உரைப்போன்
> எம்மோ ரன்ன வேந்தர்க்கு உற்ற
> செம்மையின் இகந்த சொல் செவிப்புலம்
> படாமுன்
> உயிர்பதிப் பெயர்த்தமை உறுக
> ஈங்கென
> வல்வினை வளைத்த கோலை மன்னவன்
> செல்லுயிர் நிமிர்த்துச் செங்கோ
> லாக்கியது.
>
> —காட்சி93—99

பாண்டியனுக்கு உற்ற பழியைவிட அந்தப் பழிதுடைத்து பாண்டியன் உயிர்க் கொடை கொடுத்ததே செங்குட்டுவன் மனத்திலே உறைத்து நின்றது.

பதவி என்றாலே ஆலாய்ப் பறக்கும் அரசியல் தலைவர்களுக்கு ஆட்சி அரியணை எத்தகு அவலப் பீடம் என்பதை உணர்ந்து பேசு கிறான், இளங்கோவடிகள் காட்டும் சேர மன்னன்:

> மழைவளம் கரப்பின் வான்பே ரச்சம்
> பிழைஉயிர் எய்தின் பெரும்பே ரச்சம்
> குடிபுர வுண்டும் கொடுங்கோ லஞ்சி
> மன்பதை புரக்கும் நன்குடிப் பிறத்தல்
> துன்ப மல்லது தொழுதகவு இல்.
>
> —காட்சி 100—104.

ஆட்சியில் இருப்போர் ஒருவர் கவலையை மற்றவர் உணர்ந்து ஒழுகுவராயின், அரசி யல் அரங்கிலே உறவு வலிமை பெறும்: சமுதாயத்தில் அமைதி நிலவும்.

உலகளாவிய அரசியல் நெறியிலே இடம் பெற்றுள்ள தலைவர்கள் தங்கள் உரிமைக் குரிய எல்லைகளை மீறாமலும், ஒருவர்க்கு ஏற்படும் சிக்கல்களை அனுதாப உணர்வோடு பார்த்தும் வாழ்வார்களாயின், உலகில் அமைதி நிலவும். இளங்கோவடிகளின் பார்வை வீச்சு உலகத்துக்கு வழங்கும் காட்சி இது. மோதல் வழியில் வடக்கிலும் அனுதாப உணர்வினால் தெற்கிலும் வைத்துக் காட்டிய இந்த உண்மை நான்கு திசைகளுக்கும் பொருந்துவதே யாகும்.

இனி, சமயத் துறையிலே உலகளாவிய அமைதிக்கு உரிய நெறியை இளங்கோவடி களின் பார்வை வழியே கண்டுணர்வோம்.

இறை நெறியிலே — உண்மையான ஞானக் காட்சி கொண்ட இறை நெறியிலே-காழ்ப் புக்கு இறையும் இடம் இருக்கமுடியாது. தன்னுயிர் போலத் தனக்கு அழிவு எண்ணும் பிறனுயிர் தன்னையும் கணித்து நடப்பது ஆன்மீகம். உலகியல் நெடி ஏறிய அரசிய லிலே கூடப் பகை நட்பாகக் கொண்டொழுக வேண்டும் என்பார், வள்ளுவர். 'யாரொடும் பகை கொள்ளலன் என்றபின் போரொடுங் கும் புகழொடுங்காது' என்று அரசியல் நெறியை விளக்குவார் கம்பர். வெந்துப்பின் வேந்தர்க்கே ஈது அறமாயின், கருணைக் கடலாகக் கொள்ளப்படும் கடவுளின் அடிய வர் வாழ்விலே காழ்ப்புக்கு இடம் தருதல் கூடுமோ? அவ்வாறு சமய வாதிகள் பகைமை பரப்புவாராயின் அவர்களைக் கடவுளின் மக்கள் என்று மதிப்பது பாவமன்றோ? ஆனால், பண்டும்-பண்டு போலவே இன்றும் உலக அமைதிக்கு ஊறு சேர்க்கும் காரணங் களிலே சமய மோதலும் ஒன்றாக இருக் கிறது என்பதை மறைக்க முடியவில்லையே! கடவுளையே களத்தில் இறக்கி, அவர் தரத்தையும் சந்தைச் சரக்காக்கிச் சண்டை யில் இறக்கிவிடுகின்ற சமயவாதிகளை நாம் காணுகிறோம்.

சாதி, இன, அரசியல் மோதல்கள் போலவே சமயத்தின் பேராலும் மோதல்களை உண் டாக்கி, உலக அமைதியைக் கெடுத்துக் கொண்டிருக்கிறோம். இந்தச் சமயப் பூசலுக்கு இடம் தருவதால் உலகு மேலும் அவலக் களமாகிறது என்பதில் ஐயம்

இல்லை. இளங்கோவடிகளின் பார்வையில் சமயப் பூசலால் ஏற்படக் கூடிய அவலமும் தெளிவாகவே புலப்பட்டுள்ளது.

பாரத நாட்டு அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்கிய அறிஞர்கள், இந்த நாடு சமயச் சார்பற்றது என்று வரையறுத்திருக்கிறார்கள். பாகிஸ்தான், வங்காளதேசம், இராக், ஈரான், எகிப்து முதலானவை இஸ்லாமிய நாடுகள். இலங்கை பவுத்த நாடு. இவை சமயச் சார்புடைய நாடுகள். இந்த நாடுகளிலே குறிப்பிட்ட சமயம் அரசின் சமயமாகும். பாரத நாடு சமயச் சார்பற்ற நாடு; அதாவது, அரசுக்கு எனத் தனி ஒரு சமயம் இல்லை. இந்தியா எனப்படுகின்ற பாரதத்துக்கு 'இந்துஸ்தான்' என்ற ஒரு பெயர் உண்டு. வாழும் மக்களிற் பெரும்பான்மையோர் இந்துக்கள் என்பதாலும் இந்துமதத்தின் தாயகம் என்பதாலும் 'இந்துஸ்தான் என்ற பெயர் ஒருவாறு பொருந்துவதே. எனினும், ஆட்சிக்கும் நிர்வாகத்துக்கும் இந்து சமயத்தின் சாயம் — சார்பு இல்லை.

இளங்கோவடிகளின் நிலையும் இதுதான். அவர் — பாரத நாடு போலவே — இறைநெறியை மதிப்பவர்தான், நாத்திகர் அல்லர். அவர் தமக்கெனப் பின்பற்றிய சமயமும் உண்டு. ஆம், அவர் சமணர். ஆனால், அவர் இயற்றிய காப்பியத்தில் சமணக் கடும்பற்றுக் காண இயலாது. **இளங்கோவடிகள் சமணர். சிலப்பதிகாரம் சமணக் காப்பியம் அன்று.**

சாத்தனார் பவுத்தர், அவர் இயற்றிய மணிமேகலை பவுத்தக்காப்பியம். திருத்தக்க தேவர் சமணர். அவர் இயற்றிய சீவக சிந்தாமணி சமணக் காப்பியம். சாத்தனார் திருத்தக்க தேவர் ஆகியோர் வழி இளங்கோவடிகட்கு உடன்பாடன்று. அவர் சமணர்; அவர் இயற்றிய சிலப்பதிகாரம் சமண நூல் அன்று. ஆம், சிலப்பதிகாரம் — பாரத நாடு போலச் சமயச் சார்பற்றது.

பாரத நாட்டில் அனைத்துச் சமயத்தவரும் தங்கள் தங்கள் சமய நெறியிலே வாழலாம். எல்லாச் சமயங்களுக்கும் ஒத்த உரிமை உண்டு. சிலப்பதிகாரத்திலும் எல்லாச் சமயங்களும் — இளங்கோவடிகள் காலத்துக்குரிய எல்லாச் சமயங்களும் ஒத்த மதிப்பொடு இடம் பெற்றுள்ளன.

அடிப்படை உரிமை யாவர்க்கும் சமம் என்ற நிலை உறுதியாகிவிட்டால் உலக வாழ்விலே மோதல் சாதல்கள் பெரும்பாலும் அற்றுப் போகும் என்று நம்பலாம். இளங்கோவடிகள் இவ்வாறு நம்பியவர்; தம் காலத்துச் சமயங்கள் யாவற்றுக்கும் ஒத்த மதிப்புத் தந்து காப்பியத்தை இயற்றியிருக்கிறார்.

வடுநீங்கு சிறப்பின் தன்மனையகம் மறந்து, விடுதல் அறியா விருப்பொடு மாதவியுடன் உடனுறை வாழ்க்கை விரும்பிக் கிடந்தவன், கோவலன். (அரங்கேற்று 174—5) 'தன் அகத்தையும் மனையாளையும் மறந்து' என்று அடியார்க்குநல்லாரும் விளக்கம் தந்துள்ளனர். வடு நீங்கிய சிறப்பு மனைவிக்கும் உண்டு. மனைக்கும் உண்டு. குற்றங்குறைகள் ஊடாடுவதாயின் துறத்தற்கு வலிமையான காரணமுண்டு. துறந்தாலும் ஒரொரு கால் நினைவுச் சுவடு எழுவதற்கு ஏதுண்டு. கோவலனோ, 'மறந்துவிட்டான்' என்கிறார் இளங்கோவடிகள். 'போற்றா ஒழுக்கம் புரிந்தீர்' (கொலைக்களன் 81) என்று கண்ணகியே கருத்துரைக்கிறாள். இத்தகைய கொடுமை புரிந்தவன் கதையின் இறுதியில் தேவருலகு எய்துவதைக் காணுகிறோம். 'வையத்து வாழ்வாங்கு வாழ்பவன் வான் உறையும் தெய்வத்துள் வைக்கப்படும் (குறள்) என்பது வள்ளுவர் முடிவு. கோவலன் அத்தகு சிறப்புடையன் என்று கூறிநிறுவுதல் இயலுமோ?

அவன் தெய்வநிலை உறும் தகுதி பெற்றமைக்கு இரண்டு காரணங்கள் கூறலாம். மாபெரும் பத்தினியை வாழ்க்கைத் துணையாகப் பெற்றுவிட்ட பெரும்பேறு உடையவன், அவன் இல்லாத உலகத்துக்குக் கண்ணகி வர இசையாள் ஆதலின், நாயகியின் நாயகன் என்பதால் பெற்ற பேறாகக் கொள்ளலாம். விளக்கமும் காரணமும் சரியெனவே கொள்ளலாம். ஆனால், தெய்வநிலை பெறுவதற்கு உரிய காரணம் புறத்தேயிருந்து வந்ததேயன்றி, கோவலன் பெற்ற ஆளுமையின் அகத்தேயிருந்து வந்ததாகாது. அவ்வகையில், காரணம் உள்ளீட்டில் வலிமை குறைகிறது என்று வாதிட இடம் உள்ளது.

மற்றொரு காரணம் சிலப்பதிகாரத்திலேயே காணமுடிகின்றது. மதுரை நோக்கிப்பயணம் மேற்கொண்ட கண்ணகிக்கும் கோவலனுக்கும் வழித்துணையாக வலிய வந்து சேர்கிறார் கவுந்தியடிகள். சமணத் துறவியாகிய கவுந்தியடிகளிடமிருந்து சாவக நோன்பி†

† சாவக நோன்பி: சமண சமயத்து இல்லறத்தான் (கொலைக்களம் 18)

னாகிய கோவலன் வழிநெடுகிலும் அறவுரைகள் கேட்கும் வாய்ப்பினைப் பெறுகிறான். கண்ணகியுடன் பல நாள் தொடர்ந்து நடைப் பயணம் மேற்கொண்ட வாய்ப்பும் கவுந்தியடிகளிடம் அறிவுரை கேட்கும் வாய்ப்பும் பெற்றமையால் அவனுடைய ஆளுமையிலே ஒரு பெரு மாற்றம் ஏற்படுகின்றது. தன்னுடைய கடந்த கால வாழ்க்கைக்காகக் கோவலன் பெரிதும் வருந்தித் தன் பிழையொழுக்கத்திற்காக மிகத் துயருற்று வெளிப்படையாகவே கண்ணகியிடம் பேசுவதைக் கொலைக்களக் காதையில் விரிவாகக் காணுகிறோம்.

மேலும், அவன் வாழ்க்கையமைப்பிலே பெருமாற்றம் ஏற்பட்டுவிட்டது என்பதை இளங்கோவடிகள் குறிப்பாகவும் வெளிப்படையாகவும் பேசும் இடங்கள் பல. கையில் விலை மதிப்பரிய சிலம்பை வைத்திருந்தும் மதுரை நகரத்து விலைமாதர் வீதிகளிலும் சுற்றிவந்து மாசற்றவனாய்க் கண்ணகியின் கோவலனாகவே திரும்பவும் புறஞ்சேரி வந்து சேர்வதை இங்கே நினைவூட்டலாம்.

இவ்வாறு கோவலனின் உயர்நிலை மாற்றத்துக்குக் காரணமாய் அமைந்த கவுந்தியடிகள் வாயிலாகச் சமண சமயத்து அருகக்கடவுளின் திருப்புகழைக் கேட்டு உகப்படையும் வாய்ப்பினை இளங்கோவடிகள் அருள்கிறார்.

ஒருமூன் றவித்தோன் ஓதிய ஞானத்
திருமொழிக் கல்லது என்செவியகம்
திறவா
காமனை வென்றோன் ஆயிரத் தெட்டு
நாம மல்லது நவிலாது என்நா
ஐவரை வென்றோன் அடியினை
அல்லது
கைவரைக் காணினும் காணா என்கண்
அருளறம் பூண்டோன் திருமெய்க்
கல்லதுஎன்
பொருளில் யாக்கை பூமியில்
பொருந்தாது
அருகன் அறவன் அறிவோற் கல்லது
என்
இருகையும் கூடி ஒருவழிக் குவியா
மலர்மிசை நடந்தோன் மலரடி அல்லது
என்
தலைமிசை உச்சி தானணிப்பொறாஅது
இறுதியில் இன்பத்து இறைமொழிக்
கல்லது
மறுதர ஓதி என் மனம்புடை பெயராது.

—நாடுகாண் 194—207.

செவி, நாக்கு, கண், மெய், கை தலை மனம் எந்தப் பொறியும் அதன் வழியான புலனும் பொறிபுலன் உணர்வைத் துய்த்து இயக்கும் மனமும் அருகதேவனுக்கே முற்றுரிமை என்கிறார். சமண சமயச் சீர்மையைச் சிலம்பு எடுத்துரைக்கும் இடம் இஃதென ஒரு சான்று கொள்ளலாம்.

வைதிக சமயத்து வேதத்தை 'நலம்புரி கொள்கை நான்மறை' (காடுகாண் 152) என்று கவுந்தியடிகள் கூற்றிலேயே புகழ்வார், இளங்கோவடிகள். காப்பியத்து இறுதியில் செங்குட்டுவன் செய்யும் வேள்வி நான்மறை வழிப்பட்ட வேள்வியே ஆகும்.

நான் மறை மரபின் நயந்தெரி நாவின்
கேள்வி முடித்த வேள்வி மாக்களை
மாடல மறையோன் சொல்லிய
முறைமையின்
வேள்விச் சாந்தியின் விழாக்கொள ஏவி

—நடுகற் 191—4.

இராமபிரானைக் கோசிகன் என்ற வேதியன் கூற்றில் சிலம்பு புகழ்ந்துரைக்கிறது. கோவலன் எங்கோ சென்றுவிட்டான் என்பதை உணர்ந்தபோது புகார் நகரமே பெரிதும் கலக்கம் அடைந்தது. அந்தக் கலக்கத்திற்கு இராமனைப் பிரிந்து வாடிய அயோத்தியே உவமையாகக் குறிக்கப்படுகிறது.

தந்தை ஏவலை ஏற்றுக் கானகம் சென்ற இராமபிரான் பிரமனைப் படைத்த கடவுள் என்பதையும் சிலம்பு சுட்டுகிறது 'இராமன் கடவுள் என்ற செய்தி எல்லோரும் அறிந்த செய்தியாயிற்றே' என்று கவுந்தியடிகளே சொல்கிறார்.

ஆய்ச்சியர் குரவையுள் வரும் பின் காணும் பாடல்கள் ஆழ்வார் அருளிச்செயல்களிலிருந்து பெயர்த்தெடுத்து வைத்தவை என்று சொல்லலாம் போல அத்துணைப் பக்தியுணர்வு செறிந்துள்ளதைப் போற்ற வேண்டியுள்ளது. ஆழ்வார்கள் கால நிலையை மறந்து, இவற்றை நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்துள் சேர்த்துவிடலாம் என்று எண்ணத் தோன்றுகிறது.

மூவுலகும் ஈரடியான் முறைநிரம்பா
வகை முடியத்
தாவியசே வடிசேப்பத் தம்பியொடும்
கான்போந்த
சோவரணும் போர்மடியத் தொல்லி
லங்கை கட்டழித்து

சேவகன்சீர் கேளாத செவிஎன்ன செவியே
திருமால்சீர் கேளாத செவிஎன்ன செவியே
பெரியவனை மாயவனைப் பேருலக மெல்லாம்
விரிகமல உந்தியிடை விண்ணவனைக் கண்ணும்
திருவடியும் கையும் திருவாயும் செய்ய
கரியவனைக் காணாத கண்என்ன கண்ணே
கண்ணிமைத்துக் காண்பார்தம் கண் என்ன கண்ணே
மடந்தாழும் நெஞ்சத்துக் கஞ்சனார் வஞ்சம்
கடந்தானை நூற்றுவர்பால் நாற்றிசையும் போற்றப்
படர்ந்துஆ ரணம்முழங்கப் பஞ்சவர்க்குத் தூது
நடந்தானை ஏத்தாத நாஎன்ன நாவே
நாரா யணாஎன்னா நாஎன்ன நாவே

—ஆய்ச்சியர் 35—37

கண்ணனை வழிபடு தெய்வமாகக் கொண்ட ஆய்ச்சியர் வாயிலாகவும் அருகதேவனுக்கே வாழ்வை முற்றுரிமை ஆக்கிய கவுந்தியடிகள் வாயிலாகவும் திருமாலின் புகழை மிகச் சிறப்பாக இளங்கோவடிகள் விதந்தோதியுள்ளார்.

சைவர்கள் தங்கள் சிவபிரான் அவதாரமாகக் கூடப் பிறவி எடுக்காதவர் என்று பெருமைப் படுவர். சிவனைத் தவிரப் பிற தெய்வங்களைச் 'செத்துப் பிறக்கின்ற தெய்வங்கள்' என்று பழித்தோதியோரும் உண்டு. இந்தப் பழியைச் சார்த்தாமல்.

பிறவா யாக்கைப் பெரியோன்

—இந்திர 169

என்று புகழ் சிறக்கக் கூறுகிறார் அடிகள். இக்கூற்று ஆசிரியர் கூற்றாகவே வருகிறது என்பதுவும் மனங்கொள்ள வேண்டிய ஒன்று. ஆச்சியர் குரவையுள் திருமாலையும் 'பெரியவன்' (ஆய்ச்சியர் 36) என்று குறித்தது கண்டோம். இங்கே 'பிறவாயாக்கை' என்ற அடைமொழியில் சிவபிரான் சிறப்பிக்கப்படுகிறார், இறைவன் என்ற சொல்லால் சிவபிரானைக் குறிக்கும் மரபு உண்டு என்பதையும் இங்கு நினைவூட்டலாம். 'பெரியோன்' மகாதேவன் என்று அரும்பதவுரையாளர் குறிக்க, 'என்றும் பிறவாதயாக்கையை யுடைய இறைவன் என்று அடியார்க்கு நல்லார் உரை வகுத்துள்ளார். புகார் நகரத்துத் தெய்வ நிலையங்களைக் குறிப்பிடும்போது 'ஊர்க்கோட்டம்' என்ற தொடர் வருகின்றது. (கனாத்திறம் 11) இத்தொடர்க்கு அடியார்க்கு நல்லார் 'இறைவன் ஊராகிய கைலாயம் நிற்கும் கோயில்' என்று உரைவிளக்கம் தருகின்றார்.

இப்படியே வேட்டுவவரியில் கொற்றவையையும் குன்றக் குரவையில் முருகப்பெருமானையும் அவ்வத் தெய்வங்களை வணங்குவோர் மனவுணர்வு உகக்கும் முறையில் சிலப்பதிகாரம் சிறப்பித்துரைப்பதைக் காணலாம்,

தமக்கென ஒரு சமய நெறி உண்டாயினும், 'அச்சமயமே சமயம், பிற நெறிகள் பேணத் தக்கன அல்ல' என்ற கடும்பற்றினை இளங்கோவடிகள் கொள்ளவில்லை. பிற சமய நெறிகளைப் பழிக்கும் வெறிப் போக்கினையும் அவர் ஏற்பவர் அல்லர்.

இளங்கோவடிகளின் காலத்துக்குப் பின்னர்த் தமிழகத்தில் சமயப் பூசலும் போராட்டங்களும் நிகழ்ந்தன. 'அறியார் சமணர் அயர்த்தார் பவுத்தர் சிறியார் சிவப்பட்டார்' என்றும், 'சைவத்தின் மேற் சமயம் வேறில்லை' என்றும் பிற சமய வெறுப்பும் பழிப்பும் சமயத் தலைவர்டையே நிலவின. கருணைப் பெருங்கடல் எனும் கடவுளின் பெயராலும் மனித இனத்தவரிடையே கலவரங்கள் நடந்தன. அரசாட்சியின் சார்பும் துணையும் பெற்று மாற்றுச் சமயத்தாரை உயிர்க்கொலை செய்யவும் சமயத் தொண்டர்கள் தயங்கவில்லை, கொல்லாமை நோன்பு கொண்ட சமணர்கள் திருநாவுக்கரசரை நீற்றறையில் இட்டனர். சமணரைச் சைவர் கழுவேற்றியதாக மரபுவழிச் செய்தி உண்டு.

பிற சமயத்தவரின் உரிமையெல்லைக்குள் நுழையா திருத்தல் சமயப் பூசலைத் தவிர்ப்பதற்கு ஒரு வழியாகும். எந்தத் துறையிலும் எவரும் பிறர் தலையீட்டை விரும்ப மாட்டார்கள். தம் கருத்தைப் பரப்புதல் என்ற பெயரில் (பிரசாரம்) பிறர் கோட்பாடுகளை நேர்முகமாகவும் மறைமுகமாகவும் பழிப்பது சமயத் துறையிலே பல காலமாக இருந்துவருகிறது. இளங்கோவடிகள் இப்படி ஒரு சூழல் ஏற்படக்கூடும் என்பதை எதிர் பார்த்திருப்பார் போல் தெரிகிறது.

கோவலன் சாவக (சமண) நெறி நின்றவன். அவன் தந்தை துறவு பூண்டபோது பவுத்தத் துறவியானதாகச் சிலப்பதிகாரம் குறிப்பிடுகின்றது.

தந்தை ஒரு சமயத்தவனாகவும் மகன் மற்

றொரு சமயத்தவனாகவும் இருந்ததைச் சிலப்பதிகாரம் புலப்படுத்துவதைத் (நீர்ப். (90—95)தெளியலாம்.சிலப்பதிகார ஆசிரியர் சமணராயினும், அவர் தமையன் சேரன் செங்குட்டுவன் சிவநெறியினன் என்று கூறும் ஆய்வாளர் கருத்தும் இங்கே மனங்கொள்ளத்தக்கது. ஒரு குடும்பத்திலேயே வெவ்வேறு சமயங்கள் குலவியிருக்க முடிந்தது.

அந்தச் சூழலில் தலையீடு இடப்பெற்றால் ஏற்படக் கூடிய அவலத்தை எதிர்நோக்கி, இளங்கோவடிகள் எச்சரிக்கை செய்திருக்கிறார்.

மாங்காட்டு மறையவன் என்றொரு பாத்திரம் இளங்கோவடிகளின் படைப்பு.மதுரைப் பயண வழியிலே கோவலன் அவனிடம் 'மதுரைச் செந்நெறி யாது' எனக் கேட்கிறான் (காடுகாண் 58), 'செந்நெறி' என்ற தொடர். செம்மை நெறி என்று பிரித்துணரப் படும். ஓர் ஊருக்கு பல வழிகள் இருக்கலாம். எல்லாமே செம்மையான (நல்ல) வழியாக இருக்கமுடியாது. இதனை உணர்ந்த கோவலன் 'மதுரைக்குச் செல்வதற்கு எது செம்மையான வழி' என மாங்காட்டு மறையவனைக் கேட்கிறான்.

'மதுரைக்கு வழிகள் மூன்று உண்டு. வலப்புற வழி ஈது, இடப்புற வழி ஈது, நடுவழி ஈது, என்று வழிகளைப் பற்றி விளக்கமாகச் சொல்கிறான் மறையவன். கடைசியில் நல்ல வழி எது என்பதை 'இடையது செந்நெறி யாகும் (காடுகாண்141-2) என்று குறிப்பிடுகிறான். கோவலன் கேட்டது சென்னெறி (செல் நெறி –போகும் வழி) அன்று; அவன் அறிய விரும்பியது செந்நெறி (செம்மை நெறி — நல்ல வழி) யாகும். எனவே, மாங்காட்டு மறையவன் வலப்புறமுமன்றி இடப்புறமுமன்றி நடுவழியை மட்டுமே சொல்லி யிருக்கவேண்டும். ஆனால் தன் வைதிக சமய மேம்பாட்டைக் குறிப்பாகச் சுட்டிக் கவர்ச்சி யூட்டக் கருதியவன் அவன்: திருமாலிருஞ்சோலை வழியை விளக்குவதைச் சாக்கீடாகக் கொண்டு, திருமாலை வழிபடுவோர் அடையக்கூடிய சிறப்புகளையெல்லாம் பாரித்து உரைக்கிறான். கவுந்தியடிகளாகிய சமணத் துறவி முன்னே இருப்பதை உணர்ந்தும் திருமாலின் எட்டெழுத்து மந்திர மாண்பினை விரித்துரைத்ததோடு, பெருமைக்குரிய மூன்று பொய்கைகளில் மூழ்கி எழுந்தால் என்னென்ன பெருமித நிலை எய்தலாம் என்பதையும் ஒரு சமயப் பிரசாரகன் போலவே எடுத்து உரைத்துப் பேசுகிறான்.

தத்தம் சமய நெறிப் பெருமைகளையும் பெறு(ரு)ம் பயன்களையும் தம்மவர் அவைக்களத்திலே எடுத்துவிளக்கிச் சமயப் பற்றை உரமுடையதாக்கலாம். அது பிழை அன்று: சமயத் தொண்டர்களின் கடமையும் ஆகும். பிற சமயத்தவர் முன்னிலையில் தம் சமயப் பெருமைகளைப் பெரிதுபடுத்திப் பேசுவது வீணான கசப்புணர்வுகளுக்கு இடம் தரும்; முரண்படுதலும் மோதுதலும் விளையும்.

சமய சமரசம் நிலவவேண்டுமாயின் சமயத் தலைவர்களும் தொண்டர்களும் கருத்துப் பரப்பலில் இந்த எச்சரிக்கையைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இந்த எச்சரிக்கையைப் புறக்கணித்ததால் பாரத நாடும் உலகமும் அடைந்த பரிபவங்களை—இன்றும் நடைபெற்றுக் கொண்டிருக்கும் அவலங்களை எவரும் நன்கு உணர்வர்.

அப்படி ஒருகால் ஒரு சமயத்தவர் பிறர்முன் தம் பெருமை பேசின், கேட்பவரேனும் பொறுமை காத்தல் வேண்டும். முன்னவர் செய்தது தவறுதான்; ஆயினும், பின்னவர் பொறுமை பேணினால் மோதல் ஏற்படாது. இளங்கோவடிகள் படைத்த கவுந்தியடிகளிடம் அந்தப் பொறுமையைக் காணமுடிகிறது.

கவுந்தியடிகள் 'நலம்புரி கொள்கை நான் மறையாள' என்று மரியாதையாக விளித்து, நயத்தக்க நாகரிகப் பாங்கில் மறுப்பும் உரைத்து. 'நீ உன் தெய்வத்தை வழிபடச் செல்வாயாக, நாங்கள் எங்கள் வழியிலே செல்கிறோம்' (காடுகாண்: 150—161) என்று முடித்து விடுகிறார். அவர்பொறுமை பேணியதால் பூசல் விளையவில்லை.

இங்கே மற்றொன்றையும் கருத வேண்டும். மாங்காட்டு மறையவன் குடகு நாட்டவன் (காடுகாண். 53). ஆயினும், தான் கண்ட பாண்டியன் நாட்டைச் சிறப்பித்துப் பேசுகிறான் (காடுகாண் 15-29) அவ்வாறு பிறர் சிறப்பினையும் கண்டுணர்ந்து போற்றும் இயல்புடையவன் அந்த அந்தணன், அவனே மறைமுகமாகப் பிற சமயத்தை இழிவு தோன்றப் பேசுகிறான். எனின், சமயத் துறைத் தொண்டர்களும் தலைவர்களும் எவ்வளவு எச்சரிக்கையோடு நடந்து கொள்ள வேண்டும் என்பதை உய்த்துணர்ந்து கொள்ளலாம்.

ஆக, சமய சமரசம் நிலவுதற்குச் சமயவாதிகளின் சிந்தனையும் செயலும் மோதலுக்கு வழி வகுக்காமல் இருந்தால், உலகளாவிய நிலையில் அமைதி உரம் பெறும்

என்பது இளங்கோவடிகளின் குறிக்கோள். இரண்டு வகைகளிலே சமயவாதிகள் இதற்கு உதவ முடியும். ஒன்று பிற சமயி களின் உணர்வைமதித்துப் போற்றுதல்; இரண்டு, பிற சமயத்தவர் முன் தம் சமயப் பெருமையைப் பாரித்துப் பேசாதிருத்தல்.

வெற்றி எக்களிப்பிலே திளைப்போர் தம்மையே மறந்துவிட வாய்ப்பு உண்டு. அந்நிலையிலே வெற்றியின் நடுவுநிலை நழுவி வெறியாகிவிடக்கூடும். வெற்றி வெறி யாகும்போது உறவுநிலை மிகவும் சீரழிந்து உலகளாவிய நோக்குச் சிதைவுறும். அந்த நிலையிலே பண்பாட்டு நிலைகள் சீரழிந்து சிதையாமல் காக்கும் கடமை தலைவர் களுக்கு உண்டு.

வட நாடு நோக்கிப் படையொடு போகின்ற செங்குட்டுவனிடம் சில முனிவர்கள் ஒரு செய்தி சொல்கிறார்கள். அவர்கள் வட இமயச் சாரலிலிருந்து தென்பாரதம் நோக்கிப் பயணம் மேற்கொண்டவர்கள். வடநாட்டிலே செங்குட்டுவன் வெற்றி பெறப் போவது உறுதி என்று அறிந்தவர் போல அவனுக்குரிய ஒரு கடமையை நினைவூட்டி வாழ்த்திச் செல்கின்றனர்.

போரில் வெற்றி பெற்றுவிட்ட அரசியல் தலைவனின் தொண்டர்களிடையே வெற்றி எக்களிப்பிலே நடு நீங்கி வெறி ஏறிவிடக் கூடும். அப்போது கண்ணிற் பட்டனவற்றை யெல்லாம் அவர்கள் கண்மூடித்தனமாகச் சிதைப்பார்கள். அக்கெடு சூழலில் பண்பாடு ஓம்புநரைக் காப்பது தலைவன் கடமை. இதனை நினைவூட்டிய முனிவர்கள், 'வட இமயச்சாரலில் உள்ள அந்தணரைக் காத் தல் நின்கடன்' எனச் சொல்லிச் சென்றனர்.

அவர்கள் நினைவூட்டிய கடமையைச் சேரன் செங்குட்டுவன் மறந்திடவில்லை. வடதிசைப் போரிலே வெற்றி பெற்றதும், மறைகாத்து வேள்வித் தீ ஓம்புவோரைப் போற்றிக் காக்கு மாறு கட்டளை இடுகிறான்.

அரசியல் மோதல்களிடையிலும் பண்பாடு காத்திடும் பாங்கு இடம் பெறின், உலகளா விய அமைதி தளிர்த்துச் செழிக்க வாய்ப்பு உண்டு என்பது இளங்கோவடிகளின் பார்வைக் கணிப்பு.

பண்பாடு நிறைந்த சமுதாயத்தில் கற் பொழுக்கத்துக்குப் பெருமதிப்பு நிலவும். இது மேற்கு, கிழக்கு, வடக்கு, தெற்கு என்ற எல்லைகள் எல்லாவற்றையும் அகப் படுத்துகின்ற கோட்பாடாகும்.

மேற்கு நாட்டவரைப் பற்றிப் பொதுவாக ஒரு குறை சொல்லப்படுகிறது. 'என் குழந்தைகளும் உன் குழந்தைகளும் நம் குழந்தைகளுடன் விளையாடுகின்றனர்' என்று ஒரு வெள்ளையன் சொன்னதாக ஒரு துணுக்கு உண்டு. மேலை நாடுகளிலே திரு மணம்செய்து கொள்வதும் செய்து கொண்ட வேகத்திலேயே மணவிலக்குப் பெற்றுக் கொள்வதும் அதே விரைவிலே மறுமணம் நாடுவதும் பெருவழக்காக உள்ளது என்பது பெரும்பொய் அன்று. ஆனாலும், அந்த நாட்டிலே நெடுங்காலமாக ஒருவனும் ஒருத் தியுமாக வாழும் கணவன்— மனைவியரை மிகப் பெருமிதமாகப் போற்றுகின்றனர் என் பதும் உண்மைதான். 'பாழுங் கிணற்றிலே தள்ளிவிட்டார்கள்' என்று பெண்களும், 'கழுத்தை நீட்டியவள் கழுத்தையே அறுக்கி றாள்' என்று ஆண்களும் மனம் புழுங்கிக் கொண்டே வாழும் நம் நாட்டிலும் ஒழுக்கம் சான்ற கற்புடையார்க்கு வணக்கமும் போற்றுதலும் உண்டு. சுருங்கச் சொல்லின் உலகளாவிய நிலையில் கற்பொழுக்கம் வணக்கத்துக்கு உரியதாக விளங்குகிறது; விளங்கும். 'வையத்து வாழ்வாங்கு வாழ் பவன் வான் உறையும் தெய்வத்துள் வைக்கப்படும்' என்ற குறளோடு

> ... ... ... ... தெய்வமாய்
> மண்ணக மாதர்க்கு அணியாய கண்ணகி
> விண்ணகமா தர்க்கு விருந்து

என்ற சிலப்பதிகார வெண்பாவும் இணைத்து நோக்கத் தக்கது.

கற்புடைய பெண் நிலவுருண்டையின் ஒரு மூலையிலே தோன்றினாலும் உலகெங்கும் அவள் வணங்கப்படுகிறாள்.

> இவளோ, கொங்கச் செல்வி குடமலை
> யாட்டி
> தென்தமிழ்ப் பாவை
> செய் தவக்கொழுந்து
> ஒருமா மணியாய் உலகிற்கு ஓங்கிய
> திருமா மணி
>
> வேட்டுவ 47—50

என்று ஒரு தெய்வமே கற்புடைத் தெய்வ மாகிய கண்ணகிக்குத் திருப்புகழ் பாடுகிறது. சோழ நாட்டிலே உதித்தவள்தான். ஆனால் அவளுடைய கற்பு மேம்பாட்டால் அவளை முதலிலே தெய்வமாகக் கொண்டாடியது கொங்கு நாடு; ஆதலால் 'கொங்கச் செல்வி குடமலை யாட்டி' என்கிறது, வேட்டுவ வரித் தெய்வம். ஆனால், அந்தக் கற்புத் தெய்வம் தென்தமிழ்ப் பாவை செய்த தவக்

கொழுந்தாகப் போற்றப்படுகிறாள்; தமிழக எல்லையிலே மட்டுமன்றி அவள் உலகமுழுமைக்கும் தெய்வமாயவள் என்பதை 'ஒரு மாமணியாய் உலகிற்கு ஓங்கிய திருமாமணி' எனத் தெய்வம் போற்றுகிறது. சிலப்பதிகார வெண்பா மேலும் ஒரு படிசென்று, 'மண்ணக மாந்தர்க்கு அணியாய கண்ணகி விண்ணக மாதர்க்கு விருந்து' என்று கற்புத் தெய்வத்தின் மாண்பைக் குறள் நெறி நின்று தெளிவுறுத்துகிறது.

தெய்வம் தொழாஅள் கொழுநன்
தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை

என்ற திருக்குறளையும்

தெய்வம் தொழாஅள் கொழுநன்
தொழுவாளைத்
தெய்வம் தொழுந்தகைமை
திண்ணிதால்—தெய்வமாய்
மண்ணகமா தர்க்கு அணியாய
கண்ணகி
விண்ணகமா தர்க்கு விருந்து

என்ற சிலப்பதிகார வெணபாவையும் இணைத்து நோக்கினால், இளங்கோவடிகளின் பார்வை வீச்சு உலகை அளாவியதாக மட்டுமல்லாமல் எல்லையற்ற விண்ணளாவிய தாகவும் சிந்தை செல்லாச் சேணெடுந் தூரத்து அந்தமில் இன்பத்து அரசு (வரந்தரு. 181—2) நிலவுகின்ற தேவருலகத்தை அளாவியதாகவும் இருப்பதை உணர முடிகின்றது.

உலகளாவிய பார்வையில் உரிமைக்கு ஓர் எல்லை பேணி, உரிமைக்கு ஓர் எல்லை கோலி, பிறரை மதித்துப் பேணி வாழ்ந்தால் உலகில் அமைதி நிலவும்; பண்பாடு பேணுதற்கு எந்த வகையான எல்லையும் கடந்து நின்று வாழ்தல் வேண்டும். வையத்து வாழ்வாங்கு வாழ்வோர்க்கு விண்ணகம் கடந்தும் வாழ்வு உண்டு.

திங்களைப் போற்றுதும் திங்களைப்
போற்றுதும்... ...
ஞாயிறு போற்றுதும் ஞாயிறு
போற்றுதும் ... ...
மாமழை போற்றும் மாமழை
போற்றுதும்...

என்று சமய எல்லை கடந்து பொதுநிலை வாழ்த்தொடு தொடங்கியது சிலப்பதிகாரம். முதற் பொருளுள் ஒன்றுநிலம். நிலவுலகத்து மக்கள் வாழ்க்கைக்கு நகர் ஒரு நிலைக்களம். அந்த நிலைக்களத்தின் முதன்மை கோநகர்களுக்கு உண்டு. அத்தகைய நிலைபெற்ற சோழன் தலைநகரை

பூம்புகார் போற்றுதும் பூம்புகார்
போற்றுதும்

என்று பாடினார். அந்தப் புகார் நகரம்

கலந்தரு திருவிற் புலம்பெயர் மாக்கள்
கலந்திருந்து உறையும்
(—இந்திரவிழவு 11—12)

பெருமை பெற்றது. உலகம் முழுவதும் திரண்டு வந்திடின் அனைவர்க்கும் வழங்குதற்கு ஏற்ற வளம் படைத்த அந்த நகரம், உலகவர் யாவரும் கலத்து வாழ வேண்டும் என்ற குறிக்கோளுக்கு ஒரு குறியீடு என்பது மிகையாகாது.

இவ்வாறு பொதுமை நோக்கொடு தொடங்கிய சிலப்பதிகாரம்.

'மல்லன்மா ஞாலத்து வாழ்வீர்'
(வரந்தரு. 202)

என உலகத்தவர் யாவரையும் விளித்துச் சொல்லும் அறவுரையோடு முடிகிறது,

காப்பியத்தின் தொடக்கமும் முடிவும் உலகை அளாவியதாக இருக்கின்றன. உள்ளுறையும் உலகளாவிய பார்வை உடையதாகவே அமைகின்றது. எடுத்துக்கொண்ட கதைபாரத நாட்டளவிலே அமைந்து விடுவதே. எனினும், அதனைக் காவியமாக்கித் தந்த இளங்கோவடிகளின் நெஞ்சத் திரையிலே திசையெல்லை கடந்த உலகமும், விண்ணெல்லை கடந்த தேவருலகங்களும் கூடக் காட்சியளிக்கின்றன.

நிலத்தில் பள்ளமான நெய்தலில் பயணம் தொடங்கிய பத்தினித் தெய்வம் நிலத்தில் உயர்ந்த குறிஞ்சியிலே முடிக்கிறாள். ஐவகைப் பாங்கு கொண்ட நானிலப் பயணம் முடிந்தபின் பத்தினித் தெய்வத்தை விண்ணகத்திலே காட்சியளிக்கச் செய்கிறார் காப்பிய ஆசிரியர்.

சோழ நாட்டில் தோன்றியவளாயினும் பத்தினித் தெய்வமாகையின் பாண்டியன் வணங்கி மழைவரமும் வளவாழ்வும் பெறுகிறான். கொங்கிளங்கோசரும் கடல் சூழ் இலங்கைக் கயவாகு வேந்தனும் வரம் பெறுகின்றனர். சோழனும் தன் நாட்டுத்

தோன்றிய பத்தினியைப் போற்றத் தவற வில்லை. (உரைபெறுகட்டுரை)

—'அருமறை தரவேண்டின் தருகிற்கும் பெருமை' உடையவள் பெண்டிர்க்கு அணி யான பத்தினித் தெய்வம். இந்தத் தெய்வத் துக்கு மண்டிலம், நாடு, உலகம், என்ற எல்லை கிடையாது.

கதை நமிழகத்துக் கதை, தமிழ்க் கவிஞர் பாடிய கதை. கதை நிகழ்ச்சிக்கு உரிமை எல்லை சிறப்புநிலையில் தமிழகம்; பொது நிலையில் பாரதம்; ஆனால், சிந்தனை நிலையில் உலகம் முழுவதையும் அளாவியது. காப்பியச் செய்தியளவில் உலகு கடந்த விண்ணையும் கடந்து ஓங்கிய பார்வையை உடையது.

தமிழ்க் கலை வழியாகச் சான்றாண்மை பேணிய இளங்கோவடிகளின் பார்வை உலகை அளாவியதோடு நிற்பதன்றி அண்டங்களையும் அண்டர் உலகங்களையும் அளாவி நிற்பது. இது சிலப்பதிகாரச் செய்தி.

## இயக்கம் வேண்டும்

''எல்லாம் வடமொழியே, யாவும் வடமொழியிலிருந்து வந்தனவே'' என்பது ஒரு கருத்து மரபு (School of Thought). இது வடமொழிக்கே கூட உகந்ததன்று. இந்தியா என்பது பலகுரலிசை; அதில் தமிழின்குரல் தெளிவாகவே ஒலிக்கிறது- சிறந்த வடமொழி வாணன் அதை மறுக்கமாட்டான்.

'எல்லாம் தமிழே; வடமொழி செத்தமொழி; தமிழி லிருந்தே எல்லாம் வந்தன' என்பது பிறிதொரு கருத்து மரபு. அது தேவையற்றது. பிறர் யாரும் ஏற்காதது. குறுகியமனம் என நம்மைக் கீழ்மைப் படுத்தியது.

வடமொழியின் சிறப்புக்கள் மறுக்க வொண்ணாதவை. இந்தியமொழிகளில் அதன் ஆளுமை மிகுதி. தமிழகத் திலும் அது செல்வாக்குப் பெற்றுக் கலை மொழியாய், தொழில் மொழியாய் விளங்கிய காலங்கள் உண்டு. அது போலத் தமிழ் தனி இயல்புடையது. ஆரியத்துக்கு நிக ரெனவாழ்ந்தது. ஒப்பற்ற, தனித்த பல இலக்கியக் கோட்பாடுகளை உடையது; தனித்த சிந்தனைப் போக்கும் நாகரிகமும் பண்பாடும் கொண்டது என இவ் வாறு, காரண காரிய இயைபோடு எதனையும் உணர்ச்சிவயப்படாமல் பிறரும் ஏற்குமாறு எடுத்துக் கூறும் ஒரு கருத்துமரபை (School of Thought) உருவாக்க வேண்டும்.

தமிழண்ணல்
மெய்ப்பாடு

# அப்பரடிகளும் வழிபாடும்

டாக்டர் சுப. அண்ணாமலை
தமிழியற்புலம்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை—625 021

திருத்தொண்டர் புராணத்தில் 'தொண்டு' என்னும் சொல் விரிந்த பொருளில் வழங்குகின்றது. அடிமைத்தொழில் என்று பொதுவாகப் பொருள்படும் அச்சொல்லிற்கு, இறைவழிபாடு, அடியவர்க்குச் செய்யும் பணி, திருக்கோயிலுக்கு ஆற்றும் பணி, வழிபாட்டுக்குத் துணை நிற்கும் பணி, வழிபாட்டின்போது பாடும் பணி, பாடலுக்கு ஏற்ப ஆடும் பணி, திருக்கோயில் கட்டும் பணி என்பன முதலிய பொருள்கள், பொதுவாகத் திருமுறைகளிலும், சிறப்பாகத் திருத்தொண்டர் புராணத்திலும் வழங்குகின்றன. இங்கு குறிப்பிட்ட பணிகள் பெரும்பாலும் திருக்கோயில் தொடர்பாக உள்ள பணிகள் ஆதலின், 'திருத்தொண்டு' எனச் சிறப்பிக்கப்படுகின்றன.

திருத்தொண்டு செய்தமையால் திருத்தொண்டர் எனப் பெயர் பெற்ற சான்றோருள் முன்னிடம் பெறும் திருநாவுக்கரசர் மூன்று திருத்தொண்டுகள் செய்தார். ஒன்று இறைவனை வழிபட்டமை. ஒன்று திருக்கோயிலில் உழவாரப் பணி செய்தமை. ஒன்று மக்கள் என்றென்றும் தமிழால் இறைவனை வழிபாடு செய்வதற்கு இன்னிசைத் தீந்தமிழ்ப் பதிகப் பாமாலைகளைப் பாடியளித்தமை.

கண்ணப்பர், சண்டேசுரர், சாக்கியர், உருத்திரபசுபதி, குங்கிலியக் கலயர் முதலியோர் போல இறைவனை வழிபட்டதோடு அமைந்திருப்பினும் திருநாவுக்கரசர் திருத்தொண்டர் என்றே வழங்கப்பட்டிருப்பார். எனினும் மற்றும் இரண்டு பணிகளாகிய உழவாரப் பணியையும் தேவாரப் பணியையும் செய்து சமுதாயத்திற்கு நன்மையும் ஆக்கமும் நாடினார். ஆதலின் அவர் தனிச்சிறப்புடையவர் ஆவார். இத்தனிச் சிறப்பினைச் சேக்கிழார்,

''இன் தமிழ் மாலை பாடிக்
கைத்திருத்தொண்டு செய்யும்
காதலிற் பணிந்து போந்தார்''

எனப்பாடுவார்.

மாலை தொடுத்தலும், சந்தனம் அரைத்தலும், திருக்கோயில் தூகலும், மெழுகலும் முதலிய பணிகளும், திருக்கோயில் இறைவனைப் பூசிக்கும் பணியும் செய்தோரும் இருந்திருப்பர். அவர்களுக்கு இல்லாத தனிச்சிறப்புத் திருநாவுக்கரசருக்கு அமைந்த காரணம், அவர் நாடு தழுவிய முறையில், தமது திருத்தொண்டைச் சமுதாயப் பணியாகச் செய்தமையே ஆகும்.

கைத்திருத்தொண்டினை வேண்டி நின்றன, அவர் காலத் திருக்கோயில்கள். சைவ நெறியறிவை மக்களுக்கு ஊட்டி, அவர்கள் மனத்தில் ஏறியிருந்த சமண, பௌத்த சமயச் செல்வாக்குகளை, தாக்கங்களை நீக்க வேண்டியிருந்தது. மக்களின் வாழ்க்கையினின்றும் கைவிடப்பட்டிருந்த மரபுவழிப் பழக்க வழக்கங்களையும், வாழ்க்கை நெறியையும் மறுமலர்ச்சி கொள்ளச் செய்ய வேண்டியிருந்தது. அவற்றுள் சிறப்பானது திருக்கோயில் வழிபாடு. சமண, பௌத்த சமயங்களின் தாக்கத்தால், திருக்கோயிலில் வழிபாடு செய்யும் சமுதாய வழக்கம் நலிவுற்றது. ஆதலால் திருக்கோயிலைப் பேணுவோர் இலராயினர். அதனால் கோயில் திருச்சுற்று எல்லாம் செடியும் புதரும் முள்ளும் கல்லும் நிரம்பின. ''கறைக் கண்டன் உறைகோயில் கோலக் கோபுரக் கோகரணம் சூழாக் கால்களால் பயன் என்'' என்று திருவங்கமாலை பாடிய திருநாவுக்

கரசர், மக்கள் திருக்கோயில்களை வலம் வருவதற்கு ஏதுவாக, அவற்றின் சுற்றுக் களைத் தூய்மை செய்யும் பணியை ஊர்தோறும், தாமே செய்தார். இப்பணியை மேற்கொள்ளுமாறு மக்களையும் தூண்டி னார். இது இறைவழிபாட்டின் ஒரு பகுதியே ஆகும் என்றும், உள்ளன்போடு யார் இப் பணியினைச் செய்து, அதனால் வரும் மன நிறைவினாலும் இன்பத்தாலும் துள்ளி ஆடுகின்றார்களோ, அவர்கள் தம்முடைய வேறு குற்றங்களால் தீங்குறாமல் இறைவன் காப்பான் என்று திருப்பேரெயில் பதிகத்தில் கூறுகின்றார்.[1] ''பத்தியாய்ப் பணிசெய் மடநெஞ்சமே'' என்று தம் மனத்திற்குப் புத்தி கூறுவது போல், சோற்றுத்துறைவாழ் மக்களுக்குக் கூறு கின்றார்.[2]

பிறப்பால் வந்த சிந்தை மயக்கம் யாருக்கும் உண்டு. அப்பர் அடிகள் போன்ற அருளா ளர்களுக்குத் தம் பொருட்டு இல்லை எனி னும் பிறர் பொருட்டுச் சிந்தை மயங்கிக் கலங்குதல் உண்டு. அக்கலக்கம் திருக் கோயில்களில் செய்த கைத்தொண்டினாலும், தமிழ்ப் பாமாலை பாடி இறைவனை வழிபட் டமையாலும் நீங்கிற்று என்று அப்பரடிகள் கூறுவார்[3]. சமுதாயத் தொண்டாக எப் பணிகளைத் திருக்கோயிலிற் செய்தாரோ, அப்பணிகளே அவரது மயக்கம் விலகி, ஞானம் உண்டாதற்குக் காரணமாக இருந் தன. (1) அவர் வழிபாடாகவே செய்த இத் திருத்தொண்டு அவருக்கு உணர்த்தப் பட்ட விதம். (2) அவர் சைவத்திற்கு மாறி வருவதற்கு முன்பு சார்ந்திருந்த சம யத்தின் அறநெறிக் கொள்கையுடன், அவர் மேற்கொண்ட திருத்தொண்டு நெறி எவ் வாறு மாறுபடுகிறது. (3) வழிபாட்டிலும் வழிபாட்டினாலும் அவர் பெற்ற அனுபவம், பயன் அவற்றைக் கொண்டு மக்களுக்கு அவர் நன்னெறி காட்டியமை ஆகியவை பற்றி இங்கு ஆராய்வோம்.

நமது இவ்வாய்விற்கு மூலமாக அப்பரடி களின் பதிகங்களையே மேற் கொள்கின் றோம்.

சைவ சமயத்திற்கு மாறி வந்தபொழுது, தமக்கு இறைவனால் தயாமூல தன்மவழி என்பதோர் நெறி காட்டப்பட்டது என்று அப்பரடிகள் கூறுவார்.

> ''பிண்டி பேணும் பொறியிலியேன்
> தனைப்பொருளா ஆண்டு கொண்டு
> ... ... ... ... ... ... ... ... ... ... ...
> தயாமூல தன்ம வழி எனக்கு நல்கி
> மனம் திருத்தும் மழபாடி வயிரத்
> தூணே''[4].

மேலே குறிப்பிட்ட இருவகைத் தொண்டு நெறியையே, 'தயா மூல தன்ம வழி' எனச் சுட்டுகின்றார் என்பது தெளிவு. சமணரும் பௌத்தரும் இறைவனைக் காட்டிலும் அற நெறியை அதிகம் வற்புறுத்துவோர் ஆவர். தயா எனப்படுவதாகிய சீவகாருணியத்தைச் சமணர் பௌத்தரை விட மிகுதியும் வற்புறுத் துவர். அப்பரடிகள் தமது இளமையில் கொல்லாமையறத்தால் ஈர்க்கப்பட்டே சமண சமயம் புகுந்தார். பல்லாண்டு சமண சம யத்தினைச் சார்ந்திருந்த பிறகு, சூலை நோயால் பிணிக்கப்பட்டபோது, அவர் மனம் மாறுவதற்கான இரண்டு நிகழ்ச்சிகள் நடந்தன. ஒன்று, யாராலும், எதனாலும் தீர்க்க இயலாத அந்த நோயை இறைவனை வழிபட்டுப் பாடிய செய்கை ஒன்றே தீர்த் தது. வேற்றுச் சமயம் புகுந்து, தன்னை மறந்திருந்தாலும், அதனை மன்னித்து, 'தீராத நோய் தீர்த்த தயாநிதியாகச் சிவ பிரான்' விளங்கினான். அதே சமயம் அவர் சமண் பாழியை விட்டுச் சென்று சமண சம யத்தையும் கைவிட்டமையால் சினம் கொண்ட சமணர், ''கோபத்தை நீக்குக'' என்பது தமது சமயக் கொள்கையாயினும், அதற்கு மாறாக, அப்பரடிகளுக்கு நஞ்சு கலந்த உணவை வஞ்சனையாகஅளித்தனர். கற்றுணைப் பூட்டிக் கடலில் பாய்ச்சினர். அப்பரடிகள் சிவபிரானை நினைந்து ஐந் தெழுத்தை ஓதி இக் கேடுகளிலிருந்து நீங்கி னார். இதனை அவரே,

1) ''வஞ்சனைப் பாற்சோறாக்கி
வழக்கிலா அமணர் தந்த
நஞ்சமுது ஆக்குவித்தார்
நனிபள்ளி அடிகளாரே,''[5].

---

1. 5ஆம் திருமுறை: 159ஆம் பாடல்
2. மேலது ; 33ஆம் பதிகம்
3. ''நாயேன் முன்னைப் பந்தமறுத்து ஆளாக்கப் பணி கொண்டு
   ஆங்கே பன்னியநூல் தமிழ்மாலை பாடுவித்து பின்
   சிந்தை மயக்கறுத்த திருவருளினானை'' (6ஆம் திருமுறை :835)
4. 6ஆம் திருமுறை: 406
5. 4ஆம் திருமுறை :683

2) ''கற்றுணைப் பூட்டி ஓர்
கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது
நமச்சிவாயவே'' [6].

என்று பாடுவார், சமணர் தயவைக் கொள்கையாக உடையவராக இருந்தும், செய்கையில் அதற்கு மாறாக நடந்து கொள்ள, சிவபிரான் தன்னை வழிபட்டோர் குற்றமே செய்யினும் மன்னித்துக் கருணையும் காட்டினான்: மற்றும் அவன், ''பல் உயிர்க்கும் பற்று ஆகிப் பரிவோன்.''[7] எனவே அவனே தயாமூலம். அவனை வழிபட்டு, அவன் பணி செய்து, அவன் வழி நிற்றலே தயாமூலதன்மம். சிவதன்மம், சிவபுண்ணியம் என்பவையும் இதனையே குறிக்கும். அருணை வடிவேல் முதலியார், ''சிவபிரானது சிறப்பை உணர்ந்து, அவனையே கடவுளாக அறிந்து, அவனை நோக்கிச் செய்யும் தொண்டுகள் புத்தி பூர்வ சிவபுண்ணியமாம்'' என்று விளக்குவார்.[8]. ''தொண்டர்க்குத் தூநெறியாய் நின்றான் தன்னை'' என்பார் அப்பரடிகள்.

இறையன்பிலாதார் செய்யும் தானத்தால், பிறவி நீங்குதல் என்னும் பயன் கிட்டாது; மீண்டும் சஞ்சலத்தை உண்டாக்கும். உலக வாழ்க்கையில் அழுந்தவே நேரும் என்பதை அப்பரடிகள்,

''தானத்தைச் செய்து வாழ்வான்
சலத்துளே அழுந்துகின்றீர்''

எனக் கூறி எச்சரிப்பதையும் காண்க.

தயாமூல தன்மம் என்பது சிவபுண்ணியம் மட்டும் அன்று. பிறவியற வேண்டுவோர் கடைப்பிடிக்க வேண்டிய தர்மமும் வாழ்க்கை முறையும் அதுவேயாகும். இதனையே அறநெறி என்பதன் சிறப்புப் பொருளாகக் கொண்டு அப்பரடிகள், சிவபிரான் கல்லால மரநிழலில் வீற்றிருந்து வேதம் உணர்ந்த முனிவர் நால்வர்க்கு அறம் உரைத்தான் என்று கூறுவர்[9]. தயாமூல தன்மம் என்ற இவ்வாழ்க்கை முறையின் மையம் சிவ வழிபாடும், சமுதாயம் வழிபாடாற்றும் திருக்கோயிலும் ஆகும்.

திருக்கோயில் வழிபாடும் அதன்வழி, இறைவனை மூலமாகக் கொண்ட வாழ்வை முறைப்படி வாழும் தன்மையும் இல்லாத ஊர், ஊரன்று என அப்பர் பாடுகின்றார். அது தமிழ்நாட்டு ஊர் மரபு. அதைக் கருதியே ''கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்'' என்னும் ஆன்றோர் மொழி எழுந்தது. ''ஈசனுக்கு அன்பிலார் எவ்வுயிர்க்கும் அன்பிலார்'' என்றனர் பெரியோர். எனவேதான் அப்பரடிகள் திருக்கோயில் வழிபாட்டைத் தனி மனிதச் செயல் என்று எண்ணாமல், சமுதாயப் பணி என உணர்ந்து, அவ்வழிபாட்டிற்கு வந்த தடையை நீக்குதலையும், துணை நிற்பதையும், திருக்கோயில்களைத் தூய்மை செய்தலையும், ஊர்தோறும் சென்று பதிகம்பாடி மக்களுக்குச் சிவநெறி புகட்டுதலையும், வழிபாட்டுக்கு வழிகாட்டுதலையும், சமுதாயப் பணியாகக் கொண்டு, குறைவற ஆற்றினார். வழிபாட்டிற்கெனப் பாடல் பாடி அளித்தலையும் சமுதாயப் பணியாகவே கொண்டு செய்தார்.

அவர் தாம் இருந்த ஊரில் இருந்தே பதிகங்கள் பாடாமல், ஊர்தோறும் உள்ள திருக்கோயில்களுக்கு பதிகங்கள் பாடி அர்ப்பணம் செய்தமை இதனைக் காட்டும். பதிகம் பாடுதலை விட உழவாரத் தொண்டில் மிகுதியான நாட்டம் கொண்டிருந்தமையாலும் இங்ஙனம் ஊர்தோறும் சென்றார். திருக்கோயிலை ஊர்கள் மையமாகக் கொண்டு, குடிமக்கள் வாழ்க்கை திருக்கோயில் நெறி சார்ந்த வாழ்வாக இருக்க வேண்டிய முறைமையைக் கருதுகிறார் அப்பர். ஆதலால் கோயிலையும் ஊரையும் வேறுபடுத்தாமல்

''பூந்துருத்தி பூந்துருத்தி என்பீராகிப்
பொல்லாப் புலால் துருத்தி
போக்கலாமே''

என்பன முதலிய பாடல்களைப் பாடினார்[10].

பாடல் வழிபாடு

அப்பரடிகளும் திருஞான சம்பந்தரும் வேத நெறியையும் மந்திரங்கள் ஓதி வழிபடுதலையும் அறியாதோர் அல்லர். அப்பரடிகள்,

---

6. மேலது :104
7. 6ஆம் திருமுறை :802
8. சித்தாந்தத் தெளிவியல்; பக்கம்: 215
9. அ) ''அறம் உரைத்தபட்டன் தன்னை'' 6ஆம் திருமுறை: 636
ஆ) அறங்காட்டி அந்தணர்க்கு அன்று ஆலநிழல் அறம அருளிச் செய்த 6ம் திருமுறை: 13
10 6ஆம் திருமுறை: 93ஆம் பதிகம்

''மறை கலந்த மந்திரமும் நீரும் கொண்டு வழிபட்டார் வான் ஆளக் கொடுத்தி'' என்றும் மற்றும் பலவாறும் மந்திர புஷ்பார்ச் சனையையும், வேத வேள்வியையும் குறிப் பிடுகின்றார். எனினும் சிவபிரான் உகப்பது பண்ணோடு இசைந்த தமிழ்ப்பாடலையே என்று பலபல இடங்களில் கூறுகின்றார். அவற்றுள் ஓரிடத்தில் தெளிவாகவே,

''வேதத்தான் என்பர் வேள்வியுளான் என்பர்
பூதத்தான் என்பர் புண்ணியம் தன்னையே
கீதத்தான்''[11].

என்று, தமது அனுபவத்தில், இறைவன் பாடலில் உவப்புடையவன் என்று கூறுகின் றார். மற்றும்,

''பண்ணிற்பாடல்கள் பத்தி செய் வித்தகர்க்கு
அண்ணித் தாகும் அமுதினை''

என்று பாடுவார்.

''வாழ்த்தி ஏத்திப் புகழ்ந்தாரைப் பொன் னுலகம் ஆள்விப்பான்'' என்பார். தம்மைப் ''பாமாலை பாடப் பயில்வித்தான்'' என் பார். ''பாட்டான நல்ல தொடையாய்ப் போற்றி'' என்பார். இக்கூற்றுகளுக்கெல் லாம் முடிமணி சூட்டினாற்போல, தமிழ் நாட்டின்கண் அன்றி இமயமலைக்கண் உள்ள திருக்கயிலாயத்திற்குப் பாடிய மூன்று பதிகங்களையும் மலர் தூவி அர்ச்சனை செய்யும்போது கூறத்தக்க போற்றிப் பதிகங் களாகவே பாடினார்.

இறைவனே வேதம் ஓதுகின்றான் என்றும் வேள்வியுடையான் என்றும் பாடும் அப்பரடி கள் இவ்வாறு தமிழால் பாடி வழிபடுவதை வற்புறுத்துவது, அதுவே வழிவழி வந்த தமிழ்மரபு என்பதால் மட்டும் அன்று; திருக் கோயில் வழிபாடு தனிப்பட்டவர்க்கு, அல்லது குழுவினர்க்கு உரியது அன்று; சமுதாயத்திற்கு உரியது. சமுதாய மக்களே வழிபாடு செய்யும் இடம் திருக்கோயில். ஆகவே **சமுதாயத்தின் தேசிய மொழியி லேயே** திருக்கோயில் வழிபாடு நடைபெற வேண்டும் என்பதாலும் ஆகும்.

அப்பரடிகள் திருக்கோயிலில் நிகழும் கூட்டு வழிபாட்டைத் ''தொண்டர் குழாம் தொழுதேத்த அருள் செய்வானை''[12] என்று குறிப்பிடுவார்.

கீழே காண்க.

சமுதாயத்திற்கு உரியது தமிழ்நெறி வழி பாடே என்பதைத் தமிழகத்திற்கே உணர்த்தும் வகையில் நிகழ்ந்த நிகழ்ச்சியே மறைக்காட்டு நிகழ்ச்சி. வேதங்கள் வழிபட்டு அடைத்து விட்டுச்சென்ற மறைக்காட்டுத் திருக்கோயில் கதவை அப்பரடிகள் தமிழ்ப் பதிகம் பாடி, இறைவன் அருளை வெளிப் படச் செய்து, திறப்பித்தார். திருஞான சம்பந்தர் மீண்டும் கதவினை அடைக்கப் பாடி, திறந்து மூடும் வழக்கை நிலைப் படுத்தினார். இங்கு, தமிழ்ப்பாடல் புகும் என்றால்தான் கோயில் கதவு திறக்கும் என்னும் உண்மை விளங்குகின்றது.

இந்த நிகழ்ச்சியை மனங்கொண்டே, அப்பர் அடிகள் கோயில் பணிகளைச் செய்யுமாறு மக்களை ஊக்குவிக்கும் பாடலில், 'அளப்பில கீதம் சொன்னார்க்கு அடிகள்தாம் அருளு மாறே'[13]. ஆகவே திருக்கோவில் வழிபாடு தமிழில்தான் நடைபெற வேண்டும் என்று அப்பரடிகள் வலியுறுத்துகின்றார் என்று உறுதியாகக் கூறலாம்.

**மக்களை நெறிப்படுத்தல்**

''ஆலயம் தானும் அரன் எனப்படுமே'' என்பது சிவஞானபோதம். திருக்கோயில் இறைவன் விக்கிரகம் இறைவனே என்னும் மரபு எங்ஙனம் உண்டாயிற்று அருளாள ரின் அனுபவத்தால் உண்டாயிற்று. அப்பரடி கள் தில்லையில் சிற்றம்பலத்தின் முன் நின்றுகூத்தப் பெருமானை வழிபட்ட போது, ஆடும் விக்கிரகத்தில் இறைவன் வெளிப்படு வதை அவரது உள்ளான்மா உணர்ந்தது. மனம் அதற்கு ஏற்ப உணர்ச்சி வசப்பட்டது. அந்தப் பெருமான்'' அந்தியும் பகலுமாக இடைவிடமால் ஆடுகின்றானே; அவன் பாதங்கள் நோகாவா? என்று வருந்துகின் றார்.[14]. திருவானைக்காவில்,

---

11. 5ஆம் திருமுறை: 112
12, 6ஆம் திருமுறை: 869
13. 4ஆம் திருமுறை: 748
14. மேலது; 232

''உன்னை எம்மான்
கண்ணாரக் கண்டிருக்கக் களித்து
எப்போதும்
கடிபொழில் சூழ் தென் ஆனைக்காவுள்
மேய அண்ணா''

என்றுபாடுவார். தம் அனுபவத்தின் துணைக் கொண்டு, திருக்கோயில் வழிபட்டால் எய்தற்குரிய பயன்களை எடுத்துக் கூறி மக்களை வழிபாட்டுக்கு நெறிப்படுத்துகின் றார். மக்கள் உழைப்பதெல்லாம் எதற்கு? நன்மை பெறுதற்கேயன்றோ? ''அருமந்த நன்மை எல்லாம் அடியார்க்கு ஈவர்'', ''மனத்திருந்த கருத்தறிந்து முடிப்பான்'', ''சிந்தனையை நெறிபடுத்தி ஒருமுகப் படுத்தி அதில் தெளிவை உண்டாக்கினான். நிட்டை கூடினேன்; சிவானந்தம் பெற் றேன்''[15] இருள் சூழும்போது ஒளியாகத் தோன்றி வழிகாட்டுவான்; ஏத்துவார் இடர்கள் தீர்ப்பான்; வீடு பேற்றினை எய்த ஞானம் வேண்டும். அந்த ஞான நெறியில் நிற்கும் நிலை, வழிபாட்டால் வரும். ஞானத் தீயினால் மனக் கள்ளத்தைச் சுட்டு எரிக்க, இறைவனை ஒளிமயமாகக் காணலாம்; வழிபாடு, ஒரு கல்விக்கு வழியாகும்; அதுவே பதிஞானம் பெறும் கல்வி. அதற்கு ஆசிரியன் இறைவன். அக்கல்வியைப் பெறாதார் இறைவனை எய்தல் இயலாது'' என்பன முதலிய விழுப்பயன்களை எடுத்துக்கூறி மக்களைசைவ நெறியில் வாழுமாறு தெருட் டினார்.

## அகவழிபாடு

திருக்கோயில் வழிபாடு அப்பரடிகளின் அக விழிபாட்டிற்கும் வழிவகுத்தது. திருக் கோயில் இறைவனின் விக்கிரகத்தில் அவர் இறைவனையே கண்டார் என்பதை முன்பு எடுத்துக்காட்டினோம். மெல்ல மெல்ல அந்த உணர்வே உள்முகமாகச் சென்று பதிய, அவர் இறைவனைத் தமது இதய கமலத்தில் கண்டார். இங்குப் பக்தி நெறி ஆன்மீகத் திற்குப் படிக்காட்டாகின்றது. அவர் தம் முன்னே கண்ட இறைவடிவம் அருவமும் கடந்த பரம்பொருள் ஆகும். அதனைத்தான், 'மாலும் பிரமனும் தேடியும் காணாத தேவ னை என்னுள்ளே தேடிக் கண்டு கொண் டேன்' என்று கூறுகின்றார், [16] ''உயிரா வணம் இருந்து உற்று நோக்கி'' என்னும் பாடலிலும் அகவழிப்பாட்டையே கூறுகின் றார்.

புறவழிபாட்டின்போதே அக வழிபாட்டிற்கும் ஆயத்தமாக வேண்டும் என்று அவர் கூறு கின்றார். திருக்கோயிலில் விளக்கேற்றும் போதே, உள்ளம் ஆகிய விளக்கில் உயிரா கிய திரியில் ஞானம் என்ற சுடரை ஏற்ற வேண்டும் என்கிறார். அகத்தில் காண்பது பரம்பொருள் வடிவம். ஆதலின்இங்கு அவர் குறிக்கும் ஞானம் 'பதிஞானம்' என்பது பெறப்படும். அதனை இறைவனே உள் நின்று உணர்த்துகின்றான். எனவே அது பாசஞானமாகிய மனத்தின் உணர்வு அன்று. ஆதலின் 'உள்ளத் திரி ஒன்று ஏற்றி உணருமாறு உணரவல்லார்' என்று கூறு கின்றார்[17]. இதனை மற்றொரு பாடலில் 'இடம்படு ஞானத்தீ'' என்பார். இடம் படுதல் வியாபகத்தைக் குறிக்கும். வியாபகம் உடையது சிவஞானம். கயிலாயம் சென்று ஐயாற்றிற்கு மீண்டபோது அப்பரடிகள் ஆணும் பெண்ணுமாகக் கண்ட உயிரினங் களை எல்லாம் சிவமும் சக்தியுமாகக் கண்ட மை இந்த வியாபகக் காட்சியே.

எவ்வுயிர்க்கும் அன்புடைமை என்னும் பண் பும் இவ்வியாபகக் காட்சியின் விளைவாக, முதிர்ந்த நிலையில் வாய்க்கும். இம் மன நிலையில் நின்றே அப்பரடிகள், 'புலைய ரேனும் இறைவனுக்கு அன்பராகில் அவரே யாம் வணங்கும் கடவுளர்'' என்று கூறி னார். இது சமயஞானத்தின் பின்னணியில் சாதிகளை – உயர்வு தாழ்வை மறுத்தல் ஆகும்.

இதுவரை கூறியவற்றால், அப்பரடிகளின் வாழ்க்கையனுபவத்தால், 'ஈசனுக்கு அன் பில்லார் எவ்வுயிர்க்கும் அன்பு இலார்' என்ற சைவ நெறிக் கோட்பாடு தெள்ளிதின் விளங்குகின்றது. இக் கோட்பாட்டின் அடிப் படையில் சைவம், சமண பௌத்தங்களை எதிர்த்தது.

---

15. 5ஆம் திருமுறை: 987
16 4ஆம் திருமுறை: 93
17. 4ஆம் திருமுறை: 304

# தமிழுக்கு இன்று புதிய இலக்கணம் தேவை

( டாக்டர் பொற்கோ (பொன். கோதண்டராமன்)
தமிழ் இலக்கியத் துறைப் பேராசிரியர்
சென்னைப் பல்கலைக் கழகம்
சென்னை 600 005

**இலக்கணம் என்பது யாது?**

ஒரு மொழியில் உள்ள எழுத்தமைப்பு, சொல்லமைப்பு, தொடரமைப்பு ஆகியவற்றை வரையறை செய்து விளக்குவதைப் பொதுவாக இலக்கணம் என்று சொல்லுகிறோம். இத்தகைய இலக்கணம் ஒரு மொழியினுடைய அமைப்பைப் புரிந்து கொள்ள உதவியாக இருக்கும். மொழியைப் பயன்படுத்துவோருக்கு ஐயம் ஏற்படும் இடத்தில் தெளிவு பெறுவதற்கு ஒரு சிறந்த கருவியாக இருக்கும். ஒரு மொழியை இன்னொரு மொழியாளருக்குக் கற்பிக்கும் பொழுது அவர்கள் எளிதாக அந்த மொழியைக் கற்றுக்கொள்ள இது உதவியாக இருக்கும். பொதுவாக இலக்கணங்கள் இந்த முறையில் அமைகின்றன.

**மொழியும் இலக்கணமும்**

உலகில் உள்ள எல்லா மொழிகளுமே ஒரு சில வரையறைகளுக்கும் விதிமுறைகளுக்கும் கட்டுப்பட்டே இயங்குகின்றன. அப்படிப்பட்ட வரையறைகளும் விதிமுறைகளும் இல்லாமற் போனால் ஒருவர் பேசுவது இன்னொருவருக்குப் புரியாமல் போய்விடும். ஆகவே எல்லா மொழிகளுக்கும் இலக்கண அமைப்பு, இலக்கண வரையறை, இலக்கண விதிகள் உண்டு. அவற்றை இலக்கணப் புலவர்கள் ஆராய்ந்து கண்டுபிடித்து எடுத்துக் கூறுகிறார்கள். அவ்வளவு தானே தவிர ஒரு மொழிக்கு ஒருவர் இலக்கணம் உருவாக்கியிருக்கிறார் என்றால் அந்த மொழிக்கு மட்டுமே இலக்கணம் இருக்கிறது, மற்ற மொழிகளுக்கு இலக்கணம் இல்லை என்று நாம் நினைப்பது கூடாது.

உலகில் உள்ள எல்லா மொழிகளுக்குமே ஒரு வித வரையறைகளும் ஒருவித இலக்கணக் கட்டுக்கோப்பும் உண்டு. அதைக் கண்டு பிடித்துச் சொல்வது தான் இலக்கணப் புலவர்கள் அல்லது மொழியாராய்ச்சியாளர்கள் வேலை. நாம் விரும்பியபடியெல்லாம் இலக்கண விதிகளை உருவாக்கிவிட முடியாது. மொழியில் இருக்கின்ற வரையறைகளை—இருக்கின்ற விதிமுறைகளைக் கண்டு பிடித்துக் கூறுவது மட்டுமே நம்முடைய வேலை. இந்த நோக்கத்தில் பார்க்கும் பொழுது உலகில் உள்ள எல்லா மொழிகளுக்கும் இலக்கணம் உண்டு. பேச்சு மொழியாக இருந்தாலும் எழுத்து மொழியாக இருந்தாலும் எல்லா மொழிகளுக்குமே இலக்கண வரையறை, இலக்கண நெறிமுறை உண்டு.

**மொழி வளர்ச்சியும்
புதிய இலக்கணத்தின் தேவையும்**

உலகில் உள்ள எல்லாப் பொருள்களும் வளர்ச்சி பெற்று மாற்றம் பெறுவது போல மொழியும் வளர்ச்சி பெற்று மாற்றம் பெறுகிறது. இன்னும் இதைப் பொதுமைப்படுத்தி விரிவாகச் சொல்லப் போனால் உலகில் உள்ள எல்லாப் பொருள்களுமே மாற்றத்திற்கு உட்பட்டவை. அந்த மாற்றம் வளர்ச்சி நோக்கிய மாற்றமாகவும் இருக்கலாம். தேய்வு நோக்கிய மாற்றமாகவும் இருக்கலாம். மாற்றத்திற்கு உட்படாதது எதுவும் உலகில், மனித வாழ்வில் இல்லை என்றே கூறலாம். இந்த நோக்கில் பார்க்கும் போது மொழியும் மாற்றத்திற்கு உட்பட்டது தான். அந்த மாற்றம் விரைவான மாற்றமாக இருக்கலாம் அல்லது மெல்ல மெல்ல நடக்கிற மெதுவான மாற்றமாக இருக்கலாம். இப்படி மாற்றத்தினுடைய வேகத்தின் அளவு மாறுபடலாமே தவிர மாற்றத்திற்கு உட்படாத மொழி என்று உலகில் எந்த ஒரு மொழியும் இருக்க முடியாது

அப்படி மாற்றத்திற்கு உட்படாத மொழியாக ஒன்று இருக்கிறது என்று கருதப்போனால் அந்த மொழி வழக்கிறந்த மொழியாக இருக்க வேண்டும்; அழிந்துபோன மொழி யாக இருக்க வேண்டும். வாழுகின்ற மொழி எதுவானாலும் அது மாற்றத்துக்கு உட்பட்ட தாகவே இருக்கும். அப்படி மொழி மாற்றம் ஏற்படுகிறது என்றால் எத்தகைய மாற்றம் ஏற்படுகிறது, எங்கே மாற்றம் ஏற்படுகிறது என்பதை நாம் எண்ணிப் பார்க்கலாம்.

எழுத்துகளில் மாற்றம் ஏற்படலாம்; ஒலி யமைப்பில் மாற்றம் எழுத்துகள் சொல் லில் தோன்றும் வரன்முறைகளில் மாற் றங்கள் ஏற்படலாம்; சொல்லமைப்பில் மாற்றங்கள் ஏற்படலாம்; தொடரமைப்பில் மாற்றங்கள் ஏற்படலாம்; சொற்பொருள் அமைப்பிலும்கூட மாற்றங்கள் ஏற்படலாம். இருந்த சொற்கள் மறையலாம். புதிதாகப் பல சொற்கள் தோன்றலாம். இப்படியெல் லாம் மொழியில் மாற்றங்கள் ஏற்பட்டு வரு கின்றன. இந்த மாற்றங்களையெல்லாம் தழுவிக் கொள்ளுகின்ற வகையில் காலந் தோறும் நமக்கு இலக்கணங்கள் தேவைப்படு கின்றன. மொழி வளர்ச்சியும் புதிய இலக் கணத்தின் தேவையும் ஒன்றுக்கொன்று மிக நெருக்கமாகத் தொடர்புடையவை. மொழி வளர வளரப் புதிய இலக்கணங்களும் தோன்றியாக வேண்டும். அப்படித் தோன் றாமற்போனால் மொழியில் குழப்பங்கள் மிகுதியாகும். மொழி வழக்கில் ஓர் ஒருமைப் பாடும் செம்மையும் இல்லாமல்போய்விடும். ஆகவே மொழி வளர வளரப் புதிய இலக் கணங்கள் தேவை என்பது தெளிவு.

## தமிழ் மொழியும் தமிழ் இலக்கணங்களும்

தமிழ் மொழியில் மிகப் பழமையானதாக நமக்குக் கிடைக்கின்ற நூல் தொல்காப்பியம். இந்த நூல் ஒரு இலக்கண நூல் என்பதை நாம் எல்லோரும் அறிவோம். இந்த இலக்கண நூலில் அதற்கு முன்பு இருந்த இலக்கண இலக்கியங்களைப் பற்றிய பொதுக் குறிப்புகளை நாம் காண்கிறோம். அத்தகைய குறிப்புகள் நமக்கு அங்கே இல் லாமல் போனால் கூட முதலில் கிடைப்பது இலக்கணம் என்ற அந்தச் செய்தியில் இருந்து அதற்கு முன்பு ஏராளமான இலக்கி யங்கள் இருந்திருக்கவேண்டும் என்ற ஒரு உண்மையை நாம் எளிதாக உணர்ந்து கொள்ள முடியும்.

தொல்காப்பியம் என்ற அந்தப் பழம்பெரும் இலக்கணம் தோன்றிய காலச் சூழலைப் பற்றி நாம் ஓரளவுக்கு எண்ணிப் பார்ப்பது தேவையான ஒன்று என்று தோன்றுகிறது ஒரு சமுதாயத்தில் இலக்கணம் எப்பொழுது தோன்றுகிறது? மொழியைப் பற்றிய ஆராய்ச்சி எப்பொழுது நடக்கிறது? ஒரு சமுதாயம் வளமும் செழுமையும் பெற்றிருக் கும் போதுதான் பொதுவாக இலக்கணத் தைப் பற்றிய சிந்தனையே எழுகிறது. மொழியைப் பற்றிய ஆராய்ச்சியும் அப் பொழுதுதான் தோன்றுகிறது. மேலும் வேற்று மொழியும் தொடர்பும் வேற்றுப் பண்பாட்டின் தொடர்பும் ஏற்படும் பொழுது நமது மொழியைப் பற்றியும் நமது பண் பாட்டைப் பற்றிய சிந்தித்து வரையறை செய்ய வேண்டிய தேவை ஏற்படுகிறது. அப்படிப்பட்ட ஒரு தேவையின் காரண மாகத்தான் தொல்காப்பியம் தோன்றியிருக்க வேண்டும் என்று நினைக்கப் பல்வேறு அகப் புறச் சான்றுகள் நமக்குக் கிடைக்கின்றன.

மிக விரிந்த நோக்கில் மிகப் பெரிய அளவில் இலக்கணத்தைப் படைத்துள்ள தொல்காப் பியர் பரந்த இலக்கியப் புலமையும் சிறந்த மொழிப் புலமையும் உயர்ந்த உலகியல் நோக்கும் உடையவராகத் தோன்றுகிறார். அவருக்கு இருக்கிற பரந்த இலக்கியப் புல மையைப் பொருளதிகாரம் நமக்கு உணர்த்து கிறது. விரிந்த மொழிப் புலமையை எழுத்ததிகாரமும் சொல்லதிகாரமும் மிக நன்றாகத் தெளிவுப்படுத்துகின்றன. அவ ருக்கு இருந்த உயர்ந்த உலகியல் நோக்கை ஆங்காங்கே உள்ள சில நூற்பாக்கள் நமக்கு உணர்த்துகின்றன. வடமொழிச் சொற் களைத் தமிழில் கையாளும்போது எப்படி கை யாள வேண்டும் என்பதைப் பற்றி அவர் விதி வகுத்துச் சொல்லுகிறார். மொழி பெயர்ப்பு நூல்களைப் பற்றி அவர் எண்ணிப் பார்த்துப் பொருளதிகாரத்தில் அதைப்பற்றிப் பேசுகிறார். ஏறத்தாழ இரண்டாயிரத்தை நூறு ஆண்டுகளுக்கு. முன்பு மொழி பெயர்ப் பைப்பற்றிச் சிந்தித்து மொழிபெயர்ப்பு நூல் களுக்கு இலக்கணத்தில் ஒரு சிறப்பான இடம் கொடுத்தது நாம் மிகஆழமாக ஊன்றி நோக்கிப் பாராட்ட வேண்டிய ஒன்று என்பதை இங்கே குறிப்பிட வேண்டும். இவை எல்லாவற்றுக்கும் மேலாகத் தொல்காப்பிய ருக்கு இருந்த அறிவியல் மனப்பான்மை நாம் வியந்து போற்றத்தக்கதாக உள்ளது. தொல்காப்பிய இலக்கணம் முழுமையும் மிகச் சிறந்த அறிவியல் நோக்கில் அமைக்கப் பட்ட நூல் என்பதை நாம் ஆய்வு நோக்கில் பார்க்கும் போது மிக எளிதாகவே உணர்ந்து கொள்ளலாம்.

தொல்காப்பியருக்குப் பின் தமிழில் பல்வேறு

இலக்கணப் புலவர்கள் வாழ்ந்து இருக்கிறார்கள். முப்பதுக்கு மேற்பட்ட இலக்கண நூல்கள் தமிழில் தோன்றியிருக்கின்றன. இருந்தாலும் தொல்காப்பியரின் இலக்கணக் கோட்பாடுகளை உணர்ந்துகொண்டு அதே நெறியில் வளர்ச்சி நோக்கில் விரிவாக இலக்கணத்தைப் படைத்தவர் என்று நம்மால் யாரையும் குறிப்பிட முடியாமல் போகிறது. அவருக்கு அடுத்தாற் போல மிகப் பெரிய அளவுக்கு இலக்கண உலகில் செல்வாக்கு பெற்றவர் பவணந்தியார். நன்னூல் அவர் வகுத்துள்ள விதிகளைத் தான் இன்று வரை நாம் மாணவர்களுக்குக் கற்பித்து வருகிறோம். பல இடங்களில் நன்னூல் நூற்பாக்களைத்தான் நாம் மேற்கோள் காட்டி வருகிறோம். நன்னூலாரே கூடப்பல இடங்களில் தொல்காப்பிய விதிகளை அப்படியே எடுத்து முன்னோர் மொழியைப் போற்றுகின்ற பாங்கில் தமது நூலில் விதிகளாகச் சேர்த்துக் கொண்டிருக்கிறார். நன்னூலார் வாழ்ந்த காலத்தில் மொழியில் ஏற்பட்ட மாற்றம் அன்றைக்கு ஒரு இலக்கணத்தின் தேவையை வற்புறுத்தியிருக்கிறது. அதனால் தான் தொல்காபபியத்தைப்பெரிதும் போற்றுகின்ற நன்னூலார் இன்னொரு இலக்கண நூலைப் படைத்து வழங்கியிருக்கிறார். இலக்கண உலகில் மூல நூல் ஆசிரியர்கள் எப்பொழுதும் பழையனவற்றைக் கழிப்பதற்கும் புதியனவற்றை ஏற்பதற்கும் தயங்கியதே இல்லை. நன்னூலார் இதை ஒரு நூற்பாவிலேயே

> ''பழையன கழிதலும் புதியன புகுதலும்
> வழுவல கால வகையி னானே''

என்று தெளிவாகக் குறிப்பிடுகிறார்.

### தொல்காப்பியமும் நன்னூலும்

தொல்காப்பியர் விதித்துள்ள சில விதிகளை நன்னூலார் விலக்கியிருக்கிறார். தொல்காப்பியர் விதிக்காத சில விதிகளை நன்னூலார் சேர்த்திருக்கிறார் இதற்குக் காரணம் அவர் காலத்தில் ஏற்பட்ட மொழி மாற்றந்தான். இலக்கியம் கண்டு அதற்கு இலக்கணம் விளம்ப விரும்பிய நன்னூலார் தொல்காப்பியரிடமிருந்து காரணமில்லாமல் மாறுபடவில்லை. தம் கால மொழிக்கு ஏற்றபடி இலக்கணத்தைப் படைத்திருக்கிறார். தொல்காப்பியர் காலத்தில் சகரஅகரம் அதாவது 'ச' என்ற எழுத்து மொழிக்கு முதலில் வராது. சங்கம், சரி, சட்டி முதலான சொற்கள் தொல்காப்பியர் காலத்தில் தமிழ்மொழியில் இருந்ததில்லை. இருந்ததாகச் சான்று காட்டி நம்மால் நிறுவ முடியாது. நன்னூலார் காலத்தில் அப்படிப் பட்ட சொற்கள் வழக்கிற்கு வந்து விடுகின்றன. ஆகவே மொழி முதலாகச் சகர அகரம் அதாவது 'ச' என்ற எழுத்து வரும் என்றே நன்னூலார் ஏற்றுக்கொள்கிறார்.

கால இடைநிலைகளைப் பொறுத்தவரையில் நன்னூலார் காலத்தில் இறந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் ஆகிய மூன்று காலங்களும் மொழியில் சரியாக முழுமையாக இடம் பெற்று விடுகின்றன. அவற்றுக்கு இலக்கணத் தகுதி ஏற்பட்டுவிடுகிறது. ஆகவே இறந்த கால இடைநிலைகள் இன்னின்னவை, நிகழ் கால இடைநிலைகள் இன்னின்னவை, எதிர் கால இடைநிலைகள் இன்னனின்னவை என்று தெளிவாக நன்னூலார் குறிப்பிட்டுச் சொல்கிறார். தொல்காப்பியர் அப்படிக் குறிப்பிடவில்லை. மடிந்து போன பழமைகளை நீக்கவும் புதிதாக எழுந்து வளர்ந்துள்ள புதுமைகளை ஏற்கவும் நன்னூலார் தயங்கவில்லை: தம்முடைய இலக்கணத்தில் அந்த நெறிமுறையை மிகத் தெளிவாக நன்னூலார் பின்பற்றியிருக்கிறார்.

### சமுதாயமும் மொழியும்

சமுதாய வளர்ச்சிக்கேற்றபடி மொழியிலும் வளர்ச்சியும் மாற்றமும் ஏற்படும். இது தவிர்க்க முடியாத நியதி. சமுதாய வரலாற்றில் நாம் காணும் பல செய்திகள் மொழி வரலாற்றில் காணும் சிக்கல்களுக்கு விடை புகல்வனவாக அமைந்துள்ளன. எடுத்துக் காட்டாக நன்னூலார் காலத்தில் வடமொழிச் சொற்களைத் தமிழில் எப்படி ஆள வேண்டும் என்பதற்கு விரிவாக விதிகளை வகுத்திருக்கிறார்: இதற்குக் காரணம் அவர் காலத்தில் வடமொழிச் சொற்கள் ஏராளமாகத் தமிழில் புகுந்துவிட்டன. அப்படி புகும்போது வரன் முறையில்லாமல் வடமொழிச் சொற்களை எழுதியவர்களும் உண்டு, தமிழ் மொழி அமைப்புக்கு ஏற்ப வரன்முறைப் படுத்தி எழுதியவர்களும் உண்டு. அந்த நிலையில் நன்னூலார் தமிழ் மொழி அமைப்புக்கு ஏற்ப வடமொழிச்சொற்களை முறைப்படுத்தி எழுத வேண்டும் என்பதை வலியுறுத்துபவராகக் காட்சியளிக்கிறார். அத்தகைய நிலைபாட்டை எடுத்துக் கொண்ட நன்னூலார் அவற்றுக்குத் தனியே தெளிவாக விதி வகுத்திருக்கிறார்.

சமுதாய வரலாற்றில் நாம் காணும் இன்றியமையாத மாற்றங்களுக்கு ஏற்றபடியே அந்த சமுதாயத்தில் தோன்றும் இலக்கியங்களும் அந்தச் சமுதாயத்தின் மொழி வளர்ச்சியும் அமைந்துவிடுகின்றன. அதாவது சமுதாய வரலாற்றுப்போக்கு இலக்கிய வளர்ச்சிப்

போக்கையும் மொழி வளர்ச்சிப் போக்கையும் மிகக் குறிப்பிடத்தக்க அளவுக்குக் கட்டுப் படுத்துகிறது. அதாவது சமுதாய வரலாற் றைப் புறக்கணித்துவிட்டு மொழி வளர்ச்சி யைப்பற்றியும் இலக்கிய வளர்ச்சியைப்பற்றி யும் நாம் தெளிவாக எந்த விதமான கருத்தையும் கூற முடியாது, இந்த உண் மையை மனதில்கொண்டு பார்க்கும்போது இருபதாம் நூற்றாண்டில் நாம் காணும் மொழியிலும் இலக்கியங்களிலும் மிகப்பெரிய அளவிற்கு வளர்ச்சியும் மாற்றங்களும் நமக் குத் தெளிவாகவே புலப்படுகின்றன. ஆனால், இந்த வளர்ச்சியையும் மாற்றத்தை யும் அளந்து தெளிவுபடுத்திக் காட்டுகின்ற அளவுக்கு இன்றைக்கு ஒரு இலக்கண நூல் இருக்கின்றதா என்பதுதான் இன்று நம் முன் நிற்கும் வினா.

**இன்றைய தமிழ்**

தமிழ் என்ற சொல் உள்ளபடியே இலக்கியத் தமிழ், பேச்சுத் தமிழ் ஆகிய இரண்டையும் தழுவிக்கொண்ட ஒரு சொல். நம்முடைய ஆராய்ச்சிக்கு நாம் இங்கே இலக்கியத் தமிழை மட்டும் எடுத்துக்கொண்டு பேசு கிறோம். இந்த இலக்கியத் தமிழை நாம் செந்தமிழ் என்ற சொல்லால் குறிப்பிடு வோம். தொல்காப்பியர் எழுதிய தமிழையும் மணிவாசகர் எழுதிய தமிழையும் பிற்கால ஔவையார் எழுதிய தமிழையும் இன்று நாம் எழுதுகின்ற தமிழையும் பொதுவாகத் தமிழ் என்றுதான் நாம் குறிப்பிடுகிறோம் என்றாலும் உள்ள படியே இவையெல்லாம் எந்தவித வேற்றுமையும் இல்லாத நிலையில் ஒன்று என்று கொள்ளத் தக்கவைதானா? இதைச் சற்று அமைதியாகவும் ஆழமாகவும் நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

ஒரு தனி மனிதனுடைய வளர்ச்சியையும் வரலாற்றையும் எடுத்துக் கொண்டால் கூட ஒரு மனிதன் ஆறு மாதக் குழந்தையாக இருந்தபொழுது இருந்த வடிவத்திற்கும் இயக்கங்களுக்கும் அவனே இருபது வயது இளைஞனாக வளர்ந்துள்ள பொழுது எய்தி யுள்ள வடிவத்திற்கும் வளர்த்துக் கொண்ட இயக்கங்களுக்கும் இடையே ஒற்றுமையும் உண்டு வேற்றுமையும் உண்டு. அதே மனிதன் தொண்ணூறு வயதை எட்டிய நிலை யில் அவனிடம் நாம் காணும் வடிவத்திற்கும் அவனுடைய இயக்கங்களுக்கும் முன்னைய நிலையிலிருந்து வடிவத்துக்கும் இயக்கங் களுக்கும் இடையே ஒற்றுமையும் உண்டு வேற்றுமையும் உண்டு: ஒற்றுமை அவனை நாம் அடையாளம் காண்பதற்கு உதவு கிறது. ஆனால் அவன் கால ஓட்டத்தில் எய்தியுள்ள வேற்றுமைகளை வளர்ச்சியை மாற்றங்களை நாம் மறுத்துவிட முடியாது. அதைப் போலத்தான் சங்கத் தமிழும் இன்றைய தமிழும் தமிழ்தான் என்று உணர்ந்துகொள்ளத்தக்க அளவுக்கு— அடை யாளம் காணுகிற அளவுக்கு ஒற்றுமையும் உண்டு; சங்கத் தமிழ் வேறு, இன்றைய தமிழ் வேறு என்று கண்டுகொள்கின்ற அளவுக்கு அவற்றிடை வேற்றுமையும் உண்டு. சங்கத் தமிழிலிருந்து இன்றைய தமிழ் பெற்றுள்ள வளர்ச்சியை இந்தத் தமிழில் காணுகின்ற மாற்றங்களை நாம் மறுத்துவிட முடியாது வளர்ச்சி நோக்கிய இந்த மாற்றங்களை நாம் உணர்ந்துகொள்ள வேண்டும். அவற்றுக்கு இலக்கணங்களில் இடம் கொடுக்க வேண்டும். அப்படி நாம் காணும் மாற்றங்களில் சிலவற்றையாவது இங்கே குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கும்.

**எழுத்து நிலையில் நாம் காணும் மாற்றம்**

இன்று உலக நாடுகளுடன் நாம் எய்தியுள்ள உறவுகளின் காரணமாகவும் பிற பண் பாட்டாளர்களிடம் நாம் கொண்டுள்ள உறவு களின் காரணமாகவும் பிற மொழியாளர் களுக்கும் நமக்கும் உள்ள தொடர்புகளின் காரணமாகவும் நாம் பிறமொழிகளின் பெயர்கள், பிற மொழியாளர்களின் பெயர் கள், பிற மொழியாளர்களுடைய ஊர்ப் பெயர்கள் முதலானவற்றைத் தமிழில் எழுத நேர்கிறது. அப்படி எழுத நேரும்பொழுதெல் லாம் நம்முடைய மொழியில் பழைய எழுத் திலக்கணம் சற்று மாறுபடுகின்றன. அதா வது இன்னின்ன எழுத்துக்கள்தான் மொழி முதலில் வரும், இன்னின்ன எழுத்துக்கள் தான் மொழியின் இடையில் வரும், இன் னின்ன எழுத்துகள் தான் மொழியின் இறுதி யில் வரும் என்று நன்னூலார் விதித்துள்ள விதிமுறைகள் இன்று அப்படியே இல்லை; மாறியிருக்கின்றன. இவ்வாறே தொல் காப்பியர் அவர் காலத்தில் இன்னின்ன எழுத்துகள் முதலில் வரும் இன்னின்ன எழுத்துகள் இடையில் வரும் இன்னின்ன எழுத்துகள் இறுதியில் வரும் என்று விதித்த விதிமுறைகள் நன்னூலார் காலத்தில் மாறி விட்டன. அதே போல இக்காலத் தமிழில் நன்னூலாரும் தொல்காப்பியரும் விதித்த அந்த விதிகள் மாறியுள்ளன. ரயில், ராஜீவ். லால்பகதூர், லண்டன், மாஸ்கோ, லெனின், ஷா, அலெக்ஸாண்டர் இப்படிப் பட்ட பெயர்களை நாம் தமிழில் எழுதும்

போது பழைய இலக்கண விதிமுறைகள் மாறிப் போகின்றன.

**சொல்லமைப்பு நிலையில் மாற்றங்கள்**

சொல்லிக்கணத்தைப் பொறுத்தவரையில் நாம் எந்த மாற்றமும் நிகழவில்லையென்று நினைத்துக் கொண்டிருக்கிறோமே தவிர அங்கும் மாற்றங்களைக் காண்கிறோம். நன்னூலார் காலத்திலும் தொல்காப்பியர் காலத்திலும் ஐந்து பால்கள் தமிழில் உள்ளன என்று குறிப்பிட்டிருந்தனர். ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின் பால் ஆகிய இந்த ஐந்து பால்களைப் பற்றிய குறிப்பையும் தொல்காப்பியத்திலும் நன்னூலிலும் காண்கிறோம். ஆனால் இன்றைய தமிழில் ஆறாவதாக ஒரு பால் தோன்றிவிட்டது. 'அவர் இங்கு வந்தார்' என்றால் தொல்காப்பியர் காலத்தில் இது பலர்பாலுக்குரிய தொடர். அவர் என்பது பலர்பால். சில வேளைகளில் சிறப்புக் கருதி அதை ஒருமைக்குப் பயன்படுத்தியிருக்கலாம் என்றாலும்அவர் என்பது பலர்பாலுக்குரிய சொல். நன்னூலார் காலத்திலும் கூட அவர் என்பது பலர்பாலுக்குப் பயன்பட்டிருக்கிறது. ஆனால் இன்றைக்கு அவர் என்பது பலர்பாலுக்குப் பயன்பட முடியாது. இன்று பலர்பாலுக்குரியதாக விளங்குவது அவர்கள் என்பது. இதற்கு ஏற்ற வினை வந்தார்கள் என்பது. "அவர்கள் இங்கு வந்தார்கள் என்று சொல்லும்பொழுது தான் அவர்கள் என்பதும் வந்தார்கள் என்பதும் பலர்பால் என்று கொள்ளத்தகும் அவர் இங்கு வந்தார் என்று சொன்னால் அது ஒருமைதான். இதற்கு நாம் ஒரு பெயரிட வேண்டும். இப்போதைக்கு இதற்கு நாம் உயர்பால் என்று பெயரிடலாம். ஆகவே இன்றைய தமிழில் ஆண் பால், பெண் பால், உயர் பால், பலர் பால், ஒன்றன் பால், பலவின் பால் என்று பால்களை ஆறுவகைப் படுத்தலாம்

வேற்றுமை இலக்கணத்தைப் பொறுத்தவரையில் ஐந்தாம் வேற்றுமை உருபாக நன்னூலாரும் தொல்காப்பியரும் சுட்டிய இன் என்ற உருபு இன்றைய தமிழில் மறைந்தே போய்விட்டது. காலவோட்டத்தில் சமுதாயத்தில் ஏற்பட்ட அனுபவ வளர்ச்சிக்கும் கருத்து வளர்ச்சிக்கும் ஏனைய சூழல்களுக்கும் ஏற்ப வேற்றுமைக் கோட்பாடுகள் வளர்ந்தன. இதன் விளைவாகச் சொல்லுருபுகளின் எண்ணிக்கை இன்றைய தமிழில் பெருகின. 'உங்களைக் குறித்துப் பேசினார்' என்ற தொடரில் உள்ள குறிதது என்பதும் 'உங்களைப் பற்றி அவர் வினவினார்' என்ற தொடரில் உள்ளபற்றி என்பதும்' உங்களைத் தவிர எல்லாரும் வந்தார்கள்' என்பதில் உள்ள தவிரஎன்பதும் வேற்றுமைக் கருத்தை விளக்கவந்த சொல்லுருபுகளாக கொள்ளத் தக்கன. இப்படிப்பட்ட சொல்லுருபுகள் இன்றைய தமிழில்பெருகி வளர்ந்துவிட்டன.

வினைச்சொல் அமைப்பிலும் மிகுந்த வளர்ச்சியை இக்காலத் தமிழில் நாம் காண்கிறோம். ஒரே வினை நிகழ்ச்சியைப் பல்வேறு வகையில் தேவைக்கு ஏற்றபடி வெளிப்படுத்தி உணர்த்துகின்ற பாங்கு இன்றைய தமிழில் மிக நல்ல அளவுக்கு வளர்ந்திருக்கிறது பழந்தமிழில் வா என்ற வினை வந்தான், வருகிறான் வருவான் ஆகிய மூன்று காலங்களுக்கு கூடப் பயன்படவில்லை. வந்தான், வரும் என இறப்பு எதிர்வு ஆகிய இரண்டு காலங்களில் மட்டுமே பயன்பட்டது. இடைக்காலத் தமிழில் வந்தான்,வருகிறான்; வருவான் என்று அந்த வினைக்கு மூன்று காலங்கள் ஏற்பட்டன. ஆனால் இன்றைய் தமிழில் பல்வேறு காலக் குறிப்பையும் நாம் வினைச் சொற்களில் காண்கிறோம். வந்தான், வருகிறான் வருவான் முதலான வினைச் சொற்களோடு வந்துவிட்டான். வந்துதொலைத்தான் வந்துபார்த்தான். வந்துகொண்டிருக்கிறான், வரப்பார்த்தான். வரமுடியும், வரலாம்,வரவேண்டும் இப்படிப்பட்ட பல்வேறு சொல்வளர்ச்சியை நாம் இன்றையதமிழில் காண்கிறோம்.இப்படி ஒரு சொல் பல்வேறு சொற்களாக விகுதிகளின் துணைகொண்டு பொருள் நுட்பத்தோடு பெருகியுள்ள பெருக்கத்தினை இன்றைய தமிழில் நாம் காணுகிறோம். இத்தகைய வளர்ச்சியினை இலக்கணப் புலவர்கள் ஆராய்ந்து முறைப்படுத்தி அவற்றுக்கு விதி வகுக்க வேண்டும் அவற்றுக்கு இலக்கணங்களில் சரியான இடம் அளிக்க வேண்டும். அப்போதுதான் மொழியில் வளர்ந்துள்ள வளர்ச்சிக் கூறுகள் நிலைபேறெய்தி மேலும் மொழியின் வளர்ச்சிக்கு வழி ஏற்படும்.

**சொல் தொகுதியில் மாற்றம்**

காலப் போக்கில் மொழியில் முற்காலத்தில் வழங்கப்பட்ட சொற்கள் சில மறைந்து போய் விடவும்கூடும். பிற்காலத்தில் புதிய சொற்கள் உருவாகியிருக்கவும் கூடும். இந்த நிலையையும் தமிழில் நாம் தெளிவாகக் காண்கிறோம். பழந்தமிழ்ச் சொற்களாகக் கொள்ளத்தக்க சில சொற்கள், அதாவது பஞிலம், குணில் போன்ற சொற்கள் இக் காலத் தமிழில் வழக்கிறந்து போய்விட்டன. இவை மறைந்துவிட்ட சொற்கள் என்றே கொள்ளலாம். இன்றைய தமிழில் இணை

யம் ஒன்றியம், பல்கலைக் கழகம் முதலான சொற்கள் புதிதாகத் தோன்றியுள்ளன. இப்படிச் சொல் தொகுதியைப் பொறுத்த வரையில் மொழி வரலாற்றில் பழைய சொற்கள் மறைந்துவிடவும் கூடும்; புதிய சொற்கள் தோன்றவும் கூடும்: இத்தகைய மாற்றங்களையும் நாம் கருத்தில் கொள்ள வேண்டும். சொல் தொகுதியில் ஏற்படும் மாற்றத்தோடு ஒரு சொல்லுக்குரிய பொருளிலும் கூடக் காலப்போக்கில் மாற்றங்கள் ஏற்படும். நம் எல்லோருக்கும் தெரிந்த சொல் நாற்றம் என்பது. பழந்தமிழில் இதற்கு நறுமணம் என்று பொருள் இருந்திருக்கிறது. இன்றைய தமிழில் நாற்றம் என்றால் சகிக்க முடியாத தீயமணம் என்ற பொருள் ஏற்பட்டு விட்டது. இப்படிச் சொல் தொகுதியில் ஏற்படுகின்ற மாற்றத்தையும் சொற்பொருளில் ஏற்படுகின்ற மாற்றத்தையும் தெளிவாக வரையறுத்துக் குறிக்க அகராதிகள் உதவ வேண்டும்.

### தொடர் நிலையில் ஏற்படும் மாற்றம்

எழுத்து நிலையிலும் சொல் நிலையிலும் சொல் தொகுதி நிலையிலும் சொற்பொருள் நிலையிலும் ஏற்படுகின்ற மாற்றங்களைப் பற்றியெல்லாம் இங்கே குறிப்பிட்டோம். இதைப் போலவே தொடர் நிலையிலும் மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அவன் வரும். அவள் வரும் முதலான தொடர்கள் பழந்தமிழில் வழுவற்ற தொடர்கள். ஏற்கத் தக்க தொடர்கள். ஆனால் இன்றைய தமிழில் அவன் வரும், அவள் வரும் என்பன வெல்லாம் பிழையான தொடர்கள். அவற்றை நாம் அவன் வருவான். அவள் வருவாள் என்று திருத்துவோம்.

வேறு, இல்லை, உண்டு ஆகிய வினைகள் ஐம்பாலுக்கும் மூவிடங்களுக்கும் உரிய பொது வினைகளாகக் கொள்ளப்பட்டன. அதாவது அவன் வேறு, அவள் வேறு, அவர் வேறு. அது வேறு, அவை வேறு, நான் வேறு, நீ வேறு முதலான தொடர்களில் படர்க்கையில் உள்ள ஐம்பால் எழுவாய்கட்கும் தன்மை எழுவாய்க்கும் முன்னிலை எழுவாய்க்கும் 'வேறு' என்பதே திரிபில்லாத நிலையில் பயனிலையாகி வந்தது. அதாவது வேறு என்ற சொல் எந்த வகையிலும் வடிவ மாற்றம் பெறவில்லை. ஆகவே வேறு என்பதை ஐம்பாலுக்கும் மூவிடத்துக்கும் பொதுவான வினை என்று நம் இலக்கண நூலகள் குறிப்பிடுகின்றன. இதைப் போலவே இல்லை, உண்டு முதலான வினைகளும் ஐம்பால், மூவிடப் பொது வினைகள். இந்த வினைகளைப் போலவே இக்காலத் தமிழில் அல்ல என்பதும் ஐம்பால் மூவிடப் பொதுவினை என்று கொள்ளத்தக்க நிலையை எட்டிவிட்டது. இதைச் சரியாக உணர்ந்துகொண்டால்தான் நாம் மாணவர்களுக்குக் கற்பிக்கும் பொழுதும் மொழியைப் பயன்படுத்தும் பொழுதும் பிழையற அல்ல என்ற சொல்லைப் பயன்படுத்த முடியும். இல்லையானால் வலிந்து, அல்ல என்பதை அல்லன், அல்லள், அல்லர், அன்று, அல்ல முதலான வடிவ மாற்றங்களுக்கு உள்ளாக்கி நாம் அல்லற்பட நேரிடும். நான் அல்லேன். நீ அல்லை, அவன் அல்லன், அவர் அல்லர் அது அன்று, அவை அல்ல என்றெல்லாம் தொடர்கள் அமையவேண்டும் என்று வற்புறுத்துபவர்கள் அவர்கள் என்ற எழுவாய்க்கு அல்ல என்பதைப் பயனிலையாக்கும் போது அவர்கள் அல்லர்கள் என்றல்லவா கூற வேண்டும். ஆனால் அப்படிச்சொல்ல இன்றைய மொழிகூட இடங்கொடுக்காது. அவர்கள் அல்லர்கள் என்பதுமொழியில் வாழ்வு பெறாத தொடர், ஏற்க இயலாத தொடர். ஆகவே அல்ல என்பதைப் பொது வினையாகவே நாம் கொள்ளவேண்டும்.

நாம் முன்பே குறிப்பிட்டது போலத் தமிழில் உள்ள ஆறு பால்களுக்கும் மூன்று இடங்களுக்கும் இது பொது வினையாக அமைந்துள்ளது.

செய்வினை, செயப்பாட்டு வினைத் தொடரைப் பற்றி நாம் அடிக்கடி பேசி வருகிறோம். தொல்காப்பிய முதல் நூற்பாவிலேயே 'எழுத்தெனப் படுப' என்று செயப்பாட்டு வினைத் தொடர் வருவதை நாம் காணுகிறோம். 'வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும் தீமை யிலாத சொலல்'' என்ற திருக்குறளிலும் செயப்பாட்டு வினைத் தொடரைப் பார்க்கிறோம். இப்படித் தொல்காப்பியர் காலம் முதல் இன்று வரையில் தமிழில் செயப்பாட்டு வினைத் தொடர்களை நாம் தாராளமாகத் தேவைக்கு ஏற்ப பயன்படுத்தித்தான் வந்திருக்கிறோம். இருந்தாலும் ஏதோ சில காரணங்களால் மேலை நாட்டு ஆசிரியர்கள் செயப்பாட்டு வினை ஆங்கிலச் செல்வாக்கால் இங்கே வந்தது என்று சொல்ல, அதை ஏற்றுக் கொண்டு அதை வலுப்படுத்துவது போலத் தமிழக ஆராய்ச்சியாளர் சிலரும் கருத்துரை வழங்கியிருக்கின்றனர். எப்படி இருப்பினும் தொடர் இலக்கணத்தைப் பொறுத்தவரை தெளிவான, நிறைவான தொடரிலக்கணம் தமிழுக்கு உருவாகவில்லை. அண்மைக்காலத்தில்தான் தொடரி

லக்கணத்தைப் பற்றிய விரிவான சிந்தனை வளர்ந்திருக்கிறது. செய்வினைத் தொடர் அமைப்பையும் செயப்பாட்டு வினைத்தொடர் அமைப்பையும் தெளிவுபடுத்துவதாகத் தொல் காப்பியத்திலும் நம்மால் ஒரு விதியைக் காண முடியவில்லை. நன்னூலிலும் அப்படிப் பட்ட ஒரு விதியைக் காண முடியவில்லை. ஆனால் இன்றைய தமிழில் செய்வினைத் தொடரும் செயப்பாட்டு வினைத் தொடரும் தேவைக்கு ஏற்ப மிகச் செம்மையான முறை யில் பயன்பட்டு வருகின்றன. இவற்றுக் கெல்லாம் நாம் இனிஎழுதும் இலக்கணத்தில் தான் தெளிவான வரையறையையும் விதி களையும் வகுத்துக் கூற வேண்டும்.

### நிறுத்தற் குறியீடுகள்

கடந்த நூற்றாண்டிலிருந்தே ஏராளமான நூல் கள் அச்சேறத் தொடங்கி விட்டன: நூல்கள் அச்சேற அச்சேற எழுதுபொருட்கள் மாற மாற நிறுத்தற் குறியீடுகளின் பயன்பாடும் வளர்ந்து வந்திருக்கிறது. பனையோலையில் எழுதிய காலத்தில் நிறுத்தற் குறியீடுகளை நாம் அமைத்துக் கொள்ளவில்லை. இன்றைய சூழலில் நிறுத்தற் குறியீடுகளைப் பற்றிய அறிவு கட்டாயத் தேவையாகி விட்டது.

### புதிய இலக்கணத்தின் தேவை

இன்றைய தமிழுக்குப் புதிய இலக்கணம் தேவை. தொல்காப்பியர் காலத்திற்கும் நன்னூலார் காலத்திற்கும் 1500 ஆண்டு களுக்குக் குறையாமல் இடைவெளி இருந் திருக்கிறது. நன்னூலார் காலத்திற்குப் பிறகு ஏறக்குறைய ஆயிரம் ஆண்டுகள் கடந்து விட்டன என்றே சொல்லலாம். இந்த ஆயிரம் ஆண்டு இடைவெளியில் தமிழகத்தில் தமிழ்ச் சமுதாயத்தில் மிகப் பல மாற்றங்கள் நடந்து விட்டன. தொல்காப்பியர் காலச் சமுதாயத்திற்கும் நன்னூலார் காலச் சமுதாயத்திற்கும் இடையே இருந்த மாறுதல் களைவிட நன்னூலார் காலச் சமுதாயத்துக் கும் இன்றைய சமுதாயத்துக்கும் இடையே ஏற்பட்டுள்ள மாறுதல்கள் மிகுதிஎன்றே கூற வேண்டும்.

உலகச் சமுதாய வரலாற்றிலேயே பதினா றாம் நூற்றாண்டுக்குப் பிறகு ஏற்பட்ட மாற் றங்கள் மிகப்பல. அந்த மாற்றங்கள் எல்லா வற்றுக்கும் தமிழகம் விதிவிலக்காகிவிட முடி யாது. ஆகவே இன்றைய சமுதாயத்திற்குத் தேவையான இலக்கணம் படைக்கப்பட வேண்டுமென்பது உறுதிப்படுகிறது. சமுதா யத்தில் ஏற்படுகின்ற மாற்றங்களுக்கு ஏற்ப அந்தச் சமுதாயத்தில் வழங்கி வரும் மொழி யிலும் மாற்றங்கள் ஏற்படும் என்பது மறுக்க முடியாத உண்மை.இதனை நாம் முன்னைய பகுதியில் விளக்கிக் காட்டினோம்.

மீண்டும் இக்காலத் தமிழோடு பொருத்தித் தெளிவுபடச் சில எடுத்துக்காட்டுகளை இங்கே தருவது பொருத்தம் என்று நினைக் கிறேன். தொல்காப்பியர் காலத்தில் யகர உயிர் மெய்களில் யகர ஆகார உயிர் மெய் மட்டுமே மொழிக்கு முதலாக வந்திருக்கிறது. அதாவது யாண்டு, யாமை, யாது, யானை, யாப்பு, போன்ற சொற்கள் மட்டுமே அவர் காலத்தில் தமிழ் மொழியில் இருந்திருக் கின்றன. அதன் பிறகு யமன்; யவனர், யூகம்,யூபம்,முதலான பல சொற்கள் தமிழில் தோன்றின. இவற்றையெல்லாம் உளப்படுத் திக் கொள்ளுகின்ற முறையில் நன்னூலார் அதற்குரிய விதியை மாற்றியமைத்திருக் கிறார். தொல்காப்பியர் காலத்தில் 'சின்' என்ற விகுதியைப் பெற்ற சொற்கள் பெரு வழக்காகவே இருந்திருக்கின்றன என்று கருதலாம். என்றிசின், வந்திசின், கண்டிசின் முதலான சொற்கள் அவர் காலத்தில் எளிய சொற்களாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருக் கின்றன.ஆனால் பிற்காலத்தில் அத்தகை யை சொற்கள் அருகிய வழக்காக அல்லது மறைந்த வழக்காக ஆகிவிட்டன. இவ்வாறே எழுத்து, சொல், சொற்பொருள், சொற் றொடர் முதலான நிலைகளில் தொல்காப் பியர் காலத்திலிருந்து நன்னூலார் காலத்தில் பல்வேறு மாற்றங்கள் மொழியில் ஏற்பட்டு விட்டன. இதன் காரணமாகத்தான் நன்னூ லார் காலத்தில் ஒரு புதிய இலக்கணம் தேவைப்பட்டது; புதிய இலக்கணமும் எழுந்தது. அதைப் போலவே இன்றைய தமிழ் வழக்கில் மொழி வளர்ச்சியில் பல்வேறு கூறுகள் தோன்றிவிட்டன என்பதை நாம் உணர்கிறோம். பல பழைய கூறுகள் மறைந்து விட்டன என்பதையும் உணர் கிறோம். இவற்றையெல்லாம் கருதித்தான் நன்னூலார் ''பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையினானே'' என்று எடுத்துக் கூறியிருக்கிறார். இன்றைய தமிழில் எடுத்துக்காட்டுக்காகச் சிலவற்றை இங்கே நாம் குறிப்பிட விரும்புகிறோம். அல்ல என்ற சொல் இன்றைய தமிழில் ஐம்பால் மூவிடப் பொது வினையாகப் பயன் பட்டு வருகிறது என்பதை முன்பே தெளிவாக விளக்கினோம்.

யான், யாம், யாங்கள்' முதலான சொற்கள் இன்றைய தமிழில் அருகிய வழக்காக அல்லது மறைந்த வழக்காக ஆகிவிட்டது.

அநற்நப் பதிப்,நான், நாம். நாங்கள் முதலான சொற்களே வழக்கு வலிமை பெற்றனவாக விளங்குகின்றன. மக்கள்தொகை என்ற தொகையும் அறிவியல் தமிழ் என்ற தொகையும் பழைய இலக்கண வழக்குப்படிப் பார்த்தால் மக்கட்டொகை என்றும் அறிவியற்றமிழ் என்றும் மாறவேண்டும். ஆனால் இன்றைய வழக்கில் இவை மக்கள் தொகை என்றும் அறிவியல் தமிழ் என்றும் நிலைபெற்றுவிட்டன இவற்றை இன்றையவழக்கிற்கேற்ப நோக்காமல் பழைய சந்தி விதிகளைப் பொருத்தி, மக்கட்டொகை என்றும் அறிவியற்றமிழ் என்றும் சொல்லுவது பொருத்தமாகாது. இப்படி மொழி வளர்ச்சி நோக்கில் கருதிப்பார்த்து இன்றைய வழக்கிற்கு ஏற்ப விதிகளை அமைத்துத் தருவது இன்றைய இலக்கணப் புலவர்களின் இன்றியமையாத கடமையாகிறது. எழுத்துக்கும் சொல்லுக்கும் சொற்றொடருக்கும் இலக்கணம் சொல்வதோடு நிறுத்திக் கொள்ளாமல் அதற்கு மேல் பயன்பாட்டு நோக்கில் பார்த்து மொழியை எத்தகைய சூழலில் எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்பதைக் கருதிப் பார்த்தால் தான் இலக்கணம் நிறைவு பெற்றதாக ஆக முடியும். அப்படிப்பட்ட இலக்கணம் இனித்தான் தோன்ற வேண்டும். ஆகவே இன்றைய தமிழ் வளர்ச்சி நோக்கில் பார்க்கும் பொழுது இன்றைய மொழிக்குப் பயன்பாட்டு நோக்கில் முழுமையான ஒரு புதிய இலக்கணம் தேவைப்படுகிறது.

தமிழ் மொழியை இன்று நாம் வாழ்க்கையின் பல்வேறு நிலைகளில் பல்வேறு நோக்கில் பயன்படுத்தி வருகிறோம். மொழியில் உள்ள இலக்கணக் கூறுகளும் மிகக் குறிப்பிடத்தக்க அளவுக்கு வளர்ந்திருக்கின்றன. மொழியை நாம் பயன்படுத்தும் பயன்பாட்டு எல்லைகளும் மிகப்பெரிய அளவுக்கு விரிந்திருக்கின்றன. ஆகவே இந்த இரண்டு உண்மைகளையும் மனத்தில் கொண்டு அதாவது இலக்கணக் கூறுகளின் வளர்ச்சி நோக்கியும் பயன்பாட்டு எல்லைகளின் விரிவு நோக்கியும் நாம் ஒரு புதிய இலக்கணத்தை படைக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

### நிறைவுரை

இப்படிப் பல்வேறு இலக்கணங்கள் தமிழ் மொழியில் இன்றைக்கு நமக்குள்ள தேவைக்கு ஏற்றபடி வளர்ந்தால் தான் மொழியில் தவறில்லாமல் எழுத வேண்டும் என்ற ஒரு விருப்பம் எல்லோருக்கும் பெருகும். அப்போதுதான் தவறில்லாமல் எழுதுவோருடைய தொகையும் பெருகும். எளிதில் தவறுகளைத் திருத்திக் கொள்ள விரும்புவோர்க்கு நாம் தக்க நேரத்தில் வாய்ப்பளிக்க வேண்டும். அத்தகையபணிஇன்றைய அறிவுலகுக்கு —இன்றைய தமிழுலகுக்குமிக இன்றியமையாத ஒருபணியாக இருக்கிறது என்பதைத் தமிழுலகம் நன்றாக உணர்ந்துகொண்டு பயனுள்ள வகையில் செயலாற்ற வேண்டும்.

---

**வாழ்வதற்காக**

வாழ்த்துவது வாழ்வதற்குரிய வழிகளில் ஒன்று என்பதைப் பலர் உணர்வதில்லை. நல்லமனம் துளிர்விட்டு வளரும். வாழ்த்தும் மனத்தில் ஈரப்பசை இருந்துகொண்டே இருக்கும். அச் செழிப்பான நிலத்தில் வாழ்வு தழைத்தோங்கும். தமிழில் வைதல்கூட, வாழ்த்தாக விளங்கும். 'நீ நல்லா இருக்க', 'அட அரசாளுவாய்' என்று திட்டுவார்கள். நிரம்பச் சீற்றம் வந்து விட்டால் 'நீ நல்லா இருப்பியா?விளங்குவியா?என்று வினவுவார்களே தவிர கெட்டுப் போ என்ற வார்த்தை வாயில் வருவதில்லை.

நாட்டை, மொழியை நாம் வர்ழ்த்துவதெல்லாம் நாம் வாழ்வதற்காக, அவற்றை வாழ்த்தி வளர்ப்பதுகூட நாம் வாழ்வதற்கேயாம். அவையின்றி நாம் வாழமுடியுமா என்ன? இறைவனை ஏன் வாழ்த்துகிறோம்? நாம் வாழ்த்தித் தானா இறைவன் வாழவேண்டியிருக்கிறது? இல்லை. பிறகு ஏன் எனில், அதனால் நாம் பயனடைகிறோம்.

தமிழண்ணல்
புதிய நோக்கில் திருவாசகம்

---

# நத்தம் போற் கேடு—போல் பற்றிய ஓர் இலக்கண விளக்கம்

பேராசிரியர் கி. நாச்சிமுத்து
கேரளப் பல்கலைக்கழகம்
திருவனந்தபுரம்

நத்தம் போற் கேடும் உளதாகுஞ் சாக்காடும்
வித்தகர்க் கல்லால் அரிது.

என்ற புகழ் அதிகாரக் குறள் (235) சொல், தொடர் பொருள் நிலைகளில் பலவித விளக்கங்கள் பெற்றுத் திகழ்கிறது. இக் குறளிலுள்ள போல் என்ற சொல்லை உரையசை என்று கொண்டு பொருள் கூறுகிறார் பரிமேலழகர். மணக்குடவரும் பிறரும் உவம உருபாகக் கொண்டனர். இச்சொல்லை வினைஎச்சம் / வினையடை பெயரெச்ச வடிவில் அமையும் இரு பெயரொட்டு இணைப்பு இடைச் சொல் லாகக் கொள்ள இயலுமா என்பதை ஆய்ந்து பெயர்எச்ச வடிவில் அமையும் இணைப்புச் சொல்லாகக் கொள்ளலாம் என்று கூறுகிறது இக்கட்டுரை.

மணக்குடவர், பரிமேலழகர் உரைவிளக்கம்

''ஆக்கம் போலக் கேடும் உளதானாற் போலச் சாதலும் வல்லவற்கு அல்லது அரிது' என்று மணக்குடவர் உரைகண்டார். இங்கு போல என்பதனை உவம உருபாகக் கொண்டு ஆகும் என்பதற்கு மாறாக இதைப் பின்னும் கூட்டிப் பொருள் கொள்ளுவதை நோக்குக. இது பரிமேலழகர் (கீழேகாண்க) கொள்வதற்கு எதிரிடையானது. ஆனால் மணக்குடவர், பரிமேலழகர் இருவர் பொருட் போக்கும் அடிப்படையில் பெருமளவு ஒத்தவை.

பரிமேலழகர், ''புகழுடம்பிற்கு ஆக்கமாகும் கேடும், புகழுடம்புளதாகும் சாக்காடும், சதுரப்பாடு உடையார்க்கு அல்லது இல்லை'' என்று உரை கூறி, நந்து என்னும் தொழிற் பெயர் விகாரத்தால் நத்து என்றாய், பின் அம் என்னும் பகுதிப் பொருள் விகுதிபெற்று நத்தம் என்றாயிற்று. போல் என்பது ஈண்டு உரையசை. ஆகும் என்பதனை முன்னும் கூட்டி அரிது என்பதனை தனித்தனிக் கூட்டி உரைக்க. ஆக்கமாகும் கேடாவது புகழுடம்பு செல்வம் எய்தப் பூதவுடம்பு நல்கூர்தல். உளதாகும் சாக்காடாவது புகழுடம்பு நிற்கப் பூதவுடம்பு இறத்தல் நிலையாதனவற்றான் நிலையின எய்துவர் வித்தகர். ஆதலின் வித்தகர்க்கு அல்லால் அரிது என்றார். இவை இரண்டு பாட்டானும் புகழுடையார் எய்தும் மேன்மை கூறப்பட்டது என்று விளக்கமும் தந்தார்.

**பிறவிளக்கங்கள்.**

பரிதியார், காளிங்கர் நச்சினார்க்கினியர் (சிந்தாமணி 547) இன்னும் ந.மு. வேங்கடசாமி நாட்டார் (தமிழ்ப் பொழில் கட்டுரை) போன்றோர் நத்தம் என்பதற்குச் சங்கு எனப் பொருள் கொண்டு சங்கு போலச் சுற்றம் சூழவாழ்தல், புகழாளனுக்கே உண்டாகும் என்றும், சங்கு சுட்டாலும் வெண்மை, தருவதுபோல் ஈவார். புகழ் விளங் கவே அமைவர் என்றும் பொருள் விளக்கம் செய்வர், டி.கே.சிநம்பரநாத முதலியார் நத்தத்தின் அதாவது சங்கின் சாவால் அவ் வழியில் நற்பயனாகிய முத்து விளைகிறது; அதுபோல, வித்தகருக்கே தம் அழிவினாலும் நன்மை கைகூடவல்ல பெரும் பயன் விலையும் என்பர்ர மு.அருணாசலம், தமிழ் இலக்கிய வரலாறு 13 ஆம் நூற்றாண்டு பக் 83 (1920). கவிராச பண்டிதர் நத்தம் என்பதற்கு இரவு எனப் பொருள் கொண்டு கேடும் சக்காடும் வந்தாலும் இரவு போல உடலும் பொருளும் நிலையில்லை என்பதறிந்து வித்தகர் மகிழ்வர் என்பர்.

மணக்குடவர் ஆக்கம் போலக் கேடு என்று கொண்ட பொருள் சிறப்பற்றது, முன்பின் னாக்கிக் கேடுபோல் ஆக்கம் எனக் கொள்ளப் பின்னுள்ள தொடரமைப்பு இடந்தராது; எனவே இங்கு போல் என்பதை உவம உருபாகக் கொள்ள இயலாது; மணக்குடவர்

உரையும், பரிமேலழகர் உரையும் ஒன்றல்ல —முரண்பட்டவை என்று மறுக்கிற அப்பனை யங்கார், பரிமேலழகர் கொண்ட பொருளே சிறந்தது, நத்தம் —சங்கு எனப் பொருள் கொள்ள வாய்ப்பில்லை, நச்சினார்க் கினியரும் சிந்தாமணியில் அவ்வாறு கொண்டதாகக் கொள்ள இயலாது என் கிறார். (செந்தமிழ்-24:11,1926,செப் அக். பக் 433— 438). ஆனால் சிந்தாமணி உரையை ஊன்றி வாசிக்கும் போது நச்சினார்க்கினியர் நத்தம்-சங்கு என்றும் பொருள் கொண்டிருக்கலாம் என்று தோன்று கிறது. தமிழ்ப் பேரகராதியினர் அவ்வாறே எடுத்துக் கொண்டிருக்கின்றனர். ஆனால் இக்கட்டுரை அன்ன பிறவாராய்ச்சியுள் புகாது பரிமேலழகர் பொருள் வழி, போல் என்ற சொலலை இலக்கண நிலையில் ஆராய்கிற அளவில் நிற்பதால் அது தொடர் பானவற்றை மட்டும் இங்கு பார்ப்போம்.

**பரிமேலழகர் விளக்கத்தின் தொடரடிப்படை**

பரிமேலழகர் கொண்ட உரையை மீண்டும் பார்ப்போம்:

''புகழுடம்பிற்கு ஆக்கமாகும் கேடும், புகழுடம்பு உளதாகுஞ் சாக்காடும் சதுரப் பாடு உடையார்க்கு அல்லது இல்லை''.

இங்கு புகழுடம்பிற்கு என்றும் புகழுடம்பு என்றும் அதிகாரத்தால் பரிமேலழகர் கொண்டது மிகவும் பொருந்துவதே. கேடு ஆக்கமாகும் என்னும் போது செயற்கைப் பொருள் காரணம் பெற்றுவரவேண்டும் என்ற விதி (தொல். சொல் 19–22) உள்ளதால் புகழுடம்பு காரணமாக என்று பொருள் படும் புகழுடம்பிற்கு புகழுடம்பு என்ற தொடர் களை அதிகாரத்தால் வருவித்தது பரிமேலழ கரின் கூர்த்த அறிவைக்காட்டுகிறது.

அரிது என்று ஒருமை வினைமுற்று இருப்ப தால் இக்குறளை இரண்டு வாக்கியம் ஆக்க வேண்டியிருக்கிறது.

| | | | |
|---|---|---|---|
| 1 | நத்தம் போல் கேடுஅரிது | = | ஆக்கமாகும் கேடு அரிது |
| 2 | உளதாகுஞ் சாக்காடு அரிது | = | உளதாகுஞ் சாக்காடு அரிது |

இவ்வாறு முதல் வாக்கியத்திலுள்ளபோல் என்பதை உரையசையாக்கி நீக்கி இரண்டா வது வாக்கியத்திலுள்ள ஆகும் என்ற பெய ரெச்ச வடிவிலுள்ள இணைப்புச் சொல்லை (பண்புத் தொகை உருபு appositionla particle) கொண்டுள்ளார் பரிமேலழகர். இவ் வாறு கொள்வதிலும் தவறில்லை. இரண்டு வாக்கியத்திற்கும் தனித்தனிக் கூட்டும்படி பொதுவாக அரிது என்ற ஒரு வினை முடிபு அமைப்பது வள்ளுவரின் சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் கவிதை மொழி இயல்பு தான் (எடு. 567, 856). இங்கு ஆகும் என்ற பெயரெச்சம் பண்பை விளக்கும் இருபெய ரொட்டு இணைப்புச் (appositinal particle) சொல் போல் நிற்கிறது (எ. டு. ஆகிய 329). இதே பொருளில் போல என்பது நிற்காதா? ஏன் போல் என்பதை உரையசையாகக் கொண்டார் பரிமேலழகர் என்பன போன்ற கேள்விகள் எழுகின்றன.

**போல் உரையசை**

இதை ஒப்பில் போலி என்பர் தொல்காப்பியர் (சொல். 27), இதுவும் பொருள் குறித்து வருவதாலேயே ஒப்பில் போலியும் அப் பொருட்டாகும் எனத் தொல்காப்பியர் உரைத்ததாக சேனாவரையர், நச்சினார்க் கினியர் போன்றோர் கருதுவர். அழல் **போலும்** மாலைக்குத் தூதாகி ஆயன் குழல் போலும் கொல்லும் படை. — 1228 (குழல்) என்ற குறளில் (குழல் போலும் என்பதை) உரையசை என்பர் பரிமேலழகர். மேலும் நெருப்பழல் சேர்ந்தக்கால் நெய் **போல்வதூஉம்** (நாலடி: 124), வடுவென்ற கண்ணாய் வருந்தினை **போலும்** (நன்னூல் 441: மேற்கோள்). பொன்போல் புரிசை (திருக்கோவை 222) என்ற எடுத்துக்காட்டு களில் போல், மற்றும் அதன் திரிபுகள் உரையசைகளாகப் பொருள் சிறப்பின்றி அமைகின்றன.

**இன்றைய மொழியில் போல்: வினையடை பண்பை விளக்கம் இருபெயரொட்டு இணைப்புச் சொல**

இன்றைய மொழியில் போல் — போல 1) வினையெச்ச அமைப்பிலுள்ள ஆக — என்ற வினையடைக்கும் 2) பெயரெச்ச அமைப்பிலுள்ள இரு பெயரொட்டு இணைப்புச் சொல்லுக்கும் 3) வேற்றுமைத் தொடருக்கும் வழங்குவதைப் பார்க்கலாம்.

1. **வி. எச்சம் / வினையடையாக /**

   1. அ. கொஞ்சம் கொடு
      ஆ. கொஞ்சம் **போலக்** கொடு
      இ. கொஞ்சமாகக் கொடு
   2. அ. சௌகரியம் வா

ஆ. சௌகரியம் போல வா
இ. சௌகரியமாக வா

3. அ. அழகு செய்யலாம்
ஆ. அழகு போலச் செய்யலாம்
இ. அழகாகச் செய்யலாம்

4. அ. மணல் மலைகுவிந்தது
ஆ. மணல் மலை போலக் குவிந்தது
இ. மணல் மலை மலையாகக் குவிந்தது

மேலும் பார்க்க: (வேற்றுமைத்தொடர்)

5. அ விருப்பம் கொடு
ஆ. விருப்பம் போலக் கொடு
இ. விருப்பமாகக் கொடு
ஈ. விருப்பத்திற்குக் கொடு

2.. பெ. எச்சம் பண்பை விளக்கும் இருபெயரொட்டு இணைப்புச்சொல்

6. பெண்ணுக்குத் தங்கம் போலக் குணம்

பெ. எ/அ பெண்ணுக்குத் தங்கமான குணம் / தங்கக் குணம்

வி. அ. பெண்ணுக்குத் தங்கமாகக் குணம் உண்டு

மேலே கண்ட அமைப்பை ஒத்து, நத்தம் போலக் கேடு என்பதை

1. நத்தமாகக் கேடு – என்று வி. எச்சம்/ வினையடையாகவும்.

2. நத்தமான கேடு – என்று பெ. எச்சம் / இருபெயரொட்டு இணைப்பாகவும்

3. நத்தத்திற்கு கேடு – என்று வேற்றுமைத் தொடராகவும்
மூன்று நிலையிலும் விளக்கலாம்.

வினையடையாக விளக்கும் போது,

''தந்தமாகக் கேடும், உளதாகும் சாக்காடும் அரிது'' என்று வாக்கிய அமைப்பு நிற்கும். இத்தகைய கூட்டு வாக்கியத்தில் இணைப்பும் ஒத்த நிலையினதாக (வி.எ+வி.எ அல்லது வெ.எ+பெ.எ என) அமைவது சிறப்பு அல்லாவிடில் முதல் வாக்கியம் செய்வென்எச்சம் அரிது என வினைகொண்டு முடிய இரண்டாம் வாக்கியம் சாக்காடு என்ற பெயர் அரிது என வினைகொண்டு முடித்து பிளவுபட்டு நிற்கும்.

கீழே காணும் வாக்கியங்களை நோக்குக.

எ.டு: 1. அ அவளுக்குத் தங்கமாகக் குணமும் தங்கமான உடம்பும் உண்டு.

2. அ அவனுக்குக் கூலியாகத் தானியமும் இனாமான பணமும் கிடைத்தன .

என்பதை விட:

1. ஆ அவளுக்குத் தங்கமாகக் குணமும் தங்கமாக உடம்பும் உண்டு.
இ அவளுக்குத் தங்கமான குணமும் தங்கமான உடம்பும் உண்டு,

2. ஆ அவனுக்குக் கூலியாகத் தானியமும் இனாமாகப் பணமும் கிடைத்தன.
இ அவனுக்கு கூலியான தானியமும் இனாமான பணமும் கிடைத்தன.

என முடிவது இயல்பாகும். மேலும் கூலியான தானியம் எனும்போது கூலி தானியம் தான் என்ற உரிமைப் பொருளும் கூலியாகத் தானியம் என்னும்போது வேறொன்றிற்கு மாற்றான தானியம் என்ற பொருள் வேறுபாடும் உள்ளன. எனவே நத்தமாகக் கேடும் உளதாகும் சாக்காடும் என வி.எ + பெ. எ. இணைப்பு வாக்கியம் அவ்வளவு இயல்பானதன்று. சற்றுப் பொருள் வேறுபாடும் உள்ளதும் ஆகும். இது காரணமாகவே பரிமேலழகர் 'போல்' என்பதை உரையசையாக்கி ஆகும் என்பதை முன்னும் கொண்டார் போலும்.

ஆனால் போல் — என்பதைப் பெ.எச்சத்திற்கு இணையாகக் கொண்டால்,

''நத்தமான கேடும் உள்தாகும்
சாக்காடும் .........அரிது''

என்ற வாக்கிய அமைப்பில் ஈரிடத்தும் பெ. எச்ச வடிவிலுள்ள இணைப்புச் சொல் அமைந்து கேடும் சாக்காடும் அரிது என வாக்கியம் பொருத்த முற நிற்கிறது. மேலும் ஆன என்ற இறந்த காலப் பெயரெச்சம் சென்ற அழிவுகள் ஆக்கமானதையும் ஆகும் என்ற எதிர்காலப் பெயரெச்சம் இனி வரும் சாக்காடு நிலை பேறாவதையும் சுட்டும் பொருள் நுட்பம் உடையாதாக அமைவதையும் நோக்குக.

மணக்குடவர் ''போல்'' பின்பு சென்றியைவதாகக் கொண்டார். பரிமேலழகர் ஆகும் முன்பு சென்றியைவதாகக் கொண்டார். முன்னவருக்கு ஆகும் உரையசை, பின்னவருக்குப் போலும் உரையசை, இருவர் பொருட்போக்கும் ஒத்தவை. ஏனையோ

நத்தம் சங்கு என்றும்போல என்பதை உவம உருபாகவும் கொண்டு பொருள் கொண்டனர். இக்கட்டுரையில் பரிமேலழகர் வழி நின்று 'போல்' என்பதை அவ்வாறே நிறுத்திப் பெயரெச்ச வடிவிலுள்ள இருபெயரொட்டு இணைப்புச் சொல் ''ஆன,'' என்பதாகக் கொண்டு,அது உளதாகும் சாக்காடு என்ற பின் தொடரிலுள்ள ''ஆகும்'' என்ற இணைப்புச் சொல்லுக்குப் பகைப்பாக நின்று பொருள் சிறப்புத் தருவதாகவும் விளக்கப் பெற்றது.

## நூலடைவு


அப்பனையங்கார் டி.என். 'நத்தம் போற் கேடென்னும் குறளுரை' செந்தமிழ்: 24:11 செப்—அக். 1926. பக். 433—438

அருணாசலம் மு. தமிழ்இலக்கிய வரலாறு–13–ஆம் நூற்றாண்டு, 1970

தண்டபாணி தேசிகர் ச. திருக்குறள் உரைக்களஞ்சியம் — அறத்துப்பால் — இல்லறவியல், மதுரைக் காமராசர் பல்கலைக் கழகம் மதுரை, 1983

வேங்கடசாமி நாட்டார், 'நத்தம் போற்கேடு' தமிழ்ப்பொழில், மாசி–பங்குனி, 1926


### எது வலியது?

இருவர் கொள்ளும் காதலைவிட, உடன் பிறந்தவர் கொள்ளும் வாஞ்சையைவிட, நாடு இனம் மொழியிற் படியும் பற்றுதலை விட ஏன் உலகளக்கும் அருளினையும் விட பிள்ளைப் பாசமே ஆழமானது, வலிமை மிக்கது, உணர்ச்சி மயமானது!

❊ ❊ ❊

### இதுதான் இலக்கியம்

தானாக வந்தமையும் மோனை எதுகையும், நினைக்க இனிக்கின்ற இலக்கிய நயங்களும், வாழ்க்கையில் தோய்ந்த அனுபவ முத்திரைகளும், நிலைத்த உண்மையும், பழகு தமிழே வழங்கும் உவமை முதலிய அழகுகளும், நல்ல சொல்லாட்சியும் தடையில்லா நடைப் பெருமையும் நோக்கி இலக்கியங்களை மதிப்பிட வேண்டும்,

தமிழண்ணல்
தாலாட்டு

# தமிழ்க் காப்பியங்களில் மீவியல் புனைவு

டாக்டர் அ. பாண்டுரங்கன்
தமிழ்த்துறைத் தலைவர்,
புதுவைப் பல்கலைக் கழகம்,
காரைக்கால்.

## 0. முன்னுரை

தமிழ்க் காப்பியங்களில் புனையப்பெற்றுள்ள மீவியல் நிலையை– மீவியல் நிகழ்ச்சிகளைச் சுருக்கமாக ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கமாகும். சிலப்பதிகாரம், மணிமேகலை, சிந்தாமணி, கம்பராமாயணம் முதலிய நான்கு காப்பியங்களும் இவ்வாராய்ச்சிக்கு அடிப்படையாக அமைகின்றன. மீவியல் புனைவு பற்றி ஐரோப்பியத் திறனாய்வாளர்களின் கருத்துக்களும் தமிழ்க் காப்பியங்களில் இடம்பெறும் மீவியல் நிலை பற்றி மதிப்பீடு செய்வதற்காக எடுத்தாளப் படுகின்றன.

## 0..1. மீவியல் (Supernatural)

மனித ஆற்றலுக்கு மேம்பட்டும், அப்பாற்பட்டும் நிகழ்கின்ற நிகழ்ச்சிகளை (Supernatural incidents) மீவியல் என்கிறோம். இத்தகைய நிகழ்ச்சிகளுக்குரிய காரண காரியங்கள் இயல்நிலைக்கு மாறுபட்டதாகவும், அறிவாராய்ச்சிக்கு அப்பாற்பட்டதாகவும்.இருப்பதால் இவற்றை மீவியல் (Snpernatural) எனக் குறிக்கின்றோம். மனித நிலையைக் கடந்த அனைத்தையும் மீவியல் நிலை என்று சொல்லலாம்.

மனிதன் படைத்துக்கொண்ட சமயங்களிலும் காப்பியங்களிலும் மீவியல் நிலை குறித்து மனிதன் எண்ணிய எண்ணங்களும், நம்பிக்கைகளும் இடம்பெற்றுள்ளன. பல்வேறு நாகரிகச் சூழல்களில், மொழிப் பண்பாட்டுப் பின்னணிகளில் தோன்றியதாக இருப்பினும், பண்டைக் காப்பியங்களில் இந்நம்பிக்கைகள் வெவ்வேறு வகைகளிலும், அளவுகளிலும் காணப்படுகின்றன.

## 0.1.1. தமிழ்க் காப்பிய மரபுகளில் மீவியல் நிலை

காப்பிய இலக்கியங்கள் அனைத்திலும், அவை பல்வேறு பண்பாட்டு நாகரிகச் சூழல்களில் தோன்றியிருப்பினும், பொதுவான போக்குகள், ஒற்றுமைக் கூறுகள் பல காணப் படுகின்றன. அவற்றில் ஒன்று மீவியல் புனைவு. இப்புனைவு இரண்டொரு தமிழ்க் காப்பியங்களில் தவிர, அனைத்துக் காப்பியங்களிலும் இடம்பெறுகின்றது. ஆயினும், இப்புனைவு பற்றிய ஆய்வுகள் ஐரோப்பாவில் போன்று தமிழ் இலக்கண ஆசிரியர்களாலோ, காப்பிய உரையாசிரியர்களாலோ விளக்கமாகக் கூறப்படவில்லை.

காப்பியத்தின் வரைவிலக்கணம் கூறுகின்ற தண்டியலங்காரத்திலும், அதன் வடமொழி மூலத்திலும் மீவியல் புனைவு பற்றிய குறிப்பு எதுவும் இல்லை. வடமொழியில் உள்ள பிற அலங்கார நூல்களும் இதனைப் பற்றி ஒன்றும் பேசவில்லை. விலக்காக, விசுவநாத கவி, காப்பியத் தலைவனைப் பற்றிக் குறிக்கும்பொழுது, தெய்வத்தையும் காப்பியத் தலைவனாகப் படைக்கலாம் என்கிறார்: (உபாத்யாயா,1962:5). சிலப்பதிகார உரையாசிரியரான அடியார்க்கு நல்லார் மீவியல் நிலை பற்றி விளக்காவிடினும், சிந்தாமணி உரையாசிரியரான நச்சினார்க்கினியர் ஓரளவு தெளிவுபடுத்துகின்றார். காந்தருவதத்தை மணம் குறித்து எழுந்த போரில், சீவகனுக்குக் காந்தருவதத்தையின் தந்தை கலுழ வேகன் உதவி செய்ய வாராமையைக் குறித்து அவர் விளக்கும்பொழுது, கலுழவேகன் வந்தாற் சீவக சரிதை ஒன்றுமின்றாம்''என வரைகின்றார். (உ.வே.சா. 1969:426). கலுழவேகன் வித்தியாதரன்; மாயவிஞ்சையில் வல்லவன்;

அவன் சீவகன் சார்பில் தோன்றிப் போர் செய்யின், சீவகனுக்குப் பெருமை ஒன்று மில்லை. எனவே, காப்பியத் தலைவன் பெருமைக்கு ஊறு நேராத வகையில் இவை புனையப் படுதல் வேண்டும் என்று நச்சினார்க்கினியர் எண்ணியிருந்தமை இக் கூற்றிலிருந்து தெளிவாகின்றது.

## 2.0. ஐரோப்பியக் காப்பியங்களில் மீவியல் நிலை

கிரேக்கக் காப்பியங்களான இலியாது, ஒதிஸ்ஸி என்பனவற்றிலும் இலத்தீன் காப்பியமான ஏனியாதிலும், ஆங்கிலக் காப்பியமான துறக்க நீக்கத்திலும் மீவியல் புனைவுகள் நிரம்பிக் காணப்படுகின்றன. இலியாதிலும், ஒதிஸ்ஸியிலும் மனிதர் களுடைய போராட்டங்களில் தெய்வங்களும் பங்கெடுத்துக்கொள்கின்றன; எதிரெதிர் அணிகளில் நின்று போராடுகின்றன. ஏனியாது காப்பியத்திலும் இவ்வாறே தெய்வங்கள் மனிதர்களுடைய செயல்களில் குறுக்கிடுகின்றன. துறக்க நீக்கக் காப்பியத் தில் இடம்பெறும் கதை மாந்தர்களில் ஆதாம் ஏவாள் என்னும் இருவரைத் தவிர்த்து அனைவரும் மீவியல் ஆற்றல் மிக் கோராகவே படைக்கப்படுகின்றனர்.

கிரேக்கக் காப்பியங்களான இலியாது, ஒதிஸ்ஸி ஆகியவற்றைப் பொறுத்த மட்டில், மனிதர்களுக்கும் தெய்வங்களுக்குமிடையில் பெரும் வேறுபாடு ஒன்றுமில்லை என்று சொல்லலாம். இக்காப்பியங்களில் தோன்று கின்ற தெய்வமாந்தர் மனிதர்களின் வார்ப் பாகவே அமைகின்றனர்; விருப்பு வெறுப்பு களை உடையோராகச் செயலாற்றுகின் றனர்; கரவுச் செயல்களைக் கூட மேற் கொள்ளுகின்றனர்.

2.0.1. இலியாது காப்பியத்தில் மீவியல் புனைவுகள் கிரேக்கக் காப்பியங்களில் போலன்றி, தத்துவம் ஒன்றை விளக்கும் நிலையில் படைக்கப்படுகின்றன. ஹோம ருடைய காப்பியங்களில் போன்றே, வர்ஜிலி னுடைய காப்பியத்தில் இடம்பெறும் தெய் வங்கள் மனிதர்களைக் காட்டிலும் பேராற்றல் மிக்கோராயினும், உரோமப் பேரரசுக்குரிய வித்து ஏனியாதினால் ஊன்றப்படுதல் வேண்டும் என்னும் தெய்வ நியதிக்கு உட்பட்டோராகச் செயல்படுகின்ற னர். உயர்ந்த குறிக்கோளை விளக்கும் முறையில் வர்ஜில் கடவுளரைப் படைத்திருப் பதால், அவர்கள் ஹோமருடைய காப்பியங் களில் போலன்றி, தனித்தன்மை இல்லாத வர்களாக, செயற்கையாகப் படைக்கப் பட்டவர்களாக, வெறும் நிழல்களாகத் தோன்றுவதாகக் குறிப்பிடுகின்றார் காண்டு என்னும் ஆய்வாளர் (Higginbothom: 187).

2.1 கிரேக்கக் காப்பியக் கடவுளர் செயல்கள் ஒழுக்க வரம்பை மீறியவை; இளைஞர் களைத் தீய வழியில் செலுத்தக் கூடியவை என பிளேட்டோ கூறுகிறார். (Wimsat et Brooks, 1970:10). இக்கடவுளர் மனித னுடைய அறிவெல்லைகளுக்கு அப்பாற் பட்டவர்களாகவும் விந்தையான சூழல்களில் செயலாற்றுபவர்களாகவும் படைக்கப்பட் டிருப்பதால் இவ்வாறு எண்ணினர் போலும். ஆனால், அரிஸ்டாட்டில் இக்கருத்தை ஏற்றுக்கொண்டார் அல்லர். காப்பியத்தில் மீவியல் புனைவுகள் இடம்பெறுவதில் தவறேதும் இல்லை என்கிறார் அரிஸ் டாட்டில்;

> ''வியப்புணர்ச்சிக்கு இடமளிக்கின்ற, ஆனால் பகுத்தறிவுக்கு முரணான நிகழ்ச்சிகள் காப்பியத்தில் இடம் பெற லாம்...... ஏனெனில் விந்தைச் செயல் மனத்திற்கு இன்பமூட்டுகின்றது''.
> (Butcher, 1972:95)

இன்பமூட்டுவதற்காகப் புலவன் மீவியல் நிலையைப் புனைகின்றான் என எடுத்துக் காட்டிய அரிஸ்டாட்டில், கவிதையை எவ் வாறு படைக்கவேண்டும் என்ற வினாவை எழுப்பி விடை கூறும்பொழுது, தெய்வங் களைப் பற்றிய கதைகளை மீண்டும் குறிப் பிடுகின்றார்:

> ''ஒன்று எவ்வாறு இருக்க வேண்டும் என்றோ, எவ்வாறு இருக்கின்றது என்றோ, புனைய முடியாதபொழுது, புலவன், இவ்வாறு அது இருந்தது என மக்கள் கூறுகின்றனர் என்று படைக்க லாம். தெய்வங்களைப் பற்றிய கதை களுக்கும் இது பொருந்தும்''.
> (Butcher, 1972:101)

மக்கள் மத்தியில் வழங்கி வருகின்ற கதை கள், அவை பகுத்தறிவுக்குப் பொருத்த மற்றவையாயினும், எடுத்துக் கொள்ளலாம் என்று அரிஸ்டாட்டில் எண்ணியமை இக் கூற்றிலிருந்து தெளிவாகின்றது.

இவ்வாறு ஐரோப்பியக் காப்பியங்கள் அனைத்தையும் ஒப்பிட்டுக் காணும் பொழுது தெய்வங்கள் கட்டமைப்பு நிலையில் பின்னுக் குத் தள்ளப்படுகின்றனர். மனிதன்தான் காப்பியத்தின் பாடுபொருளாக இருக்கின் றான், அது வீரயுகக் காப்பியமாயினும், பிற் காலக் காப்பியமாயினும் மனித நிலையை

விளக்கும் பின்னணியாகத் தெய்வங்கள் படைக்கப்படுகின்றனர் என்பது தெளிவாகின்றது. ஆபர் கிராம்பி கூறும் கருத்து இதனை வலியுறுத்துகின்றது.

> காப்பியத்தில் இடம் பெறும் மீவியல் நிகழ்ச்சிகளை, மையக் கதையைக் காட்டிலும் கீழ் நிலையில் —ஐயுறவுப் படியில் காப்பியப் புலவன் திட்டமிட்டோ அல்லது உள்ளுணர்வின் காரணமாகவோ படைத்துவிடுகின்றான். தன்னுடைய காப்பியம் மனிதனைப் பற்றியது தான் என்பதை ஐயமின்றி வலியுறுத்த வேண்டிய கடப்பாடு புலவனுக்கு உண்டு. மனிதனை — அவனுடைய குறிக்கோளைப் பாடுவதுதான் காப்பியப் புலவனின் பணி; கடவுளரின் நோக்கத்தைப் பாடுவது அன்று. மனிதனின் குறிக்கோளை விளக்கும் அழகுப் பின்னணியாகக் கடவுளரைக் காப்பியக் கட்டமைப்புக்குள் அமைத்து விடுதல் வேண்டும்''. (Epic, 1922:55)

### தமிழ்க் காப்பியங்கள்

3.0. ஐரோப்பியக் காப்பியங்களோடு ஒப்பிடும்பொழுது தமிழ்க் காப்பியங்களில் மீவியல் புனைவுகள் குறைவாக அமைகின்றன. கம்பராமாயணம் ஒன்றைத் தவிர, நாம் ஆய்வுக்கு எடுத்துக்கொண்ட தமிழ்க் காப்பியங்களில் மீவியல் தன்மையுடைய கதைமாந்தர் மிகச் சிலரே ஆவர். சிலப்பதிகாரத்தில் காய்கதிர்ச் செல்வன், அங்கியங் கடவுள், மதுராபதி, பாசண்டச் சாத்தன் முதலியோர் காப்பியக் கதை வளர்ச்சிக்கு உதவுகின்றனர். மணிமேகலையில் மணிமேகலா தெய்வம், கந்திற்பாவை என்னும் இருவரே காப்பியத்தில் பங்கேற்கும் மீவியல் கதை மாந்தராவர். சிந்தாமணியில் வித்தியாதரரும், இயக்கரும் கதை மாந்தராக வருகின்றனர். சுடுகாட்டில் உள்ள தெய்வம் ஒன்றும் கதை வளர்ச்சிக்கு உதவுகின்றது.

ஆனால், இராமாயணக் காப்பியத்தில் இராமனும் அவனைச் சேர்ந்தோரும் தவிர, பிற கதைமாந்தர் அனைவரும் மீவியல் நிலையில் செயலாற்றுகின்றனர். வானரர்கள், அரக்கர்கள், சடாயு, சம்பாதி, கலுழன், சாம்பவன் முதலியோர் மனித இயல்புக்கு மேம்பட்டதும் அப்பாற்பட்டதுமான நிலையில் படைக்கப்பட்டுள்ளனர். விசுவாமித்திரன், பரத்துவாசன் போன்ற முனிவர்களும் இயல்நிலைக்கு மேம்பட்ட ஆற்றல் படைத்தோராகப் புனையப்படுகின்றனர். இவ்வகையில், இக்காப்பியம் மில்டனின் துறக்க நீக்கத்தோடு ஒப்பிடத்தக்கதாக அமைகின்றது.

3.0.1. ஆய்வுக்கு எடுத்துக்கொண்ட நான்கு காப்பியங்களில் சிலப்பதிகாரம், மணிமேகலை, சிந்தாமணி மூன்றையும் ஒரு பிரிவிலும், கம்பராமாயணத்தை மற்றொரு பிரிவிலும் அடக்கலாம். முதல் பிரிவில் இடம் பெறுபவை சமண பௌத்தக் காப்பியங்கள், கம்பராமாயணம் வைதிகக் காப்பியம். சமண பௌத்த சமயங்கள் வைதிக சமயக் கடவுளரை ஏற்காதவை; அவை ஊழ்வினைக் கோட்பாட்டை வலியுறுத்தும் சமயங்கள், அவற்றில் வைதிகத் தெய்வங்கள் பல இடம் பெறாமைக்கு இஃது ஒரு காரணமாகலாம்.

### 3.1. சிலப்பதிகாரம்

சிலப்பதிகாரக் காபபிய நிகழ்ச்சிகளில் பல மீவியல் செயல்களால் நடைபெறுகின்றன. காய்கதிர்ச் செல்வன் கண்ணகியின் வினாவிற்கு விடையிறுப்பது (18:50–54), அங்கியங் கடவுள் தோன்றி, கண்ணகியின் ஏவல் கேட்டு நிற்பது (21:45–52), மதுராபதித் தெய்வம் கண்ணகி முன்தோன்றி அழல்வீடு பெறுவது (23:1-178), குன்றக் குறவர் காண கண்ணகி கோவலனுடன் விண்ணகம் புகுவது (23:190–200), செங்குட்டுவனுக்குக் கண்ணகித் தெய்வம் மீவிசும்பில் தோன்றிக் காட்சியளித்தல் (29:10) போன்ற மீவியல் நிகழ்ச்சிகள் கட்டமைப்பு நிலையில் காப்பியக் கதையினின்று வேறு பிரித்துக் காணமுடியாதவாறு கதையோடு ஒன்றி நிகழ்கின்றன.

சிலப்பதிகாரத்தில் கதைப்போக்கை இந் நிகழ்ச்சிகள் வளர்த்துச் செல்லுவனவாக அமைகின்றனவே அன்றி, காப்பியப் போக்கு இவற்றால் சிறிதும் மாற்றப்படவில்லை என்பதில் ஐயமில்லை. கட்டமைப்பு நிலையில் கண்ணகியின் தெய்வத்தன்மைக்கு இவை உறு துணையாகின்றன. ''உரைசால்பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்தல்'' (பதிகம்:56) என்னும் பதிகப் பொருளை விளக்குவதற்கு இவை இன்றியமையாதவை. காப்பியத்தில் தெய்வங்களின் இடம் பற்றி ஆபர்கிராம்பி கூறுகின்ற கருத்துக்கள் இங்குப் பொருத்தமாக அமைகின்றன.

> ''கதைநிகழ்வுப் போக்குகளில் தெய்வங்கள் இடம்பெறுவது காப்பிய நோக்கத்திற்குப் பெரிதும் உதவுகின்றது என்பதில் ஐயமில்லை. தெய்வங்கள் காப்பிய நிகழ்ச்சிகளை ஆர்வத்தோடு காணுகின்ற பார்வையாளர்களாக மட்டுமில்

லாமல், அவைகளில் ஆழமாகச் சிக்கிக் கொள்வோராகவும் இருக்கின்றனர். காப்பியத்தின் பாடு பொருளை, மீவியல் புனைவுதவிர வேறு எதுவும் உறுதியாக எடுத்துரைக்கவோ அல்லது பொருத்த மாக அழகுபடுத்தவோ இயலாது'' (Epic, 1922:53).

கண்ணகியை உலகுதொழும் பத்தினியாக உயர்த்திக் காட்ட இவை இன்றியமை யாதவை என்பது தெளிவு. இக்கதைப் பகுதி களை நீக்கிவிடுவோமாயின், கண்ணகி தெய்வ நிலை உறுவதை விளக்க இயலாது. கிரேக்க உரோமைக் காப்பியங்களில் போன்று தெய்வங்களின் விருப்பின்வழி காப் பியக் கதை உருவாகவில்லை என்பது ஈண்டு நினைவு கூர்தற்குரியது.

3.2. மணிமேகலை

சிலப்பதிகாரத்திற்கு மாறாக, மணி மேகலைக் காப்பியம் மணிமேகலா தெய்வத் தின் குறுக்கீட்டால் வளர்கிறது. மேனாட்டு இலக்கியத் திறனாய்வாளர்கள் கூறுகின்ற தெய்வக் குறுக்கீட்டை (Dieu ex machina) இத்தெய்வம் நிகழ்த்துகின்றது. சக்கரவாளக் கோட்டத்தில் துயில்கின்ற மணிமேகலையை இத்தெய்வம் எடுத்துச் சென்று மணிபல்லவத் தீவில் சேர்ப்பதே (6:208-214) காப்பியத் தின் திருப்புமுனை எனலாம். மணிபல்லவத் தீவை அடைந்த காப்பியத் தலைவி புத்த பீடிகையை வணங்கிப் பழம் பிறப்புணர்ச்சி பெறுவதற்கும் (காதை:9) மணிமேகலா தெய்வத்திடமிருந்து மந்திரங்கள் பெற்றுக் கொள்வதற்கும் (10:77–93) அமுத சுரபி யைப் பெறுவதற்கும் (11.55–58) இந் நிகழ்ச்சியே அடிப்படையாக அமைகின்றது.

எளிய குலத்தில் பிறந்த இளம்பெண் ஒருத்தி தன் நாட்டிலும், பிற நாடுகளிலும் அறத் தின் திறத்தை எடுத்துக்கூறி, உலக குரு வாக ஓங்கி வளர்வதற்கு இம்மாற்றம் தவிர்க்க முடியாததாகின்றது. மணிமேகலை கற்றுக்கொள்ளும் மூன்று மந்திரங்களும் கதைப்போக்கில் தவிர்க்க முடியாதவை ஆகி கின்றது. இராசமாதேவியிடமிருந்தும் உதயகுமரனிடமிருந்தும் தன்னைக் காத்துக் கொள்ள வேற்றுரு எய்தும் மந்திரம் மணி மேகலைக்குத் துணையாகின்றது. உதய குமரன் கொலைக்கும் இதுவே காரணமாகிக் கதையை வளர்க்கின்றது. (காதை:20). கதைப்போக்கில் எழுகின்ற சிக்கலைத் தீர்ப் பதற்கு மீவியல் துணையை நாடலாம் என் னும் டிரைடன் கருத்திற்கு (Ker, 1926: 189) ஒருபடி மேலே சென்று, சிக்கல் இல்லா விட்டாலும் மீவியல் துணையைப் பயன் படுத்திக் கதையை வளர்க்கலாம் எனக் காட்டுகின்றார் சாத்தனார்.

3.3. சிக்கலை அவிழ்ப்பதற்குத் தெய்வக் குறுக்கீட்டைத் திருத்தக்கதேவர் பல இடங் களில் பயன்படுத்துகின்றார். சீவகன் கந்துக் கடனிடம் மறைந்து வளர வேண்டும்; அவ் வாறு மறைந்து வளர்ந்தால் ஒழிய அவன் கட்டியங்காரனை அழித்தல் இயலாது. சீவ கனை வணிகனிடம் சேர்ப்பிக்கும் செயலைச் செய்வதற்காகவே சுடுகாட்டுத் தெய்வம் சண்பகமாலை வடிவில் வருகின்றது; நிகழ விருப்பதை எடுத்துக் கூறி, விசயையைத் தேற்றி, அவனைக் கந்துக்கடன் எடுத்துச் செல்லும் பொருட்டுக் குழந்தையிடமிருந்து அப்புறப்படுத்துகின்றது (சிந்தாமணி:314–318)

வித்தியாதர நங்கையான காந்தருவ தந்தை யை மணப்பவன் இராசமாபுரத்தில் இருப் போன் என்பதை நிமித்திகனால் அறிந்த கலுழவேகன், இராசமாபுர வணிகன் சீதத் தனைத் தன்னிடம் அழைத்து வருவதற்குத் தரன் மூலம் கப்பல் முழுகியது போல் மாயம் செய்கிறான். (சிந்தாமணி:572-580) அச்ச ணந்தி ஆசிரியன் கட்டளைக்கு இணங்கிக் கட்டுண்டு செல்லும் சீவகன், தத்தை தன் னை மீட்பதில் ஏற்படும் இழிவை நினைத்துச் சுதஞ்சணனை நினைக்க, அவன் காற்றையும் மழையையும் தோற்றுவித்துச் சீவகனைத் தழுவி எடுத்துக்கொண்டு தன் இயக்கர் உல கம் செல்லுகின்றான் (சிந்தாமணி:1148-1160). இம்மூன்று மீவியல் நிகழ்ச்சிகளும் காப்பிய நிகழ்ச்சிப் போக்குகளை மாற்றி அமைக்கின்றன. சீவகன் கதைக்கு இன்றி யமையாத உறுப்புக்களாக இவை விளங்கு கின்றன.

34. கம்பராமாயணம்

காப்பியத்தில் விழுகின்ற முடிச்சுகளை இயல் பாக அவிழ்க்க முடியாத பொழுது மீவியல் துணைகொண்டு சிக்கலைத் தீர்த்துக் கதையை வளர்த்துச் செல்லலாம் என்னும் கொள்கைக்குக் கம்பருடைய காப்பியத்தி லிருந்து பல மேற்கோள்களைக் காட்டலாம். இராமனைத் திரும்பவும் நாட்டிற்கு அழைத்துச் சென்று முடிபுனைய விரும்பிய பரதன் சித்திர கூடத்தை அடைந்து இராமனை அழைக்கின்றான். இருவரும் தத்தம் கொள்கையை வலியுறுத்திப் பேசு கின்றனர். பரதனுக்கு மறுமொழி கூற

முடியாத நிலை உருவாகின்றது. இந்நிலையில் இராமன் மீண்டும் அயோத்திக்குச் சென்றால் இராவண வதம் என்னும் தங்கள் குறிக்கோளுககு வெற்றி கிட்டாது என்றுணர்ந்த தேவர்கள் ஒன்று திரண்டு தந்தையின் சொற்படி காட்டில் வாழ்வது இராமன் கடமை என்றும், அவன் காட்டில் உறைகின்ற பதினான்கு ஆண்டுக் காலமும் நாட்டை ஆளுதல் பரதன் கடமை என்றும் விண்ணிலிருந்து பேசுகின்றனர். இராமன் அதனையே பற்றுக்கோடாகக் கொண்டு தேவர் கட்டளையை மறுக்காமல் பரதன் அரசாள வேண்டும் எனத் தம்பியை வேண்டுகின்றான். பரதனும் உடன்பட்டு அயோத்தி மீளுகின்றான் (11:14:126-132)

கூட்டமைப்பு நிலையிலும் செயல்முறை நிலையிலும் இது முக்கியமான நிகழ்ச்சி. இராவணன் வீழ்ச்சி என்னும் பாடு பொருளுக்கு இன்றியமையாத வித்தாக இந்நிகழ்ச்சி அமைகின்றது. வேறு வகையில் கதையை மாற்றியமைப்பதற்கு இவ்விடத்தில் இடமில்லைஎன்பது தெளிவு.

இலக்குவன் நாகபாசத்தால் கட்டுண்டு கிடக்கும்பொழுது அதனை நீக்கும் வகையறியானாய் இராமன் அறிவு மயங்கிச் சோர்ந்து கிடக்கும்பொழுது கலுழன் தோன்றி நாகக் கணைகளைச் சிதறடிப்பதும் (Vi: 24: 263–264), பிரமாத்திரத்தாலும், இராவணன் வீசிய வேலாலும் மடிந்து கிடக்கும் இலக்குவன் மருந்து மலையின் மூலிகைகளால் உயிர்பெறுமாறு படைப்பதும்(Vi:24: 100–103), காப்பியத்தில் வேறுவகையில் பாடவியலாத பகுதிகள். மீவியல் துணை கொண்டு இவ்விடங்களில் எழுகின்ற சிக்கல் அவிழ்த்துக் கதை நடத்துகின்றான் காப்பியப் புலவன். இன்றியமையா இடங்களில் இவ்வுத்தியைப் பயன்படுத்தலாம் என்பது தமிழ்க் காப்பிய மரபுகளுள் ஒன்று என்பது இவற்றிலிருந்து தெளிவாகின்றது.

4. 0. ஊ வினை அல்லது விதி

உலகில் நிகழும் ஒவ்வொரு நிகழ்ச்சியும் மற்றொரு நிகழ்ச்சியின் தொடர்ச்சி அல்லது விளைவு எனக் கருதப்படுகின்றது. உலக நிகழ்ச்சிகள் அனைத்திற்கும் காரண காரியம் உண்டு. எனினும், எல்லாவற்றிற்கும் காரணத்தைக் கண்டறிய முடிவதில்லை. காரணம் கண்டறிய முடியாத நிகழ்ச்சியை மனிதன் ஊழ்வினை எனவும் விதி எனவும் நம்புகிறான்.

ஊழ்வினை அல்லது விதி பற்றிய நம்பிக்கை காப்பியங்களில் காணப்படுகின்றது. கிரேக்கக் காப்பியங்களிலும் உரோமைக் காப்பியத்திலும் அது பேராற்றல் மிக்கதாகச் சித்திரிக்கப்படுகின்றது. ஜியெஸ், ஜுபிடர் முதலிய தலைமைக் கடவுளரும் விதிக்கு அடிபணிபவராகப் புனையப்படுகின்றனர். கிரேக்கக் காப்பியங்களில் விதி வெல்லமுடியாத ஆற்றலாக விளங்குவதுதான் கதைமாந்தர்களின் துன்பியல் முடிவுகளுக்குக் காரணமாகின்றது.

ஏனியாது காப்பியத்தில் விதி இவ்வாறு தனிப் பேராற்றலாகப் புனையப்படவில்லை. அது பல்வேறு ஆற்றல்களின் கூட்டு விளைவால் உருவாகின்றது.விதி தானாகச் செயல்படுவதில்லை. மனிதன் செய்கைகள் விதியை உருவாக்குகின்றன. விதியின் முடிவுப்படி நடக்கும் என்று மனிதன் அடங்கியிருத்தலாகாது. மனிதனும் விதியின் முடிவுக்கு இணங்கக் குறிக்கோளை நோக்கி உழைத்தல் வேண்டும் என்பதை ஏனியாது காப்பியம் காடடுகின்றது.

4. 1. சிலப்பதிகாரக் கதையை இயக்கும் பேராற்றலாக ஊழ்வினை சித்திரிக்கப்படுகின்றது. கோவலன் மாதவியைப் பிரிவதற்கும் கண்ணகியோடு மதுரைக்குப் புறப்படுவதற்கும் மதுரையில் கள்வன் என்று கொல்லப்படுவதற்கும் ஊழ்வினையே காரணம் என்கிறார் இளங்கோவடிகள் (7:52–54). பாண்டியன் வீழ்ச்சிக்கும் மதுரையின் அழிவுக்கும் இவ்வூழே காரணமாகின்றது (16:158–159) (23:133-137). கிரேக்கக் காப்பியங்களில் போலக் கோவலனும், கண்ணகியும், பாண்டியனும் ஊழின் கைகளில் சிக்கி அல்லலுறுகின்றனர்.

4. 2. இராமாயணக் காப்பியத்தில் நிகழ்ச்சிகள்யாவும் குறிப்பிட்டதொரு அருள்நியதியைஒட்டியே நடக்கின்றன. இராவணன் வீழ்ச்சி என்பது, கிரேக்க உரோமைக் காப்பியங்களில் போன்று முன்னரே முடிவு செய்யப்பட்ட ஒன்றுதான் எனினும், அக்காப்பியங்களில் கடவுளுக்கும் மேம்பட்டதாக விதி காட்டப்படுவது போல் இங்குக் காட்டப்படவல்லை. இங்கு இது பரம்பொருளின் சங்கல்பத்தால் நடைபெறுகின்றது.

4.3. மணிமேகலையில் இடம்பெறும் ஊழ்வினை வர்ஜிலின் காப்பியத்தில் போன்றே அமைக்கப்படுகின்றது. மணிமேகலையில் ஊழ்வினை என்பது கருமத் தொடர்ச்சியாகக் காட்டப்படுகின்றது. பல்வேறு பிறவிகளில் ஈட்டிய அறம் இறுதியில் பிறப்பறுக்கும் நிலையை அருளினாலும், ஆன்மா முயன்று

உழைத்தால் ஒழியப் பிறப்பறுதல் கைகூடுவ தில்லை. சாதுசக்கர முனிவனை உண்பித்தப் பேரறத்தால் (10:20–41) மணிமேகலையின் பிறப்பு அறும் எனினும், அவளுக்குக் கருமத் தொடர்ச்சியால் உதய குமரன்பால் உள்ளம் நெகிழ்கிறது (21:13–14). இதனை மாற்றி அறத்தின் வித்தாகிய மணிமேகலையை நல் வழிப்படுத்தத் தான் தோன்றி அவனைத் தூக்கிச் சென்றாகத் தெய்வம்தெளிவாக்கு கின்றது. (10:46–49) ஊழ்வினை என்பது ஹோமருடைய காப்பியங்களிலும் சிலப்பதி காரத்திலும் போன்று மனித நிலைக்கு அப் பாற்பட்டதன்று.

நம் விருப்பப்படியே செயல்களைச் செய்வ தால் பிறவிகள் ஏற்படுகின்றன. தெளி வில்லாத வேட்கையே பிறப்புக்குக் காரணம். வாழ்க்கையில் தெளிவு பெற்று ஓர் உயரிய குறிக்கோளை நோக்கி உழைத்தால் ஊழ் வினையும் வெல்லலாம். பழம் பிறப்புணர்ச்சி பெறுவதன் நோக்கம் பிறவியின் இழிவைத் தெளிந்து உயரிய நிலையில் நோற்பதற் கேயாம். இந்நோக்கத்திற்காகவே மணி மேகலா தெய்வம் படைக்கப்பட்டுள்ளது எனலாம். கணிகையர் குலத்தில் பிறந்த ஒருத்தி உலக குருவாக ஓங்கி வளர்வதற்கு இத்தத்துவம் வழிவகுக்கின்றது.

## 5. முடிவுரை

காப்பியக் கதைப்போக்கில் இவை அனைத் தும் ஒன்றாகப் பின்னிப் பிணைந்து வியப்புச் சூழலைத் தோற்றுவிக்கின்றன. காப்பியக் கதையைக் கேட்போருடைய உள்ளங்களில் இவை மருட்கைச் சுவையைச் ஊட்டி இன் புறுத்துகின்றன. ஆபர்கிராம்பி சுட்டிக் காட்டுவது போன்று, காப்பியப் புலவன் இவற்றை நாம் நம்பவேண்டும் என்று எதிர் பார்க்கவில்லை (Epic 1922:55). மனித அறிவிற்கு எட்டாததும் புலப்படாததுமான செய்திகளை அழகாகவும் ஆணித்தரமாகவும் கூறுவதற்கு இவ்வாறு புனைவதைத் தவிர வேறுவழி புலவனுக்கு இல்லை என்பதில் ஐயமில்லை.

உலகக் காப்பியங்கள் அனைத்தும் மீவியல் மிக்க கதைமாந்தர்களைப் புனையும்போது— அவர்கள் தேவராயினும் அரக்கராயினும்— மனிதச்சாயலில் படைக்கப்படுகின்றனர். காப் பியப் பாடுபொருளை வலியுறுத்திக் காட்டும் முறையில் அவை அமைகின்றன இயல்பாகக் கதையை வளர்த்துக் கொண்டு செல்ல இயலாத நிலையில் – எதிர்பாராது ஏற்படும் சிக்கலை விடுவிப்பதற்கு –மீவியல் புனைவை எல்லாக் காப்பியங்களும் பயன்படுத்து கின்றன. மீவியல் புனைவுகள் எவ்வளவு அழகாகவும் விரிவாகவும் இருப்பினும், அவை மையக் கதையோடு ஒப்பிடும்பொழுது துணை நிலையாக (Complementary) அமை கின்றனவே அன்றி அவை எதிலும் முதல் நிலைப் பொருள்களாகப் புனையப் பெற வில்லை. நாம் ஆய்வுக்கு எடுத்துக்கொண்ட காப்பியங்கள் அனைத்தும் மனிதனை மையப்பொருளாகக் கொண்டு அமைகின் றன. காப்பியங்களின் நோக்கம் தெய்வத் தைப் பாடுவதன்று; மனிதனைப் பாடுவதே அதன் குறிக்கோள் என்னும் ஆபர்கிராம்பி கருத்தை (Epic, 1922:53) இவை மெய்ப் பிக்கின்றன.

## துணை நூற்பட்டியல்


1. கம்பராமாயணம், எஸ். ராஜம், சென்னை, 1958–1959.
2. சிந்தாமணி மூலமும் நச்சினார்க்கினியருரையும், உ.வே.சாமிநாதையர், சென்னை, 1969.
3. சிலப்பதிகார மூலமும் அரும்பதவுரையும் அடியார்க்கு நல்லாருரையும், உ.வே. சாமிநாதையர், சென்னை. 1968
4. மணிமேகலை, உ.வே. சாமிநாதையர் சென்னை, 1965.
5. *Abercrombie, Lascelles, The Epic An Essay, Martin Secker, London, 1922.*
6. *Butcher, S.H., Aristotle's Theory of Poetry and Fine Arts with a critical text and Translation of the POETICS, Kalyani Publishers, Ludhiana, 1972.*
7. *Higginbothams, John, Greek-Latin Literature, Methuem Co Ltd London, 1969*
8. *Ker, W.P., Essays of John Drydon, Volume II, Oxford, 1927.*
9. *Upathyaya, Ramji, Sanskrit and Prakrit Maha Kavyas, Sanskrit Parishad Unversity, Sagar, 1962.*
10. *William K. Wimsatt Jr. Cleanth Brooks, Literary Criticism, A Short History, Oxford IBH Publishers, Bombay, 1970.*

# பாரதிதாசன்—வாணிதாசன் இயற்கை நோக்கு

டாக்டர். வே. காத்தையன்,
தமிழ்ப் பேராசிரியர்
புட்பம் கல்லூரி, பூண்டி

**நோக்கு — விளக்கம்**

இயற்கைக்குச் சிறப்பும், தலைமையும் தந்து கவிதை புனைந்த பாரதிதாசனும், வாணி தாசனும் இயற்கையை நோக்குந் திறம் சிறப்பு மிக்கது. நோக்கு, பார்வை என்ற சொற்கள் ஒரு பொருட்கிளவி போல் தோன்றினும் இரண்டிற்கும் இடையே வேறுபாடு உண்டு. பார்வை கட்புலனளவில் நிற்க, நோக்கு கருத்திலும் இடங்கொள்ளும் இயல்பினதாகும். நோக்கு என்பதற்கு ஆற்றல் சான்ற பார்வை என்றும், கண்வழி கருத்து சென்று காணுதல் என்றும் பொருள் கோடல் பொருந்தும். வள்ளுவரும், கம்பரும், '.கண்ணும் கருத்தும் ஒன்றிய பார்வையே நோக்கு'[1] எனக் குறித்துள்ளனர். 'நோக்கு—கண்ணால் நோக்குவதில்லை; மனத்தால் நோக்கி இன்புறுவதாகும்'[2] என்ற கூற்றும் அதனைத் தெளிவாக்கும்.

**நோக்கின் வகை**

இரு கவிஞர் தம் இயற்கை நோக்கும் அழகு நோக்கு, பயன் நோக்கு எனும் இரு நிலைகளில் அமைந்து விளங்குகின்றன. அழகு நோக்கு என்பது இயற்கை வழங்கும் தூய அழகுணர்ச்சியை மட்டும் சுட்டுவதாகவும், மற்றது இயற்கையால் விளையும் பயனுக்கு முதன்மை தருவதாகவும் கொள்ளப்பட்டு, இங்கு அழகுநோக்கு ஆராயப்படுகின்றது.

**அழகுநோக்கு—விளக்கம்**

அழகு, மாந்தர்தம் காட்சியில் இன்பம் தரும் ஒரு தோற்றப் பொலிவு. இப்பொலிவு உலகின் பல பொருள்களில் குடிகொண்டு அவற்றைக் காண்பார் கண்வழி கருத்தில் மகிழ்ச்சியளிக்கும் மாண்புடையதாகும். அழகு, காட்சிதரும் பொருள்களிலும் அவற்றைக் காண்பார் கருத்திலும் குடிகொண்டிருப்ப தாக அறிஞர் பலர் சுட்டுகின்றனர். மனத்தின் அனுபவத்தை விட்டுப் பொருள்களிலே அழகில்லை[3] என்பது மு. வரதராசனார் கருத்தாகும். காணுகின்ற பொருள்களில் அழகிருந்தும் காண்பார் கருத்தில் அழகு ணர்வு இல்லாவிடில், அழகுள்ள பொருளும் அழகற்றதாகவே அவர் கண்ணிலும், கருத் திலும் காட்சியளிக்கும். அதனாற்றான் 'திரு' என்ற சொல்லுக்குக் ''கண்டாரால் விரும்பப் படுந்தன்மை நோக்கம்''[4] எனப் பேராசிரியர் பொருள் சுட்டியுள்ளார். பாட்டிற்கு இவ்வழகுணர்வு மூலமாகவும் முதலாக வும் விளங்குகின்ற இயல்பினை 'உள்ளத் தழகுணர்வால் உந்தியெழும் பாட்டு[5]' என மா.லெ. தங்கப்பா குறிப்பிடுகின்றார். கலை யுலகில் வாழும் கலைவாணர்தம் அழகுணர்வு பற்றிக் ''கலைநோக்கம் படைத்த ஒருவன் எல்லாப் பொருள்களிடத்தும் அழகைக் காண் கின்றான்''[6] என்று அ.ச. ஞானசம்பந்தன் குறிப்பிடுகிறார்.

இதனையே மா. செல்வராசன்,

''பொருள்களிலே அழகுண்டாம்
பார்க்கும் பார்வைப்
பொறியினிலே அழகிருந்தால்
என்பதுண்மை''[7]

என்று கூறுகின்றார்.

முடியரசனின் நாட்டுப்பற்றும் மொழியுணர் வும் கனிந்த உள்ளம், விடுதலை வீரர் தம் சிறைத் துன்பத் தியாகத்திலும் மொழிப் போராட்ட மறவர் தம் மரண வேள்வியிலும் அழகு இருப்பதாகக் கண்டு-

''நாட்டிற்காச் செக்கிழுத்து மெலிந்த தோளில்
நல்லதமிழ் நாட்டெழுந்த இந்திப் போரின்
தேட்டாளர் முகங்களிலே அறுத்தெறிந்த
திருத்தாலிக் கயிற்றில் நான் எழிலைக் கண்டேன்''[8]

எனக் காட்டுகின்றது.

''காணும் பொருள்களிலெல்லாம் அழகைக் காணவும், கண்டவாறு தாமேயாகச் சொல்லோவியம் செய்யவும் திறம் பெறுதல் வேண்டும். தமிழர்கள்''[9] என்று பாரதிதாசன் குறிப்பிடுவது, அவர் கொண்ட அழகுக் கோட்பாடும், விடுத்த வேண்டுகோளுமாகும்.

உலகில் நிற்பன இயங்குவனவாக எங்கும் இலங்கும் இயற்கை அனைத்தையும் அழகு என்று கூறும் பாரதிதாசன்,

''...... யாண்டும்
அசைவனவும் நிற்பனவும் கண்டேன் மற்றும்
அழகுதனைக் கண்டேன்நல் லின்பங் கண்டேன்''[10]

என்று கூறி இயற்கையழகு இதயத்தையே வழங்கும் இன்பத்தைச் சுட்டுவதுடன் அது வழங்கும் இன்பம் நல்லின்பம் என்று விதந்தும் குறிப்பிடுகின்றார். இயற்கையில் அழகைக் கண்ட பாரதிதாசன் இயற்கைக்கே அழகு எனத் தமிழ்க் கவிதையுலகில் பெயர் சூட்டிய சிறப்புக் குரியவராகத் திகழ்கின்றார். இக்கருத்துடன் பாரதிதாசன் வாணிதாசன் இருவர்தம் அழகு நோக்கும் இங்கு ஆய்வு செய்யப்படுகின்றன.

**காலைக் கவின்**

விடிமுக வேளையிற் கோழி கூவிட, எங்கும் நிறைந்த இருளைக் கதிரோன் தங்க மேழியால் உழுத பின்னர் உலகக் காட்சிகள் தோன்றத் தொடங்கிய நிலையை,

''ஆழிசூழ் உலகின் காட்சி
அரும்பிற்று! முனைய விழ்ந்து
வாழிய வைய மென்று
மலர்ந்தது காலை வானம்!''[11]

என்று பாரதிதாசன் கூறுகின்றார்.

எங்கும் நிறைந்த இயற்கையாம் எழில் நங்கை விடியற் கால வேளையில் இருள் திரையை விலக்கிக் கிழக்கு வானில் புன்னகை பூத்துப் பூக்களிற் சிரித்துப் போற்றுகள் சிந்துவதாகவும், அலைகடற் பரப்பெல்லாம் பொலிவேற்றும் அவ்வழகி, தன் காதற் கொலை விழித் தூதால் காண்பார் கருத்தினை மயக்கிப் புன்னகையால் உள்ளத்தைக் கொண்டதாகவும் வாணிதாசன் குறிப்பிடுவது காலை வாளின் கவின் மயக்கில் கவிஞரின் இதயம் பறிபோன பாங்கினைக் காட்டுவதாக உள்ளது.[12]

பொழுது புலருங் காலைப்பொழுதில், மரஞ் செடி கொடிகளிற் பூத்துப் பெருகும் அழகுப் பொலிவைப் புத்தாடை பூண்ட மணமக்கள் பொலிவுடன் அவர் ஒப்பிட்டுப்

''புத்தாடை மணமக்கள் பூரிப்பைப் போலப்
புலர்காலை வீச்சொளியில் மரஞ்செடிகள் பூக்கும்''[13]

எனக் குறிப்பிடுகின்றார். மேலும் அவர் காலைப்பொழுதின் வருகை நோக்கிப் பறவைகள் பள்ளியெழுச்சிப் பாடல் பாடுவதாகவும், அடிவானம் பரிதிக்காக அழகு செய்வதாகவும், குறிப்பிடுவதுடன் அவ்வாறு அடிவானம் பரிதியின் வருகையை உலகுக்கு உணர்த்தும் அறிவிப்பாகச் செய்யும் அழகின் சிறப்பு நோக்கி அதனைப் பேரழகு[14] என்று சுட்டுதலும் தெரிகின்றது. அழகுக் கோலங் கொண்ட கீழ்வானை,

''மன்றல் மணிமாடத் தொடுவான்[15]

என்றும், அந்த மணவறையில் தென்றல் மணம் பரப்பச் செடி கொடிகள் பாட்டிசைக்க, நெய்தற் கடற்கரைகள் தம் நீண்ட அலைக் கரத்தால் நெடிய முழுவார்க்கும் இன்பச் சூழலையும் எடுத்துக் காட்டுகின்றார்.

காலை வானின் அழகுவளங் குறித்து வாணிதாசன் அதனைப் பேரழகு எனச் சுட்டுவது அவர் அழகு நோக்கையும், வையத்தை வாழ்த்திக் காலை வானம் மலர்வதக்கப் பாரதிதாசன் குறிப்பிடுவது[16] அழகு நோக்கில் இடங் கொண்ட சமுதாயப் பார்வையையும் காட்டுகின்றது.

உலகக் காட்சிகளை மாந்தர் காணமுடியாது கருவண்ணப் பேருருவால் மூடிமறைக்கும் இருள், தன் வரவால் ஓடி ஒளிந்தமை கண்டு மகிழ்ச்சி கொண்ட,

''இளங்கதிர் பொன்னி றத்தை
எங்கணும் இறைக்க லானான்''[17]

என்று பாரதிதாசனும், வானில் தோன்றிய செந்நிற எழிற்காட்சி வளம் பெறுமாறு பரிதி

'தானொரு ஓவியம் போல்
பொன்னிறம் தடவும்''[18]

என வாணிதாசனும் குறிப்பிடுகின்றனர்.

இவ்வாறு பொன்னிறப் பொலிவு பெற்ற வானப் படத்தில் கதிரவனாகிய ஓவியன் புதிய வயிர வண்ணங்குழைத்து இணையற்ற மலைக் காட்சியும், எழில்மிக்க சோலையும் எழுதி மக்களை மகிழ்விக்கும் இயற்கையின் அழகுப் படைப்பைக் காட்டுவதும், வானில் ஓவியக் காட்சிகளை வரையும் கதிரவனை மக்கள் ஓவியங்களைக் கண்டு களிக்க ஒளியும் தருபவனாகக் கொண்டு,

''கண் காணும் ஓவியம் அனைத்தும்—
அழகு
காட்டப் புரிந்ததும் கதிர்தான்!''[19]

எனச் சுட்டுவதும் பாரதிதாசனின் கலை நோக்கில் இடங்கொண்ட காலையின் எழிற் காட்சிகளாகும்.

இயற்கை அழகு வடிவாய் இலங்குவதுடன், பொருள்களில் குடிகொண்ட அழகைத் தன் ஒளியால் தெளிவுறக் காட்டவும் மாந்தர் அதனைக் கண்டு மகிழவும் துணையாகும் சிறப்பினைச் சுட்டி அழகு நோக்கில் இயற்கை கொண்ட முழுமைப்பாங்கினைப்பாரதிதாசன் காட்டுகின்றார்.

### அந்தியும் இருளும்

அந்தி வானத்தை அழகுக் கலையரசி தீட்டிய திரையாகவும், தங்க அலைகள் எங்கும் வீசும் தடங்கடலாகவும், வானவர் தாம் வாழ் வதற்கு அமைத்த புதிய நாடாகவும் காணும் வாணிதாசன்.

''பொன்னலைகள் வீசுகின்ற கடலோ!
வானோர்
புதுநாடோ! மலைசெறிந்த காடோ!
வானோர்
அன்னை எழில் கலையரசி
தீட்டுகின்ற
அழகு திரைச் சீலையோ! செங் குருதி
யாறோ
பொன் பழுக்கும் பேருலையோ!
அந்தி வானம்
புதுமையடா புதுமை ......''[20]

என வியக்கின்றார்.

வானம் பழமையானது. அந்திப் பொழுதும் காலத்தின் குறுங்கூறாக என்றும் இடம் பெறுவது அந்தியில் தோன்றும் வானக் காட்சியோ, நாள்தோறும் கணந்தோறும் மாறக்கூடிய தென்பதைப் 'புதுமையடா புதுமை' எனக் கவிஞர் குறிப்பிட்டுக் காலத் தால் பழமை கொண்ட இயற்கை, தான் கொண்ட கோலத்தால் புதுமை படைக்கும் இயல்பினை எடுத்துக்காட்டித் தம் அழகு நோக்கைத் தெளிவுறுத்துகின்றார்.

அந்திப் பொழுதை அடுத்துத் தோன்றும் இருளிலும் பாரதிதாசன் கலைக்கண்கள் எழிலையே காண்கின்றன. விண்ணும், மண் ணும் பரந்து நிற்கும் இருளைப் பெண்ணாக்கி அவ்விருள் நங்கையின கூந்தற் கொண்டை யில் குளிர்நிலவாகிய வயிரவில்லை விளங்கும் வனப்பைப் புகழ்கின்றனர்[21] உலகில் எங்கும் பரந்துள்ள இருள், அழகுப் பொருள் கள் பலவும் தம் எழில் வளத்தால் சிறப்புறத் துணை செய்வதாகக் குறிப்பிடும் அவர்,

''அனைத்துள்ளும் அழகு நீயே!''[22]

என்று அதனை அழகின் மூலவேராகச் சுட் டுதல் இயற்கைபால் அவர்கொண்ட அன்பின் ஆழத்தைக் காட்டுகின்றது.

இருளைக் காட்டோடும், மடமை மலிந்த கல் லார் உள்ளத்தோடும் பிற புலவர்கள் போல் பாரதிதாசனும் ஒப்பிட்டுக் கூறினாலும் அழகு நோக்கை, ஆழ்நோக்காய்'க் கொண்டு தாம் படைத்த 'அழகின் சிரிப்பில்' அவர் தம் கண்ணும்கருத்தும் இருளிலும்எழிலைக்கண்டு காட்டுவதுடன், இருளே பிறபொருள்களின் எழிலைக் காட்டுவதாகவும் கூறுவது குறிப் பிடத்தக்கது. இருளின் துன்பங்களை நினைப் பூட்டாமல் அது தரும் இன்பங்களையே பாடுவது, இயற்கைபால் பாரதிதாசன் கொண்ட பக்தியைக் காட்டுகின்றது[23] என்ற கூற்றும் ஏற்புடையதே.

### நிலவு

பாலொளி பரப்பி வானில் விளங்கும் முழுமதி யில் நிறைந்த அமுத கலை குறித்து அந் நிலவையே அமுதமாக்கி வாணிதாசன்,

''முத்தொளி வீசும் நல்ல
முழு நிலா அமுதே!''[24]

என விளக்குகின்றார். கதிரும் நிலவும் காட்டுகின்ற வனப்பு வடிவிலும், அவை விளைக்கும்ஒளிப் பொலிவிலும் உள்ளத்தைக் கொள்ளை கொடுத்த பாரதிதாசன் அவற்றை

''தெரிந்த கதிரும் நிலவும்—பலவாய்ச்
செறிந்த உலகின் அழகே''[25]

எனக் குறிப்பிடுவது, உலகில் அழகு வடி வாக விளங்கும் இயற்கையை உலகின் அழகாகவே காணும், அவர்தம் கலை நோக்

கிற்குக் காட்டாகின்றது. நிலவின் எழிற் காட்சியை விழியால் தழுவி மனத்தால் உண்ட உதாரன்.[26]

> ''சிந்தாமல் சிதறாமல் அழகை யெல்லாம்
> சேகரித்துக் குளிரேற்றி ஒளியும் ஊட்டி
> இந்தாவென்றே இயற்கை அன்னை வானில்
> எழில் வாழ்வைச் சித்தரித்த வண்ணந் தானோ![27]''

என வினவி வியக்கின்றான்.

மேலும் அவன் நிலவை இன்பமென்னும் பால் நுரையாகவும் குளிர் விளக்காகவும் குறிப்பிட்டு அந்நிலவின் எழில் வளத்தில் மூழ்கியதால் தன்னையே இழந்ததாகக் குறிப்பிடுகிறான். எதிலும் தன்னை இழக் காத பெருமிதம் கொண்ட கவி, இயற்கை எழிலில் தன்னையிழந்ததாகக் கூறுதல், இயற்கையுடன் ஒன்றிய அவர்தம் உணர் வுக்குச் சான்றாகும்.

**நிலவும் இருளும்**

இருள் சூழ்ந்த இவ்வுலகில் தன் ஒளியாலும், உருவாலும் அழகாட்சி புரியும் நிலவைப்

> ''பிந்தியந்தக் காரிருள் தான் சிரித்த துண்டோ?
> பெருஞ்சிரிப்பின் ஒளிமுத்தோ நிலவே நீதான்?[28]''

என உதாரன் வாயிலாகக் கேட்கும் பாரதி தாசன் இருளையும் அதனைப் போக்கும் நிலவையும் தம் அழகு நோக்கால் இணைத்த பாங்கு சிறந்தகலைப் படைப்பாகும். இருளை அழகின் அடிப்படையாகச் சுட்டிய கவிஞர் அவ்விருளின் சிரிப்பாகக் காட்டும் நிலவை அழகின் வடிவாகவும், வாழ்வாகவும் குறிப் பிடுதல் இயற்கையைப் புனையும் போக்கில் அவர் உணர்த்தும் அழகு நோக்கின் முதன் மையைக் காட்டுகின்றது,

**மலர் அழகின் தாயகம்**

அல்லி மலரின் வனப்பார்ந்த வடிவம் அழகை எங்கும் அள்ளி வீசுவதாக வாணிதாசன்,

> ''ஆடுஞ் செவ்வல்லி மலர் அழகை
> அள்ளி இறைக்குதடி!''[29]

என்று கூறுகின்றார். மேலும்தாமரைமொட்டு டுக்குள் அழகு தங்கியிருப்பாகக் குறிப்பிடு வதும்[30] மாலைக் கால முடிவில் பூண்டில் வண்டும், புதரில் மானும், அடர் காட்டில் இருளும் அடங்குவது போல், அழகு பூவில் அடங்குவதாகக் கூறுவதும், அழகுக்கும் பூக் களுக்கும் பொருந்திய நெருக்கங்கருதி அழ கின் தாயகமாகப் பூக்களைக் கொள்ளும் நோக்கினை வெளிப்படுத்துகின்றது. செந்தா மரை மலர்களை மாணிக்கப் பறவைகளாக வும், அவற்றின் இனிய மணம், அதனைப பரப்பும் இளந்தென்றல், அவற்றில் மொய்க் கும் வண்டின் பாடல் இவைகளை எழிலின் கூத்தாகவுங் கண்டு மகிழ்ந்து அவ்வழகு நட னத்தில் தன்னை இழந்ததாகப் பாரதிதாசன் குறிப்பிடல்,[32] இயற்கை, மாந்தரின் உணர்வை ஆட்கொண்டு உலக நினைவை மறக்கச் செய்யும் எழிலாற்றலுடன் விளங்கு தற்கு ஏற்ற சான்றாகும்.

## அடிக்குறிப்புகள்

1 திருக்குறள் 148
கம்பர் — பால காண்டம் — மிதிலைக் காட்சிப் படலம்
2 B. இராமநாதன், கவிஞரும் காதலும் ப. 7
3 மு. வரதராசன், இலக்கியத் திறன் ப. 27
4 திருக் கோவையார், பேராசிரியர் உரை, ப 8
5 மா. இலெ. தங்கப்பா, வாணிதாசனார் நினைவு மலர்
6 அ.ச. ஞானசம்பந்தம், இன்றைய இலக்கியம் ப. 136
7 மா. செல்வராசன், வைகறை மலர்கள், ''அழியா அழகு''
8 முடியரசன், முடியரசன் கவிதைகள், ப. 31
9 பாரதிதாசன், அழகின் சிரிப்பு ''கவிஞர் கூறுகிறார்''
10 மேற்படி ப. 6
11 மேற்படி ப. 35
12 வாணிதாசன், வாணிதாசன் கவிதைகள் தொ. 1, ப. 32

13 ,, பாட்டரங்கப் பாடல்கள் ப. 113
14 ,, எழில் விருத்தம் ப. 39
15 ,, பாட்டரங்கப் பாடல்கள் ப. 169
16 பாரதிதாசன், அழகின் சிரிப்பு ப. 35
17 மேற்படி ப. 8
18 வாணிதாசன், தமிழச்சி ப. 1
19 பாரதிதாசன், தமிழச்சியின் கத்தி. ப. 34
20 வாணிதாசன், கொடி முல்லை ப. 8
21 பாரதிதாசன், அழகின் சிரிப்பு ப. 51
22 மேற்படி ப. 52
23 அ. அறிவொளி, பாரதிதாசனில் புதிய பார்வை, பன் 97,98
24 வாணிதாசன், எழிலோவியம், ப. 40
25 பாரதிதாசன். சேரதாண்டவம் ப. 22
26 பாரதிதாசன் கவிதைகள், தொ. 1, ப, 19
27 மேற்படி ப. 22
28 மேற்படி ப. 20
29 வாணிதாசன், வாணிதாசன் கவிதைகள் தொ. 1, ப. 30
30 மேற்படி. ப. 5
31 மேற்படி, ப, 43
32 பாரதிதாசன். அழகின் சிரிப்பு, ப. 29

## எது நாகரிகம்?

ஒளியும் காற்றும் அற்ற இருட்டறையில் அடைக்கப்பட்டோன் உடல்நிலை எவ்வாறு பாதிக்கப்படுமோ, அதுபோல விடுதலை உணர்ச்சியும், கல்வியுமற்ற அடிமையிருளிலே ஆயிரக்கணக்கான ஆண்டுகள் கிடந்துழன்ற தமிழினத்தாரின் உளநிலையும் பாதிக்கப்பட்டிருக்கிறது. காய்ச்சல் கிடந்தவனுக்கு நல்ல உணவும் கைக்குமாறுபோல, இவர்கட்கு நல்லனவெல்லாம் வெறுக்கத்தக்கனவாகப் படுகின்றன. பைத்தியம் பிடித்தவள் மருத்துவரையே அடிக்க முயலுமாப்போல, இவர்கள் நல்ல அறிஞர்களை தீயர்களெனத் தாக்கவும் முயலுகின்றனர். இதனால் நோயாளிகள் நிறைந்த தெருவைப் போலத் தமிழகம் குழம்பிய நிலையிற் காட்சியளிக்கிறது. முற்றும் தமிழே பேசுபவனை விட ஒன்றிரண்டு ஆங்கிலம் கலந்து பேசுபவனையே மதிக்கத் தோன்றுகிறது நமக்கு! தாய் மொழியில் நிறைய அறிவு பெற்றிருந்தும் பிறமொழிகளிற் குறைவான அறிவு பெறாததை ஒரு குறையாகவே கருதுகிறோம், இக்காலத்திலும்! தன்னாட்டு உடையணிந்தவனை விட மேனாட்டு உடையணிந்தவனுக்குத்தான் மிடுக்கான நடை வருகிறது, இயல்பாக! குசராத்தியும், மராத்தியும் ஆட்சிமொழியாக்கப்பட்டுவிட்டன. இந்தியோ அனைத்திந்திய மொழியாகி அரசோச்சுகிறது என்பனவெல்லாம் தெரிந்தும், நமது தாயை அரியணையேற்றத் தயங்குகிறார்கள், நம்மினத்தவர்கள்! இதுவா நாகரிகம்?

தமிழண்ணல்
தாலாட்டு

# உடுமலை வட்டக் காட்டு நாய்க்கர் வழக்காறுகள்

டாக்டர் சிற்பி பாலசுப்பிரமணியம்,
தமிழ்த் துறைத் தலைவர்,
ந.க.ம. கல்லூரி, பொள்ளாச்சி.

தமிழகத்தில் பொதுவாக 'கோடங்கி' என்றும் 'குடுகுடுப்பைக்காரர்' என்றும் அழைக்கப்படுகின்ற குல மரபினர் பரவலாகக் காணப்படுகின்றனர். இவர்களில் ஒரு பிரிவினர் உடுமலை வட்டம் பெருமாள் புதூர் கிராமத்தில் வாழ்ந்து வருகின்றனர்.

இதே இனத்தார் கோவிந்தபுரம், குப்பாண்டம்பாளையம், சென்றாம் பாளையம், பார்த்தசாரதிபுரம், நாட்டாமங்கலம் ஆகிய சிற்றூர்களிலும் உள்ளனர். இவர்களின் குல மரபு, வழக்காறுகளைக் குறித்து பெருமாள்புதூரைச் சேர்ந்த தகவலாளர்களிடமிருந்து நேர்முகமாகப் பெற்ற செய்திகள் இக் கட்டுரையில் தரப்படுகின்றன.

## பெயர்க் காரணம்

குறி சொல்லிப் பிழைக்கும் இவர்கள் கரங்களில் சிறிய உடுக்கைகளை ஏந்தி ஒலிப்பது வழக்கம். நாட்டுப்புற மக்கள் உடுக்கையைக் குடுகுடுப்பைஎன ஓசை காரணமாக அழைப்பதால் இவர்களுக்குக் குடுகுடுப்பைக்காரர் என்ற பெயர் அமைந்தது.

> ''இவர்கள் ஒருவித மகாராஷ்டக சாதியார். இவர்கள் கூட்டம் கூட்டமாகத் திரியும் நாடோடிகள். இவர்கள் கிராமங்களிலும் பட்டணங்களிலும் எதிர் கால நிகழ்ச்சி கூறுவதாய்ச் சிற்றுடுக்கை கையிற் கொண்டு குடுகுடுவென்று தட்டிக்கொண்டு அம்பா பலுக்குகிறாளென விடியற்காலத்தில் கூறிக்கொண்டு விடிந்த பின் அரிசி காசு பழந்துணிகள் கைக்கொண்டு கள்ளுக்கு மாறிப் பிழைக்கும் சாதியார்'',

என அபிதான சிந்தாமணி கூறும்[1]. இவ்வாறே 'தென்னிந்திய சாதிகள் பழங்குடிகள் என்னும் நூ லில் தர்ஸ்டனும் குறிப்பிடுகின்றார்[2].

கோடங்கி என்றும் கோணங்கி என்றும் இவர்கள் அழைக்கப்படுவதுண்டு. கோணங்கி என்பது ஒரு சாதிப் பெயராகவும், திருமால் நிகழ்த்திய ஒருவகைக் கோமாளிக் கூத்தாகவும் கூறுவார் உளர்[3]. எனினும் கூத்துடன் தொடர்புடையதாக இக்குலப்பெயரைக் கூற முடியவில்லை. தலையிலே வண்ண நிறமுள்ள தலைப்பாகை கட்டிக் கொண்டு அது போலவே சட்டையும் அதன்மேல் மேலங்கியும் அணிகிற இவர்கள் பழக்கத்தைப் பார்க்கும் போது ஆடைகளோடு தொடர்புடைய பெயராகவே கோடங்கி காட்சி தருகிறது. அண்மைக் காலம் வரையிலும் பழந்துணிகளை ஒன்றன்மேல் ஒன்றாக வைத்துத் தைத்து விருப்பத்தோடு அணிகிற பழக்கம் அக்குலத்தாருக்கு இருந்ததாக அறிகிறோம்.[4] அதனால் அணியும் அங்கி காரணமாக இப்பெயர் இவர்களுக்கு அமைந்திருக்கலாம்.

தகவலாளர்கள் மேற்குறித்த பெயர்களைக் காட்டிலும் 'காட்டு நாய்க்கர்' என்று தங்களை அழைப்பதையே விருப்புகின்றனர்.

## குலமரபு

இவர்கள் தங்கள் முன்னோர்கள் வடநாட்டிலிருந்து தமிழ் நாட்டுக்கு குடிபெயர்ந்ததாக நம்புகிறார்கள். இது குறித்துத் தெரிவிக்கப்படும கதை:—

> ''டெல்லியை ஆண்ட முஸ்லிம் அரசன் எங்கள் குலத்துப் பெண்ணை மணக்க

விரும்பினான். அதனை விரும்பாத நாங்கள் பெண் கொடுக்க மறுத்தோம். அரசன் படைகளை அனுப்பவே, அப்படைகளிடமிருந்து தப்ப தெற்கே பயணமானோம். இடையிலே ஆறு (கண்டகி) குறுக்கிடுகிறது. படையோ நெருங்கி விட்டது. அப்போது நாங்கள் கடவுளைப் பிரார்த்தித்தோம். உடனே இக்கரையிலும் அக்கரையிலும் இருந்த புங்க மரங்கள் வளைந்து ஆற்றுக்குக் குறுக்கே விழுந்தன. அந்த மரங்களையே பாலமாக்கி அடுத்த கரைக்குப் போய் விட்டோம். அதற்குள்ளாக முஸ்லிம் படை வந்துவிட்டது. கடவுள் அருளால் மறுபடியும் மரங்கள் நிமிர்ந்து விட்டன. படை ஆற்றைக் கடக்க முடியவில்லை. தப்பி வந்தோம்''[5].

காட்டு நாய்க்கர் குலத்தைச் சேர்ந்த முதியவர் ஒருவர் இக்கதையைத் தெரிவித்தார். கம்பள நாய்க்கர் குலத்தின் பாரம்பரியத்தில் இக்கதை கூறப்படுவதாகப்புலவர் செ.இராசு எடுத்துக்காட்டுகின்றார்[6]. பாளையப்பாட்டுக்களின் வம்சாவழி என்ற நூலில் விருப்பாட்சி, ஆயக்குடி, சங்ககிரி, சோத்தம்பட்டி, துங்காவி, சல்லிபட்டி, நெகமம் முதலிய பாளையக்காரர் வரலாறுகளில் இதே கதை திரும்பத் திரும்பச் சொல்லப்பட்டுள்ளது[7].

மேலும் தாங்கள் பாஞ்சாலங்குறிச்சியை ஆண்ட கம்பள நாய்க்கரான கட்டபொம்மன் மரபினர் என்றும் வெள்ளைக்காரர்கள் கட்டபொம்மனை அழித்த பிறகு அங்கு வாழப் பிடிக்காமல் குடிபெயர்ந்து வந்துவிட்டதாகவும் கூறுகின்றனர்[8].

இக்கூற்றுக்களால் காட்டு நாய்க்கர் தங்களைக் கம்பள நாய்க்கர் மரபினராக அடையாளம் காட்டிக் கொள்கிறார்கள். கம்பள நாய்க்கர் அரசர்களாகவும் ஜமீன்தார்களாகவும் இருந்த நிலையை நோக்க இவர்கள் நாடோடிகளாகவும், பிச்சையெடுக்கும் பழக்கமுள்ளவர்களாகவும் காணப்படுவதால் இவர்கள் கூறும் கதைகள் பற்றி ஐயம் எழுகிறது. ஒருவேளை கம்பளத்தார் ஒன்பது பிரிவினர் என்று பேசப்படுவதால் அதில் ஒரு பிரிவினராக இவர்கள் இருக்கலாம். அல்லது சமுதாய இயலில் கீழ் நிலையில் உள்ளோர் தம்மை உயர்த்திக் கொள்ளும் மேல்நிலை ஆக்கம் (Sanskritisation) என்ற கோட்பாட்டின் அடிப்படையில் இவர்கள் சாதியை உயர்த்திக் கூறி இருக்கலாம்[9].

உடுமலைப்பேட்டையிலிருந்து ஏறத்தாழ 40 கி.மீ. தெற்கில் மேற்குத்தொடர்ச்சி மலையில் தழிஞ்சி என்னும் இடத்தில் விவசாய நிலங்கள் தங்களுக்கு இருந்ததாகவும் அரசோ, நிலவுடைமையாளர்களோ அவற்றைப் பறித்துக் கொண்டதாகவும் பெரியோர்கள் கூறியுள்ளதாகச் சிலர் குறிப்பிட்டனர்[10]. இச்செய்தியையும் மலபார் வயநாடு பகுதியில் வாழும் குறும்பர் இனத்தாருக்குக் காட்டு நாய்க்கர் என்ற பெயர் வழங்குகிற செய்தியையும் ஒப்பிட்டு ஆராய்ந்தால் புதிய உண்மைகள் தெரியக்கூடும்.

**உட்பிரிவுகள்**

தங்களுக்குள் பல உட்பிரிவுகள் அமைந்திருப்பதைத் தகவலாளர்கள் விளக்கினார்கள்[11].

1. சிற்றுடுக்கை அடித்துக் குறி சொல்லுவோர்.
2. தும்புரு என்னும் மூங்கிலால் செய்த கருவியை வாசித்துப் பிச்சைக்குச் செல்வோர்.
3. கை ரேகை பார்க்கிறவர்கள்.
4. மாரியம்மன் சிலையைத் தலையில் ஒரு பெட்டியில் வைத்து வீடு வீடாய் எடுத்துச் செல்வோர்.
5. திருநாமம் வைத்துக் காலில் சலங்கையோடு பந்தம் எடுத்துச் செல்வோர்.

இவ்வாறு பல பிரிவுகள் இருந்தாலும் பெருமாள்புதூர் வாசிகள் உடுக்கையடித்துக் குறி சொல்லும் வழக்கத்தையே பின்பற்றி வருபவர்கள்.

சிறிய மரக்கட்டையைக் குடைந்து ஆட்டு ஜவ்வினால் இருபுறமும் மூடி சிற்றுடுக்கை செய்யப்படுகிறது. உடுக்கையின் இருபுறமும் ஒசையெழுப்ப இரண்டு கெட்டியான நூல்களின் முனையில் மெழுகு உருண்டைகள் ஒட்டப்படுகின்றன. உடுக்கையின் நடுவில் கைப்பிடிக்கு வசதியாக ஒரு வண்ணக் கைக் குட்டையும், உடுக்கையை அசைக்கும்போது ஓசையின் தொனியை அதிகரிக்கச், சிறுசலங்கை மணிகளும் இணைக்கப்படுகின்றன. இந்தச் சிற்றுடுக்கையை லாவகமாக இவர்கள் அடிக்கும்போது ஒரு விசித்திர மயக்க உணர்ச்சி நமக்குள் ஏற்படுகின்றது.

**தொழில்**

காட்டு நாய்க்கர் இனத்தாரின் முக்கியமான தொழில் ஊர் ஊராகச் சென்று குறிசொல்லுதல் ஆகும். நாடோடிகளாகவே இன்னும் திரியும் இயல்புள்ள இவர்கள் தனித் தனிக்

குழுக்களாகத் தமிழகம் முழுவதும் பயணம் செல்லுகிறார்கள். சிற்றூர்களிலும் நகரங் களிலும் கோயில், சந்தைப்பேட்டை, மரத் தடி நிழல் என்று பொது இடங்களைத் தேர்ந்தெடுத்துத் தங்குகின்றார்கள். இவர் களில் ஆண்கள் விடிகாலைப் பொழுது முதல் தொடங்கி, வீடு வீடாகப் பாடல்கள் பாடிக் கொணடு தானியம், காசு பெறுகின்றார்கள்.

ஆண்டுக்கு ஒருமுறை எங்கே சென்றிருந் தாலும் தங்கள் ஊருக்குத் திரும்பி விடு கிறார்கள். மாசி மாதம் 10–ம் தேதியி லிருந்து பங்குனி மாதக் கடைசிவரை நாற் பது அல்லது ஐம்பது நாட்கள் குடும்பத் தோடும் உறவினர்களோடும் தங்கி இருப்பது இவர்கள் வழக்கம்[15].

குறி சொல்லப் போகாத காலங்களில் வேட் டைக்குப் போவார்கள். புனுகுப் பூனை, கீரி, முயல், முள்ளம்பன்றி, ஆகிய விலங்குகளை வேட்டையாடுதலும், மீன்பிடிப்பதும் இவர் களது உப தொழில். நூலால் வலை பின்னி விலங்குகளைப் பிடிக்கும் பழக்கம் இவர் களுக்கு உண்டு.

குறி சொல்லப் போகும் போது தலைப் பாகை, வண்ண உடைகள், நெற்றியில் நாமம், குங்குமம் இவைகளோடு செல்லும் இவர்கள் உடுக்கையோடு கூட கையில் ஏடு களும் வைத்திருக்கின்றனர். அந்த ஏடுகளில் என்ன எழுதி இருக்கிறது என்று பார்க்க விரும்பியபோது தகவலாளர்கள் கூச்சத் தோடு பிரித்துக் காட்டினார்கள். அந்த ஏடு களில் குழந்தைகள் வரைவது போலத் திருத்தமில்லாத பறவைகளின் சித்திரங் களும், செடிகொடிகளின் சித்திரங்களும் காணப்பட்டன. இவைகளுக்கு ஏதேனும் உட்பொருள் உண்டா என்று கேட்டபோது, ‘சும்மா கிறுக்கி’ வைத்திருப்பதாக இவர்கள் தெரிவித்தார்கள். குறிகேட்பவர்களுக்கு பிர மிப்பையும் அச்சத்தையும் உண்டு பண்ணவே ஏட்டுச்சுவடி, குடுகுடுப்பை ஒலி, வாக்குச் சாதுரியம் ஆகியவற்றைப் பயன்படுத்து வதாகத் தெரிவித்தார்கள். சோதிட ஞானம் என்று எதுவும் தங்களுக்கு இல்லை என்ற தொழில் ரகசியத்தையும் வெளிப்படுத் தினார்கள்.

**சில பழக்க வழக்கங்கள்**

மாசி பங்குனி மாதங்களில் ஊர் திரும்பும் இவர்கள் அப்போது காளியம்மன் அல்லது கொண்டையம்மன் நோம்பு கொண்டாடுவது வழக்கம். கொடுமுடியிலிருந்து தீர்த்தம் கொண்டு வருகிறார்கள். அம்மன் வழி பாட்டில் முக்கியமான ஒரு சடங்காக ஆவரஞ் செடிக்கு வழிபாடு செயயப்படுவதைக் குறிப் பிடவேண்டும். இதன் காரணம் புலனாக வில்லை. கொங்குநாட்டின் இப்பகுதிகளில் பொங்கள் திருவிழாவின் போது காப்புக் கட் டும் சடங்கில் ஆவரம் பூ முக்கிய இடம் பெறு வதையும் காட்டு நாய்க்கர் வழிபாட்டையும் ஒப்பிட்டு ஆராய்ந்தால் இதன் காரணம் தெளிவாகலாம். கொண்டையம்மன் வழி பாட்டில் அரளிப்பூச் சூட்டி, பச்சை மா, பொரிகடலை, சாராயம் முதலியன படைத் துப் பொங்கல் வைக்கின்றனர்.

திருமணம் பற்றிய சில வழக்கங்களும் உண்டு. ஒரு பெண்ணைத் திருமணம் செய்ய விரும்பும் ஆண்மகன் ஆறுமாதம் முதல் ஓர் ஆண்டு வரை பெண் வீட்டுக்காரர்களுடன் கூடவே சுற்றித் திரிதல் வேண்டும். அதன் பிறகு பெண் வீட்டார் சம்மதித்தால் திரு மணம் நடக்கும். பெற்றோர் சம்மதமில்லா விட்டால் பெண்ணைக் கூட்டிக் கொண்டு போய்த் திருமணம் செய்து கொள்ளும் வழக் கமும் மிகுதியாக உள்ளது.

பட்டக்காரர் என்றும் உடையார் என்றும் சமூகத்தலைவர்கள் உள்ளனர். முறையான திருமணம் இவர்கள் முன்னிலையில் கங் கணம் கட்டி நடத்தப்படும். பெரும்பாலும் செவ்வாய் இரவு தொடங்கிப் புதன் காலை நேரத்தில் தாலி கட்டுவதாகத் திருமணங் களை அமைத்துக் கொள்கின்றனர்.

திருமணத்துக்கு முதல் நாள் ஊர்ப்பொது இடத்தில் கம்பம் நட்டுதல் என்ற சடங்கு நிகழும். அக்கம்பத்தில் பாச்சாங்கோல் இணைத்துக் கட்டப்படும். பிறகு இக்கம்பம் திருமணம் நடக்கும் இடத்துக்குக் கொண்டு வரப்படும், மாப்பிள்ளை பரிசப் பணமாக பன் னிரண்டு ரூபாய் செலுத்த வேண்டும். மொத்தமாக நாற்பது அல்லது நாற்பத் தெட்டு ரூபாய் ‘ஓலி’ப் பணம் என்று பட்டக் காரர் முன்னிலையில் செலுத்துவதும்உண்டு.

முதல் நாள் இரவும் திருமணத்தன்று மதிய மும் விருந்து உண்டு. முதல் நாள் இரவு மாப்பிள்ளையையும் பெண்ணையும் அமர வைத்துப் பாட்டுப்பாடி பெண்கள் அரிசி தூவுவார்கள். இப்பாடல்கள் மாப்பிள்ளை அல்லது பெண்ணைக் குறித்த கேலிப் பாடல் களாக இருக்கும்.

தாலி இருபக்கமும் கருகமணியும் நடுவில் தங்கத்தால் ஆன வட்டவடிவக் காசும் கொண்ட சரட்டால் ஆனது. தாலி கட்டும்

மணமேடையின் முன் ஒன்றன் மேல் ஒன்றாக அடுக்கிய மூன்று பானைகள் வைக்கப்பட்டிருக்கும். கீழ் இரண்டு பானைகளில் தண்ணீரும் மேல் பானையில் விளக்கும் வைக்கப்பட்டிருக்கும். இப்பானை வரிசைக்கு 'அரியேனி' என்று பெயர். குடும்ப விளக்கு ஏற்றப்படுவதையும் குளிர்ச்சியான வாழ்க்கை அமைய வேண்டுமென்பதையும் 'அரியேனி' குறிப்பாகச் சுட்டுகிறது என லாம்.

காட்டு நாய்க்கர்கள் குடும்பங்களில் மணமுறிவு (Divorce) செய்து கொள்வது உண்டு. யார் குற்றம் செய்தார்கள் என்று கூட்டத்தார் அபராதத் தொகை விதிப்பது உண்டு. முதல் திருமணத் துக் குழந்தைகள் கணவரோடுதான் வாழும். ஆனால் மணமுறிவுக்குப் பிறகு சிறுகுழந்தைகளைச் சில காலம் வளர்க்கப் பெண் முன் வந்தால் உதவிப் பணம் தரப்பட வேண்டும்.

மரணம் நேர்ந்த வீட்டில் இருப்பவர்கள் மீது சமுதாயம் குற்றம் வைத்திருந்தால் அனைவரும் அவ்வீட்டுக்குச் செல்வார்கள். ஆனால் அவர்கள் விதிக்கும் தண்டனைத் தொகையைக் கட்டினால் அல்லாமல் இறந்தவர் உடலை எடுக்க அனுமதிக்க மாட்டார்கள்.

இன்னமும் கூட நாடோடி வாழ்க்கையையே மேற்கொண்டிருக்கும் காட்டு நாய்க்கர்கள் தங்களுக்குள் எழும் தீராத வழக்குகளைத் தீர்ப்பதற்கு மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை சபை கூட்டுவார்கள். இந்தச் சபையில் தலைவராக இருந்து, மறு முறையீட்டுக்கு இடமில்லாமல் இறுதித் தீர்ப்பு வழங்குபவர் காஞ்சிபுரம் கிருஷ்ணசாமி தாத்தாச்சாரியார் என்ற அந்தணர். இவரை மீறி இக்குலத்தார் நடப்பதில்லை. அந்தணர் ஒருவர் இவர்களுக்கு எவ்வாறு மேலாண்மை உடையவரானார் என்பது தெளிவாகவில்லை.

**வாய்மொழி இலக்கியம்**

காட்டு நாய்க்கர் குலப்பெண்கள் இப்போதெல்லாம் விசாயக் கூலி வேலைகளுக்கும் செல்லுகிறார்கள். என்றாலும் பழைய மரபைப் பின்பற்றி ஊர் ஊராகச்சென்று வீடு வீடாக நடந்து பாடலகள் பாடித் தானியமோ, காசோ பெற்று வருவதும் வழக்கமாக இருந்து வருகிறது.

கையில் ஒரு தட்டத்தில் நாகம் படமெடுத்திருப்பது போன்ற ஒரு பொம்மையை ஏந்திக் கொண்டு வாசல்களில் நின்று நீட்டி முழக்கி அவர்களுக்கே உரிய ராகத்தில் பாடுவார்கள். பரம்பரையாகக் கேள்விப்பட்ட பாடல் வரிகளையே திரும்பத் திரும்பப் பாடி வருகிறார்கள். ஒருவர் ஒரு வரியைப் பாடி முடிக்கும் போது அதே வரியை மற்றொருவர் திரும்பவும் பாடுகின்றார்.

நான்கு பாடல்களைத்தான் பெரிதும் இப்பெண்கள் பாடுகின்றார்கள். நல்ல தங்காள் பாட்டு, அமராவதி பாட்டு, வள்ளிப் பாட்டு, கிருஷ்ணன் பாட்டு என்பன அவை. இப்பாடல்களிலும் ஏறத்தாழ இருபத்தைந்து வரிகளையே திரும்பத் திரும்ப பாடுகிறார்கள்.

**நல்ல தங்காள் பாட்டு**

அச்சில் வந்துள்ள நல்லதங்காள் பாடலிலிருந்து மாறுபட்ட சிலவரிகளை இவர்களிடம் கேட்க முடிகிறது. அண்ணன் வீட்டுக்குப் போக நல்லதங்காள் முடிவு செய்கிறாள். அவள் கணவன் தடுக்கிறான். இப்பகுதியையே இவர்கள் பாடுகின்றார்கள்.

''சின்னஞ் சிறு வயது சித்தாடை
கட்ற வயசு
கொஞ்ச வயசுலே தங்கா கொண்டு
வந்து மாலைசூட்டி
மாலை வச்ச நாள் முதலா மறுவீடு
கண்டோ மில்லெ
தாலி கட்டி நாள் முதலா தாய்வீடு
கண்டோமில்லெ
தாய்வீடு பாக்கச் சொல்லி தானாத்
தவிக்கிறாளாம்
பொறந்த வீடு பாக்கச் சொல்லி
பொன்னா புலம்புறாளாம்''

கணவன் அறிவுரை கூறுகிறான்:

''அலுங்காதே புலம்பாதே தங்கா
பொறுமையுள்ள நல்லதங்கா
தாயில்லா வீட்டுக்கம்மா தடந்தேடிப்
போக வேண்டாம்
பெத்தவ உன்தாயானா பேருவச்சுக்
கூட்டிப் போவா(ள்)
வளத்தவ உன்தாயானா வரிசையுடன்
கூட்டிப் போவா(ள்)''

தாயில்லாத அண்ணன் வீட்டுக்குப் போனால் மதிப்பு இருக்காது என்று கணவன் சொல்லியும் ''எத்தினி இருந்தாலும் ராஜா போய் வாரோன் அண்ணன் வீடு'' என்று பிடிவாதம் பிடிக்கிறாள். அப்போது கணவன்.,

''கொண்ட புருஷன் பேச்சு பொஞ்சாதி
கேளும்பாராம்
மன்னவன் சொல்லும் பேச்சு மனசாரக்
கேளும்பாராம்

சந்தனம்மணந்த கையி சாணிதொட
நாளுமாச்சு
குங்குமம் மணந்த கையி கூலிகுத்த
நாளுமாச்சி''

என்று எச்சரிக்கை செய்கிறார். அவர் பேச்சைத் தட்டி நல்லதங்காள் புறப்படும் போது அபசகுணங்கள் விளைகின்றன.

''வீடுவிட்டு வெளியே போனா நாகம்
குறுக்குதம்மா
நாகனுட சயனமே தங்கா பொல்லாத
சயனமென்றார்
வீடுவிட்டு வெளியே வந்தா வீட்டு
பூனை கத்துதம்மா
பூனையுடெ சகுனம் தங்கா பொல்லாத
சயனமென்றார்''

ஆயினும் நல்லதங்காள், ''எத்தினி சொல்லிங்கூட் கேக்குலியே கொஞ்சம் கூட'' என்று வருத்தம் தொனிக்க இப்பாடலைப் பாடுகின்றனர். அச்சில் வந்துள்ள நல்ல தங்காள் கதையோடு இந்த வாய்மொழி இலக்கியம் ஒப்பிடத்தக்கது.

## அமராவதி பாட்டு

சித்திரா புத்திர நயினார் கதை என்று வழங்கும் கதைப் பாடலில் ஒரு பகுதியாக அமைந்திருப்பது அமராவதிகதை[14]. இதனைத் தான் அமராவதி பாட்டு என்று காட்டு நாய்க்கர் குலப்பெண்கள் பாடுகிறார்கள். அமராவதி என்ற செட்டிகுலப்பெண் தான தருமங்கள் பல செய்தும் சித்திரபுத்திரனை வழிபடாததால் அவர் கொடுத்த தண்டனைகளையும், அவள் தருமநெறிச் சிறப்பையும், இறுதியில் அவள் அருள் பெற்றதையும் சித்திரபுத்திர நாயனார் கதை கூறும். ஆனால் இந்தப் பெண்கள் பாடலிலோ கலியன் என்ற மகன் அவளுக்குப் பிறந்ததையும், அவன் திருமணத்துக்குப் பிறகு மாமியார் மருமகள் சண்டை விளைந்ததையும் விவரிக்கின்றார்கள். அவளுக்குப் பிள்ளையில்லாக் குறையை

''முக்கலமாம் சொத்திருக்க—
நம்மளுக்கு
வெளையாடப் பிள்ளையில்லே
வட்டலிலே சோறு போட்டா
—அமராவதி
வாரித் திங்கப் பிள்ளையில்லே
கிண்ணத்திலே சோறு போட்டா
—அமராவதி
கிள்ளித் திங்கப் பிள்ளையில்லே
விளையாடா முத்தத்துக்கு —அமராவதி
விளையாடப் பிள்ளையில்லே
இத்தினி தருமம் செய்து —கலியனெ
ஒலகத்துலெ பெத்தெடுத்தா''

குழந்தையை அருமையாக வளர்க்கின்றாள். பத்து வயதில் மகனுக்குத் திருமணம் செய்து வைக்கிறாள். மருமகள் வந்ததும் சண்டை தொடங்கி விடுகின்றது.

''மருமகளைக் கூட்டியாந்து— மாமியா
நல்ல புத்தி சொல்லுறாளாம்

உடனே மருமகள்,

''நீயாடி சொல்லுறது —புத்திமதி
நானாடி கேக்குறது''
எட்டி மயிர் புடிப்பா —கொண்ட
மாமியாரை
எண்ணாமத் தானுதைப்பா
குத்தி மயிர் புடிப்பா —கொண்ட
மாமியாரைக்
கூசாமத் தானுதைப்பா''

அப்போது தாய்மனம் பட்ட பாட்டையும் மகன்– மருமகள் செயலையும் உருக்கமாகக் கூறுகிறது இப்பாட்டு.

பெத்த அருமை என்ன —என் மகனெப்
பேரு வச்ச நேர்த்தி என்ன
வளர்த்த அருமை என்ன —என் மகனெ
வச்சிருந்த நேர்த்தி என்ன...
கையாலடிச்சாலோ —பெஞ்சாதிக்குக்
கை நோகுமென்று சொல்லி —ஒரு
மூங்கத் தடியெடுத்து —கொலைகாரி
ஓங்கி அடிச்சாளாம்
ஒரு மயிலு தூரத்துக்கு —பெத்த
மாதாவை
ஓட்டி விரட்டினாளாம்''

இந்நிலையில் அத்தாய் இறைவனை நினைத்து அழுதாள்.

''யாரை நெனச்சழுதா —படைச்ச
ஈஸ்வரனெ நெனச்சழுதா
எவரை நெனச்சழுதா —படைச்ச
ஆண்டவனை நெனச்சழுதா''

அதைக்கேட்டு ஈஸ்வரன் ''ஊசிலே நூலேத்தி பரமசிவம் இறங்குவாராம் கீழ் லோகம்'' இவ்வாறு இந்தக் கதையைப் பாடுகிறார்கள். அச்சு நூலில் காணப்படாத இந்தக் கதைப் போக்கு வேறு கதை சம்பந்தப்பட்டதாகலாம்.அல்லது பிச்சைக்குப் போகிற போது மாமியார் மருமகள் சண்டை பற்றிப் பாடுவது கேட்பவர்களுக்கு ஆர்வத்தை உண்டு பண்ணும் என்பதால் அமராவதி கதையில் இதனை இணைத்திருக்கக் கூடும்.

**வள்ளி பாட்டு**

வள்ளியைக் கவர வந்த வேலன் வேடனாக வும் விருத்தனாகவும் வந்த விளையாட்டுக் களை இந்தப் பாடலில் பாடுகிறார்கள். இந்தப் பாடலிலும் முப்பது வரிகளுக்குள் தான் இவர்களால் பாட முடிகிறது.

**கிருஷ்ணன் பாட்டு**

தம்முடைய பாஞ்சாலி சபத உரையில் பாரதியார் தெருவில் பாடப்படும் இந்தக் கிருஷ்ணன் பாட்டின் மெட்டைச் சிறப்பித்துப் பேசுகின்றார்[13].

''மாயக்காரனடி – இந்தக் கிருஷ்ணன்
மகிமைக்காரனம்மா
கோவக்காரனடி – கிருஷ்ணன்
கொஞ்சக்காரனம்மா''

என்று தொடங்குகிறது இப்பாடல். கண்ணன் குறும்பைக் கூடப் பாரதியார் இப்பாடலி லிருந்து தத்தெடுத்துக் கொண்டது போல் தோன்றுகின்றது.

''கிருஷ்ணன் பிறந்த நாளா – தெருவுலே
நிக்க நேரமில்லே''

என்ற வரிகள்

''தீராத விளையாட்டுப் பிள்ளை –
கண்ணன்
தெருவிலே பெண்களுக்கு ஓயாத
தொல்லை''

என்ற வரிகளை நினைப்பூட்டுகின்றன. இந்தப் பாடலில் நாட்டுப்புறத் தமிழின் நய மெல்லாம் செறிந்திருக்கப் பார்க்கிறோம். யசோதையிடம் பெண்கள் முறையிடுகிறார் கள்.

''மாயமை தன்னாலெ – நம்மளுட
மானம் போகுதம்மா
சின்னக் கிருஷ்ணனாலே – நம்மளுட
சீலம் போகுதம்மா......
கேளும்மா யசோதி – உன்னோட
கிருஷ்ணனாலெ வம்பெ
பாரும்மா யசோதி – உன்னோட
பாலனாலெ வம்பே......''

யசோதையிடம் முறையிடும்போது குற்றச் சாட்டுக்களையும் கூறுகிறார்கள் இடைப் பெண்கள்.

''வம்புக்காரனடி – கிருஷ்ணன்
வாலுக்காரனடி
போறம் போறமம்மா – நாங்க ஒரு
புதிய வீட்டுக் குடியா
குடியை விட்டுப் போனா – கிருஷ்ணன்
கூடவே வருவானாம்
மீனுக் குஞ்சு போலெ – கிருஷ்ணன்
தண்ணியிலே குதிப்பானாம்
சாரைப் பாம்பு போலெ – கிருஷ்ணன்
மிதக்குறானம்மா
எங்கியே போனாலும் – கிருஷ்ணன்
உங்களெ விடமாட்டான்''.

கண்ணன் குளிக்கும் பெண்களின் ஆடை களைத் திருடிய நிகழ்ச்சியையும் கூறுகிறார் கள்.

''ரவிக்கையெல்லாம் வாரி – இந்தக்
கிருஷ்ணன்
ரவிக்கை மூட்டை கட்டி
சீலையெல்லாம் வாரி – இந்தக்
கிருஷ்ணன்
சின்ன மூட்டை கட்டி......''

தொல்லை செய்கிறான்.

''பச்சைப் பாலைக் குடிச்சு —
கிருஷணன்
முகத்துவே துப்புறானாம்
முத்நம் கொடுக்கையிலெ — கிருஷ்ணன்
செயினைக் கழற்றுறானாம்...''

மிரட்டுக்காரனும் உருட்டுக்காரனுமான கண்ணன் இவர்கள் ஊரைவிட்டுத் தப்பிப் போக நினைத்தால்...

''தங்கக் குடத்தை வச்சு — கிருஷ்ணன்
தடத்தை மறைக்கிறானாம்...''

ஆனாலும் அன்பு கொண்ட இடைப் பெண் களின் மனதில் கண்ணன் நீங்கா இடம் பெற்று விடுகிறான். அதனால்,

''பார்த்த பேருக்கெல்லாம் —
கிருஷ்ணன்
பச்சக் குழந்தையம்மா
கேட்ட பேருக்கொல்லாம் —
கிருஷ்ணன்
ரெட்டைக் குழந்தையம்மா...''

என்று பாசத்தோடு பேசுகிறார்கள். இந்தப் பாடலில் 'வாலுக்காரன்', 'செயின்' ஆகிய நடைமுறைச் சொற்களும், அமராவதி பாட் டில் 'மைல்' என்று தூரத்தைக் குறிப்பிடு வதும் அசல் வாய்மொழி இலக்கியமான இப்பாடல்களை அடையாளம் காட்டு கின்றன.

சுயமாகக் கற்பனை செய்து கொள்ளும் இயல்பு காட்டு நாய்க்கர் பெண்களிடம் அமைந்திருப்பதையும் காணுகின்றோம்.

பாரதியாருக்கு இத்தகைய நாட்டுப்புறப் பாடல்களில் இருந்த ஈடுபாடு காரணமாகத் தான் இவர்கள் கூறுவது போலவே (நல்ல தங்காள் பாட்டு, அமரரவதி பாட்டு, வள்ளி பாட்டு. கிருஷ்ணன் பாட்டு) தன் கவிதை களுக்குக் கூட கண்ணன் பாட்டு, குயில் பாட்டு, காளிப்பாட்டு, நவராத்திரிப் பாட்டு. கோவிந்தன் பாட்டு, ராதைப் பாட்டு, கிளிப் பாட்டு, வண்டிக்காரன் பாட்டு, பாப்பாப் பாட்டு என்று பெயர் சூட்டினாரோ என்று சிந்தித்துப் பார்க்கலாம்.

காட்டு நாய்க்கர் குல மரபுகளும் வழக்காறு களும் வாய்மொழி இலக்கியமும் மிக விரி வான ஆராய்ச்சிக்கு உரியன. நாடோடி களாகவே இன்னமும் இவ்வினத்தார் வாழ்ந்து வருவது நம் சமுதாயத்துக்கு ஒரு குறையாகவே அமைந்துள்ளது.

**தகவலாளர்கள்:**

அ. சுந்தர நாய்க்கர் (வ.67) (ஆ), பெருமாள்புதூர்
ஆ. அம்மாசை நாய்க்கர் (வ.65) (ஆ) ,,
இ. சின்னுசாமி நாய்க்கர் (வ 65 (ஆ) ,,
ஈ. வெங்கடாசலம் (வ.43) (ஆ) ,,
உ. நடராஜ் (வ–30) (ஆ) ,,
ஊ. ரங்கியம்மாள் (வ.30) (பெ) ,,
எ. காளியம்மாள் (வ.27) (பெ) ,,

கட்டுரை பொள்ளாச்சி ந. க. ம. கல்லூரி தமிழ்த்துறை நடத்திய நாட்டுப்புற இயல் கருத்தரங்கில் (14. 8. 88) படிக்கப்பட்டது

## துணைநூல் விவரப்பட்டியல்


1. அபிதான சிந்தாமனி, ப. 466
2. *Thirston, Castcs and Tribes of Southcrn India Vol. IV, Govt. press, Madras. 1909. p 106.*
3. அபிதான சித்தாமனி, ப. 517
4. தகவல்: நடராஜ், பெருமால்புதூர்
5. தகவல்: சுந்தர நாய்க்கர், பெருமாள்புதூர்
6. செ. இராசு, வரலாற்று ஆவணங்களில் நாட்டுப்புற அயல் கூறுகள், நாட்டுபுற இயல் ஆய்வுக் கோவை, இ, த, நா, சழகம், அண்ணாமலை நகர். 1987, ப. 809
7. பாளையப்பட்டு வம்சாவழி II, தமிழ்நாடு அரசு தொல்பொருள்துறை, 1981, ப. 21, 115, 152 மேற்படி பாகம் 2, ப. 56
8. தகவல: அமமாசை நாய்க்கர், பெருமாள்புதூர்
9. *Srinivas, M. N., Social Change in Modern India, Bombay, Orient Longman, 1972*
10. தகவல்: சின்னுசாமி நாய்க்கர், பெருமாள்புதூர்.
11. தகவல்: வெங்கடாசலம், பெருமாள்புதூர்.
12. தகவல்: சுந்தர நாய்க்கர், ,,
13. பாட்டு: காளியமமாள் ,,
ரங்கியம்மாள் ,,
14. சித்திர புத்திர நாயனார் கதை, பி. ஆர். என். சன்ஸ், சென்னை, 1949 ப. 80
15. பாரதியார் பாடல்கள், மணிவாசகர் நூலகம், சிதம்பரம், 1987, ப. 541 (பாடல்களும் தகவல்களும் 31.7.88–ல் நேர்முகமாகப் பதிவு செய்யப்பெற்றன).

# நாட்டுப்புறக் காதற் பாடல்கள் உணர்த்தும் நுட்பம்

டாக்டர். மா. வண்ணமுத்து

தமிழியல் துறை, மதுரை காமராசர் பல்கலைக் கழகம்

அகம் என்பது தமிழர்தம் காதல்வாழ்வைச் சுட்டுவதாகும். சங்க இலக்கியம் அக வாழ்வைக் களவு, கற்பு என்று இருபிரிவாகப் பிரிக்கும். திருமணத்திற்கு முன்பு தலைவனுக்கும் தலைவிக்கும் உள்ள தொடர்பு 'களவு' என்றும், பின்பு, அது கற்பு என்றும் அழைக்கப்படும். இக்காதல் வாழ்வில் தலைவன், தலைவியரின் மனப்பாங்கினைத் தொல்காப்பியர் தெற்றன எடுத்தியம்புவார் தொல்காப்பியர் சுட்டும் அக இலக்கியக் கூறுபாடுகளையெல்லாம் சங்க இலக்கியங்களில் கண்டுதெளியலாம்.

எழுத்துவடிவ இலக்கியத்தில் காணப்படும் அகச்செய்திகள் எல்லாவற்றிற்கும் தமிழகத்தில வழங்கிய வாய்மொழிப் பாடல்களாகிய நாட்டுப்புறப் பாடல்களே வித்திட்டனவோ ! என்று எண்ணும் அளவு, நாட்டுப்புறப் பாடல்களில் அகச்செய்திகள் பொதிந்துள்ளன. தேன் போன்று இனிக்கும் காதற் பாடல்களில் வாழ்வியல் செய்திகளை நிரம்பக் காணலாம். மதுரைமாவட்டம், கம்பம்பள்ளத் தாக்கில் வழங்கும் காதற்பாடல்களில் அமைந்துள்ள நுட்பங்கள், சிலவற்றை ஈண்டுக் காண்போம்.

**எழில் நலம் சுட்டுதல்**

காதலுக்கு அடிப்படையாக அமைவது உடல் அழகே என்பது உடலியல் வல்லுநர் கருத்தாகும். உடலால் கவரப்பட்டு. உள்ளத்தால் ஒன்றுபட்ட தலைவன் தலைவியர் ஒருவருக்கொருவர் புகழ்ந்து மொழிவதை எழுத்து வடிவ இலக்கியத்தில் பரக்கக் காணலாம்.

காட்டிலும் மேட்டிலும் அலைந்து உழைப்பு ஒன்றையே தம்முடைய செல்வமாகக் கொண்டு உழைக்கும் கிராமத்து மக்களின் நாட்டுப்புறப் பாடலில், தலைவியின் எழில்

வாழையடி ஒங்கூந்தல்
வைரமடி பல்லுக் காவி
ஏழையடி நானுக்கு
என்னமோ ஏ மனசே
எளகலேயா ஓ மனசு
மத்தியானம் போலே ...

கொடத்த இடையிலிட்டி
கூந்தப்பன மயிருணர்த்தி
படமெடுத்த நாகம் போல
ஏ கண்டாங்கிக் கருப்பே
பாராம போறேயடி ஏ
முந்தாங்கி முகப்பே

நேத்து சமஞ்சபுள்ள
நெல்லிக்கா பல்லழகி
பாக்கு துவக்குதடி
என்னமோ ஏ மனசே
பழைய ஒறவு
மங்கலியே
மத்தியானம் போலே

என்று போற்றப்படுகின்றது. தலைவியினுடைய கூந்தலுக்கு வாழைப் பூவும், ஆற்றோரக் கருமணலும் உவமைகளாக்கப் பட்டமையைச் சங்க இலக்கியத்தில் காணலாம். எழுத்து வடிவ இலக்கியத்தில் காண இயலாத உவமையொன்று, நாட்டுப்புறப் பாடல் தலைவியின் கூந்தலுக்குக் கையாளப் படுவதை அறிந்து இன்புறலாம்.

ஆலவிழுது போலே
அல்லிலே மயிலே
அந்தப்புள்ள தலமயிரு
டில்லிலே குயிலே
தூக்கி முடிஞ்சுட்டாளா
அல்லிலே மயிலே
அந்தத் தூக்கணத்தா
கூடு போலே டில்லிலே குயிலே

நீண்டு வளர்ந்த கூந்தலுக்கு ஆலவிழுதும், அள்ளி முடிந்த கூந்தலுக்கு தூக்கணத்தான் கூடும் உவமைகளாகின்றன. உலகியல் அறிவு நிரம்பப்பெற்று, கற்றுத்தேர்ந்த புலவர்களுக்கு இருக்கும் கூர்மையான நுண்

ணாக்கு இப்பாடலில் அமைந்திருப்பதைக் காணலாம். தலைவியின் எழிலைத் தலைவன் புகழ்ந்து மொழிவது போல், தலைவனின் வனப்பைத் தலைவி வியந்து போற்றுகின்றாள். குஞ்சிக்கு நெய்தடவி, கொடுவில்லுடன் வரும் கட்டமைந்த மேனியுடைய வீரனொருவனைக் குறிஞ்சிப்பாட்டில் படம் பிடித்துக் காட்டுவார் கபிலர். கண்ணைக் கவர்ந்து கருத்தில் ஏறி நிற்கும் தன்னுடைய தலைவனை நாட்டுப்புறப்பாடல் தலைவி,

எண்ணெய்த் தலையழகா
எழுத்தாணி மூக்கழகா
கோயில் சிலையழகா
கொல்லுதடா ஒன்னழகு

என்று போற்றுகின்றாள். இரண்டே வரிகளில் தலைவனின்எழிலை நமக்கு உணர்த்தி விடுகின்றாள் அத்தலைவி. கூர்மையான மூக்கிற்கு எழுத்தாணியும், குறைவற்ற பேரியழகிற்குக் கோயில் சிலையும் இங்கு உவமைகளாயின. தலைவனைக் கண்ட நாள் முதல் அவனை அடைய வேண்டும் என்ற உணர்வு தன்னுள் ஒலித்துக் கொண்டிருப்பதைக் கொல்லுதடா ஒன்னழகு' என்ற சொல்லிலும் அவள் உணர்த்தியமை இங்கு நோக்கத் தக்கதாகும். மேலும், கொல்லுதல் தொழிலைச் செய்வதற்கு இயலாத தலைவனின் அழகு, தலைவியைக் கொல்லுவதாக இப்பாடலில் குறிப்பிடப்பட்டுள்ளது. இப்பாடல்' தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ள அகத்திணை மரபுப்படி அமைந்திருப்பது உணரத்தக்கதாகும்.

உண்டற் குரிய அல்லாப் பொருளை
உண்டன போலக் கூறலும் மரபே'

என்பது தொல்காப்பியம். இந்நூற்பாவிற்கு 'உண்ணுதல் தொழிலை நிகழ்த்துதற் குரியன அல்லாத உணர்வற்ற பொருள்களை அத்தொழிலை நிகழ்த்தினவாக ஏறிட்டுக் கூறுதலும் இவ்வகத்திணைக்கண் வழங்கும் மரபாகும்' என்பது விளக்கமாகும். ''பசலையால் உணப்பட்டுப் பண்டைநீர் ஒழிந்தக்கால் (கலி 15:13) எனும் பாடலடியில் உண்ணுதல் தொழிலைச் செய்வதற்கு இயலாத பசலை, தலைவியின் அழகு முழுவதையும் உண்டதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதே போன்று கொல்லுதல் தொழிலைச் செய்வதற்கு இயலாத தலைவனின் அழகு, தலைவியைக் கொல்லுவதாகக் குறிப்பதில் தொல்காப்பியர் சுட்டிய அகத்திணை மரபு நுண்மையாக அமைந்திருக்கக் காணலாம்.

**றியிடம்**

குறியிடம் குறிப்பிடுதல் அகச்செய்தியில் இன்றியமையா இடத்தைப் பெறுவதை அறியலாம். குறியிடமாவது, தலைவியும் தோழியும் குறித்த இடத்தே தலைவன் சென்று தலைவியைக் கூடுதலாகும். இது பகலிற்கூடும் பகற்குறியும், இரவிற்கூடும் இரவுக்குறியும் என இருவகைப்படும். சங்க இலக்கியத்தில் குறியிடம் சுட்டுவது தலைவிக்கும், தோழிக்கும் மட்டுமே உரிமையாயிற்று. தலைவன் குறியிடம் சுட்டான். நாட்டுப்புறப் பாடலில், சங்க இலக்கியத்தில் இடம்பெறும் தோழியின் பாத்திரம் இடம்பெறாமையால், ஈண்டு தலைவியே குறியிடம் சுட்டுகின்றாள். வாழ்க்கை இலக்கியமாகிய நாட்டுப்புறப் பாடலில் தலைவனும் குறியிடம் சுட்டுகின்றான். இருவர் கூற்றாகவும் கிடைத்த பாடற் செய்திகளைக் காண்போம். தான் குறிப்பிட்ட இடத்திற்கு வந்துசேர்ந்த தலைவனிடம்,

நத்தத்து மேட்டிலேயே மணித்தங்கமே
முத்தால சந்தனமோ ஒயில் அன்னமே
முத்தால வாய்திறந்து மணித்தங்கமே
உத்தரவு சொல்லவேணு ஒயில்அன்னமே

என்று தலைவி உறுதிமொழி வேண்டுகின்றாள். 'நத்தத்து மேடு' என்னும் பகுதி, சின்னமனூர் அருகே உள்ள பகுதியாகும். இப்பாடலைப் பாடியவர் சின்னமனூரைச் சேர்ந்த சீனியம்மாள் என்பவர். சின்னமனூர் சீனியம்மாள் பாடிய நத்தத்து மேடு பற்றி, சின்னமனூரின் அருகில் உள்ள மார்க்கையன் கோட்டையைச் சேர்ந்த சுப்பிரமணியமும் ஒரு பாடல் பாடியுள்ளார்.

நத்தத்து மேட்டுவழி நா போறே
ஒத்தவழி
மின்னிட்டா பூச்சிபோலே — ஏ
கண்டாங்கிக் கருப்பேநீ
முன்னே வந்தாலாகாதோ - ஏ
முந்தாங்கி முகப்பே

என்பது பாடலாகும். தலைவி கூற்றாக அமைந்த சீனியம்மாள் பாடலில், பகற்குறியும், இரவில் மட்டும் ஒளிவிடும் 'மின்னிட்டா பூச்சிபோலே' என்று தலைவியின் வருகையை எதிர்பார்க்கும், தலைவன் கூற்றாக அமையும் சுப்பிரமணியம் பாடலில் இரவுக்குறியும் அமைந்திருப்பது நோக்குதற்குரித்தாம். குறியிடத்தைச் சுட்டும், இந்நாட்டுப்புறப் பாடல்கள் உணர்த்தும் நுண்மை என்னவெனில், தலைவனும் குறியிடம் சுட்டுவான் என்பதும், தலைவி இரவுக்குறியினும் பகற்குறியே சுட்ட விரும்புவாள் எண்பதுவுமாகும்.

**காதலி குமரி என்பதற்கு அடையாளம்**

பெண் அணிந்திருக்கும் தாலியும், மிஞ்சியும் அவளுக்குத் திருமணம் நடைபெற்றுவிட்டது

என்பதை அறிவிக்கும் கருவிகளாக விளங்குகின்றன. தற்காலத்தில் பல்வேறு சமயங்கள் தோன்றியுள்ளன. சமயத்திற்கு ஏற்ப, திருமண அடையாளச் சின்னங்கள் மாறுபடுவதற்கு வாய்ப்புண்டு. பண்டைத்தமிழகத்தில் பெண்ணுக்குத் திருமணம் நடைபெறவில்லை என்பதை அறிவிக்கும் கருவிகளுள் ஒன்றாக, அவள் காலில் அணிந்திருந்த சிலம்பு விளங்கியது என்பதைச் சங்க இலக்கியம் கொண்டு அறியலாம். திருமணமான பெண்ணுக்குச் சிலம்பு நீக்கப்பட்டமை, 'சிலப்பு கழிநோன்பு' என்று அழைக்கப்பட்டது.

காலில் சிலம்பு அணிந்திருந்த பெண், திருமணம் ஆகாதவள் என்பதற்குச் சங்க இலக்கியத்திலிருந்து ஒரு சான்றைக் காணலாம். உடன்போக்கில் தலைவனும், தலைவியும் ஒன்றுபட்டுச் செல்கின்றனர். ஒன்றுபட்டு வரும் காதலர்களை வழியிடைக் கண்டார், 'வில்லேந்திய இவன் காலில் வீரக்கழல்கள் உள, வளையல் அணிந்த இவள் மெல்லடிகளில் சிலம்புகள் உள (குறுந்தொகை—7) என்று காலணி பார்த்து இன்னும் இவர்கள் திருமணம் ஆகாதவர்கள் எனத் துணிகின்றனர். 'காலிற் சிலம்புடையாள் குமரி' என்னும் உண்மையை அறிய இம்மேற்கோள் தக்க சான்றாகும். இனி, இம்மேற்கோளுக்கு அரண் செய்வது போன்று அமைந்துள்ள நாட்டுப்புறப்பாடலை நோக்குவோம். காதலியின் எடுப்பான தோற்றப் பொலிவினைப் போற்ற முனையும் தலைவன்,

காலு வளர்ந்தவளே கால் சிலம்பு
போட்டவளே —ஏ
தங்கரத்தினமே — நா
மெலியிறேண்டி ஒப்மேலேயே —ஏ
அத்த பெத்த புள்ளே

என்று காதலியின் அழகையும், தன்னுடைய ஏக்கத்தையும் ஒருசேர வெளிப்படுத்துகின்றான். பண்டைத் தமிழ்ச் சமுதாய வழக்கின்படி திருமணம் ஆகாத குமரிப் பெண்ணே காலில் சிலம்பு அணிவது மரபாகும். இந்நாட்டுப்புறப் பாடலிலும் தலைவி சிலம்பு அணிந்திருந்தமை குறிப்பிடப்படுவதால், அவள் திருமணம் ஆகாத குமரிப் பெண்ணே எனத் துணியலாம்.

**குமரி மலர் அணியாமை**

''பண்டைத்தமிழ்க் கன்னி மலர்சூடாள் என்பதும், மலர்சூடின் கன்னியாகாள், ஒருவனை வரித்தாள் என்பதும் நம் பழஞ்சாய வழக்கு. இக்கருத்து கற்றார்க்கு இன்று வியப்பாகவும் புரட்சியாகவும் தோன்றும், தோன்றவும் கூடும். இவ்வழக்கம் இந்நாள் தமிழகத்து இல்லாமையும், இருக்க இயலாமையும் கண்டு பலர் மலைக்கவும் மலைப்பர்'' என்பது டாக்டர் வ.சுப.மணிக்கம் அவர்கள் தம்முடைய 'தமிழ்க்காதல்' ஆய்வு நூலில் கூறும் கருத்தாகும். பூ 'குமரிப் பருவத்துக் கூழைக் கூந்தலைச் செவிலியர் எண்ணெய் தடவி, வாரிப் பின்னி விடுமளவே செய்குவர். பின்னிய கூந்தலில் பூ அணிவதில்லை 'என்று குறிப்பிடும் மாணிக்கனார்' இக்கூற்றிற்குச் சான்றுகளாக,

'பின்னிவிட் டிருளிய ஐம்பால்' (கலி—59)
'மண்ணி மாசற்ற நின் கூழை' (கலி-107)
'பின்னிவிடு நெறியற் கிளை இய கூந்தலள்' (அகம் 158)
கூந்தல் வாரி நுசுப்பிவர்ந் தோம்பிய நலம்புனை யுதவி' (அகம் 195)

முதலிய சங்கப்பாடல்களை எடுத்துக் காட்டுவார். குமரியர் பூ அணியும் உரிமையை, திருமணநாள் முதல் பெறுகின்றனர். மனைவிக்குப் பூச்சூட்டும் உரிமையைக் கணவன் பெறுகின்றான்.

'நன்மனை வதுவை அயர இவள்
பின்னிருங் கூந்தல் மலரணிந் தோயே'
(ஐங் 294)

என்று மணஞ்செய்து கொண்ட களவொழுக்கத் தலைவனைப் பார்த்துத் தோழி வாழ்த்துக் கூறுகின்றாள். 'கூந்தலைப் பின்னி மலரணித்தான் என்று கூறாமல். பின்னிய கூந்தலில் மலரணிந்தான் என்று கூறுவதால், பின்னிய நிலை குமரிக்கோலம் என்றும், மலரணிகை கற்புக்கோலம் என்றும் தெளிவாதல் காண்க' என்று இப்பாடலுக்குத் 'தமிழ்க்காதலி'ல் விளக்கம் கூறுவார் மாணிக்கனார். பண்டைத் தமிழ்ச் சமுதாய வழக்கமாகிய, குமரியர் பூ அணியாமையை விளக்கும் வகையில், நாட்டுப்புறப் பாடல் அமைந்திருப்பதும் மனங்கொளத்தக்கதாகும்.திருமணம் ஆகாதநிலையில் இருக்கும் தலைவி ஒருத்தி,

தோட்டத்திலே தொரட்டி முள்ளு மணித்
தங்கமே
தொட்டதெல்லா பிச்சுப்பூவு ஒயில்
அன்னமே
வாரிநல்லா முடிவமின்னா மணித்
தங்கமே
வயசுகொஞ்ச காணலியே ஒயில்
அன்னமே

என்று பாடுகின்றாள். தொட்டதெல்லாம் பிச்சிப்பூவாக இருந்தாலும், அவற்றைச் சூடி மகிழ இன்னும் திருமணம் நடைபெற வில்லையே என்பதே, 'வயசு கொஞ்ச காணலியே' என்னும் அவளுடைய ஏக்கப் பெரு மூச்சின் பொருளாகும். திருமணம் ஆகாத மகளிர் மலர் சூடாமைக்கு உரிய காரணம் மலரின் மணம் போக உணர்வைத் தூண்டும் என்பதாக இருக்கலாம். இத்த கைய எண்ணத்திலேயே கணவனை இழந்த மகளிர்க்கும் மலர் சூடும் உரிமையைத் தமிழ கம் தவிர்த்தது எனலாம்.

### குறியீட்டில் உறவும் பிரிவும் மகிழ்வும்

ஒரு குறியீட்டைச் சுட்டிஉறவையும், பிரிவை யும், மகிழ்வையும் புலப்படுத்துவது நாட்டுப் புறக் காதற் பாடலின் தன்மையாகும். தலை வன், தன்னுடைய விருப்பத்தை உணர்த்தும் குறிப்புப் பொருளாக அரளிப் பூவைப் பயன் படுத்துவதை நாட்டுப்புறப்பாடல் ஒன்று குறிப்பிடுகின்றது. சமையல் வேலையில் ஈடுபட்டிருக்கும் பொழுது, தலைவன் நினை வுக்கு ஆட்பட்ட தலைவி,

அரிசி அரிக்கையிலே அரளிப்பூவு தந்த
மச்சான்
சோறு வடிக்கையிலே சொக்குதில்ல
ஒங்க பூவு

என்று பாடுகின்றாள். இப்பாடலில், தலைவன் அரளிப்பூ வாயிலாகத் தன் காதல் உணர் வைச் சுட்டியமையும், தலைவனிடமிருந்து பெற்ற அரளிப்பூ, தலைவிக்குக் காதல் உணர்வை மிகுவித்தமையும் ஒருசேர உணர்த்தப்படுகின்றது. எனவே அரளிப்பூ இன்ப உறவைப் புலப்படுத்தும் குறியீடாகப் பயன்பட்டது எனலாம்.

இன்ப உறவைப் புலப்படுத்த அரளிப்பூ குறிப்பிடப்பட்டதைப் போல, துன்ப உணர் வைப் புலப்படுத்தக் கள்ளிப்பூ குறிப்பிடப் படுகின்றது,

சோளம் வெதக்கையிலே சொல்லி
விட்டுப் போனமச்சா
சோளம் பயிராச்சு சொன்ன சொல்லும்
வீணாச்சு

என்று தலைவி புலம்புகின்றாள். விதைத்த சோளம் பயிராக ஆறுமாத-காலமாகும். விதைக்கும் போது பிரிந்த தலைவன் ஆறு மாதமாகி-பயிர் வளர்ந்தும் இன்னும் வர வில்லை. பிரிவால் வாடும் தலைவனும், ஆறுமாதமாகப் பிரிந்திருக்கும் துன்ப உணர்வை,

சங்கிலிக் கரட்டோரம் சாஞ்சதெல்லா
திருகு கள்ளி
திருகுகள்ளிப் பூவெடுக்கத் திரிஞ்சேனம்
மா ஆறுமாதம்

என்று புலம்புகின்றான். எதற்கும் பயன் படாத, கள்ளிப்பூவை எடுக்கத் திரிந்ததாகக் குறிப்பிடுவது அவனது துன்ப உணர்வைப் புலப்படுத்தவேயாம். எனவே நாட்டுப்புறப் பாடலில் இன்ப உணர்வைச் சுட்ட அரளிப் பூவும், துன்ப உணர்வைச் சுட்டக் கள்ளிப் பூவும் குறியீட்டுப் பொருள்களாகப் பயன் பட்டன எனலாம்.

உறவுக்கும், பிரிவுக்கும் பூவையே குறியீ டாகக் குறிப்பிட்ட நாட்டுப்புறப் பாடல் புணர்ச்சி மகிழ்வுக்கும் பூவையே குறியீடாக் குவது நோக்குதற்குரியதாம். சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்னும் ஐம்புல இன் பங்களையும் தலைவியிடமிருந்து பெற்று மகிழ்ந்த தலைவன், தான் பெற்ற இன்பத்தை நினைந்து.

வில்லப் பொடி மணக்கு விரிச்சதல
பூமணக்கு
கட்டி அளைஞ்சிட்டாலு எட்டுவகைப்
பூமணக்கு

என்று பாடுகின்றான். தலைவியின் கூந்த லுக்கு, மணம் இருந்ததாகக் குறிப்பிடும் தலைவன், தலைவியைத் தன்னோடு சேர்த்து அணைத்த பொழுது எட்டுவகைப் பூ மணத்தை நுகர்ந்ததாகக் குறிப்பிடுகின் றான். எண்சாண் உடம்பில் உச்சிமுதல் உள்ளங்கால் வரை தலைவன் தலைவியைக் கட்டித் தழுவ மகிழ்ந்தான் என்பதைப் புலப் படுத்த, இப்பாடலிலும் 'பூ' வே குறியீட்டுப் பொருளாகப் பயன்பட்டமையும் அறிந்து சுவைக்கத்தக்கதாம்.

### பரத்தமைக் கூட்டல்

'பரத்தையிற் பிரிவு' என்ற ஒருவகைப் பிரி வைச் சங்க இலக்கியம் ஏற்றுக்கொண்டா லும், பரத்தையிடமிருந்து பிரிந்துவந்த தலைவனுக்கு அங்கு வாயில் மறுககப்பட்ட செய்தியும் உணரத்தக்கதாகும். பெண்மைக் குரிய குண இயல்புகளில் 'மடம்' இன்றி யமையாதது என்று குறிப்பிடும் தொல்காப் பியர், பெண்மை மடன் அழிதலும் வேண்டும் என்று அறிவுறுத்துவார். 'யானை ஊர்ந்து வந்தேன்' என்று தலைவன் தன்னுடைய தாமதத்திற்குக் காரணம் கூறும்போது' தலைவி அப்படியே ஏற்றுக் கொள்வாளே யானால், அது மடன் எனப்படும். தலைவன் கூற்றை அப்படியே ஏற்றுக்கொள்ளாமல் நீர் ஊர்ந்து வந்த யானை எது என்பதை நான் நன்கு அறிவேன். கூரிய இரண்டு

கொம்புகளை உடையது, கண்டவர்களை மயக்கும் எழில் நடையுடையது என்று அவனது பரத்தமை ஒழுக்கத்தைத் தலைவி இடித்துக் கூறுவாளேயானல், அது மடனழிதல். இரண்டே இரண்டு இடங்களில் மட்டும் தலைவி மடனழிந்து நிற்கலாம் என்று தொல்காப்பியர் விதி வகுக்கின்றார்

தன்வயிற் கரத்தலும் அவன்வயின்
வேட்டலும்
அன்ன இடங்கள் அல்வழி யெல்லாம்
மடனொடு நிற்றல் கடனென மொழிப்

என்பது தொல்காப்பியம். தன்னுடைய பரத்தமை ஒழுக்கத்தைத் தலைவன் மறைத்துக் கூறிய இடத்திலும், கரந்து கூறிய தலைவனைத் தலைவி தழுவ விரும்பிய நேரத்திலும் தலைவி மடன் அழிந்து நிற்கலாம் என்று தொல்காப்பியர் பெண்மைக்கு உரிமம் நல்குகின்றார். தலைவன் தன்னுடைய புற ஒழுக்கத்தை மறைத்துக் கூறும் பொழுது தலைவி அதைச் சீர்தூக்காது ஏற்றுக்கொள்வாளேயானால் அவர்களது குடும்பவாழ்வு சீர்கெட்டு அழியும். மீண்டும் மீண்டும் சீர்கெட்டு அழியாது, தலைவனை நல்லாற்றுப் படுத்தி, குடும்பவாழ்வைச் செம்மைப்படுத்தி தலைவி இவ்விடத்தில் மடனழிந்து நிற்கலாம் என்று விதிவகுத்த தொல்காப்பியர் திறன் போற்றுதற்க்குரித்தாம்.

தொல்காப்பியர் விதியைப் பின்பற்றித் தலைவனின் பரத்தமை ஒழுக்கத்தை இடித்துக் காட்டும் நாட்டுப்பாடல்களும் வழங்குகின்றன. சான்றுக்குச் சிலவற்றைச் சுட்டலாம்.

கடல பொரிகடல அல்லிலே மயிலே
கை நெறைஞ்சு என்னா செய்ய டில்லி
லே குயிலே
கண்ணுக்கு ஒகந்தகனி அல்லிலே
மயிலே
ஒன்னு தின்னா போதாயாதோ டில்லி
லேகுயிலே

என்று தலைவனின் பரத்தமை ஒழுக்கத்தைக் கடுமையாகச் சாடுகின்றாள் தலைவி. பொருள் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்ட, கை நிறைந்த பொரிகடலை போன்ற பரத்தையர் பலரிடம் சென்று அவல மடைவதைக் காட்டிலும், அன்பும் அழகும் கொண்ட கண்ணுக்கு உகந்த கனி தன்னோடு உறவாடி இன்பம் பெறுவதே தலைவனுக்கு ஏற்புடைத்து என்று வற்புறுத்துகின்றாள் தலைவி.

அழகும், இளமையும் குடிகொண்டிருக்கும் தன்னைவிட்டு, மற்றவளை நாடிச் சென்ற தலைவன் வெட்கித் தலைகுனியும்படி வினாத்தொடுக்கின்றாள் நாட்டுப்புறப் பாடல் தலைவி.

முத்தால அம்மா போல மணித்தங்கமே
மூத்தகுடி இங்க இருக்க இருக்க ஒயில்
அன்னமே
மத்தாள மொகரிக்கெல்லா மணித்
தங்கமே
மலை கடந்து போகலாமா ஒயில்
அன்னமே

என்பது தலைவியின் கேள்விக்கணையாகும். இங்கு அழகுடைய முத்தாலம்மன் முகம் தலைவியினுடைய முகத்திற்கும், படர்ந்த மத்தாளம் பரத்தையின் முகத்திற்கும் உவமைகளாகி, இருவருக்கும் உள்ள வேறுபாட்டைத் தலைவன் உணரப் பயன்பட்டன.

குங்குமம், மஞ்சள் ஆகியன கலந்த 'மஞ்சனை' என்னும் மங்கலப் பொருளை அம்மனுக்குப் படைத்து மகிழ்வர் கிராமத்து மக்கள். மாட்டுச் சாணத்தை முற்றம் தெளிக்கப் பயன்படுத்துவர். தலைவனின் பரத்தமை ஒழுக்கத்தை இடித்துக்காட்ட விரும்பிய தலைவியொருத்தி,

மஞ்சன உருண்ட போல மணியுருண்ட
இங்கிருக்க
சாணிநல்ல உருண்டைக்கெல்லா சாம
வழி போகலாமா

என்று மொழிகின்றாள். மஞ்சனை உருண்டை தலைவிக்கும், சாணி உருண்டை பரத்தைக்கும் உவமைாதல் புலனாகும். ஒழுக்கத்தை நிலை நாட்டுவதில் நாட்டுப்புறப் பாடலுக்கு உள்ள பங்கை இத்தகைய பாடல்கள் அறிவுறுத்துவனவாம்.

ஒருசில செய்திகளை மட்டும் புலப்படுத்திய இக்கட்டுரையின் மூலம், இலக்கிய, இலக்கணங்களில் பொதிந்துள்ள நுட்பங்களையெல்லாம், நாட்டுப்புறப்பாடல்கள் நுட்பமாக விளக்குவதை அறிந்த நாம், பேராசிரியர் தமிழண்ணல், தம்முடைய 'காதல் வாழ்வு' எனும் நூலில் 'நாட்டுப் புறப் பாடல் சிறந்த இலக்கியத் திறவுகோல்' என்று குறிப்பிடுவதை நினைந்து மகிழலாம்.

# அறம் பிழைத்தால்...?

ந. மணிமொழியன்
மேலாண்மை இயக்குநர்
நியூ காலேஜ் ஹவுஸ், மதுரை

உலகுயிர்கட்கு சிறப்பீனும் செல்வமுமீனும் அறத்தின் ஆக்கம் பெரிது. உலகுயிர்கட்கு உயிரன்ன அறம் தனித்தும் நிற்பது; பொருளின்பத்துடன் விரவிக் கலந்தும் நிற்பது. இயற்கையுடலின் உயிர் மாசற்ற இறையானால், மாசற்ற அறமே இறை யாகும். இறையாகிய அறவாழி உவமை யற்றது, எல்லையற்றது, மறத்தலியலாச் சிறப்புடையது, பேரருள் சான்றது.

''அருள் குடையாக அறம் கோலாக
இருநிழல் படாமை மூவே முலகமும்''
(பரிபாடல்)

அறம் விழையும் நெஞ்சம் ஆக்கத்தில் நிலைக்குமென்றால், அறம் விழையா நெஞ்சின் நிலை என்ன? அறம் பேணா அந் நெஞ்சம் ஆக்கம் தேட முயலுமா? ஆக்கம் தேட முயலாவிட்டாலும் அமைதியாக அடங்கிக் கிடக்குமா? அன்றி, அறம் (அறத்தை) பிழைக்குமா? அறம் பிழைத் தால்......அறமே பிழைக்குமா...?

**அறம்:-**

எண்ணம், சொல், செயல், மூன்றனுள்ளும் எண்ணம் சொல்லுக்கும் செயலுக்கும் அடிப்படையாயமைந்தது. அதனால் மாசற்ற தூய்மையான அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச் சொல் நான்கும் இழுக்கா இயல்புடைய எண்ணம் முதன்மை யான சிறப்புடையது. எனவே

''மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற''

என நுண்மாண் நுழைபுலத்துடன் வள்ளுவம் காட்டும்.

''மனத்துள் மாறாது உறைந்து கிடக்கும்
சட்டத்திற்கு அறம் என்று பெயர்''
—என்று பைபிள் காட்டும்.

தனி மனிதனுக்கு மட்டுமன்றி உலக சமுதாயத்திற்கும் இவ்விளக்கம் பொருந்தும்.

**அறம் பிழைப்பதேன் ... ... ... ?**

இயற்கையின் ஆற்றல்மிகு அமைப்பில் நல்லனவெல்லாம் விரைந்து உடனே பயன் தரும் நிலை குறைவு. ஆனால் தீமை செய் வன வெல்லாம் உடன் விரைந்து தீய பயன் தரும் நிலை மிகுதி. இது இயற்கையின் வியத்தகு அமைப்பு முறை. நஞ்சுண்டவன் விரைந்து மடிகின்றான். உடன் விளைவு காணவியலுகின்றது. நனிசுவை நலந்தரு உணவுண்டவன் நலம் பெறுவான்; ஆனால் உடன் பயன் கான முடிவதில்லை. இவ் வடிப்படை உண்மையே அறம் பிழைக்க அடிப்படையாய் அமைந்த சூழல்.

அரம்போலும் கூர்மையரேனும், மக்கட் பண்பில்லா மரம் போன்ற குறுகிய எண்ண முடைய தனி மனிதனோ சமுதாயமோ அவ் வியற்கை அமைப்பை நன்கு பயன்படுத்திக் கொள்கின்றார்கள். உலகம் அறம் பிழைக்கும் சூழலில் சிக்கித் தவிக்கிறது.

''கேடும் பெருக்கமும் இல்லல்ல நெஞ்சத்துக்
கோடாமை சான்றோர்க் கணி''
(குறள் 115)

''நன்றே தரினும் நடுவிகந்தாம் ஆக்கத்தை
அன்றே ஒழிய விடல்.''
(குறள் 113)

என்ற நெறிகளை ஞாலம் வாழ்க்கை நடை முறையமைப்பில் ஏற்றுக் கொள்வதில்லை. ''புதரிலுள்ள இரு பறவைகளைவிட கையி லுள்ள ஒரு பறவையே மேலானது,'' என்ற எண்ணமே மக்களிடையே நிலைத்து நிற் கின்றது.

தனி மனிதன் குறைந்த முயற்சியில் தான் வாழவேண்டும். தன் குடும்பம் வாழ வேண்டும் என்று குறுக்கு வழியில் வாழ்க்கை வழிதேட விழைகின்றான். இன்று இடுக்கண் உற்றாலும் நாளை நல்லற நெறியில் நற் பொருளீட்டுவோம் என்ற அற நெறியை அவன் மனம் நாடுவதில்லை. இதனால் அவன் அழுக்காறுடையவனாய் புறங்கூறிப் பொய்த்துயிர் வாழ்பவனாய், பேரவா உடையவனாகின்றான். இத்தகு தனித்தனி குறுகிய நோக்கமுடையவர்களால் மன்பதை பாழ்படுகின்றது. அதனால்தான் சமுதாய அமைப்பில் இன்னா செய்தார்க்கும் இனியவை செய்து அவ்வொன்னாரை நல்ல வராக ஆக்கும் முயற்சியைக் காணவியலு வதில்லை. 'அளவிறந்து ஆவது போலக் களவினால் ஆகிய ஆக்கம் கெடும்' என்ற உண்மை உணர்ந்தவர்களை காணவியலு வதில்லை.' 'தன்னெஞ்சத்து அழுக்காறி லாத இயல்பை ஒருவன் ஒழுக்காறாகக் கொள்க,' என்ற கொள்கை உணர்ந்தவர் களைக் காண இயலுவதில்லை. 'மற்றின்பம் வேண்டுபவர் சிற்றின்பம் வெஃகி அறனல்ல செய்யார்' என்ற ஆன்ற பொருளுணர்ந்த வர்களைக் காண இயலுவதில்லை. ஆனால் குறுகிய நோக்கத்தால் பொறுமையற்றவர் களாய், கயவராய். பெரும் பொய்யராய். கொடிய கொலைஞராய், வாழ்வோரைக் காண முடிகின்றது. இத்தகையோர் குற்ற மிழைத்தால் உலகம் எளிதில் இக்குற்றத் தைக் கண்டு இவர்களைப் பழிக்கிறது. ஒறுக் கவும் செய்கின்றது.

ஆனால் தனிமனிதன் தனக்கென்று ஓர் அமைப்புப் பெற்றிருப்பானானால், ஆற்றல் நிறைந்தவனானால் இக்குற்றம் மறைக்கப் படுகின்றது. மற்றும் குறுகிய நோக்குக் கொண்ட திறன்மிக்க வல்லவர்களாக, இத் தகைய தனிமனிதர்கள் தலைவர்களாக அமைந்து விட்டாலோ உலகம் அவர்கள் குற்றத்தை மறைப்பது மட்டுமன்றி, ஏற்றிப் போற்றி இறைஞ்சி ஏற்றுக் கொள்ளவும் செய்கிறது. இதுவும் உலகின் வியப்புமிகு போக்கு.

**யார் குற்றம்?**

அறம் பற்றி விளக்க விழைந்த வள்ளுவர் மக்களின் வாழ்க்கையமைப்பைப் பற்றி பல் வேறு கோணங்களில் ஆய்ந்து மக்கள் அறம் பிழைக்கக் காரணமான உண்மையைக் கண்டு துயருற்றவராய்,

> ''நீரின்று அமையாது உலகெனின் யார் யார்க்கும்
> வானின்று அமையாது ஒழுக்கு''

என்று கூறுகிறார். 'கெடுப்பதூஉம் கெட் டார்க்குச் சார்வாய் மற்றாங்கே எடுப்பதூஉம், ஆகிய மழை நீர் இல்லாமல் உலக வாழ்க்கை அமையாது. ஆகையால், எத்தகையோர்க்கும் மழை இல்லாமல் ஒழுக் கம் அமையாது என்று வாழ்க்கைப் போராட் டத்தைச் சுட்டிக்காட்டி அத்தகைய போராட் டத்தில் சிக்கித் துயருழந்து ஒழுக்கத்தைக் கைவிட்டவர்களைப் பழிக்காமல் இரக்கம் காட்டவேண்டும் என்ற உண்மையை இலை மறை காயாக எடுத்துக் காட்டுகின்றார்.

இன்றைய அமைப்பு முறையிலும் இதே நிலைதான். மழை இருந்த இடத்தைப் பொருளும் பதவியும் கைப்பற்றிக் கொண் டிருக்கின்றன. இதுதான் வேறுபாடு. ஆத லால் மக்கள்மேல் மட்டும் குற்றம் காண்ப தில் பயனில்லை. மக்கள் வாழும் அமைப்பு முறையில் தவறு நிகழ்ந்திருக்கிறது. மக்கள் எண்ணித் துணியும் இயல்பு பெறாதவர்கள். ஆனால் அவர்களைப் பயன்படுத்திக் கொண்டு குறுகிய நோக்கமுடைய தன்னலம் மிக்கோர் வளர்ந்து விடுகிறார்கள். உலக அமைப்புப் பாழ்படுகின்றது.

*அறம் பிழைத்தால்.........? அறமே பிழைக்குமா.........?*

அறம் விழையும் நெஞ்சம் ஆக்கத்தில் நாட்டங் கொள்வது போல் அறம் விழையா நெஞ்சம் கேட்டை விளைவிக்கும்.

> ''வடுவிலா வையத்து மன்னிய மூன்றில்
> நடுவண தெய்த இருதலையும் எய்தும்''

என்று நாலடியார் பொருள் செயல் வகை யின் சிறப்புக் கூறும். அறவழியில் ஈட்டிய அருஞ்செல்வம் அல்லது தலைமைப்பேறு போராட்டத்தை எழுப்பாது, உலகில் போராட்டம் குறைய வேண்டுமானால் பொருள் பொதுவில் பயன்படும் முறை ஓங்கி வளர்தல் வேண்டும். குறுகிய எண்ணம் குறைந்து அருள் சான்ற நெஞ்சம் வளர்தல் வேண்டும். அறத்தில் ஈடுபடா உள்ளம் பெரும் போராட்டங்களை எழுப்பும். தனி மனிதனின் அகப்போராட்டமாய்த் தொடங்கி புறப் போராட்டமாயும் வளர்ந்து உலகப் போராட்டமாய் முடியும். போராட்டத்தின் இறுதி விளைவு கேடே. ஆதலால் வள்ளுவம்

> ''அறத்தினூஉங் காக்கமு மில்லை அதனை
> மறத்தலி னூங்கில்லை கேடு''

என்று கூறும்.

அறமுறை நிலவா நாடு ஆக்கம் பெறுவதில்லை. இதைக் கலித்தொகை

''சிறு குடியீரே, சிறுகுடியீரே
வள்ளிகீழ் விழா, வரைமிசைத் தேன் தொடா
கொல்லை குரல் வாங்கு ஈனா, மலை வாழ்நர்
அல்ல புரிந் தொழுகலான்''

என்று கவினுடன் காட்டும்

தனிவாழ்விலும் பொதுவாழ்விலும் உலகில் கேடு சூழ்வன செல்வமும் பதவியும். உலகச் சூழலானும் அமைப்பு முறையானும் நேர்ந்த குறையால் தன்னலம் மிகுந்தவரும் குறுகிய நோக்கமுடையவரும் தமதாற்றலால் ஞாலத்தை அடக்கித் தம் வழியில் ஆள இயலுகின்றது. இந்நிலை வளர்ந்தால் உலகம் நிலைக்குமா? அறம் பிழைக்குமா?

''அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாவதூம் என்ற பேருண்மையை'' தொல்லை வினையால் துயருழந்தாள் கண்ணினீர் கொல்ல உயிர் கொடுத்த கோவேந்தன்'' மெய்ப்பித்தான் அன்று அவன் அறஞ்சான்ற நெஞ்சத்தான். ஆனால் இன்று நிலை என்ன? அறம் குறைந்து, அன்பு தேய்ந்து, அமைதி மங்கி தன்னலம் உயர்ந்திருக்கின்றது. குறுகிய நோக்கம், குறுகாது வளர்ந்திருக்கின்றது. மக்களில் ஒருவருக்கொருவர், குடும்பத்திற்குக் குடும்பம், இனத்திற்கு இனம், நாட்டுக்கு நாடு, பகையும் பொறாமையும் பரந்து நிறைந்து வளர்ந்து வருகின்றது. இதுவே இயற்கை என்று கூறும் அச்சநிலைக்கு உயர்ந்து விட்டது இந்நிலையில், அறம வாழுமா?

தனி மனித வாழ்க்கையையும், அவனைச் சார்ந்த குடும்பத்தினரையும், நலம் நாடும் நட்புடையாரையும் பிணக்குக் கொள்ளச் செய்து அவர்களை ஆட்டி ஆட்சி புரிவது பொருளாட்சி." பொருளல்லாதவரையும் பொருளாகச் செய்யும் பொருள் ஒரு கூட்டத்தின் பால் குவிந்து கிடக்க, நெருப்பினுள் துஞ்சலினும் கொடிய நிரப்பினுள் வாடுகின்றது ஒரு கூட்டம் இவ்வாறு இங்கும் இனத்தின் பெயரால் செல்வர், வறியவர் எனப் பிரித்து இவர்களை ஆட்சி புரிவதும் பொருளாட்சி, மற்றும் நிறத்துக்கு நிறம், வகுப்புக்கு வகுப்பு, சமயத்துக்குச் சமயம் போராட்டத்தை எழுப்பியதும் பணமே உலகப் போரின் அடிப்படையே பொருளால் அமைந்ததாகும். நாடுகளுக்கிடையே வலிமையுடைய நாடாய் இலங்க வேண்டும் என்ற பேரவாவால், பொருள் வலிமையால் படை வலிமையை வளர்த்து, சில வல்லரசுகள் உலகத்தை அச்சத்துக்குள்ளாக்குகின்றன. இவ்வாறு இங்கு கொடுங்கோலோச்சுவதும் பொருளாட்சியே! அமைதியை நிலைநாட்டுவதற்கென அமைக்கப்பட்ட உலக அமைதிக்காப்பு அறநிலையமான, ஐக்கிய நாட்டு அவையும் பொருள் வளமும் படை பலமும் மிகுந்த நாடுகளைச் சார்ந்திருக்கின்றன. இவ்வாறு தனி மனிதன் முதல் உலகம் வரை நிலவி நிறைந்து நிற்கும் குறை உலகுக்குப் புலப்படுமா? அறம் பிழைக்குமா?

ஆயினும், அறம், எவ்வாறேனும் வாழும், தீமை தோற்கும், அறம் வெல்லும் இது உண்மை. கருவி குறிக்கோளாக மாறியிருப்பதே இன்றைய அச்சத்திற்குக் காரணம். அமைதியான பண்புமிகு அறவாழ்வே குறிக்கோளாகும். செல்வம் ஒரு கருவி. அமைப்பு முறை மாறியிருக்கிறது. இதுவே குறை. இக்குறை நீக்கமுடியாத குறையன்று. இன்றையச் சூழலில் தனிமனித வாழ்க்கையை சீர்திருத்துவதினும் உலகச் சமுதாய அமைப்பை மாற்றி நெறிப்படுத்தினால் இக்குறை நீங்கும்.

தன்னலங் கருதாது அறத்தின் வழிநின்று கடனாற்றும் சான்றோர் ஒரு சிலராவது என்றும் வாழ்வர். அத்தகையோரால் உலகம் என்றும் உயிர்கொண்டு வாழும்.

'உண்டால் அம்ம இவ்வுலகம்............
.....................................
தமக்கென முயலா நோன்தாள்
பிறர்க்கென முயலுநர்
உண்மையானே.''
(புறநானூறு)

''பண்புடையார்ப் பட்டுண்டு உலகம்;
அஃதின்றேல்
மண்புக்கு மாய்வது மன்.''
(குறள் 996)

சான்றாண்மைக்கு ஆழி எனப்படும், ஊழி பெயரினும் தாம் பெயராச் சான்றோர் வாழும் வரை, மனிதப் பண்புகள், உணர்வுகள், மனிதனிடம் நிலைத்து நிற்கும் வரை அறம் அழியாது, அறத்தை அழிக்க முடியாது. தீமை அளவிறந்து ஆவதுபோலக் கெடும்.

''இறைச் சட்டங்கள் மனித மனத்துள் அமைந்திருக்கின்றன. அதனுடைய சுவடுகள் அழியாதவை'' (பைபிள்)

(''The Law of his God in his heart
None of his steps shall slide'')
(Bible)

# தமிழில்(கற்பனையியக்)கவிதைக் கோட்பாடு

டாக்டர் கா. செல்லப்பன்

ஆங்கிலப் பேராசிரியர், பாரதிதாசன் பல்கலைக்கழகம்
திருச்சி 620024

உணர்வுவழிக் கற்பனையியமும் (அல்லது உணர்ச்சிவீறு விந்தைக் கவிதையியம்),அறிவு வழி வரம்பியற் கவிதையியமும் (Classicism and Romanticism) வரலாற்றில் கேட்கும் மனித இதயத்தின் விரிவும் சுருக்கமும் (the systole and the diastole of the human heart in heart in history) என்று கருது பவர்கள் உண்டு; 'அல்ல, கற்பனையியம் வரலாற்றில் ஒரு குறிப்பிட்ட கட்டத்தில் எழுந்த இயக்கம்' என இயம்புபவரும் உண்டு. கற்பனையில் அல்லது உணர்ச்சிப் பெருக்கில் வரும் விந்தையியக் கவிதை எல்லாக் காலத்திலும் உண்டு. எனினும் அது ஒரு பன்னெடுங்கால இயக்கமாக வளர்ந்து, குறிப்பிட்டகாலத்தில் பரிணமித்ததும் உண்டு. இப்படிக் கூறும்போது ஏதோ குறிப்பிட்ட நாளன்று ஒரு குறிப்பிட்ட இடத்தில் திடீரென்று பொங்கி எழுந்த புரட்சியாக, இதனைக் கூற முடியாது. இக்கால இலக்கிய ஆய்வு. இலக்கியக்காலப் பகுப்புக்களை, பெண்டுலத்தில் அதிவேக மாற்றத்தைப் போன்று பிரிப்பதில்லை. மாறாக இலக்கிய வரலாறு காட்டுவது புரட்சிகளைவிட, இயல்பான வளர்ச்சியைத்தாம் என்பர் இலக்கிய அறிஞர் கற்பனையில் அல்லது உணர்ச்சி வீறு கவிதையின் கூறுகளையை, அறிவுவழி வரம்பியற் கவிதைக் காலத்திலேயே காண லாம். அதுபோல, கற்பனையிய உணர்ச்சி வீறுக் கவிதைக்கும் ஒரு வகையான எதார்த்தப் பார்வையும இல்லாமல் இல்லை.

கற்பனையியமும் வரம்பியற் கவிதையியமும் முற்றிலும் முரண்பட்டவையாகக் கருதுவது பிரெஞ்சு இலக்கியத்திற்கு வேண்டுமானால் பொருந்துமேயன்றி ஆங்கில, ஜெர்மானிய இலக்கியங்களுக்குப் பொருந்தாது என்பார் ரெமாக் இந்த அடிப்படையில், கற்பனையியம் என்பது எல்லா நாடுகளிலும் ஒரு தன்மைத்தான இயக்கமன்று என்று Love Joy, Henri Pyre போன்றவர்கள் கருதினால், Prax, Wellek, Peckeam ஆகியவர்கள் அதனை ஒரு பன்னாட்டு இலக்கிய இயக்கமாகப் பார்ப்பது நல்லது எனக் கருதுகிறார்கள். கிரோசே(Croce) போன்றவர்கள் இலக்கிய வரலாறே பயனற்றது எனக்கருதுகிறார்கள். அதை வரலாறு என்று வேண்டுமானால் கூறுங்கள். ஆனால் அதில் 'இலக்கியம்' எதுவுமில்லை என்பது க்ரோசேயின வாதம். ரெனவெலக் இதை ஒரு ஏக ஐரோப்பிய இயக்கமாக (Pan European Romanticism) கருதுவதற்குக் காரணமில்லாமல் இல்லை.

ரெமாக்கின் அட்டவணையைப் படித்துல் பார்த்தாலும் அவை பல்வேறு நாடுகளில் வெவ்வேறு காலகட்டங்களில் தோன்றியிருந் தாலும் அவையனைத்தும், ஒரு தன்னுணர்வுள்ள இயக்கமாக, மக்கள் இலக்கியத்தில் ஈடுபாடு, அறிவு சார்ந்த வரம்பியற் கவிதைக்கு எதிர்ப்புத்தன்மை, கற்பனை வளம், அகப்பார்வை, தனித்துவத்தைப் பேணல், உணர்வுப்பெருக்கு ஆகிய பண்புகளுடன் அமைந்திருப்பதைக் காணலாம்.

ஆனால் அந்த இலக்கிய இயக்கம் (movement) அல்லது கருத்து (concept) பன்மைத் தன்மை/பல்வேறு முரண்பட்ட தன்மைகளைக் கொண்டதாகக் கருதப்படுவதால் ''The word 'romantic' has come to mean so many things that, by itself, it means nothing'', என்பார் லவ் ஜாய். அவர் Joseph Warton's The Enthusiast என்ற பாடலில் இயற்கையியம் சார்ந்த கற்பனையும் இருப்பதாகவும், ஜெர்மானிய கற்பனையியம், கிறித்துவ உலகச் சார்பானதென்றும்,

பிரெஞ்சுக் கொள்கை இந்த இரண்டிலும் வேறுபட்டது என்றும் கூறுவர்.

இயற்கையியம்/மனிதயியம், வான் நோக்கிய தன்மை / மண்ணோக்கிய பார்வை, கற்பனை வளம் / எளிமை நலம், தன் னுணர்வுவீறு உணர்ச்சி காப்பியப் பெருமை எதார்த்தப் பார்வை-கனவு கலந்த பார்வை இப்படிப் பிரிந்த பல்வேறு பண்புகளுக் குள்ளும் ஒரு பொதுத்தன்மையில்லாம லில்லை. வரலாற்றுரீதியாகப் பார்த்தால், அது பதினெட்டாம் நூற்றாண்டு இலக்கி யம—மரபுகள் அதிலும் குறிப்பாக Classical Modelsஐ ஏற்ற தன்மையினின்றும் வேறு பட்ட தனித்தன்மை நோக்கிய பார்வை; அறிவு வகுத்த வரம்புகளை, அணைகளைத் தாண்டி ஓடும் உணர்ச்சிப் பெருக்கு; உள்ளத்து உணர்வுகளை உள்ளபடியே, அலங்கரிக்காமல் கூறுவது; விட்டு விடுதலை யாகி நின்ற சிட்டுக்குருவி போன்று உணர்வு எழுச்சிக்கு முதலிடம் தருவது; அறிவுப் பார்வையை விடுத்த உணர்வுப் பெருக்கு; அழகுக்கு அதிசயப் போர்வை புனைவது; அதே சமயத்தில் எளிமையின் ஏற்றத்தை ஏத்துதல் ஆகியன இந்த இதயத் தின் பொதுத்தன்மைகள் குறிப்பாக, எதிர்ப் படும் வாழ்வைப் படம் பிடிப்பதைவிட அப் படைப்புக்கு முதலிடம் தருவது; உலகத்தை ஒரு முடிந்த படைப்பாகக் கருதாது தெய் வீகத்தின், நிரந்தரத்தின் நிழலாக அதைக் கருதும்போது ஒருவகை இறையியமாக ஆனால் வாழ்வோடு சம்பந்தப்பட்ட இறையி யமாக,இதயத்தில்ஒளிரும்கற்பனையியமாகக் கண்டார்கள். அவர்கள் அந்தப் படைப்புச் சக்தியின் பங்காளியாகத் தங்களைக் கருது வதிலும் வியப்பில்லை. உலகத்தை வெறும் ஜடப்பொருளாகப் பார்க்காமல், ஒரு பிரும் மாண்டமான உயிரின் இயக்கமாகவும்,அந்த அகண்ட சக்தியை அகத்துள் ஒளிரும் ஆனந்த சக்தியாகவும் கண்டனர். இந்த இயக்க உயிர்த் தத்துவம் (dynamic organi cism) உலகத்தையும் உள்ளத்தையும் படைப்பு நோக்கில் பார்க்கிறது. எனவே. மனித மனம் ஒரு படம் பிடிக்கும் இயந்திரம் அன்று; ஒருபடைப்புச் சக்தி. அது பிரதி பலிப்புக் கண்ணாடியன்று; ஒளி விளக்கு (not a copier but a creator, not a mirror but a lamp) என்றுஅந்த அடிப்படையில் தான் கருதினார்கள். பிளேக் Imagination is God— என்று கூறியதும் இப் பார்வையில் தான்.Classic art portrays the finite, Roma ntic art suggests the infinite— என்று சிலர் இவற்றை முரணிய நிலையில் கண்டாலும், கற்பனையியத்தின் அடிப்படையில் ஒருவகை இணைப்பு (Synthesis) இல்லாமல் இல்லை. உணர்ச்சிப் பெருக்காக வரும் உள்ளத்து ஒளி, தனி அகப் பார்வையில் உலகத்தை புதிதாகப் படைக்கின்ற ஆற்றலும் பெறுகிறது; அப்போது கோல்ரிட்ஜ் கூற்றுப்படி the finite becomes the infinte I am; அந்தப் பார்வை யில் நிரந்தரத்துக்கும் கணங்களுக்குமிடையே சங்கமம் ஏற்பட்டு, அகம் பிரம்மமாக உயர்வ தோடு, வையகம் வாழும் சொர்க்கமாக மலர் கின்றது. இந்தப் பார்வையில் ஒவ்வொன்றும் ஒரு எல்லையற்ற தன்மையை அடைந்து விடுவதால் அது ஒரு சுட்டிக்காட்டும் கலை யாக (suggestive art) பரிணமிக்கிறது. உண்மை கனவாக, கனவு உண்மையாக மலர்கிறது. அப்போது அது படிமங்களையும் தொன்மங்களையும் உருவாக்குகிறது. ஒரு நிலையிலே, பழமையினையும் மக்கள் மரபிலக்கியங்களையும் புதுப்பிக்கிறது.

சுருங்கச் சொன்னால், ஐரோப்பியக் கற்கனையியம், மண்ணில் வேரூன்றிய விண் ணோக்கிய பார்வை; அப்பாலுக்கு அப்பால் உள்ள சக்தியினை அகத்துள் ஒளிரும் சக்தி யாகப் பார்த்த பார்வை; இதய மொழியில். எளிய இயற்கை மொழியில் எல்லையற்ற அழகை வாரி வழங்கிய பழமையான பார்வை; பழகிய பாதைகளிலும், இலக்கண வேலிகளிலும் ஒண்டிக் கிடந்த கவிதையை உள்ளத்துணர்வுப் பெருக்கில் குதித்து விளையாடச் செய்த பார்வை; குறிப்பாக ஆங்கில இலக்கியத்தில் இயற்கை சார்ந்த மனித இயமாக, இயற்கையில் இதயத்தை யும் இதயத்தில் இயற்கையையும் இணைத்த பார்வை; அழகு வேட்கையாக,தன்னுணர்வுப் பெருக்காக, எளிய சொற்களில் தூய உணர்வு களின் வெளிப்பாடாக,கணங்களின் அழகைக் கற்பனைக் கண்களால் கண்டு களித்த நிரந் தரத் தரிசனமாக, ஆத்ம சுதந்திரத்தின் சங்க நாதமாக,பழகிய உலகின் அதிசயக் குவியல் களையும் அதிசயஉலகின் பழகிய தன்மை யினையும் கண்டு, கேட்டு, உண்டு, உயிர்த்து உற்றறிந்த ஆற்றலாக, இயற்கையிலே விந்தையையும் விந்தையிலே இயற்கையை யும் கண்ட புனிதப் பார்வையாக (Redem ptive Perception)மலர்ந்தது.

இந்தப் பின்னணியில் இருபதாம் நூற்றாண் டில் தமிழகத்தில் எழுந்த பாரதி நெறியை பாரதி, பாரதிதாசன், தேசியவிநாயகம் பிள்ளை, திரு.வி.க., கல்கி ஆகியோரது இலக்கிய இயக்கத்தைத் தமிழில் தழைத்த உணர்ச்சிவழி விந்தையிய இலக்கிய இயக்க மாகப் பார்க்கலாம். இவர்கள் ஒரு தன் னுணர்வு நிலையில் (self-conscious) இலக்

கிய இயக்கமாக இயங்கினார்களோ இல்லையோ இவர்களிடையே முழு இணைப்பு, உள்ளார்ந்த உணர்வு, ஒருமை இருந்தது என்பதிலும், அதற்கும் மேலைநாட்டு விந்தையியக் கவிதையியக்கத்துக்கும் ஒரு வகைத்தொடர்பு இருந்தது என்பதிலும் ஐயமில்லை. பாரதியைப் 'புதுநெறி வகுத்த புலவன்' எனப் பாரதிதாசன் பாராட்டினார். அப் புது நெறியின் அடிப்படை, 'கவிதைக் கனல் உள்ளத்து உணர்வின் பெருக்கு' என்பதிலும் ஐயமில்லை. 'உள்ளத்தில் ஒளியுண்டானால் வாக்கினிலே உண்மையுண்டாகும்' என்று பாரதி சொன்னார்.

உள்ளத்துள்ளது கவிதை—இன்பம்
உருவெடுப்பது கவிதை
தெள்ளத் தெளிந்த தமிழில்—உண்மை
தெரிந் துரைப்பது கவிதை

என்று கவிமணி பாடினார். எப்படி ஆங்கிலக் கற்பனையியக் கவிஞர்கள், கவிதையை கிரேக்க உரோம இலக்கியங்களின் வரம்புகளிலிருந்து விடுவித்து, அக எழுச்சியாக உள்ளத்து உணர்வு வழிஉருவாக்குவதற்குப் பயன்படுத்தினார்களோ, அப்படி பாரதியும் கவிதையை வரட்டு இலக்கணப் பிடிகளிலிருந்து, அலங்கார ஆர்ப்பரிப்பிலிருந்து விடுவித்து இதயத்தின் வயல்களில் பூக்கும் எளிய ஆனால் வளமிக்க இயற்கை வண்ணங்களாகக் கண்டார். மேலை நாட்டுக் கவிஞர்களைப் போல் கற்பனையை (Imagination) இவர்கள் வெளிப்படையாகப் பேசவில்லை. ஆனால் இந்தக் கவிஞர்களில் கற்பனையின் காட்டாறு — அற்புத உலகைக் காட்டும் அதீதக் கற்பனையாக இல்லாமல், அருகில் உள்ள உலகின் அழகை உள்ளுணர்வுடன் தரிசித்து அதன் செழுமையை எளிய ஆனால் வளமான மொழியில் காதலால் கசிந்து பாடிய கவிதையாகக் கரை புரண்டோடியது.

இந்த இயல்பான உணர்ச்சிப் பெருக்குக்கும் இயற்கை வழிபாட்டுக்கும், மேலைநாட்டு விந்தையியக் கவிதையைப் போல் அவ்வளவு நெருங்கிய உறவு இங்கிருந்ததாகக் கூறமுடியாது. பாரதிதாசனிலும் திரு.வி.க விலும் இயற்கை ஆராதனை மிகுதி. அவர்களுக்குள்ளும் வேறுபாடு உண்டு; பாரதிதாசன் இயற்கையை அழகின் சிரிப்பாகவும், மனிதத்துவத்துக்கும் சமத்துவத்துக்கும் உருவகமாகவும் கண்டாரே ஒழிய வேர்ட்சுவார்த்தைப் போல அதைப் பரம்பொருளின் விளக்கமாகவோ, அறநெறியைப் பயன்படுத்தும் களமாகவோ. அதற்கும் ஒருஆத்மா இருப்பதாகவோ காணவில்லை. திரு. வி. க. வில் இயற்கையின் தெய்வீகம் மிகுதி பேசப்படுகிறது; மனித அக விழிப்புக்குச் செவிலித் தாயாகவும் கூறப்படுகிறது. ஆனால் அவரும் இயற்கையைப் பரம்பொருளின் உடலாகக்கருதினாரேயன்றி அதனையே ஒரு ஆத்மாவாகக் கருதியாகக் கூற முடியாது. பாரதியின் கவிதையில் மங்கியதோர் நிலவும், நீலத்திரைக் கடலும், அதைவிட அவரது உரைநடையில், தண்மை வெம்மைக் காதலும் தொன்மங்களாகப் படைக்கப்பட்டுள்ளன. ஆனாலும் பாரதியில் தெய்வீகம் இயற்கையோடு இணைக்கப்பட்டிருக்கப்பட்டிருக்கிறது; அவர் கண்ணம்மாவின் கண்களைச் சூரிய சந்திர்களாகக் காட்டியுள்ளார் அவளது நிலவூறித் ததும்பும் விழிகளும் அமுதூறித் ததும்பும் இதழ்களும் பேசப்படுகின்றன. திரு வி. க. விலும் பாரதியிலும் இறைமையும் இயற்கை மனித உணர்வோடு இணைக்கப்படுகிற (the humanisation of God and Nature) அளவுக்கு மனிதனும் இறைமையும் இயற்கைப் பண்புடையவர்களாகக் (Naturalisation of man and God) இருப்பதாகத் தெரியவில்லை. ஆனால் இயற்கையையும் மனிதனையும் தெய்வீகமாகக் (decification of man and Nature) காணும் பார்வையும் இல்லாமலில்லை. பாரதியின் தேசியப் பாடல்கள் மாதாவை இறையுணர்வோடு பன்னிப் பரவுகின்றன. அம்மாதாவுக்கு திருப்பள்ளி எழுச்சியும் இசைககின்றன. இங்கே லவ் ஜாய் சொல்கிற முரண்பாடு ஒருவகையான சங்கமமாவதைப் பார்க்கலாம். தெய்வம் மனிதமாவது ஒரு புறம்; மனிதம் தெய்வமாவது மறுபுறம்; இது இந்திய வேதாந்தக் கொள்கையின் மறு அவதாரம். ஜான் சாமுவேல் கருத்துப்படி, 'தமிழர்களின் தத்துவக் கோட்பாடுகள், கிறித்துவக் கொள்கைகள் போலன்றி, இயற்கையைக் கண்ணுக்கும் புலனாகிற, இறைமையின் கண்ணுக்குத் தெரியும் உடலாகக் கருதினர்; மேற்கத்திய விந்தையியக் கவிஞர் கிறித்துவத்தில் இயற்கை வழிபாட்டுக்கு இடமின்மையால் கிறித்துவத்தை விட்டு ஏக இறையியல் வாதிகளாக மாறினர். ஆனால் தமிழ்க் கவிஞர் தங்கள் சமயத்தைப்புறக்கணிக்காமல் இயற்கையை வழிபடுவர்களாக இருக்கமுடிந்தது.'' இதை நாம்முழுக்க ஏற்காவிட்டாலும் இது ஓரளவுநம் கருந்துக்கு வலிவுதருகிறது.

ஆனால் தமிழில் உணர்ச்சிவீறு கவிதையின் விந்தையியப் பார்வையில், அயல் நாட்டுப் பார்வைபோல் இயற்கை வழிபாடு இல்லாது வாழ்வு வழிபாடு, மனித உயர்வு மிகுதியாக இருக்கிறது. மேலும் அது இங்கு தேசிய உணர்வோடும் சமுதாய வாழ்வோடும்

இணைக்கப்பட்டுள்ளது. பைரனும், ஷெல்லியும் விடுதலையைப்பற்றிப் பாடினாலும், மற்ற மேலை நாட்டுக் கவிஞர்கள், சமுதாய விடுதலையைப்பற்றியோ சமத்துவத்தைப் பற்றியோ, அவ்வளவு பாடவில்லை. ஆனால் இந்தியாவில் தமிழகத்தில் அது ஒரு தேசீய ஆத்ம எழுச்சியின் ஒரு பகுதியாகவே, சில சமயங்களில் சமுதாயப் புரட்சியாகவே உருவெடுத்துள்ளது. இதில், தமிழ்ப் புலவர்களுக்குள்ளேயே வேறுபாடும் இல்லாமலில்லை. பாரதியும் திரு வி. க. வும் போற்றிய இந்தியப் பார்வை பாரதிதாசனில் திராவிட மறுமலர்ச்சியினின்றும் வேறுபட்டிருப்பினும் இவர்களனைவரும் மொழி மலர்ச்சிக்கு முதன்மை தந்ததை, படைப்பாற்றலுக்கு முதன்மை தந்ததாகவே கொள்ள வேண்டும்; ஆனால் மொழியைக் கற்பனைத் தேரின் கலசமாகக் கருதாமல் வாழ்வினை வளப்படுத்தும் செயற் கருவியாகக் கருதினார்கள். பாரதிதாசனின் தமிழியம் பாரதியின் கவிதை போற்றலின் வளர்ச்சியே. இந்த இயக்கத்தின் அனைத்துப் புலவரும் வாழ்வின் புனிதத்துவத்தை, காதலை, பெண்மையை, குழந்தையை, சாதாரண மனிதனின் அசாதாரணத்துவத்தை, சகோதரத்துவத்தை, சமத்துவத்தை வாயார வாழ்த்தினர். இவர்களில் பாரதியிலும் திரு. வி க. விலும் தெய்வீகம் கலந்த மானுடமும், பாரதிதாசனிலேதெய்வீக உருவகமற்ற ஆனால் மிடுக்கானமானுடமும் மலர்வதைப் பார்க்கலாம். பாரதியிலும் திரு. வி. க. விலும் ஷெல்லி போன்ற ஆங்கில, ஜெர்மானிய, மார்க்சீயச் சிந்தனைகளின் தாக்கம் தெரிந்தால் பாரதியில் பிளேக். வேர்ட்ஸ்வொர்த், போன்ற மேலைநாட்டு அநுபூதிக் கவிஞர் தம் தாக்கமும், பாரதிதாசனின் பிரெஞ்சுக் கவிஞர் தம் தோழமைக் கொள்கையும் தெளிவாகத் தெரிகிறது. பாரதியின் குழந்தைக் கண்ணம்மாவில் பெரியாழ்வார் மரபின்மானுட வளர்ச்சி தெரிகிறது. பாரதிதாசனில் இயற்கையியம் மிகுதி; தேசியவிநாயகம் பிள்ளையில் குழந்தையில் இறைமையின் எளிமை தவழ்ந்து விளையாடுகிறது. பாரதி, பாரதிதாசன், திரு. வி. க. வின் காதலைப் பற்றிய சிந்தனைகளிலும் இந்த வேறுபாட்டைக் காணலாம். பாரதியில் காதல், தெய்வீகத்தன்மை படைத்த மனித உணர்வு (a mystic but human emotion), பாரதிதாசனில் அது ஒரு முழுக்க மனித உறவு. இருவரும் பெண்மையை அந்தக் காதலின் உருவகமாக மட்டுமன்றி. சமுதாய சக்தியாகவும், கவிதையின் ஊற்றாகவும் கருதினார்கள். பாரதி பத்தினிப் பெண்ணை பரம்பொருளின் பெண்ணியலாகவும் கவிஞர்தம் ஆண் நெஞ்சின் அடிமனப் பெண்மையாகவும் கண்டான்; பாரதிதாசனின் அமுதவல்லி, கவிஞனின் மூலப்பொருள்; அதே சமயத்தில் அவனது ஆண்மையினைப் புத்துயிர்க்கச் செய்து, அரசனை எதிர்க்கச்செய்யும் சமுதாய சக்தி. பாரதியின் பாஞ்சாலியும் தீமைக்கு எதிராகக் குரல் கொடுக்கிறாள்; ஆனால் இறைமையோடு ஒன்றி சபதம் செய்கிறாள். பாரதிதசனின் அமுதவல்லியும் தமிழச்சியும் தாமே வரலாற்றினை மாற்றும் வாழ்வுச் சக்தியாக உருவெடுக்கிறார்கள். திரு. வி க. வில பெண்மை, சிவகாமி, காளி ஆகியவற்றோடு இணைக்கப்பட்ட வரலாற்று சக்தியாகக் காட்டப்படுகிறது. கல்கியின் சிவகாமியின் சபதத்திலும, அலைஓசையிலும் புதிய பெண்மை, பழைய தொன்மங்களின் புதிய பொருளாகப் பொலிவதை வேறிடத்தில் விளக்கியுள்ளோம். இவையனைத்துக்கும் ஷெல்லியின் பெண் பாத்திரங்களுக்கும் தொடர்பிருப்பினும். தமிழ் விந்தையியப் புலவர்தம் பெண்மையில் இறைமையும் சமுதாயப் பண்பும் மிகுதி (There is a greater synthesis of the divine and the human in the image of woman in the Tamil Romantics).

இவையனைத்தோடும் இணைந்தது இப் புலவர்தம் 'தான்' பற்றிய கொள்கை. மேலை நாட்டு விந்தையியக் கவிஞர் தன்வழிப் பார்வையைப் பெரிதும் வலியுறுத்தினாலும், கவிதை தனது ஆளுமையின் வெளிப்பாடு எனப் பேசினாலும், அவர்கள் தம் உள்ளுயிரை, உலகுயிரின் ஒரு பகுதியாகத் தான் உணர்ந்தார்கள். தன்வயப் பார்வையை வலியுறுத்திய வேட்சுவொர்த்தை The Egotis Sublime என்று கூறுவர்; கோல்ரிட்ஜின் கவிதையிலும் அவரது தனித்துயர்கள் பொது உணர்வுகளாகக்கப்பட்டுள்ளன. ஷெல்லி வானம்பாடியைப் பற்றிப் பாடினாலும், மேலைக்காற்றைப் பற்றிப் பாடினாலும், அவற்றைத் தன்னை உணர்வதற்கும் உயர்த்துவதற்கும் உதவும் கருவிகளாகக் காண்கிறார். கீத்சும் தன்னையிழக்கும் தன்மை (Negative capability)யை வலியுறுத்தினாலும், அதைத் தன்னையகழ்ந்திடும் பண்பின் வளர்ச்சியாகவே காட்டியுள்ளார். சுருங்கக் கூறின், மேலைநாட்டுக் கற்பனையியக் கவிதையில தனிமை பேசப்படுகிறது; தனித்துவம் வலியுறுத்தப்படுகிறது; ஆனால் தான்' அது' வாக வேண்டியதன் அவசியமும் காட்டப்படுகிறது. வேட்சுவொர்த்து, இயற்கையின் உள்ளுயிரை உணரும்போது தனது அகவிழிப்பையும்உணர்கிறார். மூத்த தலைமுறையைப் போன்று, இளைய தலைமுறையும தன்னினின்றும் விடுதலை தேடித் தவித்தது. இந்த விடுதலை

ளை, தனக்கு அப்பால் உள்ளதோடு ஒரு இணையம், ஒரு அக இணைப்பு—அடிப்படையில் சங்கமம், உணர்வுநிலையின் தனித் தன்மையினின்றும் விரிவு வேட்கையின் மூலம் அடைய முடியும் என்பர் ஜான் க்ளப்பும், எர்னஸ்ட் லவலும். ‡ தமிழ்க் கற்பனையியக் கவிஞர்களிடமும் இந்த 'நான்' அதன் நாடகத்தைக் காணமுடிகிறது. பாரதியாரின் பாடலில் ஒரு தனிமனிதக் குரலைத் தெளிவாகக் கேட்க முடிகிறது. ''சொல்லடி சிவ சக்தி, என்னைச் சுடர்மிகும் அறிவுடன் படைத்து விட்டாய்'' என்று அவர் பாடும் பொழுது பரம்பொருளுடன் உரையாடுகிறது. ஆனால் அவரது 'நான்'வெறும் Ego அன்று; நான் என்னும் நாடகத்தை நடத்துபவனும் நான் என்னும் போது அது 'அது' வாக உயர்ந்து விடுகிறது. 'அது'வாகத் தன்னை உணர்கின்ற 'நான்'தான் பாரதியின் இலக்கிய நாயகன். தன் பாட்டுத் திறத்தாலே வையகத்தைப் பாலித்திடத் துடிக்கும் போது, அந்தப் பாட்டின் முடிவுடன் பரம்பொருளும் கவிஞனும் ஒன்றாகிவிடுவதையும் உணர முடிகிறது. அதுவன்றி பாரதியின் அகக் குரலில் மக்கள் குரலையும் இந்திய ஆத்மாவின் குரலையும் கேட்க, முடிகிறது. ''நாமன்றி வேறில்லை'' என்று பாரதி பேசும்போது பரமாத்மாவையும் ஜீவாத்மாவையும் சேர்ந்த நிலையில் ஒன்றுபட்ட மானுடத்தின், (சில நேரங்களில் ஒன்றுபட்ட இந்தியத்தின்) குரலைக் கேட்க முடிகிறது.பாரதிதாசனிலும் தன்மை பன்மையாக உயர்வதைக் காணலாம். ''மானுட சமுத்திரம் நான் என்றுகூவு'' என்று இந்த அடிப்படையில்தான் கூறுகிறார். திரு. வி. க. வாழும் வழியைப் பரம்பொருளோடு இணைத்துப் பேசிகிறார்.பாரதி, பாரதிதாசன் பாடல்களிலே நான்–நாம் ஆகியவை கையாளப்படும் முறை ஆராய்ந்து நோக்குதற்குரியது. அவர்களது தன்னுணர்வுப் பாடல்களின் நாடகத் தன்மையும் இதனுடன் இணைந்ததுவே.

இவை அனைத்தோடும் இணைந்தது அவர் தம் பேச்சு மொழியும், மக்கள் இலக்கியப் பாங்கும்; இப்படிச் செய்யும் போது அவர்கள் சில பழைய மரபுகளுக்கு புது மனிதப் பிணைப்பினையும் ஊட்டியுள்ளார்கள். வழிபாட்டுப் பாட்டுகளைத் தேசியப் பாடல்களாகவும் காதற் பாடல்களாகவும், தனிமனிதத் கனவுப் பாடல்களாகவும் பாரதி மாற்றியதும் இந்த அடிப்படையில்தான் அவரது பாடல்களில் சிந்துவின் சந்தம் கேட்கிறது; சாதாரண மனிதனின் சாதாரணச் சொற்களின் அசாதாரணம் வெளிப்படுகிறது. சொற்களில், சக்தி உணர்ச்சிகளின் உயிர்ப்பினால் உந்தப் பெற்றுப் பட்டுத்தெறித்த மானின்விழிபோல், ஒளியும் ஒலியும் பெற்று,வீறு பெற்று வீர நாதம் செய்கின்றன. கும்மி, தெம்மாங்கு, கீர்த்தனம் போன்ற பழையபாடல் நெறிகளையும், Sonnet போன்ற புது வகைகளையும் அவர் பயன்படுத்தியது பலரும் அறிந்த செய்தியே. நாம் வலியுறுத்த விரும்புவது, பாரதியாரின் 'நான்', மக்கள் வாழ்வோடு வேரூன்றிய பரம்பொருளின் ஒரு பகுதியாகத் தன்னை உணர்ந்த 'நான்' என்பதுவே. இந்தநெறி, நாயன்மார் ஆழ்வார் பாடல்களிலிருந்து இராமலிங்க சுவாமிகள் பாடல் வழியாக வளர்ந்த இந்திய, தெய்வீக மானுட இயலின் மீட்சியும், முகிழ்ப்பும் ஆம்.அதற்கு மேலைநாட்டுக் கற்பனையியம் துணை செய்தது. தேசிய விநாயகம் பிள்ளையிடமும், திரு.வி.க.விடமும் ஏறக்குறைய இந்நிலையை — தன்னைத் தன் மொழி, இனம், இறை வழியாக உணர்வதை நடையிலும் காணலாம். பாரதிதாசனில், மக்கள், கலித்தன்மை மிகுதி — ஆனால், அது இறைமையுடன் இணைக்கப்படாமல் இயற்கையுடன் இணைக்கப்பட்டுள்ளது. மற்றவர்களிடம் தேசீய மலர்ச்சி, தெய்வீகப் பாடல்கள் வழியாகப் பேசப்படின், பாரதிதாசனில் திராவிட தமிழ் மலர்ச்சி, சங்க இலக்கியப் பார்வை மீட்சியாக மலர்கிறது.

மொத்தத்தில் தமிழ்க் கற்பனையிய இயக்கத்திலும் உணர்வுப் பெருக்கும், படைப்பாற்றல் வழிபாடும் வாழ்வு வழிபாடாக மலர்கிறது.

---

† *"No less than the older generation, the younger sought to escape from the self. This escape may be achieved by a union, communion, or marriage with that which is outside self, essentially an expansionistic urge away from the single centre of consciousness."–*

*John Gluppe & Ernest J. Lovell, Jr., ENGLISH ROMANTICISM*

இங்கும் ''வீடு'' நோக்கிய பயணம் ''வீடு'' நோக்கிய பயணமாக நிறைவு பெறுகிறது. ஆனால் அகப் பார்வை, சமுதாயப் பார்வையாகவும், ஆத்ம சுதந்திர வேட்கையாகவும் விளங்குகிறது. ஆனால் பாரதியிலும் திரு.வி.க.விலும் அது ஜெர்மானிய, ஆங்கிலேயக் கற்பனையியம்போல் transcendentalism கலந்த மனிதநேயமாகப் பரிணமித்தாலும் பாரதிதாசனில் naturalism ஒடிய மனிதநேயமாகப் பரிணமிக்கிறது. இப்படிப்பட்ட வேறுபாடு, ஆங்கிலக் கவிஞர்களுக்குள்ளும் பிரெஞ்சு கற்பனையியத்தவருக்கும் இடையேயும் உள்ளதுதான். பாரதிதாசனில் பிரெஞ்சுப் புலவர்தம் தாக்கம் மிகுதியாக இருப்பதும் இதற்குக் காரணமே. பாரதியில் தொன்ம மீட்சியும் (Revitalisation of myth) பாரதிதாசனில் தொன்ம மறுப்பும் (demytholisation) இருப்பதுவும் இந்த அடிப்படையிலேயே.

முடிவாகச் சொன்னால், மேலைக் கற்பனையியம், தமிழ் மண்ணின், மரபின் வலுவினை ஏற்ற, வாழ்வு மீட்சியாக, பார்வை மீட்சியாக, விந்தைக் கவிதையாக வீறிட்டெழுந்தது. இந்த இயக்கத்துள் வேறுபாடுகள் இருப்பது இயல்பே. மேலைநாட்டுக் கற்பனையியக் கவிஞர்தம் வேட்கை, ஒரு வகைத் தன்னிரக்கத்தோடு முடிவு பெறுகிறது. அவர்கள் மானுட எழுச்சியைப் பாடி மானுடக் குறைபாட்டை இறுதியில் உணர்கிறார்கள். ஆனால் தமிழ்க் கவிஞர்கள்—பாரதிதாசனை விடுத்து—தம்மைப் புறமாக்கிக் காண்பதால், தம் அக ஆய்வு வழி தம்மைப் பரம்பொருளின் பகுதியாக உணர்வதால், மானுடத்தின் வெற்றி இங்கு தெளிவாகத் தெரிகிறது. பாரதிதாசனில் அது இயற்கையியத்தோடு இணைத்துக் காட்டப்பட்டாலும், மற்றவர்களில் அது பரம்பொருளோடு இணைத்துக் காட்டப்பட்டாலும் உணர்வுவீறுக் கற்பனையியக் கவிதையியத்தின் மையம் அப்பாற்பட்ட இறையியம் அன்று; வெறும் இயற்கையியமும் அன்று. அந்த இரண்டையும் இணைக்கும் ஈர்ப்பு மையம் (centre of gravity) மனித மனம் என்றால், அவர்கள் அனைவருமே அதன் எல்லையற்ற தன்மையினை அழகுற உணர்வொழுகப் பாடுவதால் கற்பனையியக் கவிஞர் தாம். Rene wellek சொல்கிற "they all see the implication of imagination, symbol, myth and organic nature and see it as part of the great endeavour to overcome the split between the subject and object, between the self and the world, between the conscious and the unconscious''. என்ற இலக்கணம் இவர்கட்கும் நம் மரபுப்படி பொருந்தும்.


வாய்மையே வெல்லும்

தமிழ் வளர்ச்சித் துறை

சான்றிதழ்

1979ஆம் ஆண்டில் வெளியிடப் பெற்று நாவல் எனும் தலைப்பின்கீழ் வரப்பெற்ற நச்சு வளையம் எனும் நூல் இரண்டாம் பரிசுக்குரியதெனத் தேர்ந்தெடுக்கப்பட்டு அந் நூலாசிரியரான திரு இராம. பெரியகருப்பன் (தமிழண்ணல்) அவர்களுக்குப் பரிசுத் தொகை ரூபாய் ஆயிரமும் இச் சான்றிதழும் வழங்கப் பெறுகின்றன.

(ஒ-ம்) மா.நன்னன்
தமிழ் வளர்ச்சி இயக்குநர்

(ஒ-ம்) செ. அரங்கநாயகம்
கல்வி அமைச்சர்.
15.1.1982

# வாசகமும் வாய்மொழியும்

பேராசிரியர் டாக்டர் ந. சுப்பு ரெட்டியார்
ஏ டி — 13, மனை எண் 3354 அண்ணாநகர்,
சென்னை 600 040

இன்பமும் துன்பமும் நிறைந்து ஒளியும் இருளும் சூழ்ந்துள்ள இவ்வுலகில் வாழப் பிறந்தவன் மனிதன். இன்ப வெளியை நாடிச் செல்லும் அவனுக்கு வழிகாட்டுவதற்கு எய்ப்பினில் வைப்பாகக் கிடைத்திருப்பவை அநுபூதி நிலையை அடைந்த அருளாசிரியர்களின் அருளிச் செயல்கள். தமிழ் மொழியில் இவை ஏராளம். இவற்றுள் 'திருவாய் மொழியும்' 'திருவாசகமும்' ஈண்டு ஒப்புநோக்கிக் காண்பதற்கு எடுத்துக் கொள்ளப்பெற்றன.

இந்தக் கட்டுரையில் நாம் குறிப்பிடுவது: 'வாசகம்' என்பது திருவாசகம் 'வாய்மொழி' என்பது திருவாய்மொழி; திருவாசகத்தை அருளியவர் வாதவூரடிகள் திருவாய்மொழியை அருளியவர் மாறன் என வழங்கப்படும் சடகோபர்; நம்மாழ்வார், வாதவூரடிகள் முறையாகக் கல்விபயின்று கற்றுத் துறைபோய வித்தகரானவர். ஐப்புல இன்பமும் ஆரத்துய்க்கும் அரசவாழ்வில், அமைச்சர் பதவியில் சிக்கி பிறந்ததன் பயனைச் சிறிது மறந்திருந்த ஆன்மாவாகிய வாதவூரடிகட்கு இறைவன் திருப்பெருந் துறையில் குருந்த மரத்தடியில் குருமூர்த்தியாக எழுந்தருள், உண்மை ஞானத்தை உணர்த்த, அதன் விளைவாக எழுந்த அநுபவஞானத்தைக் காட்டுவது திருவாசகம். கருவிலே திருவுடைய மணிவாசகப் பெருமான்,

உருத்தெரியா காலத்தே
உள்புகுந்தென் னுளமன்னிக்
கருத்திருத்தி ஊன்புக்குக்
கருணையினா லாண்டுகொண்ட
திருத்துருத்தி மேயானை (475)

என்ற பாடலில் தான் கருவிலிருந்த போதே தன்னைச் சிவபெருமான் ஆட்கொண்டதாகக் கருதுபவர். திருப்பெருந்துறையில் ஆட்கொண்ட சிறப்பை,

செந்தழல் புரைதிரு மேனியும் காட்டித்
திருப்பெருந் துறையுறை
கோயிலும் காட்டி
அந்தணன் ஆவதும் காட்டிவந்
தாண்டாய் (373)

என்ற திருப்பள்ளியெழுச்சிப் பாடலில் தெளிவிக்கின்றார்.

உயர்வற உயர்நலம் உடையவனான எம் பெருமானால் மயர்வற மதிநலம் அருளப் பெற்றவர் சடகோபர். கருவிலே திருவுடையவர். திருக்குருகூர் பொலிந்து நின்ற பிரான் சந்நிதியிலுள்ள திருப்புளியாழ்வார் (புளிய மரம்) அடியில் பதினாறு வயதளவும் கண் விழியாமல் மௌனமாக எழுந்தருளியிருந்த போது பரமபத நாதன் நியமனப்படி சேனை முதலியார் என்கின்ற விஷ்வக்சேனர் யாரும் இல்லாதபோது தனிமையில் எழுந்தருளி இவருக்குத் திருவிலச்சினை செய்து எல்லாவித மந்திரார்த்தங்களையும் உபதேசித்தருளினார் என்பது வரலாறு. இந்த ஆழ்வார் ஓதாது உணர்ந்த ஞானச் சிறப்புடையவர் என்பதை

அறியாக் காலத்துள்ளே
அடிமைக்கண் அன்புசெய்வித்து
அறியா மாமாயத்து
அடியேனை வைத்தாயால்
—திருவாய் 2,3:3

என்ற அகச் சான்றினால் அறியலாம்,

சடகோபர் திருப்புளியாழ்வார் அடியில் எழுந்தருளியிருந்தபோது உலகியலைச் சிறிதும் நினையாமல் இறைவன் சிந்தனையிலேயே ஆழங்கால் பட்டிருந்தார், அப்போது இவரது ஞானக் கண்ணுக்கு இலக்கான எம்பெருமானை நோக்கி தேவரீரை அநுபவிப்பதற்கு இடையூறான உடல்

தொடர்பை அறுத்துத்தள்ள வேண்டும், என்று சம்சார சம்பந்தத்தைப் புறக் கணிக்க நினைத்தார். ஆனால் எம்பெருமான் இவரது விருப்பத்தைத் தலைக்கட்டித் தந்தருளவில்லை. இந்த ஆழ்வார் சம் சாரத்தை விட்டு விலகி நலமந்தமில்லாதோர் நாட்டில் போய்ச் சேரவேண்டும் என்று பாரிப்பது தம்முடைய குணங்களை அநுபவிப் பதற்காகவே என்று திருவுள்ளம் பற்றிய எம்பெருமான் அந்தக் குணாநுபவத்தை இந்த லீலா விபூதியிலேயே வாய்க்கச் செய்ய, அதனை அநுபவித்த ஆழ்வார் அவ்வநுபவம் உள்ளடங்காமல் புறவெள்ள மிட்டுப் பிரபந்தங்களாகப் பெருகியது. ஒரு தாய் தன் குழந்தைக்குச் செரிமான மின்மையை நீக்கிப் பசியை மிகுவித்துச் சோறிடுமாப்போலே எம்பெருமான் தமக்குச் சுவையைப் பிறப்பித்த படியையும், அந்தச் சுவை பரபக்தி, பரஞானம் பரமபக்திகளாகப் பக்குவமானபடியையும், பின்பு பிரகிருதி சம்பந்த மற்றுப் பேற்றோடே தலைக்கட்டின படியையும் அருளிச் செய்தார் 'திருவாய் மொழியில்.

**பெயர்க்காரணம்: திருவாசகம்:** திரு— அழகு, வாசகம் — வார்த்தை, சொல். திரு வாசகம்— அழகியசொல் என்பது அதனை யுடைத்தாகிய நூலை உணர்த்திற்று. திரு என்பதற்குக் கண்டாரால் விரும்பப்படுந் தன்மை, நோக்கம் என உரைகாண்பர் பேராசிரியர். இதனைக் கண்டார் வேறு எதனையும் விரும்பார் ஆதலின் புண்ணிய கூட்டம் கண்ட பக்குவ ஆன்மாக்களால் விரும்பப்படும் தன்மையுடைய வாசகம் என்றும் பொருள் கொள்ளலாம், பண்டித மணி அவர்கள் திருவாசகம் என்பது அழகிய தெய்வத்தன்மை வாய்ந்த சொற்களாகித் செய்யுள் நூல் என்னும் பொருளை உடைத் தாகும்...வாசகம் —சொல், இத்திருவாசகத் திருப்பாட்டுகள் தெய்வ நலம் கனிந்த சொற் களாலும் சொற்றொடர்களாலும் அமைந் தவை; இனிமை, எளிமை, ஆழமுடைமை என்னும் குணங்கள் தம்பால் அமையப் பெற்றவை; மெய்யன்புடன் ஓதுவார், கேட்பார், உணர்வார் எல்லோரையும் மிக்க பேரின்பத்தில் திளைப்பித்துப் பரவசப்படுத் தும் இயல்பின; அநுபவ உண்மைகளைத் தெளிவுண்டாம் 'படி விளக்குவன' 'என்றுதம் திருவாசகம் — கதிர்மணி விளக்கம்' என்ற நூலில் விளக்குவார்.

இவற்றைக் கருத்தில் கொண்டு 'திருவாச கம்' என்ற நூலில் நுழைந்து பார்க்தம் போது அடிகளாரே 'வாக்கு உன் மணி வார்த்தைக்காக்கி' (30) என்றும், 'பேச் சிறந்த மாசில் மணியின் மணிவார்த்தை' (632) என்றும் இறைவனைப்பற்றிப் பாடும் தமது மொழியை 'வார்த்தை' என்று வழங்கு வதைக் காண்கின்றோம், 'வாரத்தை' 'வாசகம்' என்பன ஒரு பொருட்கிளவி. அன்றியும் இறைவன் தம்மை ஆட்கொண்ட அருள் விசேடத்தை உலகத்தவர்க்கு உரைப் பது போலவும், பிரிந்ததனால் உண்டாகும் வருத்தத்தைப்பற்றிப் பெருமானோடு உரை யாடுதல் போலவும் இந்நூல் முழுவதும் அமைந்திருத்தலின் பேச்சு முறையான் அமைந்தஇந்நூல் 'வாசகம்' என வழங்கப் பெற்றிருக்கலாம் என்று நம்மைச் சிந்திக்க வைக்கின்றது.

**திருவாய்மொழி:** திரு — உயர்வைக் குறிக் கும் அடைமொழி. இது வாய்க்கும் அடை மொழி ஆகலாம்; வாய்மொழிக்கும் அடை மொழி ஆகலாம். மேன்மையுடைய வாயி னால சொல்லும் சொற்களினாலாகிய நூல் என்பது பொருள். உயர்வை விளக்கும் அடை மொழி கொடுக்கும்படி ஆழ்வாரது வாக்குக் குள்ள சிறப்பு அவரது 'திரு நாவீறு உடைய பிரான்' என்னும் திரு நாமத்தாலும் விளங் கும். திருமங்கையாழ்வாரின் அருளிச் செய லாகிய 'திருமொழியினும்' வேறுபாடு விளங்குவதற்கு இது திருவாய்மொழி எனப் பட்டது.

> என் சொல்லால் யான்சொன்ன
> இன் கவி என்பித்துத்
> தன்சொல்லால் தான்தன்னைக்
> கீர்த்தித்த மாயன் (7.9:2)

என்றும் கூறுவர் 'என்னால் தன்னை, வன் கவிபாடும் என் வைகுந்த நாதனே? (7.9.6) என்று மீண்டும் கூறுவர், இறைவனே அருளிச் செய்தநூல் திருவாய்மொழி என்றும் தமிழ்மறை என்றும் இவ்வாய் மொழி வழங்கப்படுகின்றது.

**இறைவன்:** இரண்டு ஞானச் செல்வர்களும் இறைவனைப்பற்றிக் கொண்ட கருத்து கிட்டத்தட்டஒன்றுபோல் அமைந்திருப்பதைக் கண்டு மகிழலாம். நம்மாழ்வார் இறைவனை 'திருவின் மணாளன்' (1.9:11) 'பூமகளார் தனிக்கேள்வன்' (1.9:3) 'மலராள் மண வாளன்')1.10:4)'மணிவாசகப் பெருமானும் இறைவனை மாதாளும் பாகத் தெந்தை' (திருவா,42), 'மானேர் நோககி உமையாள் பங்கன்' (59) 'மங்கையோர் பங்கன்'(69) இறைவனத் தையல் பாகனாக—அர்த்த நாரியாக—அம்மை அப்பனாகக் காண்பர்.

**முழுமுதற் கடவுள்:** சடகோபருக்கு நாரா யணன் ஒருவனே முழுமுதற்கடவுள்; ஏனை

யோர்சிறு தெய்வங்கள். மணிவாசகப்பெரு மானுக்குச் சிவபெருமானே பரதெய்வம்; ஏனையோர் புறத் தெய்வங்கள்; இவர் களைத் தவிர இப்பெரியார்கள் பிறதெய்வங் களை வழிபடுவதில்லை. இந்தக்கருத்து அவர்தம் பனுவல்களால் தெளியப்படுகின் றன.

தோற்றம் கேடுஇவை இல்லவன்; உடை
யான்;அவன்தரு மூர்த்தியாய்;
சீற்றத் தோடு அருள் பெற்ற வன்அடிக்
கீழ்ப்பு கநின்ற செங்கண்மால் (3.6;6)

உன்னித்து மற்றொரு தெய்வம்
தொழாள் அவனையல்லால் (4.6;10)

என்ற இந்தப் பாசுரப் பகுதியில் ஆழ்வார் நாயகி நிலையில், தோழி கூற்றாக, இந்தக் கருத்து வெளிப்படுவதைக் காணலாம். திருமாலே முழுமுதற்கடவுள் என்பதை முத்தாய்ப்பாக.

தனிமாப் புகழே எஞ்ஞான்றும்
நிற்கும் படியாத் தான்தோன்றி
முனிமாப் பிரம முதல்வித்தால்
உலகம் மூன்றும் முளைப்பித்த
தனிமாத் தெய்வம் (8.10;7)

என்ற பாசுரத்தால் அறுதியிடுவதையும் காணலாம்.

புராணச் செய்திகளாலும் வேறு வகை யினாலும் விட்டுணுவே பரதெய்வம் என்று ஆழ்வார் புலப்படுத்துவதையும் காணலாம். நம்மாழ்வார் வாணாசுரன் கதையில்கண்ணன் அவனுடைய ஆயிரம் தோள்களைத் துணித்த செய்தியை எடுத்துக் காட்டி விட்டுணுவின் பரத்து வத்தை நிலைநாட்டுவதுடன் போரில் சிவன் முதலியோர் அடைந்த தோல்வியையும் காட்டி அவர்களது தாழ்நிலையையும் புலப் படுத்துகின்றார்.

'பரிவின்றி வாணனைக் காத்தும் என்று'
அன்று படையொடும் வந்தெதிர்ந்த
திரிபுரம் செற்றவனும், மகனும்
பின்னும் அங்கியும் போர்தொலைய,
பொருசிறைப் புள்ளைக் கடாவிய
மாயனை, ஆயனை, பொன்சக்கரத்து
அரியினை, அச்சுதனைப்பற்றி
யான்இறை யேனும் இடர்இலனே (3.10;4)

என்ற பாசுரத்தில் இதனைக் காணலாம்.

மணிவாசகப் பெருமான் சிவனையே முழு முதற் கடவுளாகக் கொள்வர்.

கொள்ளேன் புரந்தரன் மாலயன்
வாழ்வு குடிகெடினும்
நள்ளேன் ... ... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ... ...
உள்ளேன் பிறதெய்வம் உன்னையல்
லாது எங்கள் உத்தமனே(6)

என்றதிருவாசகப் பாடலாலும் 'மற்றறியேன் பிறதெய்வம் வாக்கியலால்' (548) என்ற திருவேசறவுப் பாடலாலும் இதனைக் காணலாம். 'மற்றோர் தெய்வம் கனவிலும் நினையா (போற்றி-வரி74) என்ற அடி யாலும் இக்கருத்தைத் தெளியலாம்.

திருமாலும் பன்றியாய்ச்
சென்றுணராத் திருவடி (235)
என்பதாலும்,
அரிக்கும்பிரமற்கும்
அல்லாத தேவர்க்கும்
தெரிக்கும்படித்தன்றி
நின்ற சிவம்(237)

என்பதாலும்சிவனது பரத்துவமும் ஏனைய தேவர்களின் தாழ்நிலையும் அறிய முடி கின்றது.

**உருவம், நாமம் இல்லாதவன்:** இந்த இரண்டு ஞானச்செல்வர்களும் இறைவனுக்கு 'உருவம்' பெயர் முதலியன இல்லையென்று கூறியவர்கள். இதனை இருவரின் பாடல் களாலும் அறியலாம். இறைவனின் உருவம் முதலியவைபற்றிப் பராங்குசர்,

பேரும்ஓர் ஆயிரம் பிறபல
உடையஎம பெருமான்
பேரும்ஓர் உருவமும் உளதுஇல்லை
இலது இல்லை பிணக்கே (1,3;4)

என்று கூறுவார். இக்கருத்தையே மணி வாசகப் பெருமான்,

ஒருநாமம் ஓர்உருவம்
ஒன்றுமிலார்க்கு ஆயிரம்
திருநாமம் பாடிநாம்
தெள்ளேணம் கொட்டாமோ (235)

என்று விவரிப்பர். இப்படிச் சில இடங்களை இருவர் பனுவல்களிலும் கண்டு தெளியலாம்.

**இறையநுபவம்:** இருபெரியார்களும் இறை வனை அமுது, ஆரா அமுது என்றே கொள்ப வர்கள். நம்மாழ்வார் பல பாசுரங்களில் இறைவனை அமுதாகவே காண்பர், 'உள் கலந்தார்க்கு ஓர் அமுதே' (1. 6. ;5) என்று

கூறுவது காண்க. மேலும் தூய அமுது' (1. 7;3), 'என் அமுதம்' (1.9;1), என் கடல் படா அமுதே' (2. 3;5) 'ஆரா அமுதமாய்' (2.5;5) 'நல்ல அமுதம்' (2.5;9), என்கிறார். இறைவனைப் பொதுவாக அமுதம் எனக் குறிப்பிட்ட ஆழ்வார் திருக்குடந்தை எம் பெருமானுக்கு **'ஆரா அமுதன்'** (5.8:1) என்று பெயர் சூட்டி மகிழ்கின்றார்.

மணிவாசகப் பெருமானும் பல இடங்களில் இறைவனை அமுதமாகவே சுட்டி உரைப்பர். 'ஆரா அமுதே! அளவிலாப் பெருமானே!? (1.67) என்று முதற்பாடல் சிவபுராணத்திலே குறிப்பிடுவதைக் காணலாம். 'கண்ணார முதக் கடல்' (4-150), 'ஆரா அமுதே அருளே போற்றி' (ஷ-199), 'அருள முதம் (17), 'மாலமுதப் பெருங்கடலே!' (30), 'தேனே! அமுதே !'59, 'ஆணே பெண் ணே ஆரமுதே' (89), 'தேனே அமுதமே! (94), அமுதப் பெருங்கடலே!' (116) 'மணியே அமுதே!'(117)என்றவை காண்க.

அமுதமாய்த்திகழும் இறைவனைஅநுபவித்த பெரியார்கள் இருவரும் நமக்குத்தெரிந்த பொருள்களைக் கொண்டே விளக்குகின்றனர். காதலின்பமாகிய சிற்றின்பத்தையே இன்ன தென எடுத்துக் காட்ட இயலாத போது பேரின்பமாகிய இறையநுபவத்தை எங்ஙனம் எடுத்துக்காட்ட இயலும்; இதனை நம்மாழ் **வார்,**

**உணர்ந்து** உணர்ந்து இழிந்து அகன்று
உயர்ந்துஉரு வியந்தஇந் நிலைமை
உணர்த்து உணர்ந்து உணரிலும்இறைநிலை
உணர்வு அரிது உயிர்காள்! (1.36))

என்று உணர்த்துவர்

தேனும் பாலும் கன்னலும்
அமுதும் ஆகித் தித்தித்துஎன
ஊனில் உயிரில் உணர்வினில்
நின்ற ஒன்றை உணர்ந்தேனே(8.8:4)

என்றும்,

மணிவாசகப் பெருமான் தம் இறையநுபவத் தை பாசவேரறுக்கும் பழம்பொருள்தன்னை

பற்றுமா றடியனேற் கருளிப்
பூசனை யுகந்தென் சிந்தையுட் புகுந்து
பூங்கழல் காட்டிய பொருளே!
தேசுடை விளக்கே! செழுஞ்சுடர் மூர்த்தீ
செல்வமே! சிவபெரு மானே!
ஈசனே யுன்னைச்சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே(540),

என்ற பாடலில் வெளியிடுகின்றார்.

**நைச்சியாநுசந்தானம்;** மணிப்பிரவாள நடையிலமைந்த வைணவ உரைவளத்தில் சாதாரணமாக அடிபட்டுவரும் இத் தொடர் 'தாழ்வை வாய் விட்டுக்கூறுதல்' என்று பொருள்படும். இங்ஙனம் வாய்விட்டுக் கூறு தலைச் செம்மனச் செம்மல்களாகிய இரு பெரியார் வாக்குகளிலும் காணலாம்.

நம்மாழ்வார் பாசுரங்களில் இக் குறிப்புகள்;

மேவு துன்ப வினைகளை விடுத்துமிலேன்
ஓவுதல் இன்றி உன்கழல் வணங்கிற்றி
லேன்(5.2;8)

என்றும்.

இடகி லேன்;ஒன்று அட்டகிலேன்
ஐம் புலன் வெல்ல கில்லேன்;
கடவ னாகிக் காலந்
தோறும் பூப்பறித் தேத்தகில்லேன்

என்றும் காணப் பெறுகின்றன, (4:7.9)

மணிவாசகரின் திருமொழிகளில் இவை;

நீதி யாவன யாவையும்
நினைக்கிலேன் நினைப்பரொடும்
கூடேன்
ஏத மேபிறந் திறந்துழல்
வேன்றனை (427)

கல்லாத புல்லறிவிற்
கடைப்பட்ட நாயேன்(476)

சாதிகுலப் பிறப்பென்னும்
சுழிபட்டுத் தடுமாறும்
ஆதமிலி நாயேன் (477)

என்றும் பலபாடல்கள் காணப்பெறுகின்றன இருவர் வாழ்க்கையையும் அறிந்த நாம இவை இட்டுக்கட்டின மொழிகள் என்பதை அறிவோம்.

'நாவினுக்கு அருங்கலம்' என்றும் 'நல்லக விளக்கு' என்றும் பாராட்டப் பெறும் திரு வைந்தெழுத்தை முதலாக வைத்து 'நமச் சிவாய வாழ்க' என்று தொடங்கும் சிவபுரா ணம் முதலாக அமைந்திருப்பது திருவாசகத் தொகுப்பு, நாலாயிரத்தை அடைவுபடுத்தித் தொகுத்த நாதமுனிகள் 'ஆன்மஉபதேசமாக அமைந்த உயர்வற உயர் நலம் உடையவன் என்று தொடங்கும் பதிகத்தை முதலாக அமைத்துத் தொகுத்ததே திருவாய் மொழித் தொகுப்பு, இப்படிப் பலஒற்றுமைகள் இந்தத் தெய்வப்பனுவல்கள் இரண்டும் கொண்டி லங்குவதைக் கண்டுமகிழலாம்.

# ''புரியவில்லை'' என்பது பற்றி...

டாக்டர் க.பஞ்சாங்கம் (பஞ்சு)
அண்ணா கலைக்கல்லூரி, காரைக்கால்

கலை இலக்கிய அனுபவத்தில் 'புரிய வில்லை' என்ற பிரச்சனை பல கோணங் களில் பல இடங்களில் முன்வைக்கப்படு கிறது. அதுவும் நவீன ஓவியங்களைப் பற்றி யும் நவீன கவிதைகளைப் பற்றியும் பெரிய குற்றச் சாட்டாகவே இது முன் வைக்கப் படுகிறது.

ஓர் இலக்கியத்தை — ஓவியத்தை — அனுப விப்பதற்கு முழுதும் புரிய வேண்டும் என்பது தேவையில்லை. டி. எஸ். எலியட்டின் வார்த்தைகளைச் சொல்லி விட்டு நகர்ந்து விடலாமா? அல்லது பொது வாகவே நாம் சுவைப்பது, ரசிப்பது, வாழ் வது எல்லாமே ''புரிந்த பின்புதான்'' என்ற தளத்திலா நடக்கிறது? மேலும் நம் மனத் தையே நாம் புரிந்து கொள்ள முடிகிறதா;'' எல்லாவற்றைப் பார்க்கிலும் நமது மனமே மிகவும் திருக்குள்ளதும் மகாக்கேடுள்ளது மாய் இருக்கிறது'' என்று ஆதி வார்த்தை. களை வாய்ப்பாய்ச்சொல்லிக்கொள்ளலாமா?

ஒருதடவை—பத்திரிகைகள் ஜெயகாந்தனை உச்சத்தில் வைத்துக் கொண்டாடிய கால கட்டத்தில்—அவரிடம் இப்படிப் 'புரிய வில்லையே'' என்று கூறிய போது அவர் கூறினார்: ''நீங்கள் படிப்பது உங்களுக்குப் புரியவில்லை என்றால், அது உங்களுக்கு எழுதப்பட்டது அல்ல; வேறு யாருக்கோ எழுதப்பட்டது என்பதுமா உங்களுக்குப் புரிய வில்லை? புரியவில்லை என்றால் பேசாமல் விட்டுவிடுங்களேன்'' என்று கோபத்தோடு கூறினார். பிறகு அதே மாணவர்கள் புதுமைப்பித்தனின் 'கயிற்றரவு' எங்களுக்கும் புரியவில்லை; எங்களுக்குப் பாடம் நடத்தும் கல்லூரிப் பேராசிரியர்களுக்கும் புரியவில்லை யே; என்ன செய்வோம்'' என்ற போது ஜெயகாந்தன் அரைமணி நேரம், 'தான் புரிந்தபடி' விளக்கினார். இவ்வாறு கலை யை அவரவர் அனுபவ. அறிவு, உணர்ச்சித் தளத்திற்கு ஏற்பப் புரிந்து கொள்ள வேண்டி யதுதான்; அதுதான் அப்போதைக்கு அந்தக் கலையின் அர்த்தமெனக் கொள்ள வேண்டி யதுதான்; ஓர் உண்மையான படைப்பு எல்லாவகையான வாசகனுக்கும் எல்லாக் காலகட்டத்திற்கும் கூட இடம் கொடுக்கக் கூடியதாகத்தான் இருக்கிறது—இவ்வாறு சொல்வதும் புரியவில்லை என்ற பிரச் சனைக்குச் சரியான பதிலாக அமைந்து விடுமா?

ஐன்ஸ்டீனின் 'சார்பு நிலைக் கொள்கை' புரியவில்லை என்றால், அதைப் புரிந்து கொள்ளக் கூடிய அளவிற்கு, அந்தத் துறை யில் தனக்குக் கல்வி அறிவு போதாது என்று சரியான முடிவுக்கு வருகிறார்கள். ஆனால் ஓர் ஓவியமோ, ஒரு கவிதையோ புரிய வில்லை என்றால்,இது ஒருமோசமான ஓவி யம் அல்லது கவிதை என்று உடனே மதிப் பிட்டு முடிவு கூறி விடுகிறார்கள்: பெட்ரண்ட் ரஸ்ஸலின் கூற்றாக இது கூறப்படுகிறது. இதன்படி, புரியாததற்குக் கலைஞன் பொறுப்பல்ல; வாசகனின் கலைஅறிவு போதாமையே என்று ஒரே அடியாகச் சொல்லிவிடலாமா? ஆனால் இலக்கிய அனு பவம் என்பது இப்படி எளிதாகச் சொல்லி விட்டு நகர்ந்து விடும்படியாக இல்லை. இந்தக் கூற்றுக்களில் எல்லாம் உண்மை இருக்கிறது என்பதும் உண்மை. ஆனால் இதுவே முழுமையான உண்மை அல்ல! கலைஞன், படைப்பு, சுவைஞன் இந்த மூவரும் ஒரே ரத்த ஓட்ட மண்டலத்தில் கட்டப்பட்டிருக்கிறார்கள் என்பர். ஒன்றில் குறை ஏற்பட்டாலும் கலையிலும் கலை அனு பவத்திலும் குறை ஏற்படத்தான் செய் கிறது. பார்வையாளனை நினைவில் வைத்தே படைக்கப்படும் படைப்பு எவ்வாறு தோல்வி காணுமோ அவ்வாறே தனக்கான பார்வையாளனை அறவே மறந்துவிட்டுப் படைக்கப்படும் படைப்பும் தோல்விகாணத் தான் செய்யும்—இதுவே வரலாறு! கணிதத் தின் மொழியும் பொருளும் அந்தத்துறைக்கே உரியவை! அந்த வாசகனும் அந்தத் துறைக்கே உரியவன். ஆனால் கலை, இலக்கியங்களின் மொழியும் பொருளும் பொதுவானவை! வாழ்க்கையைப் பற்றி யவை! எல்லாருடைய அனுபவத்திற்கும் பிடிபடுபவை! எனவேதான் கலைப்படைப்பு முழுக்க முழுக்கத் தொழில் நுட்பம் வாய்ந்த ஒன்றாகவே வரலாற்றில் இயக்கம் கொண்டி லங்க முடியவில்லை.

பொதுவாகவே, புரியவில்லை என்ற பிரச்சனை, புதியபாதை போடுகிற—சோதனை முயற்சியில் இயங்குகிற—கலைப்படைப்புகளை ஒட்டித்தான் எழுகின்றது. இத்தகைய முயற்சியில் இயங்குகிற கலைஞன், அர்ப்பணிப்புத் தன்மையோடு செயல்படும்போது, படைப்போடு தன் பணியைச் சுருக்கிக் கொள்ளாமல், தன் பாதையை மற்றவர்களுக்கும் பழக்கப்படுத்த வேண்டிய நெருக்கடியான கடமையையும் மேற்கொள்ளுகிறான் — தன் பாதையை ஓர் இயக்கமாகவே உருவாக்குகிறான்: அவன் உருவாக்க முயலும் புதிய கலை வடிவம், உண்மையான உள்ளத்தின் வெளிப்பாடலாய்ப் புறப்பட்டு வரும் பட்சத்தில் இப்படித்தான் நேர்கிறது.

மற்றொரு கோணத்தில் இருந்தும் இந்தப் பிரச்சனை எழுப்பப் படுகிறது. 'ஓரளவு கலைகளோடு பரிச்சயம் உள்ளவர்களுக்கே 'புரியவில்லை' என்ற பிரச்சனை எழுகிறதே, பொதுமக்களின் நிலை என்ன? எந்த மக்களின் நலனுக்காகப் படைத்ததாகக் கூறுகிறீர்களோ? அந்த மக்களுக்கு இது புரியுமா?''

பொதுவாகக் கலைஞர்களையும் சுவைஞர்களையும் ஒரு கோணத்தில் இரண்டாக வகுத்துக் கொள்ளலாம். ஒன்று, மக்களை அடக்கி ஆளுகின்ற ஆளும் அமைப்பின் சார்பாக நின்று, அதன் மூலம் பட்டம், பதவி, புகழ், பணம் ஆகிவைகளைப் பெற்றுக் கொண்டு பிழைப்பது, மற்றொன்று அடக்கப்பட்டு, ஒடுக்கப்பட்டு வரலாறு நெடுக ஏமாந்து கிடக்கும் மக்கள் சார்பாக நின்று படைப்பது; வாசிப்பது; எண்ணுவது — எனவே மக்களுக்கான கலைகள்; மக்களுக்கான வாசகனைப் பாதித்து அவனை வளர்த்தெடுத்தால் போதும்; அந்த வளர்ப்பு மூலமாகவே, அந்தக் கலைகள் பல கோணங்களில் மக்களைப் போய்ச் சென்றடையும். உன்னதமான கலை பல வடிவம், பல அவதாரம் எடுக்கிறது; எந்த வகையிலாவது அது மக்களைப் போய்ச் சேர்ந்து விடுகிறது; அதுதான் சமூக இயக்கம் என்பது. உன்னதமான கலையில் மக்கள் வாழ்வின் சாரம் பொதிந்து கிடப்பதால், மக்களிடம் சென்று கலத்தல் என்பது அப்படியே நேர் கோட்டில் சென்றடையும் என்பதல்ல; பின்னால் ஒரு நல்ல சமூக விஞ்ஞானி தான் இதைக் கண்டுக் கூற முடியும்; அத்தகைய ஒரு சிக்கலான நடைமுறை இது. படிக்காதவர்கள் பெருகிக் கிடந்த இந்திய சமூக வரலாற்றில், இராமாயணமும், மகாபாரதமும் அப்படித்தான் மக்களைப் போய் அடைந்துள்ளன.

மற்றொரு வகையில் இப்பிரச்சனையை விளக்கலாம். கலையைப் புரிதல் என்பது, தனிப்பட்ட ரசனையோடு சம்பந்தப் படுத்திப் பார்ப்பதால், இது பெரிய பிரச்சனை போல் தோற்றம் எடுக்கிறது. ஆனால் உண்மையில் செயல்பாட்டுடன் சம்பந்தப் படுத்தி எண்ணிப் பார்க்க வேண்டும்.

எற்றிற்கு உரியர் கயவரொன்று
உற்றக்கால்
விற்றற் குரியர் விரைந்து''

என்ற குறளை இன்றைய தமிழர்பலர் புரிந்து கொள்ளவில்லை என்பதை அவர்களின் செயல்கள் காட்டி விடுகின்றன; ஆனால் தன் மானத்துடன், தான் கொண்ட கொள்கைக்காக உயிர்விடத் துணியும் படிக்காத பாமரன், இக்குறளைச் சரியாகப் புரிந்துஉள்வாங்கி இருக்கிறான் என்பதுதானே பொருள்! இந்தச் சிந்தனை அப் பாமரனுக்கு எவ்வாறு போய்ச் சேர்ந்தது! அது மரத்தின் கீழே கிடக்கும் வேர்கள் போலச் சிக்கலானது— உன்னதமான படைப்பு தனக்கான இயக்கத்தைக் கொண்டிலங்குகிறது; அதன் மூலம் தான் சேர வேண்டிய இடங்களுக்குப் போய்ச் சேர்ந்து வ்டுகிறது.

புரிதல் பற்றிய பிரச்சனையில் ''பயிற்சியின்'' பங்கை நாம் அறவே புறக்கணித்து விட முடியாது; தர்க்கமற்ற, மிகவும் சிக்கலான ஒரு மொழியமைப்பை, ஒரு குழந்தை பயிற்சியால், தன்மயமாக்கிக் கொளவது போலப் படைப்பைப் புரிந்து கொள்வதிலும் 'இந்தப் பயிற்சிக்குப் பங்குண்டு. இலக்கியம் படைப்பது பழக்கமாகிப் போவது போல, இலக்கியத்தைப் புரிந்து கொள்வதும் பழக்கமாகப் போய்விட வேண்டும். அந்த அளவிற்கு கலை இலக்கியப் படைப்புகளோடு பரிச்சயம் கொள்வது இப்பிரச்சனைக்கு ஒரு வகையில் தீர்வாக அமையும்.

பெரும்பாலும் புரிதல் என்ற இந்தப் பிரச்சனையின் தோற்றத்திற்கு அடிப்படையாக அமைபவை, அனுபவங்களில்—வயதில்—காலங்களில் ஏற்படும் ஏற்றத்தாழ்வுகள்தாம் என்பதையும் மறுப்பதற்கில்லை. மனிதன் தன்னையும், தன் சமூகத்தையும், தன் சக மனிதர்களையும் சரியாகப் புரிந்து கொள்வதற்கு, அவன் தனக்கு வந்து சேரும் 'அனுபவங்களைப்' பாடங்களாக—அறிவாக—மாற்றி உள்வாங்கி வளரும் போது தான் முடிகிறது. இந்தக் குணம்'கடும்பணி'. இது இல்லாதவர்களும் 'புரியவில்லையே' என்ற பிரச்சனையை எழுப்பலாம்; நாம் அவர்களை அடையாளம் கண்டு ஒதுக்கி

விட்டுக்கலையை அடையாளம் காண முயல வேண்டும். எனவே கலையில் 'புரியவில்லை' என்ற பிரச்சனை, வாழ்க்கையைப் போலச் சிக்கலானது; இதைப் புரிந்து கொண்டால் புரியவில்லை என்ற பிரச்சனையை, ஒரு பிரச்சனையாகப் பெரிதுபடுத்திப் பேசத் தேவையில்லை எனலாம்: இதை மற்றொரு கோணத்தில் இருந்தும் வலியுறுத்தலாம். ஒன்றைப் புரிந்து கொள்வதில் பல தளங்கள் இருக்கின்றன. 1) ஒரே பார்வையில் உடனடியாகப் புரிந்து கொள்வது (2) தன் அனுபவ அடிப்படையில் புரிந்து கொள்வது (3) தன் கொள்கை அடிப்படையில் புரிந்து கொள்வது (4) கலாபூர்வமாகப் புரிந்து கொள்வது (5) நாம் அறியாமலேயே நமக்குள் வந்து வாய்க்கும் மரபு அடிப்படையில் புரிந்து கொள்வது (6) விஞ்ஞான அடிப்படையில் பகுத்தாய்ந்து புரிந்து கொள்வது—இப்படிப் பல நிலைகள் இருக்கின்றன. எந்த ஒன்றும், இத்தகைய தளங்கள் ஏதாவது ஒன்றிலிருந்து ஒருவரால் புரிந்து கொள்ளப்படுகிறது; ஆழ்ந்து பார்த்தால், ''புரியவில்லை'' என்று சொல்வதே ஒரு வகையான புரிதலின் வெளிப்பாடுதான் அதாவது ஒரு தளத்தில் இருந்து புரிந்து கொண்டு, இன்னொரு தளத்தை எதிர் நோக்கிச் சொல்லப்படுவதுதான்! பொதுவாக இலக்கியத்தைப் புரிதல் என்பது, தன் கால மொழியைப் புரிதல் என்பதோடு மட்டும் சம்பந்தப்பட்டதல்ல; மாறாகத் தன்னைப் புரிதல், தன் சமூகத்தைப் புரிதல், தன் கால அரசியல் இயக்கங்களைப் புரிதல், தன் பிழைப்பிற்கான தொழிலைப் புரிதல், இசை, ஓவியம் முதலிய பிற கலையைப் புரிதல் முதலியவற்றோடு தொடர்புடையதாகும்.

இவ்வாறு 'புரிதல்' பிரச்சனையைப் பல கோணங்களில் இருந்து விளங்கிக் கொள்ளும் போது தான், எதற்கெடுத்தாலும் புரியவில்லை என்று எளிதாகச் சொல்லிவிட்டு நகர மாட்டோம்—புரிந்த அளவிலாவது செயல் படத் தொடங்குவோம்! இன்றைய தேவையும் அதுதான்!

## திரு.வி.க விருது-சில பாராட்டுக் கடிதங்கள்

தங்கட்கு இந்த ஆண்டு திரு.வி.க, பரிசு கொடுக்கப்படும் செய்தி கண்டு மட்டிலா மகிழ்ச்சியடைந்தேன். எத்தனையோ சிறப்புகட்குத் தகுதியுடைய தங்கட்கு இது பெரிதன்று எனினும், தமிழக அரசின் தலைசிறந்த விருது என்ற அளவில் இது பெருமைக்கும் மகிழ்ச்சிக்கும் உரிய செய்தியேயாகும்.

—டாக்டர் வா.செ. குழந்தைசாமி
துணைவேந்தர், அண்ணா பல்கலைக் கழகம்

தமிழ்த் தென்றல் திரு.வி.க. பெயரால் தமிழ் வளர்ச்சித் துறையின் சார்பில் தமிழக அரசு ஆண்டு தோறும் வழங்கும் விருது இந்த ஆண்டு தங்கட்கு வழங்கப் பட்டுள்ளது அறிந்து மிக்க மகிழ்ச்சியுற்றேன். தங்களது சீரிய தமிழ்த் தொண்டு தொடரவும் மேன்மேலும் சிறக்கவும் இறைவன் அருள் புரிய வேண்டும்.

—டாக்டர் ச. முத்துக்குமரன்
துணைவேந்தர். பாரதிதாசன் பல்கலைக்கழகம்

தாங்கள் தமிழ்நாடு அரசின் 'திரு. வி. க. விருது' பெற்றிருப்பது நமக்கு மிக்க மகிழ்வளிக்கிறது. இந்த விருதினைப் பெருவதற்கு முற்றிலும் தகுதியுடையவர் தாங்கள். தங்களுக்கு நமது உளம் நிறைந்த பாராட்டுக்களை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

—தவத்திரு குன்றக்குடி அடிகளார்,
குன்றக்குடி.

தமிழக அரசின் தகைசால் 'தமிழ்த் தென்றல் திரு.வி.க. விருது' தங்களுக்கு வழங்கப்படவிருப்பது குறித்து மிக்க மகிழ்கிறேன், என் பணிவார்ந்த, மனமார்ந்த பாராட்டுக்களை ஏற்றருள்க

—விஜயதிருவேங்கடம்
நிலைய இயக்குநர், மதுரை வானொலி நிலையம்

## பேராசிரியர் டாக்டர் தமிழண்ணலின் நூல்கள்

### குழந்தை இலக்கியம்

1. குழந்தைகள் இலக்கியம்

### மொழி

2. மொழிவழிச் சிந்தனைகள் (இரண்டாம் பதிப்பு, 1980)

### திறனாய்வு

3. குறிஞ்சிப் பாட்டு இலக்கியத் திறனாய்வு விளக்கம் (நான்காம் பதிப்பு, 1978)
4. பரிசில் வாழ்க்கை (நான்காம் பதிப்பு, 1984)
5. இலக்கியத்தில் இன்பச் சுவை
6. ஜெயகாந்தனின் முன்னுரை இலக்கியம் (உடனாசிரியர்)
7. உரை விளக்கு (1985)
8. புதிய நோக்கில் திருவாசகம்

### நாட்டுப்புறவியல்

9. தாலாட்டு
10. காதல் வாழ்வு
11. பிறை தொழும் பெண்கள்

### ஒப்பியல்

12. ஒப்பிலக்கிய அறிமுகம் (ஐந்தாம் பதிப்பு, 1985)
13. சங்க இலக்கிய ஒப்பீடு 1: இலக்கியக் கொள்கைகள் (மூன்றாம் பதிப்பு 1985)
14. சங்க இலக்கிய ஒப்பீடு 2' இலக்கிய வகைகள் (இரண்டாம் பதிப்பு, 1979)

### ஆய்வியல்

15. ஆய்வியல் அறிமுகம் (மூன்றாம் பதிப்பு, 1986)
16. ஆய்வியல் வழிகாட்டி (உடனாசிரியர்)

### இலக்கிய வரலாறு

17. புதிய நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு

### இலக்கணம்

18. இனிய தமிழ் மொழியின் இயல்புகள் (3 தொகுதிகள்)

### இலக்கியக் கொள்கைகள்

19. தொல்காப்பியரின் இலக்கியக் கொள்கைகள்: உள்ளுறை (1986)
20. நோக்கு (1985)
21. இறைச்சி
22. மெய்ப்பாடு (1986)

### புதினம்

23. வாழ்வரசி (1979)
24. நச்சு வளையம்

### ஆங்கிலம்

25. Tradition and Talent in Cankam poetry

### பதிப்பு

26. வையை: 1,2 தொகுதிகள்
27. பொதிகை: 2,2 தொகுதிகள்
28. அகிலன் கருத்தரங்க ஆய்வுரைகள்
29. உலகத் தமிழ்
30. நாடகக் கலையின் வரலாறு
31. தமிழியல் ஆய்வு

# பேராசிரியர் தமிழண்ணல் அவர்களின் மேற்பார்வையில் அறிஞர் பட்டம் [Ph.D] பெற்றோர் பட்டியல்

| வரிசை எண் | ஆய்வாளர் பெயர் | | ஆய்வுத் தலைப்பு |
|---|---|---|---|
| 1. | அழகேசன். கு. | — | சோழர் காலக் கல்வெட்டுகளால் அறிய லாகும் கலைச்சொற்கள் – ஓர் ஆய்வு |
| 2. | இராசேந்திரன், சி.மொ. | — | தமிழ் இலக்கியத்தில் கையறுநிலைப் பாடல்கள். |
| 3. | இராசேந்திரன், ப.பா. | — | திருஞானசம்பந்தர் தேவாரத்தில் இலக் கியக் கொள்கைகள். |
| 4. | இராதாகிருஷ்ணன், இரா. | — | நா. பார்த்தசாரதியின் சமூக நாவல்கள். |
| 5. | இராமகிருட்டினன், எம், | — | திருப்புகழ்–ஓர் ஆய்வு. |
| 6. | இராமசாமி, இ.கி. | — | தமிழில் பாயிரங்கள். |
| 7. | உமாமகேசுவரி, பி.பி. | — | நெல்லையப்பர் கோவில். |
| 8. | கந்தசாமி, செ. | — | சேதுமன்னர்களின் தமிழ்ப் பணி. |
| 9. | காளிமுத்து, கா | — | தொல்காப்பிய இலக்கியக் கொள்கையும் குறுந்தொகையும் |
| 10. | கிருட்டிணசாமி, வெ. | — | தமிழில் குழந்தைப் பாடல்கள். |
| 11. | கோதண்டபாணி. இரா. | — | செந்தமிழ்–இதழியல் ஆய்வு. |
| 12. | கோவிந்தன், வி. எஸ். | — | சூரியநாராயண சாத்திரியாரின் வாழ்வும் வாக்கும். |
| 13. | சரசுவதி, அ. | — | மு. வ. நாவல்களில் கட்டமைப்பு. |
| 14. | சவகர்லால், ச. | — | தேவாரத்தில் தொன்மைக் கூறுகள். |
| 15. | சாந்தமூர்த்தி, பு.மு. | — | கம்பனின் படிமங்கள். |
| 16. | சாந்தா ஆப்தே, ந. | — | தமிழ்ச் சிறுகதைகளில் காந்நியத் தாக்கம். |
| 17. | சாரதா நம்பிஆரூரன். | — | தனித்தமிழ் இலக்கியத்தின் தோற்றமும் வளர்ச்சியும். |
| 18. | சாரதாம்பாள், செ. | — | சங்க இலக்கியத்தில் செவ்வியல் பண்புகள் |
| 19. | சுசீலா, எம். | — | கம்ப ராமாயணத்தில் சங்க இலக்கிய மரபுகள். |
| 20. | சுருளிவேல், செ.ப. | — | சங்க இலக்கிய அணி இலக்கண வளர்ச்சி. |
| 21. | சேதுராமலிங்கம், வி. | — | இராமநாதபுரம் வட்டம்– நாட்டுபுறப் பாடல்கள். |
| 22. | சேதுமணி, | — | தமிழ் நாவல்களில் மதிப்புகள், |
| 23. | சொக்கலிங்கம், ந. | — | வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகளின் |
| | | — | இலக்கணக்கோட்பாடுகள். |
| 24. | சோதிபாய், ஆர். என். | — | சங்கப் புறப் பாடல்களில் திணை துறை அமைப்பு. |
| 25. | சௌமியநாராயணன், சீனி. | — | வியாச, வில்லிபாரதங்கள்–ஓர் ஒப்பாய்வு. |
| 26. | தட்சணாமூர்த்தி, பி. | — | சிலப்பதிகாரத்திலும் சீவக சிந்தாமணி யிலும்தொன்மை. |

27. தமிழ்க்குடிமகன், மு. — பத்தாண்டுத் தமிழ்க் கவிதைகள் (1966–1976).
28. தேனப்பன், வ. — ஒன்பது நகரக் கோயில்கள்.
29. நவநீதகிருஷ்ணன், மா. — தமிழ் இலக்கியத்தில் ஆற்றுப்படை.
30. நாச்சியப்பன், நாகப்பா. — திருப்பரங்குன்றம் கோயில்.
31. நிர்மலா மோகன், — குறம் 'குறவஞ்சி குறவ நாடகம்–ஓர் ஆய்வு.
32. பாலகிருஷ்ணன் ,மு, — கண்ணேறு கழித்தல்.
33. பாலாமணி, கா, — தனிப்பாடல் திரட்டு.
34. பிச்சை, அ. — சங்க யாப்பு
35. பிரீதி, எஸ்· — பாரதிதாசன் பாடல்களில் பெரியாரின் கொள்கைகளும் மார்க்சிய கோட்பாடு களும்,
36. பிரேமா: இரா. — இராமாயணக் கிளைக்கதைகள் ஒப்பீடு- கம்பர், வான்மீகி, துளசிதாசர்,
37. புஷ்பம், பி. — சாதி அடிப்படையில் தாலாட்டு ஒப்பாரிப் பாடல்களில் ஒற்றுமை வேற்றுமைகள் (திருநெல்வேலி மாவட்டம்).
38. மஞ்சுளா, கா, — நோக்குக் கோட்பாடும் சங்க இலக்கிய மும்.
39. மாணிக்கம், மு, தி. — ஜானகிராமன் நாவல்கள்.
40. விசயலக்குமி' பொ. — பக்தி இலக்கியத்தில் அக மரபுகளின் செல்வாக்கு.
41 ஜெயபாண்டியன், சொ. — மதுரையில் சிறு தெய்வ வழிபாடு.

தமிழ் வளர்ச்சித் துறை

சான்றிதழ்

1976ஆம் ஆண்டில் வெளியிடப்பெற்று ''தமிழ், தமிழ்ப் பண்பாடு பற்றிப் பிற மொழிகளில் வெளியான நூல்கள்'' எனும் தலைப்பின்கீழ் வரப்பெற்ற 'Tradition and Talent in Sangam Poetry'' எனும் நூல் முதல் பரிசுக்குரியதெனத் தேர்ந் தெடுக்கப்பட்டு, அந் நூலாசிரியரான திரு இராம. பெரியகருப்பன் (தமிழண்ணல்) அவர்களுக்குப் பரிசுத்தொகை ரூபாய் இரண்டாயிரமும் இச் சான்றிதழும் வழங்கப் பெறுகின்றன.

(ஒ-ம்) மா.நன்னன்
தமிழ் வளர்ச்சி இயக்குநர்

(ஒ-ம்) செ. அரங்கநாயகம்
கல்வி அமைச்சர்
15.1.82

Review of Dr. Thamizhannal's

# TRADITION AND TALENT IN CANKAM POETRY

by S. N. Kandaswamy in THE HINDU, 29-11-1977

In this thought-provoking dissertation, author ably endeavours to illuminate the conventional and conservatlve elements coalesced with the individual talents preserved in the Sangam Poetry. He commences his study by tracing the sources of Tolkappiyam, the seniormost Tamil grammar and proclaims that though Tolkappiyar has closely followed the grammatical traditions, handed over by his predecessors he has given due credit to the then current usages of lterary and spoken dialeects (pp 28-41).

In the light of the commentaries of Peraciriyar, the author clearly brings forth that the ancient Tamil literary conventions are purely indigenous and hence independent of Sanskrit settings. He critically examlnes and elucidates the cannons of versification as adumbrated in Tolkappiyam, and dwells at length with the thirty four consituent members of a verse along with the types and sub-types of verses, twenty kinds of rhythms and eight fold beauties, each of them contributing to the excellence of the structure and stuff of the seven-fold literary genres (pp. 45-68).

The geographical division of the landscape and the apportioning of day and season, the flora and fauna projecting the background for a cultural habitation, and the unique classification of the literary themes into Akam (lit. internal, i.e., love) and puram (lit, external activities) are peculiar to the Tamil genius, regulated by the time-hallowed traditions which get into the veins of the Sangam poets. though some innovations to suit the needs and necessities of the passage of time marked by the commercial and cultural commingling of various nations have taken place.

The author's view that folk-lores formed the fountain-head of the conventional poetry stands on solid evidences (p.220, 232) and also is in conformity with the literary history of most of the classical languages The depictions of the five-Tinais, the roles of hero, heroine, maid and others, their sentiments expressed in monologues and pathetic fallacies, symbolic significance etc. as poetic traditions in the love poems of Sangam literature are adequately illustrated. The author sagaciously draws a line of demarcation among the three types of separation of the hero from the heroine (viz. 1 to amass opulence, 2. to battle-field and 3. to pleasure trip) which are named after Palai, Mullai and Marutham (p. 11).

This volume contains a portion on Puram-themes chiefly dealing with the traditional modes of warfare and heroic poetry (pp. 202-211). The author deserves our congratulations on this useful work.



டிக்கட் ரூ.10க்கு
நாகாலாந்து அரசு அளிக்கும்
சுபம்
தீபாவளி
ஸ்பெஷல் வீக்லி
பிரம்மாண்டமான முதல் பரிசு
ரூ. 1,01,00,000
ரூபாய் 1 கோடியே 1 லட்சம்
51-வது குலுக்கல்
22-10-89
5 வரிசைகள்
மொத்த பரிசுகள்
1,28,422
2 இரண்டாம் பரிசு ரூ. 11 லட்சம்
3 மூன்றாம் பரிசுகள் (10) ரூ. 1 லட்சம் வீதம்
4 நான்காம் பரிசுகள் (10) ரூ. 50 ஆயிரம் வீதம்
B.S.F. லாட்டரியில் ரூ. 77 லட்சமும்
மத்திய ஆயுதப்படை லாட்டரியில் ரூ. 2 கோடியும்,
விஜயலெட்சுமி லாட்டரியில் ரூ. 2.25 கோடியும்,
ராஜஸ்தான் லாட்டரியில் ரூ. 1 கோடியே 1 லட்சமும்
பரிசு பெற்ற டிக்கட்டுகள் எமது நிறுவனம்
மூலம் விற்பனையாகியுள்ளது!
5 வரிசைகளுக்கு ரூ. 50 M.O. மூலம் அனுப்பினால் ரிஜிஸ்டர் செலவு இலவசமாக அனுப்பப்படும்!
DIRECTOR
Nagaland State Lottery
KOHIMA (NAGALAND)
Main Stockists - VIMAL AGENCY MADURAI
97-SOUTH MARAT ST., MADURAI